கலைமகள்

தீபாவளி மலர் 1966

ரூ. 4/

SIMPSON & COMPANY LIMITED
(Estd. 1840), MADRAS-2.
ADDISON & COMPANY LIMITED
(Estd. 1873), MADRAS-2.
ADDISONS PAINTS & CHEMICALS
LIMITED, MADRAS-11.
AMCO BATTERIES LIMITED.
BANGALORE-26.
BIMETAL BEARINGS LIMITED.
MADRAS-11.
GEORGE OAKES LIMITED, MADRAS-2.
GEORGE OAKES LIMITED, (BOMBAY OPERATIONS) BOMBAY-1.
INDIA PISTONS LIMITED, MADRAS-11.
INDIAPISTONS-REPCO LIMITED, MADRAS-11.
REICHHOLD CHEMICALS INDIA LIMITED, MADRAS-51.
SHARDLOW INDIA LIMITED, SEMBIAM, MADRAS-11.
SRI RAMA VILAS SERVICE LIMITED, MADRAS-2.
SRI RAMA VILAS SERVICE LIMITED, KUMBAKONAM.
STANES MOTORS (SOUTH INDIA) LTD., COIMBATORE.
STANES TYRE & RUBBER PRODUCTS LTD., COIMBATORE.
TRACTORS AND FARM EQUIPMENT LIMITED, MADRAS-34.
L. M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LIMITED, MADRAS-2.
THE WHEEL & RIM CO OF INDIA LIMITED, MADRAS-11.



The **Amalgamations** Group is the largest Light Engineering Group in South India.
The Corporate strength of **Amalgamations** is due to a successful plan of acquiring or constructing a network of manufacturing units and progressively rationalising them to be complementary units of production in related fields of activity.

The Group Manufactures Automotive and Industrial Diesel Engines, Agricultural Tractors and farm implements, Castings, Stampings, forgings, Engineers Cutting Tools, spares and ancillaries such as pistons, piston rings, bimetal bearings, flywheel ring gear as original equipment or for use in the automobile and other industries, lead acid batteries for transport, telecommunication and industrial uses,
Builds coaches and bodies,
Fabricates mechanical light engineering specialities,
Formulates Synthetic resins, pigments, lacquers, paints, colours, varnishes, emulsions, enamels,
Operates transport and passenger services,
Produces tea and coffee,
Publishes an evening newspaper,

The Group's Industrial Estates cover over 150 acres and provide as many as 17 separate manufacturing units using latest equipment and modern techniques.
Its valuable experience of cost and quality considerations over many years in the domestic market enables the Group to export a wide range of first class products which have been accepted by discriminating buyers in over thirty countries in the world.

Non-Engineering Group

ASSOCIATED PRINTERS (MADRAS) PRIVATE LIMITED, MADRAS-2.
ASSOCIATED PUBLISHERS (MADRAS) PRIVATE LIMITED, 'THE MAIL' MADRAS-2.
HIGGINBOTHAMS PRIVATE LIMITED, MADRAS-2.
SIMPSON & GENERAL FINANCE COMPANY LIMITED, MADRAS-2.
SPEED-A-WAY PRIVATE LIMITED, MADRAS-2.
T. STANES & COMPANY LIMITED, COIMBATORE.
THE UNITED COFFEE SUPPLY COMPANY LIMITED, COIMBATORE.
WALLACE CARTWRIGHT & CO. LIMITED,
55/56, St. James Street, LONDON S. W. 1.

Total Number of Employees: About 14,000
Bankers: The Central Bank of India Limited, Madras-2.
Advertising Consultants:
THE MADRAS ADVERTISING CO. PRIVATE LTD., MADRAS-2.

Amalgamations
PRIVATE LIMITED
202, Mount Road, Madras-2.
and subsidiary Companies
(Unit Companies of Simpson Group Industries)

AMAL(S)-337

தீபாவளி வாழ்த்துக்கள்

இந்த நன்னாளில்
உங்கள் குடும்பத்துடன்
ஆர்வோ

ORWO FILM

கலர் அல்லது பிளாக் அண்டு ஒயிட் பிலிமில்
புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள்

இதுபோன்ற பண்டிகை நாட்களில்
மனதிற்கினிய பல காட்சிகளை
புகைப்படமெடுத்து மறக்கமுடியாதபடி
இயற்கைவர்ணங்களில் உயிரோவிய
மாக என்றும் பார்த்து மகிழலாம்

VEB FILMFABRIK WOLFEN
German Democratic Republic

ஆர்வோ பிலிம்ஸ் ஈஸ்டர்ன் யூனிட்
சென்னை - 2 - கல்கத்தா - 13

பண்டிகை இன்பங்கள்

பன்மடங்காகவே

நேஷனல் எக்கோ

எண்ணற்ற சுடர் விளக்குகள். எழில் வாண வேடிக்கைகள். இன்பக் கோலாகலம். தீபாவளிக் கொண்டாட்டம். இன்பம் கொணர்வீர் உங்கள் இல்லத்திற்கே : அதற்குரியது நேஷனல்-எக்கோ--இந்தியாவிலேயே ஒன்றே ஒன்ருன 'மான்ஸூனைஸ்டு' ரேடியோக்கள், டிரான்ஸிஸ்டர்கள். ஈடிணையற்ற நல்லுழைப்பு—என்றென்றும் உங்களுக்கே.

மாடல் யூ-819
5 வால்வுகள், 3 பாண்டுகள் லோ-லைன் பிளாஸ்டிக் கேபினெட், ஏஸி/டிஸி. ரூ. 323.00



மாடல் ஏ-1511
6 வால்வுகள், 3 பாண்டுகள், குரல் கட்டுப்பாடு, லோ-லைன் மரக் கேபினெட். ஏஸி ரூ. 415.00

மாடல் எம்பிடி-1504
எடுத்துச் செல்லத் தக்க டிரான்ஸிஸ்டர் ரேடியோ, 9 டிரான்ஸிஸ்டர்கள் & டயோடுகள், 4 பாண்டுகள்; குரல் கட்டுப்பாடு, 18செமீ.x 10செமீ. நீள்வட்ட ஒலிப் பெருக்கி. 6 டார்ச் ஸெல், பேட்டரி பேக் அல்லது 230 வோல்டு ஏஸி மெயின்ஸ் எதனிலுமே இயங்கவல்லது. ரூ. 541.00



மாடல் ஏ-786 (ஹை-ஃபி)
6 வால்வுகள், 5 பாண்டுகள், 2 ஒலிப்பெருக்கிகள், 2 குரல் கட்டுப்பாடுகள், ஃபெர்ரைட் ஏரியல், மரக் கேபினெட். ஏஸி ரூ. 668.00

(எக்ஸைஸ் தீர்வை உள்ளிடாத விலைகள் இவை. வரிகள் யாவும் தனி.)

ஒவ்வொரு செட்டிலும் பாதுகாப்பின் அடையாளமாக உள்ள நேஷனல்-எக்கோ காவலாளர் சின்னம் இதுதான்.

GRA ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . சென்னை . டெல்லி . பெங்களூர் . செகந்தராபாத் . பாட்னு

LPE-Aiyars NE-57 TAM

தீபாவளித் தீர்மானம்

சிக்கனமான, சேவையில் சிறந்த

ஸ்டாண்டர்ட்-20 வாங்குவோம்

STANDARD

தயாரிப்பாளர்கள்:
ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை-2

விநியோகஸ்தர்கள்:
தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட், சென்னை-உதகை
யூனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்-1

IFDS-UC-750-TM

தீபாவளி மலர் - 1966

பக்கம்

தவம் செய்த தவக் கோலம் - 'ஜோதி'	.. 17
சிற்றப்பா - எச். வி. ஆர். ஐயங்கார்	.. 18
ஓர் அரிசி - கிருபானந்த வாரியார்	.. 22
புதிதாகக் கிடைத்த பாரதியார் பாடல்	.. 27
ஊன்றுகோல் வார்த்தைகள் - கி. வா. ஜகந்நாதன்	.. 28
தாயுமானவர் காதல் - மு. வரதராசன்	.. 33
ராம ராஜ்யத்தில் - வி. ஜி. பட்	.. 38
ஔவையார் - ம. பொ. சிவஞானம்	.. 42
நெல்லூர் அரிசி - அகிலன்	.. 45
ஸரமாவின் அறிவுரை - கி. சந்திரசேகரன்	.. 51
மணிவாசகர் கண்ட தில்லை-பாஸ்கரத்தொண்டைமான்	57
அப்புச்சா - ஏ. எஸ். ராகவன்	.. 61
அலர்ஜி - ஈ. எம். கோவூர்	.. 67
முழு மனிதர் - பி. வி. ஆர்.	.. 75
கிளிகள் வரும் - 'கல்பனா'	.. 81
கதவுக்கு அப்பால் - ராஜம் கிருஷ்ணன்	.. 91
உறவு மாமூல் - டி. என். சுகி சுப்பிரமணியம்	.. 97
தக்ஷ யக்ஞம் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை	.. 101
மாலை யாருக்கோ? - பூர்ணம் விசுவநாதன்	.. 105
அழியா அழகு - எஸ். லட்சுமி சுப்பிரமணியம்	.. 113
பார்லிமென்ட் ஹாஸ்யம் - கே. ஸ்ரீனிவாஸன்	.. 121
புரிந்துகொண்டேன் - ஆர். சூடாமணி	.. 124
டாக்டர் வேதவியாஸ் - உபேந்திரநாத் 'அச்க்'	.. 131
திருவதிகை வீரட்டானம் - ரா. நாகசாமி	.. 137
அம்பிகை சிரித்தாள் - மாயாவி	.. 139
அறவணை - த. நா. குமாரஸ்வாமி	.. 148
அகத்துறைப் பா - ரா. ஸ்ரீ. தேசிகன்	.. 153
1 சொல் - 4 ஆண்டு - 'எல்லார்வி'	.. 157
பெண்மை அரசு - முனிமாணிக்யம் நரஸிம்ஹராவ்	.. 161
இன்பவீடு வீடு வீடதே - 'கோமுகி வேலன்	.. 165
பால் நிலவே - வித்துவான் துரைசாமி	.. 166
மேக மோகம் - 'மஹி'	.. 166
அன்னைக்கு - லெமன்	.. 166
மனித சக்தி - பெ. தூரன்	.. 167
உயிர்ப் பொருள் - தமிழழகன்	.. 167
கதா தர்மம் - ஜெகசிற்பியன்	.. 170
அம்மாசி! - 'சோமு'	.. 181
திரைமறைவில் இறைவன் - என். ராமகிருஷ்ணா	.. 187

மூவர்ண ஓவியங்கள்

குறிஞ்சியழகி - (அட்டைப் படம்) - கோபுலு
ஸ்ரீகாஞ்சி ஆசாரியர்கள் (முகப்புப் படம்)
வேய்ங்குழலே - எஸ். ராஜம்
ஊடலின் பின் - உமாபதி
மணிவளையல் போடும் கை - ஸிம்ஹா
கோலநடை - ஆர். நடராஜன்
பாட்டுக் கேட்க நேரமில்லை - ஜி. என். ஜாதவ்
மேற்குக் கடற்கரையில் - எம். எஸ். தேவசகாயம்
எடுத்த பார்வையும் மிடுக்கு நடையும் - விஜயஸ்ரீ

இருவர்ணப் படங்கள்

தியாகையர் கண்ட ராமன் - உமாபதி
எதற்கும் அவர் பெயர் - ஸாகர்
திருமாலை தந்தவர் - சித்ரலேகா
வேதக் கதைகள் - கோபுலு
கலம்பகக் காட்சிகள் - மணியம்
ஷோடச கணபதிகள் - எஸ். என். ஆறுமுக ஆச்சாரி

நிழற் படங்கள்

இவர்களைப் பார்த்தீர்களா! குல்வந்த்ஸிங் ராவ
ஒளியில் பூத்த முகம் - என். ராமகிருஷ்ணா
கல்லில்: வாழ்வில் - எம். கே. ஆர்.
சிலையில்: செடியில்-வி. ராமமூர்த்தி; என். வி. ஆர். ஸ்வாமி
குழந்தை முகபாவங்கள் - என். ராமகிருஷ்ணா

கலைமகளில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே,

காணிக்கை



''தீபமங்கல சோதீ நமோ நம!'' என்று இறைவன் திருவடியை இறைஞ்சி இந்த அழகிய மலரைக் கலைமகளின் முன் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம். எதற்குப் பஞ்சம் வந்தாலும் புதிய எழுத்துக்கும் இலக்கிய முயற்சிகளுக்கும் தமிழ் நாட்டில் பஞ்சம் இல்லை என்பதை எடுத்துக் காட்டும் அடையாளமாக இந்த அழகிய மலர் விளங்கும் என்றே நம்புகிறோம்.

இந்தத் தீபாவளி நன்னாளில் கங்காஸ்நானத்தால் தூய்மை பெற்ற அன்பர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். ''இருளை நீக்கி ஒளிக்கு வழி காட்டு'' என்று இறைவனை வழிபட்டு வாழ்த்தும் இந்த ஒளித் திருநாளில் தமிழ் நாட்டு இல்லங்களில் அகவிருளும் புறவிருளும் நீங்க வேண்டுமென்றும், பாரத நாட்டின் சுதந்தர வாழ்வில் வீசும் புயலும் அடரும் இருளும் நீங்கி அமைதி நிலவ வேண்டுமென்றும், உலக முழுதும் எவ்வுயிரும் இன்புற்றிருக்க வேண்டுமென்றும் அருட்கடலாகிய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

சென்ற இடமெல்லாம் அன்பையும் அருளையும் ஏற்றி அமைதியையும் நம்பிக்கையையும் ஊட்டும் மனித தெய்வமாகிய ஸ்ரீமத் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளவர்களுடைய திருவுருவப் படத்தை முகப்பிலே கொண்டு இம் மலர் தன் சிறப்பை மிகுவித்துக் கொண்டிருக்கிறது. திருமாலை வழிபட்டுத் திருமாலை பாடிய தொண்டரடிப்பொடி யாழ்வாரின் வரலாற்றை ஓவியமாகக் காட்டும் படக் கோவையும், 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி' அடிகளுடைய வரலாற்றைச் சித்திரிக்கும் ஓவியமாலையும் அருள்மணம் கமழச் செய்கின்றன. பல நூறு பாடல்களால் ராமனுடைய ரூப சௌந்தரியத்தையும் குண சௌந்தரியத்தையும் தம்முடைய அற்புதமான கீர்த்தனங்களால் பாடிய ஸ்ரீ தியாகையரவர்கள் ரகுநந்தனனுடைய திருவிளையாடல்கள் பலவற்றைப் புதியனவாகத் தம் அகக் கண்ணால் கண்டவர். அந்த ஆனந்தத்தை அவருடைய கீர்த்தனங்கள் காட்டுகின்றன. அவர் கண்ட காட்சிகள் சிலவற்றை ஓவியமாக்கிச் சேர்த்து வெளியிட்டிருக்கிறோம்.

பாரத நாட்டின் பழம் பெருஞ் செல்வம் வேதம். பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டின் உயர்ந்த தத்துவங்களைப் பொதிந்து காத்துவரும் கருவூலமாக அது விளங்குகிறது. பல அரிய உண்மைகளை விளக்கும் கதைகள் வேதத்தில் உள்ளன. அவற்றில் சிலவற்றை வண்ண ஓவியமாக்கி இம் மலரில் வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொரு தீபாவளி மலரிலும் தமிழிலக்கியங்களில் வரும் காட்சிகளைச் சித்திரக் கோவையாகக் காட்டும் வழக்கப்படி, இம் மலரில் தமிழ்ப் பிரபந்தங்களில் ஒன்றாகிய கலம்பகத்தில் வரும் காட்சிகள் வடிவம்பெற்று விளங்குகின்றன. ஷோடச கணபதியின் திருக்கோலங்கள் ஒருசார் ஒளிர்கின்றன. குழந்தையின் பலவேறு முகபாவங்களைக் காட்டும் நிழற் படங்கள் ஒரு பக்கத்திலும், அரசியல் தலைவர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டைக் காட்டும் படங்கள் ஒரு பக்கமும் இருக்கின்றன. மூவண்ணப் படங்கள் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

கருத்துக்கு விருந்தளிக்கும் கட்டுரைகளும் கதைகளும் கவிதைகளும் இம் மலருக்கு மணம் ஊட்டுகின்றன. தமிழ் நாட்டில் தோன்றும் சிறு கதைகளின் தரத்தை ஆராயப் புகுவோருக்கு இந்த மலரிலுள்ள கதைகளே தக்க முறையில் பலவேறு வகையில் அமைந்து, சிறந்த கதைகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று சொல்லலாம். இன்று தமிழ் நாட்டின் சிறுகதைச் சிற்பிகள் என்று பெயர் பெற்ற எழுத்தாளர்களிற் பெரும்பாலோர் இந்த மலரைத் தங்கள் படைப்புக்களால் அழகு செய்திருக்கின்றனர். கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் சிறந்த நகைச்சுவை எழுத்தாளர்கள் என்று பெயர் பெற்று விளங்கும் ஆசிரியர்களுடைய ஹாஸ்ய சித்திரங்களை இந்த மலர் தாங்கி வருகிறது.

கட்டுரைகளில் அரசியல் தலைவரும் எழுதியிருக்கிறார்; பேராசிரியரும் எழுதியிருக்கிறார். ஆராய்ச்சியாளரும் எழுதியிருக்கிறார்; கலை விமரிசகரும் எழுதியிருக்கிறார். சிற்பத்தைப்பற்றிய கட்டுரையும், தலத்தைப் பற்றிய கட்டுரையும், குணசித்திரக் கட்டுரையும், இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையும் பல அறிஞர்களுடைய பேனாவிலிருந்து உருவாகி இம் மலரை ஏற்றம் பெறச் செய்கின்றன.

இதுகாறும் அச்சில் வெளிவராத பாரதியார் பாடல் ஒன்றை இந்த மலரில் மிக்க மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். எங்கோ கடிதக் குவியல்களிலே மறைந்துகிடந்த அது இந்தத் தீபாவளி மலரில் வெளிவர வேண்டுமென்றே இத்தனை ஆண்டுகளாகக் காத்துக் கிடந்ததென்று தோன்றுகிறது. இக்காலக் கவிஞர்களுடைய கவிதைகளும் இம் மலரில் உள்ளன.

எழுத்தாளர், ஓவியர்கள், அச்சுத் தொழிலாளர் ஆகிய எல்லாருடைய உதவியினாலும் உருவாகியிருக்கிறது இம் மலர். இதற்கு விளம்பரம் தந்து உதவியவர்களும், இதை வாங்கிப் படித்துச் சபாஷ் போடும் அன்பர்களும் இன்னும் ஆண்டுக்கு ஆண்டு சிறப்பாக மலரைக் கொண்டுவர வேண்டும் என்ற ஊக்கம் உண்டாகக் காரணமாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் எங்களுடைய இதயங்கனிந்த நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறோம். தீபாவளி மங்கல நாளில் மீண்டும் எல்லோருக்கும் வாழ்த்துக் கூறுகிறோம்.

மகிழ்ச்சி ஒளி நிலவ-
தொடர்ந்து சேமியுங்கள்

தீபாவளி பண்டிகையை குடும்பத்தினருடன் உண்மையான மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு முன்னதாகவே பணம் சேமிப்பது அவசியம். மற்றவர்களின் பணத்தை நல்ல முறையில் பாது காத்து, அந்த முதல் மேலும் வளர உதவும் பாங்கியில் சேமிப்பது நல்லது.

குடும்பத்திற்கு தேவையான முக்கியமான பண்டங்களை கவலையில்லாமல் வாங்குவதற்கு வேண்டிய பணத்தை, வழக்கமாகவும், விவேகத்துடனும், தக்க பாதுகாப்புடனும் சேமிப்பது அவசியம். தீபாவளிக்கென சேமித்து வைக்கும் பழக்கம், நம் நாட்டில் இன்றும் பல பகுதிகளில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இந்தியன் பாங்க் சிறிய, பெரிய சேமிப்பாளர்கள் அனைவரும் தங்கள் பணத்தை நல்ல முறையில் உபயோகிக்க உதவுகிறது.

இந்தியன் பாங்க், அதனுடைய 176 கிளைகளுடன் ஒரே மாதிரியாக தாமாகவே சேமிக்க விரும்பும் எல்லோருக்கும் பணியாற்ற இன்று காத்திருக்கிறது.

இந்தியன் பாங்க் லிட்., சென்னை-1

DHANA



மோட்டார் & பம்பு செட்டு



பெல்ட் இயக்கும் பம்பு

பம்பு செட்டுகள் வாங்கி திருப்தியடையுங்கள்

எல்லா ரகங்களிலும் கிடைக்கும்

தன எஞ்சினியரிங் இன்டஸ்ட்ரியல்ஸ்

அழகாபுரி தெரு
பொள்ளாச்சி-தென் இந்தியா

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில்
ஏஜண்டுகள் தேவை

Nalin-D-116TM

எங்கள் வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் மற்றும்
அனைவருக்கும்
எமது மகிழ்ச்சிகரமான
தீபாவளி
வாழ்த்துக்கள்

எல்லாவிதமான பாங்க்
அலுவல்களுக்கும் வசதி உண்டு.

இந்தியன் ஓவர்ஸீஸ்
பாங்க் லிமிடெட்

தலைமைக் காரியாலயம்;
151, மவுண்ட் ரோடு, சென்னை-2.

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

கே. எம். நஞ்சப்பா
ஜெனரல் மானேஜர்





Best wishes for a festive season all the year round

CHALLAPALLI SUGARS LIMITED

Indian Chamber Buildings

ESPLANADE, MADRAS-1

Agfa®

CLICK III



The Internationally Famous Camera For 12-Picture Economy

Gone are the days of old-fashioned cameras. More and more people are taking to the modern Agfa Click III. It takes 12 large (6 x 6cm) photographs on any '120' size rollfilm. Success is yours from the first day—no calculations, no fussing—but lasting satisfaction.

Yours for Rs. 46·50 Local taxes extra. Get it from your Agfa dealer.

Features:
Meniscus lens • Automat[ic] shutter for instantaneous exposures • Built-in yellow filter for cloud effects • Lens settings for 'sunny' and 'overcast' • Flash contacts • Large optical viewfinder • Tripod bush • Ever-ready leather or plastic case and A1 flashgun available at extra cost.

Manufactured in India by: The New India Industries Ltd., Baroda.

SOLE DISTRIBUTORS:

AGFA INDIA LIMITED **Bombay • New Delhi • Calcutta • Madras**

CMAI-9

எமது தீபாவளி
வாழ்த்துக்கள்

இம் மலரிலுள்ள கலர் பிளாக்குகள்
யாவும் எங்களால் செய்யப்பட்டவை.

ஸ்தாபிதம் 1890

போன்: 2190

M. C. அப்பாசாமி செட்டி & கம்பெனி

14, ஜோன்ஸ் தெரு, சென்னை - 1.

இத் தீபாவளி நன்னாளிலும் மற்றும்
புத்தாண்டு முழுவதுமே
இல்லம் தோறும் இன்பம்
தழைத்திடட்டும்
இத் தீபாவளிக்கு, முன்பு எப்போதையும்விட அதிகமான புதிய மாடல்களை அளிக்கிறது மர்பி—தரமான ஒலி, மற்றும் தெளிவான 'ரிஸப்ஷன்' அளிக்கும் மர்பியின் தலை முறையிலே தோன்றியது ஒவ்வொன்றும். சிறப்பாக டிசைன் அமைத்து, கை தேர்ந்த நிபுணர்களால் முற்றிலும் சோதித்து இணைக்கப் பெற்ற உறுப்புக்களுடன் விளங்கும் ஒரு மர்பி மாடல், இவ்விழாக் காலத்தில் மட்டுமின்றி, பல்லாண்டு காலம் உங்கள் இல்லத்தை மகிழ்விக்கும்.
800 மர்பி வியாபாரிகளில், எவரையாவது அணுகி, உங்கள் இச்சைக்கிசைந்த மர்பி மாடலை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் ... தேர்ந்தெடுக்கப் பல்வேறு ரகங்கள் உள்ளன!
HANDLE WITH CARE
murphy
murphy radio
மர்பி ரேடியோ இல்லத்தை மகிழ்விக்கிறது!
Murphy sets the standard
NAS b391c

கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் ஒரு லட்சிய உணவுப் பானம்

ஒரு ஸ்பூன் கோகோ மால்டீனில் நீங்கள் பெறுவது என்ன?

முழு ஆடைப் பாலும், கோகோவும், உயர்வகை பார்லி மால்ட்டும், குளுகோஸும், திறம்படக் கலந்த கோகோ மால்டீன், வலுவான தசைகளும் திடமான எலும்புகளும் அடையவும், வலிவும் உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாது உப்புக்கள் - எல்லாம் கொடுக்கிறது. நீங்கள் தெம்புடனும் உற்சாகத்துடனும் செயல் புரிவதற்கு இன்றியமையாத A, B, B-2, D வைட்டமின்கள் கோகோ மால்டீனில் இருக்கின்றன. ஆரோக்கிய நிலையிலும் நோயுற்ற நிலையிலும் இளையவர்களுக்கும் முதியவர்களுக்கும் இது லட்சிய ஊட்ட உணவு. கோகோ மால்டீன் ஓய்ந்த நரம்புகளுக்கு இதம் அளிக்கிறது; இரவில் படுக்கு முன் சூடாக அருந்தினால் சுகமான தூக்கம் வரும்.

கோகோ மால்டீன் லாபரடரீஸ்

உரிமையாளர்கள்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்., 46, புஸா ரோடு, புது டில்லி-5. போன்: 52835

பிராந்திய விற்பனை அலுவலகம்: 76, எல்லீஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 85982
தந்தி: SOUTHLAND

TL-NI 30

பசியின்மையால் சரியாக சாப்பிடாத குழந்தையை...
...மனமார சாப்பிடச் செய்வது எப்படி?
அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்
தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்
இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l–லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறுரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்—அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!
இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.
INCREMIN
இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது
நாள் ஒன்றுக்கு: இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10–20 துளிகள். இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.
* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்
Lederle
லெடர்லி டிவிஷன் - ஸயனமிட் இந்தியா லிமிடெட்
CYANAMID
CMCI-26 TAM

உல்லாச நடை போடுவீர், ஒளிதிகழ நடமாடுவீர்...இத் தீபாவளிக்கே

Carona

கரோனு மிதியடிகள்

பருவமறிந்து பனிச்சென்
வழங்கவோர் பாதகாணிக்கை:
பாங்கான ஒரு ஜோடி
கரோனு மிதியடிகள்!
அபார நல்வசதி. ஆயிசும் கெட்டி. பல்வேறு
அழகுவடிவங்களிலே,
பல்வேறு பாணிகளிலே வருகிறது நீங்கள்
தேர்ந்தெடுக்க. உங்கள்
குடும்பத்திலே உள்ள ஒவ்வொரு
-வருடைய திருவடிகளுக்கும்
உற்ற பொருத்தமுள்ள
ஒரு ஜோடி உண்டு!

வாக்வெல்
ரு. 26.75

ஏர்கூல்
ரு. 10.75

ஸ்னீக்கர்
ரு. 4.40



கரோனு ஸாஹு கோ. லிட்., ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: 221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு, பம்பாய்-1.

LPE Aiyars. CS-7 TAM

பூரணமான இருமல் கட்டுப்பாட்டுக்கு

க்ளைகோடின்

டெர்ப் வசாகா

க்ளைகோடினுடைய, மருத்துவ- அங்கீகாரம் பெற்ற பார்முலா, இருமலால் பாதிக்கப்பட்ட பல இடங்களிலிருந்தும் இருமலை விரட்டியடித்து விடுகிறது. க்ளைகோடினின் செயல்திறன்: ● மூளையில்- க்ளைகோடின், தன்னியல்பாக வரும் இருமலைத் தூண்டும் இருமல்கேந்திரத்தை, சரியான சமயத்தில் பத்திரமாகவும், பயனுள்ள முறையிலும் கட்டுப்படுத்துகிறது ● தொண்டையில்-க்ளைகோடின் அடைப்பை அகற்றி, எரிச்சலையும் வலியையும் ஆசுவாசப்படுத்தி, தொண்டையின் மென்மையான பகுதிகளை, கிருமிகள் பாதிக்காமல் பத்திரமாகப் பாதுகாக்கிறது ● மார்பில்— க்ளைகோடின், சுவாசக் குழாய்கள் மற்றும் மார்பின் இறுகிய தசைகளைத் தளர்த்தி, கஷ்டமின்றி சுவாசிக்க உதவுகிறது ● நுரையீரல்களில்-மூச்சுத் திணற வைக்கும் சளியைக் கரைத்து, 'ஆழப் படிந்த' சளியை அகற்றி, அடைப்பை நீக்குகிறது. எப்பொழுதும் க்ளைகோடின் கைவசம் இருக்கட்டும்.

க்ளைகோடின்—30 வருடங்களுக்கு மேலாக மிகவும் அதிகமாக விற்பனையாகும் கைகண்ட வீட்டுநிவாரணி

4 அளவுகளில் கிடைக்கிறது • அலெம்பிக் தயாரிப்பு Alembic

everest/363a/Acw tm

DIWALI

GREETINGS

TO

OUR

FRIENDS

AND

CUSTOMERS

THE UNITED COMMERCIAL BANK LIMITED

HEAD OFFICE: CALCUTTA

ASP/UCO-30/66

ஸ்வஸ்திக்

பர்:.ப்யூம்டு காஸ்டர் ஆயில்

முரட்டு கேசத்தையும்
படியச்செய்கிறது—
நாள் முழுவதும்
மழமழப்பாய் வைக்கிறது



இழைய வாரிவிடப்பட்டு
பளபளக்கும் அழகிய
கேசம்...நறுமணம் வீசும்
அடர்த்தியான கேசம்—நாள்
முழுவதும் மழமழப்புடன்
திகழச் செய்வது ஸ்வஸ்திக்
பர்:.ப்யூம்டு காஸ்டர் ஆயில்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்

Shilpi-SOM 23 Tam.

படம்:
ஜே எஸ். ரேடியோ கம்பெனி

தவம் செய்த தவக்கோலம்

'ஜோதி'

தவம்செய்த தவக்கோலம், தரைசெய்த புண்ணியத்தால்
அவம்செய்த மனிதகுலம் அருளெய்த வருமுருவம்,
சிவம்செய்த ஞானத்தின் சிகரமெனும் ஒருமூர்த்தி,
பவம்செய்த கொடுமையெலாம் பாழாக வருந்தெய்வம்.

தான்நடந்த நிலமெல்லாம் தனிப்புனித முறச்செய்து
தேனடைந்த மலரென்னத் திகழ்அடிகொள் தேசுருவம்,
ஊனடைந்த உடலிளைக்க உயர்ஞானம் ஒளிவீச
மானிடந்தான் உயர்ந்ததென மதிப்படைய நிறுத்துசுடர்.

கண்ணொளியால் உளத்திருளைக் களைந்தோட்டும் செங்கதிரோன்,
தண்ணியஇன் னுரையாலே தாபமெலாம் போக்குநதி,
அண்ணியவர் கவலைகளை அழியவைக்கும் பேரரணம்,
விண்ணவரும் வியக்கவரு வித்தகமெய்த் தெய்வதமே.

எங்கிருந்தோ ஞானநீர் வேட்கையினல் எவரேனும்
தங்கவொளி வீசியமெய்ச் சங்கரனிங் குள்ளானென்
றிங்குவரு வார்;வந்து பேசியரு ளினில்நனைந்து
கங்குகரை இல்லாத களிவெள்ளம் மூழ்குவரே.

எவ்வுயிர்க்கும் இனியபிரான், இயல்பினிலே சேய்போன்றுன்,
தெவ்வருர்வந் தனைசெய்யும் திருவாளன், மறைவாழ
இவ்வுலகில் வந்தஅண்ணல், எழிற்சந்திர சேகரப்பேர்
செவ்வியுறங் கொண்டமுனி சீரென்றும் வாழியவே!

கச்சியெனும் பெரும்பதியிற் காமகோ டிப்பீடத்
திச்சைசிறி தேனுமின்றி இலகுசங்க ராசிரியன்
விச்சையுறு மறைமுதலாம் கலைகளெலாம் விளங்கஅருள்
உச்சிதன்சீர் வாழியவே! உத்தமன்சீர் வாழியவே!

சிற்றப்பா

எச். வி. ஆர். ஐயங்கார்

எனக்கு ஆறு ஏழு வயசு இருக்கும்போது என் சிற்றப்பாவைப் பார்த்ததுதான் எனக்கு முதல்முதலில் நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் காலை ஏழு மணி இருக்கும்; அப்போது அவர் எங்கள் வீட்டுக்கு வந்தார். பித்தளைப் பித்தான் போட்ட நீலக் கோட்டு, வெள்ளைத் தலைப்பாகையுடன் அவர் வந்தார். அவருடைய கண்கள் ரத்தச் சிவப்பாக இருந்தன. க்ஷவரம் பண்ணிக்கொண்டு சில நாட்களான தாடி மீசையுடன் தோன்றினார். நடுத்தரமான உயரத்தைவிடச் சிறிது குள்ளமாகவும் பருமனாகவும் இருந்தார். அவரையும் அவர் அண்ணாவையும் நினைக்கிறபோது - என் தகப்பனாரும் குள்ளந்தான் - எப்போதுமே எனக்கு ஆச்சரியம் உண்டாகும். ஏன் தெரியுமா? எங்கள் தாத்தா ஆறடி மூன்றங்குலம் உயரமுள்ள நெட்டையான மனிதர்!

சிற்றப்பா என்னிடம் அப்பா எங்கே என்று கேட்டார். அவர் திருவாராதன அறையில் இருக்கிறார் என்று சொன்னேன். வளர்ந்த தாடி மீசையும் ரத்தச் சிவப்பான கண்களும் உள்ள சிற்றப்பா ரங்கசாமியைக் கண்டவுடன் எனக்குப் பயந்தான் உண்டாயிற்று. சில நிமிஷங்களுக்குப் பிறகு அவர் வீட்டுக்கு வெளியே போய், தம் சட்டைப் பையில் கையை விட்டு ஓர் அணாவை எடுத்தார். ''இந்தா, உனக்கு மிட்டாய் ஒன்றும் வாங்குவதற்கு நேரம் இல்லாமல் போயிற்று. இதை வாங்கிக்கொண்டு போய் உனக்குப் பிரியமானதை வாங்கிக்கொள்' என்றார். அவர் புன்னகை செய்தார் என்று தோன்றியது; ஆனாலும் அவருடைய கண்களும் தாடி மீசையும் அது உண்மையா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாமல் மறைத்துவிட்டன.

அவர் 'ரிலீவிங் அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டர்' என்பதை அப்பால் தெரிந்துகொண்டேன். அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டர் எப்போதும் இரவிலேதான் வேலை பார்ப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ரிலீவிங் அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டர் தம்முடைய நிலையான இடத்தில் இருப்பார்; ஆனால் லைனில் யாராவது நோய்வாய்ப் பட்டாலும், வேறு காரணத்துக்காகச் சில நாட்கள் காஷுவல் லீவு வாங்கிக்கொண்டாலும் அவர்களுடைய வேலையை ரிலீவிங் அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டர் செய்வார். அதாவது அவர் எப்போதும் இங்கும் அங்கும் போய்க்கொண்டே இருப்பார்; எப்போதும் இரவு வேலைகளில் வேலை செய்வார். சிற்றப்பாவுக்குக் கண்கள் ரத்தச் சிவப்பேறியிருந்ததற்கு இதுதான் உண்மையான காரணம் என்று தெளிவாயிற்று.

கோடைக்கால விடுமுறையில் என் சகோதரனும் நானும் சிற்றப்பாவுடன் சில வாரங்கள் தங்கிவிட்டு வருவதற்காகப் புறப்பட்டோம். அதற்குள் அவர் ரிலீவிங் அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டராக இருப்பதுபோய், சாட்சாத் அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டரே ஆகியிருந்தார். ஆகவே மாதக் கணக்காக அவர் ஒரே ஸ்டேஷனில் தங்கி வேலை பார்த்தார்.

அந்தப் பயணம் எங்களுக்கு உற்சாகத்தை ஊட்டக்கூடிய சம்பவமாக இருந்தது. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எங்கள் அப்பா ஸ்டேஷனுக்கு வந்து வழியனுப்பியபோது ரெயில்வே டிக்கட்டுகளை எங்களிடம் கொடுத்தார். ரெயிலில் போகும்போது டிராவலிங் இன்ஸ்பெக்டர் டிக்கட்டுகளைப் பரிசோதனை செய்வாரென்றும், அதனால் டிக்கட்டுகளை ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார். ''டிக்கட்டுகளைத் தொலைத்துவிட்டால், அப்புறம்..'' என்று அப்பா சொல்லும்போது பயங்கரமான ஆபத்து நேர்ந்துவிடும் என்று குறிப்பிப்பவரைப் போலக் கையை அசைத்துக் காட்டினார். நாங்கள் ரெயிலில் போன நாற்பது ஐம்பது மைல் தூரமும் கைகளில் டிக்கட்டுகளை இறுகப் பற்றிக் கொண்டு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தோம்.

அந்தப் பெட்டியில் எங்கள் வகுப்பில் வாசிக்கும் பிள்ளைகள் இரண்டொருவரும் இருந்தார்கள். அவர்கள் எங்கள் வகுப்பில் குஷியான பேர்வழிகள்; எப்போதும் ஏதா

வது விஷமம் பண்ணிக் கொண்டே இருப்பார்கள்; வகுப்பில் கடைசியில் இருக்கிறோமே என்றோ பரீட்டையில் தோல்வி யடைவோமே என்றோ அவர்கள் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. நாங்கள் கையில் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருப்பது என்னவென்று கேட்டு, அவை ரெயில்வே டிக்கட்டுகள் என்று அறிந்துகொண்டவுடன் அவர்கள் இடியிடியென்று சிரித்தார்கள். ''நாங்களெல்லாம் டிக்கட்டுகள் வாங்



கிக்கொண்டு ரெயிலில் போகிறதில்லை; நாங்கள் எப். எஸ்.'' என்றார்கள். நானும் என் சகோதரரும், ''எப். எஸ். என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டோம். அவர்கள் ''ப்ரீ ஸர்விஸ்'' (இனும் பயணம்) என்றார்கள். அவர்களும் தங்களுக்குத் தூர உறவினர் ஒருவரைப் பார்க்கத்தான் போய்க்கொண்டிருந்தார்கள்; அவர் ரெயில்வே உத்தியோகஸ்தர். அவர்களுடைய தகப்பனார் கார்டினிடம் அவர்களைப்பற்றிச் சொல்லி, ஏதாவது சங்கடம் உண்டானால் கார்டு கவனித்துக்கொள்வாரென்று அவர்களிடமும் சொல்லியிருந்தாராம். ''எங்கள் குடும்பத்தில் யாரும் எப்போதும் டிக்கட்டே வாங்குவதில்லை. நாங்கள் எப்போதும் எப். எஸ்.தான்'' என்றார்கள். அவர்கள் மிடுக்காகவும் விநோதமாகவும் இதைச் சொன்னார்கள். எங்கள் அப்பா மாத்திரம் ஏன் அப்படி பயந்தாங்கொள்ளியாகவும் அதிஜாக்கிரதையாகவும் இருந்தார் என்று என் சகோதரனும் நானும் ஆச்சரியப்பட்டோம்.

முதல் விடுமுறைக் காலம் ஆனவுடன் நாங்கள் திரும்பியபோது எங்கள் சிற்றப்பா தம்முடைய சொந்தச் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துப் பணம் போடும் டிராயரில் போட்டுவிட்டு நாங்கள் ஊருக்குத் திரும்பிப் போவதற்குரிய ரெயில்வே டிக்கட்டுக்களை வாங்கினது நினைவு இருக்கிறது. எங்கள் அப்பாவோ, எங்கள் சிற்றப்பாவோ ஏன் எங்களை 'எப். எஸ்' பயணம் செய்யும்படி விடவில்லை என்பதை நினைத்து நாங்கள் எப்போதும் ஆச்சரியப்படுவோம். இந்தச் சகோதரர்களுடைய அசாதாரணமான நடத்தையின் உண்மையை வெகு காலம் வரையில் நான் உணர்ந்து கொள்ள முடியவில்லை; பிறகே உணர்ந்தேன்.

சிற்றப்பா ரங்கசாமியுடன் பல சுகமான கோடை விடுமுறைகளைக் கழித்திருக்கிறோம். அப்படிப்பட்ட காலங்களில் ஒரு முறை நிகழ்ந்தது இப்போது நினைவுக்கு வருகிறது. அப்போது அவர் ஸ்டேஷன் மாஸ்டர் ஆகியிருந்தார். பக்கத்து நகரத்தில் இருந்த சில வியாபாரிகள் ஏதோ விழாவுக்கு அவரை அழைத்தார்கள். அவர் போகும்போது எங்களையும் அழைத்துக்கொண்டு போனார். அந்த நகரத்துக்கு நடந்தே போனோம். அப்போது மாலை ஆறு மணி. சிற்றப்பா ஸ்டேஷன் பாதுகாப்பை அஸிஸ்டெண்ட் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒப்படைத்தார். நிலா பிரகாசமாக வீசியது. கோடையானாலும் குளிர்ச்சியாகவும் சுகமாகவும் இருந்தது. நாங்கள் நகரத்தை அடைந்தபோது எங்களை மிகவும் மரியாதையுடன் வரவேற்றார்கள். சிற்றப்பாவே பிரதானமான விருந்தினராகையால் அவருக்கு அதிக மரியாதை காட்டி உபசரித்தார்கள். கடைசியில் நாங்கள் புறப்பட்ட போது அவர்கள் உலர்ந்த பழங்களும் திராட்சையும் அடங்கிய பொட்டலம் ஒன்றை வழங்கினார்கள்.

நாங்கள் வீட்டுக்கு வந்தவுடன் என் சகோதரனுக்கும் எனக்கும் அந்தப் பழங்களை உண்ண வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. நாங்கள் மொத்தத்தில் ஆறு ஏழு மைல் நடந்தோமாகையால் எங்களுக்கு நல்ல பசியாக இருந்தது. எங்கள் நாவில் நீரூறச் செய்யும் அந்தப் பழங்களில் ஒரு பகுதியையாவது தின்னக் கூடாதா என்றே தோன்றியது. எங்கள் சிற்றப்பாவின் கருத்தோ வேறாக இருந்தது. அந்தப் பொட்டலத்தை அவர் ஒரு மூலையில் வைத்து விட்டு, யாரும் அதைத் தொடக் கூடாது என்று சொல்லிவிட்டார். அவர் என் சித்தியிடம் சொல்லிக்கொண்டிருந்தார்: ''இந்த வியாபாரிகள் அத்தனை பேரும் விஷமிகள். வாகன்களைத் தங்களுக்கு முன்னாலே கொடுக்க வேண்டும் என்பதற்காகவோ மற்றவர்களை விடக் கிரமமல்லாத சலுகையைப் பெறுவதற்காகவோ என்னை நல்லது பண்ணிக்கொள்ள முயலுகிறார்கள். அவர்கள் கொடுத்ததைக் கையாலும் தொட எனக்கு மனசு இல்லை. அதைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிடலாம் என்று எண்ணுகிறேன். நான் வேண்டாமென்று மறுத்திருந்தால் மரியாதைக் குறைவாக நினைத்துக் கொள்வார்களென்று வாங்கிக்கொண்டேன்; அல்லாமலும் வெளிப்படையாக நாம் இவர்களிடம் விரோதத்தைக் காட்டினால் இவர்கள் செய்கிற விஷமத்துக்கு எல்லையே இராது. மொட்டைப் பெடிஷன்....'' என்று மேலே வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்திவிட்டார். இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று எங்களுக்குச் சுத்தமாக விளங்கவே இல்லை. ஆனால் அவர் எங்களை அப் பழத்தைத் தொட விடவில்லை. அடுத்த நாள் சிற்றப்பா அந்தப் பழங்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் பிள்ளைகளுக்கு விநியோகிக்கும்படி சொல்லிவிட்டார்.

வருஷங்கள் போகப் போகத்தான் சிற்றப்பா ரங்கசாமியைப் புரிந்து கொள்ளத் தொடங்கினோம். அவர் தம்முடைய உத்தியோகத்துக்குத் தம்மை அர்ப்பணம் செய்துகொண்டவர்; அதாவது அவர் தம் கடமைகளைச் சிறிதும் பிறழாமல் சரிவரச் செய்து வந்தவர். ரெயில்வே கம்பெனியின் சட்ட திட்டங்களின்படி தமக்கு உரியதல்லாத ஒரு பைசாவைக்கூட அவர் தொடமாட்டார். அவருடைய சக உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் அவரை முழு முட்டாள் என்றே எண்ணினார்கள். அவர்கள் அப்படி எண்ணினாலும் அவருடைய விருந்தோம்பும் பண்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்ததில்லை. பண்டிகைக் காலங்களில் வண்டி நின்றிருக்கும் பொழுது கார்டுகள் ஒரு நிமிஷம் அவர் வீட்டுக்குள் நுழைந்து அங்கே பண்ணியிருக்கும் பட்சணப் பொட்டலங்களை எடுத்துச் செல்வார்கள். கடைசியில், அவர் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றபோது அவருடைய சேமிப்பு நிதிக்குமேல் ஒன்றும் அவரிடம் இல்லை. அதுவும் ஆறாயிரத்திலிருந்து ஏழாயிரத்துக்குள்ளேதான் இருக்கும். அவருடைய சகாக்களோ அதைப்போல எட்டுப் பங்கு, பத்துப் பங்கு பணம் சம்பாதித்தார்கள்; எங்கள் சிற்றப்பாவிடம் அவர்களுக்கு அவமதிப்புக் கலந்த இரக்கம் உண்டாயிற்று.

அவர் ஓய்வுபெற்றபோது பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள இடத்தில் உத்தியோகத்தில் இருந்தேன்; ஒரு நாள் தமக்கு ரூ. 500 கடனாகக் கொடுக்க முடியுமா என்று அவர் எழுதிய கடிதம் எனக்கு வந்து சேர்ந்தது. அந்தப் பணத்தைத் திருப்பித் தர முடியுமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாதென்றும், ஆனால் திருப்பித்தர முயற்சி செய்வதாகவும் அவர் எழுதியிருந்தார். இந்த நிபந்தனையின்மேல் அவர் கடன் கேட்டிருந்தார். நான், அவருடைய கடிதம் பைத்தியக்காரத்தனமானது என்றும், நான் பணத்தை அனுப்புவதாகவும், ஆனால் அதைக் கடனாக எண்ணக் கூடாதென்றும், அதைத் திருப்பித் தருவதென்பதைக் கனவிலும் எண்ணக் கூடாதென்றும் எழுதிப் பணத்தை அனுப்பினேன். ஆறு மாசம் அவரிடமிருந்து ஒரு கடிதமும் வரவில்லை. அதற்கப்புறம் இன்ஷ்யூர்த் தபாலில் அந்தப் பணத்தைத் திருப்பி அனுப்பினார்.

அப்பால் ஒரு விடுமுறைக் காலத்தில் அவரைப் பார்ப்பதற்காகப் போக வேண்டி நேர்ந்தது. அவர் ஒரு சின்ன வீட்டில் வசித்தார். சில வருஷங்களாக நான் பார்த்ததைவிட மெலிந்திருந்தார். எங்கேயோ தடந்தவறிவிட்டதுபோலவும் எதையோ தேடிக்கொண்டிருப்பவரைப் போலவும் ஒரு குறிப்பு அவர் முகத்தில் இருந்தது. வழக்கம் போல் என்னை உபசரித்தார்; சிறந்த விருந்து போடுவதற்காகத் தம்முடைய சக்திக்கு அப்பாலும் ஏதோ செய்தார். என் பணத்தைத் திருப்பி அனுப்பியதற்காக நான் அவரைக் கடிந்துகொண்டேன். ஆனால் அவர் தம் கையை அசைத்துக் கொண்டே, ''உன்னை எனக்கு எவ்வளவு நன்றாகப் பிடிக்கும் என்பது உனக்கே தெரியும். ஆனால் அதற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இந்த வாழ்க்கை

யில் நான் யாருக்கும் கடன் பட்டிருக்க விரும்பமாட்டேன்'' என்றார்.

வாழ்க்கையில் அவருக்கு அதிகச் சௌக்கியம் கிடைக்கவில்லை. அவருடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் நன்றாகப் படிக்கவில்லையாதலால் சாமானிய வேலைகளை மேற்கொள்ள வேண்டி நேர்ந்தது. அவருடைய பெண்களுக்குக் கல்யாணம் செய்யும் விஷயத்திலும் நிறையக் கஷ்டங்கள் இருந்தன. அவருடைய தேக சௌக்கியம் குலைவுற்றது. ஆனால் கடைசி வரையில் அவர் யாருக்கும் தம் தலையைத் தாழ்த்தியதே இல்லை. அவருடன் கழித்த அந்தத் தினம் முழுவதும் அவர் தம்மைப் பற்றியோ தம் கஷ்டங்களைப் பற்றியோ ஒரு வார்த்தை பேசவில்லை. ''நீ நன்றாக இருக்கிறாயென்பது தெரிந்து சந்தோஷம் அடைகிறேன். ஆனால் பாவம், உங்கள் அப்பாதான் மிகவும் சின்ன வயசிலே இறந்து போனார். இப்போது உன்னைப் பார்த்தால் எவ்வளவோ சந்தோஷமடைந்திருப்பார். உங்கள் அம்மாவை நன்றாகப் பார்த்துக்கொள்'' என்றார்.

நான் அவரிடம் விடை பெற்ற போது அவர் தம் வீட்டு வாசலில் நின்று தம் கையை அசைத்து விடை தந்தார்; ஆனால் அவர் மனசு மட்டும் எங்கேயோ இருந்தது என்று எனக்குத் தோன்றியது. பற்று முற்றும் ஒழித்தவரைப் போலவும், அதிசயமான, கண்ணுக்குத் தோற்றாத சக்தியுடன் ஏதோ உறவுடையவரைப் போலவும் அவர் தோற்றமளித்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் காலமானார்.

எங்கள் சிற்றப்பா ரங்கசாமியை நினைத்து அடிக்கடி ஆச்சரியப்பட்டிருக்கிறேன். சுகமாக வாழும் விஷயத்தில் அவர் வெற்றி பெறவில்லை; அவருடைய குடும்ப வாழ்வில் பல கஷ்டமான சிக்கல்கள் இருந்தன. இப்போது அவரை நினைக்கிறவர் யாரும் இல்லை. காட்டு மரங்களிலிருந்து பழுத்து உதிரும் லட்சக் கணக்கான இலைகளைப் போன்றவர் அவர்; அந்த இலைகள் உதிர்கின்றன; மறைந்தே போகின்றன. ஆனால் உண்மையாகவே எனக்கு ஒன்று வியப்பாக இருக்கிறது: அவர் காலமானதற்குப் பல வருஷங்களுக்குப் பிறகும் நான் இங்கே அவரைப்பற்றி நினைத்துக்கொண்டும் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருக்கிறேன். அவரைப் போன்ற இணையற்ற தைரியமும், நெகிழ்ந்து கொடுக்காத, தளர்வற்ற மனவலிமையும் எனக்கு இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று ஆசைப் படுகிறேன்.

ஆனால் இனிமேல் உண்மையில் இப்படி வியப்படையக் கூடாது. ஏனென்றால், அன்று ஒரு நாள், அவருடைய பிள்ளைகளில் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். அவரும் ஸ்டேஷன் மாஸ்டர் உத்தியோகம் பார்க்கிறார். நேர்மையைப் பொறுத்த வரையில் அவர் தம்முடைய அப்பாவைப் போலவே இருக்கிறார். அவருக்குக் கிடைக்கும் சம்பளம் போதாமையால் அவருடைய மனைவி பங்களூரில் ஒரு கடை வைத்திருக்கிறாள். அவளுக்கு ஏதாவது ஏஜென்ஸி வாங்கித் தர முடியுமா என்று என்னை அவர் கேட்டார். நான் அவருக்கு உதவி செய்ய முயன்றேன்; முடியவில்லை. அவருடைய பிள்ளைகள் யூனிவர்ஸிடிப் பரீட்சையில் தேர்ச்சிபெறும் வரைக்கும் ஆகும் செலவுகள் எல்லாவற்றையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். அவர் புன்னகை பூத்தார். பிறகு ஏஜென்ஸி பெறும் விஷயத்தில் என் முயற்சிகள் பலிக்காமற் போனதற்கு வருந்துவதாகக் கூறிப் போய் விட்டார். இது நடந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. என்னிடமிருந்து பொருளுதவி எதையும் ஏற்பதற்கு அவர் விரும்பவில்லை என்பது இப்போது தெளிவாகிறது.

சென்னையில் கனமான ஸெப்டம்பர் மாதத்தின் அமைதியான இரவு நேரத்தில் இதை நான் எழுதுகிறேன். அர்த்த சந்திரன் வானில் இருக்கிறான்; ஆனால் மேகங்கள் அவனைச் சூழ்ந்திருக்கின்றன. இந்த அமைதி, மேகங்கள், நட்சத்திரங்கள் இல்லாமை எல்லாம் இறுக்கமாக இருக்கின்றன. சில சிநேகிதர்கள் அரசியல் விவகாரங்களைப்

பற்றிப் பேசிவிட்டு இப்போதுதான் போனார்கள்.

நேர்மை தவறுவது, சரியான தலைவர் இல்லாமை, அயோக்கியத்தனம் என்பன போன்ற விஷயங்களைப்பற்றி எங்கள் பேச்சுப் படர்ந்தது. நான், அடிக்கடி செய்வதுபோல, இப்போதும் சிற்றப்பா ரங்கசாமியை நினைக்கலானேன். அவர் வாழ்ந்ததும் இறந்ததும் வீணுகத்தானு என்று நான் வியப்படைகிறேன்.

யாருக்கும் தெரியாத ஸ்டேஷன் மாஸ்டராக இருந்து பல வருஷங்களுக்கு முன்பு மறைந்து போனாலும் அவர் - அவரைப் போன்ற ஆத்மாக்கள் - தாம் காலமான பல ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் கீழே போகாமல் தாங்கிக்கொண்டும், நாம் உணரா விட்டாலும் நம்முடைய வாழ்க்கைக்கு ஏதோ பொருள் உண்டு என்பதை உணர்த்திக்கொண்டும், நம்பிக்கைக் கதிரை வழங்கிக்கொண்டும் தெய்விகப் பண்புகளின் உணர்வை உண்டாக்கிக்கொண்டும் இருக்கத்தான் வேண்டும் என்று நிச்சயமாகத் தோன்றுகிறது. ★

ஆண்டவனை வழிபடுவதைக் காட்டிலும் அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழிபடுவோர்க்கு ஒரு பலன். அடியாரை வழிபடுவோர்க்கு இரட்டைப் பலன். ஏன்? அடியார்கள் உள்ளக் கோயிலில் ஆண்டவன் உறைகின்றுன். ஆதலின் அடியார் வழிபாடு உயர்ந்தது என்றுணர்க.

ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்க்குச் சேராது. அடியார்க்குத் தந்தது ஆண்டவனைச் சேரும். அஞ்சல் தலைமை நிலயத்தில் இட்ட அஞ்சல் அஞ்சல் பெட்டிக்கு வராது; அஞ்சல் பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலயத்துக்குச் சேர்ந்துவிடும். அஞ்சல் தலைமை நிலயம் இறைவன்; அஞ்சல் பெட்டி அடியார்கள் என்றுணர்க.

''படமாடக் கோயில்
பரமர்க்கொன் றீயின்
நடமாடக் கோயில்
நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில்
நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில்
பரமர்க்கங் காமே''

என்பார் திருமூலர்.

ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடு ஆராதனை எனப்படும். அடியார்க்குச் செய்யும் வழிபாடு சமாராதனை எனப்படும். சம் ஆராதனை - சமாராதனை. சம்-நன்ருக; ஆராதனை - வழிபாடு. நன்ருக வழிபட்டது சமாராதனை.

ஆதலால் காதலால் அடியார்க்குச் செய்யும் வழிபாடு மிகமிகச் சிறந்த பயனை நல்கும்.

ஒரு சமயம் நான் பெருந் தனவந்தர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் மிகவும் இனிமையாகப் பேசி மிகவும் உபசரித்தார். ''ஐயா, உமக்கு இத்துணைப் பெருஞ் செல்வம் எவ்வாறு வந்தது?'' என்று கேட்டேன். அத்தனவந்தர் செல்வநலத்தால் சிறந்தவர் மட்டுமன்று; கல்வி நலத்தாலும் சிறந்தவர். உடனே இரு வெண்பாக்களினுல் எனக்கு விடையிறுத்தார்.

கட்டத் துணியற்றுக்
காந்துபசிக் கன்னமற்
றெட்டி மரமொத்
திருந்தயான்—ஒட்ட
எறும்பிற்கு நொய்யரிசி
யிட்டேன்; அதனல்
சிறிதுபொருள் ஈந்தான் சிவன்.

அப்பொருள்கொண் டீசன்
அடியார்கட் கன்னமிடடேன்
ஒப்புவமை யில்லான்
உளமுவந்தே—இப்பார்
அளகேசன் என்றே
அதிசயிக்கச் செல்வம்
அளவிலா தீந்தான் அவன்.

''உடுக்கத் துணியும் உண்ணச் சோறும் இன்றி எட்டிமரம் போல் வாழ்வு கசந்து இருந்த நான், வேறு ஒரு நற்பணியும் செய்ய இயலாது திகைத்து, எறும்பு வளைக்கு நொய்யரிசியிட்டு வந்தேன். அதனுல் சிவபெருமான் சிறிது செல்வத்தை வழங்கியருளினர். சிவன் தந்த செல்வத்தைப் பாங்கியில் போடாமல் அப்பரமனுடைய அடியார்க்கு அன்னம் இட்டு வந்தேன். அதனுல் அகம் மகிழ்ந்த அரனுர் குபேரன் என்று என்னை எல்லோரும் மதிக்குமாறு அளவிறந்த



செல்வத்தை வழங்கியருளினார்.'' இது அவர் கூறிய விடை.

ஒரு கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள். சூது வாது வஞ்சனை பொய் களவு முதலிய தீக்குணங்கள் அத்தனைக்கும் அவள் உறைவிடமாக இருந்தாள். தரும குணம் ஒருசிறிதும் இல்லாத பொல்லாத கிழவி. அவள் வீட்டில் வாழ்கின்ற எறும்புகளுக்கு நித்திய ஏகாதசி. ஒன்றையும் சிந்த மாட்டாள். எறும்பின் வாயில் ஒரு நொய்யைப் பார்த்தால் உடனே ஓடி அதை எடுத்துப் பானையில் போட்டுக் கொள்வாள். அவள் வீட்டில் சாப்பிட்ட இலை வெளியில் விழுந்தால் சாப்பிடாத இலை மாதிரி சுத்தமாக விழும். அதில் ஒரு துளிப் பசைகூட இராது. நாய்கள் வந்து பார்த்து ஏமாந்து போகும். நாம் செய்கின்ற வேலைகள் யாவும் இந்தக் கிழவியே செய்துவிட்டாள் போலும் என்று பேசிக்கொள்ளும்.

பழைய சோற்றைப் பிசைந்து வடகம் போட்டுத் தின்பாள். கந்தல் களையெல்லாம் மடித்து மடித்துத் தலையணையாக்கிப் போட்டுக்கொள்வாள். கோயிலுக்குப் போவாள். சுவாமி கும்பிடுவதற்கு அன்று; அங்கு யாராவது விட்டிருந்த பாதரட்சைகளைக் கவர்ந்து வரும் பொருட்டே. யாராவது பிச்சைக்காரர் அவளுடைய வீட்டுக்குச் சென்றால் சீறி விழுந்து கடிக்க வருவாள். அவர்கள் அப்படியே நடுங்கி ஒடுங்கி ஓடிவிடுவார்கள்.

அவள் வாயில் மறந்தும் தெய்வத் திருநாமம் வராது. அவள் சிந்தையில் கருணைக்கு இடமே இல்லை. கருணைக் கிழங்காகத்தான் போகும். அவளை அந்த ஊரில் அனைவரும் வெறுத்து ஒறுத்தார்கள்.

ஒரு நாள் காலை, கிழவி நடையில் அரிசி தீட்டிக்கொண் டிருந்தாள். ஒரு சிறந்த சிவனடியார் வந்து,

''அரஹர சிவசிவ அம்பல வாணா
பரம தயாபர வரத குணாளா''

என்று பாடிக்கொண்டு நின்றார். ''பாட்டீ! ஒரு பிடி அரிசி போடு'' என்றார்.

கிழவி, ''ஏய்! உனக்கென்ன மமதை? எனக்கு என்ன வயது? எண்பதுதானே ஆயிற்று? பாட்டி என்கின்றாய். பச்சை வெட்டுமருந்து சாப்பிட்டுப் பல் போய்விட்டது. தேன் பட்டு மயிர் நரைத்துவிட்டது. இது என்ன தரும சத்திரமா? உனக்கென்ன கேடு? செக்குலக்கை மாதிரி இருக்கின்றாய். போ போ!'' என்று விரட்டினாள்.

''பெரியம்மா, காதில் தங்கத்தால் செய்த பாம்புவடம் போட்டிருக்கின்றாயே! கழுத்து நிறையத் தங்கச் சங்கிலி. இவையெல்லாம் ஏது? சிவன் தந்ததுதானே? நான் பொன்னையும் பொருளையும் கேட்கவில்லையே! ஒரு பிடி அரிசிதானே யாசிக்கின்றேன்? அண்டாத் தொண்டையால், தகரடின் தட்டியதுபோல் கர்ச்சித்துப் பேசுகின்றனையே!



பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை;
பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை
இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்தது
என்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக் கென்சொல்லு
வேன்கச்சி ஏகம்பனே.''

அவ்வளவுதான். கிழவிக்குப் பொங்கி எழுந்தது சீற்றம். ஆலகால விஷம்போல் கொதித்தாள். ''பிச்சைக்காரப் பயலே! என் வீட்டிலே வந்து இந்தத் தரித்திரம் பிடித்த மரணத்தைக் குறிக்கின்ற பாட்டைப் பாடுகின்றாயே!'' என்று வைது, அரிசி தீட்டுகின்ற உலக்கையால் பத்திரகாளிபோல் அந்தச் சிவனடியாரை அடிக்க ஓங்கினாள்.

உலக்கையில் ஒட்டியிருந்த ஓர் அரிசி அவருடைய அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அதனைக் கிழவி பார்க்கவில்லை. பார்த்திருந்தால் எல்லா அரிசியும் என்னது என்று கொண்டிருப்பாள். அடியார் பிடித்தார் ஓட்டம்.

மற்ற வீடுகளுக்குச் சென்றார். சிறிது அரிசி கிடைத்தது. ஒரு மண்டபத்தில் அதைப் பொங்கி, தாம் வழிபடும் சிவலிங்கத்துக்கு நிவேதித்தார். பசியாறினார். சிவயோகத்தில் அமர்ந்தார். சிவஞானிகள் இன்றிருந்த ஊரில் நாளை இரார். அவர் தலயாத்திரைக்குச் சென்றுவிட்டார்.



நாளடைவில் கிழவி கண்ணை மூடிவிட்டாள். காலதூதர்கள் அவளைக் கட்டிப் பிடித்து யாதனு சரீரத்துடன் கொண்டுபோய் அறக்கடவுளுக்கு முன்னே நிறுத்தினார்கள்.

அறக்கடவுள் கடுகடுத்த முகத்துடன், ''சித்திரகுப்தா, இவள் கணக்கை எடுத்துப் படி'' என்று கட்டளையிட்டார்.

சித்திரகுப்தன் கிழவியின் கணக்கை எடுத்துப் படித்தான். ''எல்லாம் பாவந்தான். புண்ணியமே இல்லை. எறும்பு வளையில் நெருப்பை இட்டாள். பெரியோரை நிந்தித்தாள். கோயில் உடைமைகளைக் கவர்ந்தாள். கண்ணில்லாதவர்களுக்குக் காலணாப் போட்டு நாலணா எடுத்துக்கொண்டாள். சிவராத்திரி சஷ்டி ஏகாதசி முதலிய விரத நாள்களில்கூடத் தலையணைக்குப் பஞ்சடைக்கின்ற மாதிரி வயிறு புடைக்கத் தின்றாள். பேசிய யாவும் பொய். ஒரு நாள் ஒரு மகானை உலக்கையால் இடிக்கச் சென்றாள். உலக்கையில் ஒட்டிய ஓர் அரிசி அவருடைய கரத்தில் இருந்த அட்சய பாத்திரத்தில் வீழ்ந்தது. அந்த ஓர் அரிசி சிவநிவேதனமாகி அச் சிவயோகியார் திருவயிற்றில் சேர்ந்தது. இந்த ஒன்றுதான் இவள் வாழ்நாளில் செய்த புண்ணியம். இதுவும் அபுத்தி பூர்வமாகச் செய்தது'' என்றான்.

அறக்கடவுள், ''நல்வினை அபுத்தி பூர்வமாகச் செய்தாலும் நன்மை பயக்கும். 'தான் சிறிதேயாயினும் தக்கார்கைப் பட்டக்கால், வான் சிறிதாப் போர்த்து விடும்.' நெருப்பைத் தெரியாமல் மிதித்தாலும் சுடுந்தானே? ஆதலால் இந்த ஓர் அரிசிக்கு என்ன நலத்தை நுகர வேண்டும், பார்த்துச் சொல்'' என்றார்.

சித்திரகுப்தன், ''அண்ணலே, அந்த ஓர் அரிசி அடியாரின் திருவுதரத்தில் வீழ்ந்தபடியால் திருக்கயிலாய மலையிற் சென்று சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும்'' என்றான்.

அறக்கடவுள், ''புண்ணியம் கடுகளவு; பாவம் மலையளவு. சூசிகடாக நியாயப்படி முதலில் புண்ணியத்தை நுகரட்டும். பிறகு பாவங்களை நுகரச் செய்யுங்கள். கிழவியின் பாவங்களுக்காக நரகில் இட்டு வாட்டி வருத்துங்கள். கிழவியின் வாயிலே தீயை வைத்துச் சுடுங்கள். கொதிக்கின்ற எண்ணெயில் இட்டுப் பொரியுங்கள்'' என்றார்.

நமனுடைய தமர்கள் கிழவியைப் பாசக் கயிற்றால் நன்றாகப் பிணித்துக் கொண்டு போய்த் திருக்கயிலாயத்தில் சிவ சந்நிதியில் நெடுந் தொலைவில் நிறுத்தினார்கள்.

''கிழவி, அதோ பார், சிவபெருமான்!''

பவளக் குன்று போன்று கோடி சந்திரப் பிரகாசமாய் வேத மந்திர பீடத்தில் வீற்றிருக்கும் சிவ மூர்த்தியையும், இடப் பாகத்தில் மரகதக் கொடிபோல் வீற்றிருக்கின்ற இமய வல்லி அம்மையையும், இடையில் கனகச் சிறு குன்றுபோல் களிநடம் புரியும் கந்த வேளையும் கண்டாள் கிழவி. அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது.

''அப்பா எமதூதர்களே, உங்களுக்கு ஒரு கோடி வணக்கங்கள். ஓர் அரிசிக்கு இத்துணைப் புண்ணியம் வரும் என்று பாவியாகிய எனக்குத் தெரியாமல் போய்விட்டது. அந்தோ! என் வீட்டில் குதிர் நிறைய நெல்லும் பல மூட்டைகள் அரிசியும் நெய்யும் பாலும் முந்திரிப் பருப்பும் பாதாம் பருப்பும் டப்பா டப்பாவாக இருந்தன. அத்தனையும் இப்போது எனக்கு உதவவில்லை. பெட்டி நிறையப் பணம் வைத்திருந்தேன். வட்டிமேல் வட்டி வாங்கினேன். பெட்டி மேல் பெட்டி அடுக்கினேன். எல்லாம் அங்கேயே நின்றுவிட்டன. அடியாரிடம் சேர்ந்த ஓர் அரிசிதான் இங்கு உதவுகின்றது. இத்துணைப் புண்ணியம் வரும் என்று யாரும் எனக்கு விவரமாகச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் என் வீடு தேடி வந்த அடியார்க்கு இரட்டையிலையிட்டுப் பாலும் நெய்யும் அன்னமும் சொர்ணமும் அள்ளி வழங்கியிருப்பேன். சண்டாளியாகிய நான் கிள்ளிக்கூடத் தந்தேன் இல்லை. வாழ்நாள் முழுவதும் வீழ்நாளாகக் கழித்தேனே! போற்றுதே ஆற்ற நாள் போக்கினேனே! அப்பா, நீங்கள் நல்ல உத்தமர்கள். தேவருக்கும் மூவருக்கும் காணக் கிடைக்காத கண்ணுதற் கடவுளைக் கண்ணாரக் கண்டேன். ஆனந்தம் கொண்டேன். கடவுளைக் கண்டு கை கூப்பித் தொழவில்லையானால் மேலும் பாவந்தானே? உங்களைத் தலையினால் வணங்குகின்றேன். சிறிது கட்டை அவிழ்த்து விடுங்கள். கைகூப்பிக் கும்பிடுகின்றேன். பிறகு என்னைக் கட்டிக்கொண்டு போய் எரிவாய் நரகில் இட்டு வருத்துங்கள்'' என்று மிக மிக நடுங்கிய குரலுடன் இனிமையாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

இரக்கமே அறியாத எமதூதர்களின் உள்ளம் சிறிது உருகிற்று. 'குடலறுந்த குறுநரி எங்கே போகும்?' என்று கருதிச் சிறிது கட்டை அவிழ்த்து விட்டார்கள்.

கிழவி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து திருக்கோயிலுக்குள் சென்று, கருணைக் கடலாகிய சிவபெருமான் திருவடியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டாள்.

''தேவதேவா! மஹாதேவா! தீன ரட்சகா! கருணைக் கடலே! ஏழை பங்காளா! அருட் பெருஞ் சோதீ! அப்பனே! சிறியேன் அறியாமையால் வல்வினைகளைச் செய்து விட்டேன். அத்தனையும் பொறுத்து ஏழையைக் காத்தருள். காலதூதர்கள் இரும்புச் சம்மட்டியால் அடிப்பார்களாமே! கும்பீபாக நரகில் தள்ளிச் சித்திரவதை செய்வார்களாமே! தாண்டவம் புரியும் ஆண்டவனே! வேண்டியவர்களுக்கு அருளும் தயாநிதியே! என்னை விரட்டியடிக்காமல் காத்தருள். குழந்தைகள் செய்த குற்றங்களுக்கு அம்மையும் அப்பனும் தண்டிக்கலாம். தெருவில் போகும் பயில்வானை விட்டுத் தண்டிக்கமாட்டார்களே! எமனிடம் கொடுத்து என்னைத் தண்டிக்காதே!'' என்று கூறி அழுதாள்; தொழுதாள்.

கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் அவள்மீது கருணை மழை பொழிந்தார். ''அஞ்சேல்'' என்று அபயம் அளித்தார்.

கிழவி சிவபெருமான் திருவடியின் அருகில் நிமிர்ந்து அமர்ந்தாள்.

இத்தனையும் கண்ட காலதூதர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். ''கிழவி, வெளியே வா'' என்று அழைத்தார்கள். கிழவி, ''வர முடியாது, போங்கள்'' என்றாள்.

காலதூதர்கள், ''எம்பெருமானே! கிழவியைத் துரத்தி அனுப்புங்கள். இவள் கொடிய பாவி. நரகில் தள்ளி இவளைத் தண்டிக்க வேண்டும்'' என்றார்கள்.

சிவபெருமான், ''காலதூதர்களே, விண்ணளவு அடுக்கிய பஞ்சுப்பொதி நெருப்பினால் எரிந்து கரிந்து சாம்பரானாற்போல இவளுடைய பாவங்கள் யாவும் என்னைத் தீண்டியவுடனே நீறாகிவிட்டன. இவளை நாம் மன்னித்து அருள் புரிந்தோம். நீங்கள் உங்கள் உலகுக்குச் செல்லுங்கள்'' என்று அருளிச்செய்தார்.

காலதூதர்கள், ''ஐயனே, எங்கள் தலைவனுக்கு என்ன சொல்வது?'' என்றார்கள்.

சிவபெருமான், ''மார்க்கண்டேயர் வரலாற்றை நினைவுபடுத்துங்கள்'' என்றார்.

காலதூதர்கள் மறைந்து நமனுலகம் போய் நடுங்கி அறக்கடவுளுக்கு முன் நின்றார்கள்.

அறக் கடவுள், ''எங்கே கிழவி?'' என்று கேட்டார். அவர்கள் நிகழ்ந்ததைக் கூறினார்கள்.

அறக்கடவுள் இறைவனுடைய கருணைத் திறத்தையும் அடியார் குட்சியில் வீழ்ந்த ஓர் அரிசி செய்த விந்தையையும் நினைந்து அதிசயம் அடைந்தார். ★

தென்னிந்தியாவின்
வளர்ச்சித் திட்டங்களுக்கு
திடமான

ராம்கோ

பிராண்ட்
சிமெண்ட்

ஆண்டு தோறும் 2 லக்ஷம் டன்கள் அளிக்கின்றோம்.

மார்மலாங் பாலம், சைதாப்பேட்டை, மதராஸ், இந்தியாவிலேயே மிக்க அகலமான இப் பாலத்தை கட்ட ராம்கோ பிராண்ட் சிமெண்டேதான் முழுவதும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் : 'ராமமந்திரம்' ராஜபாளையம்
தொழிற்சாலை : துலுக்கப்பட்டி, ராமநாதபுரம் ஜில்லா


அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த
தீபாவளி SF வாழ்த்துக்கள்
போன். 2935
சுப்பையா பவுண்டரி
அவனாசி ரோடு, கோயமுத்தூர் - 18
தந்தி பவுண்டரி


தீபாவளி
வாழ்த்துக்கள்!
தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கோ., லிட்.
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: மதராஸ்

புதிதாகக் கிடைத்த பாரதியார் பாடல்

நாற்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன், பாரதியாருடைய பாடல்களைப் புத்தக வடிவில் வெளியிட அவருடைய மனைவியார் முயன்றுகொண் டிருந்தார். தேசிய கீதங்கள் இரண்டு பாகங்களை வெளியிட்டார். அதன்பின் பாரதியாரின் தம்பி ஸ்ரீ விசுவநாதையரவர்கள் 1926-ஆம் ஆண்டு முதல் 1949-ஆண்டு வரையில் பாரதியார் பாடல்களை நூல் வடிவில் வெளியிடும் வேலையை மேற்கொண்டிருந்தார். பாரதியாரின் மனைவியிடமிருந்து பாரதியாரின் கையெழுத்துப் பிரதிகள், அச்சேறிய நூல்கள், பத்திரிகைத் துணுக்குகள், பிற கடிதங்கள் முதலியவற்றை அவர் பெற்றுக்கொண்டார். கிடைத்த பாடல்கள் முதலியவற்றை வெளியிட்டார். சமீபத்தில் சில பழைய காகிதங்களை ஸ்ரீ விசுவநாதையரவர்கள் பார்த்தபோது ஒரு கடிதம் கிடைத்தது. அது ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதிக்கு ஸ்ரீ ந. தே. வரதன் என்பவர் எழுதியது. அந்தக் கடிதத்தோடு பாரதியார் பாடிய பாடல் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம், பாடல் எழுந்த வரலாற்றைச் சொல்கிறது.

ஸ்ரீ விசுவநாதையரவர்கள் அன்பு கூர்ந்து கடிதத்தையும் பாடலையும் அனுப்பி உதவினார். அவருக்கு எங்கள் நன்றி உரியது. அவர் அனுப்பிய கடிதத்தையும் பாடலையும் கீழே வெளியிடுகிறோம்.

புதையலைப் போலக் கிடைத்த இந்தப் பாடலைத் தீபாவளி நன்னாளில் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

கடிதம்

39, புதுத் தெரு,
மயிலாப்பூர்
சென்னை
1 - சித்திரை - துந்துபி ௵

அம்மணி,

இத்துடன் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியாரின் அருமையான பாடல் ஒன்று அனுப்பியிருக்கிறேன். அவர் புதுச்சேரியில் இருந்தபோது, 'காதலும் கன்னியா விரதமும்' என்ற சிறு கதைக்கு முகவுரையாக எழுதிக் கொடுத்த பாடல் அது. சில காரணங்களால் அப் புஸ்தகம் பிரசுரிக்கப்படாமல் அப் பாடல் என்னிடம் தங்கிவிட்டது. அப் பாடல் என் மனத்தை மிகவும் கவர்ந்துவிட்டமையால் அதைப் பொது ஜனங்களும் படித்து ஆனந்திக்கவேண்டித் தங்களுக்கு அனுப்புகிறேன். தாங்கள் ஸ்ரீமான் பாரதியாரின் அருமைப் பாட்டுக்களைப் புஸ்தக ரூபமாய் வெளியிடும் அரிய கைங்கரியத்தை மேற்கொண்டதற்காகத் தமிழ் மக்கள் தங்களுக்கு மிகுதியும் கடமைப்பட்டிருக்கிறார்கள். கவி வந்து சேர்ந்ததைத் தெரிவித்தால் வந்தன முள்ளவனாயிருப்பேன்.

தங்கள் உண்மையுள்ள
ந. தே. வரதன்

காதலும் துறவும்

மலர்
வண்டுதேன் உண்ண வரில்இதழ் திறவேன்!
காந்தம்
இரும்பெனை அணுகினல் யான்அதைத் தீண்டேன்
இயற்கைத் தெய்வம்
மலரிலே வைத்ததேன் மலர்க்குரித் தன்று;
மலரிலே வைத்ததேன் வண்டினுக் குரியது!
இரும்பினை அணுகா திருப்பது காணின்
காந்தம் அன்று கருங்கல் அஃதே!
தீயிலே எரியா மரம்ஒன் றில்லை;
காதலில் இளகாக் கன்னிநெஞ் சில்லை;
துறத்தலே பெரிது. துறத்தலே பெரிது;
மறத்தலும் இறத்தலும் கடந்தநற் காதல்
தோன்றுநாள் வரையில் துறத்தலே பெரிது.

ஊன்றுகோல் வார்த்தைகள்

கி.வா.ஜகந்நாதன்

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப்பற்றி மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் ஒரு விஷயம் சொல்வார்கள். பிள்ளையவர்கள் யாருக்காவது கடிதம் எழுதினால் முதலில் அந்தக் கனவானைப்பற்றி ஒரு பாடல் எழுதுவது வழக்கம். அவருடைய பெருமையை அந்தப் பாடலில் சொல்லியிருப்பார். இப்படிப் பாடுகிற பாடல்கள் பலவற்றில் 'நயசுகுண' என்ற தொடர் இருக்குமாம். ''உங்களுக்கு இந்த 'நயசுகுண'த்தின்மேல் ஏன் இவ்வளவு பற்று?'' என்று மாணாக்கர்கள் பிள்ளையவர்களைக் கேட்பார்களாம். அந்தக் கவிஞருக்குத் தம்மை அறியாமலே அந்தத் தொடர் அடிக்கடி பாட்டில் வந்துவிடுமாம்.



டாக்டர் ஐயரவர்களுக்கும் இப்படி ஒரு சொல் அடிக்கடி எழுத்தில் வருவதுண்டு. அவர்கள் யாருக்காவது கடிதம் எழுதுவார்கள். ''நீங்கள் எழுதிய கடிதம் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்; இன்னும் ஒரு வாரத்தில் இங்கே வரப்போவது தெரிந்தது; உங்களைச் சந்திக்க மிக்க ஆவலுடன் இருக்கிறேன்'' என்று எழுதுவார்கள். ஏதாவது நூலுக்குத் தம் கருத்துரையை வழங்கினால், ''இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். ஆசிரியர் மிக்க ஆர்வத்தோடு இதை எழுதியிருக்கிறார். இதைத் தமிழ்மக்கள் பெற்றுப் படித்து ஆதரவு தந்தால் மிக்க பயன் உண்டாகும்'' என்று எழுதுவார்கள். அவர்களுடைய எழுத்தில் இந்த 'மிக்க' என்ற சொல் அடிக்கடி வரும். இதை நான் எடுத்துக் காட்டியபோது அவர்களுக்கே வியப்பாக இருந்தது. பிறகு அந்த 'மிக்க' பழக்கத்தைக் குறைத்துக் கொண்டார்கள்.

இப்படியே கவியிலும் உரைநடையிலும் அவரவர்களுக்கே உரிய 'மிகை' இருக்கும். மேடையின் மேல் பேசுகிறவர்களிடமும் இப்படி அவசியமில்லாத சில தொடர்கள் சிலருக்கு அடிக்கடி வருவதுண்டு. 'ஆகையினாலே', 'ஆனபடியினாலே', 'ஆகவே', 'எனவே' என்ற சொற்களில் ஒன்றை நிமிஷத்துக்கு ஒரு தடவை தெளித்துப் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். அந்த வார்த்தைகளுக்கு அர்த்தமே இராது. 'என்று சொன்னால் மிகையாகாது' என்று அரைமணிப் பேச்சில் இந்த 'மிகையாகாது' என்பதை இருபது தடவையாவது 'மிகை'யாகக்

கொட்டுகிறவர்கள் பலர் இருக்கிருர்கள். 'என்று சொல்ல ஆசைப்படுகிறேன்' என்று அடிக்கடி சொல்கிறவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் ஆசைப் படாமலே அவற்றைச் சொன்னல் இன்னும் நன்ருக இருக்கும்!

இதைவிட வேடிக்கை, பலர் நேருக்கு நேர் பேசும்போது சில வார்த்தைகளைத் தக்கைபோல இடையிடையே சொல்லுவார்கள். அவர்கள் பேச்சுக்கும் அந்த வார்த்தைகளுக்கும் ஒரு சம்பந்தமும் இராது. இத்தகைய பழக்கத்தை 'மானரிஸம்' (mannerism) என்று ஆங்கிலத்தில் சொல்லுகிருர்கள். தமிழில் அதற்கென்று ஒரு பேர் இன்னும் வைக்கவில்லை. 'வெற்றெனத் தொடுத்தல்' என்று சொல்லலாம்.



அமரர் வ. ரா. பேசும்போது அடிக்கடி, 'இருக்கெ', 'இருக்கெ' என்று பேசுவார். கருத்து ஓட்டம் இல்லாதபோது இடையிலே அத்தகைய வார்த்தைகள் வந்து பேச்சை நிரப்புகின்றன போலும், அல்லது எழுத்திலே வரும் கமா முதலிய குறியீடுகளைப் போல அவை உதவுகின்றனவோ என்னவோ!

கோயம்புத்தூரில் சிறந்த வக்கீலும் கூட்டுறவுத் துறையில் பேரறிஞருமாக இருந்த டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரவர்கள் அடிக்கடி 'சரியாப் போச்சு!' என்பார். அதில் 'யா'வைச் சில மாத்திரைகள் நீட்டிப் பேசுவார். அவர் சில இலக்கியக் கட்டுரைகளையும் கூட்டுறவைப் பற்றிய கட்டுரைகளையும் கலைமகளில் எழுதி வந்தார். சென்னைக்கு வந்தால் காஸ்மா பாலிட்டன் கிளப்பில் தங்குவார். நான் போய்ப் பார்த்துப் பேசி வருவேன்.

''போன முறை எழுதின கட்டுரை மிக நன்ருக இருந்தது'' என்று சொல்வேன்.

''சரியா....ப் போச்சு!'' என்று சொல்லி விட்டுப் பிறகுதான் மற்ற விஷயங்களைச் சொல்வார்.

''நேற்று எட்டு மணிக்கு இங்கே வந்தேன். உங்களைக் காணவில்லை.''

''சரியா....ப் போச்சு, அப்புறம்?''

''இன்னும் ஆறு கட்டுரைகளாவது எழுதினல் நன்ருக இருக்கும்.''

''சரியா....ப் போச்சு! எழுத முடியுமா என்று பார்க்கிறேன்.''

''உங்களை அடிக்கடி தொந்தரவு படுத்துகிறேன்.''

''சரியா....ப் போச்சு; இதில் என்ன தொந்தரவு?''

அவரிடம் பேசிக்கொண்டே இருக்கலாம். 'சரியா....ப் போச்சு!' வந்துகொண்டே இருக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன் நான் பர்மாவுக்குப் போயிருந்தேன். பல இடங்களில் பேசினேன். நண்பர்களிடம் உரையாடிக்கொண் டிருந்த போது, சிலர் பேசுகையில் இப்படி அடிக்கடி வரும் 'மிகை'களைப் பற்றிச் சொன்னேன். 'சரியா....ப் போச்சு'ப் பற்றியும் சொன்னேன். அதைக் கேட்டு எல்லாரும் சிரித்தார்கள்.

அங்கே எழுத்தாளர் சங்கத்தில் ஒரு விருந்து வைத்தார்கள். அப்போது படம் எடுத்தார்கள். வழக்கம் போலப் படம் எடுக்கிறவர், ''ரெடி சொன்னவுடன், எல்லோரும் சிரித்த முகத்துடன் இருங்கள்'' என்ருர்.

''நீங்கள் ரெடி சொல்லுங்கள்; நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றேன்.

அவர் 'ரெடி' சொன்னர். நான் உடனே ''சரியா....ப் போச்சு'' என்றேன்! எல்லோரும் சிரித்தார்கள்; கிளிக் என்று படமும் எடுத்தாயிற்று. படத்தைப் பார்த்தால் அத்தனை பேரும் பல்லைக் காட்டிக்கொண் டிருக்கிருர்கள்! படம் எடுத்தவர் அந்தப் படத்துக்கு என்ன பெயர் கொடுத்தார் தெரியுமோ? ''சரியா....ப் போச்சு!''

எனக்குத் தெரிந்த ஜோசியர் ஒருவர் இருக்கிருர். அவர் நன்ருக ஜோசியம் பார்ப்பவர். தேவி உபாசகர். அவர் பலருக்குப் பரிகாரங்கள் சொல்லிப் பலித்திருக்கின்றன. அவர் யாராவது ஏதாவது சொன்னல் உடனே, ''போகட்டும், போகட்டும்'' என்பார். தவிர்க்க முடியாதபடி பழகிப் போனது இது.

ஒரு நாள் ஒரு செல்வர் அவரிடம் வந்தார். பழங்கள் வாங்கிக் கொண்டுவந்து அவர் முன்னே வைத்தார். ''நீங்கள் சொன்னபடி பரிகாரம் செய்தேன். இறைவன் அருளால் ஆண்குழந்தை பிறந்திருக்கிறது'' என்ருர்.

''அப்படியா? போகட்டும்; போகட்டும்!'' என்றார் ஜோசியர். அருகில் வந்த எனக்குச் சிரிப்பு வந்தது. நல்ல வேளை! அந்தக் குழந்தையைப் பெற்றவருக்குக் கோபம் வரவில்லை.

''அடுத்த வாரம் குழந்தைக்கு ஆண்டுநிறைவு வருகிறது. நீங்கள் வந்து ஆசீர்வாதம் செய்தால் குழந்தை சௌக்கியமாக வாழ்வான்.''

''போகட்டும், போகட்டும். வர முடியுமா என்று பார்க்கிறேன்!''

அந்தப் 'போகட்டும், போகட்டும்' என்ற வார்த்தைகளுக்கு உண்மையாகவே பொருள் இருக்குமானால்—?

ஒரு நண்பர் தம் அன்பர் ஒருவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். புதிய அன்பர் பேசிக்கொண்டிருந்தார்; பேசிவரும்போது, ''நீங்க சொன்னாப்பலே'' என்றார். 'நாம் இப்போதுதானே இவரைப் பார்க்கிறோம்? இதற்கு முன்பு இவரைச் சந்தித்ததில்லையே! நாம் இவரிடம் என்ன சொன்னோம்?' என்று யோசித்தேன். இரண்டு நிமிஷங்கள் கழித்து, ''அவரைப் பார்க்கப் போனேனா? நீங்க சொன்னாப்பலே அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை!'' நான் சொன்னேனா? யோசனையில் ஆழ்ந்தேன். இன்னும் சிறிது நேரங்கழித்து, ''அந்தச் சமயம் பார்த்து அந்த முரடன் வந்தான். நீங்க சொன்னாப்பலே தாம்தூம் என்று குதித்தான்!'' நான் பொறுமையிழந்து, ''நான் என்ன ஐயா சொன்னேன்?'' என்று கேட்டிருப்பேன். ஆனால் அதற்குள் எனக்கு உண்மை விளங்கிவிட்டது. 'நீங்க சொன்னாப்பலே' என்பது அவருக்கு ஊன்றுகோல் வார்த்தை, நமக்கு அர்த்தமற்ற தக்கை என்று தெரிந்துகொண்டேன்.

சில பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் வகுப்பில் பாடம் சொன்ன பழக்கத்தால் சாதாரணமாகப் பேசும்போதுகூட, ''என்ன, நான் சொல்றது புரியறதா?'' என்று அடிக்கடி கேட்பார்கள். நம்மையும் மாணாக்கராக எண்ணிச் சொல்வது அன்று அது. அவருடைய நாக்குக்கு அது பழக்கம். சில பேர், ''எப்படி, எப்படி, எப்படி'' என்று அடிக்கடி வேகமாகச் சொல்வார்கள். எல்லோருமே ''வந்து'' என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகிறோம். பேச வேண்டிய வார்த்தை வருவதற்கு முன் இடையிலே அது ஊன்றுகோலாக வந்து நிற்கிறது.

என் நண்பர் ஒருவர், ஒரு நூல் வெளியீட்டகத்தின் நிர்வாகியாக இருக்கிறார். அடிக்கடி வந்து பேசிக்கொண்டிருப்பார். தம்முடைய வியாபார அநுபவங்களைச் சொல்வார். அவருக்கு ஊன்றுகோல் வார்த்தை, ''உங்களுக்கு'' என்பது.

''மதுரையில் என்ன விசேஷம்?'' என்று கேட்பேன்.

''உங்களுக்கு, அங்கே சில நண்பர்களைப் பார்த்தேன். ஒரு பள்ளிக்கூடத்தில் நூறு ரூபாய்க்குப் புத்தகம் வாங்கினார்கள். அப்படியே, உங்களுக்கு, மீனாட்சியம்மன் தரிசனம் செய்துகொண்டேன்'' என்பார்.

''இந்த மாசம், வெளியூர் போவதாக இருக்கிறேன். வருவதற்கு, உங்களுக்கு, ஒரு மாசம் ஆகும்'' என்பார். 'உங்களுக்கு' என்பதற்கு ஒரு பொருளும் இல்லை.

ஒரு நாள் அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் பையனை எதற்கோ அடித்துக்கொண்டிருந்தார்.

''ஏன் இவனை அடிக்கிறீர்கள்? பாவம்! என்ன செய்தான்?'' என்று கேட்டேன்.

அவர் கோபத்தோடு பதில் சொன்னார்: ''உங்களுக்கு உதை இல்லாவிட்டால் சரிப்பட்டு வருகிறதில்லை... நானும் எத்தனை தடவை சொல்கிறேன்! உங்களுக்கு....''

யாருக்கு உதை வேண்டுமென்று சொல்கிறார்? ★

திகர எடை: 750 கிராம்.

தீபாவளிக்கு பாரியின்
வஸந்த்*
வாங்க மறவாதீர்கள்

பண்டிகைக்கேற்ற பாங்கான பரிசு

சத்து மிக்க பாரி மிட்டாய்கள் மற்றும் டாபிகளுடைய
ருசி மிக்க வகைகளை சுவைத்து மகிழுங்கள்

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்

Parry's



*வடநாட்டில் பஸந்த் என்ற பெயரில் விற்பனையாகிறது.

JWT-PRS 3808

பளிச்சிடும் வெண்மையிலும்
இருவண்ணச் சேர்க்கைகளிலும்

நெய்வேலி கேரமாக்

விட்ரியஸ் சைனு
சானிடரி சாதனங்கள்

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த கேரமாக் ஸ்தாபனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் செய்யப்படுகின்றன. உறுதியானவை; நீடித்த உழைப்பில் நிகரற்றவை. இந்தியாவிலேயே முதன் முறையாக ஆண்டி-ஸ்ப்லாஷ் (Anti-Splash) அமைப்புடன் கூடிய வாஷ் பேஸின்களையும், ஐரோப்பிய கம்மோடுகளையும் தயாரிக்கின்றனர்.

NEIVELI CERAMICS AND REFRACTORIES LIMITED
(A Seshasayee Associate)
Vadalur P. O., South Arcot District
in technical collaboration with KERAMAG *of West Germany*

LPE-Aiyas/NCRL.13

இவர்களைப் பார்த்தீர்களா!

ஜாகிர் ஹுசேன்
'அமைதி.....
அமைதி!'

எஸ். கே. பட்டில
'பொறுங்கள்!'

விநோபா பாவே: 'அவன் ஒருவனே துணை.'

மாஸ்டர் தாராசிங்: 'நான் ஒருவனே தலைவன்.'



சஞ்சீவ ரெட்டி: 'ஏமி சேஸேதி?'

காமராஜ்: 'என்ன ஆகப் போகுதோ!'

திரேன் முகர்ஜி:
'இடதுசாரி கம்யூனிஸ்டுகள்
பெரிய தலைவலி....'

ஜகஜீவன்ராம்:
'என்னதான் ஆகட்டுமே!'





வி, கே. கிருஷ்ண மேனன்
'எந்த இடத்தில் நிற்பது?
பெரிய தலைவலியாக...'

லோஹியா:
'நான் சொல்வதைக் கேட்கா
விட்டால்?'

இந்திரா காந்தி:
'க்யா கியா ஜாய்?'

டி. டி. கிருஷ்ணமாசாரி
'நான் சொல்லட்டுமா?'







போட்டோ:
கே. விசுவநாத்

1. 'ஆப்பம் வாங்கலையோ!'
2. சாப்பாட்டுக் கூடை
3. பாயசமோ பாயசம்!
4. பழ ரசம்
5. கருப்பஞ் சாறு
6. இளநீர்
7. பட்டாணி, வேர்க்கடலை
8. கரம் சர!
9. ஐஸ் க்ரீம்
10. முறுக்கு, வடை, சுண்டல்.

வீதியிலே விற்பனை! விதவிதமாய் விற்பனை!

தாயுமானவர் காதல்

மு. வரதராசன்

தமிழ் இலக்கியத்தின் தொடக்க காலத்தில் அகம் என்ற பெயரால் காதல்பொருள்பற்றிய பாட்டுக்கள் பாடப்பெற்றன. இளமை நலம் வாய்ந்த ஆணும் பெண்ணும் அறிவு, அழகு, பண்பு முதலியவற்றால் ஒருவர் மற்றொருவர்பால் ஈர்க்கப்பெற்று அன்பைப் பெருக்கி வாழ்ந்த வாழ்வை ஐந்திணைகளாகப் பகுத்துக் கற்பனை மெருகு ஏற்றிப் பழங்காலத்துப் புலவர்கள் பாடினார்கள். வாழ்க்கையில் கண்டவற்றையும் கற்பனையில் கருதியவற்றையும் இயைத்துப் பாடிய அந்த அகப்பாட்டுகளால் இலக்கிய மரபும் வளர்ந்தது; அவற்றிற்கென இலக்கணமும் எழுந்தது. அந்த மரபு தொடர்ந்து நெடுங்காலம் போற்றப் பட்டு வந்தது. பிற்காலத்துக் கோவை நூல்கள் வரையில் அந்த இலக்கிய மரபு பெரும்பாலும் அவ்வாறே போற்றப்பட்டு வந்தது. சென்ற சில நூற்றாண்டுகளிலும் அந்தப் பழைய அகப் பாட்டு மரபை ஒட்டிப் பாடியவர்கள் உண்டு. ஆயின், பொதுவாக நோக்குமிடத்து, இக்காலத்துக் காதல் பாட்டுக்களில் அந்தப் பழைய மரபு இல்லை என்றே கூறலாம்.

ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. கடவுளன்பில் திளைத்த அந்தச் சான்றோர்கள், காதல் பாட்டுக்களை நாட்டு மக்கள் விரும்பிக் கற்பதையும் போற்றுவதையும் கண்டார்கள். காதல் பாட்டுக்கள் வாழ்க்கையோடு ஒட்டியனவாகவும், உள்ளத்தைத் தொடுவனவாகவும் அமைந்த அமைப்பையும் உணர்ந்தார்கள். அந்தக் காதல் உணர்ச்சிக்கு அமைந்த இலக்கிய மரபையே தெய்வக் காதலுக்கு, பக்தியுணர்ச்சிக்கு, உரிய வகையில் உயர்த்திப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். காதலி ஒருத்தி தன் காதலனிடத்துச் செலுத்தும் அன்பையும், ஏங்கும் ஏக்கத்தையும் அந்த வாய்பாடுகளாலேயே அடியார் ஒருவர் கடவுளிடத்துச் செலுத்தும் அன்பிற்கும் ஏங்கும் ஏக்கத்திற்கும் பயன்படுத்தும் புதிய மரபு ஏற்பட்டது. அந்த மரபின்படி அடியார் காதலியாகிறார்; இறைவன் நாயகன் ஆகிறான். தலைவனுடைய அன்பைப் பெற விழைதல், அன்பு கிட்டாமையால் ஏங்குதல், அதனால் உடல் மெலிந்து வாடுதல், பசலை நோய் உறுதல், மகளின் வாடிய நிலை கண்டு நற்றாயும் செவிலியும் கவலையுறுதல், தலைவி தோழியிடம் முறையிடுதல், உதவுமாறு தோழியை வேண்டுதல், பறவை முதலியவற்றைத் தூது செல்லுமாறு கேட்டல், தலைவனைக் காண விழைந்த கண்கள் இரவிலும் உறங்காமல் ஏங்குதல், அன்பு வாய்க்காத ஏமாற்றத்தால் மடல் ஏற எண்ணுதல், நம்பிக்கை இழக்கும் எல்லையில் நின்று அறிவு கலங்குதல், இனி இந்த வாழ்வும் முடிந்தது என்று கையறுதல் முதலான காதல் துறைகள் பலவற்றையும் கடவுளன்புத் துறைகளாக உயர்த்திப் பாடும் முறை பரவியது.

நற்பதங்கள் மிகஅறிவாய்
நான்உன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாய்அலகின்
பூவைநல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளன்
திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென்
மெய்ப்பயனை விளம்பாயே.

வாயும் நிரையுகளும்
கானல் மடநாராய்
ஆயும் அமருலகும்
துஞ்சிலும்நீ துஞ்சாயால்
நோயும் பயலைமையும்
மீதூர எம்மேபோல்
நீயும் திருமாலால்
நெஞ்சங்கோட் பட்டாயே?

என்று திருஞானசம்பந்தரும் நம்மாழ்வாரும் பாடிய பாடல்கள், காதல் வாய்பாட்டால் கடவுளன்பைப் பாடியன ஆகும்.

இவ்வாறு தெய்வக் காதலுக்காக மாற்றி அமைக்கப்பட்ட அந்தச் சிறந்த மரபு, ஆழ்வார் நாயன்மார்கள் காலத்துக்குப் பிறகும் தொடர்ந்து போற்றப்பெற்றது. தாயுமானவரும் இராமலிங்க அடிகளும் அந்த மரபைப் போற்றிப் பல நல்ல பாடல்கள் பாடியுள்ளார்கள். பாரதியார் முருகனையும் கண்ணனையும் நாயகனாகக் கொண்டு தெய்வக் காதற் பாடல்கள் பாடியுள்ளார். கடவுளை நாயகியாக மாற்றியமைத்துக் 'கண்ணம்மா என் காதலி' எனப் புரட்சி செய்து பாரதியார் பாடிய பாடலும் உண்டு. பெண்ணுக்கு ஒத்த உரிமை வழங்கும் சிந்தையும், உயர்வுதரும் முற்போக்கும், சக்தி வழிபாட்டு நெறியும் அவருடைய அந்தப் புரட்சிக்கு இடம் தந்தன.

தாயுமானவர் அத்தகைய புரட்சி ஒன்றும் செய்யவில்லை. அவர் பைங்கிளியைத் தூதாக விட்டு இறைவனிடம் துன்பத்தை எல்லாம் சொல்லுமாறு வேண்டுகிறார்: ''என் தலைவன் என் நெஞ்சை விட்டு நீங்காமல் நிற்கின்றான். அவனுடைய அருளைப் பெறுவதற்கு நான் ஏங்குகின்றேன். அதற்காக நான் படும் துன்பத்தை எல்லாம் நீ போய்ச் சொல். உனக்குச் சுகம் என்று ஓர் பெயர் உள்ளது. பெயருக்கு ஏற்றபடி என் துன்பம் தீர்த்துச் சுகம் கொண்டு வா'' என்று வேண்டுகிறார்.

அகமேவும் அண்ணலுக்கென்
அல்லலெல்லாம் சொல்லிச்
சுகமான நீபோய்ச்
சுகங்கொடுவா பைங்கிளியே.

''இரவெல்லாம் நான் உறங்கவில்லை. மண்ணுலகம் உறங்கியது. விண்ணுலகும் உறங்கியது. உள்ள எல்லாம் உறங்கியபோதும் நான்மட்டும் கண்ணுறங்கவில்லையே! இராப் பொழுது எப்பொழுது விடியுமோ என்று ஏங்கிக் கிடந்த என் நிலையை எல்லாம் பைங்கிளியே, நீ போய்ச்சொல்லி வா.''

மண்ணுறங்கும் விண்ணுறங்கும்
மற்றுளள லாமுறங்கும்
கண்ணுறங்கேன் எம்இறைவர்
காதலால் பைங்கிளியே!

என்று விடியும்
இறைவாவோ என்றென்று
நின்ற நிலையெல்லாம்
நிகழ்த்தாய்நீ பைங்கிளியே!

இவ்வாறு பழைய பக்திப் பாடல்களில் அமைந்த நாயகன் நாயகி பாவத்தை ஒட்டி அவர் பாடிய பாடல்கள் பல உள்ளன.

தாயுமானவருக்குப் பக்தி நெறியிலும் ஆர்வம் உண்டு; மெய்யுணர்விலும் ஆர்வம் உண்டு. அவருடைய பாடல்களில் பக்தி உணர்ச்சியும் தத்துவத் தெளிவும் கலந்து உயர்ந்து விளங்கும். ஆகவே காதல் வாய்பாடுகள் மட்டும் அவருக்குப் போதுமானவைகளாக இல்லை. அவர் நெஞ்சில் ஊறி நின்ற மெய்யுணர்வும் அந்தக் காதல் பாடல்களில் புலப்படவேண்டியிருந்தது.

நாயகன் நாயகி முறையில் அமைந்த பக்திப் பாடல்களில் அடியார் ஒருவர் தலைவியாக நிற்கிறார்; இறைவன்

தலைவனாக விளங்குகிறான். காத லி-காதலன் என்ற மனித நிலை உயர்ந்து, அடியார் - இறைவன் என்ற தெய்வ நிலை வந்து அமைகிறது. சொல்லள விலே பெரிய வேறுபாட்டுக்கு இடம் இல்லை. பொருளளவிலும் இரண்டு மனித வடிவங்களிடத்தில் அடியார் ஒருவரையும் ஆண்டவன் ஒருவனை யும் காண்கிறோம். ஆனால் தாயுமான வர் பாடல்களில் அந்த நிலையும் உள்ளது. அதன் விரிவான மற்றொரு நிலையும் உள்ளது. சில பாடல் களில் இறைவன் ஒருவனாக - ஒரு நாயக னாக-க் காணப்படுகிறான். வேறு சில பாடல்களில் அந்த இறைவனுடைய வடிவம் இல்லை. அவனுடைய தத்துவமே விளங்குகின்றது. அந்தப் பாடல்களில் காதலியின் காதல் ஒரு வனிடத்துச் செல்லவில்லை. எங்கும் நிறைந்த, எல்லாம் ஆன, தன் உயி ரும் ஆகிய, பரம்பொருளிடம் அந்தக் காதல் செல்கின்றது.

''ஆகாரபுவனம்'' என்ற பாடற் பகுதி அவ்வாறு அமைந்ததாகும். தெய் வக் குன்றே, ஆனந்தக் கட்டிப் பேறே, ஆதி நட்பே, விமல வாழ்வே, நிர்க் குணக் கடலாய் நின்ற ஒன்றே, கருணை விண்ணே, உயிர்த் திரளை ஆட்டும் விழுப்பொருளே என்றெல் லாம் இறைவனை உணர்ந்து விளிக்கின்றார். ''யான் சொல்லும் விண்ணப்பம் கேளே'' என்று அந்தப் பரம்பொருளை வேண்டு கிறார். இதற்கு முன்னே ஞான நெறியில் நின்று முத்தி பெற்றவர் களின் நல்வாழ்வை யெல்லாம் நினைந்து போற்றுகிறார். அந்த ஞான நெறி யைத் தமக்கு உணர்த்த வந்த மோன குருவை நினைந்து போற்றுகிறார். குரு தமக்கு உணர்த்திய உண்மையை உணர்ந்து உருகுகின்றார். ''அந்த நிலையை என்னால்தான் செம்மையாகப் பெற்று மகிழ முடியவில்லையே! அந்த நிருவிகற்ப நிலையைப் பெறுவதற்கு என் அறிவும் போதாது; என் முயற்சி யும் பயன் தராது. நீதான் அருள் புரிய வேண்டும். அந்த அருளைப் பெறு கின்ற வகையில் எனக்கு வேறு கதி யில்லை. பெறும் வரையில் வேறு கடமையும் செய்ய மாட்டேன்'' என்று கூறித் தம் வேட்கையையும் ஏக்கத்தையும் புலப்படுத்துகின்றார். அந் நிலையில் அந்த வேட்கையும் ஏக்க மும் காதற் பாட்டுக்களில் வடிவம் கொள்கின்றன.

''இந்த மண்ணுலகம் விண்ணுலகம் எல்லாம் நீ என்று உணர்ந்து உன் வடிவத்தை எழுதிப் பார்ப்பேன். அவ்வாறு உன் அழகிய வடிவத்தை எழுதுவதற்கு எந்த மடலும் போ தாது. என் சிந்தையையே பெரிய மட லாகக் கொண்டு எழுதிப் பார்ப் பேன். என் பிராண நாதா, நீ வாராயோ என்று அழைப்பேன். என் னையே நீ என வைத்துக்கொண்டு மேற்கொண்டு ஒன்றும் அறியாதபடி கலங்குவேன். புண்பட்டவர்கள்போல் புலம்புவேன். பெருமூச்சு விட்டுக் கண்ணீர் சொரிந்து மெய்ம்மறந்து ஒரு நிலையாய் நிற்பேன்.''

பாராதி விண் அனைத்தும் நீயாச் சிந்தை
 பரியமட லாவெழுதிப் பார்த்துப்
 பார்த்து
வாராயோ என்பிராண நாதா என்பேன்
 வனைத்துவனைத் தெனைநீயா
 வைத்துக் கொண்டு
பூராய மாமேலொன் றறியா வண்ணம்
 புண்ணுளர் போல்நெஞ்சம் புலம்பி
 உள்ளே
நீரான மாய்உருகிக் கண்ணீர் சோர
 நெட்டுயிர்த்து மெய்மறந்தோர்
 நிலையாய் நிற்பேன்.

''கதிரவனே, வெண்மதியே, பக லும் இரவும் தவறாமல் நாள்தோறும் விண்ணில் வருமாறு உங்களை இந் நிலை யில் அமைத்தவர் யார்? அவர்பெருமை எப்படிப் பட்டது? வீசுகின்ற காற்றே, நீ யாரால் இவ்வாறு சுழல் கின்றாய்? மழை பெய்யும் முகில்களே, உங்களைப்போல் எம் இறைவன் தாரா ளமாகக் கருணை பொழியச் செய்ய வேண்டும். அதற்கு வழி என்ன? எண்ணிச் சொல்லுங்கள்.''

நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்
 நித்தம்வர உங்களைஇந் நிலைக்கே
 வைத்தார்
ஆரேயங் கவர்பெருமை என்னே
 என்பேன்
 அடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
போராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து
 பெய்கின்ற முகில்காள்எம் பெருமான்
 நும்போல்

தாரா௭ மாக்கருணை பொழியச் செய்யும்
சாதகமென் னேகருதிச் சாற்றும்
என்பேன்.

''கருதுவதற்கு அரிய விண்ணே, நீ எங்குமாய்ப் பரந்திருக்கின்றாய். உன் முடிவாக உள்ள பரம்பொருள் எப்படி இருக்கும்? எனக்குச் சொல். மண்ணுலகமே, உன் முடிவில் விளங்குவது எது? உன்னைத் தாங்கும் ஆதிசேடன் உண்மையை அறிந்து சொல்வானோ? வேதமே, எல்லோருக்கும் பொதுவான உண்மை மொழி உன் மொழியன்றோ? உன் முடிவு என்ன? எனக்குச் சொல்.''

கருதரிய விண்ணேநீ எங்கும் ஆகிக்
கலந்தனையே உன்முடிவின் மாட்சி யாக
வருபொருள்எப் படியிருக்கும்
சொல்லாய் என்பேன்
மண்ணேஉன் முடிவிலெது
வயங்கும் அங்கே
துரியஅறி வுடைச்சேடன்
ஈற்றின் உண்மை
சொல்லானோ சொல்என்பேன்
கருதி யேநீ
ஒருவரைப்போல் அனைவருக்கும்
உண்மை யாயின்
உரையன்றோ உன்முடிவை
உரைநீ என்பேன்.

''அலைகளாகிய கைகளை நீட்டி ஒலிக்கும் கடலே, நீ இந்த உலகத்தைச் சுற்றிக் கரையும் இல்லாமல் அமைந்திருக்குமாறு உன்னை ஏற்படுத்தியவர் யார்? காட்டில் பறக்கும் கிளிகளே, தாமரை மலர்களில் பொருந்தும் வண்டுகளே, அன்னங்களே, நீங்கள் தூது சொல்லும் பொருள்கள் அல்லவோ? பெரிய பரிபூரணமாகிய பொருளை நீங்கள் இதுவரையில் பார்த்துப் பேசியது உண்டோ? ஒரு முறை எனக்காகக் கண்டு பேசுங்கள்.''

உரையிறந்து பெருமைபெற்றுத்
திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலேஇவ் வுலகம் சூழக்
கரையுமின்றி உன்னைவைத்தார்
யாரே என்பேன்
கானகத்தின் பைங்கிளிகாள்
கமலம் மேவும்
வரிசிறைவண் டினங்காள்ஓ திமங்காள்
தூது
மார்க்கமன்றோ நீங்களிது வரையி
லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக்
கண்டு
பேசியதுண் டோஒருகால் பேசும்
என்பேன்.

''சுகர் என்னும் ஞானிக்கு அமைந்தது போல் ஏன் ஏன் என்று கேட்க ஒருவர் இல்லையோ? வேற்றுமையும் வேறுபாடு அற்ற நிலையும் அறியாத ஒரு பேசாத பெருமையும் வாய்க்காதோ? கல்லாலின்கீழ் அமர்ந்த மோனத் தலைவன் ஒரு முறை இந்த உலகத்துக்கு வந்து பார்க்க விருப்பம் கொள்ள மாட்டானோ? இவ்வாறு பற்பலவாறு

சொல்லிக் காதல் மிகுந்த மகளிர் போல் வாடினேன். என்னுடைய கருத்தை அறிந்து காப்பது எக்காலத்தும் உன்னுடைய பொறுப்பேயாகும்.''

ஓதரிய சுகர்போல ஏன்ஏன் என்ன
ஒருவரிலை யோஎனவும் உரைப்பேன்
தானே
பேதமபே தம்கெடவும் ஒருபே சாமை
பிறவாதோ ஆலடியில் பெரிய மோன
நாதனொரு தரம்உலகம் பார்க்க இச்சை
நண்ணானோ என்றென்றே நானா வாகிக்
காதல்மிகும் அணியிழையார்
எனவா டுற்றேன்
கருத்தறிந்து புரப்பதுன்மேல்
கடன்முக் காலும்.

இவ்வாறு பரம்பொருளை வழிபட்டு உணரும் ஆர்வம் மிகுந்த தாயுமானவரின் நெஞ்சம், இறைவனை நாயகன் என்னும் வடிவினுள்மட்டும் அமைக்கவில்லை. அவருடைய கற்பனை அவ்வாறு ஒரு வரம்பிற்குள் அமையாமல், தத்துவ உணர்வோடு கலந்து வெளிப்படும் காரணத்தால் பழைய காதல் வாய்பாடுகள் போதவில்லை. பக்தி உணர்ச்சியும் மெய்யுணர்வின் தெளிவும் கலந்த கலப்பிற்கு ஏற்ப, அந்தக் கடவுட்காதலும் விரிவு பெற்று விளங்கக் காண்கிறோம். அதனால் கவிதைக்கு இன்றியமையாத உணர்ச்சிப் பெருக்கில் சிறிது இழக்க நேர்ந்தாலும், உய்வுக்கு இன்றியமையாத கருத்து வளத்தில் பெற்றது பெரிதாகவே உள்ளது எனலாம்.

ஆவிக்குள் ஆவியெனும்
அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்கும் கிட்டுமோ
சொல்வாய்நீ பைங்கிளியே!
ஊருமிலார் பேருமிலார்
உற்றார்பெற் றாருடனே
ஆருமிலார் என்னை
அறிவாரோ பைங்கிளியே!
கூறும் குணமுமிலாக்
கொள்கையினார் என்கவலை
ஆறும் படிக்கும் அணைவாரோ
பைங்கிளியே!
பாராசை அற்றிறையைப்
பற்றறநான் பற்றிநின்ற
பூராயம் எல்லாம் புகன்றுவா
பைங்கிளியே!
பொய்க்கூடு கொண்டு
புலம்புவனோ எம்இறைவர்
மெய்க்கூடு சென்று
விளம்பிவா பைங்கிளியே!

முதலான பைங்கிளிக் கண்ணிப்பாடல்களும் அவ்வாறு கருத்து வளத்தால் - தத்துவத் தெளிவால் - சிறந்து நிற்கும் கடவுட் காதல் அமைந்த பாடல்களே ஆகும். ★

Leyland

டி.வி.எஸ். பஸ் பாடிகளின் புதிய கவர்ச்சியான முன் தோற்றம்

டி.வி.எஸ். தேவைக்கு உகந்த பஸ் பாடிகளை எந்தவித சேஸிஸ் மீதும்—அசோக் லேலண்டு கோமெட், பெட்போர்டு, டாட்ஜ், பார்கோ,டாடா மெர்சிடீஸ் பென்ஸ், வில்லிஸ் ஜீப், ஸ்டாண்டர்டு 20—தயாரிக்கிறார்கள். அவை மிகவும் உறுதியானவை—ஆனால் லேசானவை; எடை குறைவுள்ளவை. அதனால் எண்ணெய் செலவும், டயர் தேய்வும் குறைவு; சிக்கனமானது, கரடு முரடான சாலைகளைச் சமாளிக்கும். பிரயாணிகளுக்கு மிக்க வசதி.

ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று பஸ் பாடிகள் கட்டுகிறோம். தேவைக்கு உகந்த கம்போசிட் முழு ஸ்டீல் பாடி, சிறிய பஸ், உல்லாஸ பஸ், எக்ஸ்பிரஸ் வான், டெலிவரி வான், பிக்-அப் வான், அம்புலன்ஸ், மூடிய அல்லது திறந்த லாரி, ஸ்டீல் டிரைவர் காபின், டிப்பர் பாடி முதலியன தயாரிக்கிறோம்.

மற்ற விவரங்களுக்கு:

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
(டி.வி.எஸ். ஸ்தாபனம்)

TVS

JWT-SI-3809A

ராம ராஜ்யத்தில்

வி.ஜி.பட்



கன்னட ஹாஸ்யக் கதை

ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி, வனவாசத்தை முடித்து, அயோத்திக்கு வந்து, சிங்காசனத்தில் அமர்ந்து ராஜ்யம் ஆளத் தொடங்கினார்.

அதிகாரம் தம் கைக்கு வந்தவுடன் சீதைமணாளர், காட்டில் தம் துன்பக் காலத்தில் கூடவே இருந்து, இலங்கையை எரித்து, தர்மபத்தினியாகிய சீதையை விடுவித்துக்கொண்டு வந்த வானரர்களை அழைத்தார். ஒவ்வொரு குரங்கையும் ஒவ்வொரு பதவியில் அமர்த்தினார். பக்த சிகாமணியாகிய அநுமாரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அவர் மரத்தின் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து 'டுர்ர்' என்று தொடங்கி அதிகாரம் பண்ணி ஜமாய்த்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பன்மொழிப் புலவர், சகலகலா பாரங்கதர் என்ற விருதுகள் கிடைத்தன.

அயோத்தியின் மதிப்பு மிக்க குடிமக்கள் ஏதாவது ஒரு வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டால் ஸ்ரீரகுகுல

திலகரே முன்வந்து, ''நீங்கள் என்னுடன் எத்தனை வருஷம் வனவாசம் செய்தீர்கள்? இலங்கையில் எத்தனை வீடுகளைச் சுட்ட வீரர்கள் நீங்கள்?'' என்று கேள்விகளைப் போடுவார். இக்

காலத்தைப் போல் ஜாதி வயசு முதலியவற்றை விசாரிக்கும் முறை அப்பொழுது வழக்கத்தில் இல்லை.

இவற்றையெல்லாம் கண்ட லட்சுமணன், ஒரு நாள் தமையனுரிடம் வணக்கமாக விண்ணப்பித்துக் கொண்டான்: ''அண்ணு, ராஜ்யத்தை ஆளுவதற்கும் நம்முடன் வனவாசம் செய்ததற்கோ, லங்கா தகனம் செய்ததற்கோ உதவியதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லையே! இலங்கையை எரிப்பதற்கு அரசியல் விவகாரம் நடத்தக்கூடிய நுண்ணறிவு வேண்டியதில்லையே!''

அதற்குப் பதித பாவனராகிய ராமர், ''தம்பி, நீ சொன்னது உண்மைதான். ஆனுல், நம்முடன் காட்டில் துன்பம் அடைந்து, லங்கா தகனம் போன்ற வீர தீர பராக்கிரமச் செயல் புரிந்த இந்தக் கவிகுலத்துக்குப் பெரிய பெரிய பதவிகளைக் கொடுக்க வேண்டியது நம் கடமையன்ருே?'' என்ருர்.

லட்சுமணன் உடனே, ''அண்ணு, நம்முடன் காட்டில் துன்புற்று இலங்கையை எரித்து இளைத்த பக்த சிகாமணிகளுக்குப் பெரிய பெரிய பொறுப்புள்ள பதவிகளைக் கொடுத்து வேலை வாங்குவது நியாயம் அன்று. முன்பு அவர்கள் செய்த துணிவு மிக்க அருஞ்செயல்களுக்காக - தியாகத்துக்காக - அவர்களை உபவனம் ஒன்றில் சுகமாக வசிக்கச் செய்வதுதான் தகும். நமக்கும் பொருந்தக் கூடிய காரியம். உழைத்துக் களைத்தவர்களைத் திரும்பவும் உழைக்கச் செய்வது முடியுமா?'' என்ருன்.

ஜானகியின் உயிரினும் இனிய ராமருடைய மூளையில் புதிய ஒளி பிறந்தது. மறுநாளே அவர் வானரர்கள் எல்லாரையும் வரவழைத்து அவர்களுக்கென்று அமைத்த புதிய உபவனம் ஒன்றில் அவர்களுக்குப் 'பென்ஷன்' அருளிச்செய்தார்.

அன்றுமுதல் சிறிய உத்தியோகத்திலிருந்து பெரிய பதவி வரைக்கும் அயோத்தியின் குடிமக்களே சேர்ந்தார்கள்; அந்த ராஜ்யம் ராமராஜ்யம் என்று புகழ் பெற்றது.

பெண்கள் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும் சில விஷயங்கள் அவர்களுடைய நாக்கில் பிறந்து பேச்சாக நடமாடத் தொடங்கும்போது ஓரளவுக்கு அவர்கள் சண்டிகளாகவும் பத்திர காளிகளாகவும் மாறிவிடுகிருர்கள்.

பஞ்ச கன்னிகளுள் ஒருத்தி என்று புகழ் பெற்ற சீதா தேவிக்கும், எந்தக் கவிஞனும் புகழ்ந்து பாடாத ஊர்மிளைக்கும் இடையே பேச்சு எப்படியோ வளர்ந்து தர்க்கம் முற்றியது. அப்பொழுது அரண்மனையைச் சேர்ந்த ஆண்கள் எல்லாரும் வேட்டைக்குச் சென்றிருந்தார்கள்.

''பதினுலு வருஷங்கள் உங்களுடைய சேவைக்காக, உங்களுடன் காட்டுக்கு என் கணவரை அனுப்பிவிட்டு நான் அவரிடமிருந்து பிரிந்து வருந்தியது, இத்தனை வார்த்தைகளையும் கேட்டுக் கொள்வதற்கா அக்கா?''

''எங்களுக்குப் பணிவிடை செய்வதற்கா உன் கணவனை அனுப்பினுய்? ஹூம்ம்! என்னைப் போலவே நீயும் அடம்பிடித்திருந்தால் நீயும் கணவனுடன் வந்திருக்கலாம் அல்லவா? நாங்களே உனக்குச் சேவை செய்திருப்போமே!''

''கணவன் வேண்டாமென்று தடுத்தும் கேளாமல் அவன்பின் தொத்திக்கொண்டு ஓடும் பிடிவாதக்காரி நான் அல்ல, அக்கா!''

''நான் பிடிவாதக்காரி என்பது உன் அபிப்பிராயமோ? ஒன்ரு, இரண்டா? பதினுலு வருஷ காலம் நம்மைப் பிரிந்து எட்ட இருக்கும் ஆண்பிள்ளைகள் என்ன என்ன தர்பார் நடத்துவார்கள் என்ற ஊகம் உனக்கு இருந்தால், நீயும் பிடிவாதக்காரியாக இருந்திருப்பாய். பாவம்! எல்லாப் பற்களும் இன்னும் சரியாக முளைக்காத உனக்கு அதெல்லாம் எப்படித் தெரியும்? சூர்ப்பணகைக்குப் பதிலாக நெஞ்சுறுதி மிக்க அழகி ஒருத்தி உன் கணவனை வந்து பிடித்துக்கொண் டிருந்தால் தெரியும் உன் பாடு!''



''என் கணவரிடம் எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது.''

''எல்லாருக்குமே அப்படித்தான்! ஆனால் ஆண்பிள்ளைகளின் ஆசை இயற்கையாகவே பலதார மணத்தின் பக்கமே சாயும் என்பது உனக்கு எங்கே தெரியப் போகிறது? உண்மையான பத்தினிப்பெண் இது போன்ற நெளிவு சுளுவை எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டும். வெறும் அசட்டுக் காமாட்சிபோல் இருந்து, கணவன் சொன்னதற்கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டிருந்தால் போதாது. தாம்பத்திய உறவுக்கு ஏதாவது இடைஞ்சல் வரும் போல் இருந்தால் கணவன் மனத்துக்கு விரோதமாக நடந்துகொண்டாவது இருவருடைய நலத்தையும் காத்துக் கொள்ள வேண்டும். தன் கணவன் உலகம் வணங்கத் தக்கவனேயானாலும் இதுபோன்ற சந்தர்ப்பத்தில் பதிவிரதா சிரோமணி பின்வாங்கக் கூடாது. ஆணின் புத்திக்கு எட்டாத பல விஷயங்கள் பெண் உள்ளத்துக்குப் புலனாவது உண்டு.''

அக்காவின் அநுபவமான உரையமுதத்தால் புனிதமான ஊர்மிளை, ''நான் சொன்னதை எல்லாம் மறந்து மன்னித்துவிடு, தாயே!'' என்று சொல்லி, சாஷ்டாங்கமாக வணங்கினாள்.

''ஸ்ரீராமருடைய பத்தினியின் சொல்லில் குறை இருக்காது என்று நம்பு'' என்றாள் சீதாதேவி.

ஸ்ரீராமபிரானுடைய ஆட்சியில் ஒற்றர் படை பலமாக இருந்தது என்பதைச் சீதையின் பிரிவு காரணமாக அறிகிறோம்.

ஒரு நாள் இரவில் ஒற்றன் ஒருவன் ஒரு தெரு வழியே சென்றுகொண்டிருந்தான். இயற்கைக் கடனைக் கழிக்க வீட்டிலிருந்து வெளிவந்த என்போன்ற மரியாதைப்பட்ட கிருகஸ்தர் ஒருவர் அவனைக் கண்டு, ''யாரது?'' என்று கேட்டார். ராமராஜ்யத்தில் கள்ளர் பயம் இல்லாவிட்டாலும் ஒற்றரைப் பற்றிய பயம் இருந்து வந்தது.

அந்தக் கனவானுக்கு வெகு காலமாக மனத்துள் ஒரு கவலை அரித்துக் கொண்டிருந்தது. நெஞ்சு வரைக்கும் வந்து நாவெழும்பாமல் கரைந்து போய்க்கொண்டிருந்தது. அன்று அவர் தம்மை ஒருவாறு தைரியப் படுத்திக் கொண்டு, அந்த ஒற்றனை அருகில் அழைத்தார்.

''ஏனையா, ராமராஜ்யத்தில் பகல் வேளையில் கதவைத் திறந்துவிட்டுப் போனாலும் ஒரு காசுகூடத் திருட்டுப் போவதில்லை என்ற புகழ் பரவிக்கிடக்கிறது. அப்படி இருக்கும்போது நீங்கள் எல்லாரும் இரவெல்லாம் எதற்காக ரோந்து சுற்றுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''பகலில் போகாது. இரவு வேளையில் என்னவானாலும் - இல்லை, இல்லை; ஸ்ரீராமபிரானுடைய காலத்தில் திருட்டுப் புரட்டு எதுவும் நடக்கவே முடியாது.''

''திருட்டுப் புரட்டு எதுவுமே இல்லாவிட்டால் இந்த ரோந்து எதற்காக?''

''அவற்றை எல்லாம் கேட்கக் கூடாது, ஸ்வாமி. ஆனால் உங்களிடம் சொன்னால் தவறில்லை. குடிகள் தம்மைப்பற்றி என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளத்தான் பிரபு எங்களை அமர்த்தியிருக்கிறார்.''

''அப்படியென்றால் மகாராஜாவுக்குக் குடிகளிடம் நம்பிக்கை இல்லை என்று ஆகிறதல்லவா?''

''நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும் ....''

''அப்படியென்றால் நீங்கள் நகர மக்கள் பேசிக்கொள்வதையெல்லாம் மகாராஜாவிடம் ஒப்பித்துவிடுவீர்களா?''

''எங்களை அதற்காகவேதான் நியமித்திருக்கிறார்கள், ஸ்வாமி.''

''தாயான சீதா தேவியை அத்தனை நாள் ராவணன் வசத்தில் விட்டு வைத்து, மறுபடியும் அவர்களுடன்... ஊரெல்லாம் கசகமுசவென்று நடக்கும் பேச்சு உங்களுக்குத் தெரிந்திருக்கும்.''

''தெரியும் ஸ்வாமி, கடந்த இருபத்திரண்டு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதை மகாராஜாவிடம் எப்படிச் சொல்லுவது? உங்களைப் போன்ற நல்ல குடும்பத்தினரே இப்படிச் சொல்லுகிறார்கள் என்றால், மகாராஜா நம்புவாரா? அதனால் உங்களிடம் சொல்வதற்கென்ன? யாராவது பாமர மக்கள் இந்தப் பேச்சை எடுக்கட்டும், அவர்களை இழுத்துக்கொண்டு போய் மகாராஜாவின்முன் நிற்க வைக்கலாம் என்று இருக்கிறோம்.''

அந்த மரியாதை மிக்க கனவானுடைய சந்தேகம் தீர்ந்தது. 'சபாஷ்!' என்ற வண்ணம் அவர் வீட்டுக்குள்ளே சென்றார்.

மறுநாள் சலவைத் தொழிலாளி ஒருவன் இதே விஷயத்தை எடுத்துச் சொன்னவுடன் அந்த ஒற்றன் சலவைத் தொழிலாளியின் பெயரையும் அவன் சொன்ன செய்தியையும் ராமபிரானிடம் சொல்லிக் கிருதார்த்தன் ஆகிவிட்டான். ★

தமிழாக்கம்: மஹிளா

தியாகையர் கண்ட ராமன்
கவிஞர்களுக்கும் பக்தர் களுக்கும் ராமன் மீட்டும் மீட்டும் தன் திருவிளையாடல்களைக் காட்டியருளுவான். கர்நாடக சங்கித உலக ஸாம்ராட்டாகிய தியாகராஜர் அப்படிக் கண்டவர். அவர் கண்ட காட்சிகள் பலபல. அவற்றை அவருடைய இனிய கீர்த்தனங்களிற் காண்கிறோம். அந்தக் காட்சிகளில் இதோ சில.

கீர்த்தனம் 'சலுகுஞ பத நீரஜ' காணக் கிடைக்குமா? கந்தவகன் தனயா! நின்கரம் பற்றி ஸ்ரீகாந்தன் நீராடும் கோலம், அரங்கன் பிரசாதத்தைச் சீதை திருக்கரத்தாற் பெறும் காட்சி, புராண படனம் செய்யும்படி நின்னைப் பணித்து ஸ்ரீராமன் அதனைக் கேட்கும் மாட்சி. இவை காணக் கிடைக்குமா?

கீர்த்தனம் 'விநநாஸகொனி'
வினவ ஆசை கொண்டேன்
விசுவரூபனே.

சீதையுடன் அமர்ந்து விளையாடுகை
யில், மனம் ஒன்றி நீங்கள் இனிதாக
உரையாடும் வார்த்தைகளைக் கேட்க
ஆசை கொண்டேன். வாதாத்மஜ
னும் பரதனும் அதைக் கேட்கும்
பேறு பெற்றவர்கள் அல்லவா?



கீர்த்தனம்: 'லாலி லாலேய லாலி' என் குலதனமே,
கருணைபொழி திருவிழியாய், கண்வளர்வாய்.
அபரஞ்சிப் பொன்னால் அமைந்த மஞ்சத்தில்
அழகிய ஜாதிமலர்மாலைபுனைந்த விதானத்தின்கீழ்,
தாம்பூலந் தந்து உபசரிப்பேன் துயின்றருள்வாய்.
என் கரங்கொண்டு நின் கால்களை வருடுவேன்.
தேவர்கள் கண்டு களிப்பார்கள்: என்னை மறவேல்.

Criterion-KCP-1000


கீர்த்தனம்: 'தயலேயவய்ய' தயை செய்தருள் ராமசந்த்ரா. மற்ற மன்னர் வந்தது கண்டு ராமன் வருவானு என்று ஏங்கிய சீதையின் முன் நீ நின்றபோது அவள் பெற்ற இன்பமும், நீ சீதை கழுத்தில் மங்கலியம் அணிந்து கைப்பற்றியபோது அவள் பெற்ற ஆனந்தமும் என்னே!

ஔவையார்

தமிழகத்தில் ஔவை மூதாட்டியாரின் பெயரை அறியாதாரில்லை. கண்ணகி, சீதை, பாஞ்சாலி ஆகியோரின் பெயரைப்போல, அறிவுக்கரசி ஔவையாரின் பெயரும் வீட்டுக்கு வீடு வழங்கி வருகின்றது. முன்சொன்ன மூவரும் காப்பிய நாயகியர் என்றால், பின்சொன்ன ஔவை சரித்திர நாயகியாவார். ஔவையைப் பற்றிக் கடைச்சங்க இலக்கியங்களில் கிடைக்கும் செய்திகள் அவ்வளவும் வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஔவையார் தமிழகத்தில் தோன்றி, தமிழ் மொழியிலே மிகுந்த புலமை பெற்று, தம் காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே தமிழ் அறிவையும் ஒழுக்க நெறியையும் பரப்புவதற்காக அரும்பாடு பட்டார். அந்தப் பணிக்கெனவே, இல்வாழ்க்கையில் ஈடுபடாமல், தமிழ்ப்பாதிரியாக நாடு சுற்றிப் பாடுபட்டார்.

இன்று நம் கைக்குக் கிடைத்துள்ள கடைச்சங்க இலக்கியங்களில் உள்ள செய்யுட்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 473 ஆகும். அவர்களிலே, பெண்பாற் புலவர்கள் முப்பதின்மர் ஆவர். அந்த முப்பதின்மரிலே, தமது புலமைத் திறத்தால் முதன்மை பெற்று விளங்குகிறார் ஔவையார்.

சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலவர்கள் பாடிய செய்யுட்கள் 154 ஆகும். அவற்றுள் ஔவையார் ஒருவர் மட்டுமே 59 செய்யுட்களைப் பாடியுள்ளார். அவற்றுள், அகப்பாடல்கள் 26. புறப்பாடல்கள் 33.

சங்க காலத்துப் பெண்பாற் புலவர்களெல்லாம் பெரும்பாலும் அகப் பாடல்களையே பாடியிருக்க, பெண்களின் திலகமான நம் ஔவையார் புறப்பாடல்களையே மிகுதியாகப் பாடியுள்ளது வியப்புக்குரியதாகும். அப்பாடல்களில் பெரும்பாலானவை போர்க்களத்தில் நின்று பாடியவை என்பதனை நினைக்கும்போது உடம்பு மயிர்க்கூச்செறிகின்றது.

ஔவையார் தகடூர் (தருமபுரி) என்னும் பதியை ஆண்ட குறுநில மன்னனான அதியமான் நெடுமானஞ்சியின் அரசவைப் புலவராக இருந்தாரென அறிகிறோம். அதியமான், தன் பகைவர்களை எதிர்த்துப் போர்க்களம் புகுந்த போதெல்லாம் ஔவையாரும் உடன் சென்றார் என்பதற்கான சான்றுகள் புறநானூற்றுச் செய்யுட்களில் உண்டு. பெண்களிலே அவர் ஒரு தனிப்பிறவி. 'போர்க்களப் புலவர்' என்று நாம் போற்றத்தக்க பெருமை ஔவையாருக்கு உண்டு.

சங்க காலத்து வாழ்ந்த ஆண்பாற் புலவர்களிலே வேறு யாருக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு ஔவையாருக்கு இருக்கக் காண்கிறோம். புறநானூற்றுப் பாடல்களில் இப்போது நமக்குக் கிடைத்துள்ள செய்யுட்களின் எண்ணிக்கை 398 ஆகும். அவற்றை 153 புலவர்கள் பாடியுள்ளனர். அவர்களிலே ஔவையார் மட்டும் 33 செய்யுட்களை இயற்றியுள்ளார். ஆம்; புறநானூற்றில் ஔவையார் பெயராலேயே அதிகப்படியான செய்யுட்கள் காணப்படுகின்றன. அவருக்கு அடுத்தபடியாக, பெரும்புலவர் கபிலர் 28 செய்யுட்களைப் பாடியுள்ளார். பெண்பாற் புலவர் ஒருவர் ஆண்பாற் புலவர்களையும் மிஞ்சும் வகையில் புறப்பாடல்களை அதிக அளவில் பாடியுள்ளார் என்றால், அதற்காகப் பெண்குலத்தார் பெருமை அடையலாம்.

புறநானூற்றுப் புலவர்களால் பாடப்பட்ட மன்னர்களிலே அதிகமான பாடல்களைப் பெற்ற பெருமை அதியமான் நெடுமானஞ்சிக்கே உரிமை. இந்தப் பெருமை ஔவையாராலேயே அவனுக்குக் கிடைத்துள்ளது. புறநானூற்றில் ஔவையார் பெயரில் உள்ள மொத்தம் 33 பாடல்களில் அதியமானைப் பற்றியவை 25 பாடல்களாகும். அவற்றில் அதியனின் போர்த் திறம், வள்ளன்மை, புலவரைப் போற்றிய பெருங்குணம் ஆகிய அனைத்தும் வருணிக்கப்பட்டிருப்பதோடு, அவனுடைய இறுதி யாத்திரை பற்றியும் நெஞ்சம் நெக்குருகப் பாடியுள்ளார் ஔவையார். வேறு எந்தப் புலவரும், வேறு எந்த மன்னனையும் இத்தனை கோணங்களிலிருந்து வருணித்துப் பாடியதில்லை எனலாம். ஔவைப் பெருமாட்டியை அரசவைப் புலவராகப் பெற்ற காரணத்தால் பெருநில மன்னர்களான தமிழ் மூவேந்தர்களுக்கும் இல்லாத பெருமையைக் குறுநில மன்னனான அதியமான் நெடுமான்அஞ்சி பெற்றுவிட்டான்.

அம் மன்னன் ஔவையாரைத் தெய்வப் பிறவியாகவே கருதினான். ஒரு சமயம் தனக்கு அரிதில் கிடைத்த கருநெல்லிக்கனி ஒன்றைத் தான் உண்ணாமல் ஔவையாருக்குத் தந்து, அவர் உண்ணும்படி செய்தான். பன்னிரண்டாண்டுகட்கு ஒரு முறை கிடைக்கும் அந்த நெல்லிக் கனி தன்னை உண்டாருக்கு நீடித்த ஆயுளைத் தரத் தக்கதாகும். இந்தச் செய்தியை ஔவையாரிடம் கூறாமலே நெல்லிக் கனியை உண்ணச் செய்தான் அதியன். அவனது தியாகத்தை அறிந்த போது, திகைப்பும் வியப்பும் அடைந்தவராகி, ''நீலமணிமிடற்று ஒருவன் போல, மன்னுக பெரும நீயே'' என்று அவனை வாழ்த்தினார் ஔவையார்.

அதியன் மாண்ட பின்னர், அவன் மகன் பொகுட்டெழினி அரசு கட்டிலேறினான். அவனுக்கும் அரசியல் ஆலோசகராக இருந்தார் ஔவையார். அவனுக்குப்பின் அவன் மகன் அரியணை ஏறியபோது, அவனுக்கும் ஔவையார் அரசவைப் புலவராக இருந்திருக்கக்கூடுமோ என்று ஐயுறத்தக்க வகையில் புறம் 290-ஆவது செய்யுள் அமைந்திருக்கின்றது. இது உண்மையானால், அப்பனுக்கு, அவன் மகனுக்கு, அவனுக்குப் பின் பேரனுக்கு என மூன்று தலைமுறையினருக்கும் அரசவைப் புலவராக இருந்த பெருமை சங்க காலப் புலவர்களிலே ஔவையார் ஒருவருக்கே உரிமையாகிறது. ஆயுளை வளர்க்கும் நெல்லிக் கனியை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தவராதலால், தொடர்ந்து மூன்று தலைமுறைக் காலம் ஓர் அரச பரம்பரையினருக்கு அரசியல் ஆலோசகராக இருப்பது சாத்தியமானது போலும்.

ஔவையார் இயற்றிய தனிப் பாடல்கள் ஏராளம். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நீதி நூல்களும் இவர் இயற்றியவையாகும். இந்தத் தனிப் பாடல்களும் நீதிநூல்களும் இடைக் காலத்தில் வாழ்ந்த இரண்டாவது ஔவையாரால் இயற்றப்பட்டவை என்று கருதுவாரும் உண்டு. ஆனால், பெரும் புலவர்களிலே சிலர் இதனை ஏற்க மறுக்கின்றனர். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படும் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய புகழ் மிக்க உரையாசிரியர் மூவரும் ஔவையார் பெயரால் உள்ள தனிப்பாடல்கள் சிலவற்றையும், மூதுரைப் பாடல்களையும்

தாங்கள் தொல்காப்பியத்திற்கு இயற்றியுள்ள உரைகளிலே எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனுல், அவர்கள் வாழ்ந்த பன்னிரண்டாம் நூற்ருண்டுக்கும் சில நூற்ருண்டுகளுக்கு முன்பே தனிப் பாடல்களும் நீதி நூல்களும் தோன்றியிருக்க வேண்டும் என்று எண்ண இடம் இருக்கிறது. இது உண்மையானுல், அந்தத் தனிப் பாடல்களும் நீதி நூல்களும் சங்க கால ஒளவையாரால் இயற்றப்பட்டவை என்ற கொள்கை உறுதிப்படுகின்றது. அவை எளிய நடையில் இயற்றப்பட்டிருக்கின்றன என்ருல், குழந்தைகளுக்கும் ஓரளவே கல்வி அறிவுடைய சாதாரண மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்குடன் ஒளவையார் அவற்றை இயற்றியதே அதற்குக் காரணமாகும்.

ஒளவையார் பெயரில் உள்ள தனிப் பாடல்களிலே சில பாடல்களை அவர் இயற்றியதாகக் கொள்வதற்கில்லை. குறிப்பாக, கம்பரைப் பற்றியதாக உள்ள ''எட்டேகால் லட்சணமே'' என்ற பாடல் மிகவும் தரக் குறைவானதாகும். அதை ஒளவையார் பாடியிருக்கவே முடியாது. கம்பர் காலத்தில் ஒளவையார் வாழ்ந்திருந்ததாகச் சொல்வதும் கட்டுக் கதையாகும்.

உரையாசிரியர் நச்சினர்க்கினியர், தொல்காப்பியத்திற்குத் தாம் இயற்றியுள்ள உரையில் மேற்கோள் காட்டியுள்ள ஒளவையாரின் சங்க இலக்கியச் செய்யுட்களையும் தனிப் பாடல்கள் சிலவற்றையும் மூதுரைச் செய்யுளையும் ஒளவையார் பெயராலேயே வழங்கியுள்ளார். ஒளவையார் இருவர் என்று அவர் கருதியிருந்தால், அதனைத் தம் உரையில் அவர் குறிப்பிட்டிருக்கக் கூடும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் செய்யுளியலில் முதல் சூத்திரத்திற்கு அவர் எழுதியுள்ள உரையில்,

> ''தொல்காப்பியரோடு ஒருசாலை மாணுக்கராகிய காக்கைபாடினியாரும் உறுப்பென்ருர்; பின் தோன்றிய காக்கைபாடினியார் முதலியோர் கொள்வர்''

என்று குறிப்புத் தந்து, காக்கைபாடினியர் இருவர் என்பதனை நம் கவனத்துக்குக் கொண்டு வருகின்ருர். இதுபோன்று ஒளவையார் பெயரில் உள்ள சங்க இலக்கியச் செய்யுட்களில் தனிப் பாடல்களையும் மூதுரைச் செய்யுள்களையும் ஒரே நூலுக்குரிய உரையில் காட்டியிருப்பதால், படிப்போருக்குக் குழப்பம் ஏற்படாமல் இருக்க, ஒளவையார் இருவர் என்ற குறிப்பையும் அவர் தந்திருக்க வேண்டும். தராததால், அவரும் ஒளவையார் ஒருவரே என்ற கருத்தைக் கொண்டவர் என்பது உறுதிப்படுகின்றது.

மூதுரையில் 'கானமயிலாட' எனத் தொடங்கும் பாடலில், 'வான்கோழி' பற்றி வருகின்றது. ''வான்கோழியானது கி. பி. பதினுரும் நூற்ருண்டில்தான் மேல்நாட்டினரால் இந்தியாவிற்குள் கொண்டுவரப் பட்டதாதலால், அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும் பாடலைக்கொண்ட மூதுரை நூல் கி.பி. பதினுரும் நூற்ருண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியதாகவே கொள்ள வேண்டும்'' என்று, அறிஞர் கால்டுவெல் கூறியுள்ளார்.

கி.பி. பன்னிரண்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த உரையாசிரியர்கள் மூதுரைச் செய்யுளைக் கையாண்டிருப்பதால் அறிஞர் கால்டுவெல் கருத்து, பொருளற்றதாகிறது.

ம.பொ.சிவஞானம்

ஒளவையாரின் சங்க இலக்கியச் செய்யுட்கள் அனைத்தும் பெரும்பாலும் மன்னர்களின் பெருமையையே பேசுகின்றன. இதற்கு மாருக, தனிப் பாடல்களும் நீதி நூல்களும் பெரும்பாலும் மக்களுக்குப் பயன்படத் தக்கவையாக இருக்கின்றன. அந்த வகை

யில் 'மக்கள் கவி' என்ற பெருமைக்கு உரியவராகின்றார் ஔவையார்.

ஔவையார் பாடாத துறையே இல்லை எனலாம். அவருடைய ஆத்திசூடிக்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் போன்ற பெரும் புலவர்கள் பலர் உரை இயற்றியுள்ளனர். ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடி புராணம், ஆத்திசூடி சிந்து, ஆத்திசூடி அகவல் எனக் கவிதை வடிவில் வழிநூல்கள் பலவும் தோன்றியுள்ளன. மகாகவி பாரதியார் ஔவை ஆத்திசூடியைப் பின்பற்றிப் 'புதிய ஆத்திசூடி' ஒன்றைப் படைத்துள்ளார்.

அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார், ''சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு, அபாயம் ஒரு நாளும் இல்லை'' என்ற ஔவை வாக்கை, குருமொழியாகக் கொண்டு தாம் ஓதியதோடு, தம் சீடர்களையும் ஓதும்படி தூண்டினார்.

'முருகதாசர்' என்றழைக்கப்பட்ட தண்டபாணி சுவாமிகள் ஔவையாரை வழிபடு தெய்வமாகவே கொண்டு, 'ஔவையார் துதி' என்னும் பெயரில் கவிதை நூல் ஒன்றை இயற்றியுள்ளார்.

இப்போது நம்மிடையே வாழ்ந்து வரும் 'பெரியவர்கள்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ள காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரிய சுவாமிகள், ''ஆண்டவனே அருளிய வேதவாக்குக்கு அடுத்தபடியாக மானுடர் வாக்கு ஒன்றைச் சொல்லக் கூடுமானால், அது ஔவை வாக்கே'' என்று கூறியுள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் ஆங்கில அறிஞர் பலரால் ஆங்கில மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. ஔவையின் 'கல்வி ஒழுக்கம்' என்னும் நூல் வான் ரூதின் என்னும் ஜெர்மானிய அறிஞரால் ஜெர்மன் மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

புருஷார்த்தம் நான்கும் வரும்படி ஔவை பாடியுள்ள 'ஈதலறம்' எனத் துவங்கும் வெண்பாப் பாடலைக் கால்டுவெல், ஜி. யு. போப், பெஸ்கி போன்ற பெரும் புலவர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளனர். பாரதியார் ஒரு கட்டுரையையே எழுதி அந்தக் கவிதையைப் பாராட்டியுள்ளார்.

நம் ஔவையாருக்கு இணையான பெண்பாற் புலவர் அவர் காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி, உலகில் வேறு எந்த நாட்டிலும் சரி வாழ்ந்ததில்லை என்று சொல்லலாம்.

ஞானக் குறள், விநாயகரகவல், வேழ முகம் ஆகிய சமய நூல்கள் ஔவையார் இயற்றியவை என்று சொல்லப்படுகின்றன. இது உண்மையானால், அம் மூதாட்டியார் தமிழ்ப் புலவராக மட்டுமல்லாமல், சிறந்த தவயோகியாகவும் வாழ்ந்தாரென்று கருத வேண்டியவர்களாகிறோம். தமிழ்ப் பெண்ணொருத்தி சித்தர்களில் ஒருவராகத் திகழ்ந்த பெருமை பெண்குலத்தாருக்கு உயர்வைத் தருவதாகும்.

'அசதிக்கோவை' என்ற நூலையும் ஔவையார் இயற்றினார் என்று சொல்லப்படுகிறது. இந்த நூலில் முப்பது பாடல்களைத் தவிர மற்றவை கிடைக்கவில்லை.

பந்தனந்தாதி, பெட்டகம், கணபதி ஆசிரிய விருத்தம், உயர்ஞானசர நூல் ஆகிய நூல்கள் ஔவையார் பெயரால் வழங்கி வருகின்றன. ஆனால், இதனை நம்பும் அளவுக்கு இந் நூல்கள் உயர்தரமானவை அல்ல.

'உலக நீதி' என்ற நூல், உலகநாதனார் என்ற பெயரால் தற்போது வழங்குகிறது. சுமார் தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட பழைய பதிப்புகள், ஔவையார் பெயரால் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந் நூலின் கடைசிச் செய்யுளில் 'ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்' என்றுள்ள வாசகம், பழைய பதிப்புகளில் 'ஓதுவித்தவாசகத்தால் உலகம் உய்ய' என்று மாறுபாடாகத் தரப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியம் நூல்நிலையத்திலுள்ள தமிழ் நூற்பட்டியலிலும் 'உலகநீதி' ஔவையார் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது.

ஔவையார், ஆரம்பப் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் முதல் கல்லூரிகளில் படிக்கும் காளையர்கள் வரை இந்தத் தலைமுறையினர் அனைவருக்கும் ஆசிரியராக விளங்கும் பேற்றினைப் பெற்றுள்ளார்.

தமிழினத்தார் வாழையடி வாழையெனப் பெற்றுள்ள பெரும் புலவர்களிலே ஔவையாருக்கே முதலிடம் தருகின்றார் பாரதியார். அது வருமாறு:

'' 'தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஔவையின் நூல்களை இழந்துவிடப் பிரியமா?' என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், 'மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக்கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம். அது மட்டும் சமைத்துக்கொள்ள முடியாத தனிப் பெருஞ் செல்வம்' என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.''

ஆம்; ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் சுதந்தரத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் ஆணினத்திலே, திரும்பவும் வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் தோன்றுவார்கள் என்று நம்பலாம். ஆனால் வேதகாலந் தொட்டுச் சுதந்தரத்தை இழந்து ஒடுங்கிக் கிடக்கும் பெண்ணினத்திலே ஔவையார் போன்ற ஒரு பெரும் புலவர் ஞானி திரும்பவும் தோன்றுவது சாத்தியம் அல்ல அல்லவா?

வாழ்க ஔவையார் புகழ்! ★

ஒளியில் பூத்த முகம்

போட்டோ:
என். ராமகிருஷ்ணா

நெல்லூர் அரிசி

அகிலன்

'தருமமிகு சென்னை' என்று இராமலிங்க சுவாமிகளால் பாடப்பெற்ற சென்னை மா நகரத்தில், திருவள்ளுவர் பிறந்த திருமயிலாப்பூரில், ஒரு தெருவில், ஒரு வீட்டில், காலை நேரத்தில் கந்தசாமி அன்றைச் செய்தித்தாளில் ஆழ்ந்திருந்தார். செய்தித் தாளின் 'இன்றைய நிகழ்ச்சிகள்' என்ற பகுதியில் அவர் கவனம் சென்றது. படித்துவிட்டுத் தமக்குள் புன்முறுவல் பூத்துக்கொண்டார். 'இது தருமமிகு சென்னையேதான்; சந்தேகமே இல்லை' என்ற திருப்தி அவருக்கு.

'இன்றைய நிகழ்ச்சிகள்' என்ற பகுதியில் அன்று மாலையில் சென்னையில் நடைபெறவிருந்த கூட்டங்களின் விவரங்கள் இருந்தன: இராமாயணம், பாரதம், திருக்குறள், பகவத் கீதை, திருவாசகம் இப்படி அறநெறி பரப்பும் கூட்டங்களே அதிகம். எந்தக் கூட்டத்துக்குப் போகலாம் என்பது பற்றிக் கந்தசாமி யோசனை செய்யலானார்.

கந்தசாமிக்கு நாற்பது வயசுக்கு மேலிருக்கும்; தபாலாபீஸ் ஒன்றில் வேலை. அவர், அவர் மனைவி, நான்கு குழந்தைகளையும் சேர்த்து ஆறு பேர்களுள்ள குடும்பம். கந்தசாமியைத் தபாலாபீஸ் கந்தசாமி என்பதைவிட, 'தர்ம ரட்சக சபைச் செயலாளர் கந்தசாமி' என்ற முறையில்தான் அந்தத் தெருவில் உள்ளவர்களுக்குத் தெரியும்.

அந்தத் தெருவுக்கே சபையின் வாயிலாகத் தர்மத்தைப் பரப்பிக்கொண்டிருந்தவர் அவர். நல்லவர்கள், பெரியவர்கள், கற்றவர்களைக் கூப்பிட்டு அவ்வப்போது சபையில் கூட்டங்கள் நடத்துவார். கதாகாலட்சேபங்கள், தோத்திரப் பாடல்கள், பஜனைகளுக்கு ஏற்பாடு செய்வார். மேலும் மாலை வேளைகளில் வேறு இடங்களில் நடைபெறும் நல்ல சொற்பொழிவுகளையும் கேட்டு வருவார்.

''வயிற்றுக்கு நல்ல சாப்பாடு எப்படியோ, அப்படியே காதுக்கும் நல்ல சொல் கிடைத்தால்தான் எனக்கு அன்றைப் பொழுது நல்ல விதமாகப் போகும்'' என்பார் கந்தசாமி.

கந்தசாமியிடம் உள்ள விசித்திரமான சுபாவம், அவர் உண்மையிலேயே நல்ல மனிதராக வாழ முயன்றதுதான். நியாயத்துக்குக் கட்டுப்பட்டு, எளிய வாழ்க்கையைப் பழக்கப்படுத்திக்கொண்டு, அக்கம் பக்கத்தாரிடம் அன்பு செலுத்தி வந்தார் அவர். பணக்காரராக அவர் இல்லாவிட்டாலும், பெரிய பதவியில் இல்லாவிட்டாலும், நாலு பேர் அவருடைய குணத்துக்காகவே அவரை மதித்து வந்தார்கள்.

பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த கந்தசாமிக்குச் சில தினங்களுக்கு முன்பு பத்திரிகையில் வந்திருந்த செய்தி ஒன்று நினைவுக்கு வந்தது. நெல்லூர் அரிசி சென்னைக்கு வந்திருப்பதாகவும், பங்கீட்டுக் கடைகளில் சில வாரங்களுக்கு அது கிடைக்குமென்றும் போட்டிருந்தார்கள்.

கந்தசாமிக்கு நெல்லூர் அரிசியைப் பொறுத்த மட்டிலும் சிறு சபலம் உண்டு. பங்கிடு வருவதற்கு முன்பு, அரிசி வெளியில் கிடைத்த காலத்தில், விலையைப் பொருட்படுத்தாமல் நெல்லூர் அரிசிதான் வீட்டுக்கு அவர் வாங்கிப் போடுவது வழக்கம்.

ஆகவே செய்தியைக் கண்டவுடன் சிறு குழந்தையைப்போல் வீட்டில் மனைவி மீனாட்சியிடம் தம்முடைய ஆனந்தத்தைக் கொட்டித் தீர்த்துவிட்டார். ''கொஞ்ச நாளைக்காவது நெல்லூர் அரிசி கிடைக்கும்போல் தெரிகிறது; அடுத்த வாரத்தில் கிடைக்குமாம்!''

அந்த அடுத்த வாரம் இப்போது வந்துவிட்டதனால், வீட்டுக்கும் நெல்லூர் அரிசி வந்திருக்குமென்று நினைத்துக்கொண்டு, உற்சாகத்தோடு சமையல் அறைக்குள் நுழைந்தார் கந்தசாமி. அவர் மனைவி மீனாட்சி அப்போதுதான் ரேஷன் கடையிலிருந்து வந்த அரிசியை முறத்தில் கொட்டிப் புடைத்துக்கொண்டிருந்தாள்.

''என்ன மீனாட்சி, நெல்லூர் அரிசி வந்திட்டதா?''

''வந்திருக்கு, வந்திருக்கு! நெல்லூர் அரிசி வரலே, கல்லூர் அரிசி வந்திருக்கு!'' என்று எரிச்சலோடு குமுறினாள் மீனாட்சி. ''கால்வாசிக் கல், கால்வாசி நெல், கால்வாசி மண், கால்வாசிக் குறுணை! உங்களுக்கு இன்னிக்குக் கூழோ கஞ்சியோதான் காய்ச்சிக் கொடுக்கப் போறேன்! இதைக் கொண்டு சாதம் வடிச்சுப் போட என்னால் முடியாது!''

மனைவியின் தாக்குதலால் திகைத்துப்போனார் கந்தசாமி. கையில் ஒரு பிடி எடுத்துப் பார்த்தார். மீனாட்சி கூறியது உண்மைதான். கல்லும் நெல்லும் கலந்த சவ்வரிசிக் குறுணை போல் காட்சியளித்தது அரிசி. அப்போதுதான் அறுவடையான குறுகிய காலக் குறுவையின் குறுணைத்தூள் அது.

கதா காலட்சேபங்களில் வரும் ரிஷிபத்தினிகள் வேண்டுமானால் கல்லையும் இரும்பையும் வேக வைத்து அந்தக் காலத்தில் பரிமாறியிருக்கலாம். ஆனால் இந்தக் காலத்துத் தர்ம பத்தினிகளால் இந்தக் கல்லும் நெல்லும் கலந்த குறுணையைக் கொண்டு சாதம் வடிக்க முடியாதுதான்.

''ஏன், இன்னும் நெல்லூர் அரிசி ரேஷன் கடைக்கு வரவில்லையா?'' என்று கேட்டார் கந்தசாமி.

''வந்ததா இல்லையாங்கிறது அந்தக் கடைக்காரனுக்கும் கடவுளுக்குந்தான் வெளிச்சம்!'' என்று ஆத்திரத்தோடு கூறினாள் மீனாட்சி; ''இன்னிக்கு வருது நாளைக்கு வருதுன்னு நாலு நாளா அலைக்கழிச்சு, கடைசியிலே இதுதான் வந்திருக்குன்னு கையை விரிச்சிட்டான்.''

மீனாட்சி பொறுமைசாலிதான். ஆனால் பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? ஏமாற்றம் தாங்க முடியாமல் கடைக்காரரைத் திட்டத் தொடங்கிவிட்டாள் அவள்.

''வியாபாரியைத் திட்டுவது நியாயம் அல்ல'' என்று ரேஷன் கடைக்காரருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு வந்தார் கந்தசாமி. அவர் வக்கீலுக்குப் படிக்காவிட்டாலும் எந்த விஷயத்தையும் வக்கீலைப் போல்

தான் ஆராய்ச்சி செய்வார். ஆனால் அவர் அடிக்கடி எதிர்க்கட்சி வக்கீலாக மாறுவதைத்தான் மீனாட்சியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தவறு எங்கே நடக்கிறது என்ற உண்மையை அறிந்துகொள்ளும் வரையில் யாரையும் பழி சுமத்தக்கூடாது என்பது அவர் கட்சி.

மீனாட்சியின் ஆத்திரம் மீனாட்சிக்கு: இரண்டு மூன்று முறை குழந்தைகளைக் கடைக்கு அனுப்பிப் பார்த்தாள். பிறகு தானே இரு முறை சென்று வந்தாள். கந்தசாமிக்கு நெல்லூர்ச் சம்பாவிடம் உள்ள ஆவலை அவள் அறிந்தவள். அதை ஒரு வேளையாவது அவருக்குச் சமைத்துப் போட முடியவில்லையே என்ற கோபம் அவளுக்கு.

''காசையும் வாங்கிக்கிட்டு, தின்னும் சோற்றிலே இப்படிக் கல்லையும் மண்ணையும் வாரிக் கொட்டுகிறானே, இந்தப் பாவிப் பயலுக் கெல்லாம் நரகத்திலேகூட இடம் கிடைக்காது!'' என்று சாபமிட்டாள் மீனாட்சி.

''இதோ பார், பொறுமை! பொறுமை!'' என்று பதறினார் கந்தசாமி; ''கனி போன்ற இன்சொல் இருக்க, காய் போன்ற வன்சொல் கூடாதென்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். அப்படி இருந்தும் .....''

''உங்களோட வள்ளுவரையும் தர்மத்தையும் நீங்க உங்களோட வீட்டுக்கும் தெருவுக்கும் உபதேசம் செய்தது போதும். கள்ள மார்க்கட்காரன், கலப்படம் செய்யறவன், பதுக்கறவன், ஊரையும் நாட்டையும் ஏமாத்திக் கொள்ளையடிக்கிறவன் இவன்க கிட்டே போய் உங்க உபதேசத்தைப் பண்ணுங்க! உங்களோட தர்மோபதேசம் பெருகப் பெருகத்தான் ஊருக்குள்ளே அக்கிரமமும் அதிகமாய்ப் போச்சு!''

மீனாட்சியின் குமுறல் அவருடைய நம்பிக்கைக்கே ஒரு சவாலாக எழுந்துவிட்டது. நெல்லூர் அரிசியின் விஷயம் இப்போது அற்ப விஷயமாக அவருக்குத் தோன்றவில்லை. 'இதில் உண்மை எங்கே இருக்கிறது? தர்மம் எங்கே இருக்கிறது? நியாய அநியாயம் எங்கே இருக்கிறது?' என்ற கேள்விகளை அவரிடம் தூண்டிவிட்டு விட்டாள் மீனாட்சி.



''மீனாட்சி, நாட்டிலே இப்போது ஜனத்தொகை பெருகியிருக்கு; ஆனால் அந்த அளவுக்கு அரிசி உற்பத்தி பெருகவில்லை. பற்றாக் குறையாக இருப்பதால் கிடைப்பதைப் பகிர்ந்து கொடுக்கிறாங்க. ஒரு வேளை, நெல்லூர் அரிசி ரேஷன் கடைக்கே இன்னும் வந்திருக்காது.''

''நெல்லூர் அரிசி வரட்டும் வராமல் போகட்டும்! இந்தக் கல்லையும் நெல்லையும் குறுணையையும் சேர்த்துத்தான் பகிர்ந்து கொடுக்கிறாங்களா? யார் எந்த இடத்திலே, எதுக்காக, அப்படி மண்ணை அள்ளி அரிசியிலே கொட்டுறாங்கன்னுவது நீங்க கவலைப் படறீங்களா? உங்களுக்கென்ன? — இப்படியே கல்லோடு ஒரு நாள் பொங்கிப் போட்டால் தெரியும்! ..... சரி, சரி, என் வயிற்றெரிச்சலைக் கொட்டாமல் நீங்க உங்க வேலையைப் பாருங்க!''

நிலைமை கட்டுக்கு அடங்காமற்போய் வேலைக்குப் புறப்படும் நேரத்தில் சாப்பாடு கிடைக்காவிட்டால் என்ன செய்வது? ஆகவே மனைவியிடம் பணிந்து கொடுத்துப் பின்வாங்கினார் கந்தசாமி. அன்றைக்கு வந்து நிலைமையை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். தாமே மீனாட்சியின் கட்சி வக்கீலாகவும் எதிர்க்கட்சி வக்கீலாகவும் இருந்துகொண்டு, தமக்கெதிரில் படத்தில் இருந்த காந்தியடிகளை நீதிபதியாக ஏற்றுக்கொண்டார்.

ஒரு காகிதத்தில் பிரச்னையை எழுதினார், வழக்கின்போது குறிப்பெழுதும் வக்கீலைப் போல: '(1) நெல்லூர் அரிசி வரவில்லையா? அல்லது வந்தும் கடைக்காரர் கொடுக்கவில்லையா? (2) இந்தக் கல்லூர் அரிசியின் கலப்படத் தயாரிப்பு எங்கே நடைபெறுகிறது?'

முதல் விஷயத்தைத் தீவிரமாக விசாரித்து அறிந்து கொள்ள முடியுமென்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. இரண்டாவது, கலப்பட இரகசியந்தான் அவருக்கு மிகவும் சிக்கலாகத் தோன்றியது.

கடவுள் நெல்லுக்குள் அரிசியோடு கல்லையும் வைத்துப் படைப்பதில்லை. ஆகவே அவர்மீது கலப்படக் குற்றம் சாட்ட முடியாது. ஒன்று, நெல்லை அரிசியாக அரைக்கும் மில்லிலேயே கல்லையும் சேர்த்துக் கலந்திருக்கக் கூடும்; அல்லது, மொத்தமாக வாங்கி வைத்துப் பகிர்ந்து கொடுப்பதற்கு முன்னாலும் இது நடந்திருக்கலாம்; அல்லது, சில்லறை வியாபாரம் செய்யும் ரேஷன் கடையிலும் கலப்படம் நடக்க வழியுண்டு. இந்த மூன்று இடங்களில், எந்த இடத்தில், யாரால் எப்படி இது செய்யப்படுகிறது? எப்படி இதைக் கண்டுபிடிப்பது? கண்டுபிடித்தாலும் என்ன செய்ய முடியும்?

கந்தசாமிக்குத் தலைசுற்றியது. தபாலாபீசில் வேலை பார்க்காமல், ஒரு வேளை உணவு இலாகாத் தலைவராக இருந்தால், அதற்குள் நுழைந்து பார்க்கலாம். இப்போது அது அவ்வளவு எளிதல்ல.—ஆகவே, தம்முடைய சக்திக்கு மீறிய இரண்டாவது பிரச்னையை



விட்டுவிட்டு, முதல் விஷயத்தை மட்டிலும் கவனிப்பதென்ற முடிவுக்கு வந்தார்.

நேரம் ஆயிற்று. சாப்பாட்டுக்கு அழைப்பு வந்தது. கலத்திலே மீனாட்சி பரிமாறிய களிபோன்ற உணவுப் பொருளைச் சாம்பாரில் குழைத்து முகம் சுளிக்காமல் உள்ளே தள்ள முயன்றார். அவருடைய குழந்தைகள் நான்கும் பரிதாபமாக விழித்துக் கொண்டு, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தன. சாப்பிடும்போது யாரும் பேசக்கூடாது என்று அவர் கட்டளையிட்டிருந்ததனால், அன்று அவரால் மீனாட்சியிடமிருந்து தப்ப முடிந்தது.

விரைவாகவே வீட்டை விட்டு வெளியில் கிளம்பினார் கந்தசாமி. கிளம்பும் போது காகிதத்தில் அந்தக் குறுணையில் சிறிதளவு எடுத்து மடித்துச் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டார்.

செல்லையாவின் ரேஷன் கடைக்கு அவர் வந்தபோது அங்கே ஒரு சிறு கூட்டம் இருந்தது. கூட்டம் கோபமாகப் பேசியது; தாறுமாறுகத் திட்டியது. செல்லையாவும் கூட்டத்தோடு சேர்ந்துகொண்டு தமக்கு அரிசி கொடுப்பவர்களைத் திட்டினார். தர்ம ரட்சக சபைக் கந்தசாமியை அங்கே கண்டவுடன் செல்லையாவுக்கு ஏனோ சுருக்கென்று குத்தியது. வழக்கமாக அவர் ரேஷன் வாங்க வருவதில்லை.

''இப்பத்தான் காலையிலே நம்ப வீட்டுக்கு அனுப்பிச்சேனே .....'' என்று இழுத்தார் செல்லையா.

''அந்த அரிசி வந்து........''

''நாங்க என்ன செய்யறது சொல்லுங்க? அவுங்க கொடுக்கிறதைத் தானே நாங்க உங்களுக்குப் போட முடியும்? நாங்க என்ன நிலத்திலேருந்தா கொண்டு வர்ரோம்? நெல்லூர் அரிசி வரப் போகுதுன்னு தினமுந்தான் பையன் போயிட்டு வர்ரான். பேப்பரிலே போட்டுட்டாப் போதுங்களா? எங்களுக்குப் போட வேண்டாங்களா?'' செல்லையா அடுக்கிக் கொண்டு போனார்.

கந்தசாமி நேரடியாகச் செல்லையாவின் முகத்தை ஒரு முறை உற்றுப் பார்த்தார். செல்லையா அழுத்தமான ஆள்தான். அவர் முகத்திலிருந்து எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை.

''அப்படியானல் இந்த அரிசிதான் வந்திருக்கிறதென்கிறீர்களா?''

''நான் எதுக்குப் பொய் சொல்லணும்?''

செல்லையா பொய் சொல்லுகிருர் என்று ஏனே கந்தசாமிக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆனல் சந்தேகமே ருசுவாகிவிடாது என்று அவர் அதை உதறித் தள்ளிவிட்டு, ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டு ராயப்பேட்டைப் பக்கம் வந்தார். அங்கே ஒரு ரேஷன் கடைக்காரர் அவருக்குப் பழக்கமானவர். சோமசுந்தரம் என்ற அந்த வயசான மனிதருக்குத் தர்ம ரட்சக சபையில் ஓரளவு ஈடுபாடு உண்டு. சபை விஷயமாகக் கந்தசாமி வந்திருப்பதாக நினைத்துக்கொண்டு அவரை வரவேற்று உட்கார வைத்தார்.

கந்தசாமி அங்கே வியாபாரம் செய்யப்படும் அரிசியைப் பார்த்தார். முதல் தரமான நெல்லூர்ச் சம்பா அரிசி. சமைத்தால் மல்லிகைப்பூவைப் போல் மலரக் கூடிய பழைய அரிசி.

''நெல்லூர் அரிசி வந்திருக்கிறது போல் தெரிகிறது'' என்ருர் கந்தசாமி.

''ஏதோ ரெண்டு மூணு வாரத்துக்குக் கிடைக்கும். பாவம்! கிடைக்கிறதைத்தானே அவுங்களும் பகிர்ந்து கொடுப்பாங்க? பெரிய பொறுப்பு இல்லையா இது?'' என்ருர் சோமசுந்தரம்.

எல்லா ரேஷன் கடைகளுக்குமே அந்த நெல்லூர் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அவரிடம் விசாரித்தார் கந்தசாமி.

''கொடுத்து ரெண்டு நாளாச்சே? செல்லையா கடையிலேதானே உங்களுக்கு ரேஷன்? அவரும் வாங்கிட்டு வந்திட்டாரே!''

கந்தசாமிக்கு இந்தச் செய்தியைக் கேட்டவுடன் நெஞ்சு வலித்தது. மனச்சாட்சி உள்ள மனிதர்களுக்கு ஏற்படும் கோளாறு இது. ஒரு கணம் மௌனமாக இருந்துவிட்டு, தம்முடைய சட்டைப் பைக்குள் மடித்து வைத்திருந்த காகிதத்தைப் பிரித்துச் சோமசுந்தரத்தினிடம் காட்டினார்.

''இந்த வாரம் ரேஷனுக்கு இந்த அரிசியைக் கொடுத்தார்களா? அல்லது கொடுத்திருப்பார்களா?''

''சமயத்திலே இப்படியும் கொடுக்கிறது உண்டு. ஆனால் இது ரேஷனிலே கொடுத்த அரிசியில்லே! கொத்தவால்சாவடியிலே லிட்டர் ஒரு ரூபான்னு மூட்டை மூட்டையாய்க் கிடைக்குது. புடைச்சு எடுத்திட்டாப் படிக்குப் பாதிகூடத் தேறுது.''

''சரி, நான் வருகிறேன்'' என்று கிளம்பினார் கந்தசாமி.

''ஏதோ தர்ம ரட்சக சபை சம்பந்தமாக வந்திருப்பீங்கன்னு நினைச்சேன் ....''

''இதுவும் தர்ம ரட்சக சம்பந்தமானதுதான்'' என்று கூறியபடியே விடைபெற்றுக்கொண்டார் கந்தசாமி.

'சோமசுந்தரமும் ரேஷன் கடை வைத்திருப்பவர்தாம்; செல்லையாவும் ரேஷன் கடை வைத்திருப்பவர்தாம்' என்று நினைத்துக்கொண்டார் அவர். 'ஆனால் இவர்களுக்குள்ளேதான் எவ்வளவு வித்தியாசம்!'

சோமசுந்தரத்தின் பேச்சுக்குப்பிறகு கந்தசாமிக்குச் செல்லையாவின் மீதிருந்த சந்தேகம் உறுதிப்பட்டது என்றாலும் அவர் அத்துடன் திருப்தி அடையவில்லை. அலுவலகத்துக்குச் சென்றபிறகு அரிசி வழங்கும் அலுவலகத்துக்குப் போன் செய்து, அங்கிருந்த ஒரு நண்பரிடம் தகவல் விசாரித்தார். செல்லையாவுக்கு நெல்லூர் அரிசி கொடுக்கப் பட்டிருந்த விஷயத்தை உறுதிப்படுத்தினார் அந்த நண்பர்.

அலுவலகத்து வேலைகளை மளமளவென்று முடித்தார். மாலை ஆறு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். வந்தவர் கைகால் கழுவி முகம் துடைத்துக்கொண்டு தம்முடைய நாற்காலியில் அமர்ந்தார். அவருடைய கண்கள் எதிரில் சுவரில் மாட்டியிருந்த காந்தியடிகளின் படத்திலேயே லயித்தன. நீதிபதியிடம் மோன மொழியில் வழக்குரைக்கும் வக்கீலாக மாறினார் கந்தசாமி.

வழக்கை எடுத்து உரைத்தாகிவிட்டது. இதற்கு முடிவு என்ன? அடுத்தாற்போல் என்ன செய்வது என்று அவருக்குப் புலப்படவில்லை. காந்தியடிகள் இப்போது உயிருடன் இருந்திருந்தால், அவரிடம் இதற்கு ஆலோசனை கேட்டால், அவர் என்ன பதிலளிப்பார் என்று ஊகித்துப் பார்த்தார்.

அப்போது விளக்கு வைக்கும் நேரமாகிவிட்டது. மீனாட்சி மெல்ல அவருக்கருகில் வந்து, ''கொஞ்சம் எழுந்து வந்து சன்னல் வழியே எதிர்வீட்டைப் பாருங்கள்'' என்று சுட்டிக் காட்டினாள்.

செல்லையாவின் கடைத் தள்ளு வண்டி எதிர் வீட்டுக் கதவு வழியே புகுந்தது. இரண்டு மூட்டைகள் அதிலிருந்து இறக்கப்பட்டன.

''எதிர்வீட்டு லட்சுமியே இதைச் சொன்னாள்'' என்று தொடங்கினாள் மீனாட்சி; ''ரேஷன் விலையைவிடப் படிக்கு எட்டணா அதிகம் கொடுத்தால், ரெண்டு மூட்டை நெல்லூர் அரிசி வெளியில் வாங்கிக் கொடுக்கிறதாச் சொன்னானாம் செல்லையா; இதோ அரிசி வந்து இறங்குது பாருங்க!''

''ரேஷன் அரிசியென்று நமக்கு விற்றாரே, அதிலும் அவருக்குப் படிக்கு எட்டணா லாபம்: ரேஷன் அரிசியை இப்படி வெளியிலே விற்பதனாலும் அவருக்கு எட்டணா லாபம். இந்த லாபம் இருக்கட்டும். இதற்காக நூறு இருநூறு குடும்பங்களிலே உள்ள, ஆயிரக் கணக்கானவர்கள் வயிற்றிலே மண்ணைப் போட்டுத்தான் இந்தப் பணம் சம்பாதிக்க வேணுமா?''

''இந்தத் தர்மோபதேசம் யாருக்குன்னு கேக்கறேன்?'' என்று சீறினாள் மீனாட்சி; ''அவன் பண்றது மாத்திரம் அதர்மமில்லே. நீங்களும் உங்க சபையிலே உள்ள எல்லாரும் பண்றது அதைவிடப் பொல்லாத அதர்மம்! அதர்மத்துக்குக் குனிஞ்சு கொடுத்து, குனிஞ்சு கொடுத்து, வீட்டிலே உள்ள குழந்தை குட்டிகளுக்குத் துரோகம் செய்யறது என்ன தர்மம்னு கேக்கறேன்?''

மீனாட்சியின் சொற்கள் அவரை உலுக்கி எடுத்துவிட்டன. தர்மத்தைப்பற்றித் தெருத் தெருவாய் வாய் கிழியப் பேசும் மனிதர்கள் அதர்மத்துக்கு எந்த அளவுக்கு அடிமைப்பட்டுப் போனார்கள் என்பது அன்றுதான் அவருக்குத் தெரிந்தது. அதே சமயம் மின்னலைப் போல் ஓர் எண்ணமும் அவர் உள்ளத்தில் பளிச்சிட்டது.

அந்த எண்ணத்தைச் செயற்படுத்தி, சத்தியத்தை ஒரு சிறு அளவில் சோதனை செய்து பார்க்கத் துணிந்துவிட்டார். அதற்கேற்றாற்போல் சத்திய சோதனைப் போராட்டங்களையே தமது வாழ்வின் நோக்கமாகக் கொண்ட காந்தியடிகளின் பிறந்த நாளும் வந்தது.

காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடத் தர்ம ரட்சக சபையில் அந்தத் தெருவே கூடியது. செயலாளர் கந்தசாமி எழுந்து பேசலானார். வெறும் பேச்சல்ல அது. சத்தியம் அவர் உள்ளத்திலிருந்து குமுறிக்கொண்டு சொற்களாக வெளிப்பட்டது.

''காந்தியடிகளுக்கு விழா நடத்துவதாய்ச் சொல்லி, அவர் புகழ்பாடிவிட்டு, அவரையும் ஓர் அவதாரமாக்கி நம்மையும் அவரையும் ஏமாற்றுவதற்கு நாம் இங்கே கூடவில்லை. அவர் செயல்வீரர். தர்மத்தை எப்படி வளர்ப்பது என்பதற்கு அவர் ஒரு வழிகாட்டி. அதர்மத்தை முழுமூச்சோடு எதிர்ப்பதும், அத்துடன் போராடுவதும், அதை முறியடிப்பதுமே தர்மம் என்பதை அவர் நமக்குக் காட்டியிருக்கிறார். அவருடைய மூச்சுக் காற்று ஒவ்வொன்றும், நாடி நரம்பு ஒவ்வொன்றும் சத்தியத்தின் துணைகொண்டு தீமையோடு போராடியிருக்கிறது. அவருடைய விழாவை நாம் ஒரு சிறிய சத்திய சோதனை மூலம், போராட்டத்தின் மூலம், கொண்டாட வேண்டும்.''

நெல்லூர் அரிசியின் கதையை விரிவாக எடுத்துரைத்தார் அவர். சான்றுகளோடு நடப்பை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டினார். காட்டிவிட்டு, ''இதற்குப் பரிகாரமாகச் செல்லையாவின் கடையில் நாம் ஒரு வாரமாவது அரிசி வாங்குவதை நிறுத்த வேண்டும்'' என்று கூறி முடித்தார்.

''அந்த ஒரு வாரத்துக்கு வீட்டுக்கு அரிசி? நாம் பட்டினி கிடக்க முடியுமா?'' என்று கேட்டார் ஒருவர்.

''வேண்டாம்! நம்முடைய சபை அங்கத்தினர்களே செல்லையாவிடம் அதிகப் பணம் கொடுத்து, நம் எல்லோருக்கும் சேர வேண்டிய அரிசியை மொத்தமாக வாங்கியிருக்கிறார்கள். ரேஷன் விலைக்கு அதை நமக்கு அவர்கள் பகிர்ந்து தருவார்கள். தர்மத்தை நாம் அதிகமாகப் பேசிவிட்டோம்; சிறிதளவாவது இப்போது அதைச் செய்து காட்டுவோம். காந்தியடிகளின் பெயரால் அவர்களிடம் நான் கைநீட்டி அவர்கள் வாங்கிய அதிகப்படி அரிசியைக் கேட்கிறேன்.''

கண்களில் நீர் மல்க, குரல் தழுதழுக்க, தம் கரங்கள் இரண்டையும் ஏந்தினார் கந்தசாமி. பட்டினியால் வாடும் தர்மமெனும் தாய் பிச்சைக்குக் கையேந்துவது போலிருந்தது அந்தக் காட்சி.

''நான் தருகிறேன்!'' என்று முன் வந்தார், இரண்டு மூட்டைகள் வாங்கிய எதிர்வீட்டு அன்பர்.

''நான் தருகிறேன்!'' என்றார் வேறொருவர்; அதையே கூறினார் மற்றொருவர்.

கூட்டத்தினரின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் கசிந்தது. மனிதர்களிடம் இவ்வளவு உயர்ந்த பண்பு மறைந்து கிடக்கிறதா என்று ஒவ்வொருவருமே வியந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் மீண்டும் காந்தியடிகள் உயிருடன் வந்துவிட்டது போல் தோன்றியது கந்தசாமிக்கு.

''இது நம்முடைய சிறு போராட்டந்தான்; ஆனால் முதல் போராட்டம்!'' என்றார் அவர்.

மீனாட்சி கூட்டத்துக்குள் இருந்துகொண்டே தன்னை அறியாமல் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டாள். ஆண்மை மிக்க ஒரு வீரருக்கு வாழ்க்கைப்பட்ட பெருமிதம் அவள் உள்ளத்தில் அலைமோதியது. ★

எதற்கும் அவர் பெயர்!

சோழ நாட்டில் திங்களூரில் வாழ்ந்த அப்பூதியடிகள் என்ற அந்தணர் ஒரு தண்ணீர்ப் பந்தல் வைத்து அதற்குத் திருநாவுக்கரசர் பெயரை வைத்தார். நாவுக்கரசரை அவர் பார்க்காவிட்டாலும் பக்தியினுல் குழந்தைகளுக்கும், கட்டிடங்களுக்கும் அப்பெயரையே வைத்தார். ஒரு நாள் நாவுக்கரசர் அவ்வழியே வந்தவர் தண்ணீர்ப் பந்தர் தம் பெயரில் இருப்பதைக் கண்டார்.

யார் வைத்த பந்தர் என்று தெரிந்துகொண்டு அப்பூதியார் வீடு சென்ருர். ''நீங்கள் வைத்த தண்ணீர்ப் பந்தர்க்கு உங்கள் பேர் வைக்காமல் வேருரு பேர்ஏன் வைத்தீர்கள்?'' என்று கேட்டார். ''உலகம் போற்ற நிற்கும் ஒருவர் பேரா வேருெரு பேர்? நீங்கள் யார்?'' என்று அப்பூதியார் கேட்க, நாவுக்கரசர், ''இறைவன் நோய் தந்து ஆட்கொண்ட சிறியேன்யான்'' என்ருர்.

அப்பூதியடிகளாருக்கு உண்டான இன்பத்துக்கு எல்லையில்லை, கீழ்விழுந்து பணிந்தார்; விழுந்தார்; ஆடினார். தம் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து வந்து வணங்கச்செய்து உள்ளே அழைத்துச் சென்றார். அவர் திருவடியை நீரால் விளக்கி அந்நீரைத் தெளித்துக் கொண்டார்; உட்கொண்டார். அவருக்கு அமுது செய்விக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார்.

தம முதற் பிள்ளையாகிய மூத்த திருநாவுக்கரசைத் தோட்டத்திற்போய் வாழையிலை அரிந்து வர அனுப்பினார்: நமக்கு இந்தப் பேறு கிடைத்ததே என்று மகிழ்ந்து ஓடிய அவன் வாழைமரத்தில் குருத்தை அரிகிறபோது ஒரு பாம்பு அவனைத் தீண்டிவிட்டது. ஆயினும் அதன் வேகத்தால் மயங்கி விழுவதற்கு முன் கொடுத்துவிட வேண்டுமென்று ஓடிவந்து, அக்குருத்தைத் தாயின் கையில் கொடுத்து வீழ்ந்துவிட்டான்.

அறிகுறிகளால் பாம்பு தீண்டியதை அறிந்தும் பெற்றோர் சலனம் அடையாமல், பெரியவர் அமுது செய்ய வேண்டுமென்றெண்ணி அவனை மூடி முற்றத்தில் ஓரிடத்தில் வைத்து, இது யார்க்கும் தெரியாமல் அமுது செய்விப்போம் என்று எண்ணி நாவுக்கரசரிடம் வந்தார்கள்.
அவரைப் பணிந்து அடியிணை விளக்கி ஆசனத்தில் இருத்தினார்கள். திருநாவுக்கரசர் திருநீறணிந்து அப்பூதியாருக்கும் மற்றவர்களுக்கும் அளித்தார். ''மூத்த பையன் எங்கே? என்று அவர் கேட்க, ''இப்போது அவன் இங்கு உதவான்'' என்றார்கள்.

அது கேட்ட நாவுக்கரசர் உள்ளத்தில் தடுமாற்றம் உண்டாயிற்று. ''உண்மையைச் சொல்லுங்கள்'' என, அவர்கள் அஞ்சி, நடந்ததைச் சொன்னார்கள். அவர் பையனைக் கிடத்தியிருந்த இடம் சென்று, இறைவனைத் திருப்பதிகம் பாடித் துதித்தார். சிறுவன் துயிலெழுந்தவனைப்போல உயிர் பெற்றெழுந்தான். அவனுக்கும் திருநீறளித்தார்.
பிறகு திருநாவுக்கரசர் அமுது செய்தார். அப்பூதியாரும் குழந்தைகளும் அவருடன் உண்டார்கள். அப்பூதியாரின் பக்தியை வியந்து திருநாவுக்கரசர் பிறகு தாம் பாடிய பதிகத்தில் அவரைச் சிறப்பித்தார்.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

FDS SR 749



திி பாங்க் ஆப் பரோடா லிட்.
(ஸ்தாபிதம்: 1908) பதிவுபெற்ற அலுவலகம்: மாண்ட்வி, பரோடா.
இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் 260க்கு மேற்பட்ட கிளைகள் CMBB 28 TM

இன்னும் விடிவதற்கு ஓரிரண்டு நாழிகைகளே இருந்தன. கிருஷ்ண பட்ச அஷ்டமி சந்திரன் மேற்கு வானத்தில் பாதி தேய்ந்த வடிவுடன் தோன்றினன். மங்கலான அந்த நிலவொளி இலங்கையின் சீரும் சிறப்புமே குறைவெய்தியதைக் குறிப்பிப்பது போல இருட்டுடன் கலந்திருந்தது. ஆனால், அவ்வித நிலவும், சுகமாக வீசும் காற்றும் சேர்ந்து அவ் வேளையில் துயில் புரிபவர்களுக்கு இன்பமூட்டுவனவாக இருந்தன.

இரண்டே பேர்கள் அவ் வேளையில் சரியான தூக்கம் இல்லாமல் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்திருந்தார்கள். இலங்கேசன் சீதையை அசோகவனச் சிறையில் வைத்துவிட்டு அவள் ஞாபகமாகவே எப்போதும் அமைதியற்று அவளை வசியம் செய்யும் வழிகளையெல்லாம் ஆராய்ந்து ஆராய்ந்து மனச் சஞ்சலத்துடன் படுக்கையில் கிடந்தான். அதே வேளையில் அவனுடைய தம்பி விபீஷணனும் மனத்தில் சாந்தியில்லாமல் ஆழ்ந்த நித்திரை பெருமல் தன் மஞ்சத்தில் படுத்திருந்தான்.

விபீஷணனுடைய மனம் அலைபாய்ந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தசக்கிரீவன், ராமன் மனைவியைத் தூக்கி வந்து சிறைவைத்து அவளுடைய காதலில் சிக்கித் தவிக்கும் செய்தி அரண்மனை யெங்கும் ஒரே பேச்சாகப் பரவியிருந்தது. அசைக்க இயலாத சீதையின் மனவுறுதியைப் பற்றிய செய்திகளும் அன்றன்று அவன் செவிகளில் விழுந்தன. அவனுடைய வாழ்க்கைத் துணைவி ஸரமா அசோகவனத்தில் ராட்சசிகளினிடையே தானும் அடிக்கடி இருந்துவிட்டுச் சீதையிடம் விளங்கிய கற்பின் உயர்வைக் கண்டு மனம் களித்ததல்லாமல், தன் கணவனிடம் அவன் தமையன் செய்யும் அடாத செயலைப்பற்றித் தினமும் குறைகூருத சமயம் இல்லை. உலகம் முழுவதையும் நடுங்கச் செய்த ராவணன் ஒரு பெண்ணின் எதிரே சிறிதும் தைரியமின்றித் திண்டாடும் கோலத்தை ஸரமா வருணிக்கையில், விபீஷணனுடைய ஆண்மைக்கே பழுது உண்டானதுபோன்ற உணர்ச்சியினுல் உள்ளம் பதறியது. எவ்வளவோ சிறப்பாகப் பிறர் கண்டு வியக்கும்படி அரசாட்சி செய்து வந்த ராவணன் எதனுல் இவ்வளவு தூரம் நகைக்கிடமான காரியத்தில் முனைந்தான் என்று எண்ணி விபீஷணனுடைய நெஞ்சம் கவலைக்கு உள்ளாகியது. ஏதாவது இதற்கு வழி செய்யத்தான் வேண்டும்; நல்ல உபதேசம் செய்பவர்களுக்கு இலங்கையில் பஞ்சம் உண்டாகிவிட்டதே என்ற ஏக்கம் மனத்தைக் கலக்கியது. அதனுல் ஆழ்ந்த நித்திரை செய்ய முடியவில்லை. ஒவ்வொரு சமயம் துணிந்து தன் அண்ணனிடம் அவனது செயல் மிகவும் தூற்றத் தக்கதென உலகம் கருதும் என்பதை எடுத்துக்காட்டவும் முயன்றிருக்கிறுன். ஆனுல் ராவணன் எள்ளளவும் தம்பியின் இதயப் போராட்டத்தைச் சட்டை செய்யாமல் தன் சாமர்த்தியம் நிச்சயம் சீதையினிடம் தோல்வி அடையாது என்று மனப்பால் குடித்துக்கொண் டிருந்தான்.

இதனிடையில் சுக்கிரீவன் நடத்தி வந்த வானர சேனையுடன் ராமன் தென் சமுத்திரக் கரையில் படைவீடு இறங்கியிருக்கும் செய்தி ஒற்றர்களின் மூலம் தெரிய வந்திருந்தது. இலங்கையின் அகழியாகிய சமுத்திரத்தைத் தாண்டுவது அவ்வளவு எளிதன்று என்ற எண்ணத்தால் இலங்கேசன் இன்னும் பரபரப்பு எதுவும் அடையவில்லை என்பதை விபீஷணன் நன்கு அறிவான். சங்கடமான நிலை வரவர அதிகரிப்பதை அறிந்து, எப்படியாயினும் பிறன் மனைவி என்ற ஒரே முக்கியமான காரணத்தினுல் சீதையை அவள் கணவனிடம் திரும்பச் சேர்த்துவிடச் செய்வதே மேலான யோசனை என்று விபீஷணன் முடிவு செய்தான். இத்தகைய எண்ணங்களே அவன் கண் அயர்வதைக் கலைத்தன.

திடீரென வெளியே, அரண்மனையை விட்டு அரசன் புறப்படும்போது முழங்கும் வாத்தியங்களின் ஓசை கேட்டது. கூடவே தீவட்டிகளின் பற்பல விதமான ஒளி தெரிந்தது. அந்த வேளையில் அதிசயமாக அது தோன்றும் காரணத்தைத் தெரிந்துகொள்ளக் கண்ணை நன்ருய்த் திறந்துகொண்டு தன் மனைவி ஸரமாவை எழுப்பினுன்.

நிம்மதியாய் ஸரமா தூங்குவதைப் பார்த்தான். வெளியேயுள்ள நிலவின் கிரணமே உள்ளே பாய்ந்து தன் படுக்கையில் படர்ந்ததோ என்று பிரமிக்க வைக்கும் அவளது அழகைப் பருகியவனுய் நெருங்கி அவளைத் தீண்டினுன். கைவிரல்களால் அவள் அளகத்தைக் கோதிவிட்டான்.

''கண்மணி, ஏன் இவ்வளவு தூக்கம்? உன் காதில் டமாரங்கள், பேரிகைகள் இவற்றின் ஓசை கேட்கவில்லையா? மகாராஜா சயனத்தை விட்டு அரண்மனைக்குப் புறம்பே எங்கே இவ்வளவு சீக்கிரம் புறப்படுகிருர்? ஊகிக்க முடியுமா உன்னுல்?'' என்று கவலை தோய்ந்த மொழிகளால் வினவினுன்.

ஸரமா தன் அடர்ந்த கேச பாரத்தை இடக் கரத்தால் வாரிச் சுருட்டிக்கொண்டே, அடுத்திருந்த உப்பரிகையில் போய் நின்று பார்த்தாள். ஒரு கணம் அவ்வாறு நின்றிருப்பாள். சட்டென ஏதோ முடிவு செய்துகொண்டவளாய்த் திரும்பி, ''சுவாமி, இந்தத் திருவுலா அசோகவனத்தை நோக்கியே செல்கிறது. எல்லாம் உங்கள் அண்ணுவின் ஆர்ப்பாட்டந்தான் என்பதில் சந்தேகம் இல்லை. இப்பொழுது உங்கள் அண்ணுவுக்கு வேறு எதைப்பற்றிக் கவலை இருக்கப் போகிறது? அந்த மாதரசி சீதையின்மேல் உள்ள மோகம் காலம், அகாலம் என்ற நிர்ணயமேயின்றி அவரைத் தூண்டியிருக்கும்.''
இதைச் சொல்லும்பொழுது அவள் வதனத்தில் ஆயிரம் சுளிப்புகள் ஒன்ருேடொன்று போட்டியிட்டன.

விபீஷணன் மங்கிய அந்த நிலவொளியில் அவளை உற்றுப் பார்த்தான். மெதுவாய்க் கைவிரல்களால் அவளைத் தொடவும் முனைந்தான். ஆனுல் தீக்குழம்பில் கையிட்டது போல அவன் விரல்கள் ஏனே பின் வாங்கின.

''என்ன ஸரமா, உன் உடம்பெல்லாம் கொதிக்கிறதே! உடம்புக்கு ஒன்றும் இல்லையே? விடிவிளக்கை நான் பெரிதாக்கட்டுமா?'' என்று கனிவும் காதலும் கசியும் சொற்களை இயம்பினுன்.

''ஆம், சுவாமி, என் உடம்பு மட்டுமா கொதிக்கிறது? என் உள்ளமும் அல்லவா இந்தத் தீச்செயலை நினைந்து அனலில் இட்ட புழுப்போலத் துடிக்கிறது? உங்கள் அண்ணுவின் கெட்ட காரியங்களுக்கு முடிவு வராதா என்றே என் நெஞ்சு சதா தவித்து வாடுகிறது. ஆனுல் ஒருகால் சீதையை அவர் விரும்புவதே அவருடைய தேசு வதமாவதற்கு அறிகுறியாகலாம் என்று ஒரு சிறு எண்ணமும் கூடவே எழுகிறது. உங்கள் இலங்கையும் உங்கள் குலமும் அடியோடு அழிவதற்கு அல்லவா உங்கள் மூத்த அண்ணு முயன்று வருகிருர், தெரியவில்லையா?''

ஸரமாவின் மெல்லிய உள்ளம் அடைந்திருந்த சீரழிவு அவளுடைய கடும் பேச்சால் நன்கு விளங்கியது. என்றுமே இனிமையாய்ப் பேசும் பழக்கமுள்ளவளிடம் தோன்றிய வேறுபாட்டைச் சகியாத விபீஷணன் அச்சமடைந்த குரலில் கூறலானுன்.

''உஸ்! என்ன வார்த்தை பேசுகிருய்? பொழுது புலரும் இவ்வேளையில் இம்மாதிரி சொல்லவும் உன் நாக்குத் துணிகிறதே! என் அண்ணு சீதையை அடைவதற்குரிய சூழ்ச்சிகளைச் செய்வதற்கன்றி, அவளைப் பயமுறுத்தும் வெறியில்தான் புறப்பட்டிருப்பார், கரனைக் கொன்று,

சூர்ப்பணகையை விகாரப்படுத்திய ராமனைப் பழிக்குப் பழி வாங்க எண்ணிய அவர் எதைத்தான் துணிந்து செய்ய மாட்டார்? ஒன்று நிச்சயம்; எனக்கே தெரியும். தேவலோக மாதராயினும் சரி, இந்திராணியேயாயினும் சரி, அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாதிருக்க மாட்டார்கள். சீதை மானிடப் பெண்; அவளை அரை நொடியில் வழிக்குக் கொண்டுவருவது அவரால் ஆகாத காரியமல்ல. ஒருகால் சீதையைப் பயமுறுத்தி அவளை வைத்துக்கொண்டே ராமனைச் சண்டையில் தோல்வியுறச் செய்யும் யோசனை பலமாக இருக்கலாம் அல்லவா?''

''ஆகா, இது தெரியாதா உங்களுக்கு? தேவமாது ஒருத்தியை அவள் விருப்பமின்றித் தீண்டியதற்குப் பயன்தான், தம் விருப்பத்துக்கு மசியாத எந்த மங்கையையும் நெருங்குவதற்கு இனி அவரால் இயலாதபடி அவள் சாபமிட்டு விட்டாளே!'' ஸரமாவின் கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. விபீஷணன் அதைக் கவனியாமல் இல்லை.

அவள் தேகம் நடுங்கியதையும், அவளுடைய கூந்தல் தோள்களில் சிதறியபடி அலையலையாய்ச் சுருண்டு விழுந்து கிடந்ததையும் கண்கொட்டாமல் உற்று நோக்கிக்கொண்டிருந்தான்.

''உன் கூந்தல் அழகைக் கண்டால் இலங்கையைச் சுற்றியுள்ள ஆழ்கடல்களான மகோததியும் ரத்தினாகரமும் தங்கள் அலைகளை ஒடுக்கிக்கொண்டு படிந்துவிடும். பரமன் எத்தகைய அழகை உன் கூந்தலில் இணைத்திருக்கிறான்! உன்னை ஒப்புயர்வற்றவளாய்ச் செய்ய வேறு ஏதும் வேண்டாம் என்று கடவுள் இதைப் படைத்திருப்பானோ?'' இமைகளைத் தாழ்த்தாமல் இன்னும் ஆர்வத்துடன் அவளையே கூர்ந்து நோக்கினான் விபீஷணன்.

ஸரமாவின் எண்ணங்கள் அப்போது பின்னே ஊர்ந்தன. தன் அழகையும் தனது அளகபாரத்தையும் கணவன் வருணித்ததை அவள் உள்ளம் ரசித்தபோதிலும், பழைய சம்பவங்களின் ஞாபகம் அலைமேல் அலையாக மோதிக்கொண்டு அவள் நினைவில் எழவே, அவள் பேச்சில் வெறுப்பின் சாயல் சிறிது படிந்தது. ''ஆம், பிரபு, என் கூந்தலை உங்கள் குலம் அழகு பார்ப்பது விபரீதமானது என்றே என் மனம் எண்ணிக் கூசுகிறது. உங்கள் முத்தண்ணாவைப்பற்றி அல்லவா சற்றுமுன் பெருமிதத்துடன் பேசினீர்கள்? தேவலோகமே அவர் பாதங்களில் விழுந்து அடிபணியும் என்றும் சொன்னீர்கள். இப்போது ஞாபகம் வருகிறது: நடந்த சம்பவமொன்றை உங்களிடம் இதுகாறும் நான் கூறுதிருந்தேன். அதற்குக் காரணம் நீங்களே. ஏனெனில் உங்கள் அண்ணாவின் சக்தியிலும் நேர்மை நெறியிலும் உங்கள் எல்லாருக்கும் அசைக்க முடியாத தனிப் பெருமை ஒன்று இருப்பதை நான் கவனித்திருக்கிறேன்.''

தான் பேசியதையும் இனி நினைவு கூர வேண்டியவற்றையும் உருவாக்கும் பொருட்டு அவள் சிறிது நிறுத்தினாள். கொஞ்சங் கொஞ்சமாய் அருணோதயத்தின் குறிகள் வெளியே வானத்தில் காணப்பட்டன. அவள் குரலிலும் தெளிவின் விளக்கம் பாய்ந்து வந்தது.

மறுபடியும் அழுத்தமாய்த் தன் அடங்காத குழலைச் சுருட்டி ஒரு கொண்டையாய் உயரச் செருகிக் கொண்டே, கணவனை நிமிர்ந்து பார்த்தாள். தான் மேலும் சொல்லப் போவதில் தனக்குள்ள இழிவுக் குறிப்பைப் புலப்படுத்தும் ஒரு சிறு புன்னகையையும் வருவித்துக்கொண்டு பேசினாள்.

''நீங்கள் முன்பு என்னை மணக்க எண்ணியதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள், சுவாமி. மானஸஸரஸின் அருகில் பிறந்தவள் நான் என்று, என்னையும் என் கந்தர்வ குலத்தின் உயர்வையும் கருதி, உங்கள் பெற்றோர்கள் என்னை உங்கள் கைப்பிடிக்கத் தேர்ந்தெடுத்தது ஞாபகம் இருக்கலாம். உங்களை நான் மணந்துகொள்ளச் சட்டென்று இசையவில்லை. ராட்சச குலத்தில் உதித்தவரையா மணப்பது என்றே தயங்கினேன். ஆனால் நெறி தவறாத உங்கள் நடத்தையையும், நம்பிக்கையான வாழ்க்கையையும் அறிந்தவர்கள் சொன்னதைக் கேட்டபின் ஒப்புக்கொண்டு மாலையிட்டேன். பிற்பாடு நறுமணம் பொருந்திய உங்கள் சீலத்தையும் சிறப்பையும் கண்டு, சேற்றில் பூத்த செந்தாமரை நீங்கள் என்று மனம் களித்தேன். உங்களுடன் இருப்பதே என் வாழ்க்கைப் பயன் என்பதைச் சதா நினைப்பவளாகையால், உங்கள் சகோதரரின் நடத்தையால் உங்களுக்கும் அபகீர்த்தி உண்டாவதைச் சகிக்க இயலாமல் திண்டாடுகிறேன். உங்கள் பிரம்மகுல தேஜஸை மழுங்கச் செய்த இந்தத் தீய செயல் தனி ஒருவரால் ஏற்பட்ட

தானாலும், குலம் முழுவதற்குமே கேடு செய்வதை நீங்கள் அறியாமல் இருக்க முடியுமா? சுவாமி, உடனே சீதையை வணங்கி, அவளிடம் மன்னிப்பு வேண்டி, அவள் கணவனிடம் அவளைச் சேர்க்க வழி செய்யுங்கள்.''

இதை அவள் கூறியபொழுது அவள் நயனங்களில் நீர் நிரம்பிய காட்சியைக் கண்டு கண்கலங்காதிருக்க விபீஷணனால் இயலவில்லை. மேலே என்ன கூறுவாளோ என்ற அச்சமும் கவலையும் கலந்து, அவன் தன் பார்வையைக் கீழே தாழ்த்திக்கொண்டான்.

ஸரமா அவனைப் பார்க்கவில்லை. எங்கோ தூரத்தில் உள்ள ஒன்றைக் கூர்ந்து கவனிப்பதுபோல் நோக்கியவள், பின்னும் பகர்வாள்:

''சுவாமி, இன்றுபோல் இருக்கிறது என் மனத்தைக் கலக்கும் ஒரு சம்பவம். மகாராணி மண்டோதரி என்னிடம் பேராதரவு காட்டாமல் இருந்திருந்தால் நான் உங்கள் அரண்மனையில் அடி வைத்த மறுகணமே என் நடையைப் பின்னுக்கிச் செலுத்தியிருப்பேன். ஆனால் - ஆனால், அவ்வாறு நேராததற்குப் பல காரணங்கள் ஏற்பட்டன. முதலில் உங்கள் ஒழுக்கமும், அறத்தைப் பேணும் ஆற்றலும், விநயமும், விரிந்த இதயமும் என் எண்ணத்தை மாற்றிக் கொள்ளத் தூண்டின. இனி நான் கூறப்போவதை மிக்க கவனத்துடன் கேளுங்கள்.'' சிறிது தடைப்பட்டது அவள் பேச்சு; குரலில் கரகரப்பு ஏதோ ஏற்பட்டதைக் கனைப்பினால் சரிப்படுத்திக்கொண்டு மேலும் தொடர்ந்தாள்:

''என் கூந்தலை வருணித்த பிரபு நீங்கள். அதை வருடவோ வருணிக்கவோ உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் வேறு எந்த ஆணுக்கும் அதைத் தொடவோ தடவவோ உரிமையில்லை அல்லவா? இதே கூந்தல்தான் என்னை இழிவாக்கும் நிலையில் சிக்க வைத்தது. உங்கள் தாய் என் தலைமயிரைத் தம் வலக் கரத்தால் தடவித் தடவி உச்சி மோந்ததை என்னால் மறக்கவே முடியாது. ஆனால் அதே சமயம் வேறு இரண்டு கண்கள் அதைப் பார்த்த விதம் இருக்கிறதே, ஐயோ! அதை நினைத்தாலும் என் உள்ளம் கூசுகிறது. உங்கள் முத்தண்ணா அப்பொழுது அங்கே திடீரென்று வந்தவர் என் கூந்தலைப் பார்த்த பார்வையையும், உங்கள் தாய் திரும்பியதுமே வெடுக்கென்று அதன் நுனியைப் பிடித்து இழுத்ததையும், உதடுகளின் அருகே கொண்டு போனதையும் நீங்கள் அறிந்திருந்தால், இன்று என்னை இலங்கையில் வைத்திருக்கமாட்டீர்கள். கிரீச்சென்று என் தொண்டையிலிருந்து வெளியாகிய சப்தத்தைக் கேட்ட உங்கள் தாய், 'என்ன, என்ன?' என்று கேட்டுக்கொண்டே என்னை அணுகி அணைத்தார்கள். ஒரு மாதிரி சமாளித்துக்கொண்டு, 'ஒன்றும் இல்லை அம்மணி, ஏதோ பயந்துவிட்டேன்' என்று கூறி அவ்விடம் விட்டு நகர்ந்தேன்.''

விம்மி எழுந்தது அவள் மார்பகம். உடலெல்லாம் வேர்த்ததை விபீஷணன் கவனிக்காமல் இல்லை. மேலும் தொடர்ந்தாள் அவள்:



''பிறகு, என்னை அரண்மனையிலுள்ள ஒரு சேடி மூலம் ஆசை காட்டினார் உங்கள் முத்தண்ணா. என்னை அவர் பட்டமகிஷியாக்குவது நிச்சயமாம், நான் அவரை வரித்தால். அத்துடன், தம்பியின் மனைவி, தமையன் மனைவி என்ற வித்தியாசங்களெல்லாம் ராட்சச ஜாதிக்கு வரம்பு கட்டுவதில்லையாம். விபரீதமான செய்தியைத்தான் அவள் சொல்ல நான் கேட்டேன். வாலியை நேசித்தவருக்கு வாலியைவிடவும் கீழ்ப்பட்ட மனசுதானே இருக்கும் அல்லவா? பிரபு, அவரது உள்ளம் பிறர் மனைவியை நாடுவது இன்று மட்டும் அல்ல. இதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இதைக் கூறினேன். உங்கள் முகம் வேதனைப்படுவதைக் காண என் மனசு தாளவில்லை; இதோ என் பேச்சை நிறுத்திக்கொள்கிறேன்.'' ஸரமா திடீரென்று பேசுவதை நிறுத்தினாள். ஆனால் விபீஷணனுக்கு அமைதி ஏற்படவில்லை. கவலையுடன் அவன் வினவினான்: ''நீ எப்படி இவ்வளவு காலம் எங்கள் அண்ணாவினிடம் அகப்படாமல் தைரியமாய்க் காலங் கடத்தினாய்? அடிக்கடி அசோகவனம் போகிறாயே! சீதையை விட்டுவிட்டு உன்னிடம் அவர் திரும்பிவிடாமல் காப்பாற்றிக் கொள்ள என்ன தந்திரம் செய்தாய்? என்னைத் திடுக்கிடச் செய்கிறதே இந்தச் செய்தி!'' விபீஷணன் தனக்கு ஏற்பட்ட படபடப்பை அடக்கத் தெரியாமல் தவித்தான்.

''சீதையை உங்கள் அண்ணா சிறிதும் நெருங்க முடியாது. எதிரில் நிற்பவரை ஏறிட்டுப் பார்க்கக்கூட அவள் நினைப்பதில்லை. இரு விழிகளையும் சதா மூடிக்கொண்டு தன் கணவனையே தியானம் செய்கிறாள். அவளிடம் எந்த விதமான சூழ்ச்சியும் பலிக்காது. என்னைப் பற்றிய கவலையும் உங்களுக்கு வேண்டாம், அரசே! என் பிறப்பைப்பற்றி அறியீர்கள் போலும்! குழந்தை, நான் பிறந்ததும், மானஸ ஸரஸ் பொங்கி அலைகளுடன் கொந்தளித்ததாம். அதைக் கண்ட என் தாய், 'நில்; உன் வெள்ளமெல்லாம் ஒடுங்கட்டும்' என்று ஆணையிட்டதும் என் சமீபம் வர அலைகள் பயந்தனவாம். அவளிடம் ஏற்பட்ட மரியாதையால் மானஸ ஸரஸ் என் கூந்தல் அலை அலையாய் வளரட்டும் என்ற வரமும் தந்தது போலும்! அந்தத் தாய்க்குப் பிறந்த நானா கோழையாகிவிடுவேன்? ஒருகாலும் உங்கள்

அண்ணா என்னை அணுக விடேன். இன்று சீதையைக் கண்டு என் இதயம் அடையும் திருப்தியும் தைரியமும் சாமானியம் அல்ல. தெய்வமே சீதையாய் உருக்கொண்டு வந்து துன்பப்பட்டுத் தவித்து மானிட உலகுக்கு வழி காட்டுகிறதோ என்று எண்ணி எண்ணி விம்மிதமடைகிறேன். என்ன தவம் கிடக்கிறாள் அவள்! அவள் தவம் வீணாகாது; நிச்சயம். இனிப் பேசி என்ன பிரயோசனம்? உடனே சென்று உங்கள் அண்ணாவிடம் முறையிடுங்கள். சீதையை அவள் நாதனிடம் சேர்க்கச் சொல்லுங்கள். இந்த ஒரு நற்காரியத்தைச் செய்வதனால் பல தலைமுறைகள் உங்கள் வம்சம் வாழும் என்பது திண்ணம். இல்லையேல் நிச்சயம் நீங்களாவது ராமனை இங்கு வரவழைத்து ஒரு முடிவு காண ஏற்பாடு செய்தாகவேண்டும். யோசனை செய்வதற்கே இனி அவகாசம் இல்லை. வீணாகக் காலத்தைக் கடத்த வேண்டாம்.'' ஸரமாவின் எச்சரிக்கையை விபீஷணன் உணர்ந்தான்.

''தேவி, வழக்கத்துக்கு விரோதமாய் உன் நா ஏதேதோ சொல்லுகிறதே! என் மனசு அல்லற்படுவது போதாதா? நீயும் திடுக்கிடும் செய்திகளைச் சொல்லி என்னைக் கலக்கிவிட்டாயே! இனி நான் செய்வதென்ன என்பதை எண்ணியே என் நேரமெல்லாம் கழியும்.'' விபீஷணனிடம் சஞ்சலம் மூண்டதை ஸரமா ரசிக்கவில்லை.

''செய்வது என்னவா? நீங்கள் உடனே இலங்கையை விட்டுப் போக வேண்டும்; அல்லது நானாவது ராமனை நெருங்கி இங்குள்ள பலவீனங்களை எடுத்துக் காட்டி அவன் படை எடுப்பதற்கு உதவி செய்ய வேண்டும். ஒருபோதும் ராஜசபையில் உள்ளவர்களுடன் சேர்ந்துகொண்டு உங்கள் முத்தண்ணாவின் குரலுக்கு ஒத்துப் பாட இடங்கொடேன்.''

இவர்கள் இம்மாதிரி பேசிக்கொண்டிருக்கையில் ஹரிஜடை என்ற பணிப் பெண், விபீஷணன் சயனத்தை விட்டு எழுந்திருக்காததைக் கவனியாமல், ''அம்மணி, இன்று இருட்டுக் கழிவதன் முன் நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியாது. மகாராஜா ராவணேசுவரர் முன்பு ஒருதரம் சீதையைத் தம் விருப்பத்துக்கு இணங்க வைக்க எத்தனை வசியங்கள் செய்ய இயலுமோ அத்தனையையும் செய்து பார்க்க முயன்றது ஞாபகமிருக்கலாம். முக்கியமாக இன்று அவர் செய்த சூழ்ச்சி: 'சீதே, நீ இறந்துவிட்டதாக ஒரு செய்தியை ராமனுக்கு அனுப்பியதில் அவன் அதை நம்பிச் சமுத்திரக் கரையைப் படைகளுடன் அடைந்தவன் அயோத்திக்கே திரும்பிவிட்டான்' என்று சொல்லி, 'இனி உனக்கு வேறு கதி இல்லை; ஒன்று, நீ என்னை வரிக்க வேண்டும்; அல்லது இறக்கத் தயாராக வேண்டும். இறப்பதும் உன் விருப்பப்படி அமையாது. இங்குள்ளவர்கள் உன் சதையைத் துண்டம் துண்டமாக வெட்டிச் சித்திரவதை செய்துதான் உன்னைக் கொல்லுவார்கள்' என்றார். சீதை அநுமன் தூது வந்து செய்தி

கொண்டு போனதனால் அடைந்திருந்த தைரியத்தையும் திருப்தியையும் இழந்து 'ஓ'வென்று கதறிவிட்டாள். அவள் அழ அழ மகாராஜாவுக்கு முகத்தில் திருப்திக் குறிகள் அதிகமாயின. எங்களுக்கெல்லாம் அவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்று தோன்றியது. பாவம்! உங்களை எதிர்பார்த்துச் சீதை நீங்கள் வரும் வழியையே அழுகையின் இடையே அடிக்கடி கவனித்தாள். அவள் வழக்கம் போல் உங்கள் உதவியை நாடியதை அறிந்ததனால்தான் நான் மற்றவர்கள் கவனியாதிருக்கையில் இங்கு ஓடி வந்தேன்'' என்று பெருமூச்சு வாங்கிக்கொண்டே சொல்லும்போது, முழுவதும் சொல்ல முடியாமல் திணறிப் போய்விட்டாள்.

''பார்த்தீர்களா, பிரபு, உங்கள் சகோதரரின் வீரத்தை? ஒரு பெண்ணைப் பயமுறுத்தும் இத்தகைய சூரன் வேறு எங்கே இருக்க முடியும்? உங்கள் இலங்கையில் இனிப் பெண்கள் அமைதியாய்த் தூங்கக்கூட முடியாது போலிருக்கிறது! உடனே நான் சீதையைப் பார்த்துச் சமாதானம் சொல்லவேண்டும். போகுமுன் உங்களிடம் ஒன்று கூறுவேன்: பயமோ, தாட்சிண்யமோ படாமல் ராஜசபையில் மற்றத் துர்ப்போதனையாளர்களை விலக்கிவிட்டு வெளிப்படையாக வாய் திறந்து உங்கள் குரலை எழுப்பப்போகிறீர்களா? அல்லது என் போன்றவர்களைப்போல் தவிப்பதையே விரதமாய்க் கொள்ளப் போகிறீர்களா? என் வரையில் ஒன்று நிச்சயம் சாதிப்பேன். சீதையைக் காப்பாற்ற என்ன என்ன வழிகள் உண்டோ அவற்றைச் செய்வேன். ராமன் சீக்கிரம் தன்னை வந்து விடுவிக்காவிட்டால் உயிரை மாய்த்துக்கொள்ளவே முனைவாள் அந்தக் கற்பரசி. அதைத் தடுப்பதில் முழுப் பொழுதையும் செலவழிப்பேன். இன்றே புறப்படுங்கள். கவலையே வேண்டாம், என்னைப்பற்றி. என்னை உங்கள் அண்ணாவோ அவரைச் சேர்ந்தவர்களோ துன்புறுத்த முடியாது. என்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கந்தர்வர்கள் சதா இங்கே மறைந்து சுற்றி வருவார்கள். உங்களுக்குமட்டும் பாசம் தடுக்காமல், இலங்கையையும் சுற்றத்தையும் விட்டு ராமனிடம் சரண் புக மனம் இடங்கொடுக்குமானால், அன்றே உங்களுக்குத் தலைகாக்கும் பரமகுருவாய் அப்பெருமான் ஆவான். இவ்வளவும் நீங்கள் நற்கதி அடைவதற்கு உதவியாக ஏற்பட்ட சங்கடங்கள் என்பதை நினைத்தால்தான் வெற்றிக்கு வழி ஏற்படும். செல்லுங்கள் உத்தமரே! இனிக் கணமும் தாமதம் வேண்டாம்.''

அவளுடைய கடைசி வார்த்தைகளில் அடங்கிக் கிடந்த சோகமும் ஆவேசமும் தன்னை வெருட்டியதை விபீஷணன் உணர்ந்தான். படுக்கையை விட்டுக் கிளம்பியவன், தன் கதை ஆயுதத்தைக் கையில் ஏந்தியபடியே, ''இதோ ஸரமா, உன் வார்த்தையைக் கௌரவிக்க முந்துகிறேன். ஒன்று, ராமனை இங்கு அழைத்து வருவேன்; அல்லது, அங்கே புது இலங்கையைச் சிருஷ்டிப்பேன். ஒன்று, ராமனைக் குருவாய்த் தொழ முயலுவேன்; அல்லது, அவன் ஏவலாளாய்ப் பணிசெய்து கிடப்பேன். ஒன்று, சீதையை ராமனுடன் சேர்ப்பேன்; அல்லது, இலங்கையை இனிக் காண்பதில்லை என்று முடிவுகட்டுவேன். ஒரே ஒரு குறைதான் என் உள்ளத்தில்: உன்னைத் தெரிந்துகொள்ளாமல் இதுகாறும் இருந்துவிட்டேன். தெரிந்ததுமே உன்னை விட்டு அகல வேண்டியிருக்கிறதே! இந்த வருத்தத்தைப் பொறுப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது.'' விபீஷணன் களைப்பினால் தள்ளாடி நிற்பதைக் கண்ட ஸரமா அவனை உற்சாகப்படுத்திப் பேசினாள்:

''சுவாமி, நீங்கள் உங்கள் முயற்சியில் தவற மாட்டீர்கள். தருமம் என்பது உலகில் இருப்பது உண்மையானால் ராமன் உங்களைக் கைவிடவே மாட்டான். நீங்களும் மனைவி மக்கள், நாடு, சுதந்தரம் எல்லாவற்றையும் துறந்து ராமனையே சரணம் அடையுங்கள். சீதை தன் உள்ளத்தில் உத்தமனாய் வரித்த மனிதன் எல்லாரையும் விட உலகில் சிறந்தவனாகத்தான் இருப்பான். சந்தேகம் இல்லை. நீங்கள் இங்கிருந்து ராமனிடம் சென்றிருப்பது தெரிந்தால் சீதைக்கே தைரியம் உண்டாகும். நான் நிச்சயம் அவளுக்காக உங்களைப் பிரிந்திருப்பதைக்கூடக் கடினமாய்க் கருத மாட்டேன். என்றைக்கு அவளுக்கு விடுதலையோ அன்றே நம் இருவருக்கும் வெற்றியும் கீர்த்தியும். எதுவரை அவளுக்குச் சிறையும் சிரமங்களும் அதிகமாகுமோ அதுவரை நம் எல்லாருக்கும் அழிவுக் காலம். என்னைப் பட்டமகிஷியாக்குவதாக உங்கள் அண்ணா சொன்னார். என்னைப் பட்டமகிஷியாக்குவதற்கும் நீங்கள் இலங்கையை விட்டு ராமனை அடையப் புறப்பட வேண்டும். வெற்றியுடன் வாருங்கள். இலங்கையில் அரசு செய்ய வரும் உங்களுக்கு நான் ஆரத்தி சுற்றி விளக்கேற்றுவேன். இது நிச்சயம்.''

விர்ரென்று விபீஷணன் அரசசபையை நோக்கிச் சென்றான். ★

BENSONS-3-MMC-4I TAM

ஆடவர்களை விட ஸ்திரீகள் வலியால் அதிகம் அவதிப்படுகிறார்களா ? இருக்கலாம். ஆனால் ஒன்றுமட்டும்நிச்சயம் அறிவோம்:

வலியிலிருந்து விடுதலைபெற லட்சக்கணக்கான ஸ்திரீகள் அனாஸின் சாப்பிடுகிறார்கள். ஸ்திரீகள் மட்டுமல்ல; ஆடவரும்கூட !

அறிகுறிகள் : தலைவலி, ஜலதோஷம் மற்றும் புளு, பல் வலி, உடல் வலி, தசை வலி.

மருந்தளவு: வயது வந்தவர்களுக்கு 2 வில்லைகள். குழந்தைகளுக்கு 1 வில்லை. எத்தனை எளிய முறை!

அனாஸின்

சிறந்தது

ஏனெனில் அது

4 வழிகளில் வேலை செய்கிறது

ASP/GM/AN-5 TAM

Registered user: GEOFFREY MANNERS & COMPANY LIMITED

மணிவாசகர் கண்ட தில்லை

அமரர் பாஸ்கரத் தொண்டைமான்

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்துஎன் உளம்மன்னி,
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள் தில்லை கண்டேனே

என்பது மணிவாசகர் பாடிய பாடல். திருப்பெருந்துறையிலே குருந்த மரத்தடியில் தம்மை வலிந்து ஆட்கொண்ட பெருமானை, அப் பெருமானோடு இணைந்து அவர் அருளிய சிவ பதத்தின் அருமையை எல்லாம் தாம் தில்லையிலே கண்டுகொண்டதாக மணிவாசகர் பாடுகிறார். மணிவாசகருக்குத் திருப்பெருந்துறைக்கு அடுத்தபடியாகத் தில்லையில்தான் ஈடுபாடு அதிகம் இருந்திருக்கிறது. ஆகவேதான், 'தில்லைபாதி திருவாசகத்தில்' என்ற பழமொழியே எழுந்திருக்கிறது.

'தில்லை மூதூர் ஆடிய திருவடி'யிலே மணிவாசகப் பெருந்தகைக்கு இருந்த ஈடுபாட்டுக்கு அளவே இல்லை என்று தெரிகிறது. திருப்பெருந்துறையை விட்டுப் புறப்பட்ட அவர், உத்தரகோசமங்கை, திருவிடைமருதூர், திருவாரூர், திருமுதுகுன்றம், திருவண்ணாமலை எல்லாம் சென்றபின்தான் திருத்தில்லை வந்து அடைந்திருக்கிறார். அங்கேதான் திருவாசகத்தை மணிவாசகர் சொல்லச் சொல்லச் சிற்றம்பலவன் ஏட்டில் எழுதினான் என்பது வரலாறு. மேலும், திருவாசகத்துக்கு உரை சொல்லும்படி மணிவாசகரைக் கேட்டபோது, அதன் பொருளாக விளங்குபவன் தில்லையில் நடம் புரியும் திருச்சிற்றம்பலவனே என்று அவனையே சுட்டிக்காட்டி நின்றார் என்பதும் கர்ணபரம்பரை வழக்காக நாம் அறிந்திருக்கிறோம்.

தில்லையில் வித்தகனார் விளையாடலைக் கண்டு பரவசம் அடைந்த மணிவாசகர் பின்பு பல நாள் அங்கே தங்கியிருந்த நாளில், குலாப்பத்து, திருப்பதிகம், கோயிற் பதிகம், கீர்த்தித் திரு அகவல், திரு அண்டப் பகுதி, போற்றித் திரு அகவல், திருப் பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருஉந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் முதலியவற்றைப் பாடினார். அன்னைப் பத்து, கோத்தும்பி, குயிற்பத்து, திருத் தசாங்கம் ஆகியவையும் இங்கு எழுந்தவையே. இவற்றைப்பற்றி எல்லாம் விரிவாகப் பேச இந்தப் பிறவி மட்டும் போதாது.

தில்லையிலே ஆனந்தக் கூத்தனின் தாண்டவத்திலே ஈடுபட்டு அநுபூதி பெற்று அசைவற்று நின்றிருக்கிறார் மாணிக்கவாசகர். இதை அறியாத மெய்காவலர் அவரைக் கனக சபையை விட்டுக் கீழே இறங்கச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொற்கள் அவர் செவிகளில் ஏறவில்லை. சிவானந்தப் பிரகாசத்தில் திளைத்து நின்று சிவ சிவ என்றே குரல் கொடுத்திருக்கிறார். அதன்பின் மோன நிலை கலைந்து கோயிலை வலம் வரும்போது, கீர்த்தித் திரு அகவல், திரு அண்டப் பகுதி, போற்றித் திரு அகவல் ஆகிய மூன்று அகவல்களையும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார். அதனால்தான் இன்றும் சைவத் தமிழ் உலகம், மக்கள் திருக்கோயில் வலம் வரும்போது வீண் பேச்சும் சழக்குரையும் பேசாது இவ்வகவல்களை யெல்லாம் பாராயணம் செய்துகொண்டே வரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. ஆனால் இந்த மரபை நாம் எல்லாரும் அநுஷ்டிக்கிறோமா என்பது கேள்வி.

கீர்த்தித் திரு அகவலில், அரியொடு பிரமற்கு அளவறியொண்ணாதவனாகத் தாண்டு சோதி தோற்றிய தன்மையை நினைக்கிறார். உத்தரகோசமங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பைப் பாராட்டுகிறார். திரு அண்டப் பகுதியிலோ இன்னிசை வீணையில் இயைந்தோனாக, பிரமன் மால் காணாப் பெரியோனாக, அதே சமயத்தில் பத்தி வலையில் படுவோனாக, சொற்பதம் கடந்த தொல்லோனாக எல்லாம் இறைவனைக் காண்கிறார். அவன் பஞ்ச பூதங்களிலும் நிறைந்திருக்கிற தன்மையை,

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய்
மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய்
விளைந்தாய் போற்றி

என்றெல்லாம் விளக்கம் தருகிறார்.

கீர்த்தித் திரு அகவல் முதலிய மூன்று அகவல்களையும் பாடிய பின்னர், மணிவாசகர் தில்லையில் தங்கியிருந்த காலத்து, அங்குள்ள பெண்கள் வளைக்கரங்கள் ஒலிக்க, கிண்கிணி மாலைகள் ஒலிக்க, முகத்தில் குறு வேர்வை பொடிப்ப, விழிபுரளச் சுண்ணம் இடிப்பதைக் கண்டார். அதையே பொற்சுண்ணம் இடிக்கும் பாடலாகப் பாடினார்.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்
நாமே

என்று வேறு பாடல்களைப் படிக்கும்போது சுண்ணம் இடிப்பாரது சுவை மிகுந்த பண்ணோசையும் ஆடிப் பாடும் துள்ளலோசையும் கலந்து நமக்குப் பேரானந்தம் உண்டாகிறது என்றால் வியப்பில்லையே!



வட்டமிட்டுப் பெண்கள் வளைக் கரங்கள் தாமொலிக்கக் கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டே தெள்ளேணம் கொட்டுதலாகும். நம் நாட்டில் இதனைக் கும்மி என்றால் மலையாள மக்கள், கை கொட்டிக் களி என்றே இதனை அழைக்கின்றனர். இந்தத் தெள்ளேணப் பாடல்கள் சாதாரணமான எண்ணங்களை மட்டும் பிரதிபலிப்பனவாக இல்லை; பெரிய பெரிய உண்மைகளையே, தத்துவங்களையே, எளிய தமிழில் இனிய சந்தத்தில் இசைத்திடும் பாடல்களாக அமைகின்றன.

வான்கெட்டு மாருதம் மாய்ந்து
அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டு
என்னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ?

என்று கேட்கும் போது நான் என்னும் அகந்தை நம்மை விட்டு ஓடியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி தோன்றுகிறது அல்லவா?

தில்லையில் அடிகளார் பாடிய பாடல்களில் எல்லாம் சிறப்பாக நான் கருதுவது திருச்சாழல் பதிகத்தையே. இன்றைய உலகம் 'கேள்வி - பதில்' உலகமாக இருக்கிறது. பத்திரிகைகளிலே, சினிமா, சினிமா நடிகர்களைப் பற்றிய கேள்வி - பதில்களே நிறைந்திருக்கின்றன. நல்ல கேள்வி-பதில்களை வெளியிட்டு அறிவை வளர்க்கும் பத்திரிகைகளும் இருக்கத்தான் இருக்கின்றன.

இதையெல்லாம் தெளிந்துதானோ என்னவோ, மணிவாசகரும் கேள்வி பதில் முறையிலேயே திருச்சாழல் பதிகம் பாடியிருக்கிறார். சாழல் பாடல்களுக்குப் பகைப்புலனாக ஒரு வரலாறும் கூறப்படுகிறது. ஈழ நாட்டிலிருந்து வந்த புத்த பிக்ஷுக்கள் சிலர் தில்லை வந்து தில்லை வாழ் அந்தணரை வாதுக்கு அழைத்திருக்கின்றனர். இறைவன் ஆணைப்படி மணிவாசகரே அவர்கள் வாதத்துக்குப் பதில் சொல்ல வந்து நின்றிருக்கிறார். பௌத்தர்களோடு வல்வழக்காடுமுன் மணிவாசகர் இறைவனை நினைந்திருக்கிறார். பௌத்தர்கள் எல்லாம் வாய் மூடி ஊமைகளாக நின்றிருக்கின்றனர். தில்லையை ஆண்ட மன்னன் மகள் ஒருத்தி ஏற்கனவே பிறவி ஊமையாக இருந்திருக்கிறாள். இறையருளால் அவளே வாய் திறந்து பேசிப் புதிய ஊமைகளை - பௌத்தர்களை - எல்லாம் மடக்கியிருக்கிறாள், வாதில். இந்த அற்புத நிகழ்ச்சிக்கு உருவம் கொடுத்தே மணிவாசகர் திருச்சாழலைக் கேள்வி - பதிலாகவே பாடியிருக்கிறார் என்பர்.

தென்பா லுகந்தாடும்
தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான்
பெரும்பித்தன் காணேடி

என்று சாழல் விளையாட்டில் ஈடுபட்ட பெண்ணொருத்தி கேள்வி போடுகிறாள். இதனைக் கேட்ட மற்றொரு பெண்,

பெண்பால் உகந்திலனேற்
பேதாய்! இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி
வீடுவர்காண் சாழலோ!

என்று பதில் கூறியிருக்கிறாள்.

அம்பலத்தே கூத்தாடி
அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று
நண்ணுவதும் என்னேடி

என்பது ஒரு பெண்ணின் கேள்வி.

நம்பனையு மாமாகேள்
நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாஎன்று
ஏத்தினகாண் சாழலோ!

என்பது இக் கேள்விக்குப் பதிலாய் அமைகிறது.

தில்லையில் பூவல்லி கொய்து, கோத்தும்பி விரட்டி, பொன்னூசல் ஆட்டிப் பல பல பாடல்களைப் பாடியபின் தன் இதயக் குயிலையும் கூவ விட்டிருக்கிறார் அடிகளார்.

கீதம் இனிய குயிலே!
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற்
பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லில்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான்
அந்தமி லான்வரக் கூவாய்!

என்று குயிலுக்கு வேண்டுகோள் விடுகிறபோது இறையுணர்ச்சி மணிவாசகரது உள்ளத்தில் நிறைந்திருக்கும் பான்மையை உணர்கிறோம். மணிவாசகர் கண்ட தில்லை அவருக்கு மாத்திரம் அல்ல, திருவாசகம் படிக்கும் நமக்கெல்லாமே ஓர் அற்புத அநுபவமாகவே அமைகிறது. ★

டி எம் பி
ஆதரவாளரனைவர்கட்கும்
தீபாவளி வாழ்த்துக்கள் !

நாட்டின் போக்கு வரத்து வசதிக்காக இன்று 1,20,000க்கு மேற்பட்ட டி. எம். பி. வண்டிகள் சேவை புரிகின்றன.

டாடா
மெர்ஸிடஸ்-பென்ஸ்

டாடா என்ஜினீயரிங் & லோகோமோடிவ் கம்பெனி லிமிடெட்.
148, மகாத்மா காந்தி ரோட், பம்பாய் 1

MmT 6363 TAM.





சந்தோஷமான தீபாவளி வாழ்த்துக்கள்

தி பாம்பே கம்பெனி பிரைவேட் லிட்.

169, பிராட்வே, சென்னை-1

We solicit your enquiries for:

Heat, Cold and Sound Insulation—
Waterproofing Roofs, Dampproofing
Basements — Electrical Wiring —
Domestic and Power

டெலிபோன்: 21191

தந்தி: CABRONADA

ஓவியர்:
எஸ். ராஜம்

வாய்மணத்தை வேய்ங்குழலே
வகுத்துரைக்க வல்லாயோ?

கலைமகள்

அப்புச்சா

ஏ.எஸ்.ராகவன்

ஊருக்குப் புறப்படுகிற நேரம் பார்த்துக் கழுகுக்கு மூக்கில் வேர்த்தது போல, அப்புச்சா வந்துவிட்டான், "எங்கே ஸார் புறப்பாடு? மதுரைக்குத்தானே?" என்று கேட்டுக்கொண்டு. அவனை ஓங்கி ஓர் அறை கொடுத்து அனுப்ப வேண்டும் என்ற ஆத்திரம் வந்தது வைத்தா ஸாருக்கு. பஞ்சாங்கத்தில் ராகு, குளிகன் பற்றிய விவரங்கள் இருக்கின்றனவே தவிர, இந்த அப்புச்சா எப்போது எதிரே வந்து நிற்பான் என்றா போட்டிருக்கிறது? இந்த ஊரில் இந்த அப்புச்சாக்குத் தெரியாமல் ஓர் இடத்துக்குப் புறப்பட முடியாதா, கடவுளே?

"ஏண்டா, தடியா! ஸார் கல்யாண காரியமாகப் புறப்படுகிறார் என்று தெரிந்தும் இப்படி வந்து எங்கே போகிறீர்கள் என்று கேட்கலாமாடா?" என்றாள் வைத்தா ஸாரின் மனைவி, கோபமாக.

"கேட்டால் என்ன, மாமி? சுப காரியம் சீக்கிரம் முடிய வேண்டியதுதானே? ஸாரோடு நானும் ஸ்டேஷன் வரை போய்வரப் போகிறேன். மீன மேஷம் பார்த்துக்கொண்டு வைத்தா ஸார் வண்டியைக் கோட்டை விட்டாலும் விட்டுவிடுவார்" என்று சொல்லி இடி இடி என்று சிரித்தான் அப்புச்சா.

வைத்தா ஸாருக்கு அடிவயிற்றிலிருந்து பற்றிக்கொண்டு வந்தது; "பள்ளிக்கூடத்தில்தான் என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டாய். நீ எதற்கும் உதவ மாட்டாய் என்று தண்ணீர் தெளித்து அனுப்பி வைத்தாயிற்று. இப்போது என்னை மூட்டை கட்டி ரெயிலேற்ற வந்துவிட்டாயாக்கும்!"

"ஆமாம்" என்றான் அவன் அழுத்தந் திருத்தமாக.

"நீ வரவேண்டாம்; வரக்கூடாது."

"வரத்தான் வருவேன்."

"வந்தாயோ தெரியும் சேதி!"

வாத்தியார் இப்படிச் சொன்னதும் அப்புச்சா அழ ஆரம்பித்துவிட்டான். அழுகையாவது அழுகை! பத்து வீடு கேட்கிறாற்போலப் பிலாக்கணந்தான்.

"டே அப்புச்சா, தயவு செய்து அழுகையை நிறுத்து. உனக்குப் புண்ணியம் உண்டு. கல்யாண காரியமாகப் புறப்படுகிறபோது இப்படி அழுவது சரியல்ல. ஸ்டேஷனுக்கு மட்டும் அல்ல, மதுரைக்கே வேண்டுமானாலும் வந்து தொலை" என்றார் வைத்தா.

"ஹாங்! அப்படிச் சொல்லுங்கள். இதோ ஒரு நொடியிலே சட்டையைப் போட்டுக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று ஓடினான் அப்புச்சா.

அவனுடைய இயற்பெயர் என்னவோ வைத்தா ஸாருக்குக்கூடத் தெரியாது. அவன் அப்புச்சாதான் எல்லாருக்கும். அந்த ஊரில் ஒவ்வொரு வீட்டிலும் புகுந்து புறப்படுகிற வேலையைத் தவிர ஆயுளில் வேறே வேலை பார்த்தவன் அல்ல. இரண்டு காணியோ என்னவோ பூர்விகச் சொத்து இருக்கிறது அவனுக்கு. கிழட்டுத் தாய்க்குக் கண் தெரியாது. தட்டித் தடவிச் சமையல் செய்து போட்டுவிடுவாள். சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினானால், இப்படி யாரார் ஊருக்குப் புறப்படுகிறார்கள், எந்த எந்த வீட்டில் என்ன என்ன விவகாரங்கள் என்று குசலப் பிரச்னம் செய்துகொண்டே ஊரை வளைய வருவான். "என்ன? சிதம்பரத்துக்குப் போகிறாப் போலேயா? ஆருத்ரா தரிசனத்துக்குத்தானே? நானுந்தான் வருஷம் தவறாமல் கோட்டை கட்டுகிறேன். இந்த அப்புச்சாவுக்கு எங்கே அந்த அதிர்ஷ்டம் வாய்க்கிறது?" குசலத்தோடு பிலாக்கணம்.

அவனைப் பொறுத்தவரை நல்லது பொல்லாதது எல்லாவற்றுக்கும் ஒரே அர்த்தந்தான். "மேலத் தெருக் காமாட்சிப் பாட்டி காலையிலே அவுட். சுகமான சாவு. படுத்ததுதான் தெரியும். விடிந்து பார்த்தால் பேச்சு மூச்சில்லை. மனிதர்களாகப் பிறக்கிறது அபூர்வம் என்று சொல்வார்களே, என்னைக் கேட்டால் காமாட்சிப் பாட்டி மாதிரி செத்துப் போகிறதுதான் அபூர்வம் என்று சொல்வேன்" என்பான். தெரிந்தோ தெரியாமலோ சில அபூர்வமான மன நிலைகள் அவனுக்கு வாய்த்திருந்தன என்பது உண்மை. முப்பது வயசுக்கு அவனிடம் விகற்பங்கள் இல்லை என்பதே எல்லா வீடுகளிலும் அவன் நுழைவதற்கான அநுமதிச் சீட்டாக இருந்தது.

"சட்டையைப் போட்டுக்கொண்டு வரப் போகிறானாம். வருவதற்குள் நான் கொல்லைப் புறமாக நழுவி விடுகிறேன்" என்றார் வைத்தா.

"இந்தாருங்கள்: சுப காரியத்துக்கு அது நல்லதல்ல. வாசல் வழியாகவே போங்கள். அப்புச்சா வந்தால் இந்த மூட்டையைத் தூக்கிக்கொண்டு வரட்டும்" என்றாள் மனைவி.

"எல்லாம் நீ கொடுக்கிற இடம்!" என்று முகத்தைச் சுளித்தார் வாத்தியார்.

"உங்கள் சிஷ்யப் பிள்ளைதானே?" என்று திரும்பினாள் மனைவி.

"சரி, சரி."

ஆனால் அந்த மூட்டையைப் பார்த்ததும் அப்புச்சாவுக்கு இதைவிடப் பெரிய தண்டனை தர முடியாது என்று தோன்றிற்று வைத்தாவுக்கு. புறக்கடையில் விளைந்த பூசணிக் காயில் இரண்டு, கத்திரிக்காய், வெண்டைக்காய் எல்லாமாக அந்தச் சாக்கு மூட்டைக்குள் திமிறிக்கொண்டிருந்தன.

"சாக்கிலே இடம் இருக்கிறாப் போலிருக்கிறதே! ஓர் அம்மியும் குழவியையும் வைத்துக் கட்டக்கூடாதோ?" என்றார் அவர்.

இதற்குள் அப்புச்சா வந்துவிட்டான். "ஸார் மதுரை போகிறார். பத்து நாளிலே அம்புவுக்குக் கல்யாணம் இல்லையா? ஸ்டேஷன் வரை வாடா என்றார். போய்க்கொண்டிருக்கிறேன்" என்று யாரிடமோ செய்தி சொல்லிக்கொண்டே நுழைந்தான்.

அவன் காய்கறி மூட்டையைத் தூக்கிக்கொண்டான். ஒருவேளை காய்கறி மூட்டைதான் அவனைத் தூக்கிற்றோ! அது தோளில் இருப்பதாகவே நினைவில்லை அவனுக்கு. "மதுரைக்குப் போகிறார் வைத்தா ஸார். அம்புவுக்குக் கல்யாணம். பணம் புரட்டுவதற்குத்தான், கல்யாணமென்றால் சும்மாவா?" என்று சாம்புத் தாத்தாவிடம் அவனாகவே விஸ்தரித்ததும், வைத்தா ஸார் கோபமாக, "டேய், மூட்டையைக் கீழே வை. அதிகப்பிரசங்கித்தனமாக ஏதாவது பேசினாயோ, ஆமாம்!" என்றார்.

"இப்போது என்ன ஸார் சொல்லிவிட்டேன்? பணத்துக்காகத்தானே மதுரைக்குப் போகிறீர்கள்? எனக்குத் தெரியாது என்று நினைத்தீர்களோ?" என்று கேட்டு இடி இடி என்று சிரித்தான் அவன்.

சாம்புத் தாத்தா அநுதாபமாக வைத்தாவைப் பார்த்தார். "ஷுபஸ்ய ஷீக்ரம். நடக்கட்டும்" என்றார். தாத்தாவுக்குப் பல் போய்ப் பல நாளாயின.

''அப்புச்சா, என் அருமை மாணாக்கனே, வேகமாக நட. ரெயில் வருவதற்குப் பத்து நிமிஷந்தான் இருக்கிறது'' என்றார் வைத்தா.

''பத்து நிமிஷத்திலே அசுவமேத யாகம் செய்யலாம், ஸார். அடேடே, கிச்சாமி மாமா வருகிறாரே! டில்லி போனானே ஆராவமுது, ஸெலக்ஷன் ஆச்சோ என்னவோ தெரியவில்லை. ஸார், நீங்கள் முன்னாடி போய்க்கொண்டிருங்கள். விசாரித்துவிட்டு ஒரு நொடியிலே வந்துவிடுகிறேன்'' என்றவாறே அப்புச்சா மூட்டையும் தானுமாக ஓடினான்.

கிச்சாமியைச் சந்தித்து டில்லி விவகாரத்தைத் தெரிந்துகொண்டு அவன் வருவதற்குள், மூலையில் ரெயில் வருகிற சத்தம் கேட்டது.

''டேய் அப்புச்சா!'' தொண்டை கிழியக் கத்தினார் வைத்தா.

''இதோ வந்துவிட்டேன் .... மதுரைக்கு ... அம்பு கல்யாணம் .. பணம் புரட்ட ... ஆமாமாம் ... ரொம்ப சரி ... ஆமாமாம் ... ஈச்வர சங்கல்பம் ... ஆராவமுது லேசுப்பட்டவனா? உங்கள் பிள்ளையா லேசா?...'' ஓடுகிற ஓட்டத்தில் கொசுறு கொசுறாகப் பேச்சுக்களின் உதிரல்.

'அட, இந்த அசட்டுக்குத்தான் மூளை இல்லை என்றால் கிச்சாமிக்குமா இல்லை? ரெயிலுக்குப் போகிறவனிடம் என்ன விஸ்தாரம் வேண்டிக் கிடக்கிறது? இந்த ஊரும் அத்துவானம், இங்குள்ள மனிதர்களும் அத்துவானம்! ஒரு காலணாப் பெயராத ஊர். இலவசமாக டியூஷன் சொல்லிக் கொடுத்தால் வைத்தா ஸாரை நல்லவன் என்பார்கள். இல்லையோ, மொட்டைப் பெடிஷன். போதும்டாப்பா போதும். மீதிக் காலத்தையும் ஓட்டிவிட்டால் அப்புறம் பிஞ்சின் வரும். தொகை பிஞ்சாக இருப்பதனால், அது பிஞ்சின்; உவமை ஆகுபெயர்! ஆயிற்று.' அவருக்கும் இருபத்தைந்து வருஷ சர்விஸ் ஆகிவிட்டது. இந்த வருஷந்தான் ஜனாதிபதி பரிசுக்கு அவருடைய பெயர் சிபாரிசு ஆகிப் போயிருக்கிறதாம். என்ன வந்து என்ன, ஸ்வாமி? பெண் கல்யாணம் மலையாக இருக்கிறதே! டபரா கழுவுகிறவன்கூடக் கங்காளம் கங்காளமாகப் பணம் கேட்கிறான்! ஆனால் அம்பு அதிர்ஷ்டக்காரி. அவளுக்கு வாய்த்திருக்கிற வரன் நல்ல வேலையில் இருக்கிறான். பார்ப்பதற்கும் லட்சணமாக இருக்கிறான். வரதட்சிணையும் அதிகம் இல்லை. ஆனால் அந்தச் சொற்பத் தொகைக்கு உன்னைப் பிடி, என்னைப் பிடி என்று இருக்கிறது. இப்போது மதுரைப் பிரயாணங்கூடப் பண விஷயமாகத்தான்; பால்ய நண்பன் ராமுவைப் பார்த்து நிலைமையைச் சொல்லிச் சகாயம் பெற்றுக்கொண்டு வரத்தான். சாக்கு மூட்டையில் இருக்கிற பூசணிக்காய் ராமுவுக்காக. பூசணி என்றால் அவனுக்கு உயிர்!

''டேய் அப்புச்சா!''

''வந்......தூட்டேன்.''

களத்துமேட்டில் ஒரு காலும் வயலில் ஒரு காலுமாகத் தாவி மணியக்காரர் கிணற்றண்டை வழுக்கி விழாத குறையாக ஒரு வட்டம் அடித்து, குறுக்கு வழியில் வந்துகொண்டிருந்தான் அப்புச்சா. ரெயிலும் வந்துவிட்டது. அது நிற்பதும் புறப்படுவதும் கண்ணிமைக்கும் நேரமே. நிற்பதென்பது உபசாரத்துக்காகத்தான். இந்த ஊரைக் கண்டால் ரெயிலுக்கு இளப்பம். அவசர அவசரமாக மூட்டையை உள்ளே தள்ளினான் அவன். ''போய் ஜயத்தோடு வாருங்கள், ஸார். முகத்தை உர்ரென்று வைத்துக்கொள்ளாதீர்கள். என்ன, நான் வரவா? வைத்தா ஸாருக்கு ஜே!'' ரெயிலோடு ஓடி வந்தவாறே வழியனுப்பி வைத்தான்.

வைத்தா ஸார் பெருமூச்சு விட்டார். கடைசி நிமிஷத்தில் அந்தப் பயல் ஒரு 'ஜே'யைப் போட்டு அவரைக் கலங்க அடித்துவிட்டான் என்பது உண்மை. வேர்வையைத் துடைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு கிழவர் - அசல் சாம்புத் தாத்தாவேதாம்- நடுநாயகமாக வீற்றிருந்தார் பலகையில். அவருக்கு எதிரே இரண்டு பேர் தாத்தாவின் வாயையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். வைத்தா நுழைந்ததனால் தடைப்பட்ட பிரவசனம் மீண்டும் தொடர்ந்தது. சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைத் தர்க்க ரீதியாக லௌகிகம் மணக்க அந்தக் கிழவர் பேசிக்கொண்டிருந்தார்.

வாத்தியார் உட்கார்ந்தார்.

''சிங்கப்பூரிலே இருந்தபோது மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் செய்தேன். மாப்பிள்ளை மிகவும் முன்னேற்றமான அபிப்பிராயம் உள்ள பையன். மாப்பிள்ளை அழைப்பெல்லாம் ஏதுக்கு, நான்ஸென்ஸ் என்றான். நலங்கு வேண்டாம் என்றான். வேண்டாம் என்றால் வேண்டாந்தான். வரதட்சிணை வேண்டாம் என்றான். வேண்டாம் என்றால் வேண்டாந்தான்!''

வைத்தா ஸாரின் காதுகள் முறமாக விரிந்தன. 'ஆகா! இப்படி ஒரு மாப்பிள்ளை! வரதட்சிணை வேண்டாம் என்றால் வேண்டாந்தானாமே? இங்கே இப்படியா? படித்தவன் படிக்காதவன் எல்லாருமே கொள்ளையடிக்கிற பயல்களாக அல்லவா இருக்கிறார்கள்? வரதட்சிணை வேண்டாம் என்று ஒப்புக்குச் சொல்லிவிட்டுக் கிச்சாமி கிட்டி போட்டு நாலாயிரம் வசூல் செய்தாரே மூத்த பையனுக்கு! சிங்கப்பூரிலே வாத்தியார் வேலை கிடைத்தால் போய் விடலாம் போலிருக்கிறதே! ஆனால் கிழவருக்கு வாய்த்ததுபோல முன்னேற்றக் கருத்துக்கள் கொண்ட மாப்பிள்ளை நமக்கும் வாய்ப்பான் என்று என்ன நிச்சயம்?'

ஹூம்! ஒரு பெருமூச்சு.

''ஸார் எந்த ஊருக்கோ?'' கிழவர் கேட்டார்.

''மதுரைக்கு.''

''நான் சோழவந்தான்; அதாவது சோழன் வந்தான் ஊர் என்றால் அதற்கு இணையாக லோகத்திலே உண்டா, ஸ்வாமி?''

''ஆமாமாம்.''

அவருக்கென்ன? 'வேண்டாம் என்றால் வேண்டாந்தான்' என்று ஒரு மாப்பிள்ளை வாய்த்த பெருமையில் பேசலாம். வைத்தா ஸாருக்கு அப்படிப் பேசச் சொந்த ஊர் உண்டா, நிலம் உண்டா, நீச்சு உண்டா?

ராமு ஊரில் இருக்கிறானோ இல்லையோ? இருப்பான். இப்போதெல்லாம் பயணங்கள் தனக்கு ஒத்துக்கொள்வதில்லை என்று போன தடவை சொன்னானே. கட்டாயம் இருப்பான். அவன் ஏன் பயணம் செய்ய வேண்டும்? கடையிலே நாலு கணக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். போ என்றால் போகிறார்கள். மதுரையில் அவன் பெரிய புள்ளி. படிக்கிற காலத்தில் குண்டலமாக வாங்குவான். தொழிலில் புகுந்து சக்கைபோடு போடுகிறான்.

மனத்தில் பல கணக்குகள். ஓர் ஐந்நூறு ரூபாய் தரமாட்டானா ராமு? அட, அவ்வளவு வேண்டாம். பாதி தரட்டுமே! சொச்சத்தை எப்படியாவது புரட்டிவிடலாம்.

நல்ல வேளை! ராமு ஊரில்தான் இருந்தான். அம்பு அதிர்ஷ்டக்காரி. அவள் பெயரைச் சொல்லிக்கொண்டு போனால் எதுவும் தடைப்படுவதில்லை. பிறந்ததிலிருந்தே அப்படி.

''வா வா, வைத்தா. ஏது இவ்வளவு தூரம்? அடேடே, இதென்ன பூசணியா? பலே, பலே! அடியே, பார்த்தாயா, பூசணி வந்திருக்கிறது?'' என்று வரவேற்றான் அவரை.

''அம்புக்குக் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறேன், ராமு'' என்றார் அவர்.

''அப்படியா? எப்போது?''

''பத்து நாள்தாம் இருக்கின்றன.''

''மாப்பிள்ளை எந்த ஊர்? என்ன வேலை?''

விவரமெல்லாம் சொன்னார் வைத்தா. கேட்டுப் பூரித்துப் போனான் ராமு. ''புளியங்கொம்பாகப் பிடித்துவிட்டாயே. நீ அதிர்ஷ்டக்காரன்தான்'' என்று பாராட்டினான்.

''உன்னிடம் ஒரு காரியமாக வந்தேன்.''

''சொல்லு.''

''கொஞ்சம் பணம் வேண்டும்.''

''ஓ.''

''வரதட்சிணை தர வேண்டியிருக்கிறது.''

''வரதட்சிணையா? சட்டப்படி அது தப்பான காரியமாச்சே! போன வருஷம் மீனாட்சிக்குக் கல்யாணம் செய்தேன். காலணா வரதட்சிணை தரவில்லை நான். நீ அதற்கு ஒப்புக்கொண்டிருக்கக் கூடாது, வைத்தா.''

''என்ன செய்வது? நம் சமூகம் அந்த அளவுக்கு இன்னும் முன்னேறவில்லையே!''

''சமூகம் எப்படி முன்னேறும்? நாம் எல்லாரும் இடம் கொடுத்துவிட்டுச் சமூகத்தைக் குற்றம் சொல்லலாமா? எனக்கு இது பிடிக்காத சங்கதி. எவனாவது வரதட்சிணை கேட்டான் என்றால், அவனைப் பிடித்து ஜெயிலிலே போட வேண்டும். அந்த மாதிரி வரனுக்கு நம் பெண் வாழ்க்கைப்படவே வேண்டாம்.''

''ராமு!''

''இதோ பார். நான் கண்டிப்பானவன் என்று உனக்குத் தெரியும். வரதட்சிணை இல்லாமல் தாலி கட்ட முடியவில்லையென்றால் உன் பெண் வாழவே வேண்டாம்.''

வைத்தா ஸாருக்குத் தொண்டையில் ஏதோ அடைத்துக்கொண்டது.

கண்கள் சிவந்தன. வாழ வேண்டாமா?

''பணம் தர மாட்டேன். நான் சொன்னபடி செய்.''

அவன் மசிய மாட்டான் என்பது தெரிந்துவிட்டது வைத்தாவுக்கு. அதற்கு மேல் அங்கு இருக்கவும் பிடிக்கவில்லே. 'முடியாது என்ருல் முடியாதுதான்' என்று சொல்லிவிட்டானே! அவருக்கு மட்டும் ரோசம் இல்லேயா? இந்த உபதேசத்தைக் கேட்கத்தான மூட்டைச் சாக்கோடு வந்தார்? இவன் வரதட்சிணே தரவில்லேயாம். மாப்பிள்ளேக்கு ஐந்து லட்சத்துக்குச் சொத்து இருக்கிறது. இவனிடம் பிசாத்து வரதட்சிணேக்கா கை கட்டி நிற்பான்? மலேயும் மடுவும் ஒன்ருகுமா?

அப்போதே தெரியுமே அவருக்கு, இப்படி ஆகுமென்று. புறப்படுகிற நேரம் பார்த்து, ''எங்கே ஸார் புறப்பாடு?'' என்று கேட்டுக்கொண்டு துக்கிரி அப்புச்சா வந்தபோதே, இது நல்லதற்கு இல்லே, பயணம் உருப்படாது என்று தெரிந்ததுதானே?

''சாப்பிடாமல்கூடவா புறப்படுகிருய்?'' என்ருன் ராமு.

''ஆமாம்.''

''உனக்கு வண்டி எதுவும் இல்லேயே! ஊர் திரும்ப?''

''நான் போயாக வேண்டும். எனக்கு மனசே சரியாக இல்லே.''

''காலேயில் புறப்பட்டுப் போகலாமே!''

''ஊகும்.''

''சரி. அப்படியானல் என் காரில் உன்னேக் கொண்டுவிடச் சொல்கிறேன்.''

''எதற்காக, ராமு? வேண்டாம்.''

''மூச்சு விடாதே. இன்னமும் பழைய வைத்தாவாகவே இருக்கிருயே! அவசரமாக ஊருக்குப் போக வேண்டுமென்ருல் இந்த நேரத்திலே எப்படிப் போவாய்?'' என்று அதட்டினுன் ராமு.

வைத்தாவுக்குக் கண்ணில் நீர் முட்டாத குறை. திடீரென்று ஒரு பலவீனம் அவரை ஆட்கொண்டுவிட்டது. இல்லாவிட்டால் அந்தக் கார் சவாரியை ஏற்றுக்கொண் டிருக்க மாட்டார். நடப்பது நடக்கட்டும், ஈசுவரன் விட்ட வழி என்று ஒதுங்கத்தான் முடிந்தது. ஏழைகளுக்கு விறைப்புப் பயன்படுமா? எப்படியாவது ஊர் போய் மனேவியிடம் ஒரு குரல் அழ வேண்டும் போலிருந்தது.

நூற்றைம்பது மைலே அந்த நவீனக் கடிலாக் மூன்றரை மணி நேரத்திலேயே முடித்துவிட்டது.

''**வா**ருங்கள் ஸார். மாப்பிள்ளே மாதிரி ஜம்மென்று காரிலே வந்து இறங்குகிறீர்களே! எனக்குத் தெரியும், இந்த அப்புச்சா போய் எந்தக் காரியம் பெயிலாகியிருக்கிறது?'' என்று வரவேற்ருன் அப்புச்சா. அந்த அகாலத்தில்கூட அவனுக்குத் தூக்கம் வராதோ?

''சீ! நகரடா அந்தண்டை!'' என்று சீறினுர் வைத்தா.

''ஸார்!''

''போடா என்ருல்! அப்புறம் இங்கே ஒரு கொலேயேநடந்துவிடும்! ஆமாம்.''

ராமுவின் டிரைவர் அவரிடம் சொல்லிக்கொள்ளாமலே காரைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான்.

இதற்குள் வைத்தா ஸாரின் மனேவி கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். கணவரின் சீற்றத்தைக் கண்டு அவளுக்கே பயமாக இருந்தது. ''அப்புச்சா, நீ போ. போடாப்பா'' என்ருள்.

''ஏன்? நான் என்ன செய்தேன், மாமி? இவருடைய நண்பர் பணம் தரவில்லே என்ருல் அதற்கு நான பொறுப்பு? இதற்குத்தான மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினேன்? என்மேலே எரிந்து விழுகிருரே!'' என்ருன் அப்புச்சா.

''நீதாண்டா பொறுப்பு. அபசகுனமாக வந்து எங்கே போகிறீர்களென்று கேட்டாயா இல்லேயா?''

''ஏன் ஸார், நான் கேட்கிறேன் என்று கோபித்துக் கொள்ளாமல் சொல்லுங்கள். உங்கள் நண்பர் ஏன் பணம் தரவில்லே?''

''அதை நீ தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லே.''

''போங்கள் ஸார். இன்னமும் உலகம் தெரியாமல் இருக்கிறீர்களே. கல்யாணத்துக்கு உதவாத நண்பன் ஏதுக்கு, ஸார்? காரணம் எதுவாக இருந்தால் எனக்கு என்ன? கடிலாக் காரிலே அனுப்பி வைத்துவிட்டால் போதுமா? மதுரையிலிருந்து இங்கே வந்து போகப் பெட்ரோல் செலவு எவ்வளவு ஆகும்? அதைக் கையிலே கொடுத்திருந்தால்கூட உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்குமே, ஸார்! என் மேலே சீறுகிறீர்களே!''

அப்புச்சா போய்விட்டான். சும்மாவா போனுன்? அவருடைய நெஞ்சில் கனன்றுகொண்டிருந்த தீயை நன்ருக ஊதிவிட்டுப் போனுன். வாஸ்தவந்தானே? பெட்ரோல் செலவு நூறு ரூபாய் ஆகலாம் போலிருக்கிறதே! அதைக் கையில் கொடுத்திருந்தால் கூட வைத்தாவுக்குத் தைரியமாக இருந்திருக்குமே!

மறுநாள் முதல் அப்புச்சா அவர் கண்ணில் படவில்லே. எங்கே போனுனே, என்ன ஆனுனே? அவனுடைய வீட்டில் கிழட்டுத் தாயையும் காணவில்லே. விடியற்காலேயில் வண்டி கட்டிக்கொண்டு போனபோது பார்த்ததாகச் சாம்புத் தாத்தா சொன்னுர்.

கல்யாணத்துக்கு நாள் நெருங்கிவிட்டது. கல்கத்தாவிலிருந்து வைத்தாவின் அண்ணு வந்து சேர்ந்தார். அவர் இருநூறு ரூபாய் தந்தார். பாக்கி புரளவில்லே. சம்பந்திகள் இங்கே வந்ததும் நேரில் தந்துவிடுவதாக எழுதிவிடுமாறு அவர் யோசனே சொன்னபடி எழுதியும் ஆயிற்று. தராவிட்டால் அவமானமாகப் போகுமே!

அழைப்புக்கள் பறந்தன. வைத்தாவுக்கு உள்ளூறக் கிலிதான். சம்பந்திகள் வந்ததும் என்ன கலாட்டா காத்திருக்கிறதோ?

அவர்களும் வந்துவிட்டார்கள். அதே வண்டியில் அப்புச்சாவும் வந்து இறங்கினுன்.

''அதோ, அப்புச்சா! அட பாவி, எங்கேடா திடீரென்று மறைந்துவிட்டாய்?'' என்று விசாரித்தார் கிச்சாமி.

''சும்மா பட்டணம் போய் வருகிறேன்'' என்ருன் அவன்.

''சும்மா என்னடா சும்மா?''

''வாத்தியார்தாம் நான் அபசகுனம் என்று திட்டிவிட்டாரே!''

''அதற்காகப் போய்விட்டாயா?''

''எதற்காகவோ? கல்யாண சமயத்துக்கு டாண் என்று வந்துவிட்டேனே இல்லையோ? வைத்தா ஸாருடைய பிரதம சீடன் இல்லையா நான்?'' கேட்டுவிட்டு இடி இடி என்று சிரித்தான். ''இன்னொரு சங்கதி, கிச்சாமி மாமா. இப்படிப் பக்கத்திலே வாருங்கள், சொல்கிறேன். மாப்பிள்ளை எனக்குச் சொந்தக்காரப் பிள்ளையாண்டான்தான். ரெயிலில் பேச்சுக் கொடுத்தபோது தெரிந்தது. இனிமேல் அபசகுனம் என்று வாத்தியார் சொன்னாரோ, தெரியும் சேதி!'' மறுபடியும் இடிச்சிரிப்பு வெடித்தது.

வைத்தா ஸார் அவனைப் பார்த்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை.

''காபி பலகாரமெல்லாம் சட்டுப்புட்டென்று வந்து சேரட்டும். டிலே பண்ண வேண்டாம்'' என்றான் அவன், இறங்கினதும் இறங்காததுமாக. வாத்தியார் காதில் விழுகிற மாதிரி யாரிடமோ அங்கலாய்த்தான்: ''நான் ஏன் அபசகுனமாக இங்கே இருக்க வேண்டும் என்றுதான் ஊரை விட்டே போனேன். நான் இருந்தால் பணம் கிடைக்காதாம். இப்போது வாத்தியாருக்குப் புதையல் கிடைத்திருக்கும். நம்மாலே எதற்குக் கஷ்டம்? சொல்லுங்கள்.''

அவன் கேலி செய்கிற அளவுக்குத் தம் நிலைமை இருப்பதை எண்ணி வருந்தினார் வைத்தா. என்ன செய்ய?

மாப்பிள்ளை அழைப்புக்கு முன்னால் வைத்தா ஸாரும் அவருடைய அண்ணாவுமாகச் சம்பந்தியை நெருங்கினார்கள். மாடியில் சீட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. திண்டு தலையணைகளில் சாய்ந்திருந்தார் பெரியவர். அவர்களைப் பார்த்ததும், ''ஹூம்'' என்றார்.

''வரதட்சிணை விஷயமாக....'' என்று இழுத்தார் வைத்தா.

''ஹூம்.'' திண்டு தலையணை குலையப் பெரியவர் நிமிர்ந்தார். ''வரதட்சிணையா? வாங்குவது சட்டப்படி தப்பாச்சே! வாங்குகிற பயல்களை ஜெயிலிலே அல்லவா போட வேண்டும்?'' என்றார்.

விளையாட்டா, வினையா என்று புரியவில்லை. வைத்தாவுக்கு ரத்தம் உறைந்து போயிற்று. அண்ணா அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

''வரதட்சிணை தர வேண்டுமென்றால் பெண் வாழவே வேண்டாமே, ஸ்வாமி? சமூகத்தை நாம் குட்டிச் சுவராக்கிக்கொண்டே இருந்தால் எப்படி?'' பெரியவர் தொடர்ந்தார். அவருடைய பேச்சில் முள் குத்திற்று. மணமும் வீசிற்று.

அப்புச்சா இடி இடி என்று சிரித்தான் ஒரு மூலையிலிருந்து. சீட்டுக் கச்சேரி தடைப்பட்டு, எல்லாரும் வேடிக்கை பார்க்கத் துவங்கினர்.

பளீரென்று மின்னல் தாக்கினாற் போல, பூமியே வெடித்துவிட்டது போல இருந்தது வைத்தா ஸாருக்கு. சம்பந்தியின் வாசகங்கள் அனைத்தும் அவருடைய நண்பன் ராமு பேசிய பேச்சுக்களாகவே இருந்ததைக் கொண்டு, ஒன்று விடாமல் அப்புச்சா சம்பந்தியிடம் திரித்துவிட்டிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டார். நடந்தது அவருக்கும் அவருடைய மனைவிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அப்புச்சா பயல் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்து, வெகு காரியமாகச் சம்பந்தியிடம் வத்தி வைத்துவிட்டான்.

''நீங்கள் சொல்வது...'' அண்ணா குழறினார்.

''ஓய், எனக்கு எல்லா விவரமும் தெரியும். நானும் நாலு பெண்ணுக்குக் கல்யாணம் செய்தவன் காணும்!''

''நீங்கள் ஏதோ தவறுதலாக...''

''ஒரு தவறுதலும் இல்லை. நீங்கள் போகலாம்.''

பாதாதிகேசம் ஓர் எரிச்சல். கண் இருட்டிக்கொண்டு விட்டது, வைத்தாவுக்கு. அழாத குறையாகத் தேகமெல்லாம் வேர்வை பாய்ந்தது.

பெரியவர் தலையணையைக் காலுக்கு மாற்றிக்கொண்டார். ''ஏன் நிற்கிறீர்கள்? நீங்கள் ஐந்நூறு ரூபாய் கொடுத்துத்தான் எனக்கு நிறையப் போகிறதோ? போய்க் காரியத்தைக் கவனியுங்கள்'' என்றார்.

அப்புச்சா மெல்ல நழுவினான் அங்கிருந்து. அண்ணா ஜாடை காட்டி வைத்தாவை அழைத்துக்கொண்டு நகர்ந்தார். ''ஒன்றும் புரியவில்லையேடா, வைத்தா. யார் செய்த விஷமம் இது?'' என்றார் தனித்து.

''அப்புச்சாதான். அந்தத் துக்கிரிப் பயல் என்ன என்னவோ சொல்லியிருக்கிறான்'' என்றவர், பளீரென்று திரும்பி, தொலைவில் நின்றுகொண்டிருந்த அப்புச்சாவை நோக்கி ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, அவனுடைய சட்டையைப்பற்றிக்கொண்டு, ''டேய், உண்மையைச் சொல்லு. இதெல்லாம் உன் வேலைதானே? சொல்லுடா'' என்று சீறினார்.

''சட்டையை விடுங்கள் ஸார்'' என்றான் அவன்.

''பதில் சொல்.''

''ஆமாம்.''

''நீ நாசமாய்த்தான் போவாய். என் பெண் கல்யாணம் நடக்கக் கூடாதென்று எத்தனை நாளாகக் காத்திருந்தாய் இப்படி உலை வைக்க?''

அவன் அழ ஆரம்பித்துவிட்டான்.

''செய்வதை எல்லாம் செய்துவிட்டு என்ன அழுகை இப்போது? வா, சம்பந்தியிடம் வந்து நீ சொன்னதெல்லாம் பொய், நய வஞ்சகம் என்று சொல்லி மன்னிப்புக் கேள்.''

''நான் மாட்டேன்.''

''வருகிறாயா, இல்லாவிட்டால்?''

''நான் வரமாட்டேன்.''

''மாட்டாயா? வரமாட்டாயா?'' வாத்தியார் பளீர் பளீரென்று அறைந்தார் அவனை. ஓவென்று அழ ஆரம்பித்தான் அவன், பத்து வீடு கேட்கிறாற் போல. கிச்சாமி, சாம்புத் தாத்தா எல்லாரும் வந்துவிட்டனர். சம்பந்திகூடத் திண்டு தலையணையை விட்டு இறங்கி வந்தார். அவருக்கு நடந்த சங்கதி எதுவும் தெரியாது.

''என்ன அங்கே?'' வெண்கலக் குரல் கேட்டதும் கும்பல் விலகிற்று.

வைத்தா நாணினார். அண்ணா அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். அந்தச் சிரிப்பு 'ரெடிமேட்'டாக அவருடைய உதட்டில் எப்போதுமே இருக்கும்.

அப்புச்சா அவரைப் பார்த்ததும், ''என்ன செய்வேன், மாமா? என் கதி இப்படி ஆகிவிட்டதே!'' என்று புலம்பினான்.

''நான்தான் உன்னை வர வேண்டாம்டா என்றேனே. பிடிவாதமாக வந்து இங்கே கலாட்டா செய்கிறாயே. என்ன என்று கேட்கிறேன்; ஏன்டா, இது என்ன என்கிறேன்?'' பெரியவர் கடிந்தார்.

''வந்து....வாத்தியார்.... வாத்தியார்....'' அவன் தேம்பினான் குழந்தைபோல.

''அவருக்கு என்ன? என்ன என்கிறேன்?''

அப்புச்சாவின் தேம்பலும் நின்றது. அவனால் பதில் சொல்ல முடியவில்லை. வெறுமே விழித்தான்.

''இதோ பார்டா, நாளைக்குக் கல்யாணம் முடிகிறவரையில் மூச்சு விட்டாயோ, தொலைத்துவிட்டேன் தொலைத்து. ஓடு இங்கிருந்து.'' பெரியவர் அதட்டினார்.

அப்புச்சா சாதுவாக நகர்ந்தான்.

அவன் தலை மறைந்ததும் யாருமே எதிர்பாராத வகையாக இத்தனை நேரமும் கண்டிப்பும் கார்வாருமாக இருந்த பெரியவர் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்துவிட்டார். வைத்தா பதறிப் போனார். அண்ணாவின் ரெடிமேட் சிரிப்புக்கூட அழுது வடிந்தது. இரண்டு நிமிஷம் கூட்டமே அதிர்ந்து போயிற்று. பெரியவர் சட்டென்று கண்ணைத் துடைத்துக்கொண்டார்.

''அவனை விரட்டிவிட்டேன், ஸ்வாமி. ஆனால் அவனை இருக்கக் கொண்டு ஓடி வந்திருக்கிறான் கல்யாணத்துக்கு. ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவனுடைய தாய் இப்போதோ அப்போதோ என்று கிடக்கிறாள். ஆனமட்டும் சொன்னேன். எங்கள் வைத்தா ஸார் வீட்டுக் கல்யாணம், நான் வராமல் இருக்க மாட்டேன் என்றான். ஸ்வாமி, குருபக்தி என்றால் அப்படி ஒரு குருபக்தி உங்கள்மீது. வழி நெடுக உங்கள் பெருமைதான் பேசினான். காசு கிடக்கட்டும்; இப்படி ஒரு பேர் வாங்குவது சாமானியமா, ஸ்வாமி?''

பெரியவர் பேசப் பேச, வைத்தா ஸாருக்கு உடலெல்லாம் பரவசப் பூரிப்புப் பாய்ந்தது. ''அப்புச்சா! அட, எவ்வளவு பெரியவனடா நீ! தாயை ஆஸ்பத்திரியிலே சேர்த்துவிட்டு என்ன மனசோடு இங்கே வந்து நிற்கிறாய்? உன்னைக் கண்முன்னாலே வராதே என்று விரட்டினேன். நீ என்ன என்னவோ மாயமெல்லாம் செய்துவிட்டாயே அப்பா!'' என்று அரற்றினார்.

அப்பொழுது ஒரு பெரிய கடிலாக் கார் 'பாம், பாம்' என்று இரைந்து கொண்டு வரவே கூட்டம் விலகிற்று.

''அடேடே....ராமுவா? வா.. வா..'' என்றார் வைத்தா. பிறகு திடீரென்று, ''டேய் அப்புச்சா, வந்தவர்களை எல்லாம் கவனி'' என்றார்.

''இதோ வந்......தூட்டேன்.'' மாடியிலிருந்து பதில் வந்தது.

மாடியிலிருந்து என்ன, உயரத் தேவ லோகத்திலிருந்து அல்லவா அவன் வருகிறான்? ★

எமது தீபாவளி வாழ்த்துகள்

Direct-on-line Push Button Starters

A.C. Hand operated Star-Delta Starters

Triple Pole & Triple Pole and Neutral Rewirable Distribution Fuse Board


Double Pole Ironclad Switches

மற்றும் பஸ் சேம்பரும்
பேனல் போர்டுகளும்

Nalin-GEM-112

முழு விவரங்களுக்கு :

G.E.M

கணபதி என்ஜினியரிங்
மானுபாக்சரர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
தபால் பெட்டி எண் 6
கணபதி, கோயமுத்தூர் 6.

சீறும் புலிக்கு முன்னே.

தனியான காட்டுப் பாதையில், தாக்க வந்த புலியைத் தன் கை முறத்தால் எதிர்த்த பெண்ணின் வீரம்—பாடுதற்குரியது.

ஏன், நம்முடைய வாழ்விலும் 'செலவு' என்னும் 'புலி' எதிர்ப் படும்போது, நம்மில் எத்தனை பேருக்கு அதையெதிர்க்கும் துணிவிருக்கிறது?

ஆனால் வருங்காலத்தை எண்ணி, சிக்கனத்துடன் சேமிப் பவர்கள் — இப் 'புலியைக்' கண்டு பயப்படுவதில்லையே!

ஆம்! 'செலவுப் புலியை' அடக்கச் 'சேமிப்பைக்' காட்டி லும் சக்திவாய்ந்த ஆயுதமெது?

சேமிப்புக்குச் சிறந்த இடம் பாலக்காடு சிட்பண்ட்ஸ்

மாதத் தவணைகளிலோ அல்லது மொத்தமாகவோ—சேமிப் பதற்கேற்ற 'ரெக்கரிங்' மற்றும் 'பிக்செட்' டிபாசிட்டுகள்; கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

PCF

பாலக்காடு சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்,

பதிவு அலுவலகம்: 5, நாஞராஜ் நாயுடுத் தெரு, தி. நகர், சென்னை-17
சென்னைக் கிளைகள்: தி. நகர், ஜார்ஜ் டவுன், அய்யனவரம்,
வெளியூர் கிளைகள்: பாலக்காடு, செகண்டராபாத், கோயமுத்தூர்,
பம்பாய், ஹைதராபாத்

ஏ.எஸ்.பி./அய்யர். மானேஜிங் டைரக்டர்

**மீண்டும் திரும்பிப்
பார்க்குமளவு
கவர்ச்சியில் முதன்மை**

நல்ல உடையலங்காரத்திற்கு பொருத்தமாக நல்ல பாதரக்ஷையும் தேவை. சீரிய அமைப்பு, சீரிய மோஸ்தர், சீரிய பொருத்தம் ! நீங்கள் எந்த உடுப்பு அணிந்தாலும், பாதரக்ஷைகளே உங்கள் தோற்றத்திற்கு மெருகூட்டுகின்றன. தரத்தில் இரண்டாவதான பொருளை நாடுவது அபாயம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற நல்ல பாதரக்ஷைகளை தெரிந்த ஸ்தாபனமாகிய பாடாவில் வாங்குங்கள். பிறகு நீங்கள் எங்கு நடந்தாலும், சௌகரிய உணர்ச்சியும் நிம்மதியும் கிடைப்பது உறுதி. சிறந்த வேலைத் திறனுள்ள ஸ்தாபனமே இத்தகைய உணர்ச்சியை வழங்க முடியும்.

பெரெட்டி 10.95—14.95

போம்பா 12.95—16.95



அன்ஜானா 13.95



ஸுலேகா 10.95



ஷிலா 11.95

Bata



அலர்ஜி

ஈ.எம்.கோவூர்

மலையாள ஹாஸ்யக் கதை

மாதவன் இடப் பக்கத்து அறையில் எட்டிப் பார்த்துவிட்டுப் பின்னுக்கு நகர்ந்துகொண்டான். ஆபீஸ் பைல்களும்,. அன்றைக்குத் தலைமையலுவலகத்துக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களின் நகல்களும் அவன் கையில் இருந்தன. முக்கியமாக, அந்த வேலைகளையெல்லாம் இங்கே வீட்டில் செய்தாக வேண்டும் என்று யாரும் கட்டாயப் படுத்துவதற்காக அவன் செய்வதில்லை. ஆனால், தேவகியினுடைய தோழிமார்களில் எவளாவது 'கேட்' பக்கத்தில் தென்பட்டால் அவன் வேலைகளை விட்டு, விழுந்தடித்துக்கொண்டு வெளியே ஓடி வருவது வழக்கம். அப்படிச் செய்யாமற் போனாலோ தேவகியின் பேச்சு, செயல், திட்டம் முதலியவற்றை அவன் தெரிந்துகொள்ளவே வாய்ப்பு இல்லாமற் போய்விடும்.

முதுகெலும்பு இல்லாதவன்! அது உள்ளவனாக இருந்தால், இந்த மாதவன் கேவலம் ஒரு மூன்றாம் தரக் கம்பெனியில் முதல் தரக் குமாஸ்தாவாகக் கிடந்து உழல வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

வட்டில் போன்ற வட்டமான கண்கள், வாடி வெளிறிய முகம், சிவந்த உதடுகள் கொண்ட ஒரு பெண் தேவகியைப் பார்க்க வந்திருக்கிறாள். எடுப்பான உயரம்; அதற்கு ஏற்ற பருமன்; ஆனால் முகத்திலோ எப்போதும் தேங்கிக் கிடக்கிற விசனம். அதை யாரிடமாவது பகிர்ந்துகொண்டாக வேண்டும் என்ற ஒரு பதைப்பு. பெரிய இடத்து மனுஷிதான்.

அவளை மணந்திருக்கிறவன் பெருத்த பணக்காரன் என்பது மாதவனுக்குத் தெரியும். 'பிக் பஜாரி'லுள்ள பெரிய பெரிய கடைகளில் அந்தப் பெண் ஏறி இறங்குவதை மாதவன் குறைந்தது நூறு தடவையாவது கண்டிருப்பான். ஆனால் ஒரு முறையாவது அவளுடன் கூட அவள் கணவனைப் பார்த்ததில்லை. பதிலாக ஒரு பெரிய 'அல்ஸேஷியன்' நாய் எப்போதும் அவளுடனேயே இருக்கும்.

வெளியே தோழியைக் கண்டதும், தேவகி உவகை பூரிக்க எழுந்து சென்று, ''பேபி, பேபி!'' என்று இனிமையாக அழைத்துக்கொண்டு எதிர்கொள்ள முன்னே விரைந்தாள்.

நல்ல பேபி! குறைந்தது 160 ராத்தல் பருமனை உடம்பில் அடக்கிக் கொண்டிருப்பாள் இந்தப் பேபி!

மாதவனுக்கு அவர்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள ஆர்வம் கிடையாது. அவசியமும் இல்லை. ஆனால் எதிரே உள்ள சுவருக்கு அப்பால், ஒரு திரை மறைப்பு மட்டும் உள்ள ஜன்னலுக்கு உட்புறம் போட்டி போட்டுக் கொண்டு கிராமபோன் ரிகார்டுகளை உரக்க வைத்து, வாடிக்கைக் காரர்களைக் கவர்ந்திழுக்கும் இரு வீம்புக்கார டீக்கடைக்காரர்களைப் போல், அந்த இரண்டு பெண்மணிகளும் கத்திப் பேசிக்கொண்டிருக்கிறபோது, மாதவன் செவிகளில் அந்த உரையாடல் எப்படி விழாமல் இருக்க முடியும்? அதிலிருந்து அவன் தப்பிவிட முடியுமோ?

பேபி மிகவும் உணர்ச்சி பரவசத்தோடு இருந்தாள். இதற்கு முன்பு அவள் இப்படி இருந்ததில்லை. நடையிலுள்ள சுறுசுறுப்பும், நாற்காலியில் அமர்ந்தபோது ஏற்பட்ட ஓசைகளும் அவனுக்கு இந்த உண்மையைப் புலப்படுத்தின. வழக்கமாக, தேவகியின் குரல்தான் உரத்து ஒலிப்பது வழக்கம். இன்றைக்கோ, பேபி தன் தோழிக்கு இந்த உரிமையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. பேபியின் குரல்தான் எடுப்பாக இருந்தது; வெகு உற்சாகம்!

''நான் இப்போது டாக்டர் மயூரத்தின் 'கிளினிக்'கிலிருந்து வந்து கொண்டிருக்கிறேனாக்கும்!''

மயூரம் என்ற பெயரைக் கேட்டதும் தேவகிக்கு உற்சாகம் பொங்கியது. ஒரு விதிர்ப்பு.

''யார்? எட்வர்ட்ஸ் ரோடில் புதிதாகக் கிளினிக் தொடங்கியிருக்கிற அந்த வாலிப டாக்டர்தானே?''

''ஆமாம், ஆமாம்; அந்த டாக்டரேதான். மிஸஸ் ராமசாமிதான் என்னை அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள். இதொரு பாக்கியமாக்கும்!''

''மிஸஸ் ராமசாமிக்கு ஏதோ உடம்பு சரியில்லாமல் இருந்ததே! போன மாதம், வேலூருக்கோ, எங்கோ போயிருந்தார்களாமே!''

''எங்கேயெல்லாமோ போயிருந்தார்கள். போகாத இடமே பாக்கி இல்லை. ஆனால் நல்ல காலமாக, டாக்டர் மயூரத்தினிடம் வந்து 'கன்ஸல்ட்' செய்யும்படியான பாக்கியம் அவர்களுக்கு ஏற்பட்டது.''

இடைவிடாமல் பேச வேண்டும் என்ற பேச்சுப் போட்டியைத் தென்னிந்திய மொழிக்காரர்களுக்கிடையே ஏற்படுத்தினால், அதில் முதற்பரிசை அநாயாசமாக மிஸஸ் ராமசாமி தட்டிக் கொண்டு போவாள் என்பதை மாதவன் அப்போது நினைவு படுத்திக் கொண்டான்.

''மயூரத்தைக் 'கன்ஸல்டு' செய்தப்புறம்?''

''அப்புறம் என்ன? நல்ல கிடாரிக் கன்றுபோல அவள் மதாளித்துப் போய்க் குதித்துக்கொண்டு நடக்கிறாள். அவ்வளவுதான்!''

''அந்த அம்மாவுக்கு என்ன அப்படி வியாதி வந்ததாம்?''

''அலர்ஜி!''

''அப்படியென்றால்?''

''அலர்ஜி; வெறும் ஸிம்பிள் அலர்ஜி.''

''வெகு நன்றாக இருக்கிறதே! என்ன ஆனாலும், அது ஒரு பெரிய வியாதி என்றுதான் தோன்றுகிறது, இல்லையா? எப்படி இருந்தாலும், அந்தப் பேரிலே ஒரு சுகம், ஒரு சொகுசு இருக்கிறதம்மா. அது சரி, மிஸஸ் ராமசாமிக்கு இந்த வியாதி எத்தனை நாளாய் இருக்கிறதென்று டாக்டர் சொன்னார்?''

''பிறந்ததிலிருந்தே அந்த அம்மாளுக்கு இந்த வியாதி இருந்து வருகிறதாக டாக்டர் மயூரம் சொல்லுகிறார். ஆனால், எனக்கு இந்த அலர்ஜி நான்கு வருஷமாகத்தான் ஏற்பட்டிருக்கிறதென்று டாக்டர் அபிப்பிராயம். எனக்கு ஞாபகம் இல்லை. அவர் என்னைத் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டு விளக்கியபோதுதான், எனக்கும் நினைவு வந்தது. டாக்டர் சொல்வது உண்மைதான்.''

''டாக்டர் உன்னிடம் என்னவெல்லாம் துருவித் துருவிக் கேட்டார்?''

''என்னிடத்திலே உள்ள நோயின் அறிகுறிகள் எல்லாவற்றையும் அவரே சுட்டிக் காட்டினார். எனக்கே ஆச்சரியமாக இருந்தது.''

''என்னவெல்லாம் கேட்டார்?''

''சாயந்தரமானதும் ஒற்றைத்தலைவலியால் ஏற்படுகிற உபத்திரவம், உறக்கம் வராமல் கிடந்து புரளுகிற தவிப்பு, உடம்பு முழுவதும் எப்போதும் வதைக்கிற வலி, யாராவது பிடித்து விட்டுக்கொண்டே இருந்தால் தேவலை என்கிற நிலை, அடிவயிற்றிலே சுருட்டி இழுக்கிறமாதிரி வேதனை, கொஞ்சம் புளிப்புக் கூடுதலாக உள்ள மோர் உபயோகப்படுத்துவதில் அடக்க முடியாத மோகம் - இவற்றையெல்லாம் அவர் ஒவ்வொன்றாய்த் துருவித் துருவிக் கேட்டுத் தெரிந்துகொண்டார். நிற்க வைத்து, பிறகு படுக்க வைத்து, புரட்டிப் பார்த்து இப்படிப் பலபடியாகவும் என்னை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்தார். மற்ற டாக்டர்களுக்கு இருக்கிற சிடுசிடுப்பும் பரபரப்பும் இவரிடத்தில் இல்லை. நாம் சொல்லுவதைப் பொறுமையாகக் கேட்கிறார். நாம் சொன்னது சரியாகப் புரியவில்லையென்றால் அப்படியே விட்டுவிடுவதில்லை; மறுபடியும் கேட்டுத் தெரிந்துகொள்கிறார். தேவு, (தேவகி) நான் அந்த டாக்டர் முதலியாரிடத்திலே 'ட்ரீட்மென்ட்' எடுத்துக் கொள்ள வேண்டாமென்று ஏன் நிர்மானித்தேன் தெரியுமா?''

''தெரியாதே!''

''சொல்லுகிறேன், கேள். முதலாவது, அந்த ஆசாமி சரியாய்க் கவனித்துப் பார்க்கவில்லை; அவன் அறைக்கு வெளியே எப்போதும் நூற்றுக்குக் குறையாமல் நோயாளிகள்- அதுவும் பஞ்சைப் பநாதைகள்- காத்துக்கொண்டே கிடப்பார்கள். 'நாக்கை நீட்டு' என்று ஆள் சொல்லுவான். நாக்கைப் பார்த்துவிட்டு, 'ம், ம்! ''உங்களுக்கு உடம்பிலே ஒரு கோளாறும் இல்லையே! எப்போதும் காரிலேயே சுற்றிக்கொண்டிருக்காமல் கொஞ்ச நேரமாவது காலார நடக்க வேண்டும். கூடவே கொஞ்சம் அடுக்களைப் பணியும் செய்வது நல்லது. சாப்பாடு இப்போது உட்கொள்ளுகிற அளவிலே பாதி குறைத்துவிடவேண்டும். முக்கியமாய், நெய்யும் கொழுப்புச் சத்தும் கொஞ்சமாய்ச் சாப்பிட வேண்டும். காரத்தையும் புளியையும் ஒதுக்குவது நல்லது' என்று போதிப்பான். எனக்கு அந்த ஆளின் பேச்சைக் கேட்கிற போது,



எங்கேயும் இல்லாத வெறுப்புதான் ஏற்படும். எனக்கு உடம்பு சரியில்லை என்கிறது, எனக்கு அல்லவோ தெரியும்? அது அப்படி இல்லை என்று அந்த ஆசாமி சொல்லிவிட்டால், அது

இல்லாமலே ஆகிவிடுமோ? அந்த ஆள் பேசுகிற தோரணையைப் பார்த்தால், நானும் என்னைப் போலொத்தவர்களும் வேறு வேலைவெட்டி இல்லாமல், தன் புத்தியைக் குழப்பத்தான் அங்கே வருகிறோம் என்று



அவன் நினைப்பது தெரிகிறது.''

''டாக்டர் மயூரம் எப்படி?''

''அவருடைய 'கிளினிக்'கில் வீண் கூட்டம் கிடையாது. வருகிறவர்கள் எல்லாரும் 'ஹை கிளாஸ்' பேர்வழிகளாக்கும். டெபுடி ஸெக்ரெடரி கோவிந்தராஜனின் மகள் சரோஜம், பிரிஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டின் சம்சாரமும் மூத்த மகளும், கிராஜ்மல் கிராபாய் ஸேட்டின் நாலாவது மனைவி, மேஜர் பொண்ணப்பாவின்

சிநேகிதி திலகம், பிலிம் ஸடார் குங்குமம், புஷ்பராகம் - இத்தகையவர்களே அந்த இடத்துக்கு வருகிற வாடிக்கைப் பேஷண்டுகள். பணம் அதிகந்தான்; கொடுத்தால் என்ன மோசம்? நம்முடைய அசௌக்கியத்தைச் சரியாக மனத்தில் வாங்கிக் கொண்டு, நல்ல படியாக வைத்தியம் பண்ணுகிறபோது, பணம் கொடுத்தால் என்ன நஷ்டம்? என் சமாசாரத்தையே பார்க்கலாமே. டாக்டர் மயூரத்தைக் கன்ஸல்டு செய்வதற்கு முன்பு, இந்த நகரத்திலுள்ள எத்தனை எத்தனை டாக்டர்களை நான் போய்க் 'கன்ஸல்டு' செய்திருக்கிறேன்! கணக்கிட்டுச் சொல்ல முடியாது. வீணுக்குச் செக் எழுதிக் கொடுத்துவிட்டு வந்ததுதான் மிச்சம். இப்போதுதான் விவரம் தெரிகிறது. அலர்ஜி, வெறும் ஸிம்பிள் அலர்ஜி! இருந்தாலும் இதைக் கண்டுபிடித்துச் சொல்லவும் ஓர் ஆள் வேண்டுமல்லவா? நான் இன்றைக்கு என்னுடைய மாமாவின் மகள் ரத்தினத்துக்கு எழுதிப் போடப் போகிறேன்.''

''என்னத்தை எழுதப் போகிறாய்?''

''அவளுக்கும் இதே அலர்ஜிதான்.''

''எப்படித் தெரியும்?''

''அது எனக்குத் தெரியும். அது இல்லாமல் வேறு ஏதும் இருக்க வழியில்லை, தேவு! நீயும் டாக்டர் மயூரத்தினிடம் உடம்பைக் காட்டிக் 'கம்ப்ளீட் செக்கப்' செய்துகொள். உனக்கும் அலர்ஜிதான் இருக்கும். இருக்கும் என்ன? நிச்சயம் உனக்கு அலர்ஜியேதான்! இன்றைக்கே போய்ப் பரிசோதனை செய்துகொண்டு வந்துவிடு.''

பாவம்! மாதவனுடைய அடிவயிற்றிலே இடியும் மின்னலுமாக முழங்கத் தொடங்கியது. தவணை வாயிதாவில் வாங்கிய மோட்டாருக்கும், தையல் மிஷினுக்கும் போன மாதத் தவணைத் தொகையே இன்னும் பாக்கி நிற்கிறது; இது போதாதென்று, இப்போது தேவகிக்கு இப்படி ஒரு யோசனையை, இந்த வேலை வெட்டி இல்லாத பழிகாரி வந்து போதித்துத் தொலைக்கிறாளே!

''பேபி, எனக்கு ஒரு சந்தேகம்.''

''என்ன தேவு?''

''அலர்ஜி; எனக்கும் அலர்ஜிதாண்டீ!''

'தொலைந்தே போனேன், பகவானே! அரை மாதத்துச் சம்பளத்தை அந்தத் துரோகி, பாவிப்பயல் மயூரம் தட்டிக்கொண்டு போகப் போகிறான்.'

''அதைப்பற்றி உனக்கு ஏன் சந்தேகம்? தேவு, உனக்கு அலர்ஜியேதான்; க்ரானிக் அலர்ஜி! இன்றைக்கே நீ டாக்டர் மயூரத்தினிடம் போக வேண்டும்; கன்ஸல்டு செய்ய வேண்டும். போகிற வழியில் நான் அங்கே இறங்கி, நீ சாயந்தரம் வரப் போவதைச் சொல்லிவிட்டுப் போகிறேன். கவலைப்படாதே.''

பிறகு நடந்ததைப்பற்றி மாதவனுக்கு ஏதும் தெளிவாகத் தெரியாது. பொறுக்க முடியாமல் போகும்போது இயற்கை - அந்தப் பெரிய அன்னை - அருள் புரியத்தான் புரிகிறாள். நினைவு தவறும்; இல்லாவிட்டால் தலை சுற்றி மயங்கி விழுவான். மாதவனுக்கு இயற்கை அன்னை அந்த இரண்டாவது நிலையை அருளினாள், இந்தச் சமயம்.

பிறகு, இரண்டு மூன்று நாட்கள் வரையில், மாதவனுடைய வீட்டில், டாக்டர் மயூரத்தின் பெருமைகளை விளக்கும் துதிச் சொற்களே எதிரொலித்துக்கொண்டிருந்தன. மயூரத்தை (மயிலை)த் தம் வாகனமாகக் கொண்டுள்ள ஆறுமுகக் கடவுளுக்கே அதைக் கேட்டுக் கொஞ்சம் பொறாமை ஏற்பட்டிருக்க வேண்டும்; நிச்சயம்!

மயூரத்தின் பண்பு, மயூரம் வியாதியைக் கண்டு பிடிக்கும் திறமை, மயூரத்தினுடைய பொறுமையின் பெருமை, மயூரமும் அலர்ஜியும் - இப்படிப் போய்க்கொண்டே இருந்தன மயூர மகிமையின் திருப்புகழ்த் துதிகள்.

மாதவன் வெகு நாள் முன்பே ஒரு விஷயத்தைத் தெரிந்து வைத்திருந்தான். தேவகி சமூகத்தில் தன்னைவிட உயர்ந்த நிலையில் இருக்கும் பெண்களுடன் நட்புரிமை கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் முனைப்புடையவள். கோயம்புத்தூரில் உள்ள மில்லிலிருந்து அவன் நீக்கப்பட்டபோது, அந்த முனைப்புத்தான் மாதவனுக்கு இரண்டே வாரங்களுக்குள் இந்தப் புது வேலையை வாங்கிக் கொடுத்தது. தேவகியினுடைய உற்சாகம், யாருக்கும் ஏதும் செய்ய விழையும் துடிப்பு, பெரியவர்கள் ஏதாவது தாறுமாறாகப் பேசினாலும் அதையெல்லாம் பொறுத்துக்கொள்ளுகிற மனத் திட்பம், மரியாதை நிறைந்து பண்பாகப் பழகுவதும் பேசுவதும் - இவை எல்லாமே இத்தகைய வம்புக்காரிகளையும் உதவாக்கரைகளையும் அவளுக்குத் தோழிகளாகச் சேர்த்து விடுபவை. ஆனால், இயல்பாகவே நாணமும் கூச்சமும் நிறைந்த மாதவன் அவர்களிடமிருந்து ஒதுங்கி விலகியே இருந்துவந்தான்.

கடைசியில் தேவகி மாதவனையும் தன் வழிக்கு இழுத்துக்கொண்டாள்.

''உங்களுக்கு ஏன் இப்படி ஒரு மந்தம்?''

''ஒன்றுமில்லையே!''

''ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டால் ஆகிவிடுமா?''

''ஒன்றும் இல்லை என்கிறேனே. பையனைச் சிகரெட் வாங்கிவர அனுப்பினேன். இன்னும் வரக் காணோமே என்கிறதனாலே இப்படித் தெரிகிறது.''

''இல்லை.''

''பின்னே?''

''அலர்ஜிதான் இது.''

''யாருக்கு?''

''உங்களுக்குத்தான்.''

''அப்படியென்றால்?''

''இதுதான் அதற்கு அறிகுறி. உங்களுடைய இந்த மந்தம், தூங்கி வழிதல் இதுதான்.''

''ஆண்களுக்குக்கூட அலர்ஜி வருமோ?''

''ஆண்களைக் கண்டால் அதற்குப் பயமா என்ன? அலர்ஜிக்கு யாரிடத்திலேயும் எந்த விதப் பயமும் கிடையாது.''

"இது போகட்டும், தேவகி, நீ போய் டாக்டர் மயூரத்தைப் பார்த்தாயா?''

''பார்த்தாயாவா? மூன்று தடவை போய்க் கன்ஸல்ட் செய்து வந்திருக்கிறேன்.''

''அப்புறம்?''

''எனக்கு அலர்ஜிதான் என்று அவர் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டார்.''

''அப்படியானால் எனக்கும் அதுவாகத்தான் இருக்க வேண்டும். அலர்ஜி என்பது தொத்து வியாதியோ?''

''பின்னே? நீங்கள் இன்றைக்கே போய் மயூரத்தைப் பார்த்துவிட்டு வர வேண்டும்.''

இந்தச் சமயத்தில், 'கேட்'டுக்கு எதிரே ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெண் இறங்கி வெளியே வந்தாள். மாதவன் வழக்கம் போல் தன் அறைக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

வந்த பெண்ணை மிக ஆதரவுடன் தேவகி வரவேற்றாள். வந்தவளுக்கு வயசு 24, 25தான் இருக்கும்; என்றாலும் தலையில் இங்குமங்குமாகச் சில நரைத்த கேசங்கள் தென்பட்டன. பிரபலத் தொழிலதிபர் கோஸல்ராம் அவளுடைய கணவர்; ஐம்பது வயசைத் தாண்டியவர். இன்னும் கொஞ்சம் நெருங்கிப் போய் அறிமுகப்படுத்த வேண்டுமென்றால் இவள் அவருடைய நாலாவது சம்சாரம் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

கோஸல்ராமை மாதவன் ஒரு சமயம் டெர்மினஸ் ஸ்டேஷனில் பார்த்திருக்கிறான். நாலரை அடி உயரம்; குறுகிய கால்கள்; பயங்கரமாக முன்னுக்குத் தள்ளியிருந்த பெருந்தொந்தியைத் தாங்க முடியாமல் அந்தக் குறுகிய கால்கள் விறைத்தன; தலை முழுவதும் சுத்தமான வழுக்கை; செவிகளில் அடர்ந்து மண்டியிருந்த உரோமம்; குதிரைக் குளம்பு மாதிரி அகலமான பற்கள்; எப்போது பார்த்தாலும் தாம்பூலத்தைச் சவைத்துச் சவைத்து நினைத்த இடமெல்லாம் துப்பிக்கொண்டிருக்கிற கெட்ட பழக்கம்.

எதையோ கண்டு பயந்து பிரமை பிடித்தவளைப் போல், சவக்களையோடு நின்றிருந்தாள் அந்தப் பெண். யார் பார்த்தாலும் அவளது தோற்றத்தைக் கண்டு இரக்கந்தான் ஏற்படும்.

உள்ளே வந்து உட்கார்ந்ததும் அவள் சொன்னாள்: ''தேவு, நீ சொன்னபடியே நான் டாக்டர் மயூரத்தைப் போய்ப் பார்த்தேன்.''

''அப்புறம்?''

''எவ்வளவு நல்ல மனிதர் அவர்! எவ்வளவு பரிவுடன் நான் சொன்னதையெல்லாம் அவர் கேட்டுக்கொண்டிருந்தார் தெரியுமா?''

''அதற்கப்புறம்?''

''என் வீட்டுக்காரர் சொல்வதெல்லாம் வெறும் அபத்தம் என்று டாக்டர் எனக்கு வெகு சீக்கிரத்திலேயே தெளிய வைத்துவிட்டார்.''

''எப்படி?''

''எனக்கு உடற்கோளாறு ஏதும் இல்லை; வெறும் பிரமைதான்; வெறும் நரம்புத் தளர்ச்சிதான்; வீட்டு வேலை ஏதும் செய்யாமல் சோம்பிக் கிடக்கிறதனாலேதான் இந்தக் கோளாறு. இப்படியெல்லாம் என் கணவர் எனக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார் அல்லவா? இதையெல்லாம் கேட்கிறபோது, என் உடம்பு மேலும் மோசமாகும். ஆனால், டாக்டர் மயூரம் தீர்மானமாகச் சொல்லிவிட்டாரே; நான் சொல்லுவதுதான் சரி என்று ஒப்புக்கொண்டார்.''

''அது எப்படி?''

''எனக்கும் அலர்ஜிதானாம்.''

''அது சரி; அப்புறம் என்ன சொன்னார் டாக்டர்?''

''அலர்ஜி மேலே வராமல் இருக்க வேண்டுமானால், எனக்கு விருப்பம் இல்லாத பட்சத்தில் கணவருடைய படுக்கையறையில் ஒன்றாகப் படுக்க வேண்டாம் என்று யோசனை சொன்னார்.''

''அதுவும் நல்லதற்குத்தான். அதற்கும் ஒரு கட்டுப்பாடு வந்ததே.''

அந்தப் பெண் பிறகு தன் அலர்ஜியுடன் வெளியே போனாள்.

தேவகியின் அரற்றலை மாதவனால் சகிக்க முடியவில்லை. வேண்டாவெறுப்பாக, வேறு வழியின்றி, மாதவன் டாக்டர் மயூரத்தின் 'கிளினிக்'குக்குப் போய்ச் சேர்ந்தான். ஜி.ஐ.டி. காலனியில் இருந்தது அந்தக் கிளினிக்; மூன்று மாடிக் கட்டிடம்.

மிகவும் அழகான பூந்தோட்டம் முன்பக்கத்தை அலங்கரித்தது. கார்களை நிறுத்த ஒதுக்கத்தில் தனி இடம். துல்லியமாக உடை அணிந்த பணியாட்கள். ஒயிலும் அழகும் பூரிக்கிற இளம் நர்ஸுகள் நாலைந்து பேர்கள்.

பெயர்ச் சீட்டைக் கொடுத்தனுப்பிவிட்டு, வெகு நேரம் வெளியே காத்திருக்க வேண்டும்; அப்போதுதான் அவரைப் பேட்டி காண முடியும். ஆனால், மாதவனுடைய கார்டு கிடைத்ததுமே, டாக்டர் மயூரம் வெளியே விரைவாக வந்து சேர்ந்தார். செல்வர்களான நாலைந்து நோயாளிகளும், நர்ஸ் சுந்தரிகளும் டாக்டரின் இந்த விரைவைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

'டாக்டர் மயூரம் - உள்ளே' என்று பொறித்து வைத்த பலகைக்கு எதிரே, அதன் அழகைக் கண்டு ரசித்தவாறு நின்றுகொண்டிருந்த மாதவனைப் பின்னாலிருந்து யாரோ கட்டி அணைத்ததும் அவன் திடுக்கிட்டுப் போனான்.

திரும்பிப் பார்த்தான் மாதவன்; அவனுடைய பழைய நண்பன் நின்றுகொண்டிருந்தான். மஞ்ஞூரத்துக் கோபி! ஹாஸ்டலில் ஒரே அறையில் சேர்ந்திருந்த அதே கோபிதான்!

''கோபி! நீ இங்கே......?''

கோபி கலகலவென்று சிரித்தான். மாதவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

''அடே முட்டாள்! உனக்கு இன்னும் புரியவில்லையாடா? நான் தாண்டா இந்தப் பிரசித்த டாக்டர் மயூரம்.''

மாதவனுக்குத் தலை சுற்றியது. சவடால் பேர்வழிகளுக்கெல்லாம் சக்கரவர்த்தியாக விளங்கிய இந்தக் கோபியா நாகரிகப் பெண்களைக் குழப்பிக் கவர்ந்திழுக்கிற டாக்டர் மயூரம்?

டீபாட் நிறைய டீயும், ஒரு பாக்கெட் சிகரெட்டும் உடனே வந்து சேர்ந்தன.

''மாதவா, நான் இதோ கொஞ்ச நேரத்திலே வந்து சேருகிறேன். நாலைந்துபேர்களைக் கவனித்துஅனுப்பிவிட்டு வருகிறேன். நான் திரும்பி வரு

கிறபோது, இந்த டீயும் சிகரெட்டும் கொஞ்சமும் மீதி இருக்கக் கூடாது; முழுவதும் தீர்த்துக் கட்டவேண்டும்.''

மாதவன் நினைத்துப் பார்த்தான்: இந்த உலகத்தில் என்ன என்ன அதிசய மாயாஜாலங்களெல்லாம் நடக்கின்றன! யார் யாரையோ காலைப் பிடித்துக் கையைப் பிடித்து, கோபிக்கு மெடிகல் காலேஜில் அட்மிஷன் கிடைத்தது. பக்கத்தில் இருந்த 'வேர்லி' ஹாஸ்டலில் தங்க இடமும் கிடைத்தது.

பார்க்க மிகக் கவர்ச்சியாக இருப்பான் கோபி; எடுப்பான தனிக் கவர்ச்சி. கிடைத்த இடத்தில் படுத்து உறங்கிவிடுவான். மீதிப் போதில் நன்றாக உடுத்துக்கொண்டு பெரிய மனுஷர் வட்டாரத்தில் புகுந்து புறப்பட்டு நெருங்கிப் பழகுவதே அவனுடைய ஜோலி.

எட்டரை வருஷங்கள் கழித்துத்தான் இந்த ஐயா எம்.பி.பி.எஸ். பட்டத்தைக் கண்ணால் கண்டார்! அதுவும் போராடிப் போராடிப் பெற்ற பட்டம்.

பிறகு கோபியைப்பற்றித் தகவல் ஏதும் மாதவனுக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு இன்றுதான் கோபியை மாதவன் முதல் தடவையாகப் பார்க்கிறான்.

மேலே அணிந்திருந்த 'ஆப்ரன்' கோட்டைக் கழற்றி வீசி எறிந்துவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு கோபி சிரித்தபடியே வந்து சேர்ந்தான்.

''டேய் மாதவா, உனக்குத் தெரியவே தெரியாதாடா, நம் பழைய கோபிதான் இந்த டாக்டர் மயூரம் என்கிற விஷயம்?''

''தெரிந்திருந்தால் இப்படியா உன்னைக் காண வந்திருப்பேன்?''

''அடே ஏமாளி மாதவனே! என் பெயரை டாக்டர் மயூரம் என்று மாற்றிக்கொள்ள எனக்குத் தோன்றியதே, அதுதாண்டா என்னுடைய 'ஹைக்ளாஸ் ஜீனியஸ்'. அன்றைத் தினத்திலிருந்துதான் என் மகா பாக்கியம் தொடங்கியது. அசல் கட்டுப்பெட்டியான பழைய குடும்பத்தில் பிறந்த மஞ்ஞூரத்து எஸ். கோபால பிஷாரடி ஜி. எஸ். மயூரம் என்று மாறியதும், முன்பு நம்மைக் கண்டு அலட்சியமாய் ஒதுங்கியவர்கள்கூட இப்போது விரும்பி வரத் தொடங்கியிருக்கிறார்கள்.''

மாதவன் விழுந்து விழுந்து சிரித்தான். 'இவனுக்கு வயசு வளர்வதே இல்லை. இவனும் இவனைப் போல் உள்ளவர்களும் நித்திய யௌவனத்தின் நிரந்தரமான காவலர்கள்.'

மாதவன் தேவகியை மணந்து கொண்டது, அவனுக்கு வேலை கிடைத்தது, வேலை போனதும் மீண்டும் வேறு அலுவல் கிடைத்தது ஆகிய எல்லாத் தகவல்களையும் கோபி அவன் வாயிலாகவே வரவழைத்தான். பிறகு, மாதவன் வீட்டுக்குத் தானும் வரவேண்டுமென்று அடம் பிடித்தான்.

''வேண்டாம் அப்பா! நீ என் வீட்டுக்காரியை இங்கேயே பார்த்திருக்கிறாய்; நன்றாகவே கவனித்துப் பார்த்திருக்கிறாய்.''

''எப்போது? எந்த இடத்திலே பார்த்திருக்கிறேன்?''

''இங்கேயேதான். அலர்ஜிதான் என்று தீர்ப்பு வேறு எழுதிக் கொடுத்திருக்கிறாய். அதே அலர்ஜிதான் எனக்கும் என்று அவள் தீர்ப்பளித்திருக்கிறாள்.''

கோபி உரக்கச் சிரித்தான். வயிற்றைப் பிடித்துக்கொண்டு, தடவிவிட்டுக்கொண்டு மீண்டும் மீண்டும் சிரித்தான். பிறகு, ''ஓஹோ! மிஸஸ் மாதவனும் இந்தச் சோம்பேறிக் கூட்டத்தைச் சேர்ந்தவள்தானா? பாவம்! என் ஆத்மார்த்தமான அநுதாபம் உனக்கு உரித்தாகுக!'' என்றான்.

''தோழா, நீ அலர்ஜி என்று சொல்லுகிற அந்த வியாதிதான் என்ன?''

''நீதான் சொல்லேன்!''

''நான் எப்படிச் சொல்லுவேன்? எனக்கும் அந்த வியாதி பீடித்திருப்பதாகத்தானே மாதவி சொல்லுகிறாள்?''

''சரி, ஆகட்டும். நீ பரப்பிரம்மத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அப்படியானால், அது என்ன என்று எனக்கு விளக்கிச் சொல்ல முடியுமா?''

மாதவன் வாயைப் பிளந்துகொண்டு நின்றான்.

''அலர்ஜி என்பது பரப்பிரம்மத்தைப் போன்றதுதான். இப்போதாவது உன் மனத்துக்குப் புரிந்ததா? அது எல்லாமாக இருக்கும், ஆனால் எதுவுமாக இராது; அது எல்லாவற்றிலும் இருக்கும். ஆனால் எதிலும் காணக் கிடைக்காது; அது எல்லாரிடத்திலும் உள்ளது; ஆனால் எவரிடத்திலும் தென்படாது. இப்போது புரிந்ததோ ஸ்ரீமான் மாதவன் அவர்களே?''

''அப்படியானால் நான் வந்த காரியம்?''

''உனக்கு என்னடா கேடு?''

''தேவகி எனக்கும் அலர்ஜி என்று சொல்லுகிறாளே! அது இல்லை என்று சொல்லிக்கொண்டு நான் அங்கே போனால், அவள் என்னை வீட்டுக்குள் விடமாட்டாளே! அதனாலே நீ அவளைப் பரிசோதித்து, 'டயக்னஸ்' செய்து தீர்ப்பளித்ததைத் திருத்தி அமைத்தாக வேண்டும்.''

''சரி, சரிப்படுத்திவிடுகிறேன்.''

''பிறகு, அதற்கு உண்டான வைத்தியமெல்லாம்?''

''போய்ப் படுத்துத் தூங்கு; மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டுவிட்டுத்தான்.''

இந்தச் சமயத்தில் ஒரு விஸிட்டிங் கார்டை எடுத்துக்கொண்டு பணியாள் ஒருவன் வந்து சேர்ந்தான். அதை அலட்சியமாகப் பார்த்துவிட்டுக் கோபி சொன்னான்: ''இதோ இன்னொர், 'அலர்ஜி' வந்து சேர்ந்திருக்கிறது. கல்யாணம் செய்து கொடுக்க வேண்டிய காலத்தில் தகுந்த வரனைப் பார்த்து, 'இந்தாப்பா! கையைப் பிடி, கொண்டு போ!' என்று கட்டிவிடாததனால் வந்த ஆபத்தான கோளாறுதான் இது. இதுவும் அலர்ஜிதான். சரி, மாதவா, நாளைச் சாயந்தரம் கட்டாயமாய் நாம் மீண்டும் சந்திக்க வேண்டும். நான் என் காரை உன் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். அதுவரைக்கும்.... டாட்டா!''

மாதவனும் டாக்டர் மயூரமும் அதன் பிறகு தினமும் மாலை வேளையில் சந்திப்பதென்பது தவறாத நிகழ்ச்சியாகிவிட்டது. தேவகி இந்தச் சந்திப்பையும் சிநேகத்தையும் மிகவும் வரவேற்றாள்; ஊக்கமளித்து வந்தாள். காரணம், அலர்ஜி நோயாளிகளான தோழிமார்களிடையே தேவகியின் மதிப்பும் புகழ்ச்சியும் அவை மூலமாக 'ஸ்புட்னிக்' போலே எழும்பி உயர்ந்து போயின.

மயூரம் வசித்து வந்தது சகல வசதிகளும் நிறைந்த நவநாகரிக பங்களா. நானூற்றைம்பது ரூபாய் மாத வாடகை. ஏர்கண்டிஷன் செய்த அறைகள்; இரண்டு கார்கள். இரண்டு ரிபிரிஜிரேட்டர்கள்; இரண்டு அல்சேஷியன் நாய்கள். இவற்றுக்கு அப்புறம் டாக்டருடைய கிளினிக்.

தன் மனத்திலே இருக்கிற சந்தேகங்களைத் தெளிவாகவே கேட்டுவிடுவதென்று மாதவன் தீர்மானித்தான்.

''கோபி, நீ இதையெல்லாம் எப்படியடா சம்பாதித்தாய்? எப்படி உனக்கு இதெல்லாம் சாதிக்க முடிகிறது?''

ரூபாய்க்கு ஒன்று என்று விற்கிற உயர் ரகச் சிகரெட்டு ஒன்றைச் சர்ச்சிலைப் போல் கடித்துக்கொண்டு, ஸ்டைலாக மயூரம் திரும்பவும் கேட்டான்: ''இதெல்லாம் என்றால்? எதெல்லாம்?''

''இந்த வீடு, கார், இந்த ஷோ— எல்லாமேதான்.''

''உனக்குத் தெரிந்துதான் ஆக வேண்டுமா, மாதவா?''

''தெரிந்துகொள்ளலாமே என்ற எண்ணம்; அவ்வளவுதான்.''

''அப்படியானால் சொல்லுகிறேன். ஆனால் நீ என் கையடித்துக் கொடுக்க வேண்டும்: தேவகியிடத்திலேகூட நீ இதைச் சொல்லக்கூடாது.''

மாதவன் கையடித்துக் கொடுத்தான்.

''மெடிகல் காலேஜிலிருந்து தப்பி வெளியே வர எனக்கு எட்டரை வருஷகாலம் வேண்டியிருந்தது என்பது உனக்குத்தான் தெரியுமே. அப்போது என் வீட்டாருக்கும் சொந்தக்காரர்களுக்கும் என்னைக் கண்டாலே ஒரு வெறுப்பு. சீக்கிரம் கொஞ்சம் பணத்தைச் சேமிக்க, நான் முதலில் மதுரைக்குப் போய், ஒரு டாக்டரிடம் அஸிஸ்டென்டாக அமர்ந்தேன். 'ஸர்ஜரிக்கும் மெடிஸினுக்கும் இவனை வைத்துக்கொண்டு பேர் சொல்ல முடியாது; தொழிலோ நடத்தவே முடியாது' என்று அந்த நிபுணர் கூடிய சீக்கிரமே கண்டுகொண்டார். ஆனால் நானும் அவரைப்பற்றிய ஓர் உண்மையைத் தெரிந்துகொண்டேன்.''

''என்ன அது?''

''அந்த ஆசாமி ஒரே ஒரு நோயை வைத்துக்கொண்டு, கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்து வந்தார்.''

''என்ன வியாதி அது?''

''கொலைடிஸ் (Colitis)''.

''அப்படியென்றால்?''

''அலர்ஜியினுடைய மூத்த சகோதரன் என்று தெரிந்துகொள், போதும். அந்த நோய்க்குப் பாதுகாப்பாளர், அந்த ஆசாமி. பணக்கார வீட்டுப் பெண்களெல்லாரும் மிக விரைவில் கொலைடிஸ் (குடல் அழற்சி) நோயாளிகள் ஆனார்கள். அவரிடத்திலே வருகிற சகல ஹிஸ்டீரியாக்காரிகளுக்கும் இந்தப் பெயரைக் (கொலைடிஸ்) கேட்டதும், ஒரு திருப்தி. சிலர் ஆறுதல் ஏற்பட்ட பூரிப்பில் அழுதே விடுவார்கள். ஒருத்தி போய்க் கையோடு நாலு பேர்களை அழைத்து வந்துவிடுவாள். அந்த நாலு வாடிக்கைக்காரிகளும் மேற்கொண்டு பதினாறு பேர்களை அழைத்து வருவார்கள். அப்புறம் என்ன? எல்லாருக்குமே கொலைடிஸ்; எல்லாவற்றுக்கும் கொலைடிஸ்! இந்த வழியில் அந்த ஆசாமி வெகு விரைவில் ஏராளமாகப் பணம் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார். ஆனால், திடீரென்று காற்றுத் திசை மாறியது.''

''எப்படி?''

''வேலை வெட்டி இல்லாத இவ்வளவு பெண்களுக்கும் ஒரு தீர்மானம் கிடையாது. எப்போதும் அவர்களுக்குப் புதுமையான வியாதி ஒன்று இருக்க வேண்டும் என்பது 'நியூட்டன் நியதி' போல் இன்றியமையாதது; மறுக்க முடியாதது. 'கொலைடிஸ்' சட்டென்று 'அவுட் ஆப் பேஷன்' ஆகிவிட்டது.''

மாதவன் சிரித்தான்.

''இதேபோல் வேறொரு டாக்டர். அவர் 'அப்பெண்டிஸைடிஸ்' வியாதிக்குச் சம்ரட்சகர். எந்த நோயாளி வந்தாலும் உடம்பிலே அங்கேயும் இங்கேயும் இரண்டு தட்டுத் தட்டி அந்த ஒரு வியாதியையே எல்லாருக்கும் சூட்டிக் கொஞ்ச காலத்துக்குள்ளேயே ஏராளமாகப் பணம் சம்பாதித்துவிட்டார்.''

மருத்துவ உலகில் புழங்கி வரும் இந்த மகா ரகசியங்களைக் கேட்டு மாதவன் வியந்து போய் வாயைப் பிளந்துகொண்டு நின்றான்.

மயூரம் உற்சாகத்துடன் தொடர்ந்தான்: ''பிராக்டிஸ் குறைந்ததும் அந்த மதுரை டாக்டர் என்னை வெளியே அனுப்பிவிட்டார். பிறகு நான் இந்த நகரத்துக்கு வந்து சேர்ந்தேன். தொடக்கத்தில் மிக எளிய முறையில் 'பிரைவேட் பிராக்டிஸ்' ஏற்படுத்திக் கொண்டேன்.''

''அப்புறம்?''

''ஒன்றும் நடக்கவில்லை. செலவுக்கு வேண்டிய அளவுக்கே கஷ்டப்பட்டுச் சேகரிக்க வேண்டியதாக இருந்தது. நான் அப்போது ஒரு முட்டாள்தனத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தேன்.''

''என்ன அது?''

''இருக்கிறதை அப்படியே சொல்லி வந்தேன்; உண்மையைச் சொன்னதுதான் முட்டாள்தனமாயிற்று. எந்த விதமான நோய்நொடியும் இல்லாமல் அங்கே வலி, இங்கே உபத்திரவம் என்று முறையிட்டுக்கொண்டு வருகிறவர்களிடம் நான் உண்மையான உடல்நிலையை எடுத்துச் சொல்லிவிடுவேன். ஆனால், நான் என்னத்தைச் சொல்ல? அவர்கள் எல்லாரும் எனக்கு விரோதிகளாகி ஒதுங்கிப் போனார்கள். 'இந்த டாக்டர் ஒரு பைசாவுக்குக் கூட லாயக்கு இல்லாதவன்' என்று என் தகுதியைப் பறை சாற்றி வந்தார்கள்.''

''அப்புறம்?''

''ஞானோதயமானாற்போல ஒரு நாள் நான் இந்த 'அலர்ஜி'யைக் கண்டுபிடித்தேன். அதன் பிரபாவத்தினால் தான் நீ இப்போது காண்கிற இந்தச் சொர்க்க போகமெல்லாம் எனக்குக் கிட்டியிருக்கிறது.''

இருவரும் வெகு நேரம் உரக்கச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

கொஞ்ச நேரமானதும் கோபியினுடைய முகத்தில் ஒரு மாற்றம் உண்டாயிற்று. அவன் சொன்னான்: ''மாதவா, நீ ஒரு விஷயத்தைக் கவனித்தாயா? ஹாஸ்டலில் நாம் சேர்ந்து இருந்த காலத்திலேயும், ஒவ்வொரு சமயம் ஏதாவது 'கோல்மால்' காரியத்தில் இறங்குபவர் எல்லாரும் என்னிடம் வந்து சேருவது வழக்கம்; ஞாபகம் இருக்கிறதா? என்னிடம் வந்து பேசிக்கொண்டிருந்தால், என்னிடம் உள்ளதை உள்ளபடி சொல்லிக்கொண்டால், அவர்கள் எல்லாருக்கும் ஏதோ ஓர் ஆறுதல் ஏற்படுவதுபோல் தோன்றும். என்னிடம் அவர்களுக்கு அப்படி ஒரு நம்பிக்கை. இந்தத் தகுதி எனக்குச் சிறப்பாக இருக்கிறது என்ற உண்மையை நான் மதுரையில்தான் உணர்ந்துகொண்டேன். ஹிஸ்டீரியாவினாலே அவதிப்படுகிறவர்கள் கிடக்கட்டும், புத்தி சுவாதீனமில்லாதவர்கள்கூட என்னிடம் வந்து சேர்ந்தால், படிப்படியாக அடங்கி அமைதியாகப் பழகுவதை நான் கண்டுகொண்டேன். நான் அவர்களைத் தொட்டால் போதும், அதுவே அவர்களுக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும்.''

''அதென்ன மாயம்?''

''அது என்ன அற்புத மாயம் என்று எனக்கு இன்றைக்கும் சரியாகப் புரிந்தபாடில்லை. நோயாளியின் நம்பிக்கையை முழுவதும் டாக்டர் பெற்றுவிட்டால், அவர் ஜயித்தார்!''

''அப்படியானால் உன்னுடைய தொழில் ரகசியம்?''

''அதைத்தான் சொன்னேனே! 'அலர்ஜி'தான் என்னைக் கை தூக்கிவிட்டது. தாம்பத்திய வாழ்வில் பொருத்தம் இல்லாமையால் விளையும் கேடுகள், திருமணமாகாத நிலையில் ஏற்படும் சங்கடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சுமார் தொண்ணூறு சதவீதம் பெண்கள் ஒரு வகையில் இல்லாவிட்டாலும் மற்றொரு வகையில் 'ஹிஸ்டீரியா'வுக்கு இரையானவர்கள்தாம். அவர்களுக்கு வேண்டியதெல்லாம், அதிகமான அநுதாபம், பரிவு. அவர்கள் முறையிடுவதை எல்லாம் பொறுமையுடன் கேட்டுக் கொள்ள வேண்டும். இந்த வழியில் திறமை கொண்ட டாக்டர்கள்தாம் அந்தப் பெரும்பான்மையான நோயாளிகளுக்குத் தேவைப்படுபவர்கள். அவர்களின் துயரத்தை அநுதாபத்தோடு கேட்டுக்கொண்டு 'வெறும் அலர்ஜிதான் உங்களுக்கு, வேறொன்றும் இல்லை' என்று அவர்களுக்கு ஆறுதலாகச் சொல்லிப் போதித்து, இப்படியெல்லாம் அவர்களை ஆசுவாசப்படுத்தி நிறையப் பணம் சம்பாதித்து வருகிற நானும் ஒரு வகையில் மனித அபிமானத்தோடு மனித குலத்துக்குத் தொண்டு புரிபவன்தான் என்பதை நீ எப்படி மறுத்துச் சொல்ல முடியும்?''

இந்தச் சமயத்தில், பக்கத்தில் இருந்த போன் அலறியது. கோபி அதை எடுத்துச் செவியில் வைத்துக் கொண்டான்.

''ஆமாம், ஆமாம்; டாக்டர் மயூரந்தான்.... ஓகோ! ராஜலட்சுமியோ?.. நவநீதமும் பக்கத்திலே இருக்காங்களா? ரொம்ப நல்லது! இரண்டு பேரும் சுகந்தானே? .... இதோ, ஒரு பதினைந்தே நிமிஷம்; நான் கிளினிக்குக்கு வந்து சேருகிறேன். நீங்கள் கொஞ்சங்கூடப் பயப்படவே வேண்டியதில்லை. அலர்ஜி, வெறும் ஸிம்பிள் அலர்ஜிதான்!......''

மாதவன் நாற்காலியை விட்டு எழுந்திருக்கிறபோதே ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான்; 'ஆமாம்! உன்னுடைய இந்த அருமையான அலர்ஜி, விலை போகாமல் மதிப்பிழக்கத் தொடங்கிவிட்டால், பிறகு நீ என்ன செய்வாயாம்?''

''ஈசுவரன் கருணாமூர்த்தி. வாயைக் கொடுத்துப் பேசும் திறனையும் கொடுத்த அந்தப் பகவான் வேறொரு வழியைக் காண்பிப்பான். 'அலர்ஜி' ஸீஸன் மாறத் தொடங்கியதும், 'டான்ஸிலைட்டிஸ்'ஸைப் பற்றிக்கொண்டு ஒரு கை பார்க்கலாம் என்று நிச்சயப்படுத்தியிருக்கிறேன். அது சரிப்பட்டு வராவிட்டால், 'வைட்டமின் இஸட் டிபிஷன்ஸி'யை வைத்துக்கொண்டு தொழிலை நடத்தலாம் என்று உத்தேசித்திருக்கிறேன். அதுவும் பலிக்கவில்லையானால், அப்போதைத் தூண்டுதலை அநுசரித்து வழிகாண முடியும் என்ற நம்பிக்கை இருக்கவே இருக்கிறது!'' ★

திருமாலை தந்தவர்

சோழ நாட்டில் காவிரிக் கரையில் மண்டங்குடி அழகான ஊர். அங்கு, விப்பிர நாராயணர் என்ற அந்தணர் உதித்தார். சிறுவயதிலேயே அவர் திருவரங்கப் பெருமானிடம் அன்பு கொண்டார்.

அவர் திருவரங்கத்துக்கு வந்து, உத்தியானத்தை வளர்த்துப் பெருமாளுக்கு மாலை சாத்தி மகிழ்ந்தார். ஒரு நாள் கணிகை தேவதேவியும் அவள் அக்காவும் தோட்டத்தில் வந்து இளைப்பாறினர். அந்தணர் தேவதேவியைக் கண்டும் கவனிக்கவில்லை. 'இவரை மயக்கினால் உனக்கு நான் அடிமை!' என்று தேவதேவியின் அக்கா சபதம் செய்தாள்:

தேவதேவி அணிகளைத் துறந்து, 'என் அக்கா என்னைக் கணிகைத் தொழிலில் புகுத்த விரும்புகிறாள். நீங்களே எனக்குப் புகல்' என்று அவரை வேண்டினாள். அவர் ஏற்றுக்கொண்டார். நந்தவனப் பணியில் அவள் அவருக்கு உதவினாள்.
ஒரு நாள் கனத்த மழை. தெப்பமாக நனைந்த அழகியின் நடுக்கத்தைக் கண்டு இரங்கிய அந்தணர் தம் மேலாடையை அவளிடம் கொடுத்தார்.


கணிகையின் மையலில் மயங்கிய அந்தணர், தெய்வப் பணியை மறந்தார்; செல்வத்தை இழந்தார்.
வறியவரான அவரை வெறுத்தாள் அழகி. அவள் வீட்டு வாசலில் பழி கிடந்தார் அந்தணர். பக்தன் நிலைக்கு உருகிய அரங்கன், கோவில் தங்கவட்டிலை அழகியிடம் கொண்டு தந்து, 'நான் விப்பிரநாராயணரின் வேலையாள்; அவர் கொடுக்கச் சொன்னார்' என்றான்.

வட்டில் திருட்டைப்பற்றி அரசவையில் விசாரணை. உண்மை விளங்காமல் கலங்கிய அரசன் அந்தணரைச் சிறையிட்டான். அரசன் கனவில் அரங்கன் தோன்றி, 'அந்தணர் நிரபராதி' என்றான்.
அந்தணர் தம் பழைய பெயரைத் தவிர்த்து, 'தொண்டரடிப்பொடி' என்ற திருநாமம் பூண்டு, முன்போலத் தொண்டாற்றி வாழ்ந்தார். இந்த ஆழ்வார் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற இரு திவ்யப் பிரபந்தங்களை அருளிச்செய்தார்.

போக்குவரத்துத் துறையில் எண்ணையின் உயரிய சேவை

போக்குவரத்திற்கு இன்றியமையாதது எண்ணை. போக்குவரத்துச் சாதனம் எதுவாயினும் அதை யியக்கி ஓட்ட உதவுவது எண்ணைதான். மெதுவாகச் செல்லும் சைக்கிளிலிருந்து வாயு வேகத்தில் பறக்கும் ஜெட் விமானம் வரை எல்லா வாகனங்களுக்கும் தேவை யான விசைச் சக்தியளிக்கவோ, எண்ணைப் பசையிடவோ எண்ணை மிகவும் அவசியமாகிறது.

இண்டியனாயில், பலவிதமான உயர்தர எண்ணை வகைகளைத் தயாரித்தளிப்பதன் மூலம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் தொழில் ஆகிய துறைகளில், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேவைகளைத் திறம்படப் பூர்த்தி செய்து சேவை செய்து வருகிறது.

INDIANOIL

—பொருளாதார வளமைக்கான தேசியப் பொறுப்புறவு

இந்தியன் ஆயில் கார்ப்போரேஷன் லிமிடெட்

maa. IOC. 6103 B

festival time

For him...



Bring colour into your life with the most exciting and novel accessory — multicolour nylon watch-straps by Bentex. There's a range of shades to select from! Get the special three-strap gift pack today.

For her...



Especially for the ladies! Bentex brings beautifully interwoven embroidery on washable nylon straps. Go exotic with bewitching black or match your ensemble with a colourful embroidered strap. Get your six-in-one pack today.

"Bentex" NYLON STRAPS

PRODUCTIVITY IS A WAY OF LIFE

Creative Unit-Ben- 76



முழு மனிதர்

பி.வி.ஆர்.

குப்தா செட்டியாரைப் பார்த்துவிட்டால் போதும். குழந்தைகள் ஆரவாரித்துக்கொண்டு சூழ்ந்து நிற்பார்கள். கதையும் கற்கண்டும் நிச்சயமாகக் கிடைக்கும். தெருவிலோ கடைகளிலோ அவரை இளைஞர்கள் சந்தித்துவிட்டால் முகமெல்லாம் மலர மரியாதை செலுத்துவார்கள். எழுந்து நின்று உட்கார இடம் கொடுப்பார்கள். பெண்டிர் தலை குனிந்து வணக்கம் செலுத்துவார்கள். அவரைவிட வயசில் முதிர்ந்தவர்கள், ''என்ன தம்பி, சௌக்கியமாக இருக்கிறாயா?'' என்று மனமார விசாரிப்பார்கள்.

இந்த மதிப்பையும் மரியாதையையும் குப்தா செட்டியார் இன்று நேற்றுச் சம்பாதித்தவர் அல்ல. சிறுமலைப் பேட்டையில் நான் நாற்பது ஆண்டுகளாக இருக்கிறேன். நான் வந்த நாளிலிருந்து இன்றுவரை இந்த மதிப்பு இருந்து வருகிறது அவருக்கு.

குப்தா செட்டியார் இதெல்லாம் பெற என்ன செய்தார் என்று வாயால் கேட்பதைவிட, என்ன செய்யவில்லை என்று மனத்தினால் சிந்திக்கலாம். ஊரில் அவர் செய்யாத தானதருமம் இல்லை. வருவோர் போவோரை, அவர்கள் எதற்காகத்தான் வந்திருக்கட்டுமே, புன்முறுவலுடன் வரவேற்று இதமாகப் பேசி அவர்களை மனத் திருப்தியுடன் அனுப்புவார். அவர் இதுவரையில் ஒருவருடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டார் என்று சரித்திரம் சொன்னதில்லை.

இப்பேர்ப்பட்ட செட்டியாருக்குச் சஷ்டியப்த பூர்த்தி விழாவைப் பிரமாதமாகச் செய்துவிட வேண்டும் என்று உற்றாரும் உறவினரும் ஒரு காலில் நின்றார்கள். தந்தையின் அறுபதாவது பிறந்த நாளுக்கென்றே, அமெரிக்காவிலிருந்து பிள்ளை வந்தான். தம்பியும் - இன்னும் இரண்டு வருஷங்களில் அவனுக்கும் சஷ்டியப்த பூர்த்தி வந்துவிடும் - பம்பரமாகச் சுழன்றான்.

விழாவுக்கு இன்னும் பத்து நாட்கள் இருக்கையில் வழக்கம்போல், நான் அவரைப் பார்க்கச் சென்றேன்.

''என்ன செட்டியார், புது மாப்பிள்ளைமாதிரி இருக்கிறீர்கள்! திருஷ்டி சுற்றிப் போட்டுக்கொள்ளுங்கள்!'' என்றேன்.

செட்டியார் சிரிக்க, அவருடைய தம்பி கைலாசம், ''அண்ணா, ராயருக்கும் அடுத்த வருஷம் அறுபது ஆகப் போகிறது. அவரும் அப்போது மாப்பிள்ளைக் கணக்காக ஆகிவிடுவார். என்ன ராயரவர்களே!'' என்றான்.

''ஐமாய்ப்போம்'' என்ற செட்டியார், என்னைப் பார்த்து, ''எனக்கு இதிலே ஒன்றும் ஆசையே இல்லை. ஆனால் விட மாட்டேன் என்கிறார்கள். என்ன செய்ய?'' என்றார்.

''இந்த விழா உங்கள் ஆசைக்குச் செய்வதென்று யார் சொன்னார்கள்? உங்கள் ஆசைக்குத்தான் ஒரு தடவை கல்யாணம் செய்து கொண்டுவிட்டீர்களே!'' என்றேன். பிறகு, ''சாதாரணமாகச் சஷ்டியப்த பூர்த்தியை நெருங்கிய பந்துக்கள் எல்லாரும் சேர்ந்துகொண்டு லௌகிகம் பாதி, வைதிகம் பாதி என்று செய்வார்கள். ஆனால் உங்கள் விஷயத்தில் அப்படி இல்லை'' என்றேன்

''லௌகிகந்தான் இருக்கிறது என்று சொல்கிறீர்களா?'' என்று கேட்டுச் சிரித்தார் செட்டியார்.

''அதை நான் சொல்ல வரவில்லை. வெறும் பந்துக்கள் மட்டும் அல்லாமல், ஊரே திரண்டு விழாவைக் கொண்டாட முன் வந்திருக்கிறது. பார்க்கப் போனால் நான் சொல்வது அபசாரமாக இல்லையென்றால், ஓர் உற்சவ மூர்த்தியை அலங்காரம் பண்ணுகிற சந்தோஷம் இருக்கிறது.''

நான் உண்மையாகவே மனம் விட்டுச் சொன்னேன். கைலாசம் என் மனச் சுத்தியை அறிந்துகொண்டானோ என்னவோ, செட்டியார் உணர்ந்துகொண்டார். அவருடைய கண்கள் கனத்துப் பளபளத்தன. கதுப்புக் கன்னங்கள் மகிழ்ச்சியை அடக்கிக்கொண்டன.

குரல் கம்ம அவர், ''இதற்கெல்லாம் எனக்கு அருகதை இருக்கிறது என்று எனக்குத் தோன்றவில்லை. நான் என்ன செய்தேன்? பார்க்கப் போனால் ஒன்றுமே செய்யவில்லையே!'' என்றார்.

''நீங்கள் பெரிய தலைவர் என்று பெயர் எடுக்கவில்லை. சத்தியாக்கிரகம் செய்து சிறை செல்லவில்லை. மந்திரியாகவோ கவர்னராகவோ பதவி பெறவில்லை. ஆனால் . . . . ஆனால் . . . .''

செட்டியார் என்னை ஏறிட்டுப் பார்த்தார். இரண்டொரு நீர் முத்துக்கள் கன்னங்களில் உருண்டன. கைலாசம் ஏதோ ஒரு தினசரியில் மூழ்கியிருந்தான்.

''ஆனால் மனுஷத்தன்மை உங்களிடம் பூர்ணமாக இருக்கிறது. நீங்கள் ஒரு முழு மனிதராக இருக்கிறீர்கள்.''

''நான் எவ்வளவோ தப்புச் செய்திருக்கிறேன்.''

''தப்பு யார் செய்யவில்லை? பார்க்கப் போனால், உலகத்திலே சில விபரீதங்களைக் கண்கூடாகப் பார்க்கிறபோது தெய்வங்கூட அடிக்கடி தப்புச் செய்கிறதோ என்று தோன்றுகிறது. ஆனால் செய்த தப்பைத் தப்பு என்று உங்கள் மனசு ஒப்புக்கொண்டு, வாயும் மன்னிப்புக் கேட்குமே! அந்த மனத் தாராளம் முழு மனிதரிடந்தான் இருக்க முடியும்.''

''போதும் ராயரே. என்னை வதைக்காமல் இரும். தம்பி, ராயருக்கு ஏதாவது குடிக்கக் கொண்டு வாயேன்'' என்றார் அவர்.

நானும் செட்டியாரும் தினந்தோறும் மாலைவேளையில் ரெயிலடி

யிலிருந்து இருப்புப் பாதை ஓரமாக அடுத்த ஸ்டேஷன் வரை நடப்பது வழக்கம். இ ர ண் டு ம் இரண்டும் நான்கு மைல்கள் நடந்துவிட்டுக் கடைத் தெருவுக்கு வருவோம். கைலாசத்தின் கடையில் சிறிது நேரம் உட்கார்ந்து, ஆளுக்கு ஒரு சோடாவையும் குடித்துவிட்டு வருவோர் போவோரைப் பார்த்துக்கொண் டிருப்போம்.

அவருடைய அறுபதாவது ஆண்டு நிறைவுக்கு இன்னும் எட்டு நாட்கள் இருக்கின்றன. கடைத் தெருவுக்கு வந்துகொண் டிருந்தோம்.

''செட்டியார், சில்லறை சில்லறையாகப் பார்த்தவர் கேட்டவர்களுக்கெல்லாம் ஐந்தும் பத்தும் நூறுமாகக் கடன் கொடுக்கிறீர்களே, அதெல்லாம் திரும்பி வருகிறதோ?''

''ஏன் கேட்கிறீர்கள், ராயரே?''

''ஏதோ திடீரென்று ஓர் எண்ணம் தோன்றிற்று; கேட்கிறேன்.''

''வரும்; வராமல் போகும்.''

''கணக்கே வைத்துக்கொள்வதில்லையா?''

''இதற்குப் பதில் சொன்னால் நான் பெருமை அடித்துக்கொள்வதாக உங்களுக்குத் தோன்றும். அதுவும் அல்லாமல் உங்களுக்கு நான் சொல்லியா தெரிய வேண்டும்? நாற்பது வருஷமாக என்னுடன் பழகுகிறீர்கள்!''

''உங்களுக்குப் பணத்திலே அக்கறை இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் ஏதோ தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விபரீத ஆசை. கொடுத்த பணமெல்லாம் திரும்பி வருகிறதா? சில இடங்களிலிருந்து வரவில்லை என்று தெரியும்; உதாரணமாக....''

''அதுதான் சொன்னேனே: வரும்; வராமலும் போகும்.''

''நான் பதினெட்டு வயசுப் பிள்ளையாக இந்த ஊருக்கு மில்லிலே குமாஸ்தாவாக வந்தபோது ஐந்து ரூபாய் கடன் வாங்கினேன். ஞாபகம் இருக்கிறதா?''

''சொல்லுங்கள்.''

''நான் சொன்னபடி கொடுக்கவில்லை.''

''அப்படியா?''

''நீங்களும் திருப்பிக் கேட்கவில்லை.''

''எனக்கு நினைவில்லை.''

''ஆனால் நானே மூன்று மாசத்துக்கு அப்புறம் கொண்டு வந்து கொடுத்தேன்.''

''ஓ!''

''ஆனால் அப்புறம் கேட்கக் கூடாது என்று இருந்த என் சங்கற்பம் இரண்டு மாசத்திலே உடைந்து போயிற்று. காஷியர் வேலை கிடைக்க வேண்டுமானால் ஐந்நூறு ரூபாய் கட்ட வேண்டுமென்று மில்லிலே சொன்னார்கள்.''

'' .... ''

''நீங்கள் கண்டிப்பாகத் தருவீர்கள் என்று எனக்கு நிச்சயமாகப் பட்டது. ஒரு நோட்டை எழுதிக்கொண்டு உங்களிடம் வந்தேன்.''

''ஆமாம்.''

''நோட்டுத் தேவையில்லை என்று சொன்னீர்கள். ஆனால் எனக்குப் பயம். அதை உங்கள் கையிலே வைத்துவிட்டுப் பணத்துடன் திரும்பினேன்.''

''இது நினைவு இருக்கிறது.''

''இன்னும் நோட்டு உங்களிடந்தான் இருக்கிறது!'' என்றேன் சிரித்துக்கொண்டு.

''அப்படியா? ஏன் நீங்கள் திருப்பி வாங்கிக்கொள்ளவில்லை?''

"மூன்று மாசப் பழக்கத்திலே, நோட்டு எதற்கு என்று கேட்டவரிடம், 'என் நோட்டைத் திருப்பித் தா' என்று எப்படி ஒருவனுலே கேட்க முடியும்? எனக்கே மனம் கூசிப் போய்விட்டது."

"மனித குணம் மாறக் கூடியதுதானே? பணத்தையும் வாங்கிக்கொண்டு, செல்லு வைக்காமல் கேஸ் போடுகிறவர்கள் எத்தனை பேர்?" என்ருர் செட்டியார்.

"நோட்டு எழுதி வாங்கிக் கொண்டு பணத்தையும் திருப்பிக் கேளாமல் காலாவதி ஆவதற்கு முன்னுலே கேஸும் போடாமல், போனுல் போகிறது என்று விட்டு ஒழிக்கிறவர்களும் சிலர் உங்களைப் போல் இருக்கிருர்கள், இல்லையா?"

"இதற்கு நான் என்ன பதிலைச் சொல்வதென்று புரியவில்லை."

"ஐந்தும் பத்துமாகச் சில்லறை சில்லறையாகக் கொடுத்த பணத்தை வேண்டுமானுல் கேட்காமல் இருக்கலாம். மனசோ நாக்கோ கூச்சப்படலாம். ஆனுல் ஆயிரக் கணக்கிலே பணத்தை வாங்கியவர்கள் திருப்பிக் கொடுக்காமல் இருக்கும்போது பேசாமல் இருக்கலாமா?"

"ராயரே, ஏது புதுத் திசையிலே வண்டியைத் திருப்புகிறீர்கள்? யாரைச் சொல்லுகிறீர்கள் நீங்கள்?"

"புரியவில்லையா?"

"ஊகும்."

"நீங்கள் முப்பது வருஷத்துக்கு முன்னுலே ஓர் ஆளுக்கு மூவாயிரம் கொடுத்தீர்களே கடை வைக்க. அந்த ஆளின் கடை இப்போது எப்படி இருக்கிறது? வெறும் பல சரக்குக் கடை, பெரிய கிடங்காக மாறியிருக்கிறது. ஹிட்லர் யுத்தத்திலே அவன் கொஞ்சமாகவா சம்பாதித்தான்? இப்போது எத்தனை பெர்மிட், லைஸென்ஸ்! அவன் தொட்டதெல்லாம் பணமாகக் கொழிக்கிறது."

"வேதாசலத்தைச் சொல்கிறீர்களா? ஆமாம், அவருக்கு என்ன இப்போது?"

"என்ன இப்படி லேசாகக் கேட்டு விட்டீர்கள்? உங்கள் பணம் என்ன ஆச்சு? எனக்குத் தெரிந்து இன்றைத் தேதி வரையில் கொடுக்கவில்லை. மந்திரிகளுக்கு விருந்து வைத்தான். கவர்னருக்குப் பத்திரம் வாசித்தான். கவுன்சிலரானுன். முனிசிபல் சேர்மனுனுன். இனிமேல் எம்.எல்.ஏ.யும் ஆகிவிடுவான்."

"ஆகட்டுமே."

"இந்த ஐசுவரியத்துக்கெல்லாம் யார் மூலதனமாக இருந்தார்கள்?"

"தெய்வம்."

"செட்டியார், உங்களுக்கு உலகம் தெரியாது. உங்களைப் பார்க்கிறபோது இளிக்கிருனே! 'செட்டியார், உங்களுடைய மூவாயிரம் இன்னும் பாக்கியாக இருக்கிறது. வட்டியுடன் சேர்த்து அனுப்பிவிடுகிறேன்' என்று வாய் வார்த்தையாகவாவது சொல்கிருனு? அட, வட்டிதான் வேண்டாம்; வாங்கின தொகையையாவது தருகிறேன் என்கிருனு?"



"ஏன் ராயரே, பழசையெல்லாம் இப்போது தோண்டி எடுக்கிறீர்கள்?"

"ஆனுல் அந்த ஆள் தன் பண விஷயத்தில் எவ்வளவு கண்டிப்பாக இருக்கிருன்! இன்றைத் தேதியிலே, முன்சீப் கோர்ட்டிலே பத்துக் கேசுகள் இருக்கின்றன. எல்லாம், அவன் கொடுத்திருந்த பணத்தை வாங்க."

"மனுஷ ராசியெல்லாம் ஒரே மாதிரியாக இருக்காது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு போக வேண்டுமே தவிர, நாம் குறை சொல்லிக்கொண்டு போகக் கூடாது. பாவம்! வேதாசல நாயக்கருக்கு உடம்பு வேறே சரியில்லை. இப்போது அவர் மண்டையை உருட்டாதீர்கள்."

"அதுதான் சென்னையிலிருந்தும் கோயம்புத்தூரிலிருந்தும் டாக்டர்கள் வந்தார்களே. எல்லாருமாகச் சேர்ந்து 'ஹார்ட் அட்டாக்' என்று சொல்லிவிட்டுப் போனுர்கள். 'ஹார்ட்டே' இல்லாத மனுஷனுக்கு எப்படி ஹார்ட் அட்டாக் வரும் என்றுதான் எனக்குத் தெரியவில்லை. இரண்டு மாசம் ஓய்வெடுத்துக் கொள்ளுகிறேன் என்று, மின்சார விசிறியின் கீழேயே படுத்துக் கொண்டு கிடந்தான். இப்போது மறுபடியும் பணத்தாசை பிடித்துக் கொண்டது. கடைக்கும் வருகிருன்."

செட்டியாருக்கு என் பேச்சுப் பிடிக்கவில்லை என்று அவருடைய மௌனமே கூறிற்று.

கடையில் கைலாசம் உட்கார்ந்திருந்தான். செட்டியாரைப் பார்த்ததும், "அண்ணு, கோயம்புத்தூரிலிருந்து

பணம் வரவில்லை. ஆள் மட்டும் வந்தான். இன்னும் நாலு நாள் ஆகுமாம், பணத்தை அனுப்ப'' என்றான்.

''கையிருப்பிலே எவ்வளவு இருக்கிறது?''

''கோயம்புத்தூர்ப் பணம் நிச்சயமாக வரும் என்று இன்றைக்கு ஏழாயிரத்துக்குச் செக் அனுப்பினேன், சென்னை ஏஜெண்டுக்கு.''

''கையிருப்பிலே எவ்வளவு இருக்கிறது?''

''இரண்டாயிரங்கூடத் தேறாது.''

''பாங்கிலே?''

''ஆயிரத்துச் சொச்சம் இருக்கிறது. ஓவர்டிராப்ட் லிமிட்டும் வந்துவிட்டது.''

''இப்போது எவ்வளவு வேண்டும் என்று தோன்றுகிறது உனக்கு? மிகவும் அவசியமாக எவ்வளவு வேண்டும்?''

''மூவாயிரம்.''

''சரி, நீ வியாபாரத்தைக் கவனி. இதைப் பற்றிக் கவலைப்படாதே! ராயரே, வாரும். உங்கள் சிநேகிதரைப் போய்ப் பார்ப்போம்.''

இருவருமாக இறங்கினோம்.

யார் என் சிநேகிதர்? நான்கு கடைகளுக்கு அப்பால் ஒரு பெரிய கடையில் ஏறினார் செட்டியார். வேதாசல நாயக்கன் கடை. அவனே இருந்தான்.

''என்ன தம்பி, சௌக்கியமாக இருக்கிறாயா? எழுந்திருக்காதே; அப்படியே உட்கார்.''

''நீங்கள் உட்காருங்கள். வாருங்கள் ராயரே. ஏதாவது குடிக்கக் கொண்டு வரச் சொல்லட்டுங்களா?''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்.''

''நாளைக்கு எட்டாம் நாள்தானே சஷ்டியப்த பூர்த்தி? எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் உங்களுக்கு அறுபது வயசென்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.''

செட்டியார் சிரித்தார். ஆனால் முகத்தில் ஏதோ ஒரு வேதனை புரையோடுவது போலிருந்தது. பேச வாய் எடுத்தார். நாக் குழறியது. மனத்தில் சங்கடம் கொக்கி போட்டு நாக்கை இழுப்பது மாதிரி இருந்தது.

அவருடைய தயக்கத்தை அவனும் உணர்ந்து கொண்டான் என்பதை அவனுடைய கேள்வியே சொல்லிற்று.

''என்னங்க, ஏதாவது சொல்ல வேண்டுமா?''

''தம்பி, நாலு நாள் தவணைக்கு ஒரு மூவாயிரம் தேவைப்படுகிறது. இன்றைக்கு அனுப்புவதாகச் சொன்னான் சின்னக் கவுண்டன்; அனுப்பவில்லை.''

செட்டியாருடைய சப்த நாடியும் ஒடுங்குவதாக எனக்குப் பட்டது. செட்டியார் தாம் இன்னொருவரிடம் கடன் கேட்கும்படியாகி விட்டதே என்று மனம் குன்றி நிற்கிறாரா?

திடீரென்று என் மனத்தின் மூலையில் ஒரு விபரீதக் கேள்வியும் உதித்தது: அன்று கொடுத்த மூவாயிரத்தை இன்று திருப்பி வாங்க இது நல்ல வாய்ப்பு என்று செட்டியார், சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறாரோ? அடுத்த கணமே என் கேவலமான, கீழ்த்தரமான எண்ணம் மறைந்தது. இம்மாதிரியான ஒரு சிந்தனை உதித்ததை நினைத்து நானே என்னுள் புழுங்கினேன்.

''இந்தாருங்கள்; மூவாயிரம்.''

வேதாசலம் நூறு ரூபாய் நோட்டாக எண்ணிக் கொடுத்தான். செட்டியார் எண்ணாமல், ஜிப்பாப் பையில் போட்டுக்கொண்டார்.

''வருகிறேன், தம்பி. நாலாம் நாள் அனுப்பிவிடுகிறேன்.''

''சரிங்க.''

திடீரென்று எனக்குக் கோபம் தலைக்கேறியது. நாயக்கன் எப்படி, 'சரிங்க' என்று சொல்லுவான்? 'பழைய பாக்கி மூவாயிரத்துக்கு இது சரியாகப் போய்விட்டது' என்று அல்லவா அவன் சொல்ல வேண்டும்? சீ, உலகம் தெரியாத செட்டியாரை இப்படியா உலகம் ஏய்க்க வேண்டும்? ஏமாற்ற வேண்டும்?

கடையை விட்டு இறங்கியதும், ''நீங்கள் வடிகட்டின வெகுளி!'' என்றேன்.

செட்டியார் பதில் சொல்லவில்லை. ஆனால் அவர் மனத்தையும் நாயக்கனின் பதில் புண்படுத்தியிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

இரண்டு நாட்களுக்கு என்னால் செட்டியாரைச் சந்திக்க முடியவில்லை. மூன்றும் நாள் சென்றபோது செட்டியார் வீட்டில் இல்லை. அவசர காரியமாகக் கோயம்புத்தூர் சென்றிருக்கிறார் என்று தெரிய வந்தது. அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் பிள்ளையிடம் இரண்டு வார்த்தைகள் பேசி விட்டுத் திரும்பினேன்.

நான்காம் நாள்தான் செட்டியாரைப் பார்க்க முடிந்தது. இருவருமாக மாலையில் நடந்து கடைத் தெருவுக்குப் போய் வந்தோம்.

செட்டியார் வீட்டை அடைந்ததும், ''ராயரே, கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டுப் போங்கள். உங்களுடன் பேசி மூன்று நாட்கள் ஆகின்றன'' என்றார்.

சஷ்டியப்த பூர்த்திக்கு இன்னும் நான்கு நாட்களே இருக்கின்றன. பெரியதாகப் போட்டிருந்த பந்தலை விதானித்துக்கொண்டிருந்தார்கள். அங்கும் இங்குமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். இந்த அமளியில் நானும் செட்டியாரும் திண்ணையில் உட்கார்ந்து கொண்டோம்.

அந்தச் சமயத்தில்தான் ஓர் ஆள் சைக்கிளில் வந்து இறங்கிச் செட்டியாரை நோக்கி வந்தான்,

''என்னப்பா வேண்டும்?''

''ஐயா இதைக் கொடுக்கச் சொன்னார்கள்.''

அவன் கொடுத்த சீட்டைப் பிரித்துப் படித்தார் செட்டியார். பிரகாசமான விளக்கொளியில் அவர் முகம் திடீரென்று கறுத்து வாடிவிட்டதாகத் தோன்றியது எனக்கு. அடுத்த கணம் அவர், ''இதைப் பாருங்கள் ராயரே!'' என்று கூறிச் சீட்டை என்னிடம் நீட்டினார்.

நான் வாங்கிப் பார்த்தேன். இரண்டு வரிகள்தாம்! ஆனால் எப்படி என் இரத்தத்தை அவை கொதிக்க வைத்தன!

''கைமாற்றாக வாங்கின மூவாயிரம் ரூபாயை ஆள் வசம் கொடுத்தனுப்புங்கள்—வேதாசல நாயக்கர்.''

என்னுடைய வெறியில் நான் பிதற்ற ஆரம்பிப்பதற்குள், செட்டியார் உள்ளே சென்றுவிட்டார். 'சீட்டைப் பார்த்ததும் பணத்தை எண்ணிக் கொடுக்க உள்ளே ஓடிவிட்டார்!' என்று என் மனம் கோபத்தில் கத்தியது.

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு, காலத்தினால் மஞ்சளேறிவிட்ட ஒரு காகிதத்துடன் அவர் திரும்பினார். பிறகு, ''இதை உன் முதலாளியிடம் கொடு'' என்றார். அவன் பேசாமல் வாங்கிக்கொண்டு சைக்கிளில் ஏறிப் போனான்.

''அவனுக்கு என்ன திமிர் இருக்க வேண்டும்?'' என்றேன் நான்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு செட்டியார், தூக்கத்திலிருந்து எழுந்தவரைப் போலக் கண்களை உருட்டி விழித்து, ''ராயரே, அந்த ஆளை எப்படியாவது மடக்கி, நான் கொடுத்த காகிதத்தைத் திருப்பி வாங்கிவிட வேண்டும்'' என்று கத்தினார். பிறகு, ''டேய் சிங்காரம், இப்போது ஓர் ஆள் சைக்கிளில் போனானே; அவனைப் பிடித்து, நான் கூப்பிட்டதாகச் சொல்லு. சீக்கிரம் போ'' என்றார். என்றும் இல்லாத பரபரப்பும் அவசரமும் அவருடைய உடம்பெல்லாம் துடிதுடித்தன.

''இதற்குள் அவன் போயிருப்பான்'' என்றேன். ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு சிங்காரமும் திரும்பி வந்தான். ''அவனைக் காணோமுங்க'' என்றான்.

''நான் பெரிய தப்பு ஒன்று செய்துவிட்டேன், ராயரே, பெரிய தப்புச் செய்துவிட்டேன்!'' என்று கூறிச் செட்டியார் புலம்பினார்.

''விஷயத்தைச் சொல்லுங்கள். ஏன் இப்படி நொந்துகொள்ளுகிறீர்கள்?''

''மனுஷனுடைய மனசிலே அசுரனும் வெறிபிடித்து ஆடுகிறான், ராயரே. இப்போது என்னை ஏதோ ஒரு வெறி பிடித்துவிட்டது. அசுர குணம் என் நிதானத்தை நொறுக்கித் தள்ளிவிட்டது. பாவம்! வேதாசலம் மனசு இப்போது புண்ணாகிக்கொண்டிருக்கும். வாரும் போகலாம். அவனிடம் போய் இரண்டு வார்த்தை சொன்னால்தான் என் மனசு ஆறும்.''

செட்டியாரின் பதைபதைப்பை முற்றும் உணர்ந்த நான், ''என்ன காகிதம் அது? அதை முதலில் சொல்லுங்கள்'' என்றேன்.

''முப்பது வருஷத்துக்கு முன்னாலே கடை வைக்க மூவாயிரம் கொடுத்தேனே; அதற்கு அவன் தந்த புரோநோட்டு. கைமாற்றாக நான் வாங்கின பணத்தைத் திருப்பிக் கேட்டு அவன் எழுதிய சீட்டைப் படித்ததும், என் மனசிலே ஒரு வெறி பிறந்தது. அந்த வெறியிலே நானே குலைந்து போய்ப் புரோநோட்டை எடுத்துக் கொடுத்தேன். சே! என்ன முட்டாள் தனம்! என்னைப் போய், நீங்கள் முழு மனிதர் என்கிறீர்களே! வாருங்கள், போய் மன்னிப்பாவது கேட்கிறேன்.''

''நீங்கள் செய்ததுதான் உலக நியதி. மன்னிப்புக் கேட்பதற்கு இடமே இல்லை.''

''இப்போது என்னுடன் வரப்போகிறீர்களா, இல்லையா?''

நான் எழுந்தேன். அந்தக் கணத்தில் செட்டியார் மீது எனக்குக் கோபந்தான் உண்டாயிற்று.

நாங்கள் போனபோது நாயக்கனின் கடையில் ஒரே குழப்பம். சிப்பந்திகளும் வாடிக்கைக்காரர்களும் செய்வதறியாமல் அலைபாய்ந்துகொண்டிருந்தார்கள். வேதாசல நாயக்கனையோ, அவனுடைய பிள்ளையையோ காணவில்லை.

ஒரு சிப்பந்தியைத் தனியாக அழைத்து விசாரித்தேன்.

''பத்து நிமிஷத்துக்கு முன்னாலே தானுங்க திடீர்னு, நின்னுண்டிருந்தவர் நாற்காலியிலே விழுந்தாரு. உடனேயே பிள்ளை காரிலே தூக்கிக்கிட்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினாரு. இப்போ எப்படியிருக்கோ தெரியல்லீங்க.''

நானும் செட்டியாரும், கைலாசத்தின் கடைக்கு வந்து, காரை எடுத்துக் கொண்டு ஆசுபத்திரிக்கு விரைந்தோம்.

ஆசுபத்திரிக்குப் போயும் பிரயோசனமில்லாமற் போய்விட்டது. சீட்டைக் கொடுத்துப் புரோநோட்டை வாங்கிக்கொண்டு போன ஆள் அழுது கொண்டிருந்தான். செட்டியாரைக் கண்டதும் அவன் கை தானாக நோட்டை அவரிடம் நீட்டியது. அவரும் அதை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு பிள்ளையைத் தேற்றச் சென்றார்.

சஷ்டியப்த பூர்த்திக்கு, இன்னும் ஒரு பகலும் இரண்டு இரவுகளுமே இருக்கின்றன. செட்டியார் எதிலும் அக்கறை இல்லாதவரைப் போல நடந்துகொண்டார். மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டிய இந்த வேளையில், அவருடைய மனம் எதை நினைத்து வருந்தி வாடுகிறது? நாயக்கனின் மறைவைப் பற்றியா அல்லது அவனுடைய மறைவுக்கு முன்னால் அவர் உள்ளத்தில் புகுந்த வெறியைப் பற்றியா?

திண்ணையில் நானும் செட்டியாருடன் உட்கார்ந்திருந்தேன். அவருக்கு ஆறுதல் சொல்ல எனக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தாலும் தைரியம் இல்லை. வந்திருக்குமோ என்னவோ?

இருவரும் மௌனமாக உட்கார்ந்திருக்கையில், வக்கீல் ராஜலிங்கம் காரிலிருந்து இறங்கி வருவது தெரிந்தது. ராஜலிங்கம் நண்பரானாலும், செட்டியாருடைய வக்கீல் அல்ல.

''சஷ்டியப்த பூர்த்தி பிரமாதமாக நடக்கப் போகிறதென்று ஊரெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறது!'' என்று கூறிக்கொண்டே வந்த அவர், திண்ணையை அடைந்ததும், ''நமஸ்காரம் செட்டியார்'' என்று கூறி உட்கார்ந்தார். பிறகு, ''துக்கமும் சந்தோஷமும் எப்படி மாறி மாறி வருகின்றன, பார்த்தீர்களா? நம் வேதாசலத்தை நினைத்தால் அவன் போனதற்குத் துக்கந்தான் வரும். ஆனால் அவன் மாதிரி இந்த ஊரிலே - ஊரிலே என்ன, உலகத்திலே - ஒரு மனுஷன் பிறந்திருக்க முடியுமா என்ற கேள்வி பிறந்துவிடுகிறது. அவன் பெரிய ஆள், செட்டியார், மிகப் பெரிய மனிதன். அதை நினைத்தால் பெருமையாக இருக்கிறது'' என்றார்.

செட்டியார் விழித்தார்.

''ஏன், என்ன சமாசாரம்?'' என்று கேட்டேன்.

''செட்டியார், இன்றைக்கே உங்களிடம் சொல்ல வேண்டுமென்றுதான் நான் வந்தேன். நாளைக்கு ஊரிலே இருக்க மாட்டேன். அப்புறம் சஷ்டியப்த பூர்த்தியன்றைக்கு உங்களைத் தனியாகச் சந்தித்துப் பேச முடியாது.

''விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றார் செட்டியார்.

'முப்பது வருஷத்துக்கு முன்னாலே வேதாசலத்துக்கு மூவாயிரம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா?''

''ஆமாம்.''

''அவன் கடனைப் பிள்ளைமீது ஏற்றிவிட்டு, வட்டியை எல்லாம் உங்கள் மீது எழுதி வைத்திருக்கிறான். இதோ உயிலின் நகல்.''

''வட்டியா?''

''ஆமாம். மூவாயிரம் மூலதனத்திலே என்ன என்ன சம்பாதித்தானோ அதெல்லாம்—வீடு, வாசல், கடை, பாங்கியில் இருக்கிற பணம்—எல்லாம் வட்டிதானாம். அதெல்லாம் உங்களைச் சேர வேண்டியதுதான். எப்படி மூவாயிரத்தில் ஆரம்பித்தானோ அதே மாதிரி தன் பிள்ளையும் அதே மூவாயிரத்தில் ஆரம்பிக்கட்டும் என்று உயிலில் எழுதியிருக்கிறான், நாயக்கன். அவன் மகா பெரிய மனிதன்!''

வக்கீல் பெருமூச்சு விட்டார். நான் திண்ணைத் தூணைப் பலமாகப் பிடித்துக்கொண்டேன். செட்டியார் அசையாமல் உட்கார்ந்திருந்தார். கண்களினின்றும் தாரை தாரையாக நீர் பெருகி ஓடியது.

கேவலினூடே, ''ராயரே, பந்தலை உடனே பிரிக்கச் சொல்லுங்கள். ஒரு முழு மனிதர் என்னை விட்டுப் போய் விட்டார்'' என்றார் அவர், ★

புதிய கிரானுடா இலேட்
டிரான்ஸிஸ்டர்

ஒரு டிரான்ஸிஸ்டரில் இவ்வளவு சிறப்பை இவ்வளவு குறைந்த விலையில் நீங்கள் எப்பொழுதும் பெற்றிருக்க முடியாது !

2 அலை வரிசைகள், நடுத்தர அலைகளுக்கான பெர்ரைட் ஆன்டென்னு, நிரந்தர மாக்னட் வகை 6" x 4" ஒலிபெருக்கியின் மூலமாக தெளிவான தொனி, ஹை-க்யூ டைப் காயில்கள், மின்விசை சப்ளை - 9 வோலட் பாட்டரி-எவரெடி டைப் 276 P அல்லது 286 P. ஏழு டிரான்ஸிஸ்டர்கள் மற்றும் டயோடுகள், வெளிப்புற ஸ்பீக்கர் இணைப்பிற்கான கிண்ணங்கள், முற்றிலும் உஷ்ணப் பிரதேசத்திற்கு உகந்த உறுப்புகள், நவீன பிளாஸ்டிக் கேபினட்டில் கிடைக்கும்.

இன்றைய hgec
அதிக சிறப்புடைய தொனி
மற்றும் அழகிற்கு !

இன்று வந்து விட்டன

hgec

இரட்டைகள்!

புதிய - ஸெனேரிட்டா
ஒரு பெரிய வால்வு செட்டின்

எல்லா குணம்சங்களும் - ஆனுல் ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கக்கூடிய நய விலை !

எல்லா அலைவரிசை ஏஸி/டிஸி 4வால்வு செட் - 8 பணிகள் கொண்டது. 3 அலைவரிசைகள், ஹை-ப்ளகஸ் நிரந்தர மாக்னட் ஸ்பீக்கர் 6" x 4" முட்டை வடிவமான கச்சேரி வகை ஹை-பிடலிடி (மிக நம்பகமான) தொனிப்பதிவு ஹை-கியூடைப்ஐ. எஃப் டிரான்ஸ்பார்மர், மின்விசை 220/250 வோல்ட்ஸ் மின் செலவு உயர்ந்தபக்ஷமாக 3.2 வாட்டுகளாகும். வெளிப்புற ஸ்பீக்கர் மற்றும் கிராமபோன் பிக்அப் இணைப்பிற்காக கிண்ணம் போன்ற வசதியுள்ளது. முற்றிலும் உஷ்ணப் பிரதேசத்திற்கு ஏற்ற உறுப்புகள். உறுதியான அழகியபிளாஸ்டிக் காபினட்.

உங்கள் அருகிலுள்ள எச்ஜீஇஸி டீலரிடம் கேட்டு இன்றே ஒருமுறை சோதித்துப் பாருங்கள்.

எச்ஜிஇஸி இப்பொழுது வழங்குவது ஒவ்வொரு ரேடியோ வாங்குபவரும் விரும்பிய அம்சங்கள்; பெரிய செட்டின் குணம்சங்கள் அடங்கிய சிறிய ரேடியோ-மிக நய விலையில்! ஒரு செட் விலை ரூ. 225/-மட்டுமே. எக்ஸைஸ் தீர்வையும் வரிகளும் பிரத்யேகம் ஆனுல் இவற்றின் சிறப்புக்கள் எத்தனை என்று கவனியுங்கள்!

ஹிந்துஸ்தான் ஜெனரல் எலக்டிரிக் கார்ப்பொரேஷன் லிமிடெட் 154/155, பிராட்வே சென்னை-1.

BENSONS2/HGE-208 TAM

ஓவியர்: உமாபதி

ஊடலின் பின்......

கிளிகள் வரும்

'கல்பனா'

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா, அன்பரே?—

அப்போது ஆகாசத்தில் நாள் தவருமல் வானவில் ஜாஜ்வல்யமாக இருந்து கொண்டிருந்தது. நாலு நாலரை அடித்தாலே போதும்; கீழ்வானத்தில் மாலையின் மஞ்சள் வெயிலுக்கு எதிர்ச் சிராய், ஏழு வர்ணமும், நம் ஊர் ரெயில் பாலத்தின் மீது இன்னொரு மேம்பாலமாய் விழத் தொடங்கி விடும். அதற்கு அடியில், ஆற்றின் எதிர்க் கரையில் குட்டைப்பனைகள், குள்ள மனிதர்கள் மாதிரியே நின்று அந்த வானவில்லுக்குச் சாமரம் வீசும்.

இக்கரையில், 'பம்பிங் ஷெட்'டின் தகரத்தின் மீது, அதன் காவற்காரன் வளர்க்கும் மயில் 'விறுக்'கென்று தாவி ஏறி நின்றுகொண்டு, அத்தனை தோகையையும் அகல விரித்து அந்த வானவில்லுக்குக் கட்டியம் கூறும்.

அசப்பில் பார்த்தால், யாரோ வானத்திலிருந்து அந்த வானவில் பாலத்தின் வழியாகப் பூமிக்கு இறங்கி வரப் போகிறுர் போலவும், அதற்காகத்தான் இந்த வரவேற்பெல்லாம் நடக்கிற மாதிரியும் இருக்கும்.

''யார் வரப் போகிறுர், அது வழியாய்?'' என்று நான் கேட்பேன்.

''ஒரே பயல்—முத்து மாதிரி ஒரு ராஜாப் பயல்!'' என்பீர்கள்.

அந்த மேம்பாலத்துக்கும் நமக்கும் இடையில் சிலுசிலுவென்று இளந் தூறல் பன்னீர் தெளித்துக்கொண்டே போகும். அப்போது மாலை வெயிலில் சின்னச் சின்ன நீர்ப்பூ மாதிரி மிளிரும்; நீர்ப் பூக்கள் நடம் புரிந்து கொண்டே போகிற மாதிரி சரசரவென்று போகும். கீழ்க்கோடி வரையில் போய்விட்டு, அங்கிருந்து காற்றடிக்கும்போது இந்தப் பக்கமாக நடம் புரிந்துகொண்டே வரும்.

அது விரைந்து வருகையில் என்னைச் சீண்ட வருகிற மாதிரியே இருக்கும். பரபரப்புடன், 'அதோ வந்துவிட்டது; அதோ வந்துவிட்டது!' என்று கூவிக்கொண்டே உங்கள் கையைப் பிடித்துக்கொள்வேன்; உங்களோடு ஒட்டிக்கொள்வேன். ஆனுல் சொல்லி வாய் மூடுவதற்குள் அது நம் தலை மீது கடந்து பன்னீர் தெளித்துக் கொண்டே போய்விடும். அப்புறம் பார்த்தால் முத்து முத்தாக நம் உடம்பெல்லாம் நனைந்திருக்கும்.

நீங்கள் என்னை அணைத்துக்கொண்டு என் நெற்றியில் விழுந்த முத்துக்களைத் துடைத்து விடுவீர்கள்; உச்சி மோப்பீர்கள்.

எவ்வளவு அழகாக இருந்தது உலகம், அப்போது, அன்பரே!

அந்த நாளில் காற்று முழுவதுமே மகரந்தத்தைச் சுமந்துகொண்டு அலைந்தது. பட்சி ஜாலங்கள் எல்லாம் அநுராகத்தில் மிதந்தன. கொல்லை மாமரங்களில் மாம்பூக்களின் சின்னச் சின்ன விழிகளில் காதல் குறுகுறுத்தது.

அதுதான் காதலின் வேளை, அன்பரே!—அதுதான் காதலின் வேளை; பிரபஞ்சத்தின் காதல் வேளை அது!

அப்போதுதான் 'அவளை' நான் உண்டானேன்!

உங்களுக்கு நினைவிருக்கிறதா, அன்பரே? ஒரு நாள் அதிகாலையில் உங்களை எழுப்பி, ''வயிற்றை என்னவோ செய்கிறது!'' என்றேன்.

நீங்கள் உங்கள் போர்வைக்குள் என்னையும் இழுத்து அணைத்துக்கொண்டு, ''பேசாமல் படு; விடிந்ததும் டாக்டர் ரமணனிடம் ஒரு 'டோஸ்' மருந்து வாங்கிக் குடித்தால் சரியாகப் போய் விடும்; சொல்லச் சொல்லக் கேட்காமல், வீணுகப் போகுமே என்று நேற்றிரவு அத்தனை வடைகளையும் விழுங்கித் தீர்த்தாயல்லவா?'' என்று அரைத் தூக்கத்தில் அதட்டினீர்கள்.

''இல்லை, அன்பரே, நிஜமாகவே எனக்கு என்னவோ செய்கிறது; இது 'வடை' செய்கிற காரியம் அல்ல. தலையைச் சுற்றுகிறது; வாந்தி வருகிறது. என்னை விடுங்கள்'' என்று உங்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு எழுந்தேன்.

''சரி, போ'' என்று சொல்லித் திரும்பிப் படுத்துக்கொண்டீர்கள்.

அரை நாழிகை கழித்து, ''அண்ணு அண்ணு! 'சட்'டுன்னு எழுந்து வாயேன்!'' என்று உங்கள் தங்கையின் குரல் கேட்ட பிறகுதான் என்னவோ ஏதோ என்று எழுந்து வந்தீர்கள்.

தாழ்வாரத்தின் கோடியில் ஓடையடியில் உட்கார்ந்திருந்தேன் அப்போது. சின்ன நாத்தனுர் என் தலையைப் பிடித்துக்கொண் டிருந்தார். அம்மா பக்கத்தில் நின்று விம்மிக் கொண்டிருந்தார்.

''கலிதீர்த்தானே! கடைசியில் கண் திறந்தாயோ? எங்கள் கலியையும் தீர்த்தாயோ?'' என்று கண்ணீர் பெருக்கினுர் அம்மா.

''யமுனு, இனிமேல் நீ குனிஞ்சு நிமிர்ந்து, காரியம் கீரியம் பண்ணி, திரண்டு வந்திருக்கிற அம்ருதத்தைச் சிதறடிச்சுடக்கூடாது!''

''ஏன்னு, கேட்டயளா, சமாசாரம்? நீங்க தாத்தா ஆகப் போறேள்!''

''நிஜமாகவா? அவள் வயிற்றிலும் ஒரு 'பூச்சி' பிறந்து பார்ப்போமான்னு இந்த ஆறு வருஷமாய் நான் ஊர்க் கோவிலுக்கெல்லாம் மாறி மாறிப் போய் மன்ருடியதெல்லாம் கடைசியில் .... ஏண்டி! நிஜமாகவா?'' என்று கண்களைத் துடைத்துக்கொள்கிருர் மாமா.

''ஆமாம், ஆமாம்ங்கறேனே! போங்கோ! இப்பவே போய்க் கலி தீர்த்தானுக்கு ஓர் அர்ச்சனை குளிரக் குளிரப் பண்ணிட்டு வாங்கோ.''

மெதுவாக என்னைப் பிடித்து உள்ளே அழைத்து வந்தார்கள்; சுடச் சுட ஒரு கப் காபியைக் கொடுத்துப் படுக்க வைத்தார்கள்.

எல்லாரும் போனதும் என்னிடம் வந்தீர்கள். ''என்ன யமுனு, இது?'' என்றீர்கள் என்மீது குனிந்து.

அப்படியே உங்கள் கழுத்தைச் சுற்றி என் கைகளைப் போட்டுக் கொண்டு, ''ஸ்வாமி வந்துவிட்டார், நம் அகத்துக்கு அன்பரே, ஸ்வாமி வந்துவிட்டார்!'' என்று விம்மினேன்.

''அசடே, இதற்கா அழுகிருய்?'' என்று என் கண்ணைத் துடைத்தீர்கள். ''இதற்காக அழுவார்களோ?'' என்றீர்கள்.

''ஆறு வருஷமாச்சே. அவன் வருவதற்கு — ஆறு வருஷம்! அழ அழ வச்சு, கதறக் கதற அடிச்சு, வாழ்வே நீத்துப் போனப்பறம்னு வந்திருக்கிருன்? நான் அழாமல் என்ன பண்ணுவேன்?'' என்றேன்.

''நீ அசடு; வெறும் அசடு!'' என்றீர்கள்.

நீங்கள் மிகவும் வேடிக்கைக்காரர், அன்பரே!—நான் அவளை உண்டாகியிருந்தபோது நீங்கள் சின்னப்

பிள்ளை மாதிரி என்னிடம் செய்த வேடிக்கைகளை எல்லாம் நினைத்தால் சிரிப்பாக வருகிறது; வெட்கமாகக் கூட இருக்கிறது.

ஒரு நாள் இரவில் என் வயிற்றில் உங்கள் காதை வைத்துக்கொண்டு "ஸைலன்ஸ்! ஒன்மினிட் ஸைலன்ஸ்!" என்றீர்கள்.

"என்ன இது?" என்றேன்.

"பேசாமல் இரு! பையன் ஏதோ சொல்கிறான்!"

(அப்போதெல்லாம் 'அவனை' 'அவன்' என்றுதானே நினைத்துக் கொண்டிருந்தோம்?)

"என்ன சொல்கிறான், உங்கள் பிள்ளை?"

"உஷ்! ... ஆ! இதோ அவன் சொல்றது கேட்கிறது! ..... 'அப்பா! நான் பெரியவனானதும் என்னை என்னமாக ஆக்கப் போகிறாய்?' என்று கேட்கிறான்."

"நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள்?"

" 'உன் அம்மாவைக் கேட்டுச் சொல்கிறேனடா' என்றேன்."

"ஆமாம். ரொம்ப அம்மாவைக் கேட்டுக்கொண்டுதான் எல்லாம் பண்ணுகிறீர்களாக்கும்!—தெரியாதோ?"

"அதிருக்கட்டும், யமுனா, பையனுக்கு என்ன பதில்—?"

"அவன் முதலில் மூக்கும் முழியுமாகப் பழுதின்றி வெளியில் வரட்டும்!"

"வரத்தானே போகிறான்? வந்தப்புறம்?"

"வந்தப்புறம், எல்லாரையும் போல வளர்ந்து, எல்லாரையும் போலப் படிக்கப் போவான். காலேஜ் கீலேஜ் எல்லாம் படிப்பான்."

"அப்புறம்?"

"அப்புறம்? அப்புறம் என்ன? டாக்டராவான்."

"நோ! நோ! நோ- யூ ஸில்லி கேர்ள்!" என்று என்னை இடைவெட்டு வெட்டினீர்கள்; "அவன் அப்பா ஒரு எழுத்தாளரடீ, நாளைக்கு லோகமெல்லாம் தலையிலே தூக்கிவைச்சுண்டு கொண்டாடப் போற எழுத்தாளர்!"

"இருக்கட்டுமே!"

"அப்பேர்ப்பட்டவனுடைய பிள்ளைக்குச் சின்னச் சின்ன ஆசை எல்லாம் இருக்கலாமா? என் பிள்ளை இந்தியாவுக்கே பிரிஸிடெண்டாகத்தான் வருவான்!"

"ஐய்யய்யே!" என்று நான் சிரித்து உங்கள் தலையை வழித்து நெற்றியில் சொடுக்கிக் கொண்டேன். "என்ன, இன்னிக்கு இத்தனை அசடு வழியறது? உம்!" என்று காதைச் செல்லமாகத் திருகினேன்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா, அன்பரே? அந்த வருஷம் நம் வீட்டுக் கொல்லையிலிருந்த மாமரங்களில் நூற்றுக் கணக்கான கிளிகள் வந்து குடியேறின. கீச்சுக் கீச்சென்று அவை பண்ணின அட்டகாசம் தாளவே முடியவில்லை.

அவற்றில் ஒரு கிளி, நாம் இருவரும் ஒற்றையடிப்பாதை வழியாகக் குறுக்குத் துறைக் கோயிலுக்குப் போகையில், வழியில் இருந்த மாமரத்தின் கிளையில் உட்கார்ந்துகொண்டு நம்மையே பார்க்கும்.

வெகு நாள் வரையில் அது அப்படி நம்மையே போகும்போதும் வரும்போதும் பார்த்துக்கொண்டே இருந்தது. திடீரென்று ஒரு நாள் மாலையில் அந்தக் கிளியைக் காணவில்லை. "அது கால் நழுவி, கீழே இருக்கிற புத்துக்குள்ளே விழுந்திடிச்சம்மா!" என்றான், அங்கே மாடு மேய்த்துக் கொண்டிருந்த பையன்—மாரி.

"ஐயோ! புத்துக்குள்ளேயா விழுந்துடுத்து? அப்புறம் அதை யாருமே எடுக்கலையா?" என்று பதறினேன்.

"எப்படியம்மா எடுக்கறது? புத்துலே நாகம் இருக்குதேயம்மா!" என்றான் பையன்.

இதைக் கேட்டதிலிருந்து மனசில் நிம்மதியே நழுவிவிட்டது. என் கண் முன் சதா அந்த நாகமே நின்றது. அதன் வாயில் அந்தக் கிளி!

"இனிமேல் கோவிலுக்கு நாம் அந்த வழியாகப் போக வேண்டாம், அன்பரே, எனக்குப் பயமாக இருக்கிறது."

"அசடே! அசடே!" என்று தலையில் போட்டுக்கொண்டீர்கள்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா, அன்பரே?- அந்த வாரம் வெள்ளிக்கிழமை சாயங்காலந்தான் முதல் தடவையாக எனக்கு 'ஹிஸ்டீரியா' வந்தது.

இரண்டே விநாடிகளில் கைகால் எல்லாம் மரத்துப் போய்விட்டது. நினைவிழந்து விழுந்துவிட்டேன். அம்மா பதறிப் போய்விட்டார். "எந்த ஸ்வாமி குத்தமடீ!" என்று கதறினார். "எந்த நீலி கண் பட்டதடீ?" என்று கத்தினார்.

ஏழுமலையானுக்கு முழு ரூபாயை மஞ்சள் துணியில் முடிந்து வைத்தார். விபூதியைக் கொண்டு வந்து நெற்றியிலும் மார்பிலும் தடவினார். பக்கத்து வீட்டுப் பாட்டி வந்து விளக்குத் திரியைக் கொளுத்தி அணைத்து அதன் புகையை என் மூக்கில் ஊதின பிறகுதான் எனக்கு நினைவு திரும்பியது. எழுந்து மருள மருள விழித்தேன்.

"எப்படி இருக்கிறதடி, என் கண்ணே? எப்படியம்மா இருக்கிறது?" என்று அம்மா பதறினார்.

"அது . . . . அது. . . . அது போயிடுத்தா, அம்மா?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டேன்.

"எதுடீயம்மா?"

"அதுதான் அம்மா, அந்த நாகம்!"

"நாகமா?"

"ஆமாம். வாயிலே கிளியைக் கௌவிக்கொண்டு, சரசரன்னு வந்து 'யமுனா, உனக்குப் பெண்தான் பொறக்கப் போகிறது; அவள் என் குழந்தையாக்கும்' என்றதே!"

"நான் நினைச்சேனடி, நான் நினைச்சேன்!" என்று அம்மா பரபரப்புடன் சொன்னார்; "இப்படித்தான் ஏதாவது இருக்கும்னு நினைச்சேன். அடி பெண்களா, வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமை கொல்லைப் புத்துக்குப் பால் ஊத்துங்கடின்னு சொன்னேனே, கேட்டயளா?"

"இனிமே ஊத்துகிறோம், அம்மா!"

அன்றிரவு படுக்கையறையில் என்னை அணைத்துக்கொண்டு, "என்ன யமுனா, இது? இப்படிக் காபராப் படுத்திவிட்டாயே!" என்றீர்கள்.

"இல்லை அன்பரே; நிஜமாகவே அந்த நாகந்தான் வந்தது. இரண்டு நிமிஷம் கண்ணயர்ந்துவிட்டேன், உட்கார்ந்தபடியே. அப்போ வந்துவிட்டது."

"இந்த உடம்போடு இனிமே நீ அதை எல்லாம் நினைக்கவே கூடாது. தங்க விக்கிரகம் மாதிரி ஒரு பயலைப் பெறப் போகிறாய். இடுப்பில் சலங்கையும் கச்சையும் குலுங்க அவன் ஓடி வருவானே, அதை நினைத்துக்கொள். அந்தக் கற்பனையிலேயே இரு."

"இல்லை, அன்பரே; இனிமேல் 'அவன்' இல்லை, அவள்தான் நமக்குப் பிறக்கப் போகிறாள்-நாகலக்ஷ்மி!"

ஒரு நிமிஷம் உங்கள் முகம் வேதனையைக் காட்டிற்று. அடுத்த கணமே சமாளித்துக்கொண்டு விட்டீர்கள். "எதுவாக இருந்தால் என்ன, யமுனா? இரண்டும் ஒன்றுதானே? நம் அன்பில் பூத்த மலர்தானே?" என்று சொல்லிப் போர்வையை இழுத்து எனக்குப் போர்த்தினீர்கள்.

எனக்கு எல்லாம் நினைவு இருக்கிறது, அன்பரே! எதுவும் எனக்கு மறக்கவில்லை. நினைவுபடுத்திக் கொள்வதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. நினைவுபடுத்திக் கொள்ளும் போது மூளைக்குள் எப்படி வலிக்கிறது, தெரியுமா, அன்பரே?-ஐயோ! என் தலையைச் சற்றுப் பிடித்துக்கொள்ளுங்கள், அன்பரே! என்னை உங்கள் மார்பில் சாய்த்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் அந்த டாக்டரை அழைத்து வந்திருக்கக் கூடாது, அன்பரே! என்னை ஏன் அவர் ஒன்று இரண்டு என்று எண்ணச் சொல்ல வேண்டும்? எட்டுக்கு மேல் முடியாதபோது, 'உம், சொல்லு' என்று ஏன் சிரமப்படுத்த வேண்டும்?

அவரை இனிமேல் அழைத்து வராதீர்கள், அன்பரே! அவர் என்னை மிகவும் கஷ்டப்படுத்துகிறார்.

எனக்குச் சித்தம் சரியில்லை என்றா அவர் சொல்கிறார்? இல்லை, அன்பரே, அவர் சொல்வது சரி அல்ல. அவருக்குத்தான் சித்தப் பிரமை.

* * *

எனக்கு எல்லாம் நினைவிருக்கின்றன, அன்பரே! 'அவளை' உண்டானது, பெற்றது, வளர்த்தது எல்லாமே நினைவிருக்கின்றன.

சொல்லட்டுமா, அன்பரே?

அவள் வந்து என்னுள் புகுந்துகொண்டதும், ஆச்சரியமான அழகும் தோற்றமும் எனக்கு வந்துவிடுகின்றன.

"பூமாதிரி இருக்கிறாய், இப்போ, நீ; பெரிய பூமாதிரி, இதழ்களை எல்லாம் விரிச்சுண்டு; ரவிவர்மா படத்திலே, லட்சுமிக்குக் கீழே இருக்குமே, அந்த மாதிரி!" என்கிறீர்கள்.

என்னுள் மூழ்கிக் கிடக்கிறேன் நான். உள்ளுக்குள் கிடக்கிறேன். அந்தச் சின்ன 'உயிரு'டன் கிடக்கிறேன். அது புரள்வது, நகருவது, துள்ளுவது, உதைப்பது எல்லாவற்றையும், உள்

ளூற ஓர் உணர்வுக் கண்ணுல் பார்த்து மகிழ்ந்துகொண் டிருக்கிறேன்.

ஒரு நாள்—

வீதி முழுக்க வந்து ஆசீர்வதிக்கிறது என்னை. நாலு சாஸ்திரிகள் வந்து, உரத்த குரலில், தெளிவாக மந்திரங்களைச் சொல்லுகிறுர்கள். முள்ளம் பன்றியின் வெண்ணிற முள்ளையும் பேயத்திக் காய்க் கொத்தையும் மாவிலையையும் கையில் கொண்டு வகிடு கீறி, மந்திர மழை பொழிகிறீர்கள் நீங்கள், தீர்க்கமாகவும் புஷ்டியாகவும் பலசாலியாகவும் ஆயுசுடனும் நான் 'அவனை'ப் பெற்று, அவனும் மடியுமாய் நிலைபெற.

கைகொள்ளாமல் வளைகளின் பேரணிச் சுமையுடன், தலையிலும் ஒரு சுமையாய், ராக்கொடி ஜடை சிங்காரத்துடன் தாழைமலர் வைத்துப் பட்டியும் தைத்து, கூறையுடுத்து, 'வைத்து'ப் பாடுகிற சாக்கில், ஊர்ப் பெண்கள் முழுவதும் ஹாலில் கூடுகிறுர்கள் சாயங்காலம்.

வெள்ளியாய்த் தலை நரைத்தாலும், முகச்சுடரான குங்குமத்தையும் வாழ்வின் சுடரான திருமங்கல்யத்தையும் இழக்காத பழுத்த சுமங்கலியிலிருந்து நேற்றுப் பிறந்த குட்டிகள் வரை எல்லாருக்குமே ஒரு விஷயத்தில் ஏக அபிப்பிராயம்.

அம்மாவிடம் சென்று, ''அம்மா, உங்களுக்கு வரப் போவது பேரன் தான்; ஸ்ரீராமசந்திரப் பிரபுதான்'' என்கிறுர்கள் ஒருவர் பாக்கியில்லாமல்.

''ஸ்ரீராமசந்திரனு? குருவாயூரப்பனடி....குருவாயூரப்பனுக்கும்!.... நான் நேந்திரன் பழத்தாலே துலாபாரம் போடறதாக வேண்டிண்டிருக்கேனுக்கும்!

''அடியே, பெண்டுகளா?- எல்லாரும் 'பெத்துப் பிழைச்சு வா' ன்னு என் குழந்தையை - யமுனவை - ஆசீர்வாதம் பண்ணுங்கோ.

''நடுவாத்துப் பாகீரதி மாமி எங்கே? மாமி, உங்க ஆசிர்வாதந்தான் ரொம்ப முக்கியம். நீங்க மனசார ஆசிர்வாதம் பண்ணினு, அங்கே பொன்னுகக் கொட்டும்; மணியா விளையும்; பிள்ளையாய்ப் பிறக்கும்.''

''பேஷா....பேஷா..! மனப்பூர்வமான ஆசிர்வாதம்டீ, யமுனக் கண்ணு! புள்ளைக் குழந்தை பிறந்து மகராஜியாய் இருப்பாய்!''

''யமுன, மாமிக்குத் திருப்தியா நமஸ்காரம் பண்ணு.''

''மகராஜியா இரு; மகராஜியா இரு.''

அன்றிலிருந்து வீடே மாறிவிடுகிறது; எல்லாருடைய நினைப்பிலும் வரப்போகிற அந்தப் பயலே, குடிகொண்டு விடுகிருன். மாலையில் அலுவலகம், பள்ளிக்கூடம் இவைகளிலிருந்து விடுபட்டதும் குடும்பம் முழுவதும் ஹாலில் கூடிக் கொண்டு 'அவனை'ப் பற்றியே பேசுகிறுர்கள்.

''நீ அவனைப் பெரிய 'ஹீரோ' ஆக்கிவிட வேண்டும், அண்ணு. தேசத்துக்கு இப்போ ஹீரோக்களே நிறையத் தேவை'' என்கிருர் மைத்துனர்.

''ஹீரோவானுலும் கிரோவானுலும் சரியண்ணு. உன்னைப் போலக் கதையையும் கத்திரிக்காயையும் கட்டிண்டு மட்டும் மாரடிக்க அவனை விட்டுடப் படாது, அண்ணு. என் மருமான் பெரிய இன்ஜினியராகத்தான் வேண்டும்!'' என்கிருள் இரண்டாவது நாத்தனுர்.

''ஐய்யய்ய, இன்ஜினீராவது, சுக்குநீராவது? போடீ போ! அண்ணுவின் பிள்ளை இந்தியாவுக்கே பிரசிடெண்டாகத்தான் வருவான். முன்பே தீர்மானமாயிருக்குடி, இந்து. உனக்குத் தெரியாதா?'' என்று நம் இருவரையும் பார்த்து இமைகளைச் சிமிட்டிச் சிரிக்கிருள் மூத்த நாத்தனுர், ராஜம்.

''அது என்ன கூத்து? எப்போடீ?''

''லாங்...லாங்....லாங் அகோ?'' என்று சொல்லிச் சிரிக்கிருள் ராஜம்.

''விவரமாய்ச் சொல்லடீ!''

''ஒரு நாள் இரவு, தெருவெல்லாம் சுத்தி, சீட்டுக் கச்சேரியை முடிச்சுண்டு மன்னி மகாராணியோட அந்தப்புரத்துக்குள்ளே அண்ணு மகாராஜா வந்தார்'' என்று சிரிப்பும் பரிகாசமுமாக ஆரம்பிக்கிருள் ராஜம் நாத்தனுர்.

''பேஷ்! பேஷ்!'' என்று மைத்துனர்கள் இருவரும் ஆர்ப்பரிக்கிருர்கள்.

''அண்ணு வந்ததும், மகாராணி கேட்டாள்: 'அகோ, வாரும், மன்னு, தாங்கள் ஆயிரம் வருஷ காலம் நீருக்கடியிலும் நிலத்துக்கடியிலும் பொரிவிளங்காய் டின் அடியிலும் நான் ஆகாசத்துக்கு மேலேயுமாய்த் தவம் பண்ணி, கிண்டியிலே அசுவமேத யாகம் பண்ணிட'....''

''ஏய், அசடே! குழந்தை பிறக்க அசுவமேதமா பண்ணுவா?''

''பின்னே என்ன பண்ணுவா?''

''புத்ரகாமேஷ்டியோ என்னவோன்னு....''

'' 'ஓ எஸ்! அதுவேதான்! அதைப் பண்ணி, இப்போ 'உண்டாகி'யிருக்கிறேனே, இவனை எதிர்காலத்திலே எந்தச் சிம்மாசனத்திலே உட்கார்த்தறது? இப்போதான் சம்ஸ்தானுதிபதிகள் சிம்மாசனங்களை எல்லாம் சர்க்காரிலே பறிச்சுண்டிருக்காளே!' இன்னு கேட்டாள். அண்ணு மகாராஜா இரண்டு நிமிஷம் தீர்க்கமாக யோசனை பண்ணிவிட்டு, 'ப்ரியே! நீ சொல்வது வாஸ்தவந்தான். ஆனுல் அதற்காகக் கவலைப்படாதே! இதே பயலை நன்ருகப் படிக்கவச்சு, தத்துவம், வேதாந்தம் இரண்டையும் கரைச்சுப் புகட்டி, பேரறிஞ்ச புரொபசராக்கிவிடுவோம். அப்புறம், அரசியல்காரர்கள், 'இந்தியாவுக்குப் பிரசிடெண்ட் வேணுமே, படிச்சவாளா'ன்னு தேடிண்டு வருவா. இவனைக் கொத்திண்டு போய், இந்தியாவின் சிம்மாசனத்திலே உட்கார்த்திடுவா'ன்னுர். 'ஆஹா! நீரல்லவோ, மாமன்னர்? நீரல்லவோ மதியூகி!' ன்னு ராணி ஆனந்தக் கூத்தாடினுள்.''

கலகலவென்று சிரிக்கிறது கூடம் முழுவதும். ஆனுல் அசடு வழிகிறது நம் இருவர் முகத்தில் மட்டும். ராஜத்தின் காதைத் தாவிப் பிடித்து, ''ஏய், ஒட்டுக் கேட்கிற தூங்கா விளக்கே'' என்று திருகினீர்கள்.

''எனக்கென்னவோ, அப்போகூட நம்மாத்துப் பிள்ளை பிரசிடெண்டா வர முடியும்னு தோணலை. என்னமோ நாலு பேர் வெளிநாட்டிலேயிருந்து படிச்சவனு ஓயாமே வந்திண்டிருக்கானுங்கிறதுக்காக இப்போ, படிச்சவரைப் பிரசிடெண்டாக்கரு. ஆனுல் நம் வீட்டுப் பிள்ளை பெரியவனுகிறபோது அங்கேயும் படிக்காதவரே போதும்னு ஆனுலும் ஆகிவிடும்'' என்ருள் மைத்துனர்.

''போனுல் போகட்டுமடா, நரசிம்மா. அவன் இந்த வீட்டுக்கும் நமக்கும் 'ஸ்வாமி'யாக இருக்கக்கூடாதுன்னு யாரும் சொல்லிட மாட்டாளே? அது போதும் நமக்கு. அவன் அப்படி இருந்தால் போதும்!'' என்கிருள் அம்மா.

நாட்கள் ஓடுகின்றன சிட்டாய். பருவங்கள் மாறி வருகின்றன. கிளிகளின் சத்தம் எல்லாம் ஓய்ந்துவிட்டது; காற்றிலே மாம்பூவின் மகரந்த வாசனை இல்லை இப்போது.

மழை விழுகிறது தட தடா, தட தடா என்ற பேரிரைச்சலுடன். முன் அறையை ஒழிக்கத் தொடங்குகிருள் அம்மா. ''ஆகி வந்த அறையடா, அது!''

கட்டிலை இழுத்துப் போடுகிருர்கள். பேஸினும், ஹீட்டரும், வெள்ளைத் துணிகளும் உள்ளே நுழைகின்றன. கத்திரிப் பூக் கலரில், மைத்துனர், திரைகளைக் கொண்டு வந்து ஜன்னலில் கட்டுகிருர். அறைவாசலில் திரையை இழுத்து விடுகிருர்கள்.

''ஏண்டா, டாக்டர் கைராசிக்காரியா இருக்கணுமே! சாந்தாபாய் எப்படி?'' என்கிருர் அம்மா.

''கெட்டிக்காரிதான்; ஆனுல்..''

''ஆனுல்....?''

''அவ தொட்டதெல்லாம் பெண்தானும்; சொல்ரு.''

''சிவ சிவ! வேண்டவே வேண்டாம்; புள்ளைக்குன்னு நாம் இங்கே தவம் கிடக்கிருேம்?''

''ஸ்ரீமதி சதுர்வேதிதான் 'பிள்ளை'க்கை. அவளைத்தான் கூப்பிடலாம்னு இருக்கேன்.''

''அவளையே கூப்பிடு; அவளே வரட்டும்.''

ஆனுல் ஸ்ரீமதி சதுர்வேதியினுலும், அந்த நிஜ சதுர்வேதியான சர்வேசுவரனின் சித்தத்தை மாற்ற முடியவில்லை. 'அவனை' அவளாகத்தான் வெளிப்படுத்திக் கொடுக்கிருள்.

ஒரு கணம் குடும்பம் முழுவதற்குமே 'திக்'கென்று இருக்கிறது. எல்லாருக்குமே ஏதோ திகைப் பூண்டை மிதித்துவிட்ட மாதிரி, நெருப்பை மிதித்துவிட்ட மாதிரி, ஷாக் அடித்த மாதிரி.

''என்ன?''

''பெண்!''

''ஓஹோ!....ம்....''

மாமாவின் அந்த 'உம்' ஒலி முழு வீட்டின் பெருமூச்சொலி மாதிரியே இருக்கிறது; கண்ணீர் பெருகி வழிகிறது.

யாரும் இல்லாதபோது அருகில் வந்து பார்க்கிறீர்கள். ''என்ன இது? அழுதாயா? அசடே, எதற்கு?'' என்று கன்னத்தை வருடுகிறீர்கள்,

''என்ன பிறந்திருக்குன்னு பார்த்தேளா?'' என்று விம்முகிறேன்.

''பார்க்கிறது என்ன?.. ராணின்னு பிறந்திருக்கிருள்? சின்ன ராணி! பாரேன், மூக்கையும் முழியையும், கம்பீரப் பார்வையையும். அசல் நீயே தான் உரிச்சு வைச்சிருக்கு. நீ பெரிய ராணி; இவ சின்ன ராணி! அம்மா சொல்ரு; ராஜராஜேசுவரியே வந்து பிறந்திருக்கான்னு....''

''அப்போ அவாளுக்கெல்லாம் வருத்தம் இல்லையா?''

''ஏதுக்கு வருத்தம்? சாட்சாத் அம்பாள்னு குழந்தையாப் பொறந்திருக்கா உனக்கு? சந்தோஷப்படுவாளா, வருத்தப்படுவாளா? அசடே, அசடே!''

என் கண்ணைத் துடைத்துவிடுகிறீர்கள்; விழிகளைப் பக்கத்தில் திருப்புகிறேன்.

பட்டுக் கைகளும் காலுமாய், செம்பூவாய், மணிக் கண்களால் விழித்து விழித்து மூடிக் கொண்டு, பால் போன்ற துணிக் குப்பலுக்குள் கிடக்கிருள் நம் குழந்தை. பார்க்கப் பார்க்கக் கண்ணில் ஈரம் காய்கிறது.

''அப்படின்னு எனக்கும் திருப்திதான்!'' என்ற அவளை அணைத்துக் கொள்கிறேன்.

''ராணிக் கண்ணு—என் சின்ன ராணிக் கண்ணு!''

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா, அன்பரே?

அவளை எல்லாரும் நேசித்தார்கள்; வருகிற பேர் போகிற பேர் எல்லோரும் தூக்கி தூக்கி அணைத்துக்கொண்டார்கள். 'சின்ன ராணி, சின்ன ராணி' என்று கொஞ்சித் தீர்த்தார்கள்.

ராணி மாதிரிதான் இருந்தாள் அவளும். ஏதோ ராஜ குடும்பத்திலே பிறக்க வேண்டியவள் தவறிப்போய் இங்கே பிறந்துவிட்டதாகத் தோன்றியது. மீராபாயின் நினைவுதான் வருகிறது உங்களுக்கு. 'மீரா' என்றுதான் கூப்பிடுகிறீர்கள் அவளை.

''அம்மா, குருவாயூர்க் கிருஷ்ணனே வருவான் என்று எதிர்பார்த்தோம். அவன் வரவில்லை. ஆனால் அவன் தனக்கே நெருக்கமான ஒருத்தியை அனுப்பியிருக்கிருன் - மீராவை! அதனால் மீரான்னு இவளைக் கூப்பிடலாம்.''

ஆனால் சின்ன ராணி என்கிற பெயர்தான் நிலைக்கிறது அவளுக்கு. ''சின்ன ராணி என்ன பண்ணுகிருள்?'' என்றுதான் ஊர் முழுக்க வந்து விசாரிக்கிறது.

அம்மா பூஜை புரஸ்காரம், சமையலறை எல்லாவற்றையும் மறந்துவிட்டார், அவள் வந்த பிறகு. அவளுடைய தாத்தாவே பதினைந்து நிமிஷத்துக்கொரு தடவை அவளுடைய தூளியடியில் போய் நின்றுவிடுவார். தாலாட்டுப் பாடலெல்லாம் அவருக்குக் கரதலப் பாடம்.

செந்தா மரைமலரில் தோன்றிச் செகம்
எல்லாம்
தந்தாள வந்த திருமகளோ? தாரணிசேர்
நந்தா விளக்கோ? மெய்ஞ்ஞானத்தின்
நற்கொழுந்தோ?
சிந்தா மணியோ திருப்பாற்கடல்
அமுதோ?

என்று ஏதாவது பாடிக்கொண்டே அவள் தூளியை ஆட்டுவார்.

இமைக்குள் வைத்துத்தான் அவளை வளர்த்தோம்.—இல்லையா, அன்பரே?

'என் முத்தே, மணியே' என்று கொஞ்சுகிருர் அம்மா. 'தங்கக் கண்ணே!' என்கிருர்கள் நாத்தனுர் இருவரும். 'சின்ன ராணிக்குட்டி!' என்று விளையாட்டுக் காட்டுகிருர் மைத்துனர்.

கவிழ்ந்து கவிழ்ந்து, நீந்தி, எழுந்து உட்காருகிருள் குழந்தை. பொம்மைகளாக வாங்கி வந்து தள்ளுகிருர் சின்ன மைத்துனர், மூர் மார்க்கெட்டை வீட்டுக்குக் கொண்டு வந்து விடத் தீர்மானித்தவர்போல. ஹால் நிரம்பி வழிகிறது.

எத்தனை விதமான பொம்மைகள்! சின்ன நாத்தனுர் எல்லாவற்றுக்கும் சொக்காய் தைத்துப் போடுகிருள்; பாசி கோத்துக் கட்டுகிருள்; பாவாடை உடுத்துகிருள். உழக்கும் ஆழாக்கும் அரைப்படியும் முழுப் படியுமாகத் தடுக்கி விழுந்த இடமெல்லாம் உட்கார்ந்திருக்கின்றன பொம்மைகள்.

பொன்னிறக் கூந்தலும், ரப்பர்க் கன்னங்களுமாய், கொழுகொழு என்று மேல்நாட்டு இடைச்சிப் பொம்மை ஒன்று இருக்கிறது. கட்டம் போட்ட லுங்கி 'ஸ்கர்ட்' அணிந்து, காலில் பூட்சுடன் நிற்கிறது அது, ஜோராய். சின்ன ராணியின் உயிருக்கு உயிரான பொம்மை அதுதான்.

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா, அன்பரே? எப்போதும் அவள் அதன் எதிரில்தான் உட்கார்ந்திருப்பாள், இன்னொரு பொம்மை மாதிரி.

கால் இரண்டையும் அகற்றிக்கொண்டு, கையிரண்டையும் உயரே தூக்கிக்கொண்டு. உட்கார்ந்து அது அவளிடம் ஏதோ சொல்கிற மாதிரி இருக்கும்: ''உனக்கும் இரண்டு வயசு; எனக்கும் இரண்டு வயசு!''

இரண்டு வருஷமா வளர்த்தோம், அவளை? இரண்டு யுகங்கள் வளர்த்த மாதிரி அல்லவா இருக்கின்றன?

''ஏண்டாப்பா, சாரங்கா, குருவாயூருக்குக் குழந்தையை எடுத்துண்டு போய் அவளைத் துலாபாரம் போட வேண்டாமோடா?''

''எல்லாம் போவோம், அம்மா.''

''போவோமாவது? இந்த வருஷமாவது கட்டாயம் போயிட்டு வந்துடணும்டா. எனக்கு அவளைத் துலாபாரம் போட்டு அந்தக் கிருஷ்ணன் சந்நிதியிலே கிடத்திவிட்டுத் திருப்பி எடுத்து வருகிற வரையில் நிம்மதியே இருக்காதுடாப்பா. இரண்டு வருஷமாக இதே கவலை எனக்கு.''

''ஏப்ரலிலே கட்டாயம் போயிட்டு வருவோம், அம்மா!''

ஆனுல் அன்பரே, என்ன சொல்வேன்? அந்த ஏப்ரல் வந்தபோது அவள் நம்மிடையே இல்லை.

என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள் அன்பரே! என் கண் இருளுகிறது, அன்பரே! பூமி நழுவுகிறது, காலடியில், அன்பரே!

ஆடிவரும் தென்றலாய், இளந்தளிராய், செழுங்கனியாய், என் புண்ணியமாய், ஆணிப் பொற்பல்லக்கில் ஏறி வந்த ஆழ்வார் திருமகளாய், நம் குழந்தை வளர்ந்து வந்தாள்.

சின்ன மெத்தையும் சின்னக் கட்டிலும் வருகின்றன, அவளுக்கு. சிவப்பும் பச்சையுமாய் இரண்டு சின்ன வெல்வெட் தலையணைகள் இருபக்கமும் அணைத்துக் கிடக்கக் கண்ணுறங்குகிருள், நம் கலி தீர்க்க வந்த குழந்தை.

கன்னத்தில் அம்மா இட்ட 'திருஷ்டி'ப் பொட்டுப் பளிச்சிடுகிறது; ரோஸ் நிற மப்ளர் தலைமீது குஞ்சங்களுடன் கவிழ்ந்து குளிர் காய்கிறது. காலிலும் கையிலுங்கூட உல்லன் கிளவுஸுகள் ரோஸ் நிறத்தைப் பொழிகின்றன. வெள்ளை ஆர்கண்டியில் சின்ன 'ஸ்கர்ட்' தைத்துப் போட்டிருக்கிறேன். கண்ணும் மையும் நெற்றியில் தவழும் கூந்தல் கற்றையுமாய்—அம்மம்மா! சொல்லவே முடியவில்லை அழகை!

அவளுடைய கட்டிலடியிலேதான் அம்மாவுக்குப் படுக்கை. கொஞ்சம் அவள் அசைந்தாலும் போதும், எழுந்துகொண்டு விடுவார்; பாய்ந்து போய் எடுத்துக்கொண்டு விடுவார்.

நீல நிறத்தில் தூங்கி வழிகிறது 'நைட்' பல்பு. அதனடியில், ரோஜா மலராய்க் கண்வளர்கிருள், குழந்தை.

அன்பரே, அன்பரே! அப்புறம் நடந்ததையா கேட்கிறீர்கள்?.... என்னுல் சொல்ல முடியவில்லை, அன்பரே! நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை, அன்பரே!

''சும்மா, சொல்லு யமுனு...''

திடீரென்று ஏதோ சத்தம் கேட்கிறது நடு இரவில்; ஒரு கிளி கழுத்தைத் திருகுகிறபோது கிரீச்சிடுகிற மாதிரியான சப்தம்!

நாம் இருவருமே திடுக்கிட்டு விழித்துக்கொள்கிறோம். என் அடிவயிற்றைக் காரணம் இல்லாமல் பிசைகிறது. கிடுகிடுவென்று நடுங்குகிறது உடம்பு.

அதே சமயம் கீழேயிருந்து அம்மாவின் அலறலும் கேட்கிறது: ''ஐயோ! ஓடி வாங்களேன் ... ஓடி வாங்களேன் . . குழந்தை . . குழந்தை!''

படிகள் தாவி இறங்கி ஓடுகிறோம். மாமா, மைத்துனர்கள், நாத்தனுர்கள், எல்லாருமே விநாடிப் பொழுதில் ஓடி வந்துவிடுகிருர்கள்.

''அதோ! அதோ!'' என்று பீதியுடன் சுட்டிக்கொண்டு உடல் வெடவெடக்க நிற்கும் அம்மாவின் பின்னுல் எல்லாரும் திகைத்து நின்று பார்க்கிறோம். அவர் காட்டின திசையில், நீல விளக்கின் அடியில், கட்டிலில், குழந்தையின் அருகே—ஆம்

அன்பரே, நம் தங்கக் குழந்தையின் அருகே ஒரு நாகம் சுருண்டு படுத்திருக்கிறது!

'வீல்' என்று அடிவயிற்றிலிருந்து நான் கத்தித் தீர்ப்பதற்குள்—

கால்கள் சில்லிட எல்லாரும் செய்வதறியாது நிற்கையில்—

அது எழுந்து, தலையை உயர்த்திச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, மெதுவாக அவள்மீது ஊர்ந்து அப்பால் இறங்கி, அப்பாலே போய்—

அடுத்த கணம் மூர்ச்சையடைந்து, ''என் ராணிக் கண்ணே!'' என்று கதறிக்கொண்டே சாய்ந்தேன்.

மீண்டும் எனக்குப் பிரக்ஞை வந்தபோது குழந்தை என்னைப் பார்த்துச் சிரித்தாள். 'ம்ம்ம்மா...' என்று என் கன்னத்தைத் தன் குஞ்சுக் கைகளால் தடவினாள்.

ஆனால் அதுதான் அவள் கடைசியாகச் சிரித்த சிரிப்பு. அன்று இரவே அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது. எட்டு நாள். அப்பப்பா! எட்டு நாளா? எட்டு யுகம்! கபமும் சளியும் ஜுரமுமாய் மூச்சுக்கூட விட முடியாமல் தவித்தது.

மடியில் போட்டுக்கொண்டு எட்டு நாளும் உட்கார்ந்திருக்கிறேன்; உலகத்திலுள்ள சுவாமிகளை எல்லாம் கூப்பிட்டு அரற்றுகிறேன். ''ஸ்வாமி! ஸ்வாமி! ஏன் என் குழந்தையை இப்படிக் கஷ்டப்படுத்துகிறாய்?'' என்று கதறுகிறேன்.

''என்னம்மா! ....என்னம்மா! என்னைக் கண் திறந்து பாரம்மா!'' என்று அழுகிறேன்; ''என் ஆயுளில் பாதியைத் தருகிறேன். அவளுக்கு அதைக் கொடுத்து யாராவது அவளை உயிர்ப்பியுங்களேன்'' என்று கதறுகிறேன்.

ஆனால், ஒன்பதாவது நாள் அவள் நம்மை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள், அன்பரே, நம் ஆசைக் கொடியை அறுத்தெறிந்துவிட்டுப் போய்விட்டாள்.

''அம்மா! அம்மா! நம் சின்ன ராணி எங்கே?

''அம்மா! அம்மா! என் மீராக் கண்ணு எங்கே? என் கலிதீர்க்க வந்த தங்கம் எங்கே?

''அன்பரே! அன்பரே! நம் குழந்தை எங்கே? நம் உயிர் எங்கே?

''எங்கே போனாள், குழந்தை? நம்மை எல்லாம் விட்டு எப்படிப் போனாள்?

''இனிமேல் அவள் வரவே மாட்டாளா, அம்மா?—''

''வருவாள், யமுனா! கொல்லையில் கிளிகள் எல்லாம் திரும்ப வரும்; மாம் பூக்கள் எல்லாம் சின்னச் சின்னக் கண்களைத் திறந்து பார்க்கும். ஆகாசத்தில் மேம்பாலமாய் வானவில் விழும். அப்போது, அந்தக் கிளிகள் அவளைக் கொண்டு வந்து திரும்பவும் உன் மடியில் போட்டுவிடும்.''

''கிளிகள் எப்போது வரும், அம்மா? கிளிகள் எப்போது வரும்?''

''வரும்; வருகிற வேளை வந்ததும் வரும்!''

''அன்பரே, அன்பரே, கிளிகள் எல்லாம் வந்தாச்சா?''

''இல்லை, இன்னும் இல்லை.''

''சீசீ! மிகவும் மோசம் இந்தக் கிளிகள்! எத்தனை 'நாள்' பண்ணுகின்றன?''

''உனக்கு இப்போ உடம்பு சரியில்லை, யமுனா. நீ அமைதியாக ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று டாக்டர் சொல்கிறார்.''

''நான் இப்போது எங்கே இருக்கிறேன் அன்பரே?''

''நம் வீட்டில்தான் இருக்கிறாய்.''

''சற்றுமுன் எங்கோ போய்விட்டு வந்த மாதிரி இருக்கிறதே, அன்பரே!''

''ஆமாம். யாரும் பாராதிருந்தபோது கொல்லைப் புறம் போய்விட்டாய். கிணற்றடியில் நின்று உள்ளே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தாய். அம்மா அகஸ்மாத்தாகப் பார்த்துவிட்டு, ஓடிப் போய் உன்னைக் கையைப் பிடித்து அழைத்து வந்தாள்.''

''கிணற்றடியிலா?''

''ஆமாம்.''

''இல்லை, அன்பரே, அந்தப் புற்றருகில் அல்லவா போனேன்? அதன் 'வாய்' வழியாக இறங்கி உள்ளே கூடப் போனேன். மீராவின் ஸெலுலாயிட் பொம்மையைக்கூட எடுத்துப் போனேனே!''

''மீராவின் பொம்மையையா?''

''ஆமாம். நம் சின்ன ராணியின் பொம்மைதான். அந்த இடைச்சிப் பொம்மை அல்ல. அது. நேற்று ராத்திரி நம் குழந்தை வந்திருந்தாள் அன்பரே! நம்மைப் பார்க்க வந்திருந்தாள். அப்போது நீங்கள் ஆபீசுக்குப் போயிருந்தீர்கள்.''

''ஆபீசுக்கா? ராத்திரியிலா?''

''ஆமாம். ராத்திரியில்தான்; ஆபீசுக்குத்தான். அப்போதுதான் குழந்தை வந்திருந்தாள். திடுக்கென்று ஓடி வந்து 'அம்மா' என்று என் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

'வந்தாயாடீ என் கண்ணே!' என்றேன்.

'அங்கே எனக்குப் பொழுதே போகமாட்டேன் என்கிறது, அம்மா. என் இடைச்சிப் பொம்மையை எடுத்துக்கொண்டு போகத்தான் வந்தேன். எங்கே அம்மா, அது? எடுத்துக் கொடு' என்றாள்.

'இதோ தரேனடீ, கண்ணே!' என்று அறை முழுக்கத் தேடிப் பார்த்தேன். ஏன், அன்பரே, அதையும் அப்போது உங்களுடன் ஆபீசுக்கு எடுத்துக்கொண்டு போயிருந்தீர்களா? இங்கே எங்குமே அதைக் காணோமே!''

'அதைக் காணோமடீ, குழந்தை! நாளைக்கு—'

'நாளைக்கு நான் வர முடியாதே அம்மா!' என்றாள் குழந்தை.

'அப்போ நானே அதைக் கொண்டு வந்து உன்னிடம் தருகிறேன்' என்றேன். இன்றைக்கு அதைக் கொடுக்கத்தான் போனேன், அன்பரே!''

''ஆனால் அதை நீ அவளிடம் கொடுக்கவில்லை; கிணற்றில்தான் போட்டுவிட்டு வந்தாய். அம்மா பார்த்து வாளியைக் கட்டிவிட்டு எடுத்து வந்தாள், அதை.''

''கிணற்றிலா? இல்லை, அன்பரே. நிச்சயமாக இல்லை; எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, அன்பரே, படிப்படியாக இறங்கிப் போனேனே புற்றுக்குள்; கீழே கீழே போயினவே படிகள். அப்புறந்தான் திடீரென்று ஒரு பள்ளம் தெரிந்தது. கடைசிப் படியில் நின்று அவளைக் கூப்பிட்டேன். அவள் கீழே வந்து நின்று, கைகளை உயரே நீட்டி, 'கீழே போடு, அம்மா அதை. எடுத்துக் கொள்கிறேன்' என்றாள். அப்

கல்லில்

புறந்தான் கீழே போட்டேன்; அது அவள் கையில்தான் விழுந்தது அன்பரே, சந்தேகமே இல்லை எனக்கு.

''அப்படிப் பார்க்காதீர்கள், அன்பரே, என்னை. நம்பிக்கையற்றுப் பார்க்காதீர்கள். நான் உளறவில்லை, அன்பரே, சித்தம் கலங்கி உளறவில்லை.''

''அன்பரே, நிஜமாகவே எனக்கு உடம்பு சரியாகத்தான் இல்லையா? எனக்குப் பயமாக இருக்கிறது அன்பரே. நாளைக்கா அமாவாசை?''

''ஆமாம்!''

''நாளைக்கு நான் சரியாக இருப்பேனா, அன்பரே? போன அமாவாசையன்று நான் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று அம்மா சொன்னாரே; அது நிஜந்தானா, அன்பரே?

''நான் துணியைக் கிழித்தேனா, அன்பரே? மீராவின் சட்டையையா கிழித்துவிட்டேன்? அவளுடைய 'ஹாக்கர்' பொம்மையைக்கூட உடைத்துவிட்டேனாமே! நிஜந்தானா, அன்பரே?

''என்னை 'நல்ல பெண்' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே; நான் அப்படிச் செய்திருக்க முடியாதல்லவா? நான் நல்ல பெண்தானே அன்பரே?''

''ஆமாம். நல்ல பெண்தான்.''

''நான் நல்ல பெண்ணாகத்தான் என்றைக்கும் நடந்துகொள்ள விரும்புகிறேன். ஆனால் ..... ஆனால் ..... அது எப்படி நேர்ந்தது?

''அதோ, அந்த ஹாக்கர் பொம்மையின் கையும் காலும் உடைந்து பரிதாபமாகத் தொங்குகின்றனவே!

''எனக்குப் பயமாக இருக்கிறது அன்பரே! மிகவும் பயமாக இருக்கிறது! நாளைக்கு நீங்கள் என் கூடவே இருப்பீர்களா, அன்பரே? நான் என்னை அறியாமல் எதையாவது உடைத்துக் கிழித்து விடக்கூடும். கெட்ட பெண்ணாக நடந்து கொண்டுவிடக்கூடும். இதோ, இப்போதேகூட எதையாவது கிழிக்க வேண்டுமென்று எனக்கு.. ஐயோ, அன்பரே! அன்பரே!''

''அழாதே, யமுனா, அழாதே!''

''நான் மிகவும் கெட்ட பெண், அன்பரே! மிகமிகக் கெட்ட பெண். குடும்பம் நடத்தவே லாயக்கில்லாத பெண்.

''எப்படி உடைத்திருக்கிறேன், பாருங்கள், அந்தக் 'காட்ரெஜ்' கண்ணாடியை? பூந்தொட்டியைத் தூக்கி வீசியா உடைத்தேன்? எப்படி உடைத்தேன், அன்பரே, அதை?''

''உன்னை அறியாமலே உடைத்துவிட்டாய்.''

''என்னை அறியாமலேயா? என்னை அறியாமல் எப்படி உடைத்தேன் அன்பரே? இதோ, காபி கொடுக்கிறீர்கள், எனக்கு. இது காபிதானே அன்பரே? காபிதான் பாருங்கள். எவ்வளவு சரியாகச் சொல்லிவிட்டேன்? இதோ, பக்கத்தில் நிற்பது யார்? அம்மாதானே? அம்மாவேதான். அவரையும் சரியாகச் சொல்லிவிட்டேன். (நமஸ்காரம், அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள், அம்மா! நேற்று எனக்கு..எனக்கு..'')

(''பரவாயில்லை, படுத்துக்கொண்டே இரு. உடம்பு இப்போது எப்படி இருக்கிறது, யமுனா, உனக்கு?'')

(''தேவலையம்மா. மண்டையில்தான் வலி தாள முடியவில்லை!'')

(''சரி, அலட்டிக் கொள்ளாமல் தூங்கு; தூங்கி எழுந்தால் சரியாகிவிடும். நான் அப்புறம் வந்து பார்க்கிறேன். சாரங்கா, கூடவே இரு.'')

''என்ன அன்பரே! நான் சரியாகச் சொல்லிவிடவில்லையா, எல்லாவற்றையும்?''

''ஆமாம்!''

''அப்படியானால் எனக்கு உடம்பு சரியாகிக்கொண்டு வருகிறது, இல்லையா, அன்பரே? ஆனால் மண்டையில்தான் வலி அதிகமாக இருக்கிறது.''

''ரொம்ப வலிக்கிறதா, யமுனா? நான் தடவிக் கொடுக்கட்டுமா?''

''கொடுங்கள். ரொம்ப வலிக்கத்தான் வலிக்கிறது.''

''நீ எப்போதும் அவளையே நினைத்துக்கொண்டிருக்கிறாய், யமுனா. நீ அவளை மறந்துவிட வேண்டும்.''

''மறந்துவிடுவதா? அவளையா? —கடவுளே, அவளை எப்படி மறக்க முடியும்? சதா கண்முன்னாலே நிற்கிறாளே!''

''ஆனால் அவளைத்தான் அந்த நாகம் கொண்டு போய்விட்டதே, யமுனா?''

''ஆமாம். பாழாய்ப் போகிற அந்த நாகந்தான் அவளைக் கொண்டு போய்விட்டதே! ஏன் அன்பரே, எனக்கு ஒன்று தோன்றுகிறது: நீங்கள் அந்த நாகத்தைக் கொன்று அவளை அழைத்துக் கொண்டு வந்தால் என்ன?''

''நீ சற்றுத் தூங்கு, யமுனா.''

''இல்லை, அன்பரே. நான் நல்ல யோசனைதான் சொல்கிறேன். ஒரு பெரிய வாளை எடுத்துக்கொண்டு போங்கள்; புற்றில் குதித்து உள்ளே போங்கள். அங்கேதான் இருக்கிறது அது. அதன் தலையைக் கொய்து எறிந்துவிட்டுக் குழந்தையை அழைத்து வந்துவிடுங்கள். என்ன சொல்கிறீர்கள், அன்பரே?''

''ஆகட்டும்; நீ இப்போது தூங்கு.''

''நீங்கள் அதன் தலையைக் கொய்யும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதன் விஷமூச்சு உங்கள் மீது பட்டுவிடாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; நடுத் தலையில் பார்த்து ஒன்று போட்டுவிடுங்கள்; தீர்ந்து விடும். இந்த யோசனை நமக்கு முன்பே தெரியாமல் போய்விட்டதே, அன்பரே!''

''சும்மாபேசாதே, யமுனா, தூங்கு.''

''அன்பரே!''

''நீ பேசாமல் இருக்க மாட்டாய், யமுனா? தூங்க மாட்டாய்?''

''கோபித்துக் கொள்ளாதீர்கள், அன்பரே, இதோ தூங்க ஆரம்பிக்கிறேன். நான் நல்ல பெண்தான் அன்பரே. நான் நல்ல.....''

''அது என்ன வாசனை, அன்பரே? —இப்படி மூக்கைத் துளைக்கிறது?''

''கொல்லையில் மாமரங்கள் பூத்திருக்கின்றன, யமுனா?''

''ஓ! மாம்பூவின் வாசனையா? முன்னேகூட இப்படி ஒரு தடவை வாசனை தூக்கி அடித்தது மாதிரி இருக்கிறதே! இல்லை? அடேயப்பா! என்ன மணம், என்ன மணம்! காற்று முழுவதன் மேலும் அல்லவா, ஏறிக் கொண்டு வருகிறது? ஏன் அன்பரே, கிளிகள் எல்லாங்கூட வந்திருக்கின்றனவா?''



வாழ்வில் போட்டோ: எம். கே. ஆர்.

''ஆமாம். கிளிகள் எல்லாம் வந்திருக்கின்றன.''

''அப்போது ஆகாசத்தில் மேகங்களும் வந்திருக்குமே?''

''ஆமாம். பஞ்சு பஞ்சாய், பொன் பஞ்சாய், வந்திருக்கின்றன.''

''வானவில்?''

''ஓ! வானவில்லும் மேம்பாலமாய் விழுந்திருக்கிறது.''

''சாரல்?''

''சாரலும் சில சமயம் விழுகிறது.''

''அன்பரே, அன்பரே! வாருங்கள், வாருங்கள். இதுதான் அவள் திரும்பி வருகிற வேளை; நாம் மொட்டைமாடிக்குப் போய் அவள் வந்துவிட்டாளா என்று பார்ப்போம்.—அம்மா! அம்மா! கிளிகள் எல்லாம் வந்தாச்சாம்! கிளிகள் எல்லாம் வந்தாச்சாம்!

''அதோ, வானவில்லும் மேம்பாலமாய் விழுவது தெரிகிறது. ஏழு வர்ணமும் இருக்கிறதா அதில் அன்பரே?

''அன்பரே, அன்பரே, என் கையைப் பிடித்துக்கொள்ளுங்கள். சீக்கிரம் சீக்கிரம். அதோ, சாரல் கீழ்க் கோடியிலிருந்து சரசரவென்று ஓடி வருகிறது. ஐயோ, நனைந்துவிடப் போகிறோம்!''

''நனைய மாட்டோம்; ஏனென்றால் மொட்டை மாடியில் இருந்தாலும், தகரச் சார்ப்பின் அடியில்தான் உட்கார்ந்திருக்கிறோம்.''

''ஆமாம், அன்பரே. நீங்கள் சொல்வது சரிதான். சாரல் நம் தலைக்கு மேலே தகரத்தின்மீதுதான் பன்னீர் தெளித்துவிட்டுப் போயிருக்கிறது.

''எவ்வளவு அழகாக இருக்கிறது, இந்த உலகம் அன்பரே! மஞ்சள் வெயிலும், வானவில் பாலமும், மாம்பூக்களும், கிளிகளும், ஏன் அன்பரே! கிளிகள் எல்லாம் எதற்கு வந்திருக்கின்றன?''

''இது காதலின் வேளை, யமுனா. கூடவும் முயங்கவும் குஞ்சு பொரிக்கவும் கிளிகள் ஆண்டுதோறும் இந்தப் பருவத்தில் இங்கே வரும்.''

''அம்மா சொல்கிறார்: கொல்லையில் கிளிகள் வந்தால் இந்த அக்கிரகாரத்தில் வீட்டுக்கு வீடு ஒரு சின்னக் கிளி பிறக்கும் என்று.''

''எனக்குத் தெரியாது.''

''நிஜந்தான் அது அன்பரே. அம்மா சொல்வது நிஜந்தான்.''

''அன்பரே அன்பரே! நாம் இங்கேயே இந்த மொட்டை மாடியிலேயே இன்றிரவு முழுவதும் உட்கார்ந்திருப்போமா, அன்பரே? நாம் உட்கார்ந்திருந்தால், நம் மடியிலும் அந்தக் கிளிகள் 'அவளை'த் திரும்பக் கொண்டு வந்து போட்டுவிடும், அன்பரே.

''கிளிகள் எல்லாம் வந்தாச்சு, அன்பரே!

''அன்பரே, இன்னும் கொஞ்சம் நெருங்கி வாருங்கள். இன்னும் கிட்ட, இன்னும் கிட்ட அன்பரே, ஏன் உங்கள் உடம்பு இப்படிக் கொதிக்கிறது?

''அன்பரே, நீங்கள் என்னை விட்டுப் போகக்கூடாது; விநாடிப் பொழுதுங் கூடப் பிரியக் கூடாது. ஆமாம். இங்கேயே என் அருகில் இருக்க வேண்டும். இரவு முழுவதும் இருக்க வேண்டும் இருப்போமா, அன்பரே?''

''இருப்போம்.''

''அன்பரே அன்பரே, அதோ பாருங்கள், அதோ பாருங்கள்.''

''எதை யமுனா?''

''அதோ, அந்த மாமரத்துக் கிளையில், என்னவோ! 'சாட்டை' மாதிரி தொங்கவில்லை?''

''ஆமாம்; என்னவோ தொங்குகிறது.''

''என்ன அது அன்பரே? எனக்குப் பயமாக இருக்கிறது, அன்பரே!''

''பயப்படாதே. நான் என்னவென்று விசாரிக்கிறேன்.'' - மாரி, டேய் மாரி, என்னடா, அது மரத்திலே?''

''பாம்பு சாமி. அதை நேத்து அடிச்சுப்புட்டோம்; சாமி. என் ஆட்டைக் கடிச்சுப்புடுச்சு, சாமி. அப்பாரு வந்து ஒரே போடாப் போட்டுட்டாரு.''

''என்ன சொல்றான், பையன், அன்பரே?''

''உன் கிளியை, செல்ல ராணியைக் கொத்திண்டு போன நாகத்தை அவர்கள் அடித்துக் கொன்றுவிட்டார்களாம்; அதைத்தான் அப்படித் தொங்கவிட்டிருக்கிறார்களாம்.''

''அதையா? ஐயையோ! அதையா? அன்பரே, அன்பரே! வாருங்கள் நாம் உள்ளே போய்விடுவோம். இனிமேல் இங்கே இருக்க வேண்டாம். எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது, அன்பரே. மண்டை எல்லாம் கொதிக்கிறது. சீக்கிரம், சீக்கிரம் வாருங்கள்!''

''என்ன யமுனா, இது - இந்த விடிகாலையில் இப்படி?''

''சாரங்கா, அங்கே என்ன சத்தம்? யமுனாவா அப்படிக் கத்தினது?''

''ஆமாம், அம்மா!''

''ஏன்?''

''தெரியவில்லை அம்மா; சீக்கிரம் வா, அம்மா! அவள் விழிக்கிறதைப் பார்த்தால் பயமாக இருக்கிறதம்மா!''

''ஆங் இதோ வந்தேன்!''

''என்ன யமுனா இது, இப்படி? புஸு புஸு தலையும், பேந்த விழியுமாய்? ஏண்டியம்மா இப்படிப் பார்க்கிறாய், எங்களை?''

''திடீரென்று கத்தி இரைந்துகொண்டு எழுந்து என்னைக் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டுவிட்டாளம்மா!''

''அன்பரே, அன்பரே....அது.. அது....''

''எது, யமுனா?''

''சிறிப் பாய்ந்து வந்து நூறாயிரம் அஸ்திரமாய்ச் சிதறி என்னுள் ஊடுருவி மறைந்தது அந்த நாகம்.. அது, அது....''

''நாகமா? என்ன யமுனா உளறுகிறாய்? அதைத்தான்....''

''இல்லை அன்பரே, நிஜமாகவே அந்த நாகந்தான் வந்தது. சிறிக்கொண்டு வந்தது. நூறாயிரம் அஸ்திரமாய் மாறும்போது தன்மீது நம் குழந்தையையும் ஏற்றிக் கொண்டு வந்திருந்தது. 'இதோ, உன் குழந்தை! அவளை உன்னிடம் சேர்ப்பித்துவிட்டேன்' என்றுகூடச் சொல்லிற்றே. குழந்தையும் அஸ்திரமுமாகத்தான் என்னுள் பாய்ந்து மறைந்து போனார்கள்.

''அன்பரே, என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள். என்கண் இருளுகிறது.

''அப்பப்பா! மண்டைக்குள்தான் என்ன வலி! ஐயோ, நரம்பெல்லாம் வெடித்துச் சிதறிவிடும்போல அல்லவா இருக்கிறது?''

''நான் உன் தலையைப் பூப்போல என்னுள் அணைத்துக்கொள்கிறேன். நீ சற்றுத் தூங்கு யமுனா! நீ கண்மூடி இரண்டு நாளாகிறது!''

''தூங்குகிறதா? என்ன அன்பரே, இப்படிச் சொல்கிறீர்கள்? வருஷக்கணக்காகக் தூங்கிவிட்டு இப்போது தானே விழித்துக்கொண்ட மாதிரி இருக்கிறது?''

''இல்லை யமுனா!''

''வருஷக்கணக்காக என்னை அழுத்தி வந்த பாரங்கூடக் குறைந்த மாதிரி இருக்கிறது. இப்போது உங்கள் முகம் எனக்கு எவ்வளவு துல்லியமாகத் தெரிகிறது, தெரியுமா, அன்பரே!''

''சரி, தூங்கு.''

''நான் இப்போது நல்ல பெண்ணாக நடந்துகொள்கிறேன், அன்பரே. ஒன்றையும் கிழிப்பதில்லையே, உடைப்பதில்லையே?''

''இல்லை.''

''பார்த்தீர்களா? நான் நல்ல பெண்ணாக....''

''நீ சற்றுத் தூங்கு யமுனா. இப்போது ராத்திரி மணி இரண்டு.''

''தூங்கு தூங்கு தூங்கு, எப்போது பார்த்தாலும் 'தூங்கு'தானா?''

''ஆமாம். நீ இப்போது தூங்கத்தான் வேண்டும்.''

''மாட்டேன் மாட்டேன் மாட்டேன்!''

''கடவுளே!''

உங்களுக்கு நினைவிருக்கிறதா, அன்பரே?

அடுத்த நாள் காலையில், கீழே ஏதோ சத்தம் கேட்டு விழித்துக்கொள்கிறீர்கள்; பக்கத்தில் என்னைக் காணவில்லை. என்னவோ ஏதோ என்று பரபரக்கக் கீழே இறங்கி வருகிறீர்கள்.

முற்றத்தில் ஓடையருகில், வீடு முழுக்கக் கூடியிருக்கிறது. அம்மா, நாத்தனார்கள், மாமா, மைத்துனர் எல்லாரும் குழுமியிருக்கிறார்கள்.

ஓடையடியில் உட்கார்ந்திருக்கிறேன் நான். அம்மா என் தலையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்.

''என்னம்மா?'' என்கிறீர்கள்.

அம்மா தலைநிமிர்ந்து பார்க்கிறார். அவருடைய கண்ணிலிருந்து நீர் பெருகி வழிகிறது. ஆனந்தமும் துக்கமும் கலந்த குரலில் சொல்கிறார்: ''நம் குழந்தை திரும்பி வந்துவிட்டாளடா, அப்பா! சின்ன ராணி வந்துவிட்டாள்!''

'ஆமாம்!' என்கிற மாதிரி 'கடக்'கென்று சிராங்காயளவு வாந்தி வெளிப்பட்டு விழுகிறது.

கண்ணில் நீர்ப்படலம் சிதறி விழ எழுந்திருக்கிறேன், களைப்புடன். எல்லா முகங்களின் மீதும் பார்வை ஒரு ரவுண்டு அடிக்கிறது.

பூவாக மலர்ந்திருக்கிறது எல்லாம்!

★

Criterion-MC-992



வளமாய் வாழ வேளாண்மை
வேளாண்மை பெருக
வையம்புகழ்
"பாலசுப்ரமணியா"
பம்புகள், மோட்டார்கள்,
மானோ ப்ளாக்குகள்

சீரான செலவு
நேரான உழைப்பு
உறுதிக்கு உறைவிடம்

தயாரிப்பாளர்கள்

பாலசுப்ரமணியா
பவுண்டரி
படேல் ரோடு, கோயமுத்தூர்.
PHONE: 4313 GRAMS "RUNWELL"

BMP-226.



உங்கள் எல்லோருக்கும்
எங்கள் மனமார்ந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

பாபாலால் & கம்பெனி

(ஸ்தாபிதம்: 1910)

வைர, தங்க நகை வியாபாரிகள்

ராட்டன் பஜார் : : : : மதராஸ் - 3.
தந்தி: "NECKLACE" போன்: 32396

கதவுக்கு அப்பால்

ராஜம் கிருஷ்ணன்

அந்திக்கதிரின் மஞ்சள் ஒளியில் சிலுவைக் கோபுரங்களும், பசும்புல் தரையும், அகன்ற தார்ச் சாலையும் துடைத்துவிட்டாற்போல் பளிச்சென்று விளங்கினாலும், மேலே வானம் எண்ணெய்க் குடமாகக் கறுத்திருக்கிறது. சுற்றுமுற்றும் அவர்களைத் தவிர ஓர் ஈ காக்கையைக் காணவில்லை.

''மழை குமுறிக்கிட்டு வருது. ஒரு டாக்சியா, பஸ்ஸா, ஒண்ணைக் கண்ணிலே காணோமே! நான் அப்பவே இன்னொரு நாள் பார்க்கலாம், இறங்காமப் போயிடுவோம் வீட்டுக்குன்னேன். நேரமாயிட்டால், உமா வேறு பாலுக்கு அழப்பிடிச்சிடுவா. இங்கே என்ன, பார்க்கப் பெரிய காட்சி? எல்லாம் சர்ச்சுங்க. எங்கும் பார்க்கிற சிலுவை!''

''அப்பாப்பா! முணுமுணுக்கத் தொடங்கியாச்சில்லே? இந்தப் பொம்பிளைங்க சமாசாரமே இப்படித்தான்!'' சிவலிங்கம் எறிந்து விழுந்துவிட்டுப் பஸ் வரக்கூடிய திசையில் பார்வையைச் செலுத்துகிறான்.

இதற்குள் தூற்றல் பொட்டுப் பொட்டென்று விழுகிறது. குழந்தை சிணுங்குவதை உணர்ந்து தோளில் குப்புறப் போட்டுக்கொள்கிறாள் ரங்கம்.

சாலையில் பஸ் ஒன்று வருகிறது. வசதியுள்ள பெரிய வண்டி அல்ல. காதிலும் மூக்கிலும் பொன்னணிகள் குலுங்க வரும் பழுத்த சுமங்கலிக் கிழவியைப் போல, பித்தளைக் காரியர் வண்டிதான் வருகிறது.

''நம் அதிர்ஷ்டம் இந்தத் தரித்திரந்தானா வந்தது? உட்கார வசதியாக ஒரு பஸ் வந்து தொலையக்கூடாதா?''

''சரி, சரி, முணுமுணுக்காமல் ஏறு. மழை வந்தாச்சு!''

பின்புறத்தில் 'ப'வைப் போன்ற ஆசன வரிசைகளில், கூட்டம் இடித்துக்கொண்டிருக்கிறது. நின்றால் தலை இடிக்கும். தொட்டிபோன்ற நடுப் பகுதியில் தரையில் மீன்வட்டி சகிதம் ஒரு கிழவி உட்கார்ந்திருக்கிறாள். டெரிலின் சட்டைகள்,'டைட்' பிராக்குகள், மலிவான கண்ணாடிச் சல்லாப் புடைவைகள் - எல்லாம் ஒன்றோடு ஒன்று இழைந்து உறவாடும் அந்த ஆசன வரிசையில் ரங்கம் அருவருத்துக்கொண்டே கிடைத்த இடத்தில் ஒண்டிக்கொள்கிறாள். சிவலிங்கம் குழந்தையை அவளிடம் கொடுக்கையில் உமா கையில் பிடிபடாமல் அழத் தொடங்கிவிடுகிறாள். பூண்டுவாடை, மீன்வாடை, அடக்கம் இல்லாத முகப் பவுடர் வாசனை, பீடி வாசனை, புளித்த சாராய நெடி - எல்லாம் சுவாசத்தில் வந்து மோதுகின்றன. உமாவோ, அவள் பொறுமையைக் குலைக்க வண்டிச் சத்தத்தையும் மீறிக்கொண்டு கேட்கக் கத்துகிறாள். வயிறு குழைகிறது.

''இறங்கிடுவோம், ஏங்க. ஏதானும் டாக்சி வந்தால் பார்ப்போம். வண்டியை நிறுத்தச் சொல்லுங்க. எனக்கு வேற, வயித்தைக் குழப்புது.''

''டாக்ஸி! சாழர் ரூப்யா!''

ரங்கத்துக்கு நேராக எதிர்ப்புற வரிசையில் உட்கார்ந்திருக்கும் ஒருவன்தான் பேசுகிறான். நாக் குழறுகிறது. சாராய நெடி அவனிடமிருந்துதான் வருகிறது.

ரங்கம் கணவனின் தோளை இடிக்கிறாள். ''நிறுத்தச் சொல்லுங்களேன்?'' அவன் நிறுத்தச் சொல்லவில்லை.

வரும் ஆத்திரத்தில் உமாவின் முதுகில் ஓர் அடி வைக்கிறாள் அவள். கத்தல் அலறலாக வீலிடுகிறாள் குழந்தை.

அப்போது எதிர்பாராதது நடக்கிறது. எதிரே இருப்பவன் சரேலென்று கைநீட்டி, ரங்கத்தின் மடியில் வில்லைப் போல் எழும்பிக் குதித்த குழந்தையைக் கவர்ந்துகொள்கிறான்.

அவன் குழந்தையை எடுத்துக் கொள்ளத்தான் அப்படிப் பாய்ந்தான் என்று தெளிந்துகொள்ளவே அவளுக்குச் சில கணங்கள் செல்கின்றன. மூக்கு முட்டக் குடித்திருக்கிறானே!

அவனோ, குழந்தையை அணைத்து, தலையை இதமாகத் தடவி விட்டு, ஆட்டிச் சமாதானம் செய்கிறான். சட்டென்று அப்போதுதான் நினைவு வந்தாற்போல் நிஜார்ப் பையில் கைவிட்டு ஒரு சாக்கலேட்டை எடுத்துக் காகிதத்தை உரித்து, அவள் வாயில் வைக்கிறான்.

''ஜோ....ஜோ....பேபி...சாக்கலேட் ... !''

வாயில் சாக்கலேட்டும் கண்ணில் கண்ணீருமாக அவனையே பார்க்கிறாள் குழந்தை.

ரங்கத்துக்கு ஆத்திரம் ஒரு புறம் இருந்தாலும், அவன் குழந்தையிடம்

காட்டும் கனிவு விசித்திரமாக இருக்கிறது. அவன் முகத்தை நன்றாகப் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது.

நெற்றியோரத்திலிருந்து, ஒரு கண்ணையும் சுற்றிக்கொண்டு, கன்னம், கழுத்தின் ஒரு பகுதி வரையிலும் கறுப்பும் வெளுப்புமாகத் தீப்புண் பட்டுத் தழும்பினாற்போல் மேடாகவும் விகாரமாகவும் இருக்கிறது. தெளிவாகத் தெரியும் கண்ணும் இரப்பைகள் தொங்கக் கலங்கியிருக்கிறது. அவன் அந்தக் கருமை படிந்த உதடுகளுடன் குழந்தையை முத்தமிடுவதைக் காண ரங்கத்துக்குத் தூக்கிவாரிப் போடுகிறது.

“என்ன, நீங்கள் பேசாமல் இருக்கிறீர்கள்? குழந்தையை வாங்குங்கள், அவனிடமிருந்து!”

சிவலிங்கம் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டாற் போலவே பார்த்துக்கொண் டிருக்கிறான். குழந்தையோ அவனுடைய கொஞ்சலுக்கும் குலாவலுக்கும் அடிவயிற்றை எக்கிக் கொண்டு சிரிக்கிறாள்.

“உமா, இங்கே வாம்மா.”

அவன் நிமிர்ந்து அவர்களைப் பார்த்துக்கொண்டு சிரிக்கிறான்.

“உமா: என் தாயின் பெயர்” என்று தெரிவித்துவிட்டு மீண்டும் கவிந்து கொஞ்சலில் ஈடுபடுகிறான்.

பஸ் உறுமிக்கொண்டு இறுதி நிறுத்தத்தில் வந்து நிற்கிறது. மழை அடித்து ஓய்ந்திருந்தாலும், தூற்றல் விழுந்துகொண் டிருக்கிறது. ஒவ்வொருவராக அவர்கள் இறங்குகின்றனர். கீழே இறங்கிய பின்பே அவன் குழந்தையைப் பெற்றோரிடம் கொடுக்கிறான்: விளக்கு வெளிச்சத்தில் வாட்டசாட்டமாக நிற்கும் அவன், மிகவும் மரியாதையுடன் இந்தியில் கேட்கிறான்; “உமாவின் தந்தையே, தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்?”

“தோனாபாலா ரோடில். மாதா கோயில் தாண்டி எங்கள் வீடு.”

“என் பெயர் தினேஷ் பால். ஜெட்டியின் அருகில் என் கடை இருக்கிறது. நான் எப்போதேனும் உமாவைப் பார்க்க வரலாமோ? அவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.”

“ஓ, அதற்கென்ன? உமாவுக்கும் புதிய சிநேகிதரை மிகவும் பிடித்திருக்கும்போது, தடை கூற நான் யார்?” என்று உமாவின் தந்தையும் நகைக்கிறான்.

“ஞாயிற்றுக்கிழமைகளில் எங்கேனும் புட்பால் மாட்ச் நடந்தால் போவேன். மற்றப்படி இங்கேதான் இருப்பேன். போய் வருகிறீர்களா? உமா! உமாஜி!” என்று அவன் ரங்கத்தின் அருகில் வந்து குழந்தையின் கையைப் பற்றி இதழ்களில் ஒத்திக் கொண்டு போகிறான்.

“நல்லாக் குடிச்சுத் தொலைச்சிருக்கிறான். அவன் முகமெல்லாம் வேறு என்னமோ மாதிரி இருக்குது. வீட்டுக்குப் போனதும் வெந்நீர் வச்சானும் குழந்தையைத் துடைச்சால்தான் எனக்கு நிம்மதியா இருக்கும்.”

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை, ரங்கம். எங்கோ நெருப்பு விபத்தில் சிக்கியிருக்கிறான். தழும்புதான். சீக்கில்லை.”

“அவன் வீடெங்கேன்னு கேட்டால் நீங்க அப்படியே நெசம் சொல்லணுமாக்கும்! எனக்கு எல்லாம் புரிஞ்சுது.”

“சே, சே! ஊரிலே எங்கேனாலும் பிள்ளை குட்டியை விட்டு வந்திருப்பானா இருக்கும். நம்ம குழந்தையிடம் பழமாக் கனிஞ்சு போயிட்டான். குழந்தை என்ன கரைஞ்சா போயிடுவ?”

“அதென்னமோ, அவன் வந்து வைக்கப் போறானேன்னு எனக்கென்னமோ பயமா இருக்குது.”

ரங்கம் அப்போது கூறியதை இரண்டு நாட்களில் மறந்தே போய் விட்டாள். அந்தச் சனிக்கிழமை மாலையில் அவள் சமையலறையில் வேலையாக இருக்கிறாள். உமா படுக்கையறை வாசற்படியில் உட்கார்ந்து ஒரு பழைய பொம்மையை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறாள்.

சிவலிங்கம் அலுவலகத்திலிருந்து வரும் நேரந்தான். பேச்சுக்குரல் ஒலிக்கிறது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறாள்:

அவன்தான். குழந்தையின் கையில் பிஸ்கோத்துப் பொட்டலம் ஒன்று இருக்கிறது. அவளை அவன் தூக்கிக் கொண் டிருக்கிறான்.

ஓசைப்படாமல் வீட்டுக்குள் வந்து விட்டானே! அச்சம் குளிரின் சாரலாய்ப் பரவிச் செல்ல அவள் வேகமாக வெளியே வருகிறாள். அவள் கணவன் கட்டிலில் அமர்ந்து ஜோட்டைக் கழற்றிக்கொண் டிருக்கிறான்.

அவருடன்தான் வந்திருக்கிறானா? அம்மாடி!

“இவனை எங்கே புடிச்சீங்க?”

“நான் புடிச்சேனா? சர்ச்சுக்கிட்டப் பஸ்ஸை விட்டு இறங்கினேன். என்னைக் கண்டுக்கிட்டான். ‘நமஸ்தே, உமாவைப் பார்க்க வரட்டுமா?’ன்னு கெஞ்சுறாப்போலக் கேட்டான். வராதேன்னு சொல்லுவேனா?”

ரங்கத்துக்குப் படுக்கையறையில் அவனை உட்கார வைத்துக்கொண்டு பேசுவதில் விருப்பமே இல்லை. ஒரு படுக்கையறையும் ஒரு சமையலறையுந்தாமே இருப்பிடம்? அந்தக் கட்டிலிலேதான் விருந்தாளியையும் உபசரிக்க வேண்டியிருக்கிறது. அவள் தேநீர் கொண்டு கொடுக்கிறாள்.

வெகு நாட்களுக்கு முன் பட்டாசு வெடித்து முகத்தின் ஒரு புறமே புண்ணாகிவிட்டதாம். தன் தழும்பைக் குறித்து அவனாகவே தெரிவித்துக் கொண்டபின் அவளுக்குச் சிறிது ஆசுவாசம் உண்டாகிறது.

ஏழரை மணி வரையிலும் உமாவை வைத்துக்கொண்டு கொஞ்சி விளையாடுகிறான்; வேடிக்கை காட்டி அவளைச் சிரிக்கச் செய்கிறான். தலையை அசைத்துத் தாளம் போட்டு அவளையும் அதே மாதிரி செய்ய வைக்கிறான். பிறகு மனம் இல்லாத மனத்துடன் விடை பெற்றுக்கொண்டு செல்கிறான்.

‘எப்போதாவது’ வருவதற்கு இப்படிப் பிள்ளையார் சுழி இட்டபின், ‘எப்போதாவது’ என்பது வாரம் இரு முறைகள் ஆயின. பிறகு அநேகமாக வாரத்தில் ஞாயிறு தவிர மற்ற நாட்கள் எல்லாமே அவன் வருவது வழக்கமாகிறது. மாதா கோயிலின் அருகில், சிவலிங்கம் பஸ்ஸை விட்டு இறங்குகையில் காத்திருந்து சேர்ந்து கொள்வான். வரும்போதெல்லாம் ஒரு சாகலேட்டோ, மிட்டாயோ, ஆரஞ்சோ இல்லாமல் வருவதில்லை. பிஸ்கோத்துப் பொட்டலம், விளையாட்டு மோட்டார் முதலிய பரிசுப் பொருள்களுங்கூடச் சில நாட்களில் அவன் கையில் பதுங்கியிருக்கின்றன.

குழந்தைக்குப் பரிசு என்று அவன் காசைச் செலவழித்துக் கொண்டு வருகையில், அவர்களும் அவனை வெறுந் தேநீரைக் கொடுத்தோ கொடுக்காமலோ அனுப்பிவிட முடிகிறதா?

மாலை நேரங்களில் ஏதேனும் சிற்றுண்டியும் செய்கிறாள் ரங்கம். தொடக்கத்தில் அவனைக் கண்டபோது எழுந்த அருவருப்பைப் பற்றி இப்போதெல்லாம் நினைப்பதற்குக்கூட அவள் சிந்தையில் இடைவெளி விழவில்லை. அவன் எப்படி அவ்வளவு நெருக்கமாகப் பழகும் சகஜத்துக்கு வந்தான் என்பதை நினைத்துப் பார்க்கவும் ஓர் அரைப்புள்ளி கால் புள்ளி கூட அந்தப் பழக்கத்தில் விழவில்லை. அவனாகச் சமையலறையில் வந்து தேநீரை வாங்கிப் போவான். பிறகு சமையலறைத் தொட்டியிலேயே வந்து கழுவி வைப்பான். “அட்டா! நீ எதற்கு இதெல்லாம் செய்கிறாய்?” என்று தமிழிலேயே ரங்கம் உரக்கக் கூறுவாள்.

“பரவாயில்லை, உமாவின் அன்னையே” என்று சொல்லிவிட்டு, கறுப்பும் வெளுப்புமான இதழ்களில் ஒரு சிரிப்பை நெளிய விடுவான். அவன் அவர்களிடம் மிகவும் சொற்பமாகத்தான் பேசுவான். சிவலிங்கம் சில நாட்களில் பேசியே இருக்கமாட்டான். அவன் உமாவைத்தானே நாடி வருகிறான்? ‘தீ...னு...தீ...னு...’ என்று அவன் கற்பித்தபடி மழலைக் குரல் கொடுத்துக்கொண்டு அவள்தான் முழுக்க முழுக்க உறவாடுகிறாளே!

கண் இரப்பைகள் தொங்க, இதழ் பிதுங்கினாற்போல் தோற்ற, கிரகணம் பிடித்தாற்போன்ற நிறத்துடன் காட்சியளிக்கும் அவன் முதலில் பார்ப்பவர்களுக்கு அருவருப்பை ஊட்டும் வடிவினன்தான். ஆனால் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாமல் இருக்கும் அழகு கூட நாளடைவில் வெறுப்பை ஊட்டுமாம். அதேபோல், அருவருப்பு, பழகப் பழக இணக்கமான கண்களுக்குப் புலப்படாததொரு சூக்கும நெருக்கத்தைப் பின்னிவிடக் கூடுமோ?

முதல் நாள் கள்ளின் போதையில் கலங்கித் தெரிந்த விழிகள், இப்போதெல்லாம், அன்பை வெளிக்காட்ட வகையறியாமல் ஊமைக் குழந்தை போல் பார்க்கும் நன்றியறிவுள்ள நாயின் விழிகளை அல்லவோ நினைப்பூட்டுகின்றன? பூ விழுந்த கண் ஒன்று; நல்ல கண் ஒன்று.

ஓர் அப்பளத்தையேனும் பொரித்துத் தேநீருடன் அவள் வைக்கிறாள். ஆவலுடன் தின்றுவிட்டு, சமையலறைத் தொட்டியில் தட்டையும் கழுவிக் கையையும் கழுவிக்கொண்டு அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் போகிறான்.

''உமாவின் அன்னேயே, மிக மிக நன்றி. மிக்க நன்றி'' என்று விள்ளும் பார்வை அது. ரங்கம் பரிவு பெருக, ஒருகணம் தன்னே மறந்து போகிருள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, முற்பகலில் முடி வெட்டிக்கொள்ளச் சென்ற சிவலிங்கத்துடன் அவனும் படியேறி வருகிருன். கறுப்புத் திராட்சைக் கனிகள் அடங்கிய பொட்டலம் ஒன்று வெளியாகிறது.

''என்னங்க இது? சாயங்காலத் தோட இருந்தான்; சாப்பாட்டுக்கு முன்ன இப்படிக் கூட்டி வந்திருக்கிறீங்களே!''

''அவனுக வரும்போது வராதேன்னு எப்படிச் சொல்லட்டும்? இருக்கும் சாப்பாட்டைப் போடேன்.''

''நீங்க ஒண்ணு. மிளகு ரசமும் வாழைக்காய்ப் பொரியலுந்தான் செய்தேன்.''

''அதைத்தான் போடேன். மிளகு ரசம் எங்கே ருசி பார்த்திருக்கப் போகிருன்?''

அவன் சொன்னாலும் அவள் மனம் கேட்கிறதா? அவசரமாகப் பருப்பைப் போட்டு வெங்காயத்தை அரிந்து போட்டு ஒரு குழம்பு வைக்கிறாள்.

''நீங்களும் இங்கேயே சாப்பிட்டு விடலாம், தினேஷ்'' என்று சிவலிங்கம் அழைத்ததை உபசாரம் என்று நாசுக்காக மறுத்துப் பதில் கூறவில்லை அவன். உமாவையும் அருகில் வைத்துக் கொண்டு உடனே சாப்பாட்டுக்குத் தயாராகிவிடுகிறான்.

''தினேஷ், நீங்கள் ஏன் இப்படி ஒண்டியாளாக இருக்க வேண்டும்? கடையும் வருமானமும் இருக்கையில் .....'' என்று கேட்கிறான் சிவலிங்கம். அவன் சிரிக்கிறான்.

''உமாவின் தந்தையே, நானா ஒண்டியாள் இப்போது? இதோ உமா-உமாஜி இல்லை? பிறகு, நீங்கள் இருக்கிறீர்கள்; உமாவின் அன்னை இருக்கிறார்—நன்றாகச் சொன்னீர்கள்!''

''உமா, இப்படி நம் உமாவாகவே எப்போதும் இருப்பாளா? இப்போதே நீங்கள் பார்த்ததற்கு மேல் நாலைந்து மாதத்தில் வளர்ந்திருக்கிறாளே!'' என்று சிவலிங்கம் நகைக்கிறான்.

அவன் எடுத்த பிடியை வாய்க்குக் கொண்டு போகாமல் உமாவையே பார்த்துக்கொண் டிருக்கிறான். கண்கள் நிலைத்தபடி இருக்கின்றன.

சிவலிங்கம் மேலும் ஒரு படி ஏறி, ''அதனால் நாங்கள் இங்கு இருக்கும் போதே ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து மணந்து கொள்ளுங்கள்'' என்று நிறுத்துகிறான்.

அசைவற்று இருந்த நிலை, உணர்ச்சிகள் உடையப் புரண்டு வருகிறது.

''உமாவின் தந்தையே, அதிர்ஷ்ட ஹீனனும் குரூபியுமான என்னை நீங்கள்தாம் எவ்வளவு அன்போடு நேசிக்கிறீர்கள்! நான் பல நாட்களிலும் கடை வண்டியை மரத்தடியிலேயே நிறுத்தி மூடிவிட்டு மலிவான சாராயத்தைக் குடித்துவிட்டுச் சேற்றில் அழுந்திக் கிடப்பவன். ஓர் அழகிய மாளிகையை, எழில் குலுங்கும் பூங்காவை என்னால் உருவாக்க முடியுமோ? —ஓ! என்ன என்னவோ பேசுகிறேனா? மன்னியுங்கள், உமாவின் அன்னையே, மன்னியுங்கள்.''

ரங்கம் உள்ளத்து அசைவு தெரியாமல் இருக்க, நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு எங்கோ பார்க்கிறாள்.

உமாவின் தந்தை அமைதியாகவே சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்து போகிறான்.

அன்றிரவெல்லாம் ரங்கத்தினால் அந்தக் குரலை, சோக அலைகளின் உள்ள முருக்கும் ஒலியை, மறக்க இயலவில்லை. தாய்மை கனிந்த பெண்ணுள்ளத்தின் அமைதியை அது அசைத்துக் கொண்டிருக்கிறது.

''ஏங்க, அவன் ஏதோ பெரிய குத்தம் செய்திட்டு அணு அணுவாக வருத்தப்படுவது போலில்லே? எதையோ நினைச்சு நினைச்சுக் கரைஞ்சு உருகுகுறாப் போலில்லே?''

''என்ன குத்தம் செய்திருப்பான்? எதானும் பொண்ணுக வம்பிலே மாட்டிக்கிட்டுக் கொலை கிலை செய்திருப்பான். செய்யாதவன் உள்ளே போயி, இவன் வெளியே நிக்கிறவனாக இருக்கும்,''

கணவனின் ஊகம் ஒருகால் உண்மையாக இருக்கலாம். ஆனாலும், ஐயோ! ஒரு மனிதனுக்கு நாம் தவறு செய்கிறோம் என்று தெரிந்தும், அதிலிருந்து மீள முடியாமற் போவது ஒன்றே தண்டனையாகிறதே! நல்லவனுக்கு மனச் சாட்சியே போதுமே!

எதிர்பாரா விதமாக, அவன் ஐந்தாறு நாள் சேர்ந்தாற்போல் மாதா கோயில் முனையில் சிவலிங்கத்துடன் சேர்ந்துகொள்ள வரவில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை பகற்காட்சிச் சினிமாவுக்குப் போய்விட்டு, வரும் வழியில் மாதாகோயில் தீபாலங்காரத்தைக் காண இறங்குகிறார்கள். பார்த்துவிட்டு வீடு திரும்பும்போது அவன் குரல் கேட்கிறது.

''நமஸ்தே, நமஸ்தே! மாதாஜி, பிதாஜி, உமா!''

அங்கேயே உமா அவனிடம் தாவி விடுகிறாள்.

இவ்வளவு நேரம் சென்றபின் இவனும் வருகிறானே என்று ரங்கத்துக்குச் சமையலை நினைத்துச் சலிப்பாக இருக்கிறது. அவனுடன் அவர்கள் இருவருமே விசேஷமாகப் பேசவில்லை. வீடு திரும்பியதும் சிவலிங்கம் ஞாயிற்றுக்கிழமைப் பேப்பரில் முகத்தைப் புதைத்துக்கொள்கிறான். அவளோ, சப்பாத்திக்காக ஸ்டவ்வை மூட்டுகிறாள்.

சமையலறை வேலைகளை முடித்துக் கொண்டு வெளியே வரும்போது மணி ஒன்பது அடித்திருக்கிறது. சத்தத்தையே காணவில்லை. குழந்தையைக் கட்டிலில் ஒரு புறம் போட்டுப் போர்த்திருக்கிறான். அவள் தூங்குகிறாள்.

''ஏங்க, அவன் எங்கே? போயிட்டானா?''

பத்திரிகைத் தாளில் பதிந்த அரசியல் அக்கப்போரிலிருந்து, சிவலிங்கம் முகத்தை நீட்டிப் பார்க்கிறான்.

''அவன் எங்கே? போயிட்டானா? அவனை எண்ணியில்ல இந்நேரம் கோதுமை மாவோடு போராடிட்டிருந்தேன்?''

''இங்கே காணவில்லையானால் போயிருப்பான்!''

''சொல்லிக்காமையா? அவன்தான் தூங்க வச்சுப் படுக்க வச்சானா?''

''ஆமாம். வாசலில் இருக்கிறானான்னு போய்ப் பாரு.''

ரங்கம் வெறுமே சாத்தியுள்ள கதவைத் திறந்து பார்க்கிறாள். தென்னமரங்களின் தொகுதியே தெரிகின்றது. சாலையே வெறிச்சிட்டுக் கிடக்கிறது. கடற்காற்றுச் சில்லென்று முகத்தை வந்து தழுவுகிறது.

''ஏன், இன்னிக்குச் சொல்லாமப் போயிட்டான்?''—அவள் தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டு குழந்தை விளையாடிவிட்டுக் கீழே போட்டிருக்கும் சாவி மோட்டாரை எடுத்து அலமாரியில் வைக்கிறாள். அது அவன் பரிசுதான்.

ரங்கத்தின் பார்வை ஒரு முறை அர்த்தம் இல்லாமல் அறை முழுவதும் நோட்டம் இடுகிறது.

இனிக்கும் பழவகைதான் என்று தெரிந்தபின்னரும் பழத்தை ருசித்துப் பார்த்துத்தான் குற்றம் அற்றது என்று தெரிந்துகொள்ள வேண்டுமா, என்ன?

ஆனாலும் அவளுடைய ஊஞ்சலாட்ட மனசுக்கு எங்கோ போய் உராய டக்கென்று நின்று போனாற்போல் ஒரு சந்தேகம் தோன்றுகிறது. சிவலிங்கம் சாப்பிட்டுப் போனதும், எழுந்து சென்று குழந்தையின் போர்வையை விலக்கிக் கழுத்தைப் பார்க்கிறாள். துணுக்குற்று, தூங்கும் குழந்தையை எடுத்து, படுக்கையில் உள்ள விரிப்பை நன்றாகப் பார்க்கிறாள்.

''என்னங்க? உமா கழுத்திலே சங்கிலியைக் காணலியே?'' அவனுக்கும் எதிர்பாராத அதிர்ச்சிதான். எனினும் அமைதியாகவே, ''நல்லாப் பாரு. கொக்கி விட்டுக் கழன்று விழுந்திருக்கும்'' என்று கூறுகிறான்.

''இங்கே எங்கும் இல்லே. எனக்கு அப்பவே சந்தேகம், ஆள் சொல்லாமப் போயிட்டானேன்னு. கட்டுப்பாட்டுக் காலத்திலே சிரமப்பட்டு வாங்கின நல்ல தங்கச் செயின், ஒண்ணரைச் சவரன். அவன்தான் தூக்கிட்டுப் போயிருக்க வேணும். கொக்கி லூசாயிருக்குன்னு, நூல் முடிச்சி இன்னைக்குத்தான் கழுத்திலே போட்டேன், வெளியே போறோமேன்னு.''

''அதுக்குள்ளே முடிவு கட்டிட்டுப் பொலபொலக்காதே. பெட்டி எல்லாம் தேடிப் பாரு.''

''நான் போட்டுட்டுப் போனா, பொட்டியிலே எப்படி இருக்குமாம்? நீங்க ஒரேயடியாப் பேப்பரிலே கண்ணப் பதிச்சுக்கிடணுமா? ஒரு பார்வை கவனிச்சுக்க வேணுமா?''

ஆற்றாமையும் ஆத்திரமும் உந்த, பெட்டிகளைக் கீல்கள் நோவத் திறந்து பார்க்கிறாள்; மூடுகிறாள்.

''அது இல்லே. கூலியோட கிட்டத்தட்ட இருநூறு ஆச்சு. போயிட்டுது! அன்னியிலேந்து அவன் இதுக்குத்தான் வேஷங்கட்டி நடிச்சிருக்கிறான். அவன் உள்ளே பொக்குனு வரும்போதே எனக்குப் புடிக்காமத்தான் இருந்தது.''

ஒரு திருடன், மாசக்கணக்காக நண்பனாக, உயிர்த் தோழனாக நடிக்கத் தெரிந்த கலைஞன் இவ்வளவு சடுதியில் சந்தேகம் எழத் திருடிப் போவானா? திருடிக்கொண்டு போகும் நாளில் மட்டும் சொல்லாமல் துணி காய்ந்ததும் உதிர்ந்துவிடும் மணலைப் போல் நழுவிவிடுவானா? அன்றைக்கும் மூளியில்லாமல், சந்தேகம் தோன்றாத வகையில் நடித்துவிட்டுச் செல்பவன் அல்லவா திருடன்?

''அவன் எந்த ஜெட்டியிலே என்ன கடை வச்சிருக்கிறான்னாலும் தெரியுமா? இப்ப என்னங்க செய்யிறது?''

''சினிமாக் கொட்டாயிலே விழுந்திருக்காதுன்னு என்ன நிச்சயம்? எனக்கென்னமோ அவன் திருடிட்டுப் போயிருப்பான்னு நம்ப முடியலே.''

''நீங்க என்ன, அவனுடைய நல்ல நடத்தைக்கு வக்காலத்தா? நாளைக்குப் போயி விசாரியுங்க. துப்புக் கெடைக்காட்டி, போலீசிலே எழுதி வச்சிட்டு மறு காரியம் பாருங்கோ!''

இரவு முழுவதும், பொருள் போன இழப்பைவிட, அவன் திருடனோ என்ற குடைச்சலிலேயே அமைதி குலைந்து போகிறது,

அவர்கள் எதிர்பார்த்தபடி மறுநாள் அவனுக வரவில்லை; அதற்கு அடுத்த நாளும் வரவில்லை.

''என்னங்க? விசாரிச்சிங்களா?''

''என்னத்தைச் சொல்லி விசாரிக்கிறது?''

''கடைதானே வச்சிருக்கிறுன்?''

''பூ, பிரமாதக் கடை! நாலு சோடாப் புட்டியையும் சிகரெட்டையும் சைகில் சக்கரத்திலே வச்சிட்டுக் கூட்டம் கண்ட இடத்திலே திரியிறவன். வண்டி மரத்தடியிலே போத்திக்கிட்டு நிக்குது. அவனை எங்கே போயி விசாரிக்கிறது? கள்ளுக் கடையிலே போயி நிக்கச் சொல்லுறியா?''

''விசாரிக்காம கொள்ளாம ஓர் ஆளை உள்ளே விட்டதுக்கு இது பாடமா?''

இரண்டு பக்கங்களிலும் தலையாக, ஒன்ருேடு ஒன்று மோதிக்கொள்ள, நடுவில் பிளவுபட்டுப் போன பாம்பு போல் மனசு தவிக்கிறது. புதன் கிழமை, சனிக்கிழமை, திங்கட் கிழமை எல்லாம் வந்து போகின்றன.

சிவலிங்கம் மட்டுமே உமாவிடம் பேசிக்கொண்டு படியேறி வருகிறுன். அவனுக்கு மறந்தே போய்விட்டது.

உமா இப்போதெல்லாம் குடுகுடு வென்று தெருவில் ஓடிப் போய்விடுகிருள். அவளைக் கண்காணிப்பதற்கே ரங்கத்துக்கு நேரம் சரியாகப் போகிறது. அவளுக்கு எண்ணெய் முழுக்காட்டுவதென்ருலோ, ரங்கத்தின் சாமர்த்தியத்துக்கு ஒரு பெரிய சோதனைதான்.

அன்று மாலையில், எண்ணெய் தேய்த்துவிட்டு வெந்நீரைச் சரியான பதச் சூட்டிஞல் விளாவி வைக்குமுன் குழந்தையைக் காணவில்லை. பின் புறத்துத் தோப்புக்குள் குடுகுடு வென்று ஓடிப்போகும் அவளை இழுத்து வந்து முழுக்காட்டுகிருள். கத்தும் கத்தலில் ஊரே திரண்டு விடும் போலிருக்கிறது. அந்த அமர்க்களத்தில் ஒரு ஜோடிச் செருப்பொலியோடு வந்த இன்னெரு ஜோடி ஒலியும் செவிகளில் விழவில்லை.

குளியலறையிலிருந்து ஒரு கையில் துண்டுடன், அழுது பிரளயமாக்கும் குழந்தையை ஒரு கையில் இழுத்துக் கொண்டு அவள் வருகிருள்.

''என்ன? என்ன? உமா, என் குழந்தாய்! ஓ உமாஜி!''

அன்ெருரு நாள் பஸ்ஸில் தாவித் தூக்கிக் கொண்டாற்போல்தான் அவளைக் கவர்ந்துகொள்கிறுன். அழுது அழுது குங்குமமாகச் சிவக்க, போன ஈரமும் போகாத ஈரமுமாக முடிக் கற்றைகள் சொட்ட, அவன் அணைத்துக்கொள்கிறுன். கோழிக் குஞ்சு போல் அவன் அணைப்பில் பதுங்கி, தோளில் உரிமையுடன் ஈரத்தலையைச் சாய்த்துக்கொள்கிருள் குழந்தை.

அவளுக்கு வார்த்தைகள் எழாத படபடப்பு. துண்டை யந்திரம்போல் நீட்டுகிருள். அவன் அதை வாங்கித் தலையை முதுகைத் துடைத்து விடுகிறுன். இன்னமும் அவள் விசிப்பு ஓயவில்லை. குழந்தைக்கு மட்டுமே கேட்கக் கூடிய மெல்லிய குரலில், அவனுடைய தாய்மொழியில் ஏதேதோ சமாதானங்கள்; கனிவுரைகள்; கொஞ்சல்கள்; அவள் பிஞ்சு உள்ளம் அமைதி பெற்றுக் களிக்கும் வகையில் உரையாடல்கள். வார்த்தைகள் தெளிவாக ரங்கத்துக்குக் கேட்கவில்லை. எனினும், அவன்முன் சரேலென்று உலகின் மற்ற எல்லாக் காட்சிகளும் ஒலிகளும் உணர்வுகளும் மறைந்து போக, அவனும் அந்தக் குழந்தையுமாகிய ஒரு பகுதியே முழுசாக உயிர்த்திருக்கிறது. அவன் தன்னிலும், அந்த இன்ெருரு பகுதியாகிய குழந்தையிலும் மூழ்கிவிட்டாற்போல் ரங்கத்துக்கு ஒரு சிலிர்ப்பு உள்ளூற ஊருடுவிப் பாய்கிறது. அவனுடைய குரல், சம்பந்தம் இல்லாத பிதற்றல்களைப் போன்ற கொஞ்சல்கள். இந்த மொழி, மொழிகளைக் கற்றுணர்ந்தபின் புரியாத மொழி.

அவனிடம் அலங்காரம் செய்து கொள்வதில் உமாவுக்கு மிகவும் விருப்பம். அவளாகவே குஞ்சுக் கைகளால் பவுடர் டப்பி, சாந்துக் குப்பி, மைச் சிமிழ் எல்லாவற்றையும் அவனிடம் கொண்டு வந்து கொடுப்பாள். அம்

மாவைப் போல் விரலில் மையைத் தோய்த்துக்கொண்டு கண்ணுக்குள் இட்டுத் துன்புறுத்த மாட்டான் அவன். அவனுக்கு அப்படி இடத் தெரியாது. புருவங்களில் அடர்த்தியாகத் தீற்றிவிடுவான்.

இன்று அவளுக்குக் கோபம் அல்லவா? அவனுகவே கண்ணுடியின்முன் சென்று அவளை உட்கார்த்தி வைத்து, அலங்காரங்கள் செய்கையில், ரங்கம் தூக்கிச் செருகிக்கொண்ட சேலைநுனியைக் கூட அவிழ்த்துக் கொள்ளாமல் நிற்கிருள். இவனிடம் சங்கிலியைப் பற்றி எப்படிப் பேச்சு எடுக்கலாம்? வெளி உலகின் எல்லாக் கயமைகளையும் கவலைகளையும் துன்பங்களையும் அந்த உலகுக்காக அணியும் சட்டை என்று கழற்றிவிட்டு, தன் இஷ்ட தெய்வத்தின் மனப்பூர்வமான பூசனையில் ஈடுபட்டிருக்கும் ஒருவனை, அந்தச் சட்டையின் ஓர் இழையில் கழுத்தைப் பற்றி இழுப்பது எப்படி? இவன்—

''என்ன, திகைச்சுப் போய் நிக்கிறே? டீ இல்லையா?'' என்று கணவன் நினைவுலகுக்கு இழுக்கிறுன்.

''இவனை எங்கே பிடிச்சிங்க?''

''பிடிச்சேனு? வழக்கம்போல அவனுத்தான் வந்தான்.''

''சங்கிலி....?''

''நான் ஒண்ணும் வாயே திறக்கலே.''

''கேட்க வேண்டாமா?''

''அவன்தான் திருடினுன்னு அத்தாட்சி இருக்குதா?''

''நின்ன இடத்திலே சுத்திச் சுத்தி வந்தால் எப்படி?''

''நீதான் கேளேன்!''

''அவ்வளவுக்குப் பாஷை தெரிஞ்சால் உங்களைப் போயி ஏன் கெஞ்சுறேன்?''

'மொழி தெரியாது' என்ற தட்டியின்பின் மறைந்துகொள்கிருள், கேட்கத் துணிவில்லாத உண்மையை வெளியிடாமல் அவள். ஆனால் சமையலறையை விட்டு வந்ததும் அவர்கள் கண்களைப் பிடித்து நிறுத்தும் வண்ணம் உமாவின் கழுத்தில் பட்டுச் சட்டைக்கு மேல் ஒரு சங்கிலி மின்னுகிறது. அது பழைய சங்கிலி அல்ல. இது வேறு தினுசானது; இன்னும் வலுவான இழை. இரத்தச் சிவப்பில் ஐந்து மூலை நட்சத்திரம் போல் ஒரு கல் டாலர் விளங்குகிறது.

அவனுக்கும் வெண்ணிறப் பற்கள் தெரியச் சந்தோஷம் பொங்கி வழிகிறது. மைப்புருவமும், கன்னத்தில் திருஷ்டிப் பொட்டுமாக வாயில் விரலைப் போட்டுக்கொண்டு உரிமையுடன் அவன் கையில் வீற்றிருக்கும் உமாவுக்கு இன்னமும் தாயின்மீதுள்ள கோபம் மாறவில்லை. அந்தக் கோபத்தில் ஒரு மூச்சிழை இன்னெருரு மூச்சுடன் மோத நெஞ்சம் விம்மித் தணிகிறது.

''என்ன இது? புதிய சங்கிலி? ஏது, இது?''—சிவலிங்கந்தான் மௌனத்தைத் தகர்க்கிறுன்.

''நன்ருக இருக்கிறதா, உமாவின் அன்னையே? அன்றைக்கு உமா கோபத்தில் இழுத்து அந்தச் செயினை அறுத்துவிட்டாள். எனக்கு ஏதோபோல் இருந்தது. இது பதிலாக, புதியதாக வாங்கி வந்தேன். உமாவின் தந்தையே, மன்னியுங்கள். நீங்கள் அதைத் தேடவில்லை?''

ரங்கம் தவறுதலாக முகவரி எழுதிக் கடிதத்தைப் பெட்டியில் போட்டபின் துணுக்குற்ருற்போல் நிற்கிருள். அவள் கணவன்தான் பதில் அளிக்கிறுன்.

''தேடினேும் தினேஷ். அது ஏற்கனவே கழன்று போகும்படியே இருந்தது. எங்கோ விழுந்துவிட்டது என்று நினைத்தோம். அது இருக்கட்டும்; அதற்காக நீங்கள் புதிசாக வாங்கிக் கொண்டு வர வேண்டுமா?''

''அதுதானே? அநாவசியமாக எங்களைக் கடன்பட்டவர்களாக ஆக்குகிறீர்களே!'' என்று தமிழில் பரபரக்கிருள் ரங்கம்.

ஆனால் அவன் மொழியைப் புரிந்து கொள்ளாதவனுக, பற்கள் தெரியச் சிரிக்கிறுன். அவன் முகத்துக்கு அந்தப் பற்கள்தாம் கவர்ச்சியானவை. ரங்கம், கறிவடகம் பொரித்துத் தேநீரோடு வைக்கிருள். அவன் வழக்கம்

போல் குழந்தை தூங்கியதுமே விடை பெற்றுச் செல்கிறான்.

அவன் சென்றபின், தூங்கும் குழந்தையின் கழுத்திலிருந்து ரங்கம் பரபரப்பாகச் சங்கிலியைக் கழற்றிப் பார்க்கிறாள். பளபளவென்று டாலருடன் மின்னுகிறது. வைக்கோலைப் போல் கனம் இல்லாத போலி அல்ல. பழைய செயினைவிடக் காத்திரமானது. இரண்டு சவரன்கள் இருக்கும்.

''எங்கே, கொண்டா, பார்ப்போம்!''

சிவலிங்கம் அதை வாங்கிக் கையில் எடை போட்டுப் பார்க்கிறான். விளக்கின் அருகில் வைத்துப் பரிசோதிக்கிறான். ''நல்ல தங்கந்தானே?''

''சேசே! என்ன, நீங்கள்... ''

''ஏன்? திருடன் என்று சொல்லக் கூடாதா? சங்கிலி அறுந்து போனால் அப்போதே நம்மிடம் சொல்ல வேண்டும்; இல்லையேல் பேசாமல் போயிருக்க வேண்டும். இவன் எடுத்துச் சென்று எதற்காகப் புதியது கூடுதலாக வாங்கி வருகிறான்? புருசன் பெண்சாதி, தாய் பிள்ளை பிரியமே ஒண்ணுக்கொண்ணு சிக்கலில்லாமச் சுயநலங்களாகப்போயிடும்போது, எவனோ குடிகாரப் பயல், யார் குழந்தையிடமோ பிரியம் காட்டுகிறதாவது? பிஸ்கோத்து, சாகலேட்டு ஏதோ நியாயம். மோட்டார் வண்டி, பொம்மையே அதிகம். சங்கிலி வாங்கி வந்தானாமே; எதற்கு? இவன் எதற்குச் சங்கிலி வாங்கி வருவது? இவன் என்ன, தாயோடு கூடப் பிறந்த மாமனா மச்சானா? எதற்கு வாங்கி வருவது? எதற்கு?''

பொறிப் பொறியாய்க் கிளம்பிச் சர வரிசைகள் போல் உயர்ந்து பட்டென்று வெடிக்கிறது.

'எதற்கு? எதற்கு வாங்கி வருவது? மாமனா? தாயோடுகூடப் பிறந்த...' ரங்கத்தின் நெற்றியில் வந்து சுள் சுள்ளென்று சுட அந்தப் பொறிகள் உறைக்கின்றன.

எதற்கு வாங்கி வந்தான்? ஒட்டடையில் ஒட்டிக்கொண்டிருந்த அற்பத் துரும்பு போல் இருந்த விஷயம், குடும்பத் தலைவன் என்ற பௌருஷத்தில் ஊசிபோல் தைத்துவிட்டதை அவள் உணருகிறாளோ?

''போகட்டும், இனிமேல் இவன் சங்காத்தமே வேண்டாம். இவனுக்கென்ன உபசாரம்? வெட்கக் கேடு. நீயே நினைச்சுப் பாரு, ரங்கம்.''

ரங்கம் சிலையாய் நிற்கிறாள்.

''அவன் இங்கே நான் கோயிலில் இறங்கினால்தானே கூட வர்றான்? வராதபடி பண்ணிடறேன். தனியே வரமாட்டானில்ல? அதும் வரானோ?''

அவன் புருவத்தில் இட்ட மைக் கீற்றும் திருஷ்டிப் பொட்டுமாகக் குழந்தை களங்கமற்று உறங்குகிறாள். அந்த மைக் கோடுகள் இலகுவில் அழியா. எண்ணெய் தடவி, சோப்புப் போட்டு அழிக்க வேண்டும். உமா அழுவாள். புருவத்துக் கரி நெற்றியெல்லாம் பரவிவிடும், திட்டுத் திட்டாக, கறுப்பாக. தன் அழகைப் பற்றியோ, எதிராளியின் புற அழகைப் பற்றியோ குழந்தை கவலையே படுவதில்லை. அதன் அழகாகிய உலகமே வேறு.

அந்த வாரம் முழுவதும் சிவலிங்கம் சொன்னபடி நடக்கிறான். மாதா கோயிலின் அருகில் பஸ்ஸை விட்டு இறங்குவதில்லை. இன்னும் இரண்டு நிறுத்தங்கள் தாண்டிப் போய் இறங்கி, வேறு திசையிலிருந்து நடந்து வீடு வருகிறான்.

பிறகு தீபாவளி விடுமுறை, இரண்டு நாட்கள். முதல் நாள் பலகாரங்கள் செய்யும் மும்முரம். பண்டிகையன்று காலையில் அவர்களே ஏழெட்டு மைல்களுக்கு அப்பால் நண்பர் வீடுகளுக்குச் செல்கின்றனர். படமும் பார்த்துவிட்டு இரவு வெகு நேரம் சென்று ஒரு டாக்ஸியில் வீடு திரும்புகின்றனர். லீவு கழிந்து வழக்கம்போல் சிவலிங்கம் அலுவலகம் செல்கிறான்.

சிவலிங்கம் இன்னமும் வீடு திரும்பவில்லை. அந்தி மயங்கும் நேரம். உமா தெருவில் விளையாடிக்கொண்டிருக்கிறாள். அவளைக் கண்காணிப்பது போல் படியிலேயே நின்ற வண்ணம், அப்படியும் இப்படியும் பார்த்துக்கொண்டிருக்கிறாள் ரங்கம்.

சாரல் காற்று விசிறிச் செல்லுவது போல் ஒரு சிலிர்ப்பு.

அதே கோட்டு; சாய்ந்த நடை. அவன்தான் வருகிறான். ஒரு கையில் பளிச்சென்று சிவப்பு நிறத்தில் ஏதோ தெரிகிறது. வேகமாக வருகிறான். வந்துவிடுவான்.

அவளுடைய கணவன் வீட்டில் இல்லாத நேரத்தில் இவன் வந்துவிடுவான். இவன் உள்ளே வந்துவிட்டால்?

விவரிக்க இயலாத அச்சத்துடன் லபக்கென்று தாவி உமாவின் அடிக்கையைப் பற்றி இழுத்து வந்து கதவுக்கு அப்பால் விடுகிறாள். ஆனால் குழந்தை அவனைப் பார்த்துவிட்டாள். அவள் ''தி....னா....'' என்று அலறுகிறாள். ரங்கம் கதவை அறைகிறாள். படார் என்ற ஓசை கேட்கிறது. உமா கைகளையும் கால்களையும் உதைத்துக்கொண்டு கத்துகிறாள்.

பிறகு ரங்கம் ஜுர வேகத்துடன் படுக்கையறை ஜன்னலின் பின்சென்று நிற்கிறாள். இதற்குள் அவன் வாசலுக்கு வந்துவிடுகிறான்.

கதவு உள்ளே தாழ் போட்டிருக்கிறது. குழந்தை கத்துகிறாள். அவன் சிரிப்பு மாய்கிறது.

படுக்கையறை ஜன்னலின் இடுக்கு வழியாகச் சிரமப்பட்டு அவள் வாசலில் பார்க்கிறாள். இவன் உணர்ச்சியை விழுங்கிக்கொள்வதைப் பாதி கண்களாலும் பாதி கற்பனை உணர்வாலும் காண்கிறாள் ரங்கம். இவன் கதவைத் தட்டுகிறான்.

உமாவின் குஞ்சுப் பூங்கரத்துக்குத் தாழ் எட்டாது. அவள் எழுந்து அழுதுகொண்டே தாயைத் தேடி ஓடி வருகிறாள்.

கதவு பலமான தாக்குதல்களால் 'உடைந்துவிடுவேன்' என்று ஓசை கொடுக்கிறது.

''என்ன? யார் வந்திருக்கிறேன் என்று நினைக்கிறாய்? என்னுடைய அன்பான உமா, மகளே உமா, தாயே, நான் வந்திருக்கிறேன், தினா!''

குழந்தை ரங்கத்தின் கையைப் பற்றி இழுக்கிறாள்.

ரங்கம் கதவைத் திறப்பாளோ? அவள் திறப்பாள். அவன் பாய்ந்து வந்து குழந்தையைத் தூக்கிக்கொள்வான்.

''அம்மா! நான் தினேஷ் பால்!''

கதவைத் திறக்க உமா இழுத்தாலும் கால்கள் அசையவில்லை. இதற்குள் ஜன்னலருகில் அவள் நிற்பதை அறியும் அவன், எச்சில் இலை கண்டு தாவி வரும் நாயைப் போல் தாவி வருகிறான்.

''உமாஜி, மாதாஜி! கதவைத் திறவுங்கள்!''

மாதாஜி மாதாஜி என்று அவன் அலறியும் அவள் விரையவில்லை. ஜன்னல் கதவையே சற்று நீக்கி, கண்ணாடிக்கு வெளியே, ''உமாவின் அப்பா ஆபீசிலிருந்து வரவில்லை'' என்று தெரிவிக்கிறாள்.

''என்ன? என்ன மாதாஜி?''

''உமாவின் அப்பா இல்லை.''

ரங்கம் ஜன்னல் கதவையும் நன்றாகச் சாத்துகிறாள்.

''சாத்து, கதவை நன்றாகச் சாத்து. நீ ஏன் கதவைச் சாத்துகிறாய் என்று எனக்குத் தெரியும். ஓ என் விதியே, என் பூங்காவில் மண்ணைப் போட்டுவிட்டாயே!''

அந்த அழுகுரலில் ரங்கம் திடுக்கிட்டு நிலைகுலைகிறாள். ஜன்னல் கதவை மீண்டும் திறக்கிறாள்.

''திறக்காதே, சாத்து. சாத்திக்கொள். நீ ஏன் மூடுகிறாய் என்று எனக்குத் தெரியும். சூதாடிக் கடன்பட்டுச் சங்கிலியைக் களவாடிப் போனான் என்று அறிந்திருப்பீர்கள். மூன்று வாரங்கள் மீண்டும் சூதாடி ஜயித்தே இழப்பை ஈடு செய்து கொண்டான் என்றும் தெரிந்து கொண்டிருப்பீர்கள். மாதாஜி, உமாவின் மாதாஜி, நான் குடியன், வெறியன், திருடனாக நடந்துவிட்டேன். ஆனால் என் அன்பு களங்கம் இல்லாதது, பளிங்கைப் போன்றது. அதில் மட்டும் சந்தேகம் கொள்ளாதீர்கள். அது பொல்லாத உலகம். இது கோயில்; கோயில் எனக்கு.''

அவன் ஒரு கணங்கூட நிற்காமல் போகிறான்.

ரங்கம் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு பரபரப்புடன் வாசலுக்கு வந்து கதவைத் திறக்கிறாள்.

வாசற்படியில் அவன் கையில் கொண்டு வந்த நட்சத்திர வடிவில் சிவப்பும் பச்சையுமான வண்ணக் காகிதக் கூண்டு விளக்கு இருக்கிறது. குழந்தை அதை அவசரமாக எடுக்கையில் ரங்கத்துக்குச் சடேரென்று நினைவு வருகிறது. அன்று 'ப்ராத்ரு துவிதீயை'-சகோதரன் சகோதரி வீட்டில் வந்து உறவாடும் நன்னாள்.

அவனைக் கூப்பிட வேண்டும் என்று ஒரு பேராற்றல் உந்திக்கொண்டு வருகிறது. வாசலுக்கு விரைந்து வருகிறாள். ஆனால் இன்னமும் மாதா கோயில் பக்கம் பஸ்ஸிலிருந்து இறங்காத சிவலிங்கம், எதிர்ப்புறத்திலிருந்து வாசலுக்கு நேராக வருவதைப் பார்த்துவிடுகிறாள்.

குரல் எழும்பவில்லை. ★

வேதக் கதைகள்

வேதங்கள் அநாதி என்று சொல்வது மரபு. சரித்திர ஆராய்ச்சியாளர்களே, 'உலகத்து நூல்களில் மிக மிகப் பழமையானது ரிக்வேதம்' என்று தீர்மானித்திருக்கிறார்கள். பல இனிய அரிய கதைகள் வேதங்களில் உள்ளன. நிலையான உண்மைகளைப் புலப்படுத்தும் மூன்று கதைகளை இங்கே தருகிறோம். இவை ரிக்வேதத்தில் இருக்கின்றன.

விண்ணக அழகியும் மண்ணக மன்னனும்

இல்லத்துக்குக் காப்பான கார்கபத்தியம், வேள்விக்கு உதவும் ஆகவனீயம், மனிதனின் உடலைத் தூயதாக்கி நற்கதிக்கு இட்டுச் செல்லும் தட்சிணாக்கினி என்பவற்றை முத் தீ என்பார்கள். இவற்றை முதலில் உலகில் கொணர்ந்தவன் புரூரவஸ். அவன் பிரதிஷ்டானபுரத்து அரசன். அவன் புகழ் விண்ணைக் கடந்தது. இந்திரன் அவனுடைய நண்பன். ஒரு தடவை இந்திர சபையில் தேவமங்கை உருவசி ஆட, புரூரவஸ் மயங்கினான். அவளும் அவனழகில் சொக்கினாள். அவன் அவளைச் சந்தித்து, மண்ணுலகுக்கு வர வேண்டினான்.

உருவசிக்குச் சொர்க்கம் வெறுத்தது. ஒரே இன்பம், ஒரே சுவை, ஒரே வண்ணம்! பிரிவுத் துயரத்தை அறியா தவருக்குக் காதலின்பம் எப்படித் தெரியும்? மகிழ்வு - துயரம், செல்வம் - வறுமை முதலிய இரட்டைகளின் கலவையே மண்ணுலகின் பெருமை. அவள் பூமிக்கு வந்தாள்; மூன்று நிபந்தனைகள் - ஒன்று: அவள் எப்போதும் நெய் உண்பாள். இரண்டு: தனக்குப் பிரியமான இரண்டு ஆடுகளை விட்டுப் பிரியமாட்டாள். மூன்று: படுக்கையின்றி வேறிடத்தில் அவள் அரசனை ஆடையின்றிப் பார்க்கக்கூடாது. அரசன் இவற்றை ஒப்புக்கொண்டான்.

உருவசி இல்லாமல் தேவருலகில் ஆனந்தம் இல்லை, ஒளி இல்லை. தேவர் சில கந்தர்வர்களை அனுப்பி, அரசனை வஞ்சித்து உருவசியை அழைத்துவர ஏவினர். நள்ளிரவு. கட்டிற்காலில் கட்டியிருந்த ஆடுகளில் ஒன்றைக் கந்தர்வர் கவர்ந்தனர். அதன் ஓலத்தைக் கேட்டு உருவசி அழுதாள். அரசன் மௌனமாக இருந்தான். மற்றொன்றையும் கவர்ந்து அவர்கள் வானத்தில் ஓடினர். உருவசி துடித்தாள். அரசன் இடுப்பில் இருந்த ஆடை அவிழ்வதும் தெரியாமல் விர்ரென எழுந்து சென்று, ஆடுகளை மீட்டு வந்தான். அடுத்த கணம், ஒரு மின்னல்! அரசனுடைய கோலத்தைக் கண்ட உருவசி வானத்தில் மறைந்தாள். அரசனின் கட்டில் வெறிதே கிடந்தது.



உருவசியின் பிரிவைத் தாங்காமல் புரூரவஸ் அரண்மனையைத் துறந்து, காடுகளையும் மலைகளையும் கடந்து, அவளைத் தேடி அலைந்தான். மானஸ ஸரோவரம்; விசாலமான ஏரி. வண்ணத் தாமரைகள் பூத்திருந்தன. ஐந்து அன்னப் பேடுகள் அங்கு விளையாடுவதை அரசன் கண்டான். பேட்டன்னங்களில் தலையாயது உருவசி, மற்றவை தோழியர் என்பதை அவன் அறிந்தான். உருவசியும் அவனை அறிந்துகொண்டாள். அவன் தன் துயரத்தை வெளியிட்டான்.

''அன்பே, வில்லிலிருந்து பாயும் அம்புபோல, போருக்கு ஓடும் குதிரைபோல நீ மறைந்தாய். நான் ரத்தினமாக மதித்த நீ, வெந்தழலாக மாறினாய். என் உயிரே நீதான்'' என்றான் அரசன். ''எழிலைக் காட்டி மயக்கும் பேட்டன்னம் நான்; என்னிடம் மயங்காதீர்கள்'' என்று அவனுக்கு ஆறுதல் சொன்னாள் உருவசி.

அவனுக்கு இரங்கிய கந்தர்வர், அக்கினி நிரம்பிய பாத்திரத்தை அவனிடம் கொடுத்து, ''இதைக் கொண்டு வேள்வி செய்தால் உங்கள் விருப்பம் நிறைவேறும்'' என்றனர். அரசன் வெறுத்து, அந்தப் பாண்டத்தை வழியில் விட்டு வந்தான். மறுநாள் அவன் போனபோது அக்கினி தணிந்து, அவ்விடத்தில் அரசும் வன்னிமரமும் நின்றன; அரசன் அவை இரண்டின் கிளைகளைக் கொணர்ந்து கடைந்து, முதல்முதலில் தீயை உண்டாக்கி வேள்வி செய்தான்; அதன் பயனாக அவன் விண்ணகம் சென்று உருவசியுடன் வாழ்ந்தான். விண்ணும் மண்ணும் இணையும் கதை இது.

தவத்தால் வாழ்வு பெற்ற அபாலா

மகரிஷி அத்திரியின் அருமைப் பெண் அபாலா. அவளைப் போன்ற அழகியை யாரும் பார்த்ததில்லை; ஆனால் சிறுவயதிலேயே அவள் உடம்பில் வெள்ளைத் தழும்புகள் தோன்றின. எவ்வளவோ வைத்தியம் செய்தும் பயனில்லை. நோய் வளர்ந்தது. 'இவள் வாழ்வு என்ன ஆகுமோ?' என்று அத்திரியின் கவலையும் வளர்ந்தது. அபாலா சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்தாள். அவள் மேதையைக் கண்டு யாவரும் வியந்தனர். அவள் பருவம் அடைந்தாள். அவள் நோயும் மங்கியது. தவ ஒளியும் அழகும் மிக்க கிருசாச்வன் அவளை மணந்து ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றான். இருவரும் சில காலம் இன்பமாக வாழ்ந்தனர். ஆனால், அபாலாவின் நோய் மீண்டும் தலைகாட்டியது. அவளது எழிலைச் சுவைத்த கிருசாச்வன் இப்போது அவளை வெறுத்தான்,

அபாலா தந்தையின் வீட்டுக்கு வந்தாள். கணவன் புறக்கணித்தபின், அவள் வேறு என்ன செய்ய முடியும்? அவள் கடுந்தவம் புரிந்தாள். மிதமான உணவு கொண்டு, புலனடக்கத்துடன் வாழ்ந்தாள். வைகறையில் துயிலெழுந்து, ஆற்றில் நீராடிக் கதிரவனுக்கு அர்க்கியம் கொடுப்பாள். தன் தெய்வமான இந்திரனை அவள் தினமும் வழிபட்டாள்.

ஒரு நாள், தண்ணீர் கொண்டுவர அவள் ஆற்றுக்குப் போனாள். இந்திரனுக்குப் பிரியமான சோம லதையைக் கரையில் கண்டாள். இந்திரன் சோமரசம் பருகி வலிமை பெற்று, அசுரர்களை மாய்ப்பான். ரசத்தைப் பிழியக் கல் கிடைக்காமல், அவள் தன் பல்லால் அந்தக் கொடியைக் கடித்து, ரசத்தை இறக்கி, இந்திரனுக்கு அர்ப்பித்தாள். இந்திரன் அவள்முன் தோன்றினான். அவள் அவனைத் துதித்தாள். இந்திரன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்; அவளது நோயை நீக்கிப் பொன்மேனியள் ஆக்கினான்.

அபாலா புத்தெழிலுடன் கணவன் வீடு சென்றாள். அவளது தவ ஒளி கிருசாச்வனைத் தலைகுனியச் செய்தது. பெண்மையின் பெருமையைப் போற்றி, அவன் ஆனந்தமாக அவளை வரவேற்றான். அன்பு புற அழகைப் பொறுத்ததல்ல, கணவன் தான் கைப்பிடித்த மனைவியை எந்த நிலையிலும் காக்க வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான்.

சார்ந்ததன் வண்ணம் ஆன ஸோபரி

மகரிஷி ஸோபரி கண்வ குலத்துக்குப் பெருமை தந்த மகா ஞானி. பெற்றோர் அவருக்கு மணம் செய்விக்க விரும்பினர். ஸோபரி சிற்றின்ப வாழ்வை விரும்பாமல், இல்லத்தைத் துறந்து தவத்தை நாடிச் சென்றார்.

யமுனைக் கரை. அமைதியான இடம். பறவைகள் கொஞ்சின. கடும்பனியிலும் அடைமழையிலும் எரிக்கும் கோடையிலும் ஸோபரி சற்றும் தளராமல் யமுனைநீரில் ஆழ்ந்து தவம் செய்யலானார். ஆண்டுகள் பல கடந்தன. அவர் தலை நரைத்தது. யமுனையின் நீலநீரில் மீனரசன் மனைவியுடன் விளையாடுவதையும், மீன் குஞ்சுகள் சுற்றித் துள்ளி ஓடுவதையும் அவர் தினமும் கவனித்தார்; 'தம்பதிகளின் குலாவலில் என்ன இனிமை! குழந்தைகளின் சிரிப்பில்தான் என்ன சுகம்! இது அல்லவா வாழ்க்கை! நம் வாழ்வும் வாழ்வா?' என்று எண்ணினார். மனமாசுகளை எரித்து, "ஆண்டவனிடம் பற்றுக் கொள்வதுதான் உண்மையான தவம். ஸோபரி உடலை வாட்டினாரே தவிர, அவரது மனம் பக்குவப்படவில்லை. இப்போது அவர் திருமணத்துக்குப் பெண் தேடிப் புறப்பட்டார்.

ஸுவாஸ்து நதியின் கரையிலுள்ள நகரத்துக்குச் சென்று, சப்தசிந்துவின் அரசன் த்ரஸதஸ்யுவைக் கண்டார் ஸோபரி. அவனுடைய மகளைத் தாம் மணக்க விரும்புவதாகச் சொன்னார். 'கிழத்துக்கா பெண் கொடுப்பது?' என்று அவன் தயங்கினான்; ஆயினும் தவமுனிவரிடம் பயம். ''நீங்கள் அந்தப்புரத்துக்கு வாருங்கள். எந்தப் பெண் உங்களை வரிக்கிறாளோ, அவளை நீங்கள் மணந்து கொள்ளலாம்'' என்று மன்னன் சொன்னான்.

தவவலிமையினால் ஸோபரி அழகு வடிவம் பூண்டார். அவரைக் கண்டு அரசனே வியந்தான். அரசிளங்குமரிகள் அனைவரும் அவரைச் சூழ்ந்துகொண்டு மணம் புரிந்துகொள்ள விரும்பினார்கள். அந்தப் பெண்களை மணந்து, விலையுயர்ந்த ஆடைகளையும் மணிகளையும் ஏற்று, முனிவர் யமுனைக் கரைக்குத் திரும்பினார். அவர் இந்திரனைத் துதித்து, என்றும் குன்றாத இளமையையும், சோலை சூழ்ந்த மாளிகையையும் பெற்றார். பொருளைப் பெறும் வரைதான் மனிதனுக்கு ஆசை; கிடைத்து அநுபவித்ததும் அது அலுத்துப் போகிறது; சுவை மங்குகிறது. சிற்றின்பங்களை நுகர்ந்தபிறகு ஸோபரிக்கு உண்மையான விரக்தி பிறந்தது. இல்லறத்தைத் துறந்து, அரணியத்தில் சாதுக்களுடன் பழகி, பக்திசெய்து இறைவனைக் கண்டார். மனிதனின் பழக்கத்துக்கு ஏற்ப, வாழ்வு அமைகிறது.

தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
SPARTAN
SUPERFINE PRODUCTS
தரத்தில் சிறந்த
ஸ்பார்ட்டன்
பெயிண்டுகள்
தயாரிப்பாளர்கள்:
அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ்
லிமிடெட்
செம்பியம்
மதருஸ்-11
(இந்தியன் பெயிண்ட் அஸோஸியேஷனில் அங்கத்தினர்)
APC-96

டி. என். சுகி சுப்பிரமணியம்

பேனாவின் விலை இரண்டு ரூபாய்; விலை பெரிதல்ல. பேனாவின் உரிமையாளர் கோவில் எக்ஸிக்யூடிவ் ஆபீசர். எனவே கோவில் பிராகாரத்திலுள்ள அலுவலகம் தடபுடற் பட்டது. பேனாவை எடுத்தது யார்?

''அபிஷேகத்துக்கு ஆறு இளநீர் என்று எழுதினேன். அப்போது சேவகன் பண்டாரம் இருந்தான். தெருவில் யாரோ மிதிபாகல் விற்றார்கள். வாங்கலாமா, நல்லதா என்று பார்க்கப் போனேன்; பேரம் பேசினேன், திரும்பி வந்தேன். பேனாவைக் காணோம்!'' என்றார் கோவில் நிர்வாக அதிகாரி.

எல்லாச் சிப்பந்திகளும் பண்டாரத்தையே பார்த்தார்கள்.

தர்மகர்த்தா நல்லசிவம், ''பண்டாரம் நல்லவன்; நீங்கள் வேறு பேனாவைக் கொண்டு வேலை செய்யுங்கள். வா, பண்டாரம்'' என்று அருமையாக அழைத்துக்கொண்டு போனார். கீழ்ப் பக்கம் சனைச்சரர் கோவில். அதன் பக்கம் வந்தனர். ''பண்டாரம்'' என்றார் குரலில் குழைவோடு.

''ஐயா!''

''நீ ஆண்டவனுக்கு அடிமை.''

''ஆமாங்க!''

''நீ திருடமாட்டே.''

''மாட்டேன்.''

''ஒரு வேளை பேனாவை நீ எடுத்திருந்தாலும் சரி; இல்லை, யாராவது எடுத்திருந்ததைப் பார்த்திருந்தாலும் சரி, சொல். இல்லை, மூன்றாம் பேருக்குத் தெரியாமல் நாளை ஆபீசில் வைத்துவிட்டாலும் சரிதான்.''

''நான் எடுக்கலை. யாரு எடுத்ததையும் பார்க்கலை.''

''ஆபீசுக்குள்ளே யாராவது வந்தாங்களா?''

''மடப்புளி சாமி தண்டாங்கோரை ஐயர் வந்துதுங்க. வெண்கலக் கரிப் பானையிலே அரைப்படி அரிசி அளந்து போட்டுது. போயிடுச்சு.''

''பேனா?''

''நான் பார்க்கலே. அவர் எடுத்தாரோ எடுக்கலியோ. மடப்புளியிலே நிக்கும். கூட்டியாரேன். அதையே கேளுங்க.''

தர்மகர்த்தா குரலைக் கனைத்துக் கொண்டார்.

''டேய் பண்டாரம். நீ எத்தனை வருஷம் வேலை பார்க்கறே?''

''இந்தச் சித்திரைத் தேருக்கு இருபது வருஷம் ஆகுது.''

''பார்த்தா ரெண்டு ரூபாப் பேனா. பரம்பரை வேலையை இழந்திடாதே. எக்ஸிக்யூடிவ் ஆபீசர் பொல்லாத எமன்.''

''நான் என்ன செய்யணும்?''

''எடுத்திருந்தா அங்கேயே போட்டுடு.''

''எடுக்கல்லியே!''

''ரெண்டு ரூபா பணத்தைக் கொடுத்திடு.''

''கொடுக்க வேண்டிய நியாயம் இல்லிங்களே!''

''வேலை போயிடும்; போயே போயிடும்.''

''எப்போ?''

''சம்பளத்திலே ரெண்டு ரூவா கொடுத்திடறேன்.''

''ஒழி, ஒழி!''

சமாதானப் பாதையை வகுத்துக் கொண்டார். சனீச்சரனை வலம் வந்து கன்னத்தில் போட்டுக்கொண்ட படியே போய்விட்டார்.



''இந்தக் கோவில் சாமி சத்தியமாச் சொல்லுறேன்.'' பண்டாரம் தவித்துப் போனான்.

''கொடுத்திடறேன் தர்மகர்த்தா ஐயா.''

தர்மகர்த்தா நல்லசிவம் திருட்டுப் போன பேனாவை ஒரு வகையாகக் கண்டுபிடித்துக் கொடுத்துத் திருப்தி தந்தார். தமக்கும் நிர்வாக அதிகாரிக்கும் கசப்பு வராதபடி

மறுநாள். பத்து மணிக்குத்தான் பண்டாரம் அலுவலகத்துக்கு வந்தான். மேஜையைத் துடைத்தான். கடிகாரத்துக்குச் சாவி கொடுத்தான்.

தனக்கென உரிய ஸ்டூலில் அமர்ந்து விட்டான்.

தர்மகர்த்தா வந்தார், பண்டாரம் சலாம் வைத்தான். தர்மகர்த்தா,

''என்ன பண்டாரம், இன்னிக்குச் சலாம்!'' என்று கேட்டார்.

''நான் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸ் சேவகன்; கோவில் சிப்பந்தி இல்லீங்க'' என்று சிரித்துக்கொண்டான்.

''ஆமாம், இன்று நந்தவனத்துப் பூவை எடுக்கவில்லையா?'' மாமூல் கேள்வி ஆரம்பித்தது.

''இல்லை.''

''மாலைகட்டித் தேரடி விநாயகருக்குப் போடவில்லையா?'' இதுவும் மாமூல் கேள்விதான்.

''இல்லை.''

''ஏன்?''

''நீங்க கேட்கவேண்டாத கேள்வி!''

தர்மகர்த்தாவின் புருவம் உயர்ந்தது.

''என்ன? நான் தர்மகர்த்தா!''

''இருக்கட்டுமே. நான் பூவெடுத்தேன்; பிள்ளையார் கோவிலை மெழுகினேன். பூப் போடுவது எல்லாம் என் திருப்திக்காகச் செய்த காரியங்கள். சம்பளத்துக்காக நான் செய்ததில்லை.''

''ஓகோ!'' என்று சமாளித்துக் கொண்டார்.

நியாயம் பண்டாரத்தின் பக்கம் இருந்தது. பக்தனாக இருந்த பண்டாரத்தை யார் புரிந்துகொண்டார்கள்? அலுவலகச் சேவகனாக இருந்ததனால்தானே தண்டித்து விட்டார்கள்?

தர்மகர்த்தாவுக்குச் 'சுள்' என்றது. இருபது ஆண்டுகளாகக் கைங்கரியம் செய்து வந்த புனிதப் பணி அவர் நினைவில் எழுந்தது.

''இன்று மட்டுமா?''

''இனிமேல் தினம் தினம் நான் ஆபீஸ் வேலை மட்டும் பார்ப்பேன். கோவில் வேலை செய்ய மாட்டேன். மாமூல் உறவை மாத்திக்கொண்டேன்.''

''ஏன்?''

''இருபது வருசம் இந்தக் கோவில் சாமிக்கு ஊழியம் செய்தேன். சம்பளத்துக்கு மட்டும் வேலை செய்யலை. சுத்த பக்தியாக நடந்தேன். இரண்டு ரூவாப் பேனாவைத் திருடினது நான் என்றீங்க. தீர்ப்பு வேறே சொன்னீங்க. அபராதமும் வாங்கிட்டீங்க. எக்ஸிக்யூட்டிவ் ஆபீசரும் அந்த ரெண்டு ரூபாய்ப் பணத்தை வாங்கி ஜேபியிலே போட்டுக்கொண்டார். என் பக்கம் இந்தக் கோவில் சாமி பேசலே. இருபது வருசம் நான் செய்தது கைங்கரியம் இல்லை, ஊழல் என்று நிரூபணம் செய்துவிட்டார் கடவுள். நான் இந்தக் கோவில் நடையை இனி மிதிக்க மாட்டேன். சம்பளத்துக்கு மட்டும் ஆபீஸ் வேலையைச் செய்யறேன்.''

தர்மகர்த்தாவின் கண் கலங்கிற்று.

''காலையிலே எழுந்து நந்தவனத்திலே பூ எடுக்காவிட்டால், தேரடிப் பிள்ளையாரைக் கும்பிடாவிட்டால் உனக்கு வேறு வேலை ஓடாதே?''

''இந்தக் கோவில் கடவுள் என்னைக் கைவிட்டுவிட்டார். ஆனாலும் நான் கடவுளைக் கைவிடலே! வடக்குத் தெருப் பிள்ளையாரை இன்னியிலிருந்து வழிபட்டு வர்றேன். இன்னிக்கு ராவிலே அங்கே அர்ச்சனை, அபிஷேகம், தீப ஆரத்தி எல்லாம் ஏற்பாடு செய்யச் சொன்னேன். முடிஞ்சா நீங்களும் எக்ஸிக்யூட்டிவ் ஐயாவும் வடக்குத் தெருப்பிள்ளையார் கோவிலுக்குச் சேவிக்க வாங்க. நான் கும்பிட வேண்டியதை மறக்கலே. கோவிலை மாத்திக் கொண்டேன். என்மேல் தவறு ஒண்ணும் இல்லியே?''

பண்டாரம் பேசிய சொற்களில் ஒவ்வொன்றும் கண்டாமணியைவிட வெகு ஆவேசமாகச் செவியைத் தாக்கியது.

செவிடாக இருக்கக் கூடாதா என்று தர்மகர்த்தா வருந்தினார். கண் நிறைய மாலை மாலையாக நீர் வந்தது. ★

விடிந்தால் லதாவுக்குப் பிறந்த நாள். பல சிநேகிதிகளுக்கு அழைப்பு அனுப்பியாகிவிட்டது. ஆனல் பத்மாவுக்கு இப்போது ஒரு பெரிய பிரச்னை!
மழை நாள். கிடைக்கும் விறகு ஒரே ஈரம். விலையும் ஏறியபடி இருக்கிறது!
கவலையோடு இருந்த பத்மாவைக் காண வருகிறள் எதிர்வீட்டு கீதா.
கப்பல் கவிழ்ந்தாவும் சன்னத்தில் கை வைக்க வேண்டாமே, பத்மா! உனக்கு இப்போது என்ன கவலை?
ஒரே கவலைதான் கீதா! சமையல் அடுப்புக்குக் கிடைப்பது பச்சை விறகு தான். அதுவும் ஒரேயடியாக விலையேறியிருக்கிறதே. எப்படி சமாளிக்கப் போகிறேனே!
பூ! இதற்கா கவலைப் படுகிறய்! கையிலே வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறயே. 'லீக்கோ' இருக்கக் கவலை ஏன்?
நானும் 'லீக்கோ'வைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனல் வாங்கிப் பார்த்ததில்லை.
'லீக்கோ' குறைந்த விலையுள்ளது, அதிசிக்கனமானது, புகையற்ற எரிபொருள். எல்லா ரக கரி அடுப்புக்கும் உகந்தது. சமையலும் சீக்கிரமாக முடிந்து விடும். ஏன் நாளை விருந்தை 'லீக்கோ'வை வைத்து நடத்திப் பாரேன்.
கீதா, இந்தா இன்னொரு டம்ளர் பாயசம். உன் யோசனைக்கு ரொம்ப நன்றி. எனக்கும் திருப்தி. எல்லோருக்கும் சந்தோஷம். இனி எப்போதும் 'லீக்கோ'வை வாங்கத் தீர்மானித்து விட்டேன்.
FDS-NLC-735-TM
LECO
லீக்கோ
நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்,
நெய்வேலி-1

தக்ஷ யக்ஞம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று' என்பர். உயர்ந்தோருக்கு வழங்குவதாகிய உலகம் என்பதனை உலக மக்கள் என்ற பொருளில் நாம் பெரிதும் வழங்கி வருகின்றோம். ''மக்கள்தாம் மன்னர்'' என்கின்ற ஜனநாயகப் பொருளில் அச் சொல் இப்பொழுது பயின்று வழங்குகின்றது.

உயர்ந்தோரைக் குறிக்கும் உலகத்தின் அறிவு இச்சை செயல்களும் ஜனநாயக உலகத்தின் அறிவு இச்சை செயல்களும் தம்மிற் பெரிதும் வேறுபாடு உடையவை; எதிரானவை எனினும் இழுக்கு ஆகாது. ஜனநாயக உலகத்தின் அறிவு இச்சை செயல்களின் மூலத்தைத் திறம்பட ஆராய்ந்து சென்றால், எத்தனையோ போர்வைகளைப் போர்த்துக்கொண்டு, அடிப்படையில் அரசு வீற்றிருப்பதொரு பண்டந் தான், 'தக்ஷ யக்ஞம்'. அதனைக் கண்டுபிடிப்பது எளிதன்று. யக்ஞம்-யாகம். தக்ஷ யக்ஞம்-தக்கன் யாகம்.

தக்கன் பிரமதேவரின் புதல்வன்; பிரசாபதி. மூன்று உலகப் பிரசைகளுக்கும் அவன் அதிபதி; பெரிய உத்தியோகத்தன். பிரசாபதியாகிய இந்தத் தக்கன் பிதாவாகிய பிரமதேவரிடம் வேத வேதாங்கங்களை முறைப்படி கற்றுத் தெளிந்தவன். ''சங்காரக் கடவுளுக்குப் படைத்தல் காத்தல்களைச் செய்யும் கடவுளர்களிலும் பார்க்கப் பெருமை பேசுவதேன்? சங்காரத் தொழில் தாமச குணத் தொழிலன்றோ?'' என்று ஒரு முறை பிதாவாகிய பிரமதேவரைத் தக்கன் வினாவினான்.

''சங்காரமாவது படைக்கப்பட்ட தநு கரண புவன போகங்களாகிய உலகங்களை ஒடுக்குவதாம். அச் செயலின் விளைவு ஆன்ம சுகமாம். தொழிலால் தாமத குணத்தோடு கூடிய மறத் தொழில் போன்று தோன்றுவதனால் அது நிந்திக்கற்பாலதன்றாம். நடுவணதாகிய இயமதர்மராஜனின் தொழில் கொடுந் தொழில் போன்று தோன்றுகின்றது. அதனால் அவனை நிந்திக்கின்றோம். ஆனால் அவனுடைய தொழில் அரியதாகிய நீதியின் சிகரமாம்,

''சங்காரமாகிய தொழில் பற்றிச் சொல்லப்படும் தாமச குணம் அத் தொழிலைச் செய்யும் இறைவன் குணமாகாது. இறைவன் நிர்க்குணன். நிர்க்குணன் என்றால் சாத்துவிகம் இராசதம் தாமசம் ஆகிய முக்குணம் இல்லாதவன் என்பது பொருள். இதனால், இறைவன் ஒரு குணமும் இல்லாதான் என்பது கருத்தன்று. இறைவன் எண் குணன்; பகவன். பகம்-ஆறு குணம். எண்குணம் ஆறாகவும் அடக்கிச் சொல்லப்படும்.

''முக்குணம் மாற்றம் அடைபவை. 'காலையிலொன்றாவர்; கடும்பகலில்

ஒன்றாவர்; மாலையிலொன்றாவர் மனிதரெல்லாம்' என்பர். இவ்வாறாய மனிதப் பண்புக்கு அப்பாற் பட்டவன் இறைவன். அவனுடைய குணங்கள் மாற்றம் உறுவதில்லை; என்றும் ஒரே படியாயிருப்பவை. அவன் குணி. குணம்-சிவசத்தி.

''படைத்தல் காத்தல்களைச் செய்பவர்கள் முக்குண வயத்தர்கள். அவர்கள் சாத்துவிக இராசதங்களை இறைவனருளால் மேலிட்டுக்கொண்டு அத் தொழில்களைப் புரிந்தாராயினும், ஏனைக் குணங்களின் வயப்பட்டு அடிக்கடி தடுமாற்றம் உறுபவர்கள். அவர்களால் ஆன்ம சுகமாகிய சங்காரத்தைச் செய்தல் இயலாது. முக்குணம் கடந்த பொருளே அதனைச் செய்ய முடியும். கொலைத் தண்டனை என்கின்ற நீதியை உயர்தர நீதிமன்றமே செய்ய முடியும்.''

இங்ஙனம் சங்கார கருத்தாவின் பெருமையைப் பேசி, ''சங்காரக் கடவுளே முழு முதற் கடவுள்; அக் கடவுளிலே உலகம் ஒடுங்குகின்றது, விரிகின்றது. 'ஆதிபகவன் முதற்றே உலகு', 'அந்தம் ஆதி என்மனார் புலவர்', அவனல திறைவனில்லை அவனை நீ அடைதி'' என்று இங்ஙனம் பிரமதேவர் உபதேசம் செய்வாராயினார்.

தக்கன், உபதேசத்தை ஒப்புக்கொண்டு உலகத்துக்குக் கருத்தாவான முழுமுதற் கடவுளை நினைந்து அருந்தவம் செய்தான். பரமபதி அவனுக்குக் காட்சி அளித்தார்.

''பிறவி, மாற்றும் முத்தியது
இரத்திலன்; தொல்விதி வழியே
ஏற்ற புத்தியுஞ் சேறலின் மயங்கி
ஈது இசைப்பான்''

ஆயினான்.

பிரம விஷ்ணுக்களுக்கும் மேற்பட்ட அதிகாரங்களையும் வளங்களையும் அருளும்படி பரமபதியிடம் அவன் கேட்டுப் பெற்றான்; நிலையாய முத்தியின் பத்தில் அவன் சிந்தனை செல்லவில்லை. விதிவழி அவன் மதி சென்றது. அவனுடைய வேத வேதாந்த விசாரங்கள் உரிய சந்தர்ப்பத்தில் அவனுக்கு உதவவில்லை. விதியென்று சொல்லப்படும் ஊழ் பெருவலி படைத்து, அவன் புத்தியை விழுங்கிவிட்டது.

தக்கன் பிரசாபதி ஆதலாலே, தக்கனின் விதி மாத்திரமன்றிப் பிரசைகளின் விதிகளும் சேர்ந்து தக்கன் மதியை மயக்கம் செய்துவிட்டன என்பது புராண இரகசியம்.

சனத்தலைவன் ஒருவனுடைய புத்தி, சனங்களின் கர்மத்துக்குத் தக்க வகையிலேதான் விருத்தி அடையும். குடும்பத் தலைவனுடைய புத்தி, அக் குடும்பத்தில் உள்ளவர்களின் கர்மங்களைப் பொறுத்ததாகவே இருக்கும். சோதிடன், ஒருவருடைய சாதகத்தைக் கொண்டே அக் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் பலன் சொல்வதிலிருந்து இது நிச்சயிக்கப்படும்.

தக்கன் அதிகாரங்களையும் வளங்களையும் பெற்றதனாலே மேலும் மயக்கமுற்றான். தனக்கு வரங்களை நல்கிய பரம்பொருளையும் மறந்து, மறந்ததனோடமையாமல் நிந்திக்கவும் தொடங்கினான். பரம்பொருளைக் கீழ்ப்படுத்தி நிந்திக்கும் முகமாக ஒரு யாகமும் செய்யத் தொடங்கினான். ததீசி போன்ற மாமுனிவர்கள் யாகத்தைத் தடுத்துச் சிவ பரத்துவம் பேசினர். தக்கன் அவர்களை நிந்தித்து, ''சங்கார கருத்தா தாமச குணத்தன். அவன் வழிபடற்பாலன் அல்லன்'' என்று அவர்களுக்கு உபதேசம் செய்யவும் தலைப்பட்டான். தந்தையாகிய பிரமதேவர் செய்த உபதேசம் கர்த்தபத்துக்குச் செய்த உபதேசமாய்ப் போய்விட்டது.

''அகத்தியன் சனகன் முன்னோர்
அத்திரி வசிட்டன் என்பான்
சகத்துயர் பிருகு மேலாந்
ததீசிவெஞ் சாபத் தீயோன்
பகைத்திடு புலத்தை வென்ற
பராசரன் ....''

என்கின்ற முனிவர்களும், அவர்கள் போன்றவர்களும் அவனுடைய யாகத்தை எட்டியும் பார்க்கவில்லை. எவர்களுடைய வினைகளாலே தக்கனுடைய மதி மயங்கியதோ அவர்களெல்லாம் அவனுடைய யாகத்துக்கு உபகாரிகளாய் வந்து யாகத்தைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். யாக உணவுகளை விலாப் புடைக்க உண்டு களிப்புற்றவர் பலர்.

இவ்வாறாய சமயத்தில் முழுமுதற் கடவுளின் சங்கார கிருத்தியம், வீரபத்திர உருத்திரர் மூலம் வெளிப்பட்டது. யாக சங்காரம் நடந்தது. அதனை வருணிக்க எழுந்ததொரு பிரபந்தம் தக்கயாகப் பரணி.

பிரம புத்திரனான தக்கன் தலையிழந்து யாகத்தில் வெட்டுண்ட ஆட்டின் தலையோடு கூடியவனாய்த் தேவ கதியினின்றும் இழிந்து மிருக கதியை எய்தினான். யாகத்திற் குழுமியிருந்தோர் அனைவரும் சிதைந்து சிதறினர்.

சங்கார கிருத்தியத்தின் பயனாக, விலங்குநிலை எய்திய தக்கனுக்கு அறிவு சிறிது தெளிவடைந்தது. அப்பொழுது அவன், ''என் செய்தேன்? பரம்பொருளை மறந்தேனே!'' என்று ஏங்கி இரங்கினான். அச் சந்தர்ப்பத்தில் தந்தையாகிய பிரமதேவர் தோன்றி மீண்டும் உபதேசம் செய்தார்.

''அரன்றன் பாதம் மறந்து செய அறங்களெல்லாம் வீண் செயல்'' என்ற சிவஞானசித்தியார்ப் பொருள் பசு மரத்தாணி போல அவன் மனசிற் பதிந்தது. ஆயிர வருட காலம் சிவார்ச்சனை செய்து சிவபூசா துரந்தரனாய் உய்தி கூடினான் பிரசாபதியாகிய தக்கன்.

பரமபதியின் பாதங்களை மறந்து, அப் பரம்பொருளின் கருத்தை விசாரியாது நடப்பதே தக்ஷ யக்ஞம்; வீண் செயல். தக்கன் ஆயிரம் வருடம் கழிந்து சிவபூசாபலத்தினால் 'தக்ஷ யக்ஞம்' என்னும் வீண் செயலினின்றும் தப்பி உய்ந்தான்.

எவர்கள் தமது வினைகளினாலே தக்கனை மயக்கமுற வைத்தார்களோ அவர்கள், எவர்கள் வீண்செயலாகிய தக்ஷ யக்ஞத்துக்கு உபகாரிகளாயிருந்தார்களோ அவர்கள், கோடிக்கணக்கான ஆயிரம் வருடங்கள் கழிந்தும் தம் பாவச் செயல்களினின்றும் தப்பவில்லை. நெடுங்காலம் அசுரர்களுக்கு அடிமைகளாய் அசுரர்க்குச் செய்யாத ஏவலெல்லாம் செய்து அலுத்தார்கள். அவர்கள் பட்ட துயரை எடுத்து விளக்குகின்றது கந்த புராணம்.

ஒருவன் சிவபூசாதுரந்தரன் ஆகலாம்; வேதசிவாகமம் வல்லோன் ஆகலாம்; சிவன் கோயில்களை நித்திய நைமித்தியம் தவறாது நடத்துகிறவன் ஆகலாம்; அவன் சிவ பரம்பொருளின் கருத்தை விசாரியாது தன்முனைப்பால் ஒன்று செய்வானாயின், அச் செயல் 'தக்ஷ யக்ஞம்' ஆகிய வீண்செயலேயாம்.

வாகீச முனிவர் திருக்கைலையைப் பெயர்த்த இராவணனுக்கு இரங்கினார். சர்வசீவ தயாபரரான திருக்கைலாசபதியின் கருத்தை விசாரியாது இரங்கினார். அதனாலே, திருநாவுக்கரசராய்ப் பிறவியொன்று எடுக்க வேண்டியவரானார். பரம பதியின் கருத்தை விசாரியாமையால், இரங்கியதும் தக்ஷ யக்ஞம் ஆயிற்று.

தக்ஷ யக்ஞம் இரக்கம் முதலிய போர்வைகளுக்குள் மறைந்து வாழுவதைத் திருநாவுக்கரசு நாயனார் கண்டுபிடித்து ஒரு முறை விலாவிறச் சிரித்திட்டார்.

''கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவா ருள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதி யென்று
வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட் டேனே''

என்பது நாவுக்கரசர் தேவாரம்.

சம்பந்தப் பெருமானிடம் சமணக் கொடுமைகளை முறையீடு செய்தார்கள். உடனே அவர் பரம பிதாவிடம் சென்று,

''அத்த னேதிரு வாலவா யாய்அமண்
சித்த ரைஅழிக் கத்திரு வுள்ளமே''

என்று பரம்பொருளின் கருத்தை விசாரித்தார். அதனாலே, ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி அனைத்தும் அவர் முன்னிலையிற் கைகட்டி வாய் புதைத்து அவர் வழியில் நின்றன.

'நல்லது என்று எண்ணிச் செய்தோம்; இவ்வாறு முடிந்ததே!' என்று கழிவிரக்கமுற்றோர் நமது நாட்டிற் பலர். அவர் செயலனைத்தும் உற்று நோக்குமிடத்துத் தக்ஷ யக்ஞமேயாம்.

''நமது நாட்டுச் சீர்திருத்தங்களென்ன, மகாநாடுகள் கூடிச் செய்யும் ஆரவாரங்களென்ன, அரசியல் தந்திரங்களென்ன, புற்றீசல் போலக் கிளம்பும் புத்தகக் குவியல்களென்ன, நாடோறும் எழுகின்ற நம் நினைவுகளென்ன, செயல்களென்ன, யாவையும் இறைவன் கருத்தை விசாரியாத வகையில் தக்ஷ யக்ஞமேயாம்'' என்றார் ஒரு பெரிய அறிவாளி. அவர் கூற்றுக் கணந்தோறும் சிந்திக்கற்பாலதேயாம்.

''தனக்குவமை யில்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது''

என்பது தக்ஷ யக்ஞ மகா உக்கிர வீர பத்திராஸ்திரம். ✱

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

:.பாஸ்:.போமின்®

:.பாஸ்:.போமின பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக். இதில் வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ :.பாஸ்பேட்டுகள் கலந்துள்ளது. இதுவே குடும்பத்தினர் அனைவரும் வலிவுடனும், சந்தோஷத்துடனும், ஆரோக்கியமாயும் வாழ உதவுவது. :.பாஸ்:.போமின் வீட்டில் வையுங்கள். இதை அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. இழந்த சக்தியை மீண்டும் பெற உதவுகிறது. பசியைத் தூண்டும். வலிவைப் பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ— :.பாஸ்:.போமின்!

SQUIBB ®

® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்காகும். காம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

SARABHAI CHEMICALS

Shilpi SC 281 A Tam

ஓவியர்: ஸிம்ஹா

மன்னர் பிடிக்கும் கை, மணிவளையல் போடும் கை

மாலை யாருக்கோ?

பூர்ணம் விசுவநாதன்

1

[பெரும்பணக்காரர் செல்வநாயகத்தின் ஒரே மகனை ரங்கதுரை மக்கு. பட்டப்படிப்பில் இரண்டு தடவை தடுக்கி விழுந்தவன். ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக இந்தத் தடவை அவன் பாஸாகிவிடவே, செல்வநாயகத்தின் பங்களா அமளிப்படுகிறது. லட்சக்கணக்கான சொத்துக்கு ஒற்றை வாரிசான துரை, இப்போது 'பட்டதாரி' ஆகிவிட்டதனால், இனி அவனைப் பன்மடங்கு ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வரவேண்டும் என்று முடிவாகிறது. துரை, வேலையாள் கந்தனுடன் வெளியே சென்றிருக்கிறான்.]

செல்வநாயகம்: (கர்வத்துடன்) மீனாட்சி, நம்ம சொத்து சொதந்தரத்தைப் பாத்துப் பொருமைப்படற பண்டாரப் பயலுகளெல்லாம், இந்தத் தொரையை மக்கு, மண்டுன்னு சொல்லியே நம்மளை மட்டம் தட்டிக்கிட்டிருந்தாங்கல்லே! அந்த அவமானத்தை நம்ம மகன் ஒரே வீச்சுல தொடைச்செறிஞ்சிட்டான். இனிமே எந்தப் பயலும் நம்ம எதிர்ல நின்னுக்கிட முடியாது. (மீசையை முறுக்கிவிட்டுக் கொள்கிறார்.)

மீனாட்சி: கடக்கறுங்க விடுங்க. நம்ம தொரையோட மூளையும் சாமர்த்தியமும் மத்தவங்களுக்கு என்ன தெரியும்? ஏதோ பாவம், ரெண்டு வாட்டி பரிச்சையிலே தோத்துப் போயிட்டதுனால எளிசா நெனச்சிட்டாங்க எல்லாரும். இப்ப மொகத்தை எங்கே கொண்டு போய் வச்சிக்கிடுவாங்க?

செல்: (வாய்க்குள்ளேயே சிரித்துக் கொண்டு) ஹூம்ம்! .... அப்பிடியிருக்குது ஒலகம்! .... (சட்டென்று) நம்ம குடும்பத்துல எந்தத் தலைமொறையிலயும் இல்லாதபடிக்கி, தொரை ஒரு பட்டதாரியாயிரணும்னு கனவு கண்டேன்; பலிச்சிரிச்சு. என் மனசில இருக்கற இன்னொரு திட்டமும் நெறைவேறிடுச்சின்னா........

மீனா: இன்னொரு திட்டமா?

செல்: நம்ம சொவந்தரம் மக கற்பகத்துக்கும் தொரைக்கும் கல்யாணத்தை முடிச்சிட்டோம்னா, அப்புறம்.......

மீனா: சொவந்தரமா? எந்தச் சொவந்தரத்தைச் சொல்றீங்க?

செல்: (வாய் விட்டுச் சிரித்து) ஏது, கதை கேக்க ஆரம்பிச்சிட்டே?... நம்ம குடும்பத்துல எத்தனை சொவந்தரம் இருக்காங்க? .... என் தங்கச்சி சொவந்தரத்தைத்தான் சொல்றேன்.

மீனா: (வெகுண்டு) என்ன சொன்னீங்க? நம்ம பொன்னான தொரைக்கு இந்த மாதிரி ஒரு பொண்ணுதான் ஒங்களுக்குத் தோணிச்சா?

செல்: ஏன்? கற்பகத்துக்கு என்ன கொறைச்ச? அழகான பொண்ணு, படிச்ச பொண்ணு, அடக்கமான பொண்ணு......

மீனா: ஆமாம், அடக்கமான பொண்ணு! அவளுக்கும், அவ அம்மாளுக்கும் இருக்கற ராங்கிக்கு, நம்ம தொரையைக் கொரங்காட்டமா ஆட்டி வெச்சிரமாட்டாங்களா? அவுங்க ஏற்கெனவே இந்த வீட்டுச் சொத்துலேருந்து சொரண்டிக்கிட்டுப் போனது போதும். இனிமேலும் வேண்டாம்.

செல்: (ரோசத்துடன்) மீனாட்சி, அதென்ன அப்பிடித் தூக்கியெறிஞ்சு பேசறே? நம்ம சொத்து கெடைச்சுத்தான் அவுங்க வீட்டுல பருப்பு வேகணும்னு நெனச்சிட்டயா? என் தங்கை புருசன் வீரபாகு என்ன, சாமான்யப் பட்ட ஆளா?

மீனா: (கண்டிப்பாக) அவுங்க எப்பிடியாப்பட்ட சீமானா இருந்தாலும், அந்த ஒறவு நமக்கு வேண்டாம். இந்த யோசனையை இதோடு மறந்துருங்க.

செல்: (வெகுண்டு) எதுக்காக மறக்கறது?.....மூச்சுக் காட்டக்கூடாது! .... நான் எத்தனை நாளா மனசுல போட்டிருக்கற திட்டம் இது!

மீனா: (ஆத்திரத்துடன்) ஏன், ஒங்களுக்கு மட்டுந்தான் திட்டம் போட முடியுமா? எனக்கு ஒரு திட்டமும் கெடையாதுன்னு நெனைக்க வேண்டாம். எனக்கும் ஒரு திட்டம் இருக்குது.

செல்: (புரியாமல்) என்ன திட்டம்?

மீனா: எனக்கும் ஒரு அண்ணன் இருக்காங்க, அவுங்களுக்கும் அழகான படிச்ச பொண்ணு ஒருத்தி இருக்கிறுங்கறதெல்லாம் ஒங்களுக்கு மறந்து போயிரிச்சா?

செல்: (கோபத்துடன்) என்ன? ஒங்கண்ணன் மாணிக்கம்மக தேவகியை, தொரை மாதிரி ஒரு அரசகுமாரனுக்குக் குடுக்கத் திட்டம் போடறியா? அது இந்த ஜன்மத்துல நடக்காது.

மீனா: நடக்குதா இல்லையா, பாத்துக்கிட்டேயிருங்க.

செல்: இத பாரு மீனச்சி, சவால் விடாதே ..... தொரைக்கிக் கற்பகந்தான்னு நான் என்னைக்கோ முடிவு செஞ்சு, சொவந்தரம் கிட்டவே வாக்கும் குடுத்தாச்சு. இப்ப நீ குறுக்குச்சால் ஓட்டி என் திட்டத்தைக் குட்டிச்சொவராக்கிராதே.

மீனா: தொரை எங்க தேவகிக்கித்தான்னு நான் என்னைக்கோ முடிவு செஞ்சு, எங்கண்ணன்கிட்ட வாக்கும் குடுத்தாச்சு. என் வாக்கு என்ன ஆகறது?

செல்: (பதறி) என்ன? வாக்குக் குடுத்திட்டியா? எப்பிடிக் குடுப்பே?

மீனா: ஏன்? நீங்க குடுக்கலாம்னா நான் குடுக்கக் கூடாதா?

செல்: ஓஹோ!.....இதுல தொரையோட சம்மதம்னு ஒண்ணு இருக்கறதாவே நெனைப்பில்லே போலிருக்கு!

மீனா: (விடாமல்) ஏன்? நீங்கமட்டும் தொரையைக் கேட்டுட்டுத்தான் வாக்குக் குடுத்தீங்களோ?

செல்: (கண்டிப்பாக) அது எப்பிடி வேணும்னாலும் இருக்கட்டும். நான் ஒடனே சொவந்தரத்தை இங்கே வரச் சொல்லி எழுதப் போறேன்; அவ கற்பகத்தோடே வரப் போறா... அப்புறம் ஆரு இஷ்டப்படி நடக்குது பாப்போம்.

மீனா: என்னை மெரட்டறீங்களா?.. நான் எங்கண்ணனுக்குத் தந்தி அடிச்சு வரவழிக்க மாட்டேனா தேவகியோடு?

செல்: (ஆவேசத்துடன்) வரவழி! .... வரவழின்னேன் .... ஆனா ஒண்ணு: நீயும் வரவழி; நானும் வரவழிக்கிறேன்; ரெண்டு பொண்ணுங்களும் வரட்டும்; தொரையாப் பாத்து ஆரை வேணும்னாலும் கட்டிக்கிட்டும்.

மீனா: (சற்று யோசித்து) உம்! ..... சரி ...... எனக்குச் சம்மதந்தான் .... அவனை நீங்களும் கட்டாயப்படுத்தக் கூடாது, நானும் கட்டாயப்படுத்தக் கூடாது; பொண்ணுங்க சாமர்த்தியப்படி நடக்கட்டும். அப்பிடித்தானே சொல்றீங்க?

செல்: அதேதான்... ஆனா, கற்பகத்தைத்தான் அவன்.....

மீனா: (வெடுக்கென்று) கூடவே 'கற்பகத்தைத்தான்'னு ஏன் இழுக்கறீங்க? எனக்குப் பேசத் தெரியாதா?

செல்: (வேறு வழியில்லாமல்) சரி சரி.....நான் இப்பவே ஒரு தந்தியடிச்சு.....

மீனா: நானும் இப்பவே ஒரு தந்தியடிச்சு........

2

[மூன்று நாட்கள் கழித்து. செல்வநாயகத்தின் தங்கை சௌந்தரமும், அவள் புருஷன் வீரபாகுவும், மகள் கற்பகமும், மகன் ராஜாவும் விமானத்தில் வந்து சேர்ந்து, பங்களாவின் மாடியில் இடப் பக்கத்து அறைகளையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள். அதேபோல் மீனாட்சியின் அண்ணன் மாணிக்கமும், அவர் மனைவி காமாட்சியும், மகள் தேவகியும், மகன் கண்ணனும் தந்தி கண்டவுடன் விமானத்தில் வந்து, மாடியில் வலப் பக்கத்து அறைகளை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள். செல்வநாயகம் அடிக்கடி இடப் பக்கத்து அறைகளுக்கும், மீனாட்சி அடிக்கடி வலப் பக்கத்து அறைகளுக்கும் வந்து போய்க்கொண்டிருப்பதிலிருந்து, போர்த் திட்டங்கள் வலுவாக உருவாகிக் கொண்டிருப்பது தெரிகிறது.

ஒரு தடவை செல்வநாயகம் தம் சகோதரியின் குடும்பத்துடன் ஆலோசனை செய்துவிட்டு மாடியிலிருந்து இறங்கிக்கொண்டிருக்கும்போது, அடுத்த வீட்டு முதலியாரும், அவர் மனைவி பார்வதியும் வருகிறார்கள். பார்வதி, மீனாட்சியைத் தேடிக்கொண்டு உள்ளே போக, முதலியாரைச் செல்வநாயகம் ஆவலுடன் வரவேற்றுத் தம் அறைக்கு அழைத்துச் செல்கிறார்.]

முதலியார்: (உட்காரும்போதே) நீங்க சொன்னதைப் பத்தி நான் யோசிச்சுப் பார்த்தேன். ஒரு யோசனை தோணுது......

செல்: (ஆவல் மேலிட) என்ன? என்ன?

முதலி: பெரியவங்க மட்டும் மொயற்சி பண்ணி நடக்கக் கூடிய காரியம் இல்லே இது.

செல்: அதான் தெரியுதே! ''பட்டதாரியாயிட்டயே, கல்யாணம் கட்டிக்கிட வேண்டாமா?'' ன்னு தொரைகிட்டச் சும்மா மேலெழுந்தவாரியாப் பேச்சு ஆரம்பிச்சேன் நேத்து. சடார்னு சீறி விழுந்துட்டான். ''கல்யாணமும் வேண்டாம், கடலைப் புண்ணாக்கும் வேண்டாம்''னு, என் வியாபாரத்தைச் சுட்டிக் காட்டிப் பேசி என்னைத் தூக்கி யெறிஞ்சிட்டான். ''இது ஏதுரா இது? பையனோட சீதோஷ்ண நெலையே ஒரு மாதிரி ஒதைக்குதே''ன்னு கண்டுக்கிட்டு நான் ஒதுங்கிட்டேன்.

முதலி: நல்ல வேளை! நீங்க நேரடியா விஷயத்தைச் சொல்லாம விட்டீங்க. சொல்லி அவன் அதையும் தூக்கியெறிஞ்சிருந்தானா என்ன ஆகறது? இதுலெல்லாம் எளந்தலைமொறையே மோதட்டும்னு விடறதுதான் சரி.

செல்: (புருவத்தை உயர்த்தி) அப்பிடின்னா?

முதலி: அதுதான் என் யோசனை. (நெருங்கி வந்து) நீங்க ஒங்க கற்பகத்தை நம்ம தொரை எதிர்ல அடிக்கடி நடமாடவிட்டுப் பேச்சுக் குடுக்கச் சொல்லுங்க.

செல்: சேசே, அதெப்பிடி?....

முதலி: அவுங்க ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கிட ஒரு சந்தர்ப்பம் குடுக்கறதுதானே நம்ம நோக்கம்? வேறென்ன விதமா நீங்க இதுக்கு ஏற்பாடு செய்வீங்க?

செல்: நீங்க சொல்றது சரி. இருந்தாலும் கற்பகம் கிட்ட நம்ம நோக்கத்தைச் சொல்லி, இப்பிடி ஏற்பாடு பண்றதுங்கறது .... சே! நல்லாருக்காது.

முதலி: ஐயையோ! ரொம்ப மிஸ்டேக் பண்றீங்க நீங்க. கற்பகம்கிட்டவோ, துரைகிட்டவோ நம்ம நோக்கத்தைச் சொல்லவே கூடாது. சாதாரணமா ஒருத்தரோடொருத்தர் பேசிக்கிட அவுங்களுக்கு உரிமையுண்டுல்லே? அதை அவுங்களுக்குக் குடுக்கணும். அது போதும் ..... ஏதோ தற்செயலா அவுங்க சந்திக்கறது மாதிரி அவுங்களுக்குத் தோணணும்; ஆனா, சந்திப்பு நம்ம திட்டத்தில நடக்கும். சந்தர்ப்பம் கெடைச்ச போதெல்லாம் கற்பகத்தை ஏதாவது ஒரு சாக்குல தொரை இருக்கற பக்கம் அனுப்பணும். இதுலெல்லாம் நல்ல சாமர்த்தியத்தோட திட்டம் போட்டு வேலை செய்யணும்.

செல்: உம்! ..... நீங்க சொல்றது சரின்னுதான் எனக்குப் படுது. நான் இதை ஒடனே சொவந்தரம்கிட்டச் சொல்லி.....

முதலி: ரொம்ப ரகசியமா இதை நீங்க நெறைவேத்தணுமே ஒழிய, அம்பலப்படுத்திரக் கூடாது. ஜாக்கிரதை!

செல்: அது தெரியாதா எனக்கு? என் கௌரவமே இதுல அடங்கியிருக்குதே!

[முதலியாரை வழியனுப்பிவிட்டு மாடிப் பக்கம் பாய்கிறார். பார்வதி சமையலறையில் மீனாட்சியிடம் தன் யோசனையை அந்தரங்கமாகச் சொல்கிறாள்.]

மீனா: (வியப்புடன்) அப்பிடியா சொல்றே பார்வதி?

பார்வதி: தேவகி நல்லாப் படிச்ச பொண்ணு. தொரைகிட்டப் பேசறதுல என்ன தப்பிதம்னு அவளே கேக்கக்கூடியவ. தொரை அவளை அடிக்கடி பாக்கணும், பேசணும்; அப்பத்தானே அவளைத் தெரிஞ்சுக்கிட முடியும் அவனுக்கு? ஆனா நம்ம நோக்கம் என்னண்றது மட்டும் நமக்குள்ளவே இருக்கட்டும்.

மீனா: நீ சொல்றது சரின்னுதான் எனக்கும் படுது. நான் இதை ஒடனே அண்ணன்கிட்டச் சொல்லி.....

பார்: ஒன் கௌரவம் பூராவும் இதுல அடங்கியிருக்குதுங்கறதை மறந்துராதே.

மீனா: பின்னே? சும்மாத்தானா?

[பார்வதியை அனுப்பிவிட்டு மாடிப் பக்கம் விரைகிறாள்.]

3

[பத்து நாட்கள் சென்று. இரவு வேளை முதலியார் வீடு.]

முதலி: இதென்ன, படு எக்கச்சக்கமான 'பொசிசன்'ல வந்து நிக்குதே வெவகாரம்!

பார்: எதைச் சொல்றீங்க?

முதலி: அடுத்த வீட்டுத் திருமணப் போராட்டத்தெத்தான் சொல்றேன். கற்பகத்தை ஜாடையாத் தொரைகிட்ட பேசிக்கிசிப் பழக விடுங்கன்னு செல்வநாயகம்கிட்டச் சொல்லத்தானே அன்னைக்கிப் போனோம்? இப்ப விசயம் எப்படியிருக்குது தெரியுமில்லே?

பார்: என்ன?

முதலி: நம்ம கற்பகம் தொரை கூடப் பேசப்போகும் போதெல்லாம், அந்த இன்னொரு பொண்ணு இருக்குதில்லே — தேவகி — அதுவும் வந்து தத்துப் பித்துன்னு பேச்சுக் குடுக்குதாம்.

பார்: அப்பிடியா? நான் வேற மாதிரியில்லே கேள்விப்பட்டேன்? அந்தப் பொண்ணு தேவகி, தொரை கூடத் தனியா ஒரு வார்த்தைகூடப் பேசவொட்டாதபடிக்கி இந்தக் கற்பகம் வம்பு குடுக்கறாளாமே!

முதலி: யாரு சொன்னது ஒனக்கு?

பார்: யாரும் சொல்லலே; பராபரியாக் காதுல விழறதுதான்.

முதலி: ஆரோ வெட்ட வெளியில நின்னு சொல்லிட்டுப் போயிட்டானுக்கும், அது காத்துலயே மொதந்துக்கிட்டு வந்து ஒங்க காதுல வந்து தாக்கிருச்சாக்கும்! யாராவது சொல்லாம ஒனக்கு இது எப்பிடித் தெரியும்?

பார்: (வெகுண்டு) ஏன், ஒங்களுக்குத் தொரையோட அப்பா சொல்லலாம்னா எனக்கு மீனாச்சி சொல்லக் கூடாதா?

முதலி: (வியப்புடன்) ஓ! அதுதான், அவுங்க ஒன்னை வந்து அடிக்கடி பாக்கறதும், நீ அவுங்களைத் தேடி அடிக்கடி ஓடறதும் நடந்துக்கிட்டிருக்குதா?

பார்: அதுல என்ன குத்தம்?

முதலி: என்ன குத்தமா? ஏதேது, நாளைக்கி நீ அவுங்க பக்கமே கச்சி சேந்துக்கிட்டு, அதுவும் குத்தமான்னு கேட்டுருவே போலிருக்கே!

பார்: (அழுத்தமாக) ஏன், அதையுந்தான் கேக்கறேன். நாளைக்கி என்ன, பத்து நாளுக்கு முன்னமே நான் அந்த மாதிரிக் கச்சி சேந்திருந்தாக்கூட அது குத்தமான்னு கேக்கறேன்.

முதலி: (கலவரத்துடன்) நீ என்ன சொல்றே, பார்வதி?

பார்: (நிதானமாக) இல்லே, நீங்க மீனாச்சி புருசரோட கச்சியில சேரலாம்னா, நான் மீனாச்சி கச்சியில சேரக் கூடாதா? நிச்சயம் சேருவேன்.

முதலி: (திகைத்து) சேரப் போறியா? இல்லே, ஏற்கெனவே சேந்துட்டியா?

பார்: (கலங்காமல்) சேந்துட்டேன்.

முதலி: அடப் பாவி!

பார்: பாவி எப்பிடி? தேவகியும் பொண்ணுதான், கற்பகமும் பொண்ணுதான். மீனாச்சி புருசரு, கற்பகத்தைத்தான் தொரை கட்டிக்கிடணும்னு எப்பிடிச் சொல்றாரு? பொருத்தம் பார்த்தாரா, வச்சாரா? இல்லே, தொரை பிடிவாதம் பிடிக்கறாரு, கற்பகத்தைத்தான் கட்டிக்கிடுவேன்னு? கெடையாதே! அப்போ மீனாச்சி தேவகியைப்பத்திச் சொன்னா ஏன் கோவம் வரணும்? இதுல நான் மீனாச்சி பக்கந்தான்; நீங்க என்னை என்ன வேணும்னாலும் திட்டுங்க; பரவாயில்லே.

முதலி: அப்பிடின்னா நீ அவுங்க பக்கந்தான் வேலை செய்வியா?

பார்: ஆமாம். எனக்கும் சொந்தமா ஒரு கொள்கை இருக்கணுமில்லே?

முதலி: அட கடவுளே! அடுத்த வீடு மாதிரியே இந்த வீட்டுலேயும் ரெண்டு கச்சியா?

[வாசலில் செல்வநாயகம் படியேறி வருவதைப் பார்த்துவிட்டு, பார்வதி பரபரப்புடன் உள்ளே போகிறாள். முதலியார் செல்வநாயகத்தை எதிர்கொண்டழைக்கிறார். செல்வநாயகம் கவலை தோய்ந்த முகத்துடன் உட்காருகிறார்.]

செல்வ: பிரச்சினை வரவர முத்திக்கிட்டுப் போகுது. தொரைக்கிக் கற்பகம்கிட்ட நாட்டம் ஏற்பட்டுராதபடி தடுக்க என்னல்லாம் நடக்கணுமோ, நடந்துக்கிட்டிருக்கு.

முதலி: தேவகி குறுக்கே வந்து வந்து பேச்சுக் குடுத்துக் கெடுக்கற கண்றாவியைத்தானே சொல்றீங்க?

செல்: ஆமாம். கற்பகம் போய்ப் பேச ஆரம்பிச்சா, தேவகியும் வேணும்னே போய் மனம் போனபடி குறுக்கே பேசித் தன் சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பிச்சிர்ரா. எனக்கு வர்ர ஆத்தரத்துல போலீசைக் கூப்பிடலாமான்னு தோணுது.

முதலி: இப்போ போற போக்குல போலீஸ் போதாது போலிருக்கே! நீங்க ராணுவத்தையே கூப்பிட்டுச் சமாளிக்கச் சொல்றதுதான் சரியாயிருக்கும். எனக்கே ஒரு மாதிரி தலையைச் சுத்திக்கிட்டு வருதே, ஒங்களுக்கு என்னென்ன தோணுங்கதை எனக்கு ஊகிக்க முடியாதா? அது போகுது; இப்போ தொரை மனசு எப்பிடி இருக்குது?

செல்: அவனே ரொம்பக் கொழம்பிக்கிட்டிருக்கான்னு தோணுது. இந்தப் பொண்ணுக அடிக்கடி அவன் எதிர்ல வர்ரதுனாலயோ என்னவோ, அவன் இப்போ தலைமயிரை அடிக்கடி சீவி விட்டுக்கிட்டு, மொகத்துல பவுடர் கிவுடர் போட்டுக்கிட்டுக் கொஞ்சம் ஸ்டைலாத்தான் இருக்கறான். ரெண்டு பொண்ணுகள்ளே யாருக்காக அவன் இப்பிடிச் செய்துக்கிடறான்னு தெரியலே.

முதலி: ஸார் ஸார், இது ரொம்ப அருமையான கட்டம். இப்ப அவனுக்கு ஏற்படற அபிப்பிராயந்தான் வாழ்க்கை பூரா நிக்கப் போகுது. இப்பத்தான் கற்பகம் சரியான சாமர்த்தியத்தோடு நடந்துக்கிடணும்.

செல்: (சலிப்புடன்) சாமர்த்தியமாவது ஒண்ணாவது! என்னென்னமோ காலேஜ் வம்பெல்லாம் அவன் கிட்டப் போய்ப் பேசறா. ஒன் தனிச் செறப்பு என்ன? அதுல்லே முக்கியம்? அது அவனுக்குத் தெரியும்படி நடந்துக்கிட வேணும்? இதுல ரெண்டு மூணு நாளு கற்பகத்தோட அண்ணனும், அந்தத் தேவகியோட அண்ணனும் வேற, அந்தச் சமயம்னு பாத்துத் தொரைகூடப் பேச்சுக் குடுக்க ஒக்காந்துட்டாங்க. ஒரே சந்தை எரைச்சலாப் போச்சு. அதுக்காகவே இப்பல்லாம், அந்த ரெண்டு பயகளும் ஊரைச் சுத்தப் போயிருக்கிற சமயமாப் பாத்துத்தான் நாங்க கற்பகத்தை அனுப்பறது.

முதலி: ஆனா அப்பவுந்தான் அந்தத் தேவகியும் வந்துருதுங்கறீங்களே!

செல்: ஆமாம்ய்யா, எனக்கு ரொம்ப ஆத்திரமா வருது. ஆனா, தொரைப்பய மனசும் புடிபடலே. நாங்க மறைவில இருந்து பாக்கறது; தொரை ரெண்டு பொண்ணுகளையும் மாறி மாறிப் பாத்துக்கிட்டு வெத்து முழி முழிக்கிறானே ஒழிய, அதிகமாப் பேசறதில்லே. அதுவும், கொஞ்ச நேரம் அப்பிடி ஒக்காந்திருந்துட்டு, சடார்னு எழுந்திரிச்சு எங்கயாவது போயிர்ரான்.

முதலி: (குறுக்கிட்டு) மிஸ்டர் செல்வநாயகம், ஒரு அருமையான யோசனை. தொரை அப்பிடி அடிக்கடி வெளியே போயிர்ரானில்லே? அவன் வெளியே போகும்போது கற்பகத்தை ரகசியமா அனுப்பி வையுங்க. பார்க்கு, நந்தவனம்னு சந்திச்சா, காதல் வளரும்னு சொல்றாங்களே! இப்படியும் செய்து பார்ப்போமே! வளரட்டுமே!

செல்: அப்பிடியா சொல்றீங்க? . . (யோசித்து) உம்! இது நல்ல யோசனைதான். ஆனா, கற்பகத்தை என்ன சொல்லி வெளியே அனுப்பறது? நம்ம எண்ணத்தையே அவகிட்ட சொல்லிட்டா என்ன?

முதலி: (யோசித்து) உம்! ஓயெஸ், அப்பிடியே செய்துருங்க. இனிமேலும் மறைச்சு மறைச்சுப் பேசறதுலே பிரயோசனமில்லே.

[செல்வநாயகம் தம் வீட்டு மாடிக்கு ஓடுகிறார். முதலியார் திருப்தியுடன் ஒரு பெருமூச்சு விடுகிறார்.]

இவர்கள் பேச்சு முழுவதையும் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி, சற்று நேரத்துக்கெல்லாம், சொல்லிவைத்தாற்போல் மீனாட்சியைத் தேடிக் கொண்டு புறப்படுகிறாள்.]

4

[மேலும் பத்து நாட்கள் சென்றன. முதலியார் வீட்டில் மீனாட்சியும் பார்வதியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருவருடைய முகங்களும் ஒரேயடியாக மலர்ந்திருக்கின்றன. பேச்சில்தான் எத்தனை உற்சாகம்!]

மீனா: எல்லாம் ஒலையப் பழுத்துக் கையில வந்து விழுந்துர்ர நெலைமையில இருந்துக்கிட்டிருக்கு. யாரும் கெடுத்துராம இருக்கணும், கடசி நிமிஷத்துல.

பார்: இனிமே யாரால கெடுக்க முடியும்? ஒரு வாரமாத் தேவகி ஒவ்வொரு நாளும் நல்ல சேதி கொண்டு வர்ரான்னு சொல்றே. தொரை அநேகமா சம்மதிச்சிட்டாருங்கற நெலைமை வந்தாச்சு. இனி என்ன?

மீனா: நேத்துத் தேவகி ஒரேயடியாக் குதிச்சுக்கிட்டு ஓடிவந்து சொன்னப்புறந்தான் எனக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டுச்சு.

பார்: என்ன சொன்னா?

மீனா: ''அத்தை, என் இஷ்டம் அநேகமா நெறைவேறிட்ட மாதிரித்தான். அவுங்க ஒங்ககிட்டயும் மாமாகிட்டயும் நேரடியாக் கேக்கச் சம்மதிச்சிட்டாங்க'' ன்னு அவ என்னைக் கட்டியணைச்சுக்கிட்டுச் சொன்ன காச்சி உண்டே, ஆஹா, எவ்வளவு அற்புதமா இருந்திச்சு!

பார்: ஐயோ பாவம்! ஒரு பொண்ணுக்குக் கல்யாண விசயம் தன்னோட இஸ்டப்படிக்கித் தெகைஞ்சிட்டா, வேறென்ன வேணும் வாழ்க்கையில? தேவகி அதிர்ஸ்டக்காரிதான். மீனாச்சி, நீகூடத் தொரைகிட்ட நீயா ஒண்ணும் கேட்டுராதே.

மீனா: (கர்வத்துடன்) நானா கேப்பேன்? இனிமே அவன் எங்கிட்ட வந்து கெஞ்சிக் கேக்கற நாளையில்லே எதிர்பாத்துக்கிட்டிருப்பேன்? அப்போ அவங்கப்பா மொகம் எப்பிடிப் போகும்ங்கறதையும் பாக்காம விடப் போறேனா?

பார்: ஆமாம், அவுங்க கச்சி இப்ப எப்பிடி இருந்துக்கிட்டிருக்கு?

மீனா: அவுங்கல்லாம் ரொம்பச் சந்தோசமா இருக்கற மாதிரியே நடிச்சுக்கிட்டிருக்காங்க. தொரை வெளியே போகும்போதெல்லாம் நாங்க தேவகியைப் பின்னால அனுப்பறமாதிரி அவுங்களும் கற்பகத்தை அனுப்பி வர்ராங்க. கற்பகம் தோத்துப் போய்த் திரும்பி வர்ரதை மறைக்கறதுக்காக எல்லாரும் மொகத்தை எப்பவும் சிரிச்ச வாக்குலயே வச்சுக்கிட்டுத் திரியறாங்க. அதென்னமோ பாக்கச் சகிக்கலே.

பார்: அவுங்க கெடக்கறாங்க. நீ ஜயிச்சிட்டயே, அதுதான் முக்கியம்.

மீனா: நான் ஜயிச்சதுக்கு நீதான் காரணம்.

[பார்வதியைத் தழுவிக்கொள்கிறாள். அப்போது முதலியார் வீட்டுக்குள் பிரவேசிப்பதைப் பார்த்துவிட்டு, அவருக்குத் தெரியாதிருக்கும் பொருட்டு, மீனாட்சி, பின்கதவு வழியாகவே நழுவிவிடுகிறாள். முதலியார் மகிழ்ச்சிப் பெருக்குடன் வருகிறார்.]



பார்: (வேண்டுமென்றே) வாங்க. நீங்க பாவம்! என்ன காரணத்துக்கோ சிரிச்சுக்கிட்டு வர்ரீங்க. இப்போ நான் என் சந்தோசச் சேதியைச் சொல்லி ஒங்க சந்தோசத்தைக் கெடுக்கறது தப்பிதந்தான். இருந்தாலும் எனக்கிருக்கற சந்தோசத்துல சொல்லாம இருக்க முடியாது.

முதலி: (திடீரென்று முகத்தைக் கடுமையாய் வைத்துக்கொண்டு) நீ என்ன சொல்றே? கொஞ்சம் நேரடியாத்தான் சொல்லேன்!

பார்: ரொம்பச் சீக்கிரமாவே எங்க தேவகிக்கும் தொரைக்கும் கல்யாணம் நடக்கப் போகுது. நீங்கல்லாம் வந்திருந்து நடத்தி வெக்யணும்.

முதலி: ஆ! (திகைப்புக் கூச்ச லிட்டு) எவன் சொன்னது?

பார்: ஆரு சொன்னா என்ன? சேதியைத் தெரிவிச்சிட்டேன். நீங்க வேணும்னா மீனாச்சி புருசர் காதுலயும் இதைப் போட்டு வையுங்க.

முதலி: (அலட்சியமாக) அவரை இப்பத்தான் பார்த்துப் பேசிட்டு வர்ரேன். எங்க கற்பகத்துக்கும் தொரைக்கும் ரொம்பச் சீக்கிரமே திருமணம் நடக்கப் போகுதுங்கற நல்ல சேதியை அவுருதான் எனக்குச் சொன்னாரு. இப்ப நீ கொஞ்சம் அழு; நான் சிரிக்கறேன்.

பார்: (விடாமல்) தேவகியைக் கட்டிக்கிடத் தொரை சீக்கிரமே மீனாச்சி கிட்டவும் ஒங்க நண்பர் கிட்டவும் நேரடியாச் சம்மதம் கேக்கப்போறான். இந்த நல்ல சமாசாரத்தை, தேவகியே வந்து சொன்னதாப் பார்வதி இப்பத்தான் எங்கிட்ட சொல்லிட்டுப் போறா. நீங்க என்னடான்னா, கற்பகத்தைப்பத்தி இதே மாதிரி கதை அளக்கறீங்க.

முதலி: அதெல்லாம் எனக்குத் தெரியாது. தொரை, இதே மாதிரி, கற்பகத்தைக் கட்டிக்கிடச் சம்மதம் தேக்கப் போறான், அதைக் கற்பகமே வந்து சொல்லி, செல்வநாயகம் படு உற்சாகத்தோடு எங்கிட்ட இப்பத் தான் தெரிவிச்சாரு.

பார்: (கவலையுடன்) நீங்க சொல்றதெப் பாத்தா ஒரே கொழப்பமா இருக்குதே! நம்ம ரெண்டு பேர் காதுலயும் பட்ட சேதிகள்ள எது சரியானது?

முதலி: அதான் புரியலே. (கவலையுடன் தொய்ந்து போய் உட்காருகிறார்.) இதுல எது உண்மைங்கறதெக் கண்டுபிடிக்காம விடக்கூடாது. பார்ப்போம்.

5

[மறுநாள் பிற்பகல் முதலியார் வெளியே எங்கேயோ சுற்றி விட்டுப் பரபரப்புடன் தம் வீட்டுக்குள் நுழைந்து பார்வதியிடம் ஏதோ சொல்கிறார். உடனே பார்வதியின் வாய் திகைப்பால் திறந்து கொள்கிறது. அவளை அழைத்துக் கொண்டு முதலியார் அடுத்த வீட்டுக்கு ஓடுகிறார்.

அங்கே பார்வதி மீனாட்சியின் முகாமிலும், முதலியார் செல்வநாயகத்தின் முகாமிலும் செய்தியைப் பரப்பவே, எல்லாரும் திகைப்பால் திறந்த வதனங்களோடு படிகளில் பாய்ந்திறங்கிக் கீழே ஓடி வருகிறார்கள். வேலையாள் கந்தனை வீட்டில் வைத்துவிட்டு, செல்வநாயகம் பெரிய காரை ஷெட்டிலிருந்து ஓட்டி வந்து, அதில் முதலியார், பார்வதி, மீனாட்சி, வீரபாகு, சௌந்தரம், மாணிக்கம், காமாட்சி ஆகிய ஏழு பேரையும் ஏற்றிக்கொண்டு வாயுவேகத்தில் மெயின் கேட் வழியாக வெளியே ஓட்டிச் செல்

கிறார். நல்ல வேளை, துரையும் தேவகியும் கற்பகமும் வீட்டில் இல்லை; ராஜாவும் கண்ணனுங் கூட வழக்கம்போல் ஊர் சுற்றப் போயிருக்கிறார்கள்.

கார் ஊருக்கு வெளியேயுள்ள அணைக்கட்டை நோக்கி விரைகிறது. காரில் செல்லும் எல்லாருடைய வாய்களும் திகைப்பில் திறந்திருப்பதனால், இந்தக் காட்சி 'டயலாக்' ஏதும் இல்லாமலே முடிந்து போகிறது.]

6

[ஊருக்கு வெளியே உள்ள அணைக்கட்டு ஸ்தலம். அடுத்துள்ள மலர் மயமான பூங்காவில் ஓர் ஒதுக்குப்புறமான இடத்துக்குக் கார் வந்து நிற்கிறது. முதலியாரின் யோசனைக்கிணங்க, செல்வநாயகம் காரை ஒரு மறைவிடத்தில் நிறுத்துகிறார். எல்லாரும் இறங்குகிறார்கள். முதலியார் அவர்களை ஒரு மேட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லுகிறார். அங்கே ஒரே புதராக இருப்பதனால், பிறர் கவனத்துக்கு உட்படாமல் எல்லாரும் அங்கே உட்கார்ந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் புதரின் இடுக்குவழியாக வெளிக் காட்சிகள் தெரிகின்றன.]

முதலி: *(குரலையடக்கி)* நான் பாத்த காட்சியை நீங்களும் பாக்கணும்னு மூச்சுக் காட்டாம கொஞ்ச நேரம் காத்திருங்க.

[எல்லாரும் இதயப் படபடப்புடன் காத்திருக்கிறார்கள். ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷம் ஆகின்றன. திடீரென்று பூங்காவின் ஒரு மூலையிலிருந்து கற்பகம் மான்குட்டி போலத் துள்ளிக்கொண்டு ஓடி வருகிறாள். புதருக்கெதிரே வந்த கற்பகம், கலகலவென்ற சிரிப்புடன் நின்று, ஒயிலாகத் திரும்பிப் பார்க்கிறாள். மறுநிமிஷம் வேங்கைப் புலி போலப் பாய்ந்துகொண்டு கண்ணன்-ஆம், தேவகியின் அண்ணன் கண்ணன்தான்-அங்கே வந்து அவளைப் பிடித்து, ''அகப்பட்டுக்கிட்டாயா போக்கிரி?'' என்று அவள் காதில் சொல்லிவிட்டுச் சிரிக்கிறான். அவளும் சிரிக்கிறாள். யாரும் எதிர்பாராத சமயத்தில் கற்பகத்தின் தந்தை வீரபாகுவும், கண்ணனின் தந்தை மாணிக்கமும் புதரிலிருந்து பாய்ந்து வெளிப்பட்டு, காதலர் இருவரையும் கையும் களவுமாகக் கைது செய்கிறார்கள். காதலர்களையும் புதருக்கு அழைத்து வருமாறு முதலியார் கூறவே, பெரியோர் இருவரும் அவ்வாறே செய்கிறார்கள்.]

செல்வ: *(ஆவேசத்துடன், அதே சமயம் தணிந்த குரலில்]* ஏ கற்பகம், நீ ஒவ்வொரு நாளும் வெளியே பொறப்பட்டு வந்தது இதுக்குத்தானா?

சௌந்: தொரை வந்து சம்மதம் கேக்கத் துடிச்சிக்கிட்டிருக்கறதா எங்ககிட்ட சொன்னது பொய்தானே?

கற்பகம்: *(துணிச்சலுடன்)* நான் 'தொரை'ன்னு சொன்னேனா? 'அவுங்க வந்து கேக்கப் போறாங்க'ன்னுதானே சொன்னேன்? 'அவுங்க'ன்னு நான் இவுங்களைத்தான் சொன்னேன்.

[கண்ணனைக் காட்டுகிறாள். எல்லாரும் திகைத்துப் போய் அவர்களையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அப்போது திடீரென்று வெளியே மணிச்சத்தம் போன்ற சிரிப்பொலி கேட்கவே எல்லாரும், காதலர்களையும் அழுத்திக்கொண்டு புதருக்குப் பின்னே உட்கார்ந்து கொள்கிறார்கள். மறு நிமிஷம் தேவகி ஒரே களியாட்டமாக ஆடிக்கொண்டு அங்கே ஓடி வருகிறாள். அவளுக்குப் பின்னால் விஷமச் சிரிப்புடன் பாய்ந்து வரும் ராஜா, புதருக்கெதிரே அவளைப் பிடித்துவிடுகிறான்.

கண்ணனும் கற்பகமும் திடுக்கிடுகிறார்கள், ''இவுங்க இங்கே எப்பிடி?'' என்று சொல்லிக்கொண்டு. ஆனால் மற்றவர்களுக்கு இதற்குள் இதெல்லாம் பழகிப் போன காட்சியாகிவிட்டதனால், இப்போது மாணிக்கம் தேவகியின் தந்தையாகவும், வீரபாகு ராஜாவின் தந்தையாகவும் புதரிலிருந்து வெளிப்பட்டுக் காதலர்களைக் கையும் களவுமாய்க் கைது செய்து புதருக்கு அழைத்து வருகிறார்கள். எல்லார் கண்களிலும் தீப் பொறி பறக்கிறது.]

தேவ: *(மீனாட்சியிடம் வந்து நாக்குழற)* அத்தை, நான் சொன்னது இவுங்களைத்தான்.

மீனா: அடி பாவி!

செல்வ: நீங்க நாலு பேரும் இந்த லச்சணத்துல ஜோடி சேர்ரதாயிருந்தா இந்த ஊருக்கு வராமலே ஜோடி சேந்திருக்கலாமே!

தேவ: அப்பிடின்னா, அண்ணனும் கற்பகமுங்கூட எங்களைப்போல....

மீனா: பின்னே? அவுங்களைப் பாத்தா வேறே எப்பிடித் தெரியுது? ஹூம்! நீங்கல்லாம் இவ்வளவு ஒதவாக்கரைத் தலைமொறைன்னு தெரியாமப் போச்சு.

மாணிக்கம், வீரபாகு, காமாட்சி, சௌந்தரம்: *(நால்வரும் பெருமூச்சுடன்)* ஹூம், அவுங்கவுங்களுக்குக் குடுத்து வச்சதுதான் கெடைக்கும்!

முதலி: *(வாய் விட்டுச் சிரித்து)* நேத்து எனக்கும் பார்வதிக்கும், மொரண்ணா சேதிக கெடைச்சதுனாலதான், நான் உண்மையை அறியறதுக்காக இந்தப் பொண்ணுக பின்னாலயே வந்தேன். வந்தா இங்கே, எளவரசங்க ரெண்டு பேரும் ஒவ்வொரு மூலையில காத்திருக்காங்க; இந்தப் பொண்ணுக ஒருத்தருக்கொருத்தர் தெரியாமலே அவுங்கவுங்க எளவரசனைச் சந்திச்சுக் கொக்கரிக்க ஆரம்பிக்கறாங்க. இந்தக் கண்றாவியைப் பாத்துட்டுத்தான் அப்பிடிக் கொடல் தெறிக்க ஓடிவந்து ஒங்களை அழைச்சு வந்தேன்.

மீனா: *(குரல் கம்ம)* ஐயோ! தொரையை நெனச்சாத்தான்....

[வெளியே யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டு எல்லாரும் புதருக்குள் லபக்கென்று அமிழ்கிறார்கள். மறு விநாடி, நம் கதாநாயகன் துரை அங்கே தோன்றுகிறான். அவன் முகத்தில்தான் என்ன ஆனந்தம்! வந்தவன், பின்னால் திரும்பி, ''ஓடி வா. இங்கே யாரும் இல்லே'' என்று கத்திவிட்டுச் சிரித்துக்கொண்டே நிற்கிறான். புதருக்கிடையில் பன்னிரண்டு இதயங்கள் 'தடக், தடக்'கென்று அடித்துக்கொள்கின்றன. எத்தனையோ யுகங்களாகத் தோன்றிய மூன்று விநாடிகள் கழித்து, அழகு வடிவமான ஒரு பெண், அங்கே மயிலென நளின நடை நடந்து வந்து துரையின் கரம் பற்றுகிறாள். மறு கணம் முதலியாரும், பார்வதியும், ''ஆ! சந்திரிகா!'' என்று கத்தவே, இந்த மூன்றும் ஜோடிக் காதலர் இருவரும் திடுக்கிட்டுத் திரும்புகிறார்கள். உடனே சந்திரிகாவின் தந்தையாக முதலியாரும், சந்திரிகாவின் தாயாகப் பார்வதியும் புதரிலிருந்து வெளிப்பட்டுச் சந்திரிகாவை அணைத்துக்கொள்கிறார்கள். (அப்பா ரங்கதுரை, நீ சாமான்யப்பட்ட ஆள் இல்லை என்பது இப்போதல்லவா தெரிகிறது?) காதலர் இருவரையும் புதர்ப் பக்கம் முதலியார் தம்பதி அழைத்து வரும்போது, சந்திரிகா ஒரே ஒரு வாக்கியந்தான் சொல்கிறாள். அதுதான் எவ்வளவு மணியான வாக்கியம்!]

சந்: பின்னே என்னம்மா, நீங்க ரெண்டு பேரும் வேற ஏதேதோ கல்யாணங்களைப்பத்திக் கவலைப்பட்டுக்கிட்டிருக்கும்போது, என் கல்யாணத்துக்கு நானே கவலைப்பட்டு, நானே புருஷனையும் தேடிக்கிட்டேன்!

[எல்லாரும் வாயடைத்து நிற்கிறார்கள்.]

★

ஒவ்வொரு பின்னி விற்பனை நிலையமும் ஓர் நியாய விலைக்கடை

இந்தியா முழுவதும் 6721 சில்லறை விற்பனையாளர்கள் பின்னித்துணிகளை ஆலைநிர்ணய விலையில் வழங்குகிறார்கள்

இப் பெரிய நாட்டில், ஒவ்வொரு மா நகரிலும், நகரிலும், முக்கிய இடங்களிலும் ஒரு பின்னி விற்பனையாளர் இருக்கிறார். பெரும்பாலனவர்கள் எங்களுடன் இரு பதாண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை நாங்கள் நன்கு அறிவோம்.

இரண்டாம் உலகப் போர்க் காலத்திலிருந்து, ஒவ்வொருவிற்பனையாளருடனும், எங்கள் துணிகளை நாங்கள் நிர்ணயித்துள்ள விலையில் விற்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு, எங்கள் விலைப்பட்டியலை அவர்கள் கடைகளில் வைக்க ஏற்பாடு செய்து உள்ளோம். நாங்கள் அவர்களை எங்கள் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராக அறிவித்து அதற்குச் சின்னமாக அடையாள போர்டையும் வழங்கியுள்ளோம்.

பின்னித் துணிகளை மில் கன்ட்ரோல் விலைக்கு ஓர் விற்பனையாளர் விற்கிறார் என்பதற்கு இந்த எங்கள் அடையாள போர்டு ஓர் உத்தரவாதம்.

விற்பனை நிலையங்கள் நல்லமுறையில் இயங்குகின்றனவா என்று உறுதி செய்து கொள்ளும் பொருட்டு எங்கள் விற்பனை ஊழியர்கள் இடைவிடாமல் இந் நாடு பூராவும் சுற்றி வருகிறார்கள்.

மொத்தத்தில் எங்கள் 6721 சில்லறை விற்பனை நிலையங்களில் ஒவ்வொன்றும் பின்னித் துணிகளுக்கான நியாயவிலைக் கடைகளே.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட், பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட், பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ் ஸ்தாபனத்தின் கிளைகள்.

JWT-BY-3804

MULTIWELD
WELDED WIRE FABRICS



...FOR INDUSTRY ...FOR OFFICE ...FOR HOME

...in fact, for practically every type of protection, there is nothing like 'Multiweld' welded wire fabrics. They are elegant and strong, are better than any woven or crimped wire fabric and can withstand the worst of weather hazards. Available in all standard sizes. **'Multiweld' welded wire fabrics**—for partitions, screens, fencings, crates, enclosures, machinery guards, trays, shelves, lift enclosures, concrete reinforcements, etc.

'MULTIWELD'—FOR MULTI-PURPOSE

MULTIWELD WIRE CO. PRVT. LTD.,
507, Loha Bhavan,
P. D'Mello Rd., Bombay-9.

Sole Selling Agents: **MANILAL & CO.,**
209, Sant Tukaram Rd.,
Bombay-9.

FDS-B. MW. 4

இந்தியாவிலேயே படக் காலண்டர் தயாரிப்பில் தலைசிறந்த ஸ்தாபனம்

காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ்

CORONATION LITHO

உங்கள் வ்யாபார விருத்திக்கு விளம்பரம் செய்ய எங்கள்

காரனேஷன் காலண்டர்களையே

தேர்ந்தெடுங்கள்.

பிராஞ்சு:
150-A/3, Khivraj Mansions,
Mount Road, Madras-2.
(Phone: 87818)
217, Samuel Street, Mandvi,
Bombay-3. (Phone: 325547)

லேபிள்கள், போஸ்டர்கள் பல கலர் லேபிள்கள் மற்றும் எல்லா விதப் பிரிண்டிங்குகளும் எங்களின் சிறந்த அம்சம்.

CORONATION LITHO WORKS

P. B. NO. 2.
Tel: CORONATION

SIVAKASI

Phone: 54, 254

அழியா அழகு

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



பஸ் ஓடிக்கொண்டிருந்தது. அன்று கிருத்திகை. வடபழனிக்குப் போகும் பஸ்ஸில் நிறைந்து வழிந்தது கூட்டம். தொங்கியபடி நிற்பவர்களும், கடந்து போகிறவர்களும் உமாவின் மேல் படாதபடி, அவளை ஸீட்டின் ஓரம் உட்கார வைத்து, மணி தோளை அணைத்துப் பிடித்துக்கொண்டிருந்தான்.

உமாவுக்கு அவன் அப்படி இமைப் பாதுகாப்பாய்த் தன்னைப் போற்றுவதில் ஒரு பெருமை. சுற்றிலும் நிற்பவர்களின் பார்வை தன்மேல் ஒரு கணம் தயங்குவது அவளுக்குத் தெரியும். மனத்தில் அப்போது ஒரு லேசான கர்வம் தலைதூக்கும். அதைப் பொறுக்காதவளைப் போல, அவ்வளவு பேர்கள் முன்னிலையிலும் மணி தன்னை உரிமை கொண்டாடுவதை உணரும்போது, வெட்கத்தில் கன்னம் சிவப்புப் பூத்து நிற்கும். நாணம் மேலிடத் தலையைத் திருப்பிக்கொள்வாள். இமைகள் தாழ்ந்து போகும்.

பஸ் நின்றது. கூட்டம் முழுவதும் இறங்கும்வரையில் மணி அவளை இறங்க விடவில்லை. தவறிப் போய் நெருக்கமான காற்றுக்கூட அவள்மேல் பட்டுவிடக்கூடாது அவனுக்கு. கடைத் தெருவோரம் சில்லறைக் கடைகளின் வரிசை. அதிகக் கூட்டம் இல்லாத ஒன்றில் அர்ச்சனைக்குச் சாமான்கள் வாங்கிக்கொண்டார்கள்.

''போவோமா?''

உமா அவன் புறம் திரும்பிச் சிரித்துக்கொண்டாள். அந்தப் புன்முறுவலுக்கு எவ்வளவோ அர்த்தம் உண்டு. அவளுக்கு எவ்வளவோ தினுசாகப் புன்னகை பூக்கத் தெரியும். ஆனால் இது அவர்களுக்கு மட்டுந்தான். அதில் திளைத்து அதன் குளுமையில் நனைந்து புல்லரிக்க அவனுக்கு மட்டும் உரிமை. பொங்கிக் குலுங்கும் அந்த வனப்பும் செழிப்பும் மலர்ந்து விரியும் கவர்ச்சியும் அவனுக்குத்தான்.

அவன் பார்வையைப் படித்துவிட்டவளைப் போல உமா சற்று மிடுக்காக நடக்கத் தொடங்கினாள். சந்தனக் கட்டை வர்ணம். கையிலும் காலிலும் நீண்டு குவிந்த விரல்கள். வழவழவென்று குழையும் கைகள். எப்படிப் பார்த்தாலும் எடுப்பான தோற்றம். இடையில் அசைவில் பின்புறம் சரிந்து அசைந்து அவனைக் கலங்க வைக்கும் பின்னல்.

''உமா.''

''உம்.'' அவள் அலட்சியமாகத் திரும்பினாள்.

''உனக்கு இந்தப் புடைவைக்கட்டு எவ்வளவு நன்றாக அமைந்திருக்கிறது தெரியுமோ? நீ இருக்கிற வாட்டசாட்டத்துக்கும் உயரத்துக்கும் பதிவாய், பொருத்தமாய், அம்மனுக்கு அலங்காரம் பண்ணினது போல.''

''கூடாது, கூடாது. அப்படி எல்லாம் தப்பான பேச்சுச் சொல்லாதீர்கள்.''

அவள் விழிகள் திகிலில் சுழன்றன. அந்தப் பார்வையின் மருட்சியுந்தான் எவ்வளவு அழகாக இருந்தது! அவளைச் சமாதானப்படுத்துவது போலத் தன் விரல்களால் சட்டென்று வாயை மூடிக்கொண்டான். அவள் 'பக்' கென்று சிரித்துவிட்டு மேலே நடக்கலானாள். வளைவும் குழைவுமாக அவள் பின்னழகில் அவன் மனம் தளர்ந்தது.

வீட்டுக்குத் திரும்பியதும் கூடையை வைத்துவிட்டு, உட்கார்ந்திருந்தவனின் நாற்காலிப் பிடியில் வந்து உட்கார்ந்துகொண்டாள் உமா.

''இந்தாருங்கள்'' என்று எதையோ கையில் கொடுத்தாள்.

இன்னதென்று பார்க்காமலே, விபூதி என்ற ஞாபகத்தில் நெற்றியில் கொஞ்சம் பூசிக்கொண்டு பழக்கம் காரணமாக வாயிலும் கொஞ்சம் போட்டுக்கொண்டான் மணி. அவள் 'கல்'லென்று சிரித்தாள். அடிநாக்கில் தித்திப்பு; பிரசாதமாகக் கிடைத்த வெல்லச் சர்க்கரை.

அவன் நெற்றியை அங்கையினால் அழுத்தித் துடைத்தாள். அந்தப் பரிச உணர்வின் இதத்தில் அவன் ஒரு கணம் மயங்கி உட்கார்ந்திருந்தான்.

''சரி. இப்போது நீயே விபூதியை இட்டுவிடு.''

''நீங்களே இட்டுக்கொள்ளுங்கள். நான் சின்னவள்.''

அவள் கையைப் பிடித்து அங்கையைக் கிள்ளி எடுத்தபடி உட்கார்ந்திருந்தான். அவனைச் சீண்டும் அந்த விழிகளில்தான் என்ன ஜாலம், கடலோர விளக்குகள் மினுக்கி மினுக்கி எரிவதைப் போல!

''நான் போய் உடையை மாற்றிக் கொண்டு வருகிறேன். விடுங்கள்.''

சட்டென்று மணி குழந்தையாக மாறிவிட்டான். செல்லமாக அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கினான்.

''விடுங்கள். யாராவது பார்த்தால் சிரிப்பார்கள்.''

யாரும் பார்க்கவில்லை. ஆனால் அவர்களே சிரித்துக்கொண்டார்கள். தனியாக, ரகசியமாக, இப்படி ஒரு விளையாட்டில் அவர்களுக்குள்ளே அலுக்காத சந்தோஷம்; உள்ளூற உடல் புல்லரிக்க ஓடும் மகிழ்ச்சியின் திளைப்பு.

கண்ணாடியின்முன் நின்று உடைகளை மாற்றியபடி உமா தனக்குள் சொல்லிக்கொண்டாள்; ''நான் சின்னவள்.''

அந்த நினைப்பில் அவளுக்கு ஒரு பெருமை. போன ஆடி மாதந்தான் அவளுக்கு இருபத்திரண்டு வயசு நிறைந்தது. ஆனால் பார்ப்பவர்கள் இருபதுக்குமேல் மதிப்பதில்லை. அப்படியே சொல்லவும் சொல்வார்கள்; ''நீ இன்னும் பார்ப்பதற்குச் சின்னப் பெண்ணாய்த்தான் இருக்கிறாய்!''

அதைக் கேட்கும்போது அவள் மனத்தில் பெருமிதம் தளிர்க்கும். இன்னும் கட்டுக் குலையாத, இளமையின் மெருகு மங்காத, வனப்புக்கு அவர்கள் பாராட்டு அது. மணம் ஆனபின் அது இன்னும் ஒளி விட்டுத்தான் துலங்கிற்று; உயர்ந்த ஜாதி வைரத்தைப் பட்டுத் துணியினால் துடைத்துவிட்டதைப் போல.

அவளுடைய தங்கை சுசிக்கு அவள் மேல் சற்றுப் பொறாமையுங்கூட. வைத்த கண் மாறாமல் அவளையே பார்த்தபடி நிற்பாள்.

''நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாயடி, செதுக்கி வைத்தாற் போல! என் தோழிகள் எல்லாரும் என்னைக் கேட்கிறார்கள்....''

சுசி அவளை ஆசையாய்த் தழுவிக் கொள்ள முயலுவாள், பெண்ணுக்குப் பெண்ணே ஆசைப்படும் விதமாக. உதட்டைத் திருகிக் கண்ணைச் சிமிட்டியபடி, ஒரு பாட்டின் மெட்டை முனகிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்துவிடுவாள் உமா.

உமா தலைக்குப் பின்னால் கைகளைக் கோத்துக்கொண்டு படுத்திருந்தாள். தூவினாற்போல மெத்தென இருள் சூழ்ந்திருந்தது. விடிவிளக்குங்கூட அணைந்திருந்தது. தலையணையின்மேல் முகத்தை அழுத்திக்கொண்டு திரும்பிப் படுத்துக்கொண்டாள். கசங்காமல் எடுத்து வைத்த தலைப்பூவின் மென்மையை, இதழ்களின் நெருடலில், விரல் அநுபவித்துக்கொண் டிருந்தது.

யானைத் தலையளவு பெரிய பூச்செண்டை அவள் கையில் கொண்டு வந்து கொடுத்தார்கள் அவளுடைய கல்லூரித் தோழிகள். சுற்றிலும் கலகலவென்ற சிரிப்புக் கோத்துக் கலந்து நின்றது.

''கங்கிராசுலேஷன்ஸ் உமா. இந்த வருஷம் கல்லூரியின் அழகுப் போட்டியில் உனக்குத்தான் முதல் பரிசு.''

கழுத்தில் அழகுடன் மிளிரும் மாலையும், கையில் பெருமையுடன் ஏந்திய பூச் செண்டுமாய் அவள் நிழற்படம் எடுத்துக்கொள்ள நின்றாள். அப்புறம் மணியை மணந்துகொண்ட போதும் படம் எடுத்துக்கொள்ள நிற்கையில், அதே தோற்றம் இருந்தது. வசீகரமான பார்வையில் அதே பெருமை திகழ்ந்தது.

''உமா!''

அவன் அறைக்குள் நுழைந்து விடிவிளக்கை ஏற்றினான். அவள் பதில் சொல்லவில்லை. தூங்கிவிட்ட பாவனையில் கண்ணை மூடிக்கொண்டாள். இதழ்க் கடையில் மெதுவாய் ஒரு சிரிப்பு ஓடிற்று. அவன் அவள்மேல் குனிந்தபடி நின்றான். சிறுத்தை சோம்பல் முறிப்பதுபோல அசையும் உடலின் அழகு. கைகால்களின் வளை கோடுகளில், நெளிவில், சிந்தும் அழகு. தோளின் குழைவில் வழுவழுத்து மின்னும் இளமையின் மெருகு. அவள் சிரித்த முகம் அவன் புறம் திரும்பிற்று. அவன் உடல் மயிர்க்கூச்செறிந்தது. அருகே உட்கார்ந்து அவள் கையை எடுத்துக்கொண்டான்.

''இன்றைக்கு நீ மிகவும் அழகாக இருக்கிறாய் உமா.''

கலப்பின்றி நெஞ்சை விட்டு வந்த அந்தப் பாராட்டுதலில் அவள் மனம் சட்டென்று கனிந்தது. அப்படி அவனைக் கவர்ந்துவிட்ட பெருமையில் மனத்துள் ஒரு நெகிழ்ச்சி. அவன் விரல்களை எடுத்துக் கன்னத்தில் வைத்துக்கொண்டாள்.

''இன்றைக்கு மட்டுந்தானா?''

அவனைச் சீண்டுவது போல இருந்தது அவள் கேள்வி.

''என்றைக்குமே உமா, நீ என் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த நாள் முதலாக.''

''என்ன, இது எந்த நாவலில் எத்தனாவது பக்கம்?''

அவள் சிரிப்புக்குப் போட்டியாக அவன் சிரிப்பில் அறை எதிரொலித்தது.

அவள் அழகைப் பாராட்டுவதில் அவனுக்குத் தயக்கம் இல்லை. அந்த நேரங்களில் அவன் பேச்சு வெளிப்படையாக இருக்கும். மணம் நிறைந்த பூவை, நேர்த்தியான ஓவியத்தை, கனிவு நிறைந்த இசையின் அடியை, அநுபவிப்பதைப் போல் அவள் அழகையும் மௌனமாக அநுபவிப்பான்.

சில சமயம் அதுவே இளமையின் வெறியாய்த் துள்ளிக் கொண்டு, கட்டுக்கு அடங்காமல் ஓடும். அவளை விதம் விதமாக உடையணிந்துகொள்ளச் சொல்லி அழகு பார்ப்பதில் ஓர் ஆர்வம். ஒரு நாள் நாகரிகமாய் ஜீன்ஸ் உடை; இன்னொரு நாள் வடநாட்டுப் பாணியில் ஸல்வார் கமீசு, இளமையின் பூரிப்பும், வடிவத்தின் அமைப்பும் தெரிய. அவள் அழகின் அந்தரங்கமான அநுபவிப்பில் அவர்களுக்கிடையே ஒளிவு மறைவு இல்லை.

விதம் விதமாய்ப் படம் பிடிப்பான். அவனிடமே நிழற்படத்தைக் கழுவி அச்சிடச் சாதனங்கள் இருந்தன. அவனே அவற்றை எடுத்துப் பெரிதாக்கி 'ஆல்ப'த்தில் ஒட்டி வைப்பான். தரையில் குழந்தைகளைப் போல நெருங்கி உட்கார்ந்துகொண்டு அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்பதில் இருவருக்குமே ஆசை. சர்க்கரைக் குழல்கள் கோத்துச் சுழிப்பதைப் போல, பூச் சரங்கள் ஊஞ்சலாடுவதைப் போல, ஒவ்வொரு படமும், ஒவ்வொரு நெகிழ்ந்த விநாடியின் கதையாய், இதழ் பிரிந்து நெஞ்சு நினைவில் உதிர, உட்கார்ந்திருப்பார்கள்.

கண்ணாடியின்முன் உட்கார்ந்து அவள் கை கொள்ளாமல் வழிந்து ஓடும் கூந்தலைப் பிரியெடுத்துப் பின்னிக்கொண் டிருப்பாள். அவன் பின்புறமாக வந்து நிற்பான். விரல்களில் கூந்தற் சுருளைச் சுற்றிக்கொள்வான். கூந்தலின் கருமையும் நீளமும் அவளுக்கு அடங்காத பெருமை.

''உனக்குப் பின்னி விடுவதற்குள் தோள்பட்டை விட்டுப் போகிறது'' என்று விளையாட்டாக அலுத்துக் கொள்வாள் அவள் தாய்.

மணியின் கையில் குழையும் பின்னலில் அவளுக்கு அந்த ஞாபகம் வரும். அது விளையாட்டு. இதுவுந்தான். ஆனால் இந்தக் கண நேர வியப்பில் அவள் பெருமை மனத்தில் மலர்ந்து நிற்கும்.

அவளுடைய தோள்மேல் இடித்தபடி நின்று பூச் சரத்தை வளைவாக வைப்பான்; பின்னிக் கொத்தாகச் சுருட்டித் திராட்சைக் கூடையாக வைத்த கூந்தற்கட்டிற்கு மேல் அலங்காரமாக. கழுத்து மறைவில் சாந்து வைத்ததுபோல ஒரு கறுப்பு மச்சம். அவன் விரல் அதன்மேல் ஒரு கணம் தயங்கும்.

''உன் நிறத்துக்கு இந்த மாற்றுக்கூட ஓர் அழகாகத்தான் இருக்கிறது உமா.''

அவள் தோளைக் குலுக்கிக்கொண்டு ஓர் அழகு வெளிப்பட, ஒதுங்கி உட்கார்ந்து கொள்வாள், அவனுக்கு எட்டாதபடி; அவன் ஆர்வத்தைத் தூண்டும் விதமாய், அவனுக்கு எட்டாதபடி.

அன்று அவர்கள் ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தார்கள். உமா ஒரு புறமாக உட்கார்ந்துகொண் டிருந்தாள். பின்புறமாக யாரோ வந்து முதுகில் தட்டினார்கள். அவள் திரும்பிப் பார்த்தாள். ஆனால் பார்வையில் அடையாளம் இல்லை.

''அடி பாவி! உண்மையில் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையா?''

நீரலை மாதிரி கிளுக்கென்ற சிரிப்பு. கையைப் பறவைச் சிறகாய் விரித்துத் தட்டிக்கொண்டாள். அந்தக் கலகலப்பைப் பார்த்ததுந்தான் வருஷங்களின் அடிப்புதைவிலிருந்து எழுந்தாற்போல அந்தப் பிம்பம் அடையாளம் தெரிந்தது.

''நீ வனஜா இல்லை?''

''பெயர் மட்டும் ஞாபகம் இருக்கிறதா?''

''உன்னையுந்தான். எப்படி இந்த மாதிரி மாறிப் போய்விட்டாய்?''

அவளையும் அறியாமல் கேள்வி கழன்று வந்துவிட்டது. அப்புறந்தான் அதை அடக்கிக்கொண் டிருந்திருக்கலாமோ என்று தோன்றியது. எப்படி

இருந்தவள் வனஜா? அந்த நாளிலேயே அவளைவிடச் சற்றுப் பருமன்தான். ஆனாலும் அதற்கும் ஓர் அழகான எல்லையாய் வடிவம். கதிரின் அசைவாய் அவள் நடையே ஓர் அழகாக இருக்கும்.

இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். உமாவின் கண் மாத்திரம் அவளை எடை போட்டுக்கொண்டே இருந்தது. கதுப்பாடும் கன்னங்கள். சற்றுத் தழைந்துவிட்ட மோவாய்க்குக் கீழே சதைப் பிடிப்பு; மெழுகுப் பொம்மையாய் உருவழிந்த அங்கங்கள்; இடுப்பு அகல ஆரம்பித்துவிட்டது.

வனஜாவுக்கு இரண்டு குழந்தைகள். மூன்றுவது உருவாகிக்கொண்டிருந்தது. அவளுக்குப் புரிந்தது

குடும்பத்தின் இன்ப துன்பங்களில், எண்ணத் தொலையாத அநுபவங்களில் அவள் கரைந்துவிட்டாள். பிசைந்த மண்ணாய் அவள் உருவம் தளர்ந்துவிட்டது. இன்னும் அந்தப் பார்வையில் சிரிப்பில் அடையாளம் தெரிகிறது. மற்றப்படி அவள் இளமையும் வனப்பும் இருந்த சுவடுங்கூட இல்லை. கணவனின் ஆசைகளுக்கு, தன்னின்று பிரிவதாய் அமையும் குழந்தைகளுக்கு, அவள் தன்னை ஈடு கொடுத்துக் கொண்டு விட்டாள்.

நினைக்கும்போது அவளுள் மளமளவென்று ஏதோ சரிந்தது.

வரும் வழியெல்லாம் அதே சிந்தனை. பெண்மைக்கும் இளமைக்கும் அது தான் வரம்பா? குடும்பத்துக்குத் தன்னை இணை சேர்த்துக்கொள்ளும் போது அதுதான் முதல் பணயமா? கணவனுடன் பகிர்ந்துகொள்ளும் இன்பத்தில் தன்னில் ஒரு பகுதியையே இழந்துவிட வேண்டியதுதானா? ஒன்றும் புரியாத ஓர் ஏமாற்றத்தில் நெஞ்சடியில் ஏதோ நச்சரித்தது.

ஊரடங்கும் வேளையில் வீடு திரும்பிக் கதவைத் திறந்ததும், மணி அவள் கையில் இருந்த பூட்டைக்கூட வைக்க விடாமல், அவளைத் தன் புறமாகத் திருப்பிக்கொண்டான். அவள் கழுத்தைச் சுற்றி அவன் கைகள் இறுகின. நெற்றிமேல் நெற்றி அழுந்திற்று.

''கல்யாணத்தில் எல்லாரும் என் அதிருஷ்டத்தை வியந்துகொண்டார்கள் உமா.''

அவள் முகம் அவன் கழுத்து வளைவில் புதைந்தது. ஏதோ யோசனையில் படலமாடி நிற்கும் தன் முகத்தை அவன் அடையாளம் கண்டுகொள்வதில் அவளுக்கு விருப்பம் இல்லை. இரவு முதிர்ந்த வேளை. வாசற் குறட்டின் மங்கிய ஒளி. காதில் இழையும் அவன் குரல். எட்டிப் பற்றி அணைக்க விழையும் வேகம். அவள் தன்னை விடுவித்துக்கொண்டு உள்ளே போய் விட்டாள்.

மழைக்காலம் வந்துவிட்டது. முன்னாலேயே இருள் இறங்கும் மாலை நேரம். மணி விளக்கடியில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தான். உமா நீண்ட சோபாவில் கால்கள் வழியச் சற்றுச் சோர்வாய்க் கண்ணை மூடிப் படுத்திருந்தாள். அவள் முகத்தில் வழக்கமான களை இல்லை. பேச்சில் கலகலப்பும் இல்லை.

''ராணிக்கு என்ன யோசனை?''

அவன் அப்படி அவளை அழைப்பதைக் கேட்பதில் அவளுக்கு ஒரு மகிழ்ச்சி. இன்று அதன் தளிர்ப்பைக் கூடக் காணோம். இடக் கை வளையல்களை வலக் கையால் நெகிழ்த்துக் கொண்டாள். மடிமேல் படிந்த விரல்களின்மேல் அவள் தலை குனிந்தது. கூந்தல் சிற்றலைகளின் கருமை விளக்கொளியில் பளபளத்தது.

''என் ராஜ்யத்தை நினைத்துக் கொண்டிருந்தேன்.''

அவன் சிரித்தான். அவள் சிரிக்கவில்லை. சட்டென்று அவன் எழுந்து வந்து கால்புறமாக உட்கார்ந்துகொண்டான். சாய்ந்து அவள் முகத்தை எட்டப் போனான். நீட்டிய அவன் கைக்கு எட்டாது உமா உடலை நெளித்துக் கொண்டாள். அவன் பழியாய் எழுந்து வந்து அவளை அணைத்துக் கொண்டான்.

சட்டென்று குத்தியது போல ஓர் உணர்ச்சியோடு உமா விலகிக் காலை மடித்துக்கொண்டாள்.

''விடுங்கள். எல்லா ஆண்களையும் போலத்தான் நீங்களும்!''

''என்ன உமா?''

''உங்கள் உணர்ச்சிகளுக்கு என்னை வயப்படுத்திக்கொண்டு விட்டீர்கள்.''

ஓரமாய் ஒடுங்கிக் கை நகத்தைக் கோபத்துடன் கடித்தபடி இருக்கையில் அவளே ஒரு குழந்தையாகத் தான் இருந்தாள். புருவங்களின் நெறிவில், பிதுங்கிய இதழ்களில், உதடுகளின் துடிப்பில், குழந்தைக் கோபந்தான் தெரிந்தது. அவளுக்கா குழந்தை?

''உமா, நீ சொல்லவே இல்லையே!''

அவன் சிரிப்புக்கு அவள் வழக்கம் போல் மயங்கவில்லை. ''இந்தச் சாமர்த்தியம் எல்லாம் யாருக்கு வேண்டிக் கிடக்கிறது? கடைசியில் நான் ஏமாந்துதான் போனேன்.''

குரல் அழுகையில் நடுங்க அவள் தன்னைப் பிய்த்துக்கொண்டு போய் விட்டாள். அவனுக்குச் சற்று ஏமாற்றமாகக்கூட இருந்தது. உமாவின் மனத்தில் என்ன கலக்கம்? வரப் போகும் உடல் சிரமம் பற்றிய சிறு பயமா? அவனைப் பிரியும் நினைப்பா? அல்லது அவன்தான் அவசரப்பட்டு விட்டானா?

நாட்கள் ஓட ஆரம்பித்தன. பருவங்களுடன் மாறும் இயற்கையைப்



சிலையில்

போட்டோ: வி. ராமமூர்த்தி

போல அவளிடத்திலும் ஒரு மாறுதல். இடை அகல ஆரம்பித்தாயிற்று. சோர்வாய் மூழ்கும் சுபாவம். சோபாவில் பூனைக் குட்டியாய்ச் சுருண்டு கிடப்பாள். சிறு காரியங்களிலும் மூச்சை இரைத்தது.

முன்னைப் போல வெளியே போய் வரும் ஆர்வம் இல்லை. கவலையற்றுப் பறவையாகத் திரிய நினைக்கும் முனைப்பு இல்லை. விதம் விதமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளும் ஆசையும் இல்லை. யோசனையாய் மனத்துள் குவியும் நினைவுகளே துணையாக உட்கார்ந்திருப்பாள். புரியாத விசனம் அவளுள் லேசாய்ப் படரும்.

கண்ணாடியின்முன் நின்று தன்னை ஒரு முறை மதிப்பிட்டுக் கொள்வாள். சற்றுத் தழைந்துவிட்ட தோள்வளைவுகள், உருக்காணத் தொடங்கிவிட்ட அங்கங்கள், உள் செழிப்பின் அடையாளமாய் மேனியில் மினுமினுத்த சதைப் பூச்சு, பாதம் ஊன்றி நிற்க முடியாத தளர்ச்சி. ஒவ்வொன்றையும் அளந்தாற்போல் நோக்குவாள். அவள் பழைய உமா அல்ல. பழைய உமாவாக இனி இருக்க முடியாது. வந்த வழியைத் திரும்பிப் பார்ப்பது போல யோசனைகள் செல்லும். மனத்தில் ஒரு சிறு விசனம் புகுந்து கொள்ளும்.

இது முதற் படியா? படிப்படியாக அவள் இறங்கிவிட வேண்டியதுதானா? வனஜாவை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் அவள் திகைத்தது போல யாரேனும் அவளிடம் வந்து வியந்து நிற்பார்களா? அந்த நாளில் அவளுக்கு இருந்த வடிவின் அழகை ஞாபகப்படுத்துவார்களா?

ஓர் ஏக்கம் தெரிய அப்படியே உட்கார்ந்துகொள்வாள். தளர்ந்து கனத்த சரீரத்தைத் தூக்க முடியாமல் தள்ளாடி நடக்கும் நினைவு. தலைக்குமேல் உயரத்தில் வண்ணப் படம் இருந்தது. அவள் கல்லூரியில் நாட்டிய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபோது எடுத்தது அது. தன் அழகு தந்த தன்னம்பிக்கை ததும்ப, பெருமையும் பூரிப்புமாக நின்ற தோற்றம். இளமையின் கவர்ச்சி தரும் தனியான செருக்கு. அங்கிருந்து அந்த உருவம் அவள்மேல் குனிந்து அவளைத் தேற்ற முயலும் விதமாகத் தெரியும்.

ஊருக்குக் கிளம்பிவிட்டாள்.

அவள் நினைப்புத் தாய்க்குத் தெரிய நியாயம் இல்லை. அவள் புரிந்துகொள்ள மாட்டாள். கல்யாணம் ஆகாதவள் தங்கை; அவளிடம் அர்த்தம் விட்டுப் பேச வகை இல்லை. கண்ணில் தென்படும் தோழிகள், உறவினர்கள், எல்லாரிடமும் அவளுக்குக் கிடைத்தது மகிழ்ச்சி கூடிய வாழ்த்துத்தான். அவர்களிடமிருந்து ஓர் அநுதாபத்தை எதிர்பார்க்கும் நினைவு கூடப் பொருத்தமின்றித் தோன்றியது.

இளங்காலை நேரத்தில் தங்கை பத்மா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து உன்னிப்பாய் அவளையே பார்த்துக்கொண்டிருப்பாள்.

''நீ சொல்லிக் கொடுத்த உடற் பயிற்சிகளை எல்லாம் மறக்காமல் செய்கிறேன் அக்கா.''

தனக்குத் தெரிந்த ரகசியத்தையா அவள் தங்கையிடம் பகிர்ந்துகொண்டாள்? இப்போது அதைப் போன்ற ஒரு நினைவுக்குங்கூட அர்த்தம் இல்லை.

குழந்தை பிறந்த பிறகு ஒரு வேலை ஈடுபட முடியுமோ? எதற்காக? எதைப் போற்றுவதற்கு? மிகுதியாக நிற்கப் போவது எது?

குழந்தையும் கையுமாகத் திரும்பிவிட்டாள் உமா. பிள்ளை பெற்றவளுக்குத் தனியாகச் சேர்க்கும் சௌக்கியத்தின் விளைவாய், உடம்பில் ஒரு புதுத் தளதளப்பு. பசுமையும் குழைவுமாய் உடலில் தனிச் செழிப்பு. அதன் மெருகாய்ச் சற்று மேலிட்டுக் காட்டிய நிறம்.

பெண் குழந்தை. அவளைப் போலவே இருந்ததென்று சொன்னார்கள். நல்ல சிவப்பு நிறத்துக்கு எண்ணெய்க் குளி முடித்துப் படுக்க வைத்தால் முகம் முழுத் தக்காளிப் பழம் போல மினுக்கும். அடர்ந்த மயிர் இப்போதே கண்களின்மேல் வழிந்தது. கருவண்டின் நிறமாய் முகத்துக்கு எடுப்பாய்ப் பெரிய விழிகள். துணி கொள்ளாமல் கையையும் காலையும் உதைத்துப் புரண்டு குப்புறப் படுத்துக்கொண்டால் எடுத்து முத்தமிடாதவர் இல்லை.

மணி காரியாலயத்திலிருந்து வந்ததும் நேரே குழந்தையைத்தான் போய் எடுப்பான். அரை மணி நேரம் விளையாடின பிறகுதான் உடுப்பைக் கழற்றுவதுங்கூட. வெளியே கிளம்பினால் குழந்தையும் குல்லாவும் கம்பளிச்சட்டையுமாகப் புறப்பட வேண்டும். அதற்கென்று அலங்காரத் தள்ளு வண்டி ஒன்றும் வாங்கியிருந்தான்.

மூவருமாகக் கிளம்புவார்கள். இப்போது குழந்தையைத் தள்ளிக்



செடியில்

போட்டோ: என். வி. ஆர். ஸ்வாமி

கொண்டு வருவதில்தான் அவனுக்குப் பெருமை. அவள் சற்று விலகி முன்னால் போய்விட்டாலுங்கூடப் பாதகம் இல்லை. வழியில் தெரிந்தவர் யாரேனும் கண்ணில் பட்டுவிட்டால், ஒரு சிறு கர்வம் தோன்ற, குழந்தையைக் கையில் எடுத்துப் பிடித்துக்கொள்வான்.

பூங்காவிலோ, கடற்கரைப் பாதையிலோ, வண்டியை நிறுத்திவிட்டுப் அவர்கள் உட்காருவார்கள். பேச்சு எப்படியாயினும் அவன் பார்வை குழந்தையின் மீதே இருக்கும். பக்கத்தில் நடந்து போவோரும் முதலில் பார்ப்பது குழந்தையைத்தான். அப்புறந்தான் அவர்களின்மீது அவர்கள் கவனம் திரும்பும்.

ஆல்பத்தில் குழந்தையின் படங்கள் நிறைய ஆரம்பித்துவிட்டன. இடம் போதாமல் இருந்தால் அவளுடைய படங்கள் சிலவற்றை எடுத்துவிட்டுங்கூட அவற்றை அங்கே ஒட்டிவிடுவான் மணி. அவற்றை மடியில் வைத்துக்கொண்டு, சுவாரசியமான கதையைப் படிப்பது போலத் தனக்குத் தானே அநுபவித்துக் கொள்வான்.

தனக்கே புரியாமல் உமாவுக்குத் தனக்குள் ஒரு விநோதமான உணர்ச்சி தோன்றும். அந்த வீட்டில் அவளுக்குப் போட்டியாக இன்னொரு பெண் வந்துவிட்டாள். அவள் எல்லாரையும் கவர்ந்துகொள்கிறாள். அவளைப் பார்த்து அவளோடு பேசி விளையாடுவதைத்தான் எல்லாரும் விரும்புகிறார்கள். அவளுக்குத்தான் முதல் இடம். உமாவுங்கூடப் பின்தங்கி விட்டாள்.

குழந்தைப் பேற்றின் மூலம் தான் இழந்தது என்ன, பெற்றது என்ன? வெறும் இளமை மெருகு மட்டுந்தானா பூச்சு மங்கிப் போயிற்று? அவளுடைய கவர்ச்சி மட்டுந்தானா மாற்று இறங்கி விட்டது? குழந்தை அவளில் ஒரு பகுதியையே அல்லவோ எடுத்துக் கொண்டுவிட்டாள்? அவளையும் முந்திக் கொண்டுவிட்டாள். மனத்தில் ஒரு சிறு பொறாமை. அதுவே வேடிக்கையாகவும் இருந்தது.

அன்று மணியின் நண்பர் ஒருவர் அவனைப் பார்க்க வந்திருந்தார். நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தார். வழக்கம்போல மணி குழந்தையை மடிமேல் பெருமையாக வைத்துக்கொண்டிருந்தான். அவர் புறப்பட்டுப் போனதும் மணி உள்ளே ஓர் அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்தான். உமா அதைத் திறந்து பார்த்தாள். அடுக்கடுக்காய் ஆறு வர்ண டப்பாக்கள். எல்லாம் குழந்தை உணவு வைத்தவை.

“என்ன இது?” என்று கேட்டாள் உமா.

“அவன் குழந்தை உணவு விற்பனை செய்யும் கம்பெனி ஒன்றில் முக்கியப் பதவியில் இருக்கிறான். குழந்தைக்காக இதைக் கொடுத்துவிட்டுப் போக வந்தான்.”

“எப்படித் தெரியும் அவருக்கு?”

“தெரிந்துதானே வந்திருக்கிறான்? இருவருக்கும் பொதுவான நண்பர்கள் சொல்லியிருப்பார்கள். அவன் வந்ததே குழந்தைக்காகத்தான்.”

“என்னது?”

“ஆமாம். கம்பெனிக் காலண்டரில் வருகிற வருஷத்துக்கு ஓர் அழகான குழந்தையின் படத்தைப் போடவேண்டுமாம். ராஜியின் படத்தை எடுத்துக்கொண்டு போகலாமா என்று கேட்பதற்கு வந்தான்.”

அவள் சட்டென்று குழந்தையை எடுத்து அப்படியே அணைத்துக்கொண்டாள். அவள் மார்பின்மேல் குழந்தையின் உடம்பு ஏறி அமிழ்ந்தது. தலையைத் தோள் வளைவில் சார்த்தித் தடவிக் கொடுத்துக் கொண்டாள்.

“வேண்டாம், ஒன்றும் வேண்டாம். குழந்தைக்குக் கண்பட்டுவிடும். குழந்தை அழகாக இருக்கிறதென்றால் அதற்கு ஊர் முழுவதும் விளம்பரம் வேண்டாம்.”

மணி சிரித்துக்கொண்டான். அவள் அப்படிச் சொல்வாளென்று அவன் எதிர்பார்த்திருந்தான். அவளை வற்புறுத்தவும் அவனுக்கு மனம் இல்லை. துடைகளின் அடிச்சதையில் விரல் அழுந்த, குழந்தையை ஏந்தியபடி ஜன்னல் ஓரம் போய் நின்றவளின் அருகில் அவனும் போய் நின்றுகொண்டான். பின்புறமாகத் திரும்பிச் சிரித்த குழந்தையின் இதழ்ச் சிரிப்பில் அவன் மனத்தில் உவகை ஊற்றுப் பெருக்காக எடுத்தது.

“உமா!”

“என்னவாம்?”

“குழந்தை அழகு என்று எல்லாரும் சொல்கிறார்கள். ஆனால் உனக்கும் எனக்கும் நெருக்கமாகப் பழகிய சிலர் இன்னும் ஒன்று சொல்கிறார்கள். உனக்குத் தெரியுமா?”

“என்ன?”

“குழந்தை பெரியவளானால் உன்னைப் போலவே அழகாக இருப்பாளாம்.”

மணி அவள் தோள்மேல் கையைப் போட்டுக்கொண்டான். அவள் உடல் சிலிர்த்தது.

“ஆமாம் உமா. உன் அழகுக்கு இப்போதுதான் நிறைவு கிடைத்திருக்கிறது. அழகான குழந்தையிடம் உன் அழகை இப்போது புது நாற்றாய், சிறு செடியாய், நீ வளர்க்க ஆரம்பித்திருக்கிறாய்.”

அவனுடைய காவிய நடையான பேச்சைக் கேட்டு அவள் புன்முறுவல் பூத்தாள். அவனும் லேசாகச் சிரித்துக் கொண்டான்.

“உண்மைதான். குழந்தை பிறப்பதனால் ஓர் அளவுக்கு உன் இளமையும் பொலிவும் தேய்ந்து போகலாம். ஆனால் அது உன்னிடமிருந்து குழந்தைக்குத்தானே போகிறது? உன்னிடமே இருந்தால் அது வயசு ஆக ஆகத் தானே மறைந்து போகும். இப்போது அது குழந்தையிடம் புது மெருகோடு வளர ஆரம்பித்திருக்கிறது. இல்லையா, சொல்.”

அவளுக்கு இப்போது உண்மையிலேயே பெருமையாக இருந்தது. சிந்தனையில் ஆழ்ந்த கண்கள் புன்னகை புரிந்தன. தன் முகமும் குழந்தை முகமும் அணைந்தாற்போல் நெருங்கிய போது, அவன் அவர்கள் அருகே நின்று பார்க்கையில், அவர்கள் எல்லாரையும் பிணைக்கும் ஓர் உன்னத உணர்ச்சியில் மயங்கி நின்றாள்.

அவள் அழகு மங்கவில்லை. இளமைக்கட்டும் கவர்ச்சி மிகு வனப்பும் தேய்ந்து விடவில்லை. அழகான மலர் இனிய கனியாவது போல, அதனின்று செடிகளும் மலர்களும் தோன்றிக் குலுங்குவதுபோல, அவள் அழகு இப்போது வழி வழியாய்ப் புத்துயிர் பெற்று மலர்ந்து நிற்கிறது.

“ராஜிக்குப் பேசத் தெரிந்ததும் என்னை அவள் ஒரு கேள்வி கேட்பாள்” என்றான் மணி.

“என்னவாம்?”

“நான் அழகாக இருக்கிறேனா அப்பா என்று.”

“நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்?”

“உன் அம்மாவையும் விட நீ அழகாக இருக்கிறாய் என்பேன்.”

உமா அவன் அருகே வந்து அவன் கன்னத்தில் நறுக்கென்று கிள்ளினாள். ★

சிறு சேமிப்பில் முதலீடு செய்யுங்கள்

Criterion-TSR-988

75 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பிலிப்ஸ்

1891 ம் ஆண்டில் ஒரு சிறிய பொருளை — சாதாரண மின்சார பல்பை உற்பத்திசெய்ய துவங்கி இன்று பிலிப்ஸ் எண்ணற்ற பொருள்களை உருவாக்கியும், விற்பனை செய்தும் வருகின்றனர். இப் பொருள்கள் இன்றைய நவ நாகரீக சமுதாயத்தில் ஒவ்வொரு துறையிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முதலில் துடங்கிய துறையில் இன்று 40,000 க்கும் மேலான ரகங்களில் லாம்புகளை தயார் செய்கிறார்கள். மின்சார இஸ்திரி பெட்டி, முகக்ஷவர இயந்திரம், இசைதட்டுப் பெட்டி, இசைத்தட்டுகள், கணித இயந்திரம், மற்றும் நூற்றுக்கணக்கான இதர எளியதும், சிக்கலானதுமான கருவிகளை வெகு லாகவமாகவும், தேவைக்கேற்ப டிரான்ஸிஸ்டரைப்போல சிறியதாகவும் ஸிங்க்ரோஸைக்ளோட்ரானைப்போல் பெரியதாகவும் உற்பத்தி செய்கிறார்கள்.

பல வகைப்பட்ட பொருள்கள், இவைகளின் மேன்மை, ஆராய்ச்சி மற்றும் முற்போக்குள்ள சாதனை, வளர்ச்சியின் வேகம், இவை அனைத்தும் ஒருங்கே அமைந்து பிலிப்ஸை ஒரு அரும் பெரும் ஸ்தாபனமாக போற்றச் செய்கின்றன. அது மட்டுமல்ல. பிலிப்ஸின் தனி சிறப்பு என்ன வெனில் இது உண்மையிலேயே ஒரு சர்வதேச ஸ்தாபனம் என்பதே யாகும். ஆம். பிலிப்ஸின் விற்பனை அளவில் 90 சதவிகிதம், முதலீட்டில் 65 சதவிகிதம், உழைப்பாளர்களில் 66 சதவிகிதம் ஹாலண்டு நாட்டிற்கு வெளியிலுள்ள நாடுகளில் பரவி இருக்கிறது.

மேலும் எங்கும் பிலிப்ஸ் அந்தந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தோடு இணைந்து இயங்குகிறது. குறிப்பாக இந்தியாவில் பிலிப்ஸ் ஸ்தாபனம் பல வகையிலும் நாட்டிற்கு தொண்டு செய்து வருவதோடு சமுதாயத்தின் சீரான சூழ்நிலைக்கும் முன்னேற்றத்திற்கும் தனிப்பட்டநபரின் சந்தோஷத்திற்கும் பாடு படுகிறது.

75 YEARS OF PROGRESS PHILIPS 1891-1966

IN INDIA SINCE 1930



அன்றாட வாழ்க்கை வளம் பெற அறிவு, தொழில், தகவல், பொழுது போக்கு, உடல் நலம், விவசாயம், ஆராய்ச்சி, ஆகிய துறைகளில் பிலிப்ஸ் அயராது உழைத்து வருகிறது.

IWTP 3451

மங்களகரமான தீபாவளி வாழ்த்துகள்

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

3 ரத்தினங்கள்

ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும்-பலத்திற்கும்

அருண
ஸ்தீரீகள் டானிக்

பாலப்ராஸா
குழந்தைகள் டானிக்

ஆயுர்வேதாஸ்ரமம் பிரைவேட் லிட், சென்னை — 17

EASTERNS.

ஓவியர்: ஆர். நடராஜன் குடமெடுத்துப் புனலெடுக்கக் கோலநடை யிடுவாள்

பார்லிமென்ட் ஹாஸ்யம்

கே. ஸ்ரீனிவாஸன்

உலகில் எங்கெல்லாம் பார்லிமென்ட் உள்ளதோ அங்கெல்லாம் ஹாஸ்யமும் உண்டு. காரசாரமாக அனல் கக்கும் பேச்சாளரைக்கூட ஒரு சிறு ஹாஸ்யம் குலுங்கச் சிரிக்கும்படி செய்யும். பிரிட்டிஷ் பார்லிமென்டில் சுடச் சுடக் கொடுப்பதும் கொஞ்சமும் தயங்காமல் வாங்கிக் கட்டிக்கொள்வதும் மிகவும் சகஜமான சம்பவங்கள். ஒரே வார்த்தையில் கூறிஞல் ஹாஸ்யம் பார்லிமென்டுக்கு இன்றியமையாதது. இந்தியா சுதந்தரம் அடையுமுன், அப்போது இருந்த மத்திய சட்ட சபையில், காலஞ்சென்ற தீரர் சத்தியமூர்த்தியின் சொல்லம்புகள் பிரசித்தி பெற்றவை.

நிதி அங்கத்தினராக இருந்த ஸர் ஜேம்ஸ் கிரிக்குக்கு, மகாத்மா காந்தி, காங்கிரஸ், கதர்க் குல்லாய் முதலியவற்றில் எதுவுமே பிடிக்காது. ஒரு தடவை அவர் மகாத்மாவின் மேல் வசைமாரி பாடிவிட்டு உட்கார்ந்தார். காங்கிரஸின் சார்பில் பேச எழுந்த சத்தியமூர்த்தி, ''சபாநாயகர் அவர்களே, என் நண்பர் நிதி அங்கத்தினர், ஸர் ஜேம்ஸ் ஹிட்லர், மன்னிக்கவும், ஸர் ஜேம்ஸ் கிரிக்.....'' என்று ஆரம்பித்தார். சபையே இடிந்துவிடும்போல் சிரிப்பு உண்டாயிற்று. ஸர் ஜேம்ஸ் கிரிக்கின் முகத்தில் எண்ணெய் வழிந்தது.

பார்லிமென்டை வேடிக்கை பார்க்க வருபவர்கள் அனைவரும் விதிகளையும் காரிய முறையையும் தெரிந்து வைத்துக் கொள்ள முடியாது அல்லவா? அவர்கள் சபை ஆரம்பிக்குமுன் செய்யும் சேஷ்டைகள் அனந்தம். ஒரு தடவை என் பத்திரிகைச் சகாவின் உறவினருக்குப் பொதுமக்கள் 'காலரி'யிலிருந்து 'நோக்கர் பாஸ்' வாங்கிக் கொடுத்திருந்தேன். அவர் தம் ஆசனத்தில் உட்கார்ந்தும் விட்டார்.

பதினெரு மணிக்கு லோக சபை துவங்கும். பத்திரிகை நிருபர்கள் ஐந்து நிமிஷங்களுக்கு முன் வந்துவிடுவார்கள். என் நண்பரின் உறவினர், தம் உறவினரைப் பார்த்ததும் அடித்துப் புரண்டு நாலுகால் பாய்ச்சலில் வழியில் இருந்த மறைப்புப் பலகைகளைத் தாண்டிக்கொண்டு வந்தார். ''ஏய் விச்சா, இதோ வருகிறேன்'' என்று வேறு சப்தம் செய்தார். ஒரு பகுதியிலிருந்து மற்றெரு பகுதிக்குப் போவதைப் பாதுகாப்புப் போலீஸார் அநுமதிக்க மாட்டார்கள். ஆகவே, அவரை இரண்டு போலீஸ்காரர்கள் துரத்திஞர்கள். இந்த ஓட்டப் பந்தயம் எதிர்பாராத விதமாக முடிவுபெற்றது. ஓடியவரின் அரை வேஷ்டி அவிழ்ந்து விழுந்துவிட்டது!

பொதுமக்கள் 'காலரி'யிலிருந்து சபைக்குள் எட்டிப் பார்க்கக் கூடாது. உண்மையில் பொது மக்கள் கையில் கொண்டு போகும் பை, கைத்தடி, குடை, புத்தகங்கள் முதலியவற்றைப் பாதுகாப்புப் போலீஸார் வாங்கி வெளியே வைத்துவிடுவார்கள். ஸர் ரெஜினல்ட் மாக்ஸ்வெல் ஒரு தடவை மகாத்மா காந்தியைத் திட்டுவதைச் சகிக்காத ஸ்ரீ சமன்லால் என்ற பத்திரிகையாளர் தம் தோல் பையை விசிறி அவர்மேல் எறிந்தார். குறி தவறிவிட்டது.

காகிதங்கள், பென்ஸில், பேஞ முதலியவற்றைப் பத்திரிகை நிருபர்கள் மட்டுமே உள்ளே கொண்டு செல்லலாம். ஏனென்ருல் காகிதத்தை எறிந்து ஒருவரைத் தாக்க முடியாது அல்லவா? தவிர, சபையில் ஏதாவது வாதப் பிரதிவாதம் நடக்கும்போது, பிரதமர் இருக்கிருரா என்று தெரிந்து கொள்ள, நிருபர்கள் உள்ளே குனிந்து பார்ப்பார்கள். ஆனுல் நிருபர்கள் கூடத் தங்கள் காகிதங்களை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும். உள்ளே காகிதம் பறந்து விழுந்துவிட்டால் இரண்டு நிமிஷங்களில் போலீஸார் வந்துவிடுவார்கள்.

ஒரு தடவை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தின் பிரதிநிதி ஸ்ரீ டர்னர் உள்ளே குனிந்து பார்த்தபோது அவருடைய பொய்ப் பற்கள் சபாநாயகரின் மேஜைமேல் விழுந்துவிட்டன. சபாநாயகர் ஒரு கணம் பயந்தே போய்விட்டார். ஸ்ரீ அனந்தசயனம் ஐயங்கார் சபாநாயகராக இருந்தபோது ஒரு பத்திரிகை நிருபர் தம் குறிப்புப் புத்தகத்தை உள்ளே நழுவ விட்டார். ''இட்டிலிப் பிரியரான ஸ்ரீ அனந்தசயனத்துக்கு ஓர் இட்டிலிப் பொட்டலத்தைப் போட்டிருக்கக் கூடாதோ?'' என்று ஒரு பத்திரிகைச் சகா கேட்டார்.

இன்று உள்ள லோக சபையில் ஹாஸ்யப் பிரியர்களின் எண்ணிக்கை குறைவு. முன் வரிசையில் எதிர்த் தரப்பில் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீ எச். வி. காமத்துக்கு இடைச் செருகல் ஹாஸ்யம் மிகவும் பிடிக்கும். கேள்விகளைக் கேட்கும்போது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கக் கூடாது என்று சட்டம் உண்டு. ஆனுல் காமத்தைப் பொறுத்தவரை, இந்தச் சட்டம் அமலாவது சிரமம். ஏனென்ருல் அவருடைய கேள்விகளுக்குப் பூர்வபீடிகை பலமாக இருக்கும். உதாரணமாக, ''சபாநாயகர் அவர்களே, தேர்தலுக்குப் பணமூட்டைகளின் அநுதாபத்தை நாடும் காங்கிரஸ் இந்த விஷயத்தில் எவ்வளவு தூரம் நாணயமாக நடந்து கொண்டிருக்கிறது....'' என்று அவர் சொல்வதைச் சொல்லிவிடுவார்.

ஸ்ரீ காமத் முன்னுள் ஐ.ஸி.எஸ். காரர்; நேதாஜி போஸின் பரம பக்தர். இன்றும் நேதாஜிக்குத் தகுந்த ஞாபகச் சின்னம் எழுப்ப அரும்பாடுபட்டு வருகிருர்.

ஸ்ரீ காமத் நையாண்டி செய்யாத மந்திரிகள் இல்லை. உதாரணமாக, பார்லிமென்ட் விவகார மந்திரி ஸ்ரீ சத்தியநாராயண ஸின்ஹா, பலமாக 'ஸென்டு' வாசனைத் திரவியங்கள் உபயோகிப்பவர். ஒரு முறை ஸ்ரீ ஸின்ஹா பதில் சொல்ல வேண்டிய கட்டம் வந்தது. ஆனுல் ஸ்ரீ ஸின்ஹாவை ஆசனத்தில் காணவில்லை. ''எங்கே ஸ்ரீ ஸின்ஹா? இப்போதுகூட 'ஸென்டு' மணம் கமழ்ந்ததே!'' என்று ஸ்ரீ காமத் கேட்டுச் சபையில் ஆரவாரத்தை உண்டுபண்ணிஞர்.

ஸ்ரீ காமத் எப்போதாவது பின் வாங்கும்படி நேர்ந்தால் அதற்குக் காரணமானவர் உணவு மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம். உணவு மந்திரி பல்லைக் காட்டுகிருர் என்று அவர் ஏதோ கூறிஞர். ஸ்ரீ சுப்பிரமணியம் சீறிஞர். ''ஆட்டுத் தாடியை வைத்துக்கொள்வதஞல் மட்டும் ஒருவர் அறிவாளியாகிவிட முடியாது. முழங்கால் வரைக்கும் சட்டை போட்டுக்கொண்டால் அவர் குருதேவ் (கவி ரவீந்திரர்) ஆகிவிடமாட்டார்'' என்ருர். ஸ்ரீ காமத் நீண்ட சட்டை அணிவார்.

ஸ்ரீ காமத்தைப் போல் அவர் சகா ஸ்ரீ ஹேம் பருவாவும் ஹாஸ்யப் பிரியர். இவருடைய பீடிகைகளும் பிரசித்தம். கேள்வி நேரத்தில் ஒருவர் ஒரு கேள்விதான் கேட்கலாம். இதஞல்

ஸ்ரீ பருவா தம் பீடிகைகளுக்குப் பிறகு, ''சர்க்கார் இதற்குப் பதில் சொல்லுமா? (அ) நாகர்களின் தொந்தரவு மட்டுப்பட்டதா? (ஆ) நாகர்கள் பாகிஸ்தானுடன்....?'' என்பார். இதனுல் ஸ்ரீ பருவா கேள்வி கேட்கும்போது சபையோர் ''அ, ஆ ...''என்று ஆரம்பித்து விடுகிருர்கள்.

காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன் ஹாஸ்யப் பிரியர். அவருக்கு ஹிந்தி வெறியர்களைக் கண்டால் சுட்டோடு பிடிக்காது. டாக்டர் கோவிந்த் தாஸை ஒரு முறை அவர் நையாண்டி செய்தது ஞாபகம் இருக்கிறது. ''டாக்டர் கோவிந்த் தாஸுக்கு வாழ்வில் இரண்டு லட்சியங்கள் இருக்கின்றன. ஒன்று ஹிந்தி; மற்ருென்று, பசு வதைத் தடுப்பு. என்றைக்கு அவர் பசுமாட்டை ஹிந்தி பேச வைக்கிருரோ அன்றைக்கு அவருடைய அபிலாஷைகள் பூர்த்தியாயின என்று கொள்ளலாம்'' என்ருர்.

பார்லிமென்ட் முறைகளில் ஊறியவர்கள்தாம் சுடச்சுடப் பதில் கொடுப்பார்கள். ஸ்ரீ என். ஜி. ரங்கா பழைய காங்கிரஸ்காரரர். ஆனுல் இன்று சுதந்தரக் கட்சியின் தலைவர். ஒரு தடவை அவர் பேசும்போது எதையோ படித்துத் தம் வாதத்துக்குப் பக்கபலம் கொடுக்க எண்ணினுர். ஆனுல் அவர் பேசிக்கொண்டே தம் சட்டைப்பையில் எங்கும் துழாவியும் அந்தக் காகிதம் கிடைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியிலிருந்து ஒருவர், ''தனித் துறைக்கு ஆதாரம் எங்கே கிடைக்கும்?'' என்ருர். ஸ்ரீ ரங்கா பயந்துவிடவில்லை. ''நான் தேடுவது உங்களுக்கான ஆதாரமே. அது கிடைக்காததில் என்ன ஆச்சரியம்?'' என்று சுடச் சுடப் பதில் அளித்தார்.

சுதந்தரக் கட்சியின் அங்கத்தினரான ஸ்ரீ கபூர் ஸிங்கும் ஹாஸ்யப் பிரியர். ஒரு முறை அவர் காலஞ் சென்ற ஜின்னுவின் பிரபல ஹாஸ்யத்தை ஞாபகப்படுத்தினுர். இந்து - முஸ்லிம் ஒற்றுமை நடக்காத காரியம் என்று ஜின்னு வாதாடினுர்; ''மகாத்மா காந்திக்குப் பசு தாயார். எனக்குப் பசு மாமிசம் மிகவும் பிடிக்கும். ஆகையால் நான் மாமிசம் சாப்பிடும்போது மகாத்மாவின் தாயாரைத்தான் சாப்பிடுகிறேன், அல்லவா?''

கிட்டத்தட்ட இந்த மாதிரி ஸ்ரீ கபூர் ஸிங் ஒரு தடவை விகடம் செய்தார். ஜன சங்க அங்கத்தினர்கள் பசு வதையைத் தடுக்க வேண்டும் என்று கோஷம் செய்து, ''சபாநாயகர் அவர்களே, உங்கள் அபயம் எங்களுக்குத் தேவை'' என்ருர்கள்.

ஸ்ரீ கபூர் ஸிங் எழுந்து, ''சபாநாயகரே, அந்த அபயம் எனக்கும் தேவை'' என்ருர்.

சபாநாயகர், ''எதற்காக?'' என்றதும் ஸ்ரீ கபூர் ஸிங்,''பசு வதையைத் தடுக்க வேண்டும் என்று இவர்கள் கோஷம் போடுகிருர்கள். நான் மாமிசம் சாப்பிடுபவன். எனக்கு மாமிசம் கிடைக்க உங்கள் உதவி தேவை'' என்ருர்.

பார்லிமென்டில் சோகரசங்கூடச் சமயத்தில் ஹாஸ்யமூட்டும் வகையில் அமைந்துவிடும். அரியலூரில் நடந்த ரெயில் விபத்திஞல் ஏற்பட்ட சாவைப் பற்றித் தமிழ் நாட்டு அங்கத்தினர் ஸ்ரீ வல்லத்தரசு விளக்கியதுடன் நிற்கவில்லை; தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார். முகத்தில் துண்டைப் போட்டுக்கொண்டதனுல், அவர் சபாநாயகரைப் பார்க்கவில்லை. சபாநாயகர் எவ்வளவு வற்புறுத்தியும் அவர் நிறுத்தவில்லை.

ஆனுல் ஹாஸ்யம் எதிர்பாராத விதமாகவும் அமையும். நாகாலாந்தில் எப்படிக் கலகக்காரர்கள் கொட்டம் அடிக்கிருர்கள் என்பதை விளக்க ஒரு நாகர் நடிக்க ஆரம்பித்துவிட்டார். ''நாகர்கள் வந்ததும் நாங்கள் ஓடு

வோம்'' என்று சொல்லி, அவர் குறுக்கும் நெடுக்குமாக ஓட ஆரம்பித்துவிட்டார். "அங்கத்தினர் தம் இடத்தைவிட்டு நகரக்கூடாது'' என்ற சபாநாயகரின் தாக்கீது அவர் காதில் விழவில்லை. ''நாகர்கள் சுடுவார்கள், அப்போது நாங்கள் ஒளிந்துகொள்வோம்'' என்று சொல்லி, அந்த அங்கத்தினர் மேஜைக்கும் தம் ஆசனத்துக்கும் இடையே உள்ள இடத்தில் உட்கார்ந்துவிட்டார். சில நிமிஷங்களாகியும் அவர் எழுந்திருக்கவில்லை. சபாநாயகர் அவரை ஆசனத்தில் உட்கார வைப்பதற்குள் என் பாடு உன் பாடு என்று ஆகிவிட்டது!

சமயத்தில் அங்கத்தினர்கள் சபாநாயகர் யாரைக் கூப்பிடுகிறார் என்று கவனிக்காமல் பேச முற்படுவார்கள். பேச விரும்புபவர்கள் முன்கூட்டியே தங்கள் பெயரைச் சொறடாவினிடம் கொடுக்க வேண்டும். ஒரு சமயம் கோயம்புத்தூர் அங்கத்தினர் ஸ்ரீ கருத்திருமன் முறை வந்ததும் சபாநாயகர் அவர் பெயரைக் குறித்தார். மற்றொரு தென்னக அங்கத்தினர் எழுந்து வெளுத்து வாங்கிவிட்டார். ஸ்ரீ கருத்திருமன் அப்போது சபையில் இல்லை. அவர் உள்ளே வந்ததும் தாமும் பெயர் கொடுத்திருப்பதை நினைப்பூட்டினார். சபாநாயகர், ''நீங்கள் பேசியாகிவிட்டதே!'' என்றார். சபை நடவடிக்கைகளைச் சுருக்கெழுத்தில் எழுதுபவர்களும் ஸ்ரீ கருத்திருமன் பேசியதாகவே எழுதியிருந்தார்கள்!

சபையில் உள்ளவர்களின் பெயர் எல்லாமே அநேகமாகச் சபாநாயகர் ஹுகம்ஸிங்குக்கு மனப்பாடம். இருந்தாலும் அவரவர்கள் ஸ்தானத்தில் இருந்தால்தான், தம் முன் உள்ள விளக்கப் படத்திலிருந்து பெயரையும் நபரையும் சரியாக அடையாளம் கண்டுகொள்வார். இன்றும் அவருக்குச் 'செழியன்' என்று சொல்ல வராது; 'செஜியன்' என்பார். ஸ்ரீ கந்தப்பன் என்ற பெயரும் அவருக்கு எளிதாக வாயில் நுழைவதில்லை.

ஆனால் கேள்வி நேரத்தில்தான் அதிக வேடிக்கை ஏற்படும். துவிவேதிகளும் திரிவேதிகளும் சதுர்வேதிகளும் நிறைந்த சபையில் தவறான பேர்வழிகள் எழுந்திருப்பது சகஜம். இதைப் பயன்படுத்திக்கொண்டு, துடியாக உள்ள அங்கத்தினர்கள் கேள்வியைக் கேட்டுவிடுவார்கள்.

காங்கிரஸ் அங்கத்தினர்களில் ஒருவரான திவான்சந்த் சர்மா மிகவும் குள்ளமானவர். அவர் எழுந்து நின்றால்கூட உட்கார்ந்திருப்பது போல் தோன்றும். ஒரு சமயம் சபாநாயகர் ஸ்ரீ அனந்தசயனம், ''ஸ்ரீ சர்மா எழுந்து நின்று கேள்விகள் கேட்க வேண்டும்'' என்றார். ஸ்ரீ சர்மா பரிதாபமாக, ''ஐயா, நான் நின்றால்கூட உட்கார்ந்திருப்பது போலத் தோன்றும்'' என்றார்.

''பார்லிமென்டில் ஐந்நூறு அங்கத்தினர்களுக்கு மேல் இருக்கிறார்களே! எப்படி அவர்கள் எல்லாரையும் உங்களால் தெரிந்துகொள்ள முடியும்?'' என்று ஒரு நண்பர் வியந்தார். நானும் பெருமையாக, ''என்ன செய்வது?'' என்று சொன்னேன். உண்மை என்னவென்றால் பார்லிமென்டில் ஐம்பது பேர்களைத் தெரிந்துகொண்டால் போதுமானது. மீதிப் பேர்வழிகள் வாயைத் திறப்பது அபூர்வம். ஒருகால் அவர்கள் பிரிட்டிஷ் பார்லிமென்டில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினருக்குப் பிரதமர் டிஸ்ரேலி அளித்த புத்திமதியைக் கடைப்பிடிக்கிறார்களோ என்னவோ? டிஸ்ரேலி என்ன சொன்னார், தெரியுமா? ''ஏன் இந்த மனிதர் அடிக்கடி பேசுகிறார் என்று வியப்பதற்குப் பதில் அவர் ஏன் பேசுவதில்லை என்று வியப்பது மேல் அல்லவா?'' என்றார். ★

புரிந்து கொண்டேன்

ஆர். சூடாமணி

மாலை ஆட்டம் சினிமாப் பார்த்துவிட்டு நான் கூட்டத்திலிருந்து பஸ் கிடைத்து வீடு திரும்பிய போது இரவு மணி பத்து. அப்பா ஏதோ படித்துக்கொண்டிருந்தார். பகவத்கீதையோ, பக்தர் சரிதமோ, அல்லது இந்துமத தத்துவம் குறித்த ஏதாவது நூலோ இருக்கலாம். ஒரு தரம் கண்ணுயர்த்தி என்னைப் பார்த்துவிட்டு மீண்டும் படிக்க ஆரம்பித்தார். நேரங்கழித்து வீடு திரும்பிய குற்ற உணர்வும் அப்பாவிடம் பயமும் சேர்ந்து என்னுள் இனம் புரியாத ஆத்திரத்தைக் கிளற நான், ''நீங்கள் ஒன்றும் அப்படிக் கோபப்பட வேண்டாம். ஏதோ நேரமாகிவிட்டது'' என்றேன் வலிய.

''நான் எங்கே கோபித்தேன்?'' என்றார் அவர் தலைநிமிர்ந்து.

''வாயால் சொன்னால்தான் கோபமா? உங்கள் பார்வையே போதுமே! எனக்குப் புரியாதாக்கும்!''

''அட! பார்வையிலிருந்தே எல்லாம் புரிந்து கொள்கிறாயா? கெட்டிக்காரனாயிருக்கிறாயே!'' என்று புன்னகை பூத்தார்.

''சினிமாவுக்குத்தான் போயிருந்தேன். அதனால் என்னவாம்?'' என்றேன் பின்னும் ஆத்திரமாக. எப்படியாவது அவரிடம் வசைபெற்றுக் கொண்டுவிட்டால் தவறும் தண்டனையும் ஒன்றை ஒன்று ஈடுகட்டிவிட, என் மனம் லேசாகிவிடும் அல்லவா?

''சினிமாவுக்குப் போனால் தவறு ஒன்றுமில்லையே! இருபது வயசுப் பையன் அப்படி உல்லாசமாய்த்தான் இருக்க வேண்டும்'' என்று கூறி, அவர் மீண்டும் படிக்கலானார்.

நான் கோபமாய் உள்ளே சென்றேன். அவரைப் பேச வைப்பதற்காகக்கூட, நான் யாரோடு சினிமாவுக்குப் போயிருந்தேன் என்பதைக் கூறவில்லை. ஹாஜி ஹமீத் ஸாஹேபின் மகனுடன் நான் சென்றிருந்ததைச் சொல்ல எனக்கு உள்ளூறப் பயந்தான். அப்பாவின் அந்தப் பஞ்சகச்ச வேட்டி, நரைத்த குடுமி, ஈசனின் சடைக் கற்றையிலிருந்து பிறையை எடுத்து அதன் முனையினால் நெற்றியில் மூன்று கோடுகள் தீற்றிக் கொண்டதுபோல் இரவும் பகலும் இடையறாமல் வெள்ளை வெளேரென்று மின்னும் திருநீறு. இவர் ஓர் இந்து என்று பறைசாற்றும் வடிவம்.

போதாததற்கு அப்பா கோயில் அர்ச்சகர் வேறு. இப்போதுதான் நாங்கள் நல்ல நிலையில் இருக்கிறோமே, இன்னமும் இவருக்கு ஏன் இந்தத் தொழில்? அவர் மக்களே நாங்கள் மூன்று பிள்ளைகள்தாம். எப்படியோ சுயமுயற்சியும் பிறர் உதவியுமாய் எங்கள் மூவரையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டார். பெரிய அண்ணா குடும்பத்துடன் பெங்களூரில் வேலையாய் இருக்கிறான். நானூறு ரூபாய் மாத வருவாயில் இங்கும் ஏதோ அனுப்பிக் கொண்டிருக்கிறான். இரண்டாம் அண்ணா சுந்தரத்துக்கு இங்கேதான் ஒரு தொழிற்சாலையில் வேலை. இருநூற்றைம்பது சம்பாதிக்கிறான். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. சொந்தத்துக்கென்றும் அதிகம் செலவழித்துக் கொள்ளமாட்டான். (கருமி ஜன்மம்!) எல்லாம் வீட்டுக்குத்தான். மூன்றாவது நான். தற்சமயம் வேலையில் அமராமல் சினிமாப் பார்ப்பதற்கே நேரம் போதாமல் திண்டாடுகிறேன். என்றாலும் வேலை என்றாவது கிடைக்காமலா போய்விடும்? எத்தனை இடங்களுக்கு மனுப் போட்டிருக்கிறேன்!

அண்ணன்மார்கள் இருவரையும் விட அதிகம் படித்தவன் நான்தான். குடும்பத்தின் ஒரே 'கிராஜுவேட்'. நாளைக்கே ஆயிரம் ஆயிரமாய்ச் சம்பாதிப்பேன். இத்தனை இருக்கும் போது இந்த அப்பாவுக்குக் கோயிலில் மணி அடிக்கும் உத்தியோகம் எதற்கு? அது அவருக்கு 'மனநிறைவு' தரும் வேலையாம். சுவாமியின் பக்கத்திலேயே இருந்து தொண்டு புரிவது பெரிய பாக்கியமாம்.

''கோயிலில் மட்டுந்தானா சுவாமி இருக்கிறார்?'' என்ற ரீதியில் மதத்தைப் பற்றி அப்பாவுக்கே லெக்சர் அடிக்கக்கூடிய தகுதி என்னிடம் இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. கிராஜுவேட்டா சும்மாவா? ஆனால் அவருக்கு எதிரே பேசத் தைரியம் வந்தால்தானே? நாய்க்குட்டியைப் பார்ப்பதுபோல் ஒரு பார்வையோடு, ''உனக்கு ஏண்டாப்பா இந்தப் பெரிய விசாரமெல்லாம்? தலையை வலிக்கப் போகிறது. போய்ச் சினிமா பார்'' என்று சிரித்தாரானால் என்னால் தலை நிமிரவே முடியாமல் போய் விடுகிறது. அப்பா ஏன் சிரிக்க மாட்டார்? இந்த வயசிலும் வலுவான வெள்ளைப் பற்கள், ஒன்றுகூட விழாமல், வைத்துக்கட்டிய அடுக்கு மாதிரி, அழகாக இருக்

கின்றன அல்லவா? அதைக் காட்டிக் கொள்ள விரும்பித்தான் அடிக்கடி சிரிக்கிறார்.

நான் யாராரோடெல்லாம் நட்பு வைத்திருக்கிறேன் என்று தெரிந்தால் அப்பா சும்மா இருப்பாரா? இந்துக்கள் மட்டுமல்லாமல் முஸ்லிம், கிறிஸ்தவர், பார்ஸி இப்படி எத்தனையோ பிற மதத்தினரைக் கொண்டது என் நண்பர் குழு. இதையெல்லாம் அப்பாவிடம் சொல்லவே எனக்கு நடுக்கம். அவர் தன்மயமாய் லயித்துக் கண்மூடி, ''நீலக்ரீவம் உமாச்லிஷ்டவபுஷம் த்ரிபுராந்தகம்'' என்பதுபோல் ஏதாவது சொல்லி இன்ப ஒளியாய்ப் பொலிந்துகொண்டிருக்கும்போது, ஹாஜி ஸாஹேபின் மகன் என் நண்பன் என்று சொல்லிக் கொள்ளத் துணிவு வராது. நாலாம் வகுப்பு வரையிலேயே படித்திருந்த இந்த அப்பா தமிழுடன் வடமொழியும் ஆங்கிலமும் தாமே பயின்று இத்தனை புலமை எப்படி அடைந்தார் என்பது எனக்கு மீளாத வியப்பு. கல்லூரியில் பேராசிரியர்கள் நடத்தும் பாடங்களையே பரீட்சைக்காகப் புரட்டும்போது எனக்குப் படித்த ஞாபகங்கூட வருவதில்லையே!

ஹாஜி ஹமீத் ஸாஹேபின் மகனைவிட எனக்கு ஹாஜியிடமேதான் அதிக ஈடுபாடு. என் அப்பா மாதிரியே அவரும் நல்ல உயரம். ஆனால் அப்பாவைப் போல் மெலிந்திருக்கமாட்டார். இடுங்கினாற் போலிருந்தாலும் தீட்சண்யம் பளிச்சிடும் கண்கள். நீண்ட மிருதுவான வெள்ளைத் தாடியை உருவியவாறு ஏதேனும் மதவிஷயமாக அவர் பேசும்போது மிகவும் கம்பீரமாய்க் காட்சி தருவார். இவரும் அப்பாவும் எதிரெதிராய் நின்று பேசினால் எத்தனை நன்றாக இருக்குமென்று கற்பனை செய்து முடிக்கு முன்பே அப்பாவின் வெண்ணீற்றை நினைத்து நடுநடுங்கி மானசிகமாகவே கன்னத்தில் போட்டுக் கொள்வேன்.

மெக்காவுக்கு ஹஜ் திருயாத்திரை சென்று வந்து ஹாஜி பட்டத்துக்கு உரியவரான ஹமீத் பாபாவின் வீட்டுக்கு நான் அடிக்கடி செல்வதுண்டு. அவர் மக்களைவிட அவர் பெரிதும் ஆசாரசீலர். மசூதிக்குப் போகத் தவற மாட்டார். மசூதியில் பெரியார் மௌஜன் நாளொன்றில் ஐந்து முறைகள் 'அல்லா ஹோ அக்பர்' என்று பிரார்த்தனைக்குக் குரல் கொடுக்கும்போது ஹமீத் நமாஜ் படிக்கத் தவறமாட்டார். குர்ஆன் வாசகங்கள் பதிந்த நமாஜ் பாயைக்கூட அவர் எனக்குக் காட்டியிருக்கிறாரென்றால் என்மீது அவருக்குள்ள அன்பைப்பற்றி என்ன சொல்வது? பாகிஸ்தான் போரின் போது நான் அவரிடம், ''என்ன ஹாஜி ஸாப், உங்கள் இனத்தவர் செய்யும் வேலையைப் பார்த்தீர்களா?'' என்றேன். அவர் முகமெங்கும் வேதனை நிரம்பிவிட்டது. தலை குனிந்து துயருற்ற யோசனையோடு தாடியைத் தடவியவாறே, ''தவறு செய்கிறார்கள் ராஜு பாய்! எங்கள் அல்லா இந்த இம்சையை ஒரு போதும் ஒப்பமாட்டார். அவர்கள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று அவர் கூறியபோது என் உள்ளம் உருகிவிட்டது. இப்படியெல்லாம் உணர்ச்சிமயமாய் அப்பா எதுவும் பேசுவதில்லையே!

ஒரு சமயம் அப்பாவுக்கு உடல் நலம் குன்றிவிட்டது. கடுமையான காய்ச்சல். இரண்டு வாரங்களாகியும் இறங்கவில்லை. வைத்தியச் சோதனைகளிலிருந்து காரணமும் பிடிபடவில்லை.

அப்பா கண்திறக்காமல் படுத்திருந்த காட்சி என் நெஞ்சைப் பிசைந்தது. மரமாக நீட்டிக் கிடந்தது அவர் உடல்; அருகில் அம்மாவின் கவலை தோய்ந்த முகம். சுந்தரமும் நானும் செய்வதறியாமல் தவித்தோம். நான்கு நாட்களாக நண்பர்களின் இல்லங்களுக்குக்கூட நாங்கள் செல்லவில்லை. நான் ஹமீத் பாபா வீடு செல்லாதது இருக்கட்டும், அண்ணன் சுந்தரம் ஹென்றி தேவதாஸனின் மனையை மறந்திருந்ததுதான் பேராச்சரியம். மிஸ்டர் தேவதாஸனின் வீடு எனக்கும் பழக்கந்தான். ஆயினும் சுந்தரத்துக்குத்தான் அங்கே அதிக நாட்டம். அது வேறு கதை. அண்ணனும் நானும் ஒருவரை ஒருவர் இரகசியமாய்ப் பார்த்து, அப்பாவின் மதப்பற்றினால் எங்களுக்குள் வளர்ந்த அச்சங்களையும் ஐயங்களையும் விண்டுரைக்க மாட்டாமல் உள்ளாகவே தவிக்கிற ஒரு நிலையை ஏற்படுத்தியிருந்த கதை அது.

அப்பாவின் நோயால் கவலை மிகுந்து நான் தோழமைக்கும் ஆசுவாசத்துக்கும் ஏங்கி ஒரு நாள் ஹாஜி ஸாஹேபின் இருப்பிடம் சென்றேன். என் கவலையினால் அநுதாபம் கொண்டு அவர் என் அப்பாவுக்காகத் தாம் வேண்டுகை செய்து கொள்வதாய்க் கூறி ஒரு தர்காவுக்கு என்னையும் அழைத்துச் சென்றார். தர்கா என்பது மசூதியினின்று வேறுபட்டது. தர்காவில் ஒரு பீர் (முஸ்லிம் பெரியார்) இறந்து போன 'கோரி'யாகிய சமாதி உண்டு. அந்தக் குறிப்பிட்ட தர்காவுக்குள் பிற மதஸ்தர்களும் செல்லலாமாகையால் நான் அநுமதிக்கப்பட்டேன். ஹமீத் பாபா பிரார்த்தனைப் பொருள்களாக ஒரு பச்சைத் துணி, மலர்களை அகலத் துணிபோல் தொடுத்து நுனியில் மல்லிக் குஞ்சங்கள் தொங்கிய பூச்சால்வை, காணிக்கையாக மூன்று நான்கு இனிப்புப் பூந்திப் பொட்டலங்கள், உண்டியில் போடக் கொஞ்சம் பணம் இவற்றுடன் வந்தார். பொருள்களைக் கோரியின் மீது சாத்திவிட்டு, அந்தக் காலஞ்சென்ற பீரிடம் என் தந்தையின் உடல் நலத்துக்காக வேண்டிக்கொண்டார். தர்காவில் பிரார்த்தனை அப்படித்தானாம். யாசிப்பவன் நேராக இறைவனை இறைஞ்சுவதில்லை. ''நாங்கள் பாவிகள். எம் முறையீட்டை அல்லா செவியேற்கமாட்டார். தாங்கள் உத்தமர். எமக்காக எம் கோரிக்கையை ஆண்டவனிடம் கூறுங்கள்'' என்று பீரிடம் வேண்டுவதுதான் மரபாம்.

என்பொருட்டு, என் தந்தை நலமுற, அந்த வேறு மதக் கிழவர் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தபோது நான் உள்ளம் நெகிழ்ந்து நின்றேன். இதுவும் அன்பின் வெளியிடு அல்லவோ? அன்பு இல்லாத இடந்தான் எது? ஆஸ்பத்திரியின் மீது குண்டு வீசிய இதயமற்றவர்களின் மதத்தையே சார்ந்த ஒருவருக்கு இத்தகைய இரக்கமும் பரந்த அன்பும் இருப்பது ஏதோ ஒரு மின்னல் தெறிப்பாகவும் அற்புத தரிசனமாகவுமே எனக்குத் தென்பட்டது.

தர்காப் பெரியவரான முஜாவர் பூந்தியிலிருந்தும் பூத் துப்பட்டியிலிருந்தும் சிறு அளவுகள் எடுத்து வழங்கிய பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு ஹமீத் பாபா வெளியே வந்தபோது நான், ''மிகவும் நன்றி ஹாஜி ஸாப்!'' என்றேன். மேலே ஏதும் பேச முடியவில்லை. அவர் என் தோளைத் தட்டிக்கொடுத்து, ''அதெல்லாம் சொல்லாதே பாய்! அல்லா தயை உள்ளவர். மனக்கவலையை நீக்குவார்'' என்று கூறி, என்னிடம் சிறிது பிரசாதம் கொடுத்தார்.

அவர் வாக்கும் பலித்தது. ஏற்கனவே சாமான்கள் அடைத்துக்கொண்டு குறுகியிருந்த என் வீட்டின் இரண்டு அறைகளையும் இன்பம் இன்னும் இறுக்கமாக அடைத்துக்கொண்டது. அப்பாவின் வெப்பம் நீத்த தெளிந்த முகத்துக்கு மேலாக அம்மாவின் ஒளிரும் பார்வை; பெரிய குங்கும வட்டம் துலங்கும் மஞ்சள் முகம்.

நான் ஹாஜியின் வீட்டுக்கு விரைந்தேன். நடு அறையில் அவர் வழக்கம் போல் மேற்கு நோக்கிப் படுத்திருந்தார். என் நண்பனும் உடன் இருந்தான்.

''ஹாஜி ஸாப், என் அப்பாவுக்குக் குணமாகிவிட்டது!''

''அப்படியா? மிகவும் சந்தோஷம். குறை நீங்கியதற்காக நான் தர்காவில் வேண்டுதலை நிறைவேற்றிவிடுகிறேன்.''

''உங்களுக்கு எப்படி நன்றி செலுத்தப் போகிறேன் ஹாஜி ஸாப்!'' என்று உணர்ச்சிவசப்பட்டுத் திக்கு முக்காடியவனாய்க் கூறினேன். அவருக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் போலிருந்தது அப்போது.

''நான் சொல்லட்டுமா?'' என்றான் என் நண்பன்.

''சொல்லேன்'' என்றேன் ஆவலாக.

''எங்கள் மதத்தில் சேர்ந்துவிடு'' என்றான் அவன் சிரித்துக்கொண்டே.

நான் துணுக்குற்றேன். ''போதும் விளையாட்டு!'' என்று ஹாஜி மகனைக் கடிந்தார். நண்பன் குறும்பாகத்தான் சொல்லியிருப்பான். ஆனால் என்னுள் அந்தப் பேச்சு ஒரு நடுக்கத்தை விளைக்காமல் இல்லை. ஆடும் மாடும் கோழியும் தின்பவர்கள், இவர்களிடையே ஒருவனாக என்னைக் கற்பனையில்கூடக் காண முடியவில்லையே! முதலில் அந்த எண்ணத்

தில்தான் அருவருப்புத் தோன்றியது. உடனே, எல்லா ருசிகளுமே பழக்கத்தில் விளைவதுதான் என்பதை நினைவுபடுத்திக் கொண்டேன்.

அடுத்த வாரத்தில் ஓர் இரவு அப்பா திண்ணையில் உட்கார்ந்து ஏதோ நூலில் ஆழ்ந்திருந்தார். பெரிய விஷயங்களைப் படிக்கும்போது அவ்வப்போது அவர் தலைநிமிர்ந்து மேலே நோக்கியவாறு படித்தவற்றைச் சிந்தித்து மனத்தில் சேர்த்துக்கொண்டு மீண்டும் குனிந்து படிப்பைத் தொடர்ந்த காட்சி, ஏதோ பொருளில் பாத்திரத்தைப் போட்டு அள்ளும்போது அவ்வப்போது அதை நிமிர்த்திச் சரியாய் நிறைத்துக்கொண்டு மீண்டும் அள்ளுவதற்குச் சாய்ப்பதை ஒத்திருந்தது.

இப்போதுதான் குணமாகிய உடம்பு. இராப் பொழுதில் வெளிக் காற்றில் உட்கார்ந்து லாந்தர் வெளிச்சத்தில் படிக்காவிட்டால் என்ன இவருக்கு?

''படுத்துக் கொள்வதுதானே அப்பா?''

அவர் நிமிர்ந்தார். ''ஆகட்டும். தூக்கம் வரவில்லை.''

''என்ன படித்துக்கொண் டிருக்கிறீர்கள்?''

''கடோபநிஷத்துப் பாஷ்யம்.''

'' 'போர்' அடிக்கவில்லை?''

அந்தப் பார்வை-என்னை நாய்க்குட்டியாய்க் கருதுவது போல் பார்ப்பாரே, அது - அவர் முகத்தில் மெல்லப் படர்ந்தது. ''உனக்கு எதற்கடா அப்பா இந்த விசாரமெல்லாம்?''

அவருடைய நிதானமும் பரிகாசமும் எனக்குச் சினமூட்டின. நன்ருக உடல் தேறி இதோ திடகாத்திரமாக அமர்ந்திருக்கிருரே, ஓர் இந்துவாக உபநிஷதம் படித்துக்கொண்டு. தம் நலத்தை உருவாக்கியவர் பிற மதத்தவர் ஒருவர் என்பதை அறிவாரா?

''உங்களுக்கு உடம்பு சரியானதற்குக் காரணம் யார் தெரியுமா?''

''தெரியுமே!''

''யாராம்?''

''கடவுள்.''

மீண்டும் என்னை மட்டம் தட்டுவது போல் அந்த வெண்மையான போலிப் பல் ஸெட்டை அவமதிக்கிற பற்கள் லாந்தர் ஒளியில் சுடர்ந்தன.

''நினைத்துக்கொண்டே இருங்கள். நீங்கள் நலம் அடைந்தது....''

''யாரால் வேண்டுமானலும் இருக்கட்டும். அவர்கள் மூலம் காத்தது கடவுள்தானே?''

என்ன சலனமற்ற பேச்சு! அதனுல் என்னுள் ஏதோ சிணுங்கல் நெளிந்தது. திடீரென்று ஓர் உத்வேகம், அவர் அமைதியை அதிர்ச்சிக்கு ஆளாக்க வேண்டும் என்பதாக. ஹமீத் பாபாவிடம் எனக்கு இருந்த ஈடுபாடும் அக்கணம் துணையாய் எழுந்து கொண்டது. கேள்வியைப் பேச்சில் உதிர்த்தேன்: ''நான் வேறு மதத்துக்கு மாற விரும்பினுல் நீங்கள் என்ன செய்வீர்கள்?''

விருப்பாய்க் கேட்டுவிட்டேனே தவிர, என் மேனி முழுவதும் பயத்தினல் வேர்த்து முள் குத்தியது. அதற்கேற்ப எதிரில் எத்தகைய காட்சி மாற்றம்! அவர் புத்தகத்தை மூடியவாறே எழுந்து நின்ற கோலம் என்னைத் தாக்க வந்த இடியொன்று மனித உரு எடுத்தாற்போலிருந்தது.



''என்னடா சொன்னுய்?''

அதிர்ந்து திக் கக்கிய எரிமலையாய் அவர் குரல் வெடித்தது.

''என்ன சொன்னுய்? இன்னெரு தரம் சொல்லு?''

''வந்து........'' கோழைத்தனமாய்க் குழறும் இது என் நாக்குத்தானு? அவர் கர்ஜனையில் நான் விதிர்விதிர்த்து நின்றுவிட்டேன்.

''இந்துவாய் இருந்து என்னடா கஷ்டமாகிவிட்டது உனக்கு? மதம் மாற வேண்டுமாமே துரைக்கு! சொல்ல வெட்கமாயில்லை? படித்து அறிவு பெற்றதெல்லாம் இந்தக் கோணல் புத்திக்குத்தானு? இன்னெரு தரம் இப்படி ஏதாவது உளறினுயோ எனக்குப் பொல்லாத கோபம் வரும், பத்திரம்!''

நெடிய தேகமும் அந்தப் பஞ்சகச்சமும் முப்புரி நூல் துவளும் வெறிய மார்பும் தொங்கும் சிகையும் சதாசிவப் பிறை தீற்றிய நெற்றித் தாவள்யமும் என்னை அச்சுறுத்திப் பின்னிருத்த, அவர் வேகமாய் உள்ளே சென்ருர். கண்டனத்தைச்

சவுக்கு வீச்சாய்ச் சுழற்றிய சீற்றக் குரல் இன்னமும் என் காதுகளை அடைத்தது. என்னுள் ஏதேனும் தீர்மானம் இருந்திருந்தால் எல்லாம் கணப் பொழுதில் கரைந்து விட்டது. நான் அசையவும் அஞ்சியவனாய் நின்றேன்.

இது அவருடைய நல்ல கோபம் போலும்! பின்னே பொல்லாத கோபம் இன்னும் . எப்படித்தான் இருக்குமோ?

அருகில் சலனம். நிழல் அசைந்த

உணர்வில் திரும்பிய என்முன் சுந்தரம் நின்றிருந்தான்.

"சுந்தரம்!"

"எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன், ராஜு."

"எனக்கு நிஜத்தில் மதம் மாறும் தீவிர எண்ணம் ஏதும் இல்லை. என்னவோ சொன்னால், அடேயப்பா! அந்தப் பேச்சுக்கே அப்பாவுக்கு எத்தனை கோபம் வந்துவிட்டது!"

"நான் என்ன செய்யப்போகிறேனோ தெரியவில்லையடா ராஜு."

அவன் எதைச் சொல்கிறானென்று புரிந்ததனால் கவலையுடன் பேசாமல் இருந்தேன். ஸ்டெல்லாவின் விஷயந்தான். ஸ்டெல்லா முத்தாபரணம் தேவதாஸன் ஹென்றி தேவதாஸின் புதல்வி. பாவம் சுந்தரம்! எத்தனையோ பெண்கள் இருக்கும்போது இப்படி ஒரு கிறிஸ்துவப் பெண்ணை......

"ஸ்டெல்லா இன்றுகூடக் கேட்டாள், அப்பாவிடம் சொல்லியாகிவிட்டதா என்று. நான் எப்படியடா அவரிடம் சொல்வேன் ராஜு?"

"வேறு மதம் என்றாலே புலியாய்ப் பாய்கிறார்."

"அதுதான் பயமாக இருக்கிறது. ஸ்டெல்லாவை நான் மணப்பதில் முதலில் மிஸ்டர் தேவதாஸனுக்கே சம்மதமில்லை. நம் அப்பாவும் ஆட்சேபிப்பார். இந்த நிலையில் எங்கள் அன்பு எப்படி ஈடேற முடியும்?"

"ஒன்று செய்யேன் சுந்தரம். நீயும் ஸ்டெல்லாவும் எங்கேயாவது ஓடிப் போய்க் கல்யாணம் செய்துகொள்ளுங்களேன்!" என்றேன் பளிச்சென்று. இருபது வயசில் இம்மாதிரி சித்திர விசித்திரமான கற்பனைகளே என் நெஞ்சை நிறைத்திருந்தன. கொஞ்சமாகவா சினிமாக்கள் பார்த்திருந்தேன்? உலகில் காதல்தான் பெரிய சக்தி என்று தோன்றியது. இந்த விஷயத்திலும் அப்பாவுக்கு லெக்சர் அடிக்க நான் தயார்தான். ஆனால் அவர் குரலை உயர்த்தினாலே என் வீரமெல்லாம் ஒடுங்கிவிடுகிறதே!

"எப்படி என் யோசனை, சுந்தரம்?"

"நேரம் ஆகிறதடா, போய்ப் படுத்துக்கொள்" என்று அப்பாவுக்குப் பிள்ளையாய் இவனும் என்னைச் சிறு குழந்தையாகவே எண்ணிப் பேசிவிட்டான். இவன் மிகப் பெரியவனாம். காதல் பண்ணிவிட்டான் அல்லவா பிரமாதமாய்? உலகத்தின்மீதே கசப்புக் கொண்டு நான் கோபத்துடன் படுக்கச் சென்றேன்.

சுந்தரம் அடிக்கடி தேவதாஸின் வீடு சென்று ஸ்டெல்லாவின் மூலம் அவள் தந்தையின் மனத்தை மாற்ற முயன்றுங்கூட ஏதும் பயன் கிட்டும் சூசகம் தெரியவில்லை.

மூன்று மாதங்கள் சென்றிருக்கும். ஞாயிறு நண்பகல். வேலைக்காகப் போட்டிருந்த மனுக்களில் எதற்கேனும் பதில் வந்திருக்கிறதா என்று அன்றாடம் தபாலை எதிர்பார்த்து ஏமாறும் வேலைக்கு அன்று ஓய்வு கிடைக்கப் பெற்றவனாய் உட்கார்ந்திருந்தேன். அப்பா இன்னும் கோயிலிலிருந்து திரும்பவில்லை. அறையில் ஜன்னல் புறமாய் நின்றிருந்த சுந்தரம் சட்டென்று திடுக்கிட்டவனாய் வெளியே வந்தான். ஹென்றி தேவதாஸனும் ஸ்டெல்லாவும் உள்ளே நுழைவதைக் கண்டு நானும் செயலற்றுத்தான் போனேன். வந்தவர்களை உபசரித்து உட்கார வைப்பதற்குள் நாங்கள் பட்ட பாடு!

"சர்ச்சிலிருந்து வருகிறோம். உங்கள் தகப்பனார் எங்கே?" என்றார் தேவதாஸன்.

"அப்பா....இன்னும்....கோயில்..... இன்னும் ....." நான் குழறினேனே என்று யாரும் இகழ வேண்டாம். என் அண்ணனால் ஓர் ஒலியைக் கூட அல்லவா வெளியில் கொண்டு வர முடியவில்லை? நானே தேவலை.

எதற்கு வந்திருக்கிறார்கள் இருவரும்? அப்பாவுடன் ஏதேனும் சண்டை பிடிக்கப் போகிறாரா தேவதாஸன்? அவர் இவர்களை இங்கே பார்த்தால் வீட்டில் கொலைதான் விழும்.

"என்ன ஸார் விசேஷம்?" என்றேன் மெதுவாக.

"இருக்கட்டும். உங்கள் தகப்பனார் வரட்டும்" என்று மிகமிக அமைதியாய்க் கூறினார் தேவதாஸன். எனக்கு இருதயம் உறைந்துவிட்டது. சுந்தரமோ உப்புநீர் பெருக்கும் கடலாகவே மாறியிருந்தான்.

"அவர் வர நேரமாகலாம். என்ன விஷயமென்று சொன்னால்....."

"இது நேரே அவரிடம் சொல்ல வேண்டிய விஷயம்."

சுந்தரம் நாற்காலியில் உட்கார்ந்த வேகத்தைப் பார்த்தபோது நாற்காலி இருக்கை தந்தது என்பதைவிட அவன் கால்களுக்கு ஆசிரயம் தந்தது என்பதுதான் உண்மை என்று தெரிந்துகொண்டேன்.

கதவுப் பக்கம் நிழல் அடர்ந்து நெருங்கியது. அப்பா உள்ளே வந்தார். களைத்திருந்த முகம் விருந்தாளிகளைக் கண்டதும் வியப்பால் நிறைந்தது.

தேவதாஸன் எழுந்து நின்று தம்மை அறிமுகம் செய்துகொண்டு, "இவள்



என் மகள் ஸ்டெல்லா முத்தாபரணம்'' என்றார்.

''சந்தோஷம். உட்காருங்கள். உங்களைக் காத்திருக்க வைத்ததற்கு மன்னிக்க வேண்டும். கோயிலில் இன்று ஓர் அன்பர் சுவாமிக்கு அபிஷேகம் செய்தார். தாமதமாகிவிட்டது.''

''பரவாயில்லை.''

சிறிது நேரம் யாருமே பேசவில்லை. அப்பாவுக்கு இந்த வேறு மதத்தினர்கள் தம் வீட்டுக்கு வந்து உட்கார்ந்திருப்பதே கோபமூட்டும் என்று நான் எண்ணியிருந்ததற்கு மாறாக, அவர் முகத்தில் வெறும் கேள்விக்குறி படர்வதைக் கண்டு சற்றே தைரியமடைந்தேன்.

''என்ன விஷயம் மிஸ்டர் தேவதாஸன்?'' என்றார் அப்பா.

''உங்கள் மகனே ஏதாவது சொல்வாரோ என்று பார்த்தேன். எல்லாரும் மௌனமாக இருப்பதனால் நானே சொல்கிறேன். பூர்வபீடிகை எதற்கு மிஸ்டர் ஹரிஹரன்? விஷயம் இது தான்: உங்கள் இரண்டு பிள்ளைகளும் என் குடும்பத்தோடு சிநேகிதம் கொண்டவர்கள்.......''

''அப்படியா?''

அப்போதே பூகம்பம் எதிர்பார்த்தேன். நிகழவில்லை. என் மன இறுக்கம் பின்னும் வலுத்தது. சுந்தரமோ சங்கடத்துடன் நாற்காலியில் நெளிந்துகொண்டிருந்தான்.

''உங்கள் பெரிய பையனும் இதோ என் மகள் ஸ்டெல்லாவும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள்.....''

அதோ! மாதக் கணக்காய் நாங்கள் சாதுரியமான பின்னணியும் முன்கதையும் அமைத்துங்கூட அப்பாவிடம் வெளியிடத் துணிந்திராத பரம ரகசியத்தை அந்த மனிதர் எவ்வித நாசுக்கு உணர்வுமின்றிப் பொத்தென்று போட்டு உடைத்துவிட்டார்.

சுந்தரத்தின் முகம் வெளிறிப் போயிற்று. எனக்கோ நாவே அசையவில்லை. அம்மாவின் கண்கள் அதிர்ச்சியில் வெறிப்பதைக் கண்டு பார்வையை அவசரமாய் விலக்கிக் கொண்டால், எதிரே அப்பாவின் முகம். அதில் சிறிது நேரம் எவ்வித உணர்ச்சியுமே இன்றி மரத்தாற் போன்ற வெறுமை. அவருடைய கண்கள் விரிந்து சுந்தரத்தை மொய்த்துக்கொண்டன.

''சுந்தரம், என்னடா இது?''

தணிந்த குரல். நெருப்பு உள்ளே கனியும் தணலோ?

''நிஜமாகவா சுந்தரம்?''

பதில் இல்லை.

''டேய், உன்னைத்தானடா! இவர் சொல்வது நிஜந்தானா?''

அந்தக் குரலினால் அதிர்ந்து யந்திர விசையுடன் தலைநிமிர்ந்த சுந்தரம், ''ஆமாம் ..... அதாவது ..... வந்து ..... '' என்று உளறியவாறே துணை தேடுவதுபோல் என் பக்கம் ஒரு கெஞ்சல் பார்வையை அவசரமாய்த் தள்ளினான்.

அப்பாவின் குரல் அதிகாரமாய் முழங்கியது.

''இன்ன பெண்ணை விரும்புகிறேன்; அவளைக் கைப்பிடித்து என்றைக்கும் காப்பாற்றுவேன் என்று சொல்லத் திடமில்லாத கோழையா நான் பெற்ற பிள்ளை?''

அதற்குப்பின் சிறிது நேரம் என்ன நடந்தது என்று எனக்கே சரியாய்த் தெரியாது. ஒரே குழப்பம், வியப்பு! சற்றுப் பொறுத்து அப்பா ஸ்டெல்லாவிடம், ''என் வீட்டில் விளக்கேற்ற நீ வருவதானால் எங்களுக்கு எல்லாம் மிகவும் மகிழ்ச்சி குழந்தாய்!'' என்று கனிவுடன் சொல்லிக்கொண்டிருந்தார்.

''மிஸ்டர் ஹரிஹரன், எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீங்களா இந்தச் சம்பந்தத்தை ஒப்புகிறீர்கள்?'' என்றார் தேவதாஸன்.

''இதில் ஆச்சரியம் என்ன? எவனுக்கு முன் அனைவரும் சமமோ அந்த ஆண்டவனின் பூஜாரியாய் இருந்துகொண்டு நானே மதம், குலம், இனம் என்றெல்லாம் வேற்றுமை பாராட்டினால் நான் குறுகிய மனத்தவன் என்பதோடன்றி எத்தகைய பொய்யனுமாவேன்!''

''ஆனால் நீங்கள் தீவிர இந்து என்று உங்கள் மகன் சொல்லியிருக்கிறாரே!''

''உண்மை. அதனால் என்ன? 'மனிதர்கள் எந்த வழியை அநுசரித்தாலும் அது என்னை அடையும் வழியே ஆகும்' என்று சர்வமத ஒருமையை வலியுறுத்துபவனாயிற்றே எங்கள் கீதாசாரியன்! நான் ஏன் இந்தத் திருமணத்தை ஆட்சேபிக்கப் போகிறேன்?''

''ஆனால் நான் ஆட்சேபிக்கிறேன்!''

''ஏன் மிஸ்டர் தேவதாஸன்? ஏழை அர்ச்சகன் மகனுக்குப் பெண் கொடுப்பதாவது என்றா?''

''எனக்கு ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடுகளெல்லாம் இல்லை. அந்நிய மதமாயிற்றே என்றுதான் பார்க்கிறேன்.''

''அன்பைவிடப் பெரிய மதம் உலகில் ஏது? இந்த இரண்டு இளம் அன்புள்ளங்களைப் பிரிப்பது பாவமல்லவா? அந்நியமாவது மதமாவது! 'என் பிதாவின் மாளிகைக்குப் பல வாயில்கள் உள்ளன' என்று உங்கள் தேவகுமாரனேகூடச் சொல்லவில்லையா?''

தேவதாஸன் தம்பித்துப் போய்விட்டார். அடுத்த நிமிஷம், ''இப்படி உங்கள் கையைக் கொடுங்கள்!'' என்றவாறு உற்சாகமாய்க் கரம் நீட்டினார். அப்பா அதைப் பற்றிக் குலுக்கினார். பிறகு அவர் இரு கைகளையும் இணைத்து வணக்கம் செய்தபோது தேவதாஸனும் அதுபோலவே கரம் குவித்தார்.

''யார் அங்கே உள்ளே, சம்பந்திக்கும் மருமகளுக்கும் காபி கொடு!'' என்றார் அப்பா.

அன்று மாலை அப்பா கோயிலுக்குப் போய்க்கொண்டிருந்தபோது நான் அவரிடம், ''உங்களுக்கு இந்த வித்தியாசங்களெல்லாம் இல்லாதபோது நான் மதம் மாறப்போவதாய் அன்றொரு நாள் சொன்னதற்கு ஏன் அத்தனை கோபித்தீர்களாம்?'' என்றேன்.

''எல்லா மதங்களும் சமமாய் இருக்கும்போது எதற்காகவடா மதம் மாறுவது? மேலும், நீ இரண்டு மதக்கோட்பாடுகளையும் நன்றாய்க் கற்றுணர்ந்து, அறிவினால் ஆராய்ந்து, ஒன்றை விட மற்றது சிறந்தது என்று தேர்ந்து அதைத் தழுவிக்கொண்டால் அர்த்தம் உண்டு. உனக்கோ இந்து மதத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியாது; நீ ஏற்கப் போவதாய்ச் சொன்ன பிற மதத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியாது. மதமாற்றம் எத்தனை பெரிய விஷயம்! எந்த மதத்தை மனசில் வைத்துக்கொண்டு அன்று அப்படிப் பேசினாய்?''

''இஸ்லாம்.''

''எவனோ முஸ்லிம் நண்பன் இருக்கிறானாக்கும். அவன் மீதுள்ள அன்பைக் காட்ட அவன் மதத்தை ஏற்கலாம் என்று எண்ணியிருப்பாய்!''

நான் தலைகுனிந்தேன்.

''இப்படி உனக்குப் பிடித்தவர்களின் மதங்கள் ஒவ்வொன்றுக்காய் நீ மாறிக்கொண்டே இருந்தால் அதற்கு முடிவு ஏதடா?'' அவர் சிரிக்கலானார். என்னை நாய்க் குட்டியாய்க் கருதும் பார்வை அவர் கண்ணில் கட்டாயம் வந்திருக்கும். நான் ஏன் தலைநிமிர்கிறேன்?

''உனக்கு யார் யார் வேண்டுமானாலும் நண்பர்களாய் இருக்கட்டும். அதில் தவறில்லை. ஆனால் தன் மதத்தில் தான் உறுதியாக இருப்பவனே பிற மதங்களையும் கௌரவிப்பவனாக இருக்க முடியும். அடே ராஜு, பிறரை மதமாற்றம் செய்விக்க விரும்புகிறவை மற்ற மதங்களடா! நம் தர்மம், யாரையும் மாற்ற முனையாமல், எந்த மதத்தினரையும் மதித்து, 'ஒருவனே இறைவன், அவனை எந்தப் பெயரால் அழைத்தால் என்ன?' என்ற உண்மையான பெருந்தன்மையைக் கடைப்பிடிப்பது. தெரிந்துகொள்'' என்றவாறு அப்பா கோயிலுக்குள் சென்றுவிட்டார்.

என் கண்கள் ஏதோ ஒளியைக் கண்டு கூசின.

எங்கள் மதம் அன்பு மதம். அது மட்டுமா? என் அப்பா அன்பின் வடிவம். புதிதாக அவரைக் கண்டுவிட்ட பெருமிதத்துடன் நான் அவருடைய மகன் என்ற மிதப்பில் ராஜநடை போட்டு நடந்தேன். ★

தீபாவளி வாழ்த்து

WIL

வீல்ஸ் இந்தியா லிமிடெட்,
பாடி, சென்னை - 50

FDSWIL 746TM

கோலமிட்டு விளக்கினை யேற்றிக்
கூடிநின்று பராசக்தி முன்னே
ஓலமிட்டு புகழ்ச்சிகள் சொல்வார்
உண்மை கண்டவர் வையத்துமார்கள்
ஞாலமுற்றும் பராசக்தி தோற்றம்
ஞானம் என்ற விளக்கினை யேற்றிக்
காலமுற்றும் தொழிதிடல் வேண்டும்
காதல் என்பதோர் கோயிலின் கண்ணே!

—பாரதியார்

புனித ஸ்நானம் செய்து தமிழ் நாட்டின்
அழகிய கோ-ஆப் டெக்ஸ் புத்தாடையணிந்து
அன்பும்-வனப்பும்-மகிழ்ச்சியும் உங்கள்
இல்லங்களில் நிலவும் இந்நன்னாளில்,

"எமது தீபாவளி வாழ்த்துக்கள்."

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
துணிகள்

தமிழ்நாடு கைத்தறி நேசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், எழும்பூர், சென்னை-8.

ஹிந்தி
ஹாஸ்யக்
கதை

டாக்டர் வேதவியாஸ்

உபேந்திரநாத் 'அச்க்'

"இதைத் தவிர வேறு வழிதான் என்ன?" - டாக்டர் வேதவியாஸ், தம்முடைய இரகசியத்தில் என்னையும் கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டு பேசினார்; "உங்களுக்கு உண்மை அடியோடு தெரியாது. தெரிந்திருந்தால் என் தவறு என்று சொல்ல மாட்டீர்கள். இந்த மனைவியுடன் நாலு நாள் கூட என்றால் இனிக் காலந்தள்ள முடியாது."

எவனோ ஒருவன், கையில் மருந்துச் சீட்டுடன் வந்தான். டாக்டர் வியாஸ் தம் கதையை நடுவில் நிறுத்தி, அவனுக்கு மருந்து தயாரிக்கத் தொடங்கினார். அவர் மருந்து வியாபாரி-டிரக்கிஸ்ட். இந்தக் காலத்தில் தையற்காரர், மந்திரவாதி, பாடகர், ஜோதிஷர் - யாரை எடுத்தாலும் தம் பெயருக்கு முன்னால் 'மாஸ்டர்' என்றோ 'புரொபஸர்' என்றோ தாமே எழுதிக் கொள்வது போலவே, இங்கிலீஷ் மருந்து விற்கும் கெமிஸ்ட்டும் டிரக்கிஸ்டுமான வேதவியாஸும் தமக்குத் தாமே வைத்துக் கொண்டதுதான் 'டாக்டர்' பட்டம்!

அந்த ஆசாமிக்கு மருந்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, டாக்டர் என் எதிரில் வந்து அமர்ந்தார். டாக்டருக்கு வயசு ஒன்றும் அதிகம் இல்லை; மிஞ்சிப் போனால் முப்பத்தைந்து வயசு இருக்கும். ஆனால் வாலிபத்தின் அறிகுறி எதுவும் அவரிடம் இல்லை. ஒல்லியான மெலிந்த உடல். உடலுடன் ஒட்டிய கால்சட்டை. காலுக்கு உறை அணிந்துகொள்ள வேண்டிய தொந்தரவையே அவர் வைத்துக்கொள்வதில்லை. ஒரு முறை செருப்பு வாங்கினால், அது ரிப்பேர் ஆகி ஆகிப் படாத பாடு பட்டு அதுவாக அவரை விட்டுப் பிரியும்வரை அதன் உறவை விட மாட்டார். பார்ப்பதற்கு அவர் விகாரமாக இல்லை; அழகுள்ளவர்களின் வரிசையில் நிற்கத் தகுந்தவரும் அல்ல. பரந்த முகம், சப்பை மூக்கு, ஒட்டி உலர்ந்து பள்ளம் விழுந்த கன்னங்கள், நடுவில் வழுக்கை விழுந்த தலை, அதைச் சுற்றி எண்ணெய்ப் பசையே காணாமல் குத்திட்டு நிற்கும் கட்டையான மயிர். எப்போதும் அவர் முகத்தில் ஒரு சலிப்பு. அவர் சிரித்தால், அது மற்றவரைப் பரிகாசம் செய்வது போலத் தோற்றும்.

என் அண்ணாவின் கடைக்குப் பக்கத்தில் அவர் கடை இருந்தது. டாக்டர் சுபாவமாகவே கொஞ்சம் கிறுக்குப் பிடித்தவர்தாம். அதுவும் இளையாள் கல்யாணம் ஆகி வந்ததும் அவர் கிறுக்கு இன்னும் அதிகமாயிற்று. 'டாக்டர் தம் மனைவியைத் தள்ளி வைக்க உறுதியாக முடிவு செய்துவிட்டார்' என்ற செய்தி, இன்றுதான் என் அண்ணா வாயிலாக எனக்கு எட்டியது. அதனால் அவருக்குக் கொஞ்சம் புத்தி சொல்லலாமென்று வந்தேன். ஆனால் விஷயம் போன போக்கைப் பார்த்தால், இதைப்பற்றி நான் இன்னும் நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று தோன்றியது.

தம் பேச்சை மீண்டும் தொடங்கிய டாக்டர், "எதற்கும் துணிந்த போக்கிரி ஐயா, அவள்! அவளைப்பற்றி நான் உங்களுக்கு என்னத்தைச் சொல்ல?" என்றார்.

"உங்கள் மூத்த மனைவி மிகவும் நல்லவளாக இருந்தாளே!" என்றேன் நான்.

"மூத்த மனைவியா?" டாக்டர் பெருமூச்சு விட்டார்; "அவள் தெய்வம் ஐயா, தெய்வம்! ஏழு வருஷம் நானும் அவளும் ஒன்றாக இருந்தோம். குழந்தைகள் இரண்டு பிறந்தன. ஆனால் கணப்பொழுதுகூட அவளிடம் எனக்கு அசட்டை தோன்றியதில்லை. இரண்டு நாளைக்கு அவள் பிறந்தகம் சென்றால் என் மனம் பொறுமையோடு இராது. இந்த ஏழு வருஷ காலத்தில் நாங்கள் இரண்டு மாதங்கூடப் பிரிந்திருந்ததாக எனக்கு நினைவில்லை. இந்தத் தரித்திரம் அவள் கால்தூசிகூடப் பொறாது!"

"ஆனால் அவள் அப்படி ஒன்றும் அழகி அல்ல என்று சொல்கிறார்களே!"

"யார் சொல்வது?" காற்றைப் பிளப்பதுபோலக் கையைக் குறுக்கே வீசியபடி சிறிது ஆவேசத்துடன் டாக்டர் பேசினார்; "உங்கள் அண்ணா சொல்லியிருப்பார் அப்படி. அவருக்கு என்ன தெரியும்? மூத்தவளைவிட இவள் நல்ல அழகியாக அவருக்குத் தோன்றியிருக்கலாம். சுசீலா - மூத்த மனைவி - அவரெதிரில் எப்போதும் மரியாதையாகத் தலை குனிந்துகொண்டு இருப்பாள். இவளோ வளவளவென்று பேசுகிறாள். அழகு என்பது புறத்தில் மட்டும் தெரியும் பொருளல்ல, தம்பி. அக அழகுக்கும் மதிப்பு உண்டு. என் வாழ்வையே இவள் தொல்லையாக்கி வைத்திருக்கிறாளே; இவளுடைய

அழகை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய?''

சிறிது நேரம் டாக்டர் மனம் கலங்கியவராய், வெறிச்சென்று பாழ்வெளியில் எதையோ பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு அவர் நாற்காலியைச் சற்று முன்னால் இழுத்துப் போட்டுக்கொண்டு, இரகசியக் குரலில் பேசலானார்:

''என்னுடன் இருப்பவள் என் மாற்றாந்தாய் என்பது உங்களுக்கே தெரியும். என் முதல் மனைவியை அவள் பல தடவை எனக்கு விரோதமாகத் தூண்டிவிட முயற்சி செய்தாள். ஆனால் என் இளைய தாய் தூண்டி விட விட, என் மனைவிக்கு என்னிடம் அன்பு வளர்ந்தே வந்தது. சித்தியிடம் என்னைப்பற்றி ஒரு குறையும் அவள் சொல்ல மாட்டாள். எனக்கு விரோதமாகச் சித்தி ஒரு வார்த்தை சொன்னாலும் அவளுக்குப் பொறுக்காது. அவள் இருந்தபோது இந்த வீட்டில் எனக்கு மதிப்பு இருந்தது, கௌரவம் இருந்தது. நான், என் மனைவி, இரண்டு குழந்தைகள் ஆகிய நாங்கள் நால்வரும் ஒரே நூலில் கோத்த மணிகளைப் போல இணைந்திருந்தோம்.''

டாக்டரின் குரல் உச்ச ஸ்தாயியை எட்டியது. முதல் மனைவியைப் பற்றிய நினைவிலும் பேச்சிலும் அவர் வான மண்டலத்தில் பறக்கத் தொடங்கினார். நான் அவரை மீண்டும் மண்ணுலகுக்கு இழுத்துவந்து பேசினேன்: ''இப்பொழுது உங்கள் இரண்டாம் மனைவியைப் பற்றித்தானே பேச்சு? இவளிடம் நீங்கள் காணும் துர்க்குணந்தான் என்ன? உங்களுக்கு இவளைப் பிடிக்காவிட்டாலும், பிறர் கண்ணுக்கு இவள் அழகி, சிரித்த முகமுள்ளவள், புத்திசாலி என்பதை நீங்களும் ஒப்புக்கொள்கிறீர்களே!''

''புத்திசாலியா!'' டாக்டர் தம் சுபாவப்படி பரிகாசமாகவே பேசினார்; ''உங்களுக்கு என்ன தெரியும் இவள் புத்தியைப்பற்றி? வடிகட்டின முட்டாள் இவள்! இந்த மூதேவி தன் புத்திசாலித்தனத்தைக் காண்பித்து, நாலே நாளில் என்னை உதவாக்கரையாக அடித்துவிட்டாள். நான் அவமானப்படுவதைக் கண்டு களிப்பவர்களின் முன்னால் இவள் என்னை அவமானப்படுத்திவிட்டாள்.''

டாக்டர் மனம்விட்டுப் பேசலானார்: ''கழுதைக்குத் தெரியுமா ஐயா, கர்ப்பூர வாசனை? இவளுக்கு நான் நல்லது எது செய்தாலும் அதை இவள் தனக்குக் கெடுதலாகவே எண்ணி மறுகுகிறாள். கல்யாணமாகிப் புக்ககம் வரும் மருமகள் மாமியாரைக் கண்டாலே முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்வது தான் உலகத்தில் வழக்கம். நீங்களே சொல்லுங்களேன்! இவளுடைய மாமியாரோ எனக்கு மாற்றாந்தாய். அதனால்தான் நான் மணமானதும் பெற்றோரிடமிருந்து விலகியிருப்பது நல்லது என்று எண்ணினேன். நெடுங்காலமாகக் குடியிருந்தவர்களை நோட்டீஸ் கொடுத்துக் கிளப்பி, மனைவி மக்களுடன் அந்தப் பழைய அனார்க்கலிப் பக்கமுள்ள வீட்டில் குடியேறினேன். இதனால் இவள் சந்தோஷப்படுவாள் என்று நினைத்தேன். ஆனால் என்னத்தைச் சொல்ல? விசித்திரமான, விபரீதமான மூளை இவளுக்கு! 'நீங்கள் என்னை இங்கே அழைத்துவந்து சிறைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள். என்னை மீண்டும் அங்கேயே கொண்டு போய் விடுங்கள்!' என்று ஒரு நாள் சொன்னாள்.''

''நீங்கள் அவளை ஏதாவது தொந்தரவுபடுத்தியிருப்பீர்கள். இல்லாவிட்டால், அவளிடம் உயிரையே வைத்திருக்கும் உங்கள்மீது அவள் ஏன் வீண் குற்றம் சுமத்தப் போகிறாள்?'' என்றேன்.

''தொந்தரவு படுத்துவதா? நானா?'' டாக்டர் கொதித்தெழுந்தார்; ''எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால் இவள் கழுத்தை அப்படியே நெரித்துக் கொன்றிருப்பேன்! அவ்வளவு பாடு படுத்தியிருக்கிறாள் என்னை.''

இதைச் சொல்லிக்கொண்டே அவர் சட்டைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்து இரண்டு இழுப்பு இழுத்தபடியே தொடர்ந்தார்: ''என்ன தர்பாராகச் செலவழிக்கிறாள் தெரியுமோ? உங்களிடம் என்னத்தைச் சொல்ல? சுசீலா மிகவும் சிக்கனக்காரி. விஷயம் தெரிந்தவள். அவளை நினைத்தால் இன்னும் எனக்கு அழுகை வருகிறது. வீட்டில் அப்பொழுது சில சாமான்கள் வாங்கிப் போடுவேன்; சில வாங்காமலும் இருப்பேன். ஆனால் எப்படியோ நிறைவு இருந்தது. இப்பொழுது எல்லாம் ஒன்று குறையாமல் வாங்கிப் போடுகிறேன்; ஆனால் அவ்வளவும் எங்கே போகிறதோ, தெரியவில்லை. பொழுது போனால் பொழுது விடிந்தால், 'இதை வாங்கி வாருங்கள், அதை வாங்கி வாருங்கள்' என்ற கூக்குரல்தான். முன்பு ஒரு ரூபாய்க்கு நெய் வாங்கினால் எட்டு நாள் வரும்; இப்பொழுது ஐந்தே நாளில் காலி! அந்த மகராஜி எப்போதும் தானே துணிகளைத் துவைப்பாள். இவளிடம் என் துணிகளைக் கொண்டு வைத்தேன்; 'ஏதோ என்னை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது போலத்தான் நீங்கள் இவ்வளவு துணிகளையும் குவித்து வைத்திருக்கிறீர்கள். சலவைக்குப் போடுங்களேன்!' என்று சொல்லிவிட்டாள். நான் வாய் திறக்கவில்லை. அந்தத் துணிகளை இவள் துவைக்கவே இல்லை; பிறகு ஒரு துணியையும் கையால் தொட்டதுகூட இல்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!''

பீடி அணைந்து போகவே, டாக்டர் மீண்டும் ஒன்றைப் பற்ற வைத்தார். இரண்டு இழுப்பு இழுத்துவிட்டுப் பேசலானார்: ''துரும்பைக்கூடக் கையால் எடுத்துப்போட வக்கில்லாத பெண் பிள்ளை. நாள் தவறாமல் இவள் சினிமாவுக்குப் போக வேண்டுமாம். அவ்வப்போது புதிய புதிய நகைகளும் துணிகளும் இவளுக்கு நான் வாங்கிக் கொடுக்க வேண்டும். நீங்களே சொல்லுங்கள், எவ்வளவு நாள் நான் இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியும்? ஒரு நாள் இவள் சினிமாவுக்குப் போக வேண்டும் என்றாள். நான் 'கூடாது' என்றேன். 'நீங்கள் ஆனாலும் கருமி. இருநூறு ரூபாய் சம்பாதிக்கிறீர்கள்; செலவு என்றால் அழுகிறீர்களே! வேலை செய்யத்தான் ஆள் வேண்டியிருந்தது என்றால் நீங்கள் ஒரு வேலைக்காரியை அமர்த்திக்கொண்டிருக்கலாமே. இதற்கு என்னை அழைத்து வருவானேன்?' என்றாள். அதைக் கேட்டதும் எனக்குக் கோபம் தாங்கவில்லை. இப்படி 'உர் உர்' என்று சீறும் பெண்ணை நான் பார்த்ததே இல்லை. இவள் காதைச் சிறிது பிடித்துத் திருகிவிட்டேன். அவ்வளவுதான், ஐயா! அன்று சாயங்காலமே இவள் இங்கே பழைய வீட்டுக்கே வந்து சேர்ந்தாள். நீங்களே சொல்லுங்களேன், இந்த முரட்டு வாயாடிப் பெண்ணுடன் ஒரு கணம் வாழ முடியுமா?''

நான் என்ன பதில் சொல்ல? நான் அவர் பேச்சை ஒப்புக்கொள்கிறேனா அல்லது மறுக்கிறேனா என்பது தெரியாதபடி, சும்மா தலையை ஆட்டி வைத்தேன்.

ஆனால் அதைப்பற்றி டாக்டருக்குக் கவலை ஏதும் இல்லை. பீடி மீண்டும் அணைந்துவிட்டது. அதை வீசி எறிந்து மறுபடியும் அவர் பேச்சைத் தொடர்ந்தார்: ''இங்கே நடந்ததையும் கேட்டுக் கொள்ளுங்கள். இங்கே வந்ததும் மாமியாரும் மருமகளும் கூட்டுச் சேர்ந்துவிட்டார்கள். அவளும் இளையாள், இவளும் இளையாள். அவள் என் மனத்தைக் கெடுக்க முயன்றாள்;

இவள் என் குழந்தைகளின் மனத்தைக் கெடுக்கிறாள். ஆனால், கண் இருந்தும் குருடராகவும் காதிருந்தும் செவிடராகவும் நடந்துகொள்ளும் கூட்டத்தைச் சேர்ந்தவன் அல்ல நான். இளைய தாய் எந்த எந்தச் சமயத்தில் எப்படியெல்லாம் விஷத்தைக் கக்குவாள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எங்கள் சித்தி சும்மாவாவது என்மேல் ஏதாவது குற்றம் சொல்லுவாள். அப்பாவும் அதைக் கேட்டுக் கண்மூடித்தனமாக என்னை அடிப்பார். ஆனால் நான் குருடனல்லவே? நான்தான் மாற்றாந்தாயின் கொடுமைகளை எல்லாம் அநுபவித்திருக்கிறேனே! ஆகவே என் குழந்தைகளை நானே காப்பாற்றுவதென்று தீர்மானித்திருக்கிறேன். இந்த விஷப்பாம்பினிடம் அவர்களை அண்டவிட மாட்டேன்.''

''உங்கள் குழந்தைகளை அவள் மிகவும் படுத்தினாளோ?'' என்று கேட்டேன்.

''நானா இவளைப் படுத்த விடுவேன்? ஒரு நாள் இவள், 'நீங்கள் என்னைப் படாத பாடு படுத்த வேண்டியது; உங்கள் குழந்தைகளை நான் அணைத்துக் கொள்ள வேண்டியது. - இது என்னால் நடக்காது!' என்றாள். அன்றைக்கே நான் விழித்துக்கொண்டேன். சுசீலா சாகாமல் இருந்திருந்தால் நான் இந்தப் பிசாசின் வலையில் மாட்டிக் கொண்டிருக்கவே மாட்டேன். சுசீலா எப்படி இருந்தாள்! அவள் உள்ளம் கடலைப் போல ஆழ்ந்தது; வானத்தைப் போலப் பரந்தது; வைகறையைப் போல....''

அவர் மீண்டும் மேலே பறக்கத் தொடங்கினார். மறுபடி அவரை இவ்வுலகுக்கு இழுத்து வரவேண்டியிருந்தது; ''இங்கு வந்த பிறகும் ஏதாவது நடந்ததோ?'' என்றேன்.

''இங்கே இரண்டு பேருமாக எனக்குத் தொல்லை கொடுக்க ஒன்று சேர்ந்தார்கள். ஏதாவது ஒரு செய்தியாக இருந்தால் சொல்லலாம்; தினமும் ஏதாவது சச்சரவு நடந்துகொண்டேதான் இருக்கிறது. போன மாதம் நடந்ததைச் சொல்கிறேனே: அன்று வானம் மூட்டம் போட்டிருந்தது. நின்று நின்று தூற்றலும் போட்டது. மழைக்காலமாகையாலும் நாள்முழுவதும் உட்கார்ந்தே இருந்ததனாலும் சாப்பிட்டது சரியாக ஜீர்ணம் ஆகவில்லை. நடுப்பகலில் உணவு உண்ட பின்பு, 'இரவுச் சாப்பாடு வேண்டாம்' என்று வீட்டுக்குச் சொல்லி அனுப்பினேன். ஆனால், 'ஸோடாமின்ட்' இரண்டு மாத்திரை சாப்பிட்டதனாலோ, 'பெப்ஸின் மிக்ஸ்சரி'ல் ஒரு டோஸ் குடித்ததனாலோ, சாயங்காலமே எனக்குப் பசி எடுத்தது. எட்டு மணிக்குச் சாப்பாடு கொண்டுவர வேலைக்காரனை வீட்டுக்கு அனுப்பினேன். 'அவன்தான் சாப்பாடு வேண்டாம் என்றான. இப்போது சமையல் முடிந்துவிட்டது. மறுபடி யார் அடுப்பை மூட்டுவது? ஹோட்டலில் ஏதாவது வாங்கிச் சாப்பிடச் சொல்லு' என்று சித்தி அவனிடம் சொல்லி அனுப்பினாள். நான் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சும்மா இருந்தேன்,''

''ஏன், நீங்கள் ஹோட்டலில் சாப்பிட்டிருக்கலாமே?'' என்று உடனே நான் குறுக்கிட்டேன்.

''என்ன ஐயா, நீங்களும் இப்படிச் சொல்கிறீர்கள்? ஹோட்டலில் சாப்பிட்டால் வயிறு நிரம்புகிறதா, வாய் நிரம்புகிறதா? ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் செலவழித்தால் சவுக்குச் சவுக்கென்று ஏதோ ரொட்டி கிடைக்கிறது. கூட்டில் இருக்கும் மிளகாயையும் மசாலாவையும் தின்றால் ராத்திரி முழுவதும் வயிற்றில் எரிச்சலாக இருக்கிறது. துட்டைக் கொடுத்துத் துக்கத்தை அழைத்தாற்போலத்தான். இதைவிடப் பட்டினி கிடப்பதே நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அதிலும் அன்றைக்கு நான் ஹோட்டலுக்குப் போயிருந்தாலும் கோபத்தில் துளிகூட என்னால் விழுங்கியிருக்க முடியாது. பணந்தான் வீணாகியிருக்கும். இரவில் வீட்டுக்குச் சென்றதும் நான் காந்தாவிடம் - அதுதான் இவள் பெயர் - இதுபற்றிச் சொன்னேன். 'நான் ரொட்டி சுட எழுந்தேன்; சித்தியே தடுத்துவிட்டார்' என்றாள்.''

''பின்னே அவள்மீது என்ன தப்பு?''

''அட, முழுக் கதையையும் கேளுங்கள், ஐயா!'' என்று டாக்டர் தொடர்ந்தார்:

''இவள் பேச்சைக் கேட்டதும் என் கோபம் முழுவதும் சித்தியின் மேல் திரும்பியது. இவளிடம் கொண்டிருந்த ஆத்திரம் நீங்கியது. நான் இவளை அன்புடன் இழுத்து அணைத்துக்கொண்டு, இவளிடம் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்துக்கு மன்னிப்பு வேண்டினேன். அப்பொழுது இவளுடைய நேர்மையையும் பணிவையும் கண்டு, சித்தியின் மீது எனக்கு இருந்த கோபம் எல்லை மீறியது. பசி ஒரு பக்கம்; கோபம் ஒரு பக்கம்; இரவு முழுவதும் தூக்கம் இல்லை. காலையில் எழுந்ததுமே கீழே சென்றேன். கோபத்தால் உடல் நடுங்க, நான் சித்தியிடம் காந்தாவை ரொட்டி சுட வொட்டாமல் தடுத்ததைச் சொல்லி, 'நீ என்னதான் செய்ய வேண்டும் என்கிறாய்? பசியால் நான் செத்தால் நீ நிம்மதியாக இருக்கலாம் என்பது உன் விருப்பமானால் கொண்டு வா, விஷத்தைக் கொடு. இப்பொழுதே உன் எதிரில் விழுங்குகிறேன்!' என்றேன்.

''சித்தி திடுக்கிட்டவள் போல் என்னைப் பார்த்து, 'ரொட்டி சுடவேண்டாமென்று நான் மருமகளைத் தடுத்ததாக உன்னிடம் யார் சொன்னார்கள்?' என்றாள்.

'' 'அவள்தான் சொல்கிறாள்' என்று நான் கத்தினேன். 'கூப்பிடு அவளை' என்றாள் சித்தி. நான் இவளைக் கூப்பிட்டேன்; 'நேற்றுச் சித்தி உன்னை ரொட்டிச் சுடவேண்டாம் என்று தடுக்கவில்லையா?' என்று கேட்டேன். 'இல்லையே!' என்று இவள் ஒன்றுமே அறியாத அப்பாவி போல் முகத்தை வைத்துக்கொண்டு சொன்னாள்.

'' 'நேற்றுச் சாயந்தரம் நான் வேலைக்காரனை அனுப்பி, எனக்கு ரொட்டி பண்ணச் சொன்னேன். வீட்டில் சமையல் ஆகிவிட்டது. நீ அடுப்பு மூட்ட எழுந்தபோது சித்தி உன்னைத் தடுத்து, இனிமேல் ஏதும் சமைக்க வேண்டியதில்லை என்று சொன்னாள் அல்லவா?' என்றேன்.

'' 'இல்லையே! வேலைக்காரன் எப்போது வந்தான் என்பதே எனக்குத் தெரியாதே!' என்றாள் இந்த மூதேவி.

''நான் வெட்கத்தினால் வாய் திறவாமல் நின்றேன். வருத்தத்தினாலும் சினத்தினாலும் என் கால்கள் நடுங்கின. நான் இவள் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டேன். 'பொய்யா சொல்கிறாய்? நேற்றிரவு நீதானே என்னிடம் இப்படிச் சொன்னாய்?' என்றேன்.

''இவள் அழ ஆரம்பித்தாள். அழுதுகொண்டே மறுபடியும் தலையை ஆட்டினாள். சித்திக்கு ரோசம் பிறந்தது. அவள் ஒரேயடியாக வீடே அதிரும்படி கத்தினாள். அப்பாவும் இந்தக் கோலாகலத்தைக் கேட்டு அங்கே வந்தார். அவர் மிரட்டிய மிரட்டல்! அதை இன்று நினைத்தாலும் என் ரத்தம் கொதிக்கிறது. 'நீ உன் பெண்டாட்டியைச் சித்திக்கு விரோதமாகத் தூண்டிவிட நினைக்கிறாய். சித்தியின் மீது வீண்குற்றம் சுமத்த உனக்கு வெட்கமாக இல்லையா? நீ தனிக் குடித்தனம் போக வேண்டுமென்றால் பேஷாகப் போ. இந்தப் பொய்யும் பாசாங்குகளும் இங்கு எதற்கு? நீ கிணற்றிலோ மடுவிலோ எங்கே போய் விழுந்தாலும் எனக்கு ஒன்றுதான்!' என்று அப்பா மனம் குமுறிப் பேசினார்.''

''ரொம்ப மோசமாக இருக்கிறதே!'' என்று மட்டுமே நான் சொல்ல அவர் இடம் கொடுத்தார்.

அவர் பேச்சை நிறுத்தாமலே மற்றொரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு தொடர்ந்தார்: ''அப்புறம் இந்த வேடிக்கையைக் கேளுங்கள். என் நன்மைக்காகத்தான் இவ்வளவும் நடக்கிறதாம். போன வாரம் ஒரு நாள், கடையிலிருந்து அப்போதுதான் போய்ப் படுத்தேன். இவள் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்; 'அந்த வீட்டில் நீங்கள் எதற்கெடுத்தாலும் என்னை உதைக்கிறேன், அடிக்கிறேன் என்று மிரட்டினீர்கள். அதனால்தான் நான் இங்கு ஓடி வந்தேன். இங்கே உங்களுக்கு நல்ல பழக்கம் ஏற்படும்' என்றாள்.

''இதைக் கேட்டதும், இவள் திமிருக்குச் சரியான தண்டனை கொடுக்க வேண்டும் என்றுதான் நினைத்தேன்; ஆனால் அன்று தந்தை கோபித்த நாள் முதல் இவளுடன் பேசுவதையே நிறுத்தியிருந்தேன். அதனால் என் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு சும்மா இருந்தேன். இதற்கப்புறமும் இவள் என் தலையணைப் பக்கம் உட்கார்ந்திருந்தாள். நான் மறுபுறம் சுவர்ப் பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டேன்.

''இவள் தன் படுக்கையில் சென்று படுத்தாள். பிறகு கொஞ்ச நேரம் கழித்துக் கீழே இறங்கிப் போனாள். நான் இதன் நடுவில் தூங்க முயன்றேன்; ஆனால் தூக்கமே வரவில்லை. காலை எட்டு மணி முதல் இரவு ஒன்பது மணிவரை கடையில் வேலை

செய்வதனால் உடல் களைத்துச் சோர்ந்திருந்தது. அந்தச் சோர்விலாவது கண்ணயர்ந்திருக்க வேண்டுமே. அதுதான் இல்லை. எவ்வளவோ முயன்றும் கண் மூடவில்லை. 'ஏன் இரண்டாவது கல்யாணம் செய்துகொண்டோம்? சுசிலாவின் நினைவிலேயே வாழ்நாள் முழுவதையும் கழித்திருக்கலாமே!' என்று நினைக்கலானேன். உங்கள் அண்ணா இவளை அழகி, பண்பாடு உள்ளவள் என்கிறாரே; அவர் இவளுடைய சிரிப்பையும் வணக்கத்தையுமே பார்த்திருக்கிறார். இந்த அழகுக்கும் சிவப்புத் தோலுக்கும் உள்ளே மறைந்திருக்கும் விஷத்தை அவர் பார்த்திருந்தாரானால், அவர் தங்கமென்று எண்ணும் பொருள் இரும்புகூட அல்ல என்பதைத் தெரிந்து கொள்வார். நான் உங்களிடம் உண்மையைச் சொல்கிறேன்; இவளைப் பார்க்கும்போதே என் மனத்தில் வெறுப்புத்தான் அலையலையாக எழுகிறது.

''படுத்தபடியே நான் என் துரதிர்ஷ்டத்துக்காக நொந்துகொண்டிருந்தபோது, இவள் கீழேயிருந்து வந்து என் தலைமாட்டில் உட்கார்ந்தாள். 'நான் உங்களை வழிக்குக் கொண்டு வந்துதான் விடப்போகிறேன். எப்போதும் நினைவில் இருக்கும்படியான வழி செய்வேன். எங்கள் ஊரில் ஒரு பெண்ணின் புருஷன் இப்படித்தான் அவளை ஹிம்சை செய்தான். அவள் தன் புடைவையில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக்கொண்டாள். சாகும்போது அவள் புருஷன் பெயரைச் சொன்னாள். அந்த மகாநுபாவன் இன்று சிறையில் கிடக்கிறான்' என்றாள்.

''எனக்கு அப்போது என்ன கோபம் வந்தது தெரியுமா? எட்டி உதைக்கிற உதையில் இவள் என் கட்டிலிலிருந்து தன் கட்டிலில் போய் விழுந்திருப்பாள்! என்னை வழிக்குக் கொண்டு வரும் பேச்சுடன் இவள் நின்றிருந்தால் பரவாயில்லை; தன் தோழியைப் பற்றிய கதையை இவள் சொன்னதனால், அப்படி இவளும் செய்துகொள்ளப் போகிறாளே என்று எனக்குப் பயமாகப் போயிற்று. பொங்கி வந்த சினத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, நான் பேசாமல் அப்பாவிடம் சென்றேன். இரவு ஒரு மணி இருக்கும். நான் அவரை எழுப்பினேன்; நடந்ததைச் சொன்னேன். அவர் என்னைச் சித்தியிடம் அழைத்துப் போனார். அவள் என்ன சொன்னாள் தெரியுமா? 'இவன் சொல்வது அத்தனையும் அபத்தம். மருமகள் அப்பாவி, மிகவும் நல்ல பெண். அவள்தான் இவன் கையில் சிக்கிக்கொண்டு அவஸ்தைப்படுகிறாள். அவள் இரண்டு தடவை கீழே என்னிடம் வந்து போனாள். முதல் தடவை வந்தபோது, 'எனக்குப் பயமாக இருக்கிறது அம்மா. அவர் தரையில் விழுந்து புரளுகிறார். கன்னாபின்னாவென்று திட்டுகிறார். செத்துப் போவதாகப் பயமுறுத்துகிறார்' என்றாள். 'நீ போய்த் தூங்கு. உன்னை அவன் ஏதாவது சொன்னால் நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லி அனுப்பினேன். இரண்டாம் முறை இப்போதுதான் அவள் வந்து இவன்



மாடியிலிருந்து கீழே குதிக்கத் தயாராக இருப்பதாகவும், குதித்துத் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகச் சொல்வதாகவும் கூறினாள்' என்றாள்.

''நான் திக்குத் திசை தெரியாமல் நின்றேன். ஆனாலும் இவ்வளவு பொய்யா? இவள் என் ஆத்திரத்தைத் தூண்டியதற்குக் காரணம் இப்போதுதான் விளங்கியது. நான் இவள்மீது கை வைத்திருந்தால் மாமியாரும் மருமகளும் நினைத்தபடி நடந்திருக்கும். சித்தி என்னை வீட்டில் நிற்க வைத்திருக்க மாட்டாள்!

''அப்பா என்னைக் கேள்விக் குறி தோன்ற, ஏறிட்டுப் பார்த்தார். நானும் இந்தத் தடவை துணிச்சலுடன் நடந்துகொள்ளத் தீர்மானித்தேன். நான் வாய் மூடிக்கொண்டிருந்தால் அவர் என்னைக் குற்றவாளியாகத்தானே கருதுவார்? நான் அழுமூஞ்சிபோல நின்று, 'கடவுள் ஆணையாகச் சொல்கிறேன்; நான் என் படுக்கையில்தான் படுத்திருந்தேன்' என்றேன். சித்தி, 'பொய் சொல்கிறான். இவன் மொட்டை மாடியிலிருந்து குதிக்கத் தயாராக இருந்தான். நானே மேலே போக இருந்தேன். இவன் செத்தால் எல்லாரும் என்னைத்தானே வைவார்கள்? இவன் என் முகத்தில் கரி தீற்றுவதாக முடிவு செய்துவிட்டான்' என்றாள்.

''அப்பா சும்மா நின்றபடி ஏதோ யோசித்தார். சிறிது நேரம் கழித்து அவர் என் மனைவியைக் கூப்பிட்டார். இவள் முக்காடிட்டுக்கொண்டு பணிவுடன் வந்து நின்றாள். அப்பா என்னைச் சுட்டிக் காட்டி, 'இவன் தரையில் விழுந்து புரண்டுகொண்டிருந்தானா?' என்று இவளைக் கேட்டார்.

''இவள் 'ஆமாம்' என்று தலையாட்டினாள். 'கீழே குதிக்கப் போகிறேன் என்றானா?' என்று அப்பா கேட்டார். அதற்கும் இவள் தலையாட்டினாள். 'எங்கேயிருந்து குதிப்பதாகச் சொன்னான்?' என்று கேட்டார். இவள் சும்மா ஏதோ ஒரு பக்கம் கையால் ஜாடை காட்டினாள். அப்பா என்னைப் பார்த்தார். 'இதெல்லாம் சுத்தப் பொய். நான் வந்தது முதல் படுக்கையில்தான் படுத்திருக்கிறேன்' என்றேன்.

''அப்பா ஏதோ சிந்தித்த பின், எங்கே திரும்பு, உன் துணியைக் காட்டு, வியாஸ்!' என்றார்.

''நான் அவருக்குத் துணியைக் காண்பித்தேன். மின்சார விளக்கு வெளிச்சத்தில் என்னை அழைத்துப் போய் அவர் என் துணியை நன்றாகப் பார்த்தார். பிறகு அம்மாவை நோக்கி, 'இவன் தரையில் விழுந்து புரண்டிருந்தால் இவன் துணியில் மண் ஒட்டியிருக்குமே. நம் வீட்டு மாடித் தரை ஒரே ஈரமாச்சே. கொஞ்சம் உட்கார்ந்தால்கூட மண் ஒட்டுமே. இவன் துணியில் துளி மண் அடையாளமும் இல்லையே!' என்றார்.

''அவர் அம்மாவையும் காந்தாவையும் அதட்டிவிட்டு, என்னிடம், 'போடா, போய்க் கவலையில்லாமல் தூங்கு; என்னைத் தொந்தரவு செய்யாதே' என்றார்.

''அப்பாடா என்று நான் பெருமூச்சு விட்டேன். இந்தத் தடவை முட்டாள் பட்டம் கட்டிக் கொள்ளாமல் தப்பினேன். எங்கள் வீட்டு மாடியில் இரண்டு கட்டு உண்டு. முன் கட்டில் அப்பா தூங்குவார்; அடுத்த கட்டில் நானும் என் மனைவியும் தூங்குவோம். சித்தியும் குழந்தைகளும் கீழே கூடத்தில் படுத்துக்கொள்வார்கள். நான் என் கட்டிலை எடுத்துப் போய் அப்பாவின் அருகில் போட்டுக்கொண்டு தூங்கினேன்.''

டாக்டர் தம் பேச்சை முடித்து, அணைந்த பீடியை மீண்டும் பற்ற வைக்கத் தொடங்கினார்.

''அப்படியானால் இப்போதெல்லாம் எங்கே படுக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அங்கேயே, அப்பாவிடந்தான்!'' டாக்டர் மகிழ்ச்சி பொங்க, புகையை ஒரு தரம் நீள இழுத்து விட்டு, ''இதைத் தவிர வேறு வழி?'' என்றார்.

''உண்மைதான்; வேறு வழி இல்லைதான்!'' என்று அவரை ஆதரித்துப் பேசினேன்.

ஒரு பையன் மருந்துக்காகக் கையில் சிட்டை வைத்துக்கொண்டு நெடுநேரமாக நின்றிருந்தான். டாக்டர் அந்தச் சிட்டை வாங்கி மருந்து தயாரிக்க உள்ளே போனார். அப்போது என் அண்ணா என்னைக் கூப்பிட்டு, ''நீ இன்று சாப்பிட வரப் போகிறாயா, அல்லது அங்கேயே பேசிக்கொண்டு இருக்கப் போகிறாயா? டாக்டர் கதை பேச ஆரம்பித்தால் அதற்கு முடிவே இராதே!'' என்றார்.

தமிழாக்கம்: ஆர். நடராஜன்

WHEN YOU SETTLE FOR COMFORT

Dunlopillo COMFORTS MOST

You only need to feel it. Then you fall for it. Because Dunlopillo is soft and resilient — nothing but millions of interlinked cells providing comfort so soothing, so very satisfying.

Dunlopillo mattresses, pillows, cushions and many more items are available in every size and shape to suit requirements in the home and industry. Get incomparable comfort. Get Dunlopillo. Your nearest stockist welcomes your enquiry.

B3/DLP-65

ஓவியர்: ஜி. என். ஜாதவ் பாட்டுக் கேட்க நேரமில்லை

திருவதிகை வீரட்டானம்

ரா. நாகசாமி

வீரட்டானேசுவரர் விமானம்

தமிழ் நாட்டில் உள்ள தலைசிறந்த தலங்களில் திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயம் ஒன்று. இது சிவபெருமான் திரிபுரசங்கார மூர்த்தியாக விளங்கும் புண்ணியத் தலமாகும். இங்கேதான் வாகீசப் பெருமானாகிய அப்பரின் சூலை நோயைச் சிவபெருமான் தீர்த்துத் தடுத்தாட்கொண்டார். அப்பர் பெருமான் சைவராக மாறுவதற்கு முன்னர்ப் பாடலிகை என்ற பாடலிபுரத்தில் சமணப் பெரியோர்களுடன் கூடிச் சமண நூல்களையெல்லாம் கற்றுத் தர்மசேனர் என்ற பெயருடன் வாழ்ந்தார். பாடலிபுரம் என்பது திருப்பாதிரிப்புலியூர் (கடலூரின் ஒரு பகுதியாகும்). பாடலிபுரம் என்பது பல்லவப் பேரரசில் பாணராஷ்டிரம் என்ற பிரிவின்கீழ் இருந்தது. இது சமணர்களின் நிர்வாகத்தில் முக்கிய இடமாக இருந்தது. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த சிம்மவர்மன் என்ற அரசனின் 22-ஆம் ஆட்சியாண்டில் (சக ஆண்டு 350—கி.பி. 458) லோக விபாகம் என்ற சமண நூல் ஒன்று இங்கு எழுதப்பெற்றது. அக்காலந் தொட்டே பாடலிபுரம் சிறந்த தலமாக இருந்தது என்று அறிகிறோம். தர்மசேனருடைய தமக்கையாகிய திலகவதியாரின் வேண்டுதலுக்கு ஏற்ப, சிவபெருமானின் அருளால் அப்பர் திருவதிகையில் மீண்டும் சைவராக மாறினார். அத்தகைய பெருமை வாய்ந்தது திருவதிகை வீரட்டானம்.

சமண ஆசாரியராக இருந்து சைவராக மாறிய அப்பர் பெருமான், ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்ற திருப்பதிகத்தை இங்கேதான் பாடினார். இவ்வூரிலே ஓடும் கெடில நதியைத் தென்திசைக் கங்கை என்று அவர் பாடுகிறார்.

திருநாவுக்கரசர் பல்லவப் பேரரசனாகிய மகேந்திரவர்மனுடைய காலத்தவர். மகேந்திரவர்மன் பாடலிபுரத்துச் சமணப் பள்ளியிலே மிகவும் ஈடுபாடு கொண்டு சமண சமயத்தையே தழுவினான். பின்னர் அப்பர் பெருமானுடைய பெருமுயற்சியினால் சைவனாக மாறினான். இதை மகேந்திரவர்மனுடைய திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டுக் குறிக்கிறது.

गुणभरनामनि राजनि अनेन
लिंगेन लिंगिनि ज्ञानं ।
प्रतथां चिराय लोके
विपक्षवृत्तेः परावृत्तम् ॥

திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில், அப்பர் காலத்துக்கு முன்பிருந்தே மிகச் சிறப்புற்றுத் திகழ்ந்திருக்க வேண்டும். இக் கோயிலில் இரண்டாவது கோபுர வாயிலில் இரண்டாம் பரமேசுவர வர்மனுடைய கல்வெட்டு ஒன்று உள்ளது. இப்போது இருக்கும் விமானம் நிருபதுங்கவர்மனுடைய 16-ஆம் ஆண்டில் புதுப்பிக்கப் பெற்றது. இதை அர்த்தமண்டபத்து

பாண்டியன் இலச்சினை

முகலிங்கம்

மகாவீரரும் குபேரனும்

வெளிக் கோபுரம்

வாயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. இந்த விமானத்தின் அடித்தளம் மட்டும் கருங்கல்லால் அமைந்து, மேற்பகுதி செங்கல்லாலும் சுதையாலும் கட்டப்பெற்று விளங்குகிறது. மிகவும் எழில்மிகு விமானமாக அமைந்துள்ள இக்கட்டிடம் பல அம்சங்களில் சிறப்புற்றுத் திகழ்கிறது. புறச்சுவர்கள் அனைத்தும் சுதை உருவங்களால் அழகு பெற்று விளங்குவது சிறப்பான அம்சமாகும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மண்ணீட்டாளரைப் பற்றிய குறிப்புக் கிடைக்கிறது. அக்காலத்தே மண்ணீட்டாளருடைய கலை மிகவும் சிறந்த நிலையிலே இருந்தது. இக் கலையின் படைப்புக்களாகவே கல்லினால் கட்டிய கோயில்களின் சுவர்களில் சிற்பங்களைக் காண்கிறோம். காஞ்சிபுரம், மாமல்லபுரம் முதலிய பல்லவ நகரங்களில் இம் முறையையே பின்பற்றினார்கள். பண்டைய மண்ணீட்டாளரின் கலை பல்லவர் கற்சிற்பங்களுக்குக் காரணமாக இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டு, திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலாகும்.

இது தவிர, கட்டிட அமைப்பிலும் பல சிறந்த அம்சங்களைக் கொண்டு இக் கோயில் விளங்குகிறது. தஞ்சாவூரில் தட்சிண மேரு என்ற பெயருடன் விளங்கும் விமானத்தைக் கொண்ட பெருவுடையார் கோயிலை இராஜராஜ சோழன் கட்டுவித்தான். இம் மன்னன் அப்பர் பெருமானிடத்திலே ஆழ்ந்த பக்தி கொண்டவன். அப்பர்பெருமானின் பதிகங்களில் வரும் 'ஆடவல்லான்' போன்ற பதங்களையே தன் கல்வெட்டில் இம் மன்னன் உபயோகித்திருக்கிறான். தஞ்சைப் பெரிய கோயிலையும் திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலையும் பார்த்தால் ஒரு பேருண்மை விளங்கும். திருவதிகை வீரட்டானேசுவரர் விமானந்தான் தஞ்சைப் பெரிய கோயில் விமானத்துக்கு மேற்கோளாக இருந்தது என்பது நன்கு புலனாகும்.

இக் கோயிலின் கருவறையினுள்ளே உமாமகேசுவர மூர்த்தியாகச் சிவபெருமான் அமர்ந்து காட்சியளிப்பது பார்ப்பவர் மனத்துள்ளே பக்திப் பெருக்கை ஊட்டி உச்சிமேல் கைகூப்பி, ''ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுருவுடைய சோதி'' என்றும், ''நாட்டினேன் நின்றன் பாதம் தடுப்பட நெஞ்சினுள்ளே'' என்றும், ''எந்தை நீ அருளிச் செய்யாய் யாதுநான் செய்வதென்னே'' என்றும் பரவிப் போற்றத்தான் தோன்றும். இதற்கு முன்புள்ள மண்டபத்துக் கற்றூண்களில் இராஜராஜன் முதலிய பல மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இதன் சுற்றுப் பிராகாரத்தில் ஓர் அற்புதமான பஞ்சமுக லிங்கம் இருப்பதைக் காண்கிறோம். பல்லவர் காலத்துப் பஞ்சமுக லிங்கங்களில் மிகச் சிறப்பு வாய்ந்தது இதுவேயாகும். இதன் எழிலைப் பார்க்கும்போது பம்பாயைச் சார்ந்த எலிபெண்டாக் குகையில் உள்ள திரிமூர்த்தியின் திருவுருவே நம் கண்முன் நிற்கும். விமானத்துக்கு முன்புள்ள உள்கோபுரத்தை 13-ஆம் நூற்றாண்டில் சுந்தரபாண்டியன் கட்டுவித்தான் என்று சொல்லலாம். கோபுர வாயிலில் அவனுடைய இலச்சினையாகிய மீன் சின்னம் செதுக்கியிருப்பதைக் காண்கிறோம். அதற்கும் அப்பாலுள்ள வெளிக் கோபுரம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்கள் கட்டியது. இந்தக் கோபுரத்தைக் கட்டிய நாயக்க மன்னருடைய திருவுருவைக் கோயில் நுழைவாயிலில் காணலாம். அந்த நுழைவாயிலில் அழகிய நாட்டிய மங்கையர்களின் சிற்பங்களையும் காண்கிறோம்.

இங்கிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் இடிந்த கோயில் ஒன்று இருக்கிறது. அக் கோயிலின் நடுவிலே கர்ப்பக்கிருகத்தில் பட்டை தீட்டிய சிவலிங்கம் ஒன்று காணப்படுகிறது. அக் கோயிலைத்தான் மகேந்திரவர்மன் முதல்முதலில் தான் சைவனாக மாறிய பிறகு கட்டுவித்தான். அதுவே குணதரீசுவரம் என்ற வரலாற்றுச் சிறப்புடைய கோயிலாகும். அக் கோயிலின் முன்புறத்தில் பல்லவர் காலத்திய விஷ்ணுவின் சிலை ஒன்று இருக்கிறது. இது தவிர, சூரிய பகவானுடைய சிலையும், ஐங்கரன் (பிள்ளையார்) சிலையும், பல்லவர் கால நந்தியும் அங்கு இருப்பதைக் காணலாம். இவை அனைத்தும் மகேந்திரவர்மனுடைய காலத்தவை என்று அறிகிறோம். இக் கோயிலுக்கு அருகிலே, பண்டை நாளில் இங்கு நிலவிய சமணத் தொடர்பைக் காட்டும் முறையில் மகாவீரரின் சிலையும் குபேரன் சிலையும் காண்கின்றன.

வரலாற்றுச் சிறப்புடைய திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயத்தையும், குணதரீசுவரர் ஆலயத்தையும் பார்க்கும்போது நமக்கு அப்பர்பிரானின் பெருமையும் மகேந்திர வர்மனின் புகழும் சைவ சமயத்தின் சிறப்பும் நினைவுக்கு வருகின்றன. ★

ஐங்கரன், குணதரீசுவரம்

குணதரீசுவரர்

சூரியன்

அம்பிகை சிரித்தாள்

—மாயாவி—

நேரம் போனதே தெரியாமல் அமிழ்ந்து அமிழ்ந்து குளித்துக்கொண் டிருந்தேன். பத்து வருஷ காலமாகப் பட்டணத்துக் குழாய்த் தண்ணீரைச் செம்பு செம்பாக எடுத்து விட்டுக்கொண்டு குளித்து அலுத்துப் போன எனக்குச் சலசலவென ஒலியெழுப்பிக்கொண்டு பாய்ந்தோடிய அந்தத் தெள்ளத்தெளிந்த ஆற்றுநீரில் குளிப்பது பரமானந்தமாக இருந்தது.

நாகரிகப் புயல் எங்கள் கிராமத்தையும் கிராமவாசிகளையும் எத்தனையோ விதங்களில் மாற்றியிருந்தபோதிலும் குஞ்சு குளுவான் முதல் அதிகாலையில் குளித்துவிடும் பழக்கத்தை மட்டும் அது மாற்றிவிடவில்லை. ஏன்? நான்கூட நாளைமுதல் அந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியவன்தான். இல்லாவிட்டால் அம்மா என்னை நச்சரிப்பாள். இன்று மட்டும் எனக்கு அந்த விதியிலிருந்து விலக்கு அளித்திருந்தார்கள். காரணம், நான் சற்றுமுன் தான் ஊர் வந்து சேர்ந்திருந்தேன்.

அது சித்திரை மாதம். அப்பொழுது பகல் பன்னிரண்டு மணி இருக்கும். ஊருக்கு எப்பொழுது வந்தாலும், அங்கே எதைத் தவற விட்டாலும் எங்கள் ஹநுமந் நதியில் நாள்தோறும் அமிழ்ந்து குளிக்கும் சுக போகத்தை மட்டும் நான் ஒருபோதும் தவறவிட மாட்டேன். அதிலும் இந்தத் தடவை பத்தாண்டுகளுக்குப் பிறகு ஊர் திரும்பியிருந்தேன். எனவேதான் அந்தப் பத்தாண்டுக் காலமும் ஹநுமந் நதி ஸ்நானத்தைத் தவற விட்டதற்கெல்லாம் சேர்த்து வைத்துக் குளிப்பதுபோல் ஆனந்தமாகக் குளித்தேன்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம், சிறு குழந்தையைப் போல் தண்ணீரை ஒரு கலக்குக் கலக்கிவிட்டுக் கடைசியில் அம்மா எனக்காகச் சாப்பிடாமல் காத்திருப்பாள் என்பது நினைவுக்கு வரவே, மனமின்றி நீரிலிருந்து எழுந்து தலை துவட்டிக்கொண்டு படியேறி மேலே வந்தேன்.

எங்கள் ஊரில், ஹநுமந்நதி அக்கிரகாரத்தை ஓர் அரை வட்டம் சுற்றிக்கொண்டு ஓடுகிறது. அந்த அரை வட்டத்துக்கு உட்பட்ட ஒவ்வொரு வீட்டுக் கொல்லையிலும் ஒரு படித்துறை உண்டு. துரதிர்ஷ்டவசமாக எங்கள் வீடு அந்த அரை வட்டத்துக்குள் இருக்கவில்லை. நதி வீட்டைத் தொட்டுக்கொண்டு ஓடாத பகுதியில் வசிப்பவர்களுக்கென்று, அது கிராமத்தை நெருங்கும் இடத்தில் ஒரு பெரிய படித்துறை கட்டி விட்டிருந்தார்கள். அதற்கு அரசடிப் படித்துறை என்று பெயர். அந்தப் பகுதியில் கரை நெடுகப் பல அரச மரங்கள் வளர்ந்திருந்தன.

படித்துறை ஏறியதும் அரச மரத்தடியில் பிள்ளையார் விக்கிரகமும், அதற்குச் சிறிது தூரத்துக்கு அப்பால் பிள்ளையார் கோயிலும் இருந்தன. ஆனால் பெரிதும் வழிபாட்டுக்குரியவராக விளங்கியவர் படித்துறைப் பிள்ளையாரே. அவர் மக்கள் குளித்து விட்டுக் கரையேறியதும் தொழுவதற்கு வாகாக எதிரே வீற்றிருந்தார்.

விநாயகர் தோத்திரத்தை வாய் முணுமுணுக்க, தலையில் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போட்டு, யானைமுகத்தானை வணங்கிவிட்டு, அரசமரத்தை வலம் வரத் தொடங்கினேன். நான் இரண்டாவது சுற்று வந்துகொண் டிருந்த போதுதான் அந்தத் திடுக்கிடும் சம்பவம் நிகழ்ந்தது.

இருபத்தைந்து வயசு இருக்கும், அக்கிரகாரத்தைச் சார்ந்த அம்மாள் ஒருத்தி, எவர்ஸில்வர் தூக்கு நிறையக் கொழுக்கட்டைகளைக் கொண்டுவந்து அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு நைவேத்தியம் செய்யத் தொடங்கினாள். அவர்கள் வீட்டில் என்ன விசேஷமோ? கொழுக்கட்டை நைவேத்தியம் செய்வதாக அவள் வேண்டுதல் செய்துகொண்டிருந்த காரியம் வெற்றிகரமாக நிறைவேறியிருந்ததோ? அல்லது அந்த அம்மாள் சதுர்த்தி விரதம் அநுஷ்டித்து வந்தாளோ?

கொழுக்கட்டைமீது ஒரு கண் இருந்தபோதிலும் நான் என் போக்கில் அரசமரத்தை வலம் வந்துகொண் டிருந்தேன். இரண்டாவது சுற்றை முடிக்கும் தறுவாயில் சற்றுத் தள்ளியிருந்த பிள்ளையார் கோயில் மண்டபத்திலிருந்து ஒருவன் மிக வேகமாக ஓடி வந்தான். அவன் மீசையும் தாடியும் அழுக்கு வேட்டியுமாகப் பார்வைக்குப் பரதேசிபோல் இருந்தான். பாவம்! நைவேத்தியம் முடிந்ததும் தனக்குச் சில கொழுக்கட்டைகள் பிரசாதமாகக் கிடைக்கலாமென்று ஓடி வருகிறான் என்று நினைத்தேன்.

ஆனால் நான் நினைத்ததற்கு மாறாக, அவன், நைவேத்தியம் செய்துகொண் டிருந்த அந்த அம்மாளின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான். ''அம்பிகே! பரதேவதே! மதுரவாணி! ஹே லோகமாதா! இந்தக் கடையேனைக் காத்தருள் செய்!'' என்று கூவி அந்த அம்மாளின் பாதங்களைப் பற்றிக்கொள்ளப் போனான். மறு கணம் அந்த அம்மாள், ''ஐயையோ! பைத்தியம்!'' என்று பெரிதாகக் கத்திக்கொண்டு மோதகத் தூக்குச் சட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு தலை தெறிக்கத் தெருவை நோக்கி ஓடினாள்.

கீழே குப்புற விழுந்து கிடந்த அந்தப் பைத்தியம், நினைவு இழந்தவனைப் போல் சிறிது நேரம் கட்டையாகக் கிடந்தது. பிறகு தலையைத் தூக்கித் தன் எதிரே பார்த்தது. ''மறந்து விட்டாயா மதுரவாணி? இந்த மகா பாவியை மன்னிக்காமலே மறைந்து விட்டாயா?'' என்று புலம்பிற்று.

நான் அவன் அருகில் சென்று, மீசை தாடிக்குள் மறைந்து நின்ற அந்த வாடி வதங்கிய முகத்தை உற்று நோக்கினேன். நோக்கியவன் அப்படியே திடுக்கிட்டு, ''சங்கர பட்டரா?'' என்று அலறினேன்.

பைத்தியத்தின் கோலத்தில் இருந்த சங்கர பட்டர் என்னை நிமிர்ந்து பார்த்தார். (அவர் பைத்தியமாக இருந்தபோதிலும் சங்கர பட்டர் என்று தெரிந்தபிறகு அவரை ஒருமையில் குறிப்பிட என் நாக்குத் துணியவில்லை.)

''யார் அப்பா நீ?'' அவர் பேச்சு இப்பொழுது தெளிவாக இருந்தது.

''நான்தான் மரக்கடைக் கிருஷ்ணையர் பிள்ளை, ராமன்.''

''பட்டணத்தில் இருக்கிறாய் அல்லவா? எப்பொழுது வந்தாய்?''

''இன்றுதான். ஆமாம், பட்டர்வாள், இதெல்லாம் என்ன கோலம்?''

''என் மதுரவாணிக்கு .....'' என்று ஆரம்பித்த அவர், சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவர்போல், ''நீ இங்கே எவ்வளவு நேரமாய் இருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''சிறிது நேரமாக இங்கேதான் இருக்கிறேன்.''

''அப்படியானால் என் மதுரவாணி எங்கே மறைந்தாள், எப்படி மறைந்தாள் என்பதைச் சொல்லேன்.''

''ஓ! அந்த அம்மாள் பெயர் மதுரவாணியா?''

மதுரவாணி என்பது எங்கள் ஊர் அம்மனின் பெயர். ஆதலால் ஊரில் பாதிப் பெண்களுக்கு அந்தப் பெயரே இட்டிருந்தார்கள்.

''அபசாரம், அபசாரம்! நம் அம்பிகையையா அம்மாள் என்று கூறுகிறாய்? இதுதான் பட்டணத்து நாகரிகமா?''

அவருக்குச் சித்தம் பேதலித்திருக்கிறது என்பதை இப்பேச்சு உறுதி செய்ததனால் நான் பேசாமல் நின்றேன்.

அவர் தொடர்ந்து கேட்டார்: ''சொல்ல மாட்டாயா ராமா? என் மதுரவாணி எங்கே மறைந்தாள்?''

''இதோ இப்படித்தான் வடக்குத் தெருவை நோக்கி ஓடினாள்'' என்று என்னை அறியாமலே கூறிவிட்டேன்.

மறுகணம், ''தேவி! அம்பிகே! நீ எங்கே மறைந்துகொண்டாலும் உன்னைத் தேடிக் கண்டுபிடித்து மன்னிப்புப் பெற்றே திருவேன்'' என்று கூவியவாறு சங்கர பட்டர் வடக்குத் தெருவை நோக்கி விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்.

நான் கல்லாகச் சமைந்து நின்றேன்.

என்னால் இதை நம்பவே முடியவில்லை. சங்கர பட்டருக்கா பைத்தியம்?

சங்கர பட்டர் தூய ஆத்மா அல்லவா? குணக் குன்று அல்லவா? நேர்மையும், சாந்தமும், நெறி தவறாப் பண்பும், அளவு கடந்த தெய்வ பக்தியும் உடைய எங்களூர்ப் பெரிய கோயில் அர்ச்சகருக்கா பைத்தியம்? கண்முன்னால் பைத்தியக் கோலத்தில் கண்டுங்கூட அவரைப் பைத்தியமென்று நம்ப என் மனம் மறுத்தது.

எங்களூர்ப் பெரிய கோயில் பூஜை உரிமையைப் பெற்றிருந்த குடும்பம் வாசுதேவ பட்டருடையது. ஐந்து வயசிலும், மூன்று வயசிலும் இரண்டு ஆண்மக்களை விட்டு விட்டு வாசுதேவ பட்டர், இளவயசில் அகால மரணம் அடைந்தபோது ஊர்ப்பிரமுகர்கள் கோவில் பூஜைக் காரியங்களை நிறைவேற்றுவதற்காக, அருகில் இருபது மைல் தூரத்தில் இருந்த விரசிகாமணி என்ற ஊரிலிருந்து சங்கர பட்டரை வருவித்தனர்.

சங்கர பட்டர் எங்கள் ஊரில் குடியேறி, பெரிய கோயில் பூஜைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாள் இன்றும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அப்பொழுது எனக்கு ஆறேழு வயசுதான் இருக்கும். அன்று கடைசி வெள்ளிக்கிழமை. அநேகமாக எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் தவறாமல் பெரிய கோயிலுக்குத் தரிசனத்துக்குச் செல்லும் என் தாயுடன் போக முடியாதபடி, காய்ச்சல் வந்து வீட்டில் படுத்துக் கிடந்தேன். இரவு எட்டரை மணிக்கு அர்த்தஜாமப் பூஜை முடிந்து, தட்டில் அர்ச்சனைப் பிரசாதத்துடன் வீடு திரும்பிய என் தாய், பிரசாதத் திருநீற்றையும் குங்குமத்தையும் என் நெற்றியில் இட்டுக்கொண்டே அந்தச் செய்தியை அறிவித்தாள்.

''முருகனைப் பிரத்தியட்சமாகக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் புதிதாக வந்திருக்கும் பட்டர். ஆகா! அலங்காரமென்றால் இதல்லவா அலங்காரம்?''

ஆம், விக்கிரகாலங்காரத்தின் மூலம் தமக்கு ஒரு தனிப்புகழைத் தேடிக் கொண்டவர் சங்கர பட்டர். அவர் முதல் நாள் முருகனுக்குச் செய்திருந்த அலங்காரத்தைத் தோற்கடிப்பதாக இருந்தது, மறுநாள் முதல் மதுரவாணி அம்பாளுக்குச் செய்யத்

தொடங்கிய அலங்காரம். அவருடைய கையில் தெய்வாம்சமும், கண்களில் கலை அம்சமும் இருந்தனவோ என்னவோ?

சங்கர பட்டரின் அலங்காரத் திறமை ஆண்டுதோறும் இரண்டு தடவை உச்ச கட்டத்தை அடையும். ஆம்; புரட்டாசி மாதத்தில் நவராத்திரி உற்சவத்தின் போதும், சித்திரை மாசத்தில் தேர்த் திருவிழாவின் போதும். அந்த இரண்டு உற்சவங்களின்போதும் ஒன்பது நாட்கள் அம்பிகையை நவரசங்களை வெளிப்படுத்தும் தேவியாக அலங்காரம் செய்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதிலும் குறிப்பாக நவராத்திரி உற்சவத்தின்போது அம்பாளின் கொலு விக்கிரகத்துக்கும், தேர்த்திருவிழாவின்போது உற்சவ விக்கிரகத்துக்கும் அவர் செய்யும் விதம் விதமான அலங்காரம் இருக்கிறதே, அதைப் பாராட்டாதவரே எங்கள் ஊரில் கிடையாது. ஏன்? இந்த உற்சவங்களின் போது சங்கர பட்டரின் அம்பிகை அலங்காரத்தைப் பார்த்துத் தரிசிப்பதற்கென்றே பக்கத்தூர்களிலிருந்து பக்த மகாஜனங்கள் திரளாக வருவார்கள்.

அலங்காரத்தில் மட்டும் அல்ல; வழிபாட்டு நியமங்களில்கூட எந்த அம்சத்திலும் எந்த விதமான குறையும் இருக்கப் பொறுக்காதவர் சங்கர பட்டர். அவருக்குமுன் கோயிலின் அர்ச்சகர் பொறுப்பை ஏற்றிருந்த பட்டர்கள், வழிபாட்டு நியமங்களைச் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் வந்தார்கள் என்றும், சங்கர பட்டர் அந்தப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் அந்த நியமங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் குறையின்றி ஒரே சீராக நடக்கத் தொடங்கியிருக்கின்றன என்றும் விக்கிரக வழிபாட்டு நியமங்களை நன்கு கற்றுணர்ந்திருந்த என் தாத்தா கூறுவார்.

கோயில் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் எல்லாருமே ஆங்காங்குச் சில சில்லறைக் கையாடல்களைச் செய்யாமல் இருப்பதில்லை. ஆனால் சங்கர பட்டரைப் பொறுத்தவரையில் அவர் இதற்கும் விலக்காக இருந்து வந்தார். ''சிவன் சொத்துச் சர்வ நாசம், பயல்களா! சுவாமிக்கென உள்ளதில் கை வைத்து நாசமாகப் போகாதீர்கள்!'' என்று அவர் கோயில் சிப்பந்திகளை அடிக்கடி எச்சரிப்பார். எச்சரிப்பதுடன் மட்டும் அல்ல; அம்மாதிரி ஏதும் நடைபெறுதபடி கண்ணில் எண்ணெயை விட்டுக்கொண்டு கண்காணித்தும் வருவார்.

தெய்வத்தின் பொருளைக் காப்பாற்றுவதில் அவருக்கு எவ்வளவு அக்கறை இருந்தது என்பதைக் காட்ட ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் இங்கே கூறுகிறேன்.

சித்திரை மாதத்தில் பௌர்ணமி தினத்தன்று எங்களூரில் தேர். இரண்டு தேர்கள். ஒன்றில் சுவாமியும், மற்றொன்றில் அம்மனும் சர்வாலங்காரம் பூண்டு வீதிவலம் வருவார்கள். திருவாரூர்த் தேர் அளவு பெரியவை அல்ல என்றாலும், எங்களூர்த் தேர்களும் ஓரளவு பெரியவை தாம். காலையில் ஏழு மணிக்கே ஊர் மக்கள் கூடி, ஒவ்வொரு தேராக வடம் பிடித்து வீதி வழியே இழுத்து வருவார்கள். சில ஆண்டுகளில் சில மணி நேரத்துக்குள்ளாகவே இரண்டு தேர்களும் நிலைக்குத் திரும்பிவிடும். சில ஆண்டுகளில் மாலை வரையில், ஏன்? இரவு நெடுநேரம் வரையில் கூட ஆகிவிடும். ஆனால் ஒரு காரியம்; எவ்வளவு ராத்திரியானாலும், தேர்களை நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்த பிறகுதான் ஜனங்கள் வீடு திரும்புவார்கள். நான் அறிய ஒரே ஒரு தடவைதான் தேரை ரதோற்சவ தினத்தன்றே நிலைக்குக் கொண்டுவர முடியாமற் போய், மறுநாள் வெளியூர்களிலிருந்து ஆட்களைத் திரட்டி வந்து ரதோற்சவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதாயிற்று. அந்தத் தடவைதான் தெய்வத்தின் பொருளைக் காப்பாற்றுவதில் தமக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைச் சங்கர பட்டர் நிரூபித்தார்.

அந்த வருஷம் ஐப்பசி கார்த்திகையில் பெய்த அடைமழை காரணமாக ஹநுமந்நதி பெருக் கெடுத்துக் கிராமம் முழுவதையும் இரண்டு நாள் வெள்ளக்காடாக்கி விட்டது. இந்தப் பெருக்குக் காரணமாகத் தேர்வீதியில் பல இடங்களில் மண் அரித்துச் செல்லப்பட்டுப் பெரும் பள்ளங்கள் உண்டாகிவிட்டன. பல மாதங்கள் வரையில் கவனிக்காமல் விட்டிருந்த அந்த இடங்களைத் தேர்த் திருவிழாவுக்குச் சில நாட்களுக்கு முன்தான் மண்போட்டு நிரப்பி, ரோடு உருளைகளை உருட்டிக் கெட்டிப்படுத்திச் செப்பனிட்டார்கள்.

ஆனால் ரோடு உருளையின் கனம் எங்கே? பெரிய தேரின் கனம் எங்கே? அந்த ஆண்டில் முதலாவதாக உலா வந்த சுவாமி தேர் எப்படியோ இரண்டு மணி நேரத்தில் நிலைக்கு வந்துவிட்டது. ஆனால் அம்மன் தேர் உலா வருகையில் செப்பனிட்ட ஓர் இடத்தில் அதன் ஒரு பக்கத்துச் சக்கரங்கள் புதைந்துவிட்டன. இரவு பத்து மணி வரையில் எவ்வளவோ அச்சுத்தடி போட்டுப் பார்த்தும், எவ்வளவோ தாரையும் தப்பட்டையும் முழக்கி ஜனங்களை உற்சாகப்படுத்தி இழுக்கச் செய்தும், தேரை அந்த இடத்திலிருந்து கிளப்ப முடியவில்லை. கடைசியில் வெளியூர்களிலிருந்து ஆட்களைத் திரட்டி வந்துதான் தேரை நகர்த்த முடியும்

என்று இரவு பத்து மணிக்கு மேல் முயற்சியைக் கைவிட்டார்கள்.

எங்களூர் அம்மனுக்குத் தங்கமும் வெள்ளியும் வைரமும் வைடூரியமுமாக ஏராளமான ஆபரணங்கள் உண்டு. அவற்றில் பெரும்பாலானவற்றை அணிந்து தேரில் அமர்ந்திருந்தாள் மதுரவாணித் தாய். எப்பொழுதுமே தேரோட்டத்தின்போது நண்பகல் வரையில் தேரை நிலைக்குக் கொண்டு வர முடியாமற் போனால், முயற்சியை மாலைவரையில் நிறுத்தி வைத்து, வெயிலின் உக்கிரம் குறைந்த பிறகு மீண்டும் வடம் பிடிப்பார்கள். அம்மாதிரி சமயங்களில் அம்மனின் ஆபரணங்களுக்குக் காவலாக இரண்டொரு போலீஸ்காரர்களை நிறுத்திவிட்டு அர்ச்சகர் உட்படத் தேரில் இருக்கும் அனைவரும் இறங்கிப் போய் விடுவார்கள். அவ்வாறே அன்றிரவும் திருவிழாப் பந்தோபஸ்துக்கென்று வந்திருந்த ஸப் இன்ஸ்பெக்டர் இரண்டு போலீஸ் ஜவான்களைக் காவலுக்குப் போட்டார்.

ஆனால், இரவு நேரமாதலால், போலீஸ்காரர்கள் உறங்கி, அம்மனின் நகை ஏதும் பறி போய்விடக் கூடாதே என்ற கவலை சங்கர பட்டருக்கு ஏற்பட்டது. எனவே, ஸப் இன்ஸ்பெக்டர், கோயில் மணியகாரர் முதலியோர் வேண்டாமென்று சொல்லியுங்கூட, அவர் பிடிவாதமாகத் தேரிலேயே இரவுப் பொழுதைத் தள்ள நிச்சயித்தார். சங்கர பட்டரின் இந்தப் பிடிவாதத்துக்கு மற்றொரு காரணமும் இருந்தது.

விவசாயத்தையே நம்பியிருக்கும் கிராமம் எங்களது. அந்த ஆண்டில் பெய்த பெருமழையினால் பயிர்களெல்லாம் அழிந்து ஊரில்,குறிப்பாக ஏழை மக்களிடையே, வறட்சி நிலை ஏற்பட்டிருந்தது. வயிற்றுக்கு இல்லாத கொடுமை காரணமாக அப்பொழுது சில மாதங்களாக ஊரில் திருட்டுப் பயம் மிகுதியாக இருந்தது. திருடத் துணிந்தவனுக்கு மக்களின் பொருளாக இருந்தாலும், தெய்வத்தின் பொருளாக இருந்தாலும், எல்லாம் ஒன்றுதானே? இதை மனத்தில் கொண்டுதான் சங்கர பட்டர் அம்மனின் ஆபரணங்களுக்குப் பாதுகாப்பாக அன்றிரவு தேரிலேயே தங்கியிருக்க நிச்சயித்தார்.

அவர் பயந்தது சரியாகவே போயிற்று. நள்ளிரவில் எவனோ ஒருவன் தேரின் பின்புறமாக ஏறி வந்து, அம்மனின் கழுத்தில் பூட்டியிருந்த தங்கச் சங்கிலி ஒன்றை மெதுவாகக் கழற்றி எடுத்துச் சென்றுவிடப் பார்த்தான். ஆனால் சங்கிலி போன்ற எளிதில் கழற்றி எடுத்துவிடக் கூடிய ஆபரணங்களைச் சங்கர பட்டர் முன்னெச்சரிக்கையுடன் வலுவான நூலினால் பல இடங்களில் விக்கிரகத்தோடு கட்டியிருந்தமையால், அவன் சங்கிலியை இழுத்தபோது பட்டுப் பட்டென்று அந்த நூல்கள் அறுந்து மெல்லிய ஒலி எழுப்பின. சங்கர பட்டர் விழித்திருந்தமையால் அந்தச் சிறிய ஒலியே அவரை உசுப்பப் போதுமானதாக இருந்தது. அம்மன் பாதத்தடியில் அமர்ந்திருந்த அவர் சட்டென்று எழுந்து, சங்கிலியைப் பற்றியிருந்த திருடனின் கையை எட்டிப் பிடித்துக் கொண்டார். மறு நிமிஷம் திருடன் தன் இடக் கையில் இருந்த குண்டாந்தடியால் சங்கர பட்டரின் மண்டையில் ஓங்கி ஒரு போடு போட்டான்.

''ஐயோ திருடன்!'' என்று வலி தாங்காமல் அலறியபோது, அவருடைய கைப்பிடி அவரை அறியாமலே தளர்ந்தது. தேருக்கு முன்னால் படுத்துக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த போலீஸார் விழித்து மேலே ஏறி வருவதற்குள் திருடன் பின்புறமாகக் குதித்து ஓடி மறைந்து விட்டான்.

சங்கர பட்டருக்கு மண்டையில் சரியான அடி; ரத்தம் கொட்டிற்று. ஆனாலும், அம்மனின் சங்கிலியைக் காத்துவிட்டோம் என்ற நிம்மதியில் அவர் அதைப் பொருட்படுத்தவே இல்லை.

அவருக்கு மன்னிக்கும் இயல்பும் நிறைய உண்டு. கையும் மெய்யுமாக யாரைப் பிடித்தாலும் சரி, அவர்களைத் தங்கள் பிழையை ஒப்புக்கொள்ளச் செய்து, திருடிய பொருளையோ அதற்குரிய தொகையையோ கொடுக்கச் செய்து மன்னித்து அனுப்பி விடுவாரே அன்றி யாரையும் காட்டிக் கொடுத்துத் தண்டனையோ, அவமானமோ அடையச் செய்ய மாட்டார். அவருடைய நோக்கமெல்லாம் கோயில் சொத்துப் பாழாகக் கூடாது, பறி போகக் கூடாது என்பதுதான்.

இப்படியெல்லாம் கோயில், கோயில் சொத்து, அதன் பெருமை, அதன் மேன்மை என்ற ஒரே சிந்தனையுடன் வாழ்ந்து வந்த பக்தசிரோமணிக்குப் பைத்தியம் பிடித்திருந்ததைக் கண்டதும் என்னால் அதற்கு ஒரே காரணந்தான் காண முடிந்தது. மலையாளத்தை ஒட்டியிருந்ததனாலோ என்னவோ, எங்கள் ஊரில் அந்த மலையாளத்து மாந்திரிக வேலைகளான பில்லி, சூனியம், ஏவல் முதலிய அக்கிரமங்கள் சிறிது அதிகமாகவே கையாளப்பட்டு வந்தன. சங்கர பட்டர், என்னதான் பிறரைக் காட்டிக்கொடுக்கும் இயல்பற்றவராக இருந்தபோதிலும், அவருடைய கண்காணிப்புக் காரணமாக, கோயில் திருப்பணியில் ஈடுபட்டிருந்த பலருக்கு அங்கே கையாடல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதல்லவா? ஆதலால் அவரை ஒழித்துக்கட்ட எந்தப் பாவியோ ஏவல்வேலையைக் கையாண்டு அவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டான் என்று வருத்தத்துடன் முடிவு செய்துகொண்டு வீடு திரும்பினேன்.

வீட்டில் அம்மாவிடம் அரசடிப் படித்துறையில் நிகழ்ந்தவற்றைக் கூறியதும் அவள், ''பாவம்! அந்தப் பெண் மேகவர்ணப் பட்டுப் புடைவை உடுத்துக்கொண்டு சங்கர பட்டரின் கண்ணில் பட்டுவிட்டாள் போலிருக்கிறது!'' என்றாள்.

ஆமாம்; மோதகத்தை நைவேத்தியம் செய்ய வந்திருந்த அந்த அம்மாள் மேகவர்ணப் பட்டுப் புடைவைதான் உடுத்திருந்தாள். ''என்னம்மா சமாசாரம்? மேகவர்ணப் பட்டுச் சேலைக்கும், சங்கர பட்டரின் பைத்தியத்துக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?'' என்று நான் கேட்டேன்.

''அந்தப் பட்டுச் சேலையால்தானே அவருக்குப் பைத்தியமே பிடித்தது?'' என்றாள் என் தாய்.

''என்ன நடந்தது அம்மா? விவரமாகச் சொல்லேன்.''

என் அன்னை கூறிய, நெஞ்சை உருக்கும் அந்தச் சோகக் கதை இதுதான்:

* * *

பதிக்கேற்ற பத்தினியாய், தெய்வ பக்தியில் கணவருக்குச் சிறிதும் குறைவற்றவளாய், கண்டவர்கள் கையெடுத்துக் கும்பிடும்படி பெயருக்கேற்ப மகாலட்சுமியாக விளங்கி வந்த சங்கர பட்டரின் மனைவி லட்சுமி, பத்தாண்டுகளுக்கு முன் நான் ஊருக்கு வந்துவிட்டுப் போன சில மாதங்களுக்கெல்லாம் நோய்வாய்ப்பட்டு, மஞ்சளோடும் குங்குமத்தோடும் கணவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டாள்.

சங்கர பட்டருக்கு அப்பொழுது நாற்பது வயசு இருக்கும். அவர் ஒன்றும் மன்மத சொரூபம் அல்ல. கன்னங்கறேலென்று கட்டுக் குட்டெனத் தொந்தியைத் தள்ளிக்கொண்டிருக்கும் தோற்றமுடையவர்தாம். தாம் வாழ்ந்து வந்த சுயநலப் பற்றற்ற வாழ்க்கைக்குத் தாரம் இழந்த அவர் மறுதாரம் தேடிக்கொண்டிருக்கவே மாட்டார். ஆனால் தாரம் இழந்தவர்கள், உற்சவ காலங்களில் கையில் காப்புக் கட்டிக்கொண்டு பூஜை முதலிய நியமங்களைச் செய்யக் கூடாது என்ற வழக்கம் இருந்து வந்தமையால், மனைவியை இழந்ததுடன், தமது உயிருக்கு உயிரான பூஜைப்பணியையும் இழந்துவிட விரும்பாத சங்கர பட்டர், லட்சுமி இறந்த ஆறு மாதத்துக்கெல்லாம் பார்வதியைக் கைப்பிடித்து ஊருக்கு அழைத்து வந்தார்.

அழகிலாகட்டும், அன்பிலாகட்டும், தெய்வ பக்தியிலாகட்டும், லட்சுமிக்கு உறைபோடக்கூடத் தகுதியற்றவள்தான் பார்வதி. அது ஒரு புறம் இருந்தபோதிலும் அவள் நவ நாகரிக நங்கையாய், ஆடம்பரப் பிரியையாய், பெருவாழ்வில் மோகமுடையவளாய் இருந்ததுதான் சங்கர பட்டருக்கு ஆபத்தாயிற்று.

சங்கர பட்டரின் வருவாயெல்லாம், நாள்தோறும் இரவும் பகலும் இரண்டு பட்டைச் சோறும், மாதந்தோறும் பதினைந்து ரூபாயும், வாசுதேவ பட்டருக்கு மானியமாக விட்டிருந்த மூன்று ஏகரா நன்செய் நிலம் (இப்பொழுது வாசுதேவ பட்டரின் வேலையை இவர் செய்து வந்ததனால்) ஆண்டுதோறும் அளித்து வந்த நெல்லுமே. கணவனும் மனைவியும் அடங்கிய ஒரு குடும்பம், அந்தக் காலத்தில் இந்த வருவாயைக் கொண்டு ராஜபோக வாழ்க்கை நடத்த முடியும். ஆனால் பார்வதியை மனையாட்டியாகப் பெற்ற

பிறகு சங்கர பட்டருக்கு இந்த வருவாய் போதாததாயிற்று.

எங்கள் ஊர்க் கோயிலில் அர்ச்சனைக்குச் சீட்டு முறை கிடையாது. சங்கர பட்டருக்கு முன்பு இருந்த அர்ச்சகர்கள், அர்ச்சனை ஒன்றுக்கு இரண்டணு விதம் வசூலித்து அதைத் தாங்களே எடுத்துக்கொண்டார்கள். ஆனல் சங்கர பட்டர் காலத்தில் அவர் அர்ச்சனைக்குத் தட்சிணை வாங்க மறுத்துவிட்டார். யாராவது மிகவும் வற்புறுத்தினுல், அவர்கள் தரும் காசை வாங்கி அப்படியே கோயில் உண்டியலில் போட்டு விடுவார்.

பார்வதி பெரிய வாயாடி. தன் ஆடம்பரச் செலவுகளுக்குப் பணம் இல்லையென்று கணவர் கை விரிக்கும் போது அவள் பத்திரகாளியாக மாறி அவரைக் கண்டபடி ஏசுவாள்; குதிப்பாள்; நிர்த்தூளி பண்ணுவாள். அவளுடைய அடங்காப் பிடாரித்தனத்துக்குப் பயந்து, பிற்காலத்தில், சங்கர பட்டர், தமக்கு முந்திய அர்ச்சகர்களைப் போலவே அர்ச்சனைக்குத் தட்சிணை வசூலிக்கத் தொடங்கினுர்.

ஆனல் யானைப் பசிக்குக் கருப்பட்டி மாதிரி, மிஞ்சி வந்தால் மாசம் பத்துப் பதினைந்து ரூபாய்கூடத் தேருத இந்த அதிகப்படி வரும்படி பார்வதியின் ஆடம்பரச் செலவுகளுக்கு எப்படிப் போதும்? எனவே, அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கை எலியும் பூனையும் இணைந்த வாழ்க்கையாகவே இருந்து வந்தது.

இந்த நிலையில் நான்கு ஆண்டுகளுக்கு முன் பார்வதி நோய்வாய்ப்பட்டு 'ஆச்சு, போச்சு' என்று கிடந்தாள். சங்கர பட்டர் பக்கத்து நகரத்திலிருந்து டாக்டர் ஒருவரை நாள்தோறும் அழைத்துவந்து மனைவிக்கு ராஜவைத்தியம் பார்த்துப் பிழைக்கச் செய்தார். ஆனல் மனைவியின் இந்தச் சிகிச்சைச் செலவு இதுவரையில் யாரிடமும் கைநீட்டிக் கால்காசுகூடக் கடன் வாங்கியிராத அவரை முந்நூறு நானூறு ரூபாய்க்குக் கடனுளியாக்கிவிட்டது.

அத்துடன் நின்றதா? பார்வதி பிழைத்தெழுந்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் தீபாவளிப் பண்டிகை வந்தது. முதல் மனைவி உயிரோடிருந்த போதும் சரி, அவள் மறைந்து பார்வதியைத் தம் இரண்டாம் மனைவியாக்கிக் கொண்டபிறகும் சரி, மனைவிக்குத் தீபாவளிக்குத் தவருமல் பட்டுச் சேலை எடுத்துக் கொடுத்து வந்தார் சங்கர பட்டர். இதற்கென்றே அவர் ஆண்டுதோறும் அறுவடையாகி வரும் நெல்லில் ஒரு பகுதியைத் தனியாக ஒதுக்கி வைத்து, தீபாவளிக்கு முன் அதை விற்று மனைவிக்குப் பட்டுச் சேலை வாங்கிக் கொடுப்பார். ஆனல் இந்த வருஷம் அந்த நெல்லையும் அவர் முன்னதாகவே மனைவியின் வைத்தியச் செலவுகளுக்காக விற்கும்படி ஆயிற்று.

தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன் பார்வதி பட்டுப் புடைவைக்காகக் கணவரை அணுகியபோது அவர் நிலைமையை விளக்கி, வைத்தியச் செலவுக்காகப் பட்டுள்ள கடனை அடைக்கும் வரையில் அவள் பட்டுச் சேலை ஆசையை விட்டுவிட வேண்டுமென்று அறிவித்தார்.

வழக்கம்போல் தாம் தீம் என்று குதித்தாள் பார்வதி. ஆனல் சங்கரபட்டர், அவளுடைய கோபத்தையோ சாகசங்களையோ சட்டை செய்யவில்லை. தீபாவளிக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. ஆண்டுதோறும் எங்களூர்க் கோயிலில் ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாண மகோற்சவம் நடைபெறும். ஒரு நாள் கொண்டாட்டந்தான் என்றுலும், கோயிலின் வருவாயைப் பொறுத்தவரையில் இந்த உற்சவந்தான் முக்கியமானது. நோய்வாய்ப்பட்டிருப்போர் நலம் பெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்திருப்போரும், நல்ல காரியங்கள் நிகழ வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருப்போரும் தங்கள் 'நேர்ச்சை'களை இந்தத் திருக்கல்யாண மகோற்சவத்தின்போதுதான் பெரும்பாலும் செலுத்துவர். அன்று ரொக்கமாகவும், நகை நட்டுக்களாகவும், புடைவை ரவிக்கை முதலிய துணிகளாகவும் நிறைய வருவாய் வரும்.

அந்த வருஷம் திருக்கல்யாண உற்சவம் தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன் வந்தது. நேர்ச்சையாகச் சாத்தும் நகை நட்டுக்களை அன்று முழுவதும் அம்மனுக்குச் சாத்தி வைத்திருப்பார்கள். மறுநாள் அர்ச்சகர் அவற்றைக் கழற்றிக் கோயில் மணியகாரரிடம் ஒப்படைத்து விடுவார். மணியகாரரர், இன்ன இன்ன நகைகள் இன்ன இன்ஞரால் சாத்தப்பட்டன என்று கணக்கு எழுதிக்கொண்டு நகைகளை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொள்ளுவார். உற்சவ காலங்களிலும் பிற விசேஷ நாட்களிலும், அவற்றுள் தேவைப்படும் நகைகளை அர்ச்சகர் கையொப்பமிட்டு வாங்கி வந்து சாத்தி விட்டு, விசேஷங்கள் முடிந்ததும் கழற்றி மணியகாரரிடம் திருப்பிக் கொண்டு ஒப்படைப்பார்.

ஆனல் இந்த ஒப்படைப்பு, கணக்கு வைத்துக்கொள்ளுதல் ஆகிய விவகாரங்களெல்லாம் அம்மனுக்குச் சாத்தும் புடைவை ரவிக்கைகளுக்குக் கிடையாது. கோயிலில் பெரிய மரப்பெட்டிகள் நான்கைந்து உண்டு. அவற்றில் அந்தத் துணிமணிகளை அர்ச்சகரே பாதுகாத்து வைத்துக்கொண்டு, தேவைபோல் எடுத்துப் பயன்படுத்துவார். அதிலும் குறிப்பாக, திருக்கல்யாண மகோற்சவ தினத்தன்று அம்மனுக்குப் பட்டுப் புடைவைகளாகவும், சுவாமிக்குப் பட்டு வேட்டிகளாகவும் ஏராளமாகச் சாத்துவார்களாதலால், அவற்றை மடிப்புக்களைக்கூட முழுவதும் பிரிக்காமல் சிறிது நேரம் சாத்தி வைத்திருந்து பிறகு எடுத்துப் பத்திரப்படுத்துவது வழக்கம். எனவே அவை புத்தம் புதியனவாக இருக்கும்.

அந்த வருஷம் திருக்கல்யாண உற்சவ நிகழ்ச்சிகள் முடிந்து இரவு வீடு திரும்பிய சங்கர பட்டரிடம், அன்று அம்மனுக்குச் சாத்திய பட்டுச் சேலைகளில் ஒன்றையாவது எடுத்துவந்து தனக்குத் தீபாவளிச் சேலையாகத் தர வேண்டும் என்று பிடித்துக்கொண்டாளாம் பார்வதி.

இதைக் கேட்டதும், ''என்ன? கோயில் சொத்தைத் திருடக் கூடாதென்று பிறருக்கு உபதேசம் செய்யும் என்னையா அம்மனின் புடைவை ஒன்றைத் திருடி வரச் சொல்லுகிருய்?'' என்று கோபம் கொண்டு கத்தினுர் சங்கர பட்டர்.

அந்தப் பிடாரி அவருக்குமேல் கத்தினுள். தீபாவளிக்குத் தனக்குப் பட்டுப் புடைவை தரவில்லையென்றுல் உயிரையே விட்டு விடுவதாகச் சாகசங்கள் செய்தாள்.

''நீ உயிரோடு இரு; அல்லது உயிரை விடு. என் உடலில் உயிர் உள்ளவரை

யில் கோயில் பொருள்களின்மீது கை வைக்க மாட்டேன்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் அவர். ஆனால்?

மறுநாள் அதிகாலை நேரத்தில், ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு கோயிலுக்குப் போவதற்காகச் சங்கர பட்டர் எழுந்து கொல்லைக் கிணற்றை நோக்கிச் சென்றார். அங்கே அவர் கண்ட காட்சி!

வீட்டின் பின்புறம் இருந்த மாட்டுக் கொட்டில் உத்தரத்தில் கிணற்றுத் தாம்புக் கயிற்றை மாட்டி அதில் தூக்குப் போட்டுக்கொள்ள முயன்றுகொண்டிருந்தாள் பார்வதி. அவள் உண்மையாகவே உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்திருந்தாளோ? அல்லது கணவரைப் பயமுறுத்திக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள அப்படிப் பாசாங்கு செய்தாளோ? சங்கர பட்டர் பதறிப் போய்விட்டார். அவள் விருப்பப்படி அன்றே அவளுக்கு ஒரு பட்டுச் சேலை வாங்கித் தந்துவிடுவதாகக் கூறி, அவளைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்தார்.

கடனோடு கடன், இன்னும் இருநூறு ரூபாய் யாரிடமாவது வாங்கிப் பட்டுச் சேலை வாங்கிக் கொடுத்துவிடுவதென்றுதான் அவர் எண்ணினார். அன்று காலைப் பூஜைகளை முடித்துக்கொண்டு கோயிலிலிருந்து திரும்பியதும், ஊர்ப் பிரமுகர் ஒருவரிடம் போய்ப் பணமும் கடன் வாங்கி வந்தார். ஆனால் பணத்தை வாங்கிய பிறகுதான் அவருக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. எங்கள் கிராமத்தில் பட்டுச் சேலைகள் விற்கும் அளவுக்குப் பெரிய ஜவுளிக் கடைகள் இல்லை. பட்டுச் சேலைகள் வேண்டுமென்றால் பத்து மைல்களுக்கு அப்பாலிருந்த நகரத்துக் கடைக்குத்தான் போக வேண்டும். உடனே போய்த் திரும்புவதற்கு ஏற்ற பஸ் போக்குவரத்து வசதியும் அப்பொழுது எங்கள் ஊரில் இல்லை. அவரோ மாலையில் கோயில் பூஜைக்கு இருந்தாக வேண்டியவர்.

இந்தச் சிக்கலைச் சங்கர பட்டர் மனைவியிடம் கூறி, தாம் கடன் வாங்கி வந்திருந்த இருநூறு ரூபாயையும் அவளிடம் கொடுத்து, ''பணத்தை நீயே வைத்துக்கொள். நாளைக்குத் தீபாவளி கழியட்டும். நாளையன்று காலையில் பூஜை முடிந்ததும் டவுனுக்குப் போய்ச் சேலை வாங்கிக்கொண்டு மாலைக்குள் திரும்பி விடுகிறேன்'' என்றார்.

ஆனால் பார்வதி அவர் கொடுத்த பணத்தை அவர் முகத்திலேயே விட்டெறிந்துவிட்டு, ''பண்டிகை முடிந்த பிறகு யாருக்கு வேண்டும் உங்கள் பட்டுப் புடைவை?'' என்று கத்தினாள். அன்று இரவுக்குள் புடைவை வரவில்லையென்றால் நிச்சயமாகத் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகப் பயமுறுத்தினாள்.

பாவம்! சங்கர பட்டர் தவியாகத் தவித்தார். கிராமத்தில் வேறு யாரிடமாவது விற்கத் தக்க பட்டுப் புடைவை இருக்கிறதா என்று தேடிக்கொண்டு மாலை வரையில் அலையாக அலைந்தார். விற்கக் கூடிய நிலையில் எவரிடமும் பட்டுச் சேலை இல்லை.

கடைசியில் அன்றிரவு அர்த்த ஜாம பூஜை முடிந்ததும், அவர் கோயில் மரப் பெட்டி ஒன்றைத் திறந்து, அதிலிருந்து மேக வர்ணப் பட்டுப் புடைவை ஒன்றை எடுத்துக்கொண்டு அம்பிகை முன் வந்தார். ''அம்பிகே! நான் செய்வது தவறாக இருந்தால் என்னை மன்னித்துவிடு. தெய்வத்தின் உடலை அலங்கரித்த ஒரு பொருள் மானிடப் பெண்ணின் உடலை அலங்கரிக்கக் கூடாதுதான். ஆனால் உனக்குச் சாத்திய சேலையை உடுத்த பிறகாவது என் மனைவி திருந்தி நல்லவளாகட்டும். இதே வர்ணத்தில், இதைவிட விலையுயர்ந்த பட்டுச் சேலை ஒன்றை நாளையன்றே வாங்கி வந்து உனக்குச் சாத்திவிடுகிறேன்'' என்று கூறிப் புடைவையை எடுத்து வந்து மனைவியிடம் கொடுத்தார்.

என்னதான், தாம் திருடவில்லை என்றும், எடுத்த சேலைக்குப் பதிலாக அதிலும் உயர்ந்த சேலையை வாங்கி வைத்துவிடப் போவதாகவும் தம்மைத் தாமே சமாதானம் செய்துகொண்ட போதிலும், மனச் சாட்சி அவரை வதைத்துக்கொண்டே இருந்தது. தூக்கம் வராமல் நெடுநேரம் தத்தளித்துவிட்டு, அதிகாலையில் எல்லாரும் தீபாவளி ஸ்நானத்துக்காக எழுந்திருக்கும் சமயத்தில்தான் அவர் கண் அயர்ந்தார்.

தான் விரும்பிய பட்டுப் புடைவை கிடைத்த மகிழ்ச்சியில் நன்றாகத் தூங்கிய பார்வதி, காலையில் மூன்று மணிக்கெல்லாம் எழுந்து தீபாவளி ஸ்நானத்தை முடித்துக்கொண்டு மேகவர்ணப் பட்டுப் புடைவையை உடுத்தவளாய்க் கணவரை ஸ்நானம் செய்வதற்காக எழுப்பினாள். கண் விழித்த சங்கர பட்டர், எதிரே மேக வர்ணச் சேலையில் தம் மனைவி பார்வதியைக் காணவில்லை; தாம் நாள்தோறும் பூஜித்து வரும் பார்வதி தேவியை, மதுரவாணியைக் கண்டார். ''தாயே! ஜகதம்பிகே! மதுரவாணி! என்னை மன்னித்துவிடு!'' என்று அவர் தடாலென்று மனைவியின் கால்களில் விழுந்தார்.

''என்ன இது? நான் பார்வதியல்லவா வந்திருக்கிறேன்? 'அம்பிகே! பரதேவதே!' என்று என் கால்களில் விழுகிறீர்களே! தூக்கக் கலக்கமா? அல்லது புத்தி பேதலித்துவிட்டதா உங்களுக்கு?'' என்று கூறிக் கலகலவென்று நகைத்தாள் பார்வதி.

''சிரிக்கிறாயா தேவி? சிரி, சிரி. இந்த அதமன் செய்த ஈனச் செயலை நினைத்துச் சிரி; உன் பக்தன் உனக்குச் செய்த துரோகத்தை நினைத்துச் சிரி. ஆனால், தாயே, உன்னை இறைஞ்சுகிறேன். கிருபை கூர்ந்து என்னை மன்னித்து விடு.''

இவ்வாறு என்ன என்னவோ புலம்பினாராம் சங்கர பட்டர். அவருடைய சொல் ஒவ்வொன்றும் அவருக்குச் சித்தம் கலங்கியிருப்பதை உணர்த்துவதாக இருந்தமையால் பார்வதி பதறிப் போய்க் கூக்குரலிட்டிருக்கிறாள்.

ஊர் கூடிற்று; நடந்த கதையெல்லாம் அம்பலமாயிற்று. தீபாவளி அன்றைக்கே பக்கத்து வீட்டுப் பையன் ஒருவனைச் சைக்கிளில் டவுனுக்கு அனுப்பித் தான் உடுத்திருந்தது போன்ற மேகவர்ணப் பட்டுச் சேலை ஒன்றை வாங்கிவரச் செய்து, கணவருடன் சென்று அவரைக் கொண்டே அதை அம்மனுக்குச் சாத்தச் செய்தாள் பார்வதி.

ஆனால் அது ஒன்றும் சங்கர பட்டரின் புத்தி பேதலிப்பைச் சரி செய்துவிடவில்லை. அவர் மேகவர்ணப் பட்டுப் புடைவையில் இருந்த அம்பிகையையும் மதுரவாணியாகவே கண்டார்; அதே வர்ணத்தில் சேலை அணிந்திருந்த தம் மனைவியையும் மதுரவாணியாகவே கண்டார். மனைவியை மட்டும் என்ன? அந்த வர்ணத்தில் பட்டுச் சேலை அணிந்திருந்த ஒவ்வொரு பெண்ணும் அவர் கண்ணுக்கு மதுரவாணியாகவே தென்பட்டாள். அவர்கள் ஒவ்வொருவர் காலிலும் அவர் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார்; தம்மை மன்னிக்கும்படி இறைஞ்சினார். புத்தி பேதலித்தவரைப் பூஜை செய்ய விடுவது தவறென்று ஊர்க்காரர்கள் மறுநாளே வேறு ஓர் அர்ச்சகரை அழைத்து வந்து அவரிடம் கோயில் பூஜைப் பொறுப்பை ஒப்படைத்தனர். சங்கர பட்டர் நிரந்தரப் பைத்தியமானார். வருவாய் இல்லாமையால் வீட்டில் வறுமை தாண்டவமாடத் தொடங்கியது. மனைவி பார்வதி அவர் எக்கேடும் கெட்டுப் போகட்டுமென்று தன் பிறந்தகத்துக்குப் போய்விட்டாள்.

இப்படிக் கூறி முடித்தாள் அம்மா.

* * *

சங்கர பட்டரின் இந்தச் சோகக் கதையைக் கேட்டபோது என் கண்கள் பனித்தன.

அன்று மாலையில் கோயிலுக்குப் போயிருந்தேன். அம்மன் சந்நிதியில் கரம் கூப்பி நின்று, ''உலக மக்களின் தவறுகளையெல்லாம் மன்னித்து அருள் பாலிக்கும் தாயே! உன் தொண்டே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருந்த இந்த நல்ல ஆத்மாவின் சிறு பிழையை மட்டும் நீ மன்னிக்காதது ஏன்?'' என்று மனமுருகக் கேட்டுவிட்டு அம்பிகையின் அழகு முகத்தை ஏறிட்டு நோக்கினேன்.

என் கேள்வி அவள் திருச்செவிகளை எட்டிற்றோ, என்னவோ? என்றும் போல் அவள் புன்னகை தவழ நின்றாள்.

அம்பிகையின் சிரிப்புக்கு அர்த்தம் கண்டவர் யார்?

★

ஓவியர்: எம். எஸ். தேவசகாயம்

மேற்குக் கடற்கரையில்

முகபாவங்கள்

1. கள்ளச் சிரிப்பு
2. வியப்பு
3. வீரம்
4. பயம்
5. அலட்சியம்
6. அழுகை
7. சிந்தனை
8. சந்தேகம்

போட்டோ: என். ராமகிருஷ்ண



டிவிஎஸ் விநியோகிக்கும்



டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள்

LUCAS TVS — Automobile electrical equipment
Standard — Battery
Canara Springs and Leaves
FERODO — Brake Linings and Clutch Facings
MICO — Fuel Injection Parts
BORG & BECK — Clutch Spares
TRANCO VALVES
SIRUBBER — Engine Mountings and Bushing Kits
TVS — Hydraulic Brake System
KAP AUTO PARTS
DOUBLE Lite PRECISION PARTS
ROLON — Timing Chains

மோட்டார் உறுப்புகள் தரத்தில் சிறந்தவை

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் பரிசோதனை செய்யப் பெற்று தேர்ந்த பிறகுதான் விற்கப் பெறுகிறது. இதனை பஸ், லாரி மற்றும் கார் சொந்தக்காரர்கள் நன்கு அறிவர்.

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். அதனால் உங்கள் நடைமுறைச் செலவு குறையும்.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம்
கோயமுத்தூர் - திருவனந்தபுரம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (AP)

மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ் – பங்களூர்

TVS

FRITZ Filter Elements
OHR Tie Rod Ends
BANCO Gaskets and Radiators
Sunfit Machined Auto Parts
CD TVS Compressor and Servos
allite Bulbs
ABC Roller Bearings
Finolex Auto Cables
HELLA Horns
NBC Ball Bearings
Ap Lubrication Fittings
SUNKAST Clutch Housings and Brake Drums

JWT-MAS-3739

அறவணை

க.நா. குமாரஸ்வாமி

"என்ன நளினி, 'போர்' அடிக்கிறதா? உம்: புது இடம் அல்லவா? போகப் போகச் சரிப்பட்டுப் போகும். பட்டணத்துச் சூழ்நிலையில் பழகிப் போனவள் நீ. இந்த ஊரை அப்படி மூலைக்காடென்று நினைக்காதே. இங்கேயும் லேடீஸ் கிளப், சினிமாத் தியேட்டர் எல்லாம் இருக்கின்றன. உனக்கு இங்கே என்ன கஷ்டம் சொல்லு. நெய் பால் காய்கறி வேண்டியவை கிடைக்கின்றன. நீதான் 'ஸ்வீட்ஸ்' பண்ணுவதில் தேர்ந்தவளாச்சே. தாராளமாகச் செய்யேன். நானும் ஏதோ ஒப்புக்கு ஆடவேண்டுமே என்று டென்னிஸ் ஒரு 'ஸெட்' ஆடிவிட்டு ஆறு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேனே! என்ன நளினி, உனக்கு இந்த ஊர் பிடிக்கவில்லையா? சொல்லு. இன்னும் சில மாதங்களில் நானே உன்னை உன் அம்மாவிடம் அனுப்ப நேரிடலாம்'' என்றதும், நளினியை நோக்கிக் குறும்பாகச் சிரித்தான் சாமிநாதன்.

''ரொம்பச் சமர்த்தாய்ப் பேசிவிட்டோம் என்று எண்ணமாக்கும்! போதுமே!'' என்றாள் நளினி, சற்று அலுப்புடன்.

சுவரில் இருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டே வாசனை எண்ணெயைத் தடவித் தன் கிராப்பை ஒழுங்காக வாரிவிட்டுச் சாமிநாதன் தன் இனியாளின் முகத்தில் படரும் நாணத்தின் அழகை அநுபவித்தபடி, ''நளினி, மறந்தே போய் விட்டேனே, உன்னிடம் சொல்ல. நாளைக்கு நான் 'லீவு' போட்டிருக்கிறேன். என் சிநேகிதன் மணி நாளைப் பிற்பகல் நம் இருவரையும் புதிதாகக் கட்டும் அணைக்கு அழைத்துப் போகப் போகிறான். இங்கிருந்து பத்து மைல் தூரம் ஆற்றிலே ஒரு பெரிய அணை உருவாகி வருகிறதே, தெரியுமா? சரியாக இரண்டரை மணிக்கெல்லாம் நாம் தயாராகிவிட வேண்டும்.''

''யார் அவர், உங்கள் சிநேகிதர்?''

''நாளைக்கு வருகிறான்; நீயே பாரேன்.''

''அவர் யாரென்று சொன்னால் என்ன முழுகிப் போய்விடும்?''

''நம் பக்கத்து ஆள்தான். போன வாரம் அவனைத் தற்செயலாகச் சந்தித்தேன். இந்த அணைக்கட்டிட வேலையை நடத்தும் முக்கிய எஞ்ஜினியர்களில் ஒருவன். நான் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்தது அவனுக்குத் தெரியாதாம். அவன் மிகவும் நல்ல மாதிரி. நாளைப் பகல் நல்ல டிபன் ஏதாவது பண்ணு.''

''உங்கள் நண்பர் இந்த ஊரில்தான் இருக்கிறாரா? அவருடைய மனைவியை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். பேசத் துணை அகப்படும்.''

சாமிநாதன் சிரித்து, ''பாவம்! மணி இன்னும் கட்டைப் பிரம்மசாரியாகவே இருக்கிறான். ஒரு நல்ல இடத்தில் பெண் குதிர்ந்தது. ஆனால் எதனாலோ கல்யாணம் ஆகவில்லை. இது மூன்று வருஷத்துக்கு முந்திய கதை. அணை கட்டும் இடத்தில்தான் சாப்பிடுகிறான். வேலையில் சூரப்புலி. நல்ல பெயர். அவன் எல்லாவற்றையும் நமக்குக் காட்டுவான்'' என்றான் சாமிநாதன்.

நளினிக்கு உள்ளுக்குள் ஆவல்தான், அந்த மணியைக் குறித்து மேலும் தெரிந்துகொள்ள. ஆனால் கிளறிக் கேட்க அவள் விரும்பவில்லை: 'நம் பக்கத்து ஆள் என்றாரே! நாளைக்கு வரும்போது தெரிந்து போகிறது யாரென்று' என்ற முடிவுக்கு வந்தாள்.

மறுநாள் சற்றுத் தெம்பாகவே படுக்கையை விட்டு எழுந்தாள் நளினி. புதிய காட்சி ஒன்றைப் பார்க்கப் போகும் குதூகலம், அவளை இவ்வாறு தூண்டியதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் வேறு ஒன்றும் இருந்தது. வரப்போகிற மனுஷ்யனைப்பற்றி என்னவெல்லாமோ கற்பனைகள் எழுந்தன நளினிக்கு. பெண்களே எப்போதும் அலங்காரப் பிரியைகள். 'மகளிரின் அழகு கணவன் கண்டு இன்புறுவதற்கே' என்றதற்காக நளினி அன்று ஒப்பனை செய்துகொண்டு பூந்துகில் புனைந்து அணங்காகக் காட்சி தந்தாளோ என்னவோ? ஆனால் எந்த ஆடவனையும் அயர்வு செய்யக் கூடிய பொலிவு அவளிடம் வெளிப்பட்டது. அவள் வேண்டுமென்று இதனைச் செய்துகொள்ளவில்லை. கணவன் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். சாமிநாதனின் கண்களைச் சிதறச் செய்தது நளினியின் தோற்றம். அவன் அவளையே ஏற இறங்க நோக்கி, ''நான் அன்று அந்தப் பிரிண்டெட் வாயிலைக் கட்டிக்கொள்ளச் சொன்னேன். நீ கட்டிக்கொள்ளவில்லை. இன்றைக்கு அந்த மணி வருகிறானென்று அபூர்வமாக அலங்கரித்துக்கொண்டிருக்கிறாய். தலை கிறுகிறுத்து அவன் எங்கேயாவது விழாமல் இருக்க வேண்டுமே!'' என்று வேடிக்கையாகப் பேசியது அந்த ரோஷக்காரிக்குப் பொத்துக்கொண்டு வந்தது.

''உங்களுக்கு நான் இப்படிச் சிங்காரித்துக் கொள்வது பிடிக்கவில்லை என்ருல் கழற்றித் தொலைக்கிறேன். அடேயப்பா! இந்தப் புருஷர்களுக்கே, சந்தேகம் உடன்பிறந்த ஆஸ்தி போலும்! நான் மனசிலே எந்தக் கல்மஷமும் இன்றி இதை அணிந்தேன். உங்கள் கண்ணை இது உறுத்துகிறது!'' என்றதும் அவள் கண்ணில் நீர் நிறைந்துவிட்டது.

''தமாஷாகச் சொன்னேன் நளினி. உன்பேரில் என்ன சந்தேகம்? இதோ பார்: சிரி'' என்று அவள் அருகில் நகர்ந்தான் சாமிநாதன்.

நளினி ஒதுங்கி, ''அழமூட்டத்தான் தெரியும் உங்களுக்கு'' என்று கண்ணில் தீற்றியுள்ள மை அழியாதவாறு கைக் குட்டையினல் கண்ணீரை ஒத்தினுள்.

''நிஜமாக உனக்குக் கோபமா என் மேல் நளினி? உன் பாதத் தளிரை என் தலைமேல் வைத்து எனது தாபத்தைத் தீர்ப்பாய்'' என்ற ஜயதேவரின் சொற்களை உபயோகித்து அவளைத் தேற்றினுன்.

காலடியில் விழுகிறேன் என்ற வார்த்தையே போதுமே, செயலில் காட்ட வேண்டியதில்லை; பேதையரின் நெஞ்சம் இளகிவிடும். கணவனின் கன்னத்தை நிமிண்டி, ''இப்படியெல்லாம் உளறக்கூடாது'' என்ருள் நளினி.

இவர்களிடையே மூண்ட புலவி முறிவதற்கும், வாசலில் ஒரு ஜீப்காரின் குழல் ஒலி கேட்பதற்கும் சரியாக இருந்தது. நளினி சரசரவென்று சோபாவை விட்டு எழுந்தாள்.

''நளினி, எங்கே எழுந்து போகிருய்? இங்கேயே இரு. அவனை நாம் வரவேற்க வேண்டாமா, நமக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு வந்திருக்கும்போது?''

''நான் அவர் எதிரே வந்து நிற்க வேண்டுமா என்ன? நான் உள்பக்கமாகவே இருக்கிறேன்'' என்று பிடிவாதம் பிடித்தாள் நளினி.

''என்ன வெட்கமோ? உம்!'' என்றதும் சாமிநாதன் வராந்தாவுக்கு வந்து, ''மணி, வாயேன் உள்ளே'' என்று அழைத்தான்.

''உன் மிஸஸ் ரெடிதானே சாமி?'' என்ருன் மணி.

''என்னப்பா, உனக்காக இரண்டு தினுசு 'ஸ்வீட்ஸ்' பண்ணியிருக்கிருள். வந்து ருசி பார்த்துவிட்டுப் போ'' என்ருன் சாமிநாதன்.

''எதற்குச் சாமி? நேரமாயிற்று. திரும்பி வரும்போது சாப்பிட்டால் போகிறது'' என்ருன் மணி.

இவர்கள் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கையில் டெலிபோன் மணி 'க்ரிங், க்ரிங்' என்று இரண்டு தடவை அடித்துவிட்டது. நளினி 'ரிஸீவரை' எடுத்து, ''ஹெல்லோ! யார் பேசுவது?......இருக்கிருர்...... கூப்பிடுகிறேன்'' என்று பேசிவிட்டுக் கணவனை விளித்து, ''உங்கள் ஆபீசிலிருந்து யாரோ பேசுகிருர்கள்'' என்ருள்.

சாமிநாதன் வேகமாக வந்து, ''என்ன கர்மம்?'' என்று முணுமுணுத்துக்கொண்டே ரிஸீவரைக் காதில் வைத்து, ''ஹெல்லோ .... நான்தான் சாமிநாதன் பேசுகிறேன் .... சமாசாரம் என்ன? என்ன? ..... யார் வருகிருர்கள்? ..... செகரடரியா? சரியாப் போச்சு! .... இன்றைக்கென்று வந்து தொலைய வேண்டுமா, அந்த மனுஷ்யன்? ஒரு வாரமாக வரப்போவதாகக் காத்தாயிற்று ... ஆம்... எந்த வண்டிக்கு? 3-30க்கா? இன்றைக்கு என் 'ப்ளான்' வாயிலே மண்ணு ..... சரி, சரி; ஆபீஸ் பெரிய 'வான்' தயாராக இருக்கட்டும் ... இதோ பதினைந்து நிமிஷத்தில் வருகிறேன். யாரும் ஆபீசை விட்டுப் போக வேண்டாம். 'பெர்ஸனல் க்ளார்க்' சேதுராமன் இருக்கிருரா? எங்கேயாவது விட்டடித்துவிட்டாரா? இருக்கிருரா?... எல்லாம் தயாராக எடுத்து வைக்கச் சொல்லு!'' என்றதும் ரிஸீவரை வைத்துவிட்டான் சாமிநாதன்.

''என்ன இந்த 'டாம்' பார்க்கும் படலத்தை நிறுத்தவேண்டியதுதானு?'' என்ருள் நளினி.

''என்ன, பண்ணுவது நளினி? அந்தப் பாவி இன்றைக்கென்று வருவானென்று யாருக்குத் தெரியும்? லீவு போட்டும் பிரயோசனம் இல்லை. செகரட்டரியாச்சே! அவனுக்குக் 'குலாம்' போட்டால்தானே? இல்லாதுபோனுல் என் 'பிரமோஷ'னுக்கு முட்டுக்கட்டை போடுவானே! சாமி வரம் கொடுத்தும் பூசாரி வரம் கொடுக்கவில்லையே! அதனுல் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. நான் வரவில்லை. நீ போ. மணி உனக்கு எல்லாவற்றையும் நின்று நிதானமாகக் காண்பிப்பான். அவனுக்கும் இன்றைக்குத்தான் ஒழிவு இருக்கிறது. இவ்வளவு தூரம் நமக்காக வந்துவிட்டான். திருப்பி அனுப்புவது அழகல்ல. குஷியாகப் போ'' என்ருன் சாமிநாதன்.

''எனக்கு யாரென்றுகூடத் தெரியாது. நான் எப்படிப் போவேன் ஒன்றியாக? எனக்குக் கூச்சமாக இருக்கிறது. ஊஹூம்! நான் போகமாட்டேன்!'' என்ருள் நளினி.

''நீ போய்ப் பார்த்துவிட்டு வா. எதற்கு இப்படிக் கூச்சம்? அவன் என்னுடைய சிநேகிதன். தங்கமான சுபாவம். கலகலப்பாகவே பேசலாம். விகல்பமான மனுஷ்யனுக இருந்தால் நானே உன்னை அனுப்புவேனு எங்கேயாவது? உம், கிளம்பு!'' என்ருர் சாமிநாதன்.

கணவன் முன்செல்ல, அவன்பின் மறைந்தவாறு கொடி படர்வதுபோல் நளினி ஜீப்பை அணுகினுள். மணி 'ஸ்டியரிங்' முன்னர் அமர்ந்திருந்தான். அவன் நளினியைத் திரும்பிப் பார்க்கவில்லை. நளினியும் அவன் எங்கே தன்னைப் பார்த்துவிடப் போகிருனே என்ற கூச்சத்தினுல் ஜீப்பில் பின்புறமாக ஏறிக்கொண்டாள். நளினி தலையில் சூட்டியிருந்த மகிழம்பூவின் இன்மணம் மெல்ல வரவே, மணி தெரிந்துகொண்டான், தன் நண்பனின் மனைவி அமர்ந்துவிட்டாள் என்று.

''மணி, ஸாரி, நான் 'டாம்' பார்க்க வரவில்லை. ஆபீஸிலிருந்து அவசரமாகப் போன் வந்தது. செகரடரி வரப் போகிருராம். அவரை நான் ஸ்டேஷனில் வரவேற்க வேண்டும். 3-30க்கு நீ நளினியை அழைத்துப் போய் எல்லாவற்றையும் காட்டு, என்னை என் ஆபீஸில் விட்டுவிட்டு. நீ ஒன்றும் யோசிக்காதே. இன்னொரு தரம் நான் வந்து பார்க்கிறேன்'' என்றதும் நளினியை நோக்கி, ''மணி நம் பக்கத்து ஆள்தானே? தாராளமாக அவனுடன் பேசு. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வா. அப்புறம் சந்திப்போம்'' என்ருன் சாமிநாதன்.

ஆபீசர்களின் விடுதியிலிருந்து ஜீப் கிளம்பிற்று. வழியில் சாமிநாதன் இறங்கிவிட்டான். மீண்டும் ஒரு முறை மனைவியை நோக்கி, ''நளினி, சந்தோஷமாகப் போய் வா'' என்ருன் சாமிநாதன்.

ஜீப், அணை வேலை நடக்கும் இடத்தை நோக்கி நெடுஞ்சாலையில் நிமிஷத்துக்கு நிமிஷம் விசை ஏறப் பறந்து சென்றது. இருண்ட மர வரிசைகளூடேயும், பச்சை நிற வயல்களிடையேயும் சிட்டுக் குருவியென அது விரைந்தது. புதிய மனிதன் ஒருவனுடன் போகிருமே என்ற அச்சம், இதுவரையில் காணுத காட்சி ஒன்றைப் பார்க்கப் போகும் ஆவல், கணவனுடன் சேர்ந்து அதனை அநுபவிக்க முடியாமற் போயிற்றே என்ற வேதனை - இந்த மூன்று கிளர்ச்சிகளும் அவள் இருதயத்தில் குளிரைப் பாய்ச்சின. ஸ்டீயரிங்கில் கைகள் அடிக்கடி வேலை செய்ய மணி, முன்னுல் பதிந்த கண்களை வாங்கவில்லை. தனக்குப் பின்புறமாக இருந்த அபூர்வ அழகியை ஜாடையாகக் கூடக் கவனிக்கவில்லை. சாலை வரவர மேடாகியது. கல்லும் கரடுமாக இருந்தது இருபுறமும். கடுவிசையாக ஜீப் செல்கையில் அதன் முகப்புக் கண்ணுடியின் மூலம் பார்க்கும்போது எதிரேயுள்ள காட்சிகள் உருத் தடுமாறிப் பெருகி வருவன போலவே தோற்றின, நளினிக்கு. அவளுக்கு மயிர்க்கூச்செடுத்தது. 'ஏனே இந்த மனுஷன் இப்படி ஜீப்பைத் தலைதெறிக்கும்படி ஓட்டுகிருர்? எங்கேயாவது மேட்டுத் திருப்பத்தில் கவிழ்த்துவிடுவாரோ?' என்ற அச்சம் பிறந்தது. வாயிலே பல்லிலே ஈரம் இல்லை அவளுக்கு. 'ஏன் இப்படி வேகமாகச் செலுத்துகிறீர்கள்?' என்று மணியைக் கேட்க அவள் உதடு துடித்தது.

மறு நிமிஷமே அவளுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது: 'கணவன் இல்லையே, இவளை என்ன வேண்டுமானுலும் செய்யலாம் என்று ஏதாவது சதி செய்கிருனே? இந்தக் காலத்தில் நெருங்கி உறவாடும் நண்பர்களைக்கூட நம்ப முடியாது.

என்னை ஏன் அவர் இவரோடு தனியாகப் போகச் சொன்னார்? அவரும் உடந்தையோ? எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது.' அப்போது அவள் உடலெங்கும் வேர்த்தது. அவள் கண்களை இறுக மூடிக்கொண்டாள். இன்னும் சற்று நேரம் சென்றிருந்தால் அவள் ஓவென அழுதே இருப்பாள். அவளுடைய சிந்தனையோட்டம் சட்டென நின்றது. 'சர்' என மணலில் செல்லுவதுபோல் ஓசை கேட்டது. ஜீப் நின்றது. நளினிக்குக் கண்ணைத் திறக்கவே பயமாக இருந்தது.

மணியின் குரல் கேட்டது: ''இங்கேதான் நாம் இறங்க வேண்டும். கொஞ்ச தூரம் நடக்க வேண்டும். அப்புறம் அணை இருக்கிறது.''

எஞ்ஜினியர் மணி கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். நளினி ஜீப்பிலிருந்து இறங்கினாள். அந்தப் புதிய மனுஷ்யனை நேராகப் பார்க்காமற் போனால் வேறு வழி? அவளுடைய இருதயம் திடுமென நின்றுவிடும் போலிருந்தது. ''என்ன, நீங்களா!'' என்றதும் அவளுக்கு மூண்ட வியப்புக்கு ஓர் அளவே இல்லை. ஒரு சமயம் இந்த நளினியைத் தன் கண்ணினுள் பாவையாகப் பாவித்த மணியின் நோக்குச் சற்றுத் தொலைவில் உள்ள அணைமீது சென்றது. ''அப்பொழுதே தெரிந்திருந்தால்....நான்.... '' என்று அவள் தயங்கிக் கூறியபோது அவனையே ஏற இறங்கப் பார்த்தாள். யாரைக் குறித்து அவள் இத்தனை நேரம் என்னவெல்லாமோ எண்ணி நடுக்கம் கொண்டாளோ அவன், அவள் கன்னி உள்ளத்தைக் கவர்ந்த கள்வனே. ஆனால் இதுபோன்ற சூழ்நிலையில் அவனைக் காண நேரிடுமென்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. அவளுக்கு விரசமாகவே இருந்தது. ஆனாலும் தயக்கத்தை உதறிவிட்டு, ''வாருங்கள் மணி'' என்று புன்னகையுடன் சொன்னாள். ஆனால் அந்தப் புன்னகையின் மறைவில் புண்பட்ட உள்ளம் துடித்துக்கொண் டிருந்தது.

மணி நளினியின் பக்கத்திலேயே சென்று, ''இந்த ஆறு காட்டாறு. இதன் நீரோட்டத்தை அடக்கிப் பிடிப்பது மிகவும் சிரமமான காரியம். இதன் நீரைப் பயன்படுத்தினால் இருபதினாயிரம் ஏகர் விஸ்தீர்ணமுள்ள பொட்டல்காடு பயிர்நிலமாக மாறும். இதற்கு ஓர் அணை கோலி, நீர்த்தேக்கத்தை உருவாக்க முடியுமென்று நான் என்னுடைய சொந்தத் திட்டத்தை அனுப்பினேன். சர்க்கார் அதை அங்கீகரித்து என்னை இந்தச் சாதனையைப் புரிய எஞ்ஜினியராக அனுப்பினர். இரண்டு வருஷமாக இந்த வேலை நடக்கிறது. ஆவணி, புரட்டாசி மாதங்களில்தான் இங்கே பருவ மழையினால் பெருக்கெடுத்து ஓடும். அப்போது இந்த இயற்கைக் காட்சியைக் காணப் பத்தாயிரம் கண் வேண்டும். அதோ பார், (திருத்திக்கொண்டு) பாருங்கள். இந்தக் குன்றையும் அந்தக் குன்றையும் இணைக்கிறது இந்த அணைச் சுவர். காட்டாற்றை வேறு பக்கமாகத் திருப்பிப் படுகையில் அணையைத் துரிதமாகக் கட்டிவிட்டோம், போன மார்ச்சு ஏப்ரலில் மின்சார உற்பத்திக்கான டர்பைன்கள் அமைக்கும் வேலைதான் பாக்கி. அதை வேறு இலாகா செய்கிறது. இதற்குச் செலவு ஆறு கோடி ரூபாயாகும். இன்னும் நாலைந்து மாதங்களில் இந்த வேலை முடிந்துவிடும். மழைக்காலமும் வந்துவிடும். சமுத்திரம்போல் இந்த நீர்த்தேக்கம் துளும்பிக்கொண் டிருக்கும்'' என்று அணையின் கதையைச் சொன்னான்.

இந்த விளக்கங்களில் பெரும்பகுதி நளினியின் செவியில் ஏறவே இல்லை. விதி தன்னை எப்படி இவனுடன் பிணைத்து விட்டது என்ற வியப்பிலும் வேதனையிலும் அவள் தன்னையே மறந்திருந்தாள். கன்னிப் பருவத்து மனோ

பாவனைகள் அவளுக்கு எங்கிருந்தோ மீண்டும் திரும்பி அவளை ஆகுலத்தில் அழுத்தின. இந்த அணையின் மகத்தான சாதனையெல்லாம் அவளுக்குத் துச்சமாகவே தோன்றியது. மணியின் உருவத்தையும் அங்க அசைவுகளையும் நோக்கியே அவளது விழிவண்டுகள் தாவின. சற்று முன் இருந்த அச்சமெல்லாம் இப்போது எங்கேயோ? ஒவ்வொரு சமயம் மணியின் தோளுடன் அவள் தோளும் மெல்லத் தீண்டும் அளவுக்குப் போகும். என்னவோ ஓர் ஈர்ப்பினால், இல்லை, விதிர்ப்பினால் மணி சற்று ஒதுங்கிவிடுவான். கைகளை ஆட்டிப் பேசும்போது மணி மறதியாக நளினியைத் தொட்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் அவளும் அதற்காகச் சிலிர்த்துக்கொண் டிருக்க மாட்டாள். சிற்சில சமயம், காற்றிலே ஊதிப்



புடைக்கும் அவளுடைய வாயல்புடைவையின் தலைப்பு மணியின் முகத்தில் கூடப் படியும். அவள் சட்டென்று இழுத்துக் கொள்வாள். மணியின் கிராப்பிலிருந்து வீசும் அந்த 'லாவெண்டரின்' இன்மணம் அவளுக்குப் புதிதன்று. அவளுக்குப் பிடித்த வாசனை அல்லவா? 'அந்தப் பழைய வாசனையை இவன் இன்னும் மறக்கவில்லை' என்று நினைத்துக்கொண்டபோது நளினியின் இருதயத்தை என்னவோ ஒன்று அழுத்தியது. 'அவன் முன்பு பேசியது போல் நம்மை நளின் என்று ஆந்தரிகமாக அழைத்துப் பேசினால் என்ன அசுத்தமாகிவிடும்?' என்று நினைத்தாள்.

அணைச்சுவரை நண்ணினர் இருவரும். மணி எந்தச் சலனமுமின்றி, ''நீங்கள் இனிமேல் சற்றுப் பார்த்துக் கால் வைக்க வேண்டும். நாம் இந்தப் படிகளின் வழியாக மேலே ஏறிக் காலெரிகளைப் போய்ப் பார்ப்போம். உங்களுக்குப் பயமாக இருந்தால் சொல்லுங்கள். என் பின்னாலேயே கீழே நோக்காமல் என் கழுத்துப் பக்கமாகக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு ஏறலாம். முப்பது படிகளே இருக்கின்றன. நடுங்கிவிட மாட்டீர்களே?'' என்றான்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை'' என்று கூறி, நளினி மணி முன்செல்லப் படிகளில் ஏறினாள். அவளுடைய ஒரு கை அவன் தோளைப் பற்றியிருந்தது. உண்மையில் இருவரும் சேர்ந்து வாழ்க்கைப் படிகளில் ஒருவருக்கொருவர் துணையாக நடக்க வேண்டியவர்கள். ஆனால் இன்றோ, அணையின் படிகளில் செல்கின்றனர். மணியின் முதுகை விட்டு நளினி கண்ணை வேறு பக்கம் திருப்பவே இல்லை. அவளுடைய மெல்லிய விரற்கொத்துத் தோளில் ஊன்றியபோது மணிக்கு எந்த விதமான சஞ்சலமும் ஏற்படவில்லை. ''மெல்ல ஏறுங்கள். என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்'' என்றான். தலை கிறுகிறுத்தது நளினிக்கு. ''இன்னும் மூன்றே படிகள்'' என்றான் அவன்.

மேலே செல்லச் செல்லக் காற்றின் விசையில், நளினியின் கூந்தலின் முற்பகுதி பறக்கத் தலைப்பட்டது. அடிக்கடி அவளுடைய தோளிலிருந்து நழுவி நழுவி விழுந்தது அந்த வழுவழுப்பான வாயல். மணி திரும்பாமலே ஏறினான். ''வந்துவிட்டோம். இங்கிருந்து பாருங்கள், ஆற்றின் அகலமான படுகையை. இந்த அணைக்கு நான்கு கண்கள். இவற்றின் வழியாகத்தான் நீர்ப் பெருக்குக் கீழே இறங்கும்'' என்று அவன் சொன்னபோது இருவருடைய கண்ணிணைகளும் இழைந்தாலும், அதில் அந்தப் பழைய நசையின் தீவிரம் தென்படவில்லை.

நளினிக்குச் சற்று மூச்சு வாங்கியது. முன்பக்கம் காற்றில் அலைபட்ட மயிர்ச்சுருளை ஒழுங்காக்கிக் கொண்டாள். ஏறி வந்த அலுப்பினாலோ என்னவோ, அவளுடைய காது கன்னமெல்லாம் சற்றுச் சிவப்பேறியிருந்தன.

''உங்களுக்கு ஆயாசமாக இருக்கிறதா?'' என்று கேட்டான் மணி.

''அதெல்லாம் ஒன்றும் இல்லை'' என்று சிறு முறுவல்காட்டினாள் நளினி.

உயரமான இடத்தில் இருவரும் நின்றனர். எவருமே இல்லை அங்கு. கீழே நோக்கினால் ஆற்றுப் படுகையில் மனிதர்கள் வேலைசெய்வதும், லாரிகள் வருவதும் போவதும் ஏதோ குட்டிப் பொம்மைகள் நகர்வது போலவே இருந்தன. வெளியில் சற்றுச் சுள்ளென உறைக்கவே மணி, ''வெயிலில் நிற்பானேன் நாம்? வாருங்கள். அந்தக் கண்ணறைக்குள் போய்ச் சற்று இளைப்பாறுவோம்'' என்று அழைத்தான்.

நளினியைத் திடுமென ஒரு கிலி பிடித்துக் கொண்டது. மணி யார் என்பது தெரிந்த பின்பும், அவளுக்கு எதனாலோ ஒரு பயம், அவநம்பிக்கை தலைகாட்டியது. இந்த நிச்சப்தமான இடத்தில் எது நடந்தாலும் யாருக்குமே தெரியாது.

அந்தக் கண்ணறைக்குள் குபுகுபுவென்று குளிர்ந்த காற்றுப் புகுந்து சென்றது. திணறவும் செய்தது நளினிக்கு. மணி நளினியை நோக்கினான். அந்தப் பார்வையில் நரியின் தந்திரமோ புலியின் கொடுமையோ எந்தக் கள்ளத்தனமோ கல்மஷமோ தென்படவில்லை.

''அதிக அலுப்பாக இருந்தால் சற்றுச் சாய்ந்து கொள்ளுங்கள். இதோ இதைச் சுவையுங்கள்'' என்றதும் ஒரு டாஃபி பொட்டலத்தை நளினியிடம் நீட்டினான் மணி.

உண்மையில் நளினிக்குத்தொண்டை வறண்டே விட்டது; நடந்து வந்த அலுப்பினால் மட்டுமன்று, ஓர் உணர்ச்சி வேகத்தினாலுங்கூட. மணி இப்படியெல்லாம் உபசரணை செய்வது மீண்டும் சற்று அச்சத்தை எழுப்பியது அவளுக்கு. 'வேறு ஏதாவது எண்ணம் அவருக்கு இருக்குமோ?' என்று நினைத்தபோது, தனக்குள்ளேயே அவள், 'என்ன அல்பபுத்தி எனக்கு?' என்று கடிந்து கொண்டாள். சுவர் ஓரமாகச் சாய்ந்து, மணி தந்த டாஃபியைச் சுவைத்தாள். எதிரே இயற்கையின் எழில்மிகு காட்சி விரிந்தது. குன்றின் மீது தாழும் பொன்வெயில் படிந்து பல நிறங்களைத் தோற்றுவித்தது. தொலைவில் அரவு நெளிவது போல் ஆற்றின் மெல்லிய வளைக்கீற்றுப் பளபளத்தது. 'இந்த மணி எப்படித்தான் என் எதிரிலேயே இருந்து தன் மனத்தில் எந்த நிழலும் படியாதது போல் நிச்சயமாக இருக்கிறானே? என்னால் மறக்க முடியவில்லை அந்தப் பழைய தொடர்பை' என்று நினைத்தாள். நெடுநேரம் இவ்வாறு நகர்ந்தது.

மணி தன் கைக்கடிகாரத்தை நோக்கினான். ''மணி 5-20. நாம் இறங்கிப் போகலாமா? பொழுது போனால் படிகளில் இறங்குவது சிரமம். அக்கம் பக்கம் நோக்காமல் இறங்குங்கள். பயம் இல்லை'' என்றான். அவன் நளினிக்கு முன்னால் நாலைந்து படிகள் இறங்கித் தரையில் கால் வைத்துவிட்டான். இன்னும் ஏழு படிகள் இருந்தன நளினி கடப்பதற்கு. அவளுக்குக் களைப்பு மூண்டது. மருண்டு நின்றாள். அதைக் கவனித்த மணி, ''அப்படியே இருங்கள். நான் வருகிறேன்'' என்றதும் அந்த ஏழு படிகளை ஏறி அவன் மெல்லப் பிடித்துக்கொண்டே பத்திரமாகக் கொண்டு சேர்த்தான்.

ஜீப் விட்ட இடத்திலேயே இருந்தது. ''ஏறிக்கொள்ளுங்கள்'' என்றதும் மணி ஸ்டியரிங்கில் அமர்ந்து ஸ்டார்ட்டரில் சாவியைத் திருகியதும் புர்....ர்....ர் என்று ஜீப் கிளம்பியது. ''என்னவோ காட்டினேன். எனக்குத் திருப்தியே இல்லை. இன்னொரு தடவை சாமிநாதனுடன் வரும்போது எல்லாவற்றையும் காட்டுகிறேன். அதற்குள் மழையும் பெய்துவிடும். நீர்த் தேக்கத்தையும் பார்க்கலாம். அந்தப் படிகளில் உங்களை ஏற்றி மிகவும் கஷ்டம் கொடுத்துவிட்டேன். பின்னால் உட்கார்ந்தால் கொஞ்சம் தூக்கிப் போடும். என் பக்கத்தில் வேணுமானால் வந்து உட்காரலாம்'' என்றான் மணி.

நளினிக்கும் மணி இப்படி யாரோ போல் தன்னுடன் நடந்துகொள்வது பிடிக்கவில்லை. உள்ளம் திறந்து இரண்டு வார்த்தைகள் அவனுடன் பேசி, இருவரிடையும் தோன்றியுள்ள இறுக்கத்தை அகற்ற அவள் துடிதுடித்தாள். தக்க வாய்ப்புக் கிடைத்தது. ஜீப்பில் அவன் பக்கத்தில் வந்து இடம் கொண்டாள் நளினி.

ஜீப் மனோவேகம் போல் சென்றது. மணியின் ஒரே லட்சியம் நளினியை ஆறு மணிக்கெல்லாம் வீட்டில்சேர்த்துவிடவேண்டும்என்பது. மேட்டிலிருந்து பள்ளத்தில் இறங்கியது ஜீப். மாலை மங்கலாகிவிடவே சாலை மரங்களின் அடர்ந்த கிளையின் வளைவின் கீழ்ச் செல்வது எங்கோ ஒரு கனவுக் கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்துக்குள் ஊர்வது போன்ற மருளை எழுப்பியது.

''மணி, என்னை யாரோ போல எண்ணி இப்படியெல்லாம் நடத்துகிறாய். நான் என்ன தவறுசெய்தேன்?'' என்று பேச்சை எடுத்தாள் நளினி.

''நான் உன்னை நடத்திய விதத்தில் தவறு ஒன்றும் இல்லையே! நீ இன்னொருத்தனுக்கு மாலையிட்ட பிறகு, அந்தப் பழைய உறவை வைத்துப் பேச எப்படி முடியும்?'' என்றான், எதிரே சாலையில் ஒரு கண்ணை வைத்தபடி. நளினிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. சற்றுப் பொறுத்து மணி, ''அந்த வேதனையைக் கிளப்பாதே நளினி. பெண்களின் மனமே புரியாததோர் புதிர்'' என்று கூறியபோது அவனுடைய உதடுகளில் துயரின் மடிப்புத் தென்பட்டது.

''அப்படிச் சொல்லாதே மணி. நான் அப்படி ஒன்றும் உன்னை ஏமாற்றப் பார்க்கவில்லை. (கண்களில் நீர் துளும்ப) உனக்காக என் உள்ளம் படும் பாடு அந்தப் பகவானுக்கே தெரியும். உனக்காக ஐந்து வருஷங்கள் வரையில் அப்பா காத்திருந்தார். நீ தான் சொன்ன கெடுவுக்குள் திரும்பவில்லை. 'வெளி நாட்டுக்குப் படிக்கப் போனானே; ஒருவேளை எண்ணம் மாறிவிட்டதோ?' என்று அப்பா நினைத்ததிலும் தவறில்லை. என்னை ஒருவன் கையில் ஒப்படைக்க வேண்டாமா? ஆனால், ஆனால்..'' அவளுடைய குரல் தழுதழுத்தது; ''அந்தப் பழைய நினைவுகள் என்னைச் சுட்டெரிக்கின்றன. ஆழப் பதிந்தது எங்கேயாவது அழிந்து போகுமா? விதி என்மீது இரக்கம் கொண்டு இன்று என்னை உன்னுடன் விசித்திரமாக இணைத்தது. இது ஒன்றே நான் அடையும் ஆறுதல்'' என்றாள். ஜீப் இதற்குள் ஊர்ப் புறத்தை நெருங்கியது. அதன் வேகம் மட்டுப்பட்டது.

''இன்னொன்று நளினி. நீ இந்த ஊரில் இருப்பது எனக்குத் தெரியும்'' என்றான் மணி.

சட்டென்று நளினியின் முகம் வெளுத்து விகாரமாகியது. 'ஐயோ! என் கணவருக்கு என்னுடைய பழைய கதையெல்லாம் தெரிந்துவிட்டிருக்குமோ?' என்ற சங்கை மூண்டது.

''அவரிடம் நீ என்னைப்பற்றி ஏதாவது சொல்லிவிட்டாயா?'' என்று விதிர்த்துக் கேட்டாள் நளினி.

''அவ்வளவு மடையன் அல்ல நான். உன் வாழ்வுக்கு இடையூறானது எதையும் நான் செய்யமாட்டேன். உனக்கு என் இருதய பீடத்தில் இடம் தந்த பிறகு, வேறு எவளுக்குமே அங்கே உரிமை இல்லை. நளினி, நான் இப்படியே என் வாழ்நாளைக் கழிப்பேன். இன்று உன்னுடன் தனியாகச் சில மணி நேரம் கழித்ததனால், புதிய தெம்பு ஏற்பட்டுள்ளது. அணையின் வேலை முடிந்ததும்; அதன் உயர்ந்த நிலையிலிருந்து நீருள் ஆழ்ந்துவிட நினைத்திருந்தேன். தற்செயலாக இங்கே உன்னைக் கண்டதனால் அந்தப் பயங்கர முடிவுக்கு ஒரு முடிவு கட்டிவிட்டேன். நான் சாகமாட்டேன். பயப்படாதே! ஏன் உன் உடல் நடுங்குகிறது?'' என்றதும் நளினியை நோக்கி, ''நீ வேறொருவனின் மனைவியாகிவிட்டாய். நான் உன்னைத் தொடுவதுகூடப் பாவம். சாமிக்கு இதெல்லாம் தெரியாது. இந்தா, உன்னுடைய டயரி'' என்று சொல்லித் தன் ஜேபியிலிருந்து ஒரு சிறு டயரியை எடுத்து நளினியிடம் தந்தான்.

''இது உங்களுக்கு எப்படிக் கிடைத்தது? நான் எங்கேயோ தொலைத்துவிட்டேனென்றுதான் நினைத்தேன்'' என்று ஆவலுடன் அதன் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தாள். அதில் அவளுடைய காதல் கிறுக்கல்கள், அவள் கவிதைகள் இருந்தன. எல்லாம் தன் ஆருயிர்க் காதலன் மணிக்குச் சமர்ப்பித்தவை.

''நீ என்னை மறந்து போய்விட்டாலும் நான் உன்னை மறக்கவில்லை'' என்று மணி கூறியபோது, ''நானா உன்னை மறந்தேன்? என்னைப் பார்த்துச் சொல்லு!'' என்று நளினி அவனையே ஊடுருவ நோக்கினாள்.

''இல்லை, கடவுள்தான் என்னை மறந்தான், உன்னை என்னுடன் இணைக்காமல். இந்த டயரிதான் என் வாழ்க்கையில் கொஞ்ச நஞ்சம் இருந்த உற்சாகத்தைத் தந்தது. ஆனால் இதில் காணும் நளினி அல்ல நீ. உன் நினைவாகவே இதை இதுவரையில் பாதுகாத்து வந்தேன். இதை இன்று இதன் சொந்தக்காரியிடமே சேர்ப்பித்துவிட வேண்டாமா? அந்த நளினி என் மனத்துள் நிரம்பி இருக்கும்போது, இந்த அடையாளந்தான் எதற்கு? நான் இதை எங்கேயாவது போக்கிவிட்டேனானால் அது யார் கையிலாவது சிக்கி உன்மீது மாசு சுமத்துவதற்கு ஏதுவாக இருக்கலாம். அதனாலேயே உன்னிடம் ஒப்படைக்கிறேன். இதை நீ சுட்டெரித்துவிடு'' என்று கூறியபோது மணியின் குரலில் ஓர் இளக்கம் தொனித்தது. அந்தச் சிறு டயரியைத் தன் டம்பப் பைக்குள் பத்திரமாக வைத்துக் கொண்டாள் நளினி.

ஜீப் நளினி வீட்டுப் போர்ட்டிகோவில் வந்து நின்றது. வேலைக்காரன் நின்றிருந்தான். ''ஐயா வந்துவிட்டாரா?'' என்று கேட்டாள் நளினி.

''இல்லையம்மா'' என்றான் அவன்.

''மணி, வாயேன் உள்ளே. உனக்காகப் பட்சணமெல்லாம் பண்ணியிருக்கிறேன்'' என்று அவனைப் பார்த்துக் கூறியதும் உள்ளே சென்றாள் நளினி.

அவள் உட்புறம் நுழைந்ததுமே, மணி ஜீப்பைக் கிளப்பிக்கொண்டு வாசல் கேட்டைத் தாண்டிக்கொண்டிருந்தான். கார் நகரும் ஒலியைக் கேட்டு நளினி ஓடிவந்து, ''மணி! மணி!'' என்று கூப்பிட்டாள். பதில் வரவில்லை. ஜீப்பிலிருந்து மணியின்கை மட்டும் ஏதோ சமிக்ஞை செய்தது.

நளினிக்கு அழுகை வெடித்து வந்தது. அலங்காரத்தைக்கூடக் கலைக்காமல், படுக்கையில் விழுந்து தேம்பித் தேம்பி அழுதாள். ஆனால் அவன் தந்த டயரியை அவள் அழலுக்கு இரையாக்கவில்லை. அதைத் தன் அந்தரங்கம்போல் எவர் கண்ணுக்கும் படாமல் காத்து வரத் துணிந்தாள்.

காலரவம் கேட்டது. நளினி தன் சோகப் பாயலிலிருந்து எழுந்திருக்கவில்லை. சுமார் இரவு எட்டு மணிக்குத் திரும்பிய சாமிநாதன் அவள் படுத்திருந்ததைக் கண்டு பயந்தவனாய் அவள் நெற்றியில் மெல்லக் கை வைத்து, ''என்ன உடம்பு நளினி?'' என்றான்.

அவள் பதிலே பேசவில்லை.

''மணி எல்லாம் காட்டினானா? மிகவும் அலுப்பினால் படுத்திருக்கிறாயா? ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?'' என்று திகிலுடன் கேட்டான் சாமிநாதன்.

''ஒன்றும் இல்லை எனக்கு. அந்த அணையின்மீது செல்லும் படிக்கட்டுக்களில் ஏறினேனோ இல்லையோ? அந்தக் கிடுகிடு பாதாளத்தை நினைத்துக் கொண்டேன். வேறொன்றும் இல்லை'' என்றதும் சற்று முன் நடந்த நாடகத்துக்குத் திரை போட்டுவிட்டாள்.

மகளிர் மனம் புதிர் நிரம்பியதுதான்; ஆனால் அணையை மீறாமல் அறத்தோடு நிற்கும் பெண்களும் உள்ளனர் இவ்வுலகில். ★

அகத்துறைப்பா

ரா. ஸ்ரீ. தேசிகன்

அகம், புறம் (Subjective, Objective) என்று இலக்கிய உலகத்தை வகுத்துள்ளனர் பண்டைய இலக்கண வல்லுநர். அகம் காதலைத் தான் மிகக் கவின்பெற, உணர்ச்சி ததும்பச் சித்திரிக்கும். போர் முதலிய புறச்செயல்களைப் புறம், செஞ்சொற்களில் சிறை செய்யும். அகத்துறையில் தலைவன் பெயர் சுட்டப்படுமாயின், அந்த அகஉலகம் புறஉலகமாய்க் காட்சி அளித்துவிடும் என்று அவர்கள் இயம்புகின்றனர். ஆனால் அகத்துக்கு ஒரு விரிவான இலக்கணத்தை நாம் நல்கலாம்.

மேலைநாட்டு ஆய்வுப் புலவர் அகத்துறைப் பாவுக்கு (Lyric) இலக்கணம் வகுத்துள்ளனர். அந்தப் பாவினம் ஒரு சுவையைத்தான் அலரச் செய்யும். அது காதலாக இருக்கலாம்; அல்லது மெய்ப்பாட்டு இயலில் கூறியுள்ள நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை - இவற்றில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். கவிஞன் ஒரு சுவையைத்தான் சித்திரிக்க வேண்டும். ஒரே பாட்டில் ஒரு சுவையைத் தவிர வேறு சுவையின் குரல் எழுமாயின் அந்தப் பாட்டு மாசுறும் என்கின்றனர்.

'லிரிக்' (Lyric) என்னும் சொல் யாழைக் குறிக்கும் சொல்லாகிய 'லயர்' (Lyre) என்பதிலிருந்து பிறந்தது. அகத்துறைப்பாவில் யாழொத்த இன்னிசை முரல வேண்டும். மேலும், கவிஞனின் உள்ளக் கிடக்கையை நன்கு புலப்படுத்துவது தான் அந்தப் பாவின் சிறந்த நோக்கமாகும். ஒரு சுவை திகழக் கூடியதாய், யாழொத்த இன்னிசையை அளிப்பதாய், இசைக்கிற செந்நாப் புலவனின் தனித் தன்மையை, மெய்ம்மை நிலையை, சுவரூபத்தை இலங்குவிப்பதாய் அது மிளிர வேண்டும்.

இந்தக் கோணத்திலிருந்து நம் தமிழ் இலக்கியத்தை நோக்கினால், புறத்திலுள்ள சில பாடல்கள் அகத்துறை உலகத்துள் மிதந்து வந்துவிடும் என்பது திண்ணம்.

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை இத்தகைய நூல்களில் கோயில் கொண்டுள்ள பாடல்கள் கலப்பற்ற அகத்துறைப் பாடல்களாகா. கவிஞன் ஒரு சந்தர்ப்பத்தை எழுப்புகிறான். இந்த நிலை ஒரு நாடக இயலைக் காட்டுகிறது. தலைவன், தலைவி என்னும் முறையில் இந்தக் காதல் நாடகம் நடக்கிறது. அந்தக் காரணம்பற்றியே இத்தகைய பாடல்களில் நாடக அம்சந்தான் மிகுதியாகத் தோன்றுகிறது. தலைவியும் தலைவனும் தம் தம் உணர்ச்சி வெள்ளத்தைக் கொட்டுகின்றனர். அகத்துறைப் பாவின் இயலும் இவற்றில் விளங்குகிறது. நாடக இயலும் அகத்துறைப் பாவின் தன்மையும் கலந்து விரிகின்ற தன்மையால், இவற்றை நாடக அகத்துறைப் பாக்கள் என்று ஐயமறச் சாற்றலாம். நாடக அகத்துறைப் பாக்களுக்கு முதல்முதலில் வழி வகுத்தவர் ஆங்கிலக் கவிஞரான 'ப்ரௌனிங்' (rowning) என்பர். ஆனால் இவருக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாட்டுக் கவிஞர்கள் இந்தத் துறையில் இறங்கி அழியா இலக்கியப் பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய வான்சிறப்பை என்னென்று மொழிவது!

புறநானூற்றில் மலர்ந்திருக்கும் அகத்துறைப் பாக்களின் (Lyrics) வனப்பையும் ஓசை நயத்தையும் உணர்ச்சிப் பெருக்கையும் நாம் சற்று மாந்துவோமாக.

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் மாய்ந்துவிடுகிறான். இதைக் கண்ட குடவாயிற் கீரத்தனார் உளம் நைந்து இசைக்கிறார். இவருடைய சுடு சோகம் ஒரு பாட்டாகச் சுரக்கிறது.

''இளையவர் சூடார். வளைகளைப் பூண்ட இளமங்கையர் பூக்களைக் கொய்யார். யாழை மீட்டும் பாணன் மாலையை அணிந்து கொள்ளான். பாடினியும் அணியமாட்டாள். இந்த நாட்டில் முல்லையும் பூக்கக் கடவையோ?'' என்று கவிஞன் விளிக்கிறான்.

''இளையோர் சூடார்,
வளையோர் கொய்யார்,
நல்லியாழ் மருப்பின்
மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி யணியாள்,
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ
ஒல்லையூர் நாட்டே.''

ஒரு கிழவனின் பண்டைய நினைவு மடை திறக்கிறது. தன் இளம் வயசில், சின்னஞ் சிறு பிராயத்தில், மகளிரோடு கைகோத்துத் திரிந்த நாட்களின் நினைவுகள் வருகின்றன. 'கரையவர் மருளத் திரையகம் பிதிரப் துடுமெனப் பாய்ந்து குளித்து மணற் கொண்ட கல்லா இளமை மீண்டு வருமோ?' என்று கவிஞன் உளம் சாம்புகிறான்.

''இனிநினைந் திரக்க
மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக்
கொய்பூத் தைஇத்
தண்கய மாடு
மகளிரொடு கைபிணைந்து

தழுவுவழித் தழீஇத்
தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத்
துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத்
துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட
கல்லா விளமை
அளிதோ தானே
யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண்
டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.''

பாரி மகளிர் பாடிய பாட்டும் நம் நெஞ்சை உருக்குகிறது. ''அந்தப் பழுத்த நிலவில் இன்பமாய் எந்தையோடு இருந்தோம். இந்த நிலவில் எங்கள் குன்றைப் பிறர் கொள்ள, நாம் அவரை இழந்து இங்குத் திரிகின்றோம்!'' என்று அவர்கள், சோகமுகில் முகத்தில் படர இசைக்கிறார்கள்.

''அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேமெங்
குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யாம்
எந்தையும் இலமே.''

''யாம் எந்தையுமிலமே!'' என்னும் இறுதிப் பகுதியில் துயரின் எல்லையைக் காண்கிறோம்.

புறநானூற்றில் இலங்குகிற இத்தகைய அருமையான பாடல்கள் மேலை நாட்டவர் வகுத்த இலக்கணத்துக்குத் தக்க சான்றுகளாய்த் திகழ்கின்றன.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் சங்க காலத்து அகத்துறைப் பாக்களின் பெருமையை ஓர்ந்தவர்கள் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை. எனினும் தாங்கள் இசைத்த பாடல்களில் தாங்கள் காதலிக்கும் தெய்வத்தின் பெயர்களைக் குறித்திருந்த காரணத்தால், அவற்றைப் புறத்தில் அமைக்கும்படி நேரிடக் கூடும்.

நாடக அகத்துறைப்பாக்கள் பாடுவதில் உலகத்தில் மிகச் சிறந்தோங்கி நிற்கிற குலசேகராழ்வாரின் 'தயரதன் புலம்பல்', 'தேவகி புலம்பல்' என்னும் இரண்டு பாடல்களின் நயங்களை ஆராய்வோம்.

இந்த ஆழ்வாரிடம் தெய்வக் கவிதைக் குரல் யாழ்போல் ஒலிக்கிறது. சொல்லோவியங்களுக்கோ குறைவில்லை. தம்மை மறந்து, தாம் அமைக்கிற படைப்புக்களுடன் ஒன்றாய்க் கரைந்து போகும் இயல்புள்ளவர் இவர். இப்படித் தம்மை மறந்து போகும் பண்பாட்டை, 'Negative Capability' என்று மிக உயர்ந்த ஆங்கிலக் கவிஞரான கீட்ஸ் (Keats) சித்திரிக்கிறார்.

ஒரு நாள் இராமாயணச் சொற்பொழிவு நடந்துகொண்டு வருகிறது. இராகவனுக்குத் தோல்வி வரப்போகிறது என்று இராமாயணம் படிக்கும் பாகவதர் கூறியபொழுதே, ''நம் சேனையைத் திரட்டி எம்பிரானுக்கு அனுப்புவீராக'' என்று குலசேகராழ்வார் கூறினாராம். இந்த நிலையைக் கண்ட பாகவதர், ''வெற்றி ஏற்பட்டு விட்டது'' என்று இயம்பியபொழுது தான்,குலசேகராழ்வாரின் துயர் அடங்கிக் கவலை நீங்கி வாளா இருந்தார் என்று இந்த ஆழ்வாரின் வரலாற்று நிகழ்ச்சி குறிக்கிறது. இத்தகைய கற்பனைச் செறிவும், உணர்ச்சி வெள்ளமும் இவரிடத்தில் இலங்குகின்றன என்பதற்கு, இந்த ஒரு சந்தர்ப்பமே தக்க சான்றாகத் திகழும் என்பது உறுதி.

இராகவன் நாடு துறந்து காட்டுக்குச் செல்லுகிறான். புகலரும் ஒரு துயர் தயரதனை வாட்டுகிறது. தயரதனுடைய நிலையில் இருந்து, குலசேகரர் உள்ளத்தை உருக்கும் வண்ணம் இசைக்கிறார்.

''அம்மாவென் றுகந்தழைக்கு
மார்வச்சொல்
கேளாதே அணிசேர் மார்வம்
என்மார்பத் திடையழுந்தத்
தழுவாதே
முழுசாதே மோவா துச்சி
கைம்மாவின் நடையன்ன
மென்னடையும்
கமலம்போல் முகமும் காணாது
எம்மானை என்மகனை யிழந்திட்ட
இழிதகையே னிருக்கின் றேனே''

என்று ஆழ்வார் பாடுகிறார்.

''என்னையும்நீள் வானில் போக்க, என்பெற்றாய்? கைகேசி! இருநிலத்தில் இனிதாக இருக்கின்றாயே!'' என்னும் அடியில் தயரதனின் வெஞ்சீற்றம் வெளியாகிறது.

''மாபோகு நெடுங்கானம்
வல்வினையேன்
மனமுருக்கும் மகனே, இன்று
நீபோக என்னெஞ்ச மிருபிளவாய்ப்
போகாதே நிற்கு மாறே!''

இந்த அடிகளில், துயரின் எல்லையை உணர்கிறோம்.

''மெல்லணைமேல் முன்துயின்றாய்
இன்றினிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக்
கற்றனையோ?
காகுத்தா! கரிய கோவே!''

என்று தயரதன் உள்ளம் சாம்புகிறான்.

இவ்வண்ணம் இந்த ஆழ்வார் பாடுகிற பாடல்களின் ஒவ்வோர் அடியும் சோகமுத்திரை பெற்றுத் திகழ்கிறது.

குழந்தையின் எழிலையும், அதன் மழலை முற்றாத இளஞ் சொல்லையும் சங்க காலத்து நூல்கள் சித்திரிக்கின்றன. ஆனால் அதன் சிறப்புகள் யாவற்றையும் கற்பனைத் தறியில் வைத்துப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தை முதல் முதலில் நெய்து தந்த பேறு பெரியாழ்வாரைச் சார்ந்ததாகும். ஆயினும், கண்ணனுடைய பாலிய லீலைகளை இழந்த தேவகியின் புலம்பலை இவரால் சித்திரித்துப் பார்க்க இயலவில்லை. இந்தப் படைப்பை நமக்குக் குலசேகராழ்வார் தந்துள்ளார்.

குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு, 'உன் தந்தையைக் காட்டுவாயாக' என்று அன்புடை மகளிர் கூறியபொழுது, 'உன் செங்கேழ் விரலாலும் கடைக் கண்ணாலும் காட்டும் பாக்கியத்தை நந்தன் பெற்றனன்; நல்வினையில்லாத வசுதேவன் பெற்றிலன்' என்று தேவகி புலம்புகிறாள்.

''முந்தை நன்முறை யன்புடை
மகளிர்
முறைமு றைதம்தம் குறங்கிடை
யிருத்தி,
'எந்தை யே!என்றன் குலப்பெருஞ்
சுடரே!
எழுமு கில்கணத் தெழில்கவ
ரேறே,
உந்தை யாவன்?'என் றுரைப்பநின்
செங்கேழ்
விரலி னும்கடைக் கண்ணினும்
காட்ட,
நந்தன் பெற்றனன் நல்வினை யில்லா
நங்கள் கோன்வசு தேவன்பெற்
றிலனே!''

குழந்தை முலைப்பால் அருந்தும் நுணுக்கமான ஒரு சொல்லோவியத்தைக் குலசேகராழ்வார் தீட்டுகிறார்:

''குழக னே!என்றன் கோமளப்
பிள்ளாய்!
கோவிந் தாஎன் குடங்கையில்
மன்னி
ஒழுகு பேரெழி லிளஞ்சிறு
தளிர்போல்
ஒருகை யாலொரு முலைமுகம்
நெருடா
மழலை மென்னகை யிடையிடை
யருளா
வாயி லேமுலை யிருக்கஎன்
முகத்தே
எழில்கொள் நின்திருக் கண்ணிணை
நோக்கந்
தன்னை யும்இழந் தேன்இழந்
தேனே!''

சிற்பி தான் எடுத்துக்கொண்ட கல்லில் ஒரு சிற்பத்தைத்தான் எழுப்ப முடியும். ஓவியப் புலவன் தன் கிழியில் ஒரு சித்திரத்தைத்தான் அலரச் செய்ய இயலும். ஒரு கவிஞன் ஒரே பாடலில் பல சித்திரங்களைக் காட்ட முடியும். கவிஞனிடத்தில் சிற்பிக்கு இல்லாத தன்மையும், ஓவியப் புலவனிடத்தில் காணாத இயல்பும் மிளிர்கின்றன. ஓவியச் சிறப்பையும், சிற்பத்தின் வனப்பையும், சங்கீதத்தின் யாழொத்த இன்னிசையையும் கவிஞன் அடைகிறான். கண்ணன் வெண்ணெய் அளைகிறான். இளஞ்சிறு தாமரைக் கையால் அதை உண்ணுகிறான். இதைக் கண்ட யசோதை தாம்பு கொண்டு அடிப்பதற்கு வருகிறாள். அதற்குக் கண்ணன் எள்குகிறான். வெண்தயிர் தோய்ந்த வாயோடு நிற்கிறான், அழுகிறான், அஞ்சி நோக்குகிறான், தன் செஞ்சிறு வாயை நெளிக்கிறான், தொழுகிறான். இத்தனை செயல்களையும் ஒரு கவிஞன் சொற்களின் ஆற்றல் கொண்டு ஒரு பாடலில் சிறை செய்ய முடிகிறது. சொற்களின் ஆற்றலை என்னென்று இயம்புவது!

''முழுதும் வெண்ணெ
யளைந்துதொட் டுண்ணும்
முகிழி ளஞ்சிறுத்
தாமரைக் கையும்

எழில்கொள் தாம்புகொண்
டடிப்பதற் கெள்கும்
நிலையும் வெண்தயிர்
தோய்ந்தசெவ் வாயும்
அழுகை யுமஞ்சி
நோக்குமந் நோக்கும்
அணிகொள் செஞ்சிறு
வாய்நெளிப் பதுவும்,
தொழுகையும் மிவை கண்ட
அசோதை தொல்லை யின்பத்
திருதிகண் டாளே.''

'கோபாலவிம்சதி' என்னும் தம் நூலில் வேதாந்ததேசிகர் இந்தப் பாடலை மொழிபெயர்த்துத் தந்திருக்கிருர். இந்தப் பாட்டு அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது போலும்.

'எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்ருள்' என்று தேவகி கூறும் பொழுது, அவளிடத்தில் யாதோர் அழுக்காறும் இல்லை என்று தோன்றுகிறது. தன் பிள்ளை எங்கு வளர்ந்தால் என்ன என்னும் உயர்ந்த மனப்பண்பைப் பெற்ற நங்கையன்ருே தேவகி?

காலவெள்ளத்தை நீந்தக் கூடிய இந்தச் சொல்லோவியச் சாலைக்கு நம்மை அழைத்து வந்த குலசேகராழ்வாரிடத்தில் நாடக அகத்துறைப் பாவின் ஓர் இமயச் சிகரத்தைக் காண்கிருேம்.

★

தீப்தி

வீட்டில் புழங்கும் பெயர்

தீப்தி என்ற வியாபாரப் பெயர் தரத்தில் சிறந்தது. இந்தியா முழுவதும் வீட்டு உபயோகப் பொருள்களில் தீப்தி லாந்தர்கள் மிகவும் புகழ் வாய்ந்தவை. காஸ் ஜனதா கிரசின் குக்கர்கள் வீடுதோறும் இன்றியமையாமல் பயன் தருபவை என்ற புகழ் பெற்றவை; இயக்குவது சுலபம்; உறுதியான அமைப்பு; சிறப்பாக உழைப்பது. இந்தக் கிரசின் திரி குக்கர்கள் எரிபொருளையும் நேரத்தையும் மிச்சப்படுத்துகின்றன.

தீப்தி எனமல் பாத்திரங்கள் – இப்போதுள்ள தீப்தி பொருள்களுடன் மேலும் பெருமைப்படக் கூடிய மற்றொரு சாதனம்.

தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

67,77, பிபின் பிஹாரி கங்குலி ஸ்டிரீட், கல்கத்தா-12.

தீப்தி லாந்தர்கள்



காஸ் ஜனதா

எனமல் பாத்திரங்கள்

Kalpana-om 27A

ஓவியர்: விஜயஸ்ரீ　　எடுத்த பார்வையும் மிடுக்கு நடையும்　　தீபாவளி மலர், 1966

1 சொல் — 4 ஆண்டு

'எல்லார்வி'

ரெயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அதில் அமர்ந்திருந்த பாலனின் உள்ளம் அதனினும் வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது. மாலைவரையில் கசந்த அந்தப் பயணம் இப்போது ஓரளவு இனித்தது; இனிய நினைவுகளை உண்டு பண்ணியது.

அன்றைத் தபாலில் அவன் மாமாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. பாலனுக்காக அங்கே ஒரு பெண் பார்த்திருப்பதாகவும் ஜாதகங்கள் பொருந்துகின்றன என்றும் உடனே பாலனுடன் வந்து பெண்ணைப் பார்த்துப் பேசி முடித்துவிடலாம் என்றும் அவர் எழுதியிருந்தார். 'இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம்' என்ற பல்லவியை அழுத்தந் திருத்தமாகப் பாடிக்கொண்டிருக்கிற பையனை அதிகம் வற்புறுத்தவோ, அவன் மனநிலை புரியாமல் ரெயில்செலவு செய்து பிரயாண சிரமத்தை மேற்கொள்ளவோ விரும்பாத அவன் பெற்றோர் முதலில் அவனை மட்டும் போய் வருமாறு கூறினர். பாலு அதற்கும் இணங்கவில்லை. பின்பு மாமாவின் கடிதத்தை அசட்டையாகப் படித்தான். 'நல்ல இடம். நன்றாகச் செய்வார்கள். பெண் மிகவும் அழகாக இருப்பாள். சற்றே சாய்வாக நடப்பாள். அந்தச் சாய்கால் அதிருஷ்டமுடையது என்கிறார்கள்.'

இந்த வருணனை அவன் நினைவை எங்கோ இழுத்துச் சென்றது. நாலு ஆண்டுகளாக நினைவிலே வாழ்ந்து வரும் மாதவி இப்போது அவன் மனக்கண்முன் தோன்றினாள். மாயூரம்: எப்போதோ ஒரு முறை அவள் வாய்வழி இந்த ஊரின் பெயரைக் கேட்டதும் நினைவுக்கு வந்தது. 'பெண் அழகி; சாய்வாக நடப்பாள்; மாயூரம்.' மாதவியேதானோ? இந்த் மாமா இவ்வளவெல்லாம் எழுதியவர் பெண்ணின் பெயரையும் பளிச்சென்று குறிப்பிட்டிருக்கக் கூடாதோ?

‘‘சரி அம்மா. மாமா தம்மை மதிக்கவில்லை என்று எண்ணிக் கொள்வார். நான் போய் வந்துவிடுகிறேன்’’ என்று வலுவிலே கூறிப் புறப்பட்டான். 'மாமா குறிப்பிடும் பெண் மாதவியாகவே இருந்துவிட்டால்?' இந்த எண்ணம் அவனை ஒரு நிலையில் இருக்கவிடவில்லை. நினைவு நீள நீள, அடிநாட்களில் நிகழ்ந்தவை மனத்திரையில் நிழலாடலாயின.

நான்கு ஆண்டுகளுக்கு முன், அப்போது பாலன் பாலிடெக்னிக்கில் படித்துக்கொண்டிருந்தான். மாதவிக்கும் அவனுக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் பழக்கம் ஏற்பட்டது. பஸ் பயணத்தில் வாலிபர்கள் சிலர் கூடி மாதவியையும் அவள் தோழியையும் கிண்டல் செய்து அழ அழ அடித்தார்கள். மானியாகிய மாதவிக்கு அழுகையே வந்துவிட்டது. அனைத்தையும் கவனித்து வந்த பாலனைக் கடைக்கண்ணால் பார்த்தாள். தக்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்த அவன் செவ்வி கிடைத்ததும் விவகாரத்தில் தலையிட்டு, காரசாரமாகச் சொற்களைப் பொழிந்து, 'கில்லாடி' வாலிபர்களைத் தலையிறக்கம் கொள்ளச் செய்தான். நியாயம் இருந்த பக்கம் பிரயாணிகளும் பேசவே, வாலிபர்கள் அடுத்த நிறுத்தத்திலேயே இறங்கிப் போய்விட்டார்கள். போகும்போது பாலனை நையாண்டி செய்துகொண்டே போனார்கள்.

மாதவி நன்றியறிவோடு பாலனைப் பார்த்தாள். 'எழிலின் இருப்பிடமாக இலங்கும் இவள் இத்தனை நாளாய் என் கண்ணில் படவே இல்லையே! வேறு பஸ்ஸில் இதுவரை போய்க்கொண்டிருந்தாளோ?' என்று அவன் எண்ணினான்.

பெண்கள் இருவரும் உரிய இடத்தில் இறங்கினர். 'போய் வரவா?' என்று கேட்டன அவள் நயனங்கள். 'விடையளிக்க மனம் வரவில்லையே!' என்றன, குவிந்து மலர்ந்த அவன் இதழ்கள்.

அவள் தோழியோடு பேசியபடி, பஸ்ஸின் பக்கம் பார்த்துக்கொண்டே தன் வழி சென்றாள். அவன் அவளது எழில் தோற்றத்தைப் பருகியபடி பஸ்ஸிலே சென்றான். ஆனால் 'இதென்ன?' என்று திடுக்கிட்டுக் கேட்டது அவன் உள்ளம்.

'இவள் ஏன் இப்படி என்னவோ போல் நடக்கிறாள்? நல்ல மரத்திலே புல்லுருவியா? எழில் வடிவிலே இப்படி ஒரு மறுவா? இவள் கால் ஊனம் உடையதா? அடடா!'

இப்படி அவன் உள்ளம் அங்கலாய்த்துத் தவித்தது. ஆனால் இதற்காக அவளிடம் குறைவான அபிப்பிராயம் ஏற்படவில்லை.

அன்றுமுதல் அவர்களிடையே அடிக்கடி சந்திப்பு நிகழ்ந்தது; ஜாடைமாடையாகப் பேச்சு வார்த்தைகளும் இடம் பெற்றன. ஒருவரை ஒருவர் மனமார விரும்புவதை இருவருமே உணர்ந்தனர்.

பாலனிடம் ஒரு தனித்தன்மை உண்டு. நேரான வழிக்கும் அவனுக்கும் வெகு தூரம். உண்பது உடுப்பது, படிப்பது நடப்பது எல்லாமே கோணல் வழியிலேதான். பேச்சும் அப்படியே. எடுத்ததற்கெல்லாம் குதர்க்கம்!

முதலில் நேர்வழியில் பேசிப் பழகத் தொடங்கிய மாதவி, பிறகு அவனைப் புரிந்துகொண்டு, அவனுக்குப் பிடித்த வழியையே தானும் கடைப் பிடிக்கலானாள். எடுத்ததற்கெல்லாம் அவர்களிடையே ஏட்டிக்குப் போட்டிதான். அது அவனுக்கு இனித்தது. ஆனால் விளையாட்டு வினையாகவும் முடியும் என்பதை இருவருமே கருதவில்லை.

மாதவியின் கல்லூரியில் கலைவிழா. அதில் கண்காட்சி. அநேகம் பொருள்களுக்கிடையே ஓவியங்கள் சிலவும் இடம் பெற்றிருந்தன. பாலன் கதை எழுதுவான்; கவிதை புனைவான்; ஓவியமும் தீட்டுவான். மேற்குறித்த கண்காட்சியில் அவன் தன் ஓவியம் ஒன்றையும் வைத்திருந்தான்.

பொது மக்கள் பார்வையிடும் வேளை. பாலனும் அவன் நண்பன் சேகரும் ஒரு புறமாகக் காட்சிப் பொருள்களைப் பார்வையிட்டு வந்தனர். மாதவியும் அவள் தோழிகளும் மற்றொரு புறமாக வந்துகொண்டிருந்தனர். வியப்பு,நகைப்பு, விமரிசனம் முதலியன அங்கே இடம் பெற்றன.

‘‘இதோ பார் உஷா; வனப்புறக் காட்சி ஒன்று.’’

‘‘எதைச் சொல்கிறாய் மாதவி? புதரின் பக்கம் புலி படுத்திருக்கிறதே, அதையா?’’

எதிர் வரிசையில் வந்துகொண்டிருந்த பாலன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். அவன் பார்த்தபோது மாதவி திரும்பிக்கொண்டாள்.

''அடியில் கையெழுத்து.... ஓ! பாலன்! உன் - உன்னுடைய—'' உஷா கேலியில் இறங்கினாள்.

''உஷ்!'' என்று உதட்டில் விரல் வைத்து அவளை அடக்கிய மாதவி கேலியான குரலில், ''புலியா இது? ஊரில் எங்கள் வீட்டில் இருக்கிற எருமை மாடுகூடச் சற்றுத் துடிப்பாக இருக்குமே!'' என்றாள்.

பாலன் உணர்ச்சி வசமானான். ''எருமை தூரத்திலே ஓட முடியாது! விமரிசனம் செய்ய வாய் ஒரு கேடா?''

உஷா பாலனையும் பார்க்கவில்லை; அவன் சொன்னதையும் கவனிக்கவில்லை. மாதவி திரும்பினாள். பாலன் கடுமையாக அவளைப் பார்த்தான். அவள் கண்களில் நீர் துளும்பிற்று. நிலத்தை நோக்கி முகத்தைத் தாழ்த்திக் கொண்டவள், அப்படியே மறுபுறம் திரும்பி, உஷாவின் கையைப் பற்றியபடி மெல்ல நடந்து அப்பால் சென்றாள்.

பூம்புகார் விழாவில் அன்று அந்த மாதவி பாடிய கானல்வரிப் பாட்டு எத்தகைய விபரீதத்தை விளைத்ததோ அதே விபரீத விளைவை, சென்னைக் கல்லூரியின் கலைவிழாவில் இன்று இந்த மாதவி செய்த விமரிசனம் விளைத்துவிட்டது. மாதவி கண்ணீரும் கம்பலையுமாய் இருப்பிடம் சென்றாள். பாலன், தன் உயிர்நிலையான ஓவியத்தைப் பழித்தவளைச் சொல்லம்பால் தாக்கிவிட்ட திருப்தியுடன் அங்கிருந்து அகன்றான்.

அவர்களிடையே பிறகு சந்திப்பு நிகழவில்லை. ஆனால், பிறகு மற்றவர் தம்மிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற நினைவு இருவர் உள்ளத்திலுமே நிலைத்திருந்தது.

கோபம் என்னும் கொடிய நோயைத் தீர்க்கும் மருந்து, காலம். பாலனின் உள்ளம் நாளடைவில் சாந்தம் அடைந்தது. பதிலாக, மாதவியைக் காணாத ஏக்கம் வளரலாயிற்று. 'எப்போதும் பேசுகிறபடி அவள் தமாஷாகப் பேசினாள். அதற்கு நாம் விடுத்த சுடு சரம்! சீ! நான் முட்டாள், முன்கோபி! அவளிடம் உள்ள ஊனத்தை அப்படியா எடுத்துக் காட்டி ஏசுவது? ஐயோ! நான் இதயமே இல்லாத பாவி!' —இப்படித் தன்னை நொந்துகொள்ளலானான். எப்படியானால் என்ன? பிறகு அவன் மாதவியைக் காணவே இல்லை. அவனுடைய சுடுசொல்லால் அவள் உள்ளத்தில் வடுப்பட்டதோ என்னவோ? அவன் உள்ளம் புண்ணாகி வடுப்பட்டது. அவன் ஏக்கத்தின் முழு உரு ஆனான்.

இறுதி ஆண்டுத் தேர்வு. மாதவியின் நினைவு முழுவதையும் ஒரு புறமாக ஒதுக்கி வைத்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் இரவும் பகலும் தவம் இயற்றும் நிலையில் படிக்கலானான் பாலன். சக மாணவர்கள் அவனைக் கண்டு பிரமித்தார்கள், புகழ்ந்தார்கள். பெற்றோருக்கும், பையன் முதல் வகுப்பிலே வருவதில் விருப்பந்தான் என்றாலும் உடல்நிலை பாதிக்கப் பெறுமோ என்று கவலை. அவனது அசுர முயற்சியைக் கட்டுப்படுத்த முயன்றார்கள்.

தேர்வு தொடங்கியது. பாலன் தன் முயற்சிக்குத் தக்க பயனைக் கண்டு வந்தான். அன்றாடம் அவனை மாணவர்களும் பாராட்டினர்; ஆசிரியர்களும் பாராட்டினர்.

ஆயிற்று; இன்னும் ஒரே ஒரு நாள் தேர்வுதான் பாக்கி. அதையும் சிறப்பாகச் செய்துவிட்டால் அவன் முதல் வகுப்பில் தேறிய பட்டதாரி. ஆனால் மனித முயற்சி வேறு, தெய்வ சங்கற்பம் வேறு என்பது மறுக்க முடியாத உண்மையாகிவிட்டது.

காலை மணி ஏழாகியும் பாலன் படுக்கையை விட்டு எழவில்லை. 'பாவம்! தொடர்ந்து உழைத்த அசதி; தூங்கட்டும்; தானாக எழட்டும்' என்று இருந்தனர் பெற்றோர்.

மணி எட்டு. பாலனிடம் சலனமே இல்லை. தகப்பனார் குரல் கொடுத்தார்; தாய் வந்து தட்டி எழுப்பினாள். பாலன் மெல்லக் கண்ணைத் திறந்தான். கண் ரத்தப் பிழம்பாய்க் காட்சி அளித்தது.

''மணி எட்டடித்துவிட்டதடா!''

அவன் எழுந்து நடந்தான். நடையில் ஒரு தழுதழுப்பு. அரை வேட்டி நெகிழ்ந்தது. அவன் அதைச் சீர் செய்துகொள்ள முயன்றான்; கை ஒத்துழைக்கவில்லை. பல் துலக்கப் போய் அமர்ந்தான்; உட்கார முடியாமல் விழுந்தான்.

வந்தது மோசம் என்று பயந்து உடனே பையனைக் குடும்ப டாக்டர் ராமசந்திரனிடம் கூட்டிக்கொண்டு போனார். 'அளவை மீறி உடலையும் உள்ளத்தையும் வருத்திக்கொண்டதனால் வந்த வினை. ஒரு பக்கம் வீழ்ச்சியுற்றிருக்கிறது. உடனே மருத்துவ மனையில் சேர்க்க வேண்டும்' என்றார் டாக்டர். பாலனை மருத்துவ மனையில் சேர்த்தார்கள்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. நோயாளிகள் பலரின் நடுவே செயலற்ற நிலையில் கிடந்த பாலனின் உள்ளம் என்ன என்னவோ எண்ணிக் கசிந்தபடி இருந்தது. பரீட்சை! அது என்ன ஆயிற்று? 'கிளாஸ் வாங்க வேண்டும்' என்று உழைத்த உழைப்பெல்லாம் என்ன ஆயிற்று? சீ! இனியும் இந்த உயிரை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அதுவும் ஒரு காலும் ஒரு கையும் போன பிறகு? ஆம், இனி அந்த உறுப்புக்கள் சீராகும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை.

கல்லூரி, பரீட்சை, வீடு, பெற்றோர், உடன் பிறந்தோர் இப்படி எங்கெங்கோ ஓடிய நினைவு மாதவியை எட்டிப் பிடித்தது.

'ஹூம். அன்று நான் அவளுடைய ஊனத்தைக் குறிப்பிட்டு இகழ்ந்து பேசினேன். அவள் உத்தம ரத்தினம். அத்தகையவளை இகழ்ந்ததன் பலன் - வட்டியும் முதலும்! அவளுக்கு ஒரு கால் மட்டும் ஊனம்; எனக்கோ? ஒரு கால், ஒரு கை இரண்டுமே போய்விட்டன. மாதவி, உன் வதை வீண்போகவில்லை!

'அவள் இந்த நிலையில் என்னைப் பார்த்தால் ''ஐயோ!'' என்று பதறி அநுதாபக் கண்ணீர் சொரிவாளா, அல்லது ''வேண்டும், நன்றாக வேண்டும்'' என்று உள்ளம் கிளுகிளுப்பாளா? சே! மாதவி லட்சத்தில் ஒரு பெண். என்னை இப்பொழுது பார்த்தால் துடித்தே போவாள்.'

கண்ணை மூடியபடி இவ்வாறெல்லாம்



எண்ணமிடுவதிலே பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தான் அவன்.

'இனிமேல் சிகிச்சைக்கு இடம் இல்லை; இவ்வளவுதான் என்று வீட்டுக்கு அனுப்பி, கையும் காலும் இப்படியே இருந்தால்? முதல் அலுவலாக மாதவியைத் தேடிப் பிடித்து, ''இதோ, என்னைப் பார் மாதவி; உன்னை இகழ்ந்ததன் பலன்!'' என்று கூறி மன்னிப்புப் பெற வேண்டும். ஆனால், பெரிய டாக்டர்கள் என் நிலை சீராகிவிடும் என்று உறுதியாய்ப் பேசுகிறார்கள். அவ்வாறு நான் நலம் பெற்றேனானால்? அப்பொழுதும் முதல் அலுவலாக மாதவியிடந்தான் செல்ல வேண்டும்; மன்னிப்புக் கோர வேண்டும். அதனுடன் - அவளும் இணங்கினால் - அவள் இணங்குவதும் இணங்காததும் ஒரு புறம் இருக்கட்டும். முதலில் அவள் இருக்கும் இடம் தெரிந்தால் அல்லவோ? அன்று அந்தக் கண்காட்சியில் சந்தித்த பிறகு அவள் என் கண்ணில் படவே இல்லை. இங்கேயே எங்காவது இருக்கிறாளோ, தன் பெற்றோரிடம் போய்விட்டாளோ? மாமா வீட்டில் இருந்துகொண்டு படித்து வருவதாகத்தானே சொன்னாள்? எப்போதோ பேச்சுவாக்கில் தன் பெற்றோர் இருக்கும் ஊரின் பெயரையும் சொன்னாள். அப்போது அதை நான் சரியாக வாங்கிக்கொள்ளவில்லை. இப்போது எங்கே என்று தேடுவது? விளையாட்டுப்போல் மூன்று ஆண்டுகள் ஓடியே விட்டன.'

இப்படி ஏதேதோ எண்ணி மனத்தை அலட்டிக்கொண்டான். எப்பொழுது பார்த்தாலும் ஓயாத சிந்தனை; ஒழியாத வேதனை.

மேலும் நாட்கள் சென்றன. பாலனின் உடல்நிலையில் படிப்படியாகக் குணம் இடம் பெறலாயிற்று. ஓரளவு நடை பயிலவும் கையால் பொருளைப் பற்றவும் முடிந்தது. மருத்துவ நிபுணர்கள் சில மருந்துகளை எழுதிக் கொடுத்து அவனுக்கு விடுதலை அளித்தார்கள். வீட்டில் ஓய்வு.

ஒரு மாதத்துக்குப் பின் பழைய நிலை வந்தது. உரிய காலத்தில் மீண்டும் பரீட்சை எழுதினான்; தேர்வு பெற்றான். உடனே உத்தியோகமும் கிடைத்தது. பெற்றோருக்கும் மற்றோருக்கும் மகிழ்ச்சிதான். பாலனின் அகமும் மலரவில்லை; முகமும் மலரவில்லை. ‘கிளாஸ்’ வாங்க வேண்டும் என்ற ஆசையிலும் தோல்வி; மாதவியைக் காண வேண்டும் என்ற அவாவிலும் தோல்வி.

பெண்ணைப் பெற்றவர்கள் வலை வீசினார்கள். பெற்றோர் அவனுக்குத் திருமணம் செய்ய முயன்றார்கள். அவன் மிகவும் வன்மையாக மறுத்து வந்தான். மாதவி எங்கே? - உள்ளத்தில் எந்நேரமும் இதே கேள்வி. எனவே, மாமாவின் அழைப்பையும் வழக்கம் போல் மறுத்தான். பின்பு ஏதோ ஓர் அஞ்ஞானத்தில் வலுவிலே பயணத்தை மேற்கொண்டான்.

விடிகிற வேளைக்கு ரெயில் மாயூரம் சந்திப்பை அடைந்தது. பாலன் பரபரப்புடன் குதிரைவண்டி ஏறி மாமாவின் இல்லத்தை அடைந்தான். குழந்தைகள் முதல் மாமா உட்பட அனைவரும் சூழ்ந்துகொண்டு அவனைக் கிண்டல் செய்தனர். அவன் போலியாகச் சிரித்துப் பேசி எல்லாம் செய்தான்.

பிற்பகலில் பெண் பார்க்கும் படலம். மாமா எழுதியிருந்ததுபோல் நல்ல இடம், பெண்ணும் அழகி, சாய்வான அவள் நடை ‘ஸ்டைல்’ போலவே இருந்தது. ஆனால் அவள் மாதவி அல்ல.

வீடு திரும்புகிறபோது மற்றவர்கள் என்ன என்னவோ பேசினார்கள். பாலன் ‘உம்’ என்று இருந்தான்.

கோயில், கோபுரம், குளம், சூழ்நிலை முதலிய காட்சிகளில் என்றுமே லயித்துவிடும் இயல்பினனான பாலன் மாலையில் பெரிய கோயிலின் பக்கம் உலாவச் சென்றான்.

ஒரு தெருவின் முனையிலே அவன் நுழைந்தபோது மறு முனையில் ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள். மாதவியை நினைத்துக்கொண்டிருந்த அவன் கண்ணுக்கு அவள் மாதவி போலவே தோன்றினாள். ஊன்றிக் கவனித்தபடி வேகமாக நடந்தான். ‘தோற்றம் அப்படியே இருக்கிறது. ஆனால் நடையில் குறையைக் காணவில்லையே! மாதவி சாயலில் வேறு யாரோ?’ என்று குழம்பினான். ஆனால் ஒருவரை ஒருவர் அணுகினதும் அவள் இவனைப் பார்த்து முறுவலித்தாள். பிரமையா?

கையில் அர்ச்சனைத் தட்டுடன் வந்த அவள் முறுவல் சிந்தியபடி ஒரு வீட்டின்முன்னே நின்றாள். பாலன் அருகே வந்ததும், ‘‘இங்கே எங்கே வந்தீர்கள்?’’ என்று கேட்டாள்.

பெருநிதியைக் கண்ட ஏழைபோல் பேச வாய்வராமல், குழறினான் பாலன். ‘‘மாதவி!...நீ...உன் கால்...இது...’’

அவள் கலகலவென்று சிரித்தாள். ‘‘இது எங்கள் வீடு. வாருங்கள், உள்ளே போகலாம்’’ என்று நடந்தாள். பாலன் அவளைத் தொடர்ந்தான்.

‘‘மற்றவர்கள் சொன்னபோது என் குறை எனக்குப் பெரிதாகப்படவில்லை. நீங்களே சுட்டிக் காட்டியதும் மனம் மிகவும் வேதனைப்பட்டது. படிப்பை நிறுத்தி ஊர் திரும்பினேன். சோகச் சிலையாய் வீட்டிலே அடைந்து கிடந்தேன். வெளியூரிலிருந்து அடுத்த வீட்டுக்கு வந்த ஒருவர் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார். சிகிச்சை செய்து செய்து அலுத்துப் போன என் அப்பாவை ஊக்கினார். வேலூர் சென்று தங்கினோம். சிகிச்சையில் நலம். ஊர் திரும்பியதும் உங்களுக்குக் கல்லூரி முகவரிக்கு என் மாறுபட்ட நிலையை விளக்கி எழுதினேன். பதிலும் இல்லை. என் கடிதம் திரும்பி வரவும் இல்லை. பிறகு என் தோழி உஷா எழுதியதிலிருந்து உங்களுக்குத் திடீரென்று ‘பெராலிடிக் அட்டாக்’ என்ற செய்தி தெரிந்து பதைத்துப் போனேன். உஷாவும் திருமணமாகிக் கணவன் வீடு சென்றுவிட்டதனால் மேற்கொண்டு ஏதும் அறிய முடியவில்லை. மனம் தவியாய்த் தவித்தது. நான் என்ன செய்ய? நீங்கள் பிறந்தது வெள்ளிக்கிழமை • என்று சொன்ன நினைவு. வெள்ளிதோறும் அம்பிகைக்கு அர்ச்சனை செய்கிறேன். உங்கள் உடல் நிலை சீராகி, இந்த நொண்டியை மறந்து, யாரையாவது மணந்து எங்காவது சுகமாக-’’

சட்டென்று அவள் வாயைப் பொத்தப் போனான் அவன். அவள் ஒயிலாகத் திரும்பி அவனை ஊடுருவி நோக்கினாள்.

‘‘முன்கோபத்தினால் நான் உதிர்த்த ஒரு சொல், நம்மிடையே நாலாண்டுப் பிளவை உண்டுபண்ணி.....’’

‘‘ஆனால் எல்லாம் நலமாக முடிந்ததே! அதைச் சொல்லுங்கள். அது போகட்டும்; எங்கே இந்த ஊருக்கு?’’

‘‘பெண் பார்க்க!’’

‘‘நினைத்தேன். யார் வீட்டுப் பெண்ணோ? பார்த்தாயிற்றா?’’

‘‘உம். பார்த்துக்கொண்டே இருக்கிறேன். பெண்ணின் பெயர் என்ன தெரியுமா? மா...த...வி!’’

‘‘ஓகோ! வாருங்கள், மாடியில் அப்பா இருக்கிறார்.’’

அவள் முன்னே சென்றாள்; அவன் பின்னே தொடர்ந்தான். சில படிகள் சென்றதும் அவளை அணுகினான்.

‘‘உஸ்ஸ்ஸ்! அதோ, அப்பா!’’ என்றாள் மாதவி. பாலன் நல்ல பிள்ளையாக நடந்துகொண்டான்.

இருவருக்குமே அப்போது மாடிப் படியிலே ஏறுவதுபோன்ற உணர்வு இல்லை; புஷ்பக விமானத்தில் இன்ப உலகத்தை நோக்கிப் பறப்பதுபோல ஒரு பிரமை! ★

EXCLUSIVELY

FOR

LADIES WEAR

VISIT

LADIES CORNER

SAREE SPECIALISTS

Phone : **74264**

HOUSE OF FINE TAILORING AND MEN'S WEAR

Phone : 74264

MALSONS

MAKE THE MAN

DISTINCT • DASHING

DEBONAIR

STOCKISTS :—

ARMOUR—**ZEE** SHIRTS

MALSONS

LUZ - MADRAS 4

"ARTHENE"

HIGH DENSITY POLYTHENE BAGS, TUBES & SHEETS

★ **An ideal packing media for Chemicals, Plastics, Food Products etc. etc.**

★★ **Polythene Bags for various uses**

Enquiries Solicited:

R. K. INDUSTRIES

16, Stringers Street, MADRAS-1

Factory: **Main Road, VELLACHERY**

Proprietors:

K. ORR & COMPANY

Indenting Agents, Importers & Paper Merchants

16, Stringers Street, MADRAS-1

From Stock :

Paper, Printing Inks,
Adding Machine Rolls,
Teleprinter paper Rolls
Garage Equipments (Polish Make)
Phone : **23019 & 23526**

Indents :

Paper, Process Zinc & Copper Sheets,
Hardware, Match Chemicals,
Acrylic Plastic Sheets,
Iron & Steel, "KG" Brand Zip Fasteners
Grams : **"PRESUNDRY"**

பெண்மை அரசு

முனிமாணிக்யம் நரஸிம்ஹ ராவ்

தெலுங்கு ஹாஸ்யக் கட்டுரை

தினசரி வாழ்க்கையில் மனைவி கவனிக்கும் விஷயங்கள் ஒரு வகை, வீட்டு எஜமானர் கவனிக்கும் விஷயங்கள் மற்றொரு வகை என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். இந்தக் குடும்ப ராஜ்ய பரிபாலனத்துக்குத் தொடர்பு உள்ள விஷயங்கள் சில வீட்டு எஜமானியைச் சேர்ந்தவையாகவும், வேறு சில எஜமானரைச் சேர்ந்தவையாகவும் இருக்கும். இதை ஒரு விதத்தில் இரட்டையாட்சி எனலாம்.

வேலைக்காரர்களை அமர்த்தல், அவர்களிடம் வேலை வாங்குதல், அரிசி, உப்பு, பருப்பு முதலிய பொருள்களை வாங்கி வரச்செய்து உபயோகித்தல், அருகில் உள்ள சில கல்பூடி, சிந்தகுண்டபாலம், சிவகங்கை முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வருதல், குழந்தைகளைச் சினிமாவுக்கு அனுப்புதல், பண்டிகைக் காலங்களில் அவர்களுக்கு உடை தைத்தல், மாப்பிள்ளைகளைப் பண்டிகைக்கு அழைத்தல், அவர்களுக்குத் தக்க முறையில் உபசாரம் செய்தல், பெண்களைப் பிரசவத்துக்கோ மற்றத் தேவைகளுக்கோ அழைத்து வருதல், பேரன் பேத்திகளுக்குத் துணிகள் தைத்து ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுதல் முதலிய விஷயங்கள் முழுவதும் மனைவியின் அதிகாரத்துக்கு உட்பட்டவை.

மனைவியின் ஆட்சியை ஒரு வகையில் ஏகாதிபத்தியம் என்றே சொல்லலாம். ஆனால் அது குடி (குழந்தை) களுக்கு இதமானது. வாயில்லாத குடிகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் கிடைக்கும்படி செய்வது. அவர்களுடைய அன்பையும் நம்பிக்கையையும் அவள் சொந்தமாக்கிக் கொண்டுவிடுகிறாள். அது அவள் தினசரி வாழ்க்கை. மேலே கண்ட விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரத்தைத் திறமையாகச் செலுத்துவதுதான் அவளுடைய லட்சியம்.

வீட்டு ராணியின் விஷயங்கள் இவை. இவை போக, மிகுந்த விஷயங்கள் கணவருக்குச் சேர்ந்தவை. குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பது, இளங் குழந்தைகள் அழுதால் தோளில் போட்டுத் தட்டிச் சமாதானப்படுத்துவது, குழந்தைகளுக்கும் மனைவிக்கும் படுக்கை போடுவது, வேட்டகத்து மனிதர்களுக்கு க்ஷேமம் விசாரித்துக் கடிதம் எழுதுவது, ரேஷன் அரிசி வாங்குவது, சர்க்கரை வாங்குவது முதலிய வேலைகள் வீட்டு எஜமானர் வசத்தில் இருப்பவை.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், அம்மாவின் வசம் உள்ளவை போக, மீதி உள்ள எல்லாமே வீட்டு எஜமானருடையவை ஆகிவிடும். அரசாங்கத் தத்துவ சாஸ்திரத்தில் இவற்றுக்கு விசேஷ அதிகாரம் என்று பெயர்.

இம்மாதிரியான வீட்டு நிருவாக முறை, சிறு மாறுதல்களுடன், எல்லா வீடுகளிலுமே இருந்து வருகிறது என்றே நான் நம்புகிறேன்.

வீட்டு எஜமானியின் வசம் உள்ள விஷயங்களுக்குத் தேவையான பணத்தை, எஜமானர் தம் வருவாயிலிருந்து வேறாக எடுத்துக் கொடுத்துவிட வேண்டும். அவள் விரும்பிய பணத்தைக் கொடுக்க வேண்டுமே தவிர, சில செலவினங்களைக் குறைத்துக் கொள்ளும்படி அவளைக் கேட்டுக் கொள்ள, எஜமானருக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை.

வரவு செலவுப் பட்டியல் தயார் செய்யும் பொறுப்பு வீட்டு எஜமானியினுடையதே தவிர எஜமானருடையதன்று. செலவுத் தொகைப் பில் எல்லாம் சமையலறையிலேயே பாஸாகி எஜமானரிடம் வரும். எஜமானர் அதை ஆமோதித்தே தீர வேண்டும். மிகவும் கஷ்டமாக இருந்தால், சிறிது முணுமுணுக்கவும் சற்றுச் சிடுசிடுக்கவும் எஜமானருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், அவை விசேஷமான உயர்ந்த அதிகாரங்களாகையால் நித்தியப்படி ஆட்சியில் அவற்றை உபயோகிக்கக் கூடாது. சிக்கலான நிலைமையில், அசாதாரண நிகழ்ச்சிகளும் சந்தர்ப்பங்களும் நேரும்போது மட்டுமே இந்த உரிமைகளை உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

இது போன்ற அரசாங்க முறையில், எஜமானர் மனைவிக்கு அடங்கிவிட்டார் என்றோ, அவர் அதிகாரங்கள் அற்றவர் என்றோ நினைப்பதும் அல்லது பகிரங்கமாகச் சொல்லுவதும் ராஜத்துரோகமாக மதிக்கப்படும்.

எஜமானருக்கு வேண்டிய அளவுக்குச் சுயேச்சை இருக்கிறது. பட்ஜெட்டில் தமக்கென்று ஒதுக்கப் பெற்ற பணத்திலிருந்து, இன்ஷூரன்ஸுக்குக் கட்டியது போக மிகுந்ததைச் சிகரெட் வாங்கவோ, எப்பொழுதாவது ஒரு தடவை காபி ஹோட்டலுக்குப் போகவோ அவர் தாராளமாக உபயோகித்துக் கொள்ளலாம். இது அவருடைய பிறப்புரிமை; அல்லது முதலுரிமையாகும்.

வீட்டுத் தலைவருக்கு உரிமைகள் இருப்பது போலவே பொறுப்புக்களும்

அமைந்திருக்கின்றன. அவை முக்கியமாக இரண்டு: குடும்ப ராஜ்யத்துக்காகச் சம்பாதிக்கும் வருமானத்தைப் பல வழிகளில் விருத்தி செய்வதும், தேவையான சமயங்களில் கடன் வாங்கிக் கொண்டு வருவதும் ஆகும்.

இங்கே மற்றொரு விஷயத்தையும் சொல்ல வேண்டியிருக்கிறது. வீட்டையும் வீட்டைச் சார்ந்த பகுதிகளையும் காக்கும் பொறுப்பு எஜமானருடையதே ஆகையால், எஜமானர் நிருவகிப்பது மத்திய சர்க்கார் என்றும், மனைவி நிருவகிப்பது ராஜ்ய சர்க்கார் என்றும் அறுதியிட்டுக் கூறலாம்.

ராஜ்ய சர்க்கார் நிர்வாகத்தில் மனைவி ஈடுபட்டிருப்பாள். அவளுடைய அன்றாட வாழ்க்கை எப்படிப்பட்டது என்ற கேள்வி வரும்போது, அவள் வீடு பெருக்குவாள், சமையல் செய்வாள் என்று மிகச் சிறிய செயல்களை வருணிப்பது சரியன்று என்பதும், அவளுடைய வாழ்க்கை எந்தப் பாதையில் செல்லுகிறதோ, அதை மட்டும் காண்பித்தால் போதும் என்பதும் என் அபிப்பிராயம்.

இந்த ராஜாங்க முறையில் மத்திய சர்க்கார் சற்றுப் பலக்குறைவுள்ளதாகவும் ராஜ்ய சர்க்கார் பலமுள்ளதாகவும் அமைந்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ராஜ்ய சர்க்காரின் விஷயத்தில் மத்திய சர்க்கார் அநாவசியமாகத் தலையிட்டால், ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்கார் மீது நடவடிக்கை எடுக்க அதிக அவகாசம் இருப்பது உண்மையே. ஒவ்வொரு சமயம் அம்மாதிரியான படையெடுப்பு நடந்து இரு சர்க்கார்களுக்கிடையே தூது செல்லுதலும் கடைசியில் சமரசம் ஏற்படுவதும் உண்டு. அதன் பயனாக மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்காருக்குப் புத்தாடைகளையும் மதிப்பு மிகுந்த பொன் நகைகளையும் கொடுத்துத் திருப்திப்படுத்தி அதனுடைய தயவைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் கூட ஏற்படுவது உண்டு.

இப்படிச் சர்க்கார்க் கிளைகள் தனித்தனியாக இருந்தாலும், மத்திய ராஜ்ய சர்க்கார்களுக்கிடையில் தகராறு வரப் பல சந்தர்ப்பங்கள் ஏற்படும். முக்கியமாக, இரண்டு சர்க்காருக்கும் பொதுவான விருந்துபசாரம் முதலியவற்றில் தகராறு வருவதுண்டு.

விருந்தாளிகள் இரு வகைப்படுவார்கள், அவளைச் சேர்ந்தவர்கள், அவரைச் சேர்ந்தவர்கள் என்று.

இவர்களுள், மனைவியின் உறவினர் வந்த சமயங்களில் கணவர் மிகுந்த பக்தி சிரத்தையுடன் நடந்துகொள்ள வேண்டியிருக்கும். அவர்கள் விஷயத்தில் குற்றங்குறை எதுவும் நிகழக் கூடாது.

மனைவி, ''எங்கள் அம்மா வரப் போகிறாள்'' என்பாள். அப்பொழுது கணவர் அசட்டையாய் வாயை மூடிக் கொண்டிருப்பதும், 'சரிதான்' என்று பேசாமல் இருப்பதும் ராஜத் துரோகச் செயலாகவே கருதப்படும். கணவருடன் மனைவி பேசமாட்டாள். ஏதாவது கேட்டால், 'உம்', 'ஆம்' என்று ஒரு வார்த்தையில் அமைந்த பதிலே வரும். உதட்டைச் சுழித்துக் கொள்வதும் முகத்தைத் தோளில் இடித்துக் கொள்வதும் நடக்கும். இது அற்ப விஷயமே ஆனாலும் வீட்டு எஜமானருக்கு நிரம்பவும் மனக்கிலேசத்துக்குக் காரணமாகும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆகையால் இந்த அவல நிலை வராதிருக்க, வீட்டு எஜமானர், அம்மா அவர்களுடைய தாய் வரப் போகிறாள் என்று கேள்விப்பட்டவுடன், மலர்ந்த முகத்துடன், அடங்காத மகிழ்ச்சி தோன்ற, 'இதைவிடச் சந்தோஷம் தரும் செய்தி வேறு இல்லை' என்று சொல்ல வேண்டும்.

ஆனால் ஒன்று: வரப் போகிற அந்த மனுஷிக்கு, கணக்காகப் புறப்படும் தினத்தன்று குளிர்ஜுரம் வர வேண்டும் என்றோ, அவள் ஏறிய ஒற்றை மாட்டு வண்டி குடை சாய்ந்து அவளுடைய முழங்கால் சில அடி பட வேண்டுமென்றோ, அவள் வரும் பாதையிலுள்ள ரெயில் பாலம் ஒன்று இடிந்து போய் அதனால் ரெயில் போக்குவரத்து நின்று அவளுடைய பிரயாணம் தடைப்பட வேண்டும் என்றோ மனத்துக்குள் வேண்டிக் கொள்வதில் தவறில்லை. ஆனால், ''நாளைச் சனிக்கிழமையன்றே புறப்படச் சொல்லிக் கடிதம் எழுதுங்கள்'' என்று எஜமானியம்மாள் சொன்னவுடன், மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு, சனிக்கிழமையன்று எந்த வண்டி முதலில் வரும் என்பதைத் தெரிந்துகொண்டு அந்த வண்டியில் புறப்பட்டு வரச் சொல்லி எழுதுவது மிகவும் நல்லது. அப்படியின்றி, ''இப்போது எதற்கு?'' என்றாரோ, அது ராஜத் துரோகச் செயலாக மதிக்கப்படும்.

வந்திருப்பது அவளுடைய அம்மாவோ, அக்காவோ யாராக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு நாள் தங்கினாலும் வீட்டு எஜமானர் அலுத்துக்கொள்ளக் கூடாது. இந்தப் பஞ்ச காலத்தில் அரிசி இருக்காது. கறுப்பு மார்க்கெட்டில் ஒன்றுக்கு இரண்டாகப் பணத்தைக் கொட்டி அரிசி வாங்கி வரவேண்டியதுதான். மனைவி வந்த மனுஷியிடம், ''எங்களுக்கு அரிசிக் கஷ்டமே இல்லை, அக்கா! நீ என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லோரும் உன் மாப்பிள்ளைக்கு நண்பர்கள். எவ்வளவு வேண்டுமானாலும் அரிசி கிடைக்கும்'' என்று சொன்னால் கேட்டுக்கொண்டு எஜமானர் 'கப் சிப்' என்று இருக்க வேண்டியதுதான். கறுப்பு மார்க்கெட்டில் தலைக்கு மேல் பணம் கொட்டி அரிசி வாங்குவதே பெரும்பாடாகி விட்டது என்று அவருக்குத் துக்கமாக இருந்தால் படுக்கை அறைக்குச் சென்று மெத்தையில் விழுந்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஓசைப்படாமல் சிறிது நேரம் அழுது கண்ணீர் வடிப்பதற்கு மட்டும் வீட்டு எஜமானருக்கு உரிமை உண்டு.

மனைவியின் அக்கா பத்து நாள் தங்கிய பின், ''போகிறேன்'' என்றால், ''இன்னும் இரண்டு நாள் இரு, அக்கா! என்ன அவசரம்? வந்ததிலிருந்து, 'போகிறேன், போகிறேன்' என்று பறக்கிறாயே!'' என்று எஜமானி பதில் சொல்லும்போது, எஜமானரும் மனத்தை ஆத்திரப்படாமல் அடக்கிக்கொண்டு சிரித்தவண்ணம், ''இருங்களேன்! என்ன அவசரம்?'' என்றுதான் சொல்லவேண்டும். தவறி, ''அதென்ன, இப்படி மன்றாடுகிறாய்? நாமே அரிசியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோமே!'' என்று மனைவியிடம் (ரகசியமாகத்தான்!) சொல்லி விட்டால், அது மிகுந்த ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் என்றும், குடும்ப ராஜ்ய பரிபாலன முறைக்கு அது முரண்பட்டது என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இனி, வீட்டு எஜமானருடைய நண்பரோ, உறவினரோ விருந்தாளியாக வரும்போது, மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்காருக்குச் செய்தியை முதலிலேயே தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

'வந்திருக்கும் மனிதர் யார், அவர் பெயர், இனிஷியல், உறவு, எதற்காக வந்திருக்கிறார், எவ்வளவு நாள் தங்குவார்?' என்று அவள் அதிகார ரீதியில் கேட்கும் கேள்விகளுக்கு மத்திய சர்க்கார் சாவதானமாகப் பொறுமையுடன் பதில் சொல்ல வேண்டும்.

அவளுடைய உறவினர் அல்லாமல் இவருடைய உறவினர் வந்த சமயங்களில், வீட்டில் உள்ள அரிசி மாயமாய் மறைந்துவிடும்; எங்கும் கடன் பெயராது என்பதை வீட்டு எஜமானர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இது போன்ற சந்தர்ப்பங்களில் விருந்துபசாரத்துக்கென்று மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்குச் சிறிது பணம் கொடுத்து வேலையை முடித்துக் கொள்வது, உலகத்தில் பல வீடுகளில் வழக்கமாக இருக்கிறது. அப்படிக் கொடுத்தபின் விருந்துபசாரம் குடித்தனப் பாங்காக நிறைவேறிவிடும். நிறைவேறினாலும் அம்மாள் சொல்ல வேண்டிய நாலு வார்த்தைகளைச் சொல்லாமல் விடமாட்டாள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு அதற்குத் தயாராக இருப்பது மிகவும் நல்லது.

வீட்டு எஜமானி, ''அப்பப்பா! எத்தனை தடவை படித்துப் படித்துச் சொல்லியும் என்ன பிரயோஜனம்?

மனிதருக்குத் தெரிகிறதா? யாரோ ஒருத்தரை அழைத்து வந்து தலையில் கட்டிவிடுகிறார்'' என்று சொல்லுவது சகஜம்.

''நான் என்ன, அவரை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தேனா? படியேறி வந்தவர்களை வேண்டாமென்று எப்படித் தடுப்பது?'' என்பார் எஜமானர்.

''இருக்கச் சொல்லி உபசரிக்காமல் ஏதாவது அரசியல் செய்திகளைப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, எங்கேயாவது நடுவில், அரிசித் தட்டுப்பாடு பற்றிச் சொல்லியிருக்கலாமே! வந்தவர் வந்த வழியிலேயே போயிருப்பாரே!'' என்பாள் மனைவி. பிறகு, ''அப்படிச் சொல்லுவது மரியாதையாக இருக்காதோ என்று தயங்கினேன்'' என்று வீட்டு எஜமானர் சொல்லுவார். ''இந்த மரியாதையெல்லாம் பார்த்தால் உருப்பட்டாற் போலத்தான்!'' என்று மனைவி முணுமுணுப்பாள்.

இது சாதாரண நிலையில் நடக்கும் நிகழ்ச்சி. அவ்வளவோடு விருந்தினரை ஒருவாறு திருப்திகரமாக உபசரித்து அனுப்புவார்கள். எந்த இல்லத்தரசியும் வீட்டுக்கு வந்த விருந்தாளியை அவமதித்து அவதூறுக்கு ஆளாக மாட்டாள்.

ஆனால் சில சமயங்களில் இந்த விவகாரம் இன்னும் ஒருபடி மேலே சென்றுவிடும். தினந்தோறும் இரவில் கூடும் ஸுப்ரீம் கோர்ட்வரையில் போகும். இந்தப் பஞ்ச காலத்தில் விருந்தாளிகளை அழைத்து வருவதென்பது, ராஜ்யத்துக்குத் தாங்க முடியாத சுமை ஆகிவிடுவதுடன், அமைதியான குடும்பத் தலைவியின் வாழ்வில் புயலைக் கிளப்பும் விரும்பத்தகாத செயலாகத் தீர்மானிக்கப்படுவதும், பின்பு 'காதைத் திருகல்' என்னும் தண்டனைக்கு எஜமானர் ஆளாவதுங்கூட உண்டு.

வீட்டுத் தலைவர் இவ்வளவு குறைந்த பட்சத் தண்டனையுடன் விடுபட்டால் அதுவே சந்தோஷப்பட வேண்டிய விஷயம். மேல் நாடுகளில் வீட்டுத் தலைவி, வீட்டுத் தலைவரை இதைவிடக் கடினமான தண்டனைகளுக்கு உட்படுத்துவாள். அது அந்த நாடுகளில் சட்ட சம்மதமான செயல் என்பதை நாம் தெரிந்துகொண்டோமானால், நமக்கு மிகுந்த ஆறுதல் உண்டாகும். ★

தமிழாக்கம்: எஸ். கே. சீதாதேவி

இன்ப நயம் வழங்குவீர் இப் பண்டிகை நாட்களிலே...

...வழங்குங்களேன் ஒரு **புஷ்!** தருவதும் இன்பம், பெறுவதும் இன்பம்: தூய பேரின்பம். கேட்பதும் இன்பம், அதனழகைப் பார்ப்பதும் இன்பம். பருவம் எதுவாயினும் பலே கொண்டாட்டம். புஷ் ரேடியோக்கள், டிரான்ஸிஸ்டர்கள் பலவகை; அவற்றிலே ஆறே ஆறு இதோ. உங்கள் அருகிலுள்ள விற்பனையாளரை அணுகினுல் புஷ் வரிசை முழுவதையும் காணலாம்.



MULCHANDANI

புஷ்

முல்சந்தானி எலக்ட்ரிகல் & ரேடியோ இண்டஸ்ட்ரீஸ் லிட்.,

CMBR-6 TM

ஜய்பீ எலெக்ட்ரானிக்ஸ்,
69, ராஷ்டிரபதி ரோட்,
ஸெகந்தராபாத்

சென்னைக்கும், ஆந்திரப் பிரதேசத்தின் பகுதி, மைசூரின் பகுதி, மகாராஷ்டிரத்தின் பகுதிக்கும் விநியோகஸ்தர்கள்

இன்பவீடு வீடு வீடதே!

தேவலோக ராஜபோக சீதனங்கள் கொஞ்சமா?
 தெய்வகன்னி தேவசேனை மீதிலென்ன வஞ்சமா?
காவலாக மேவிவந்த கானகத்தில் வேலனார்
 காட்டுவேட்டு வச்சிபால் கருத்தழிந்த தென்னடீ?
 கன்னிவள்ளி மைக்குறத்தி காலில் வீழ்ந்த தென்னடீ?

கன்னிவள்ளி மைக்குறத்தி காலில் வீழ்ந்த காவியம்,
 கட்டில்நின்ற சீவனுக்குக் கண்திறக்கும் ஓவியம்,
அந்நியம் அவிழ்ந்துநின்ற ஆன்மபோத மன்றிலே
 அவிச்சையின் முடிச்சவிழ்க்க அம்மைகண்ட நாடகம்,
 அரன்மகன் அருள்பொருந்தி ஆடிநின்ற நாடகம்!

ஆன்மநேய மன்றிலாடி ஐயனும் அடங்கினார்;
 ஆலின்கீழ் அமர்ந்திருந்து யோகிலே ஒடுங்கினார்.
தான்பயந்த மைந்தரிங்குக் கான்திறந்து வேடர்தம்
 தருக்கிருந்த கள்ளிபால் செருக்கிழந்த தென்னடீ?
 தழைந்துநின்ற் வள்ளிபால் குழைந்தவீரம் என்னடீ?

தழைந்துநின்ற வள்ளிபால் குழைந்துநின்ற காட்சியில்
 தந்தையார் வடித்தநூலை மைந்தர்நெய்து காட்டினார்!
அழுந்திநின்ற அன்பினால் விழைந்துமன்றில் அண்ணலார்
 அகமலிந்த மறைவிளங்க ஆடலில் துலக்கினார்;
 அப்பனார்தம் களவுநூலைச் சுப்பனார் விளக்கினார்.

சுப்பனார் விளக்கவந்து சொக்கிநின்ற சுந்தரி
 சொல்லொணாத காவியம் துலக்கவந்த நாயகி
சிப்பியின் வயிற்றிலே சிரித்தெழுந்த முத்தெனாத்
 திருக்கிருந்த குறவர் தங்கள் செல்வியான தென்னடீ?
 தினைவிளைந்த காட்டிலே திரிந்திருந்த தென்னடீ?

தினைவிளைந்த காட்டிலே திரிந்தவள்ளி இச்சையால்
 சிவனிங்கு மெய்கலந்த சித்திகாட்டி நின்றதே!
வினைவிளைந்த பஞ்சபூத வேடர்வாழ் உடம்பிலே
 வேலன்வள்ளி கூத்தெலாம் விரித்துணர்ந்து பாரடீ!
 விரித்துணர்ந்து காணில்இன்ப வீடு வீடு வீடதே!

கோமுகி வேலன்

பால் நிலவே!

வித்துவான் துரைசாமி

ஈசன் முடியினில் நீயிருப்பாய்—மண்ணில்
எங்கும் ஒளியினைத் தூவிடுவாய்
காசினி யோர்கண்கள் கூசுதலின்றிக்
களிப்புடன் காண விளங்கிடுவாய்.

பூரிப்பில் பொங்கி வளர்ந்திடுவாய்—பின்னர்ப்
பொன்னெனத் தேய்ந்து குறைந்திடுவாய்
பாருக்குள் மாந்தரின் பண்பைப் பழித்திடும்
பால்நில வே! உன்றன் பான்மையென்னே?

எங்கும் நிறைசிவன் கண்ணுவாய்—எனில்
ஏனிந்தத் தேய்வும் நிறைவுகளும்?
வங்கக் கடல்களைப் பொங்கவைப் பாய்அந்த
மாயம் அறிந்திட மாட்டுவமோ?

சென்மப் பகைவர் அசுரர்களால்—பட்ட
சீரழி வெல்லாம் மறப்பதற்குள்
வன்மங்கொண் டுன்னை வதைத்திட வேமண்ணில்
வஞ்ச அசுரர்கள் மிஞ்சிவிட்டார்!

பாலும் அமுதமும் சேர்த்தமைத்த—நின்றன்
பட்டுட லெங்கும்புண் பட்டிடவே!
வேலென விந்தப் படைகளையே—விண்ணில்
வீசுகின் றூர்நினை வென்றிடவே.

கோல்கொண் டடிக்கும் குழவியின்மேல்—தாயும்
கொல்லும் சினத்தினைக் கொள்வதுண்டோ?
நாலும்]சகித்து நடப்பது தான்இந்த
நானிலம் உய்யும் வழியாகும்.

மேக மோகம்

பச்சை நிறப்பட்டுச் சேலையென—வயல்
பயிர்நி றைத்து மறைத்திருக்க
கச்சை இறுக்கிய குன்றுகளாய்—அங்குக்
களத்து மேட்டிலே நெல்குவியும்.

பருவத்தைக் கண்டதும் விம்மியெழ—இதைப்
பார்க்க விழைந்தன விண்ணொளிகள்,
கருவத் துடனே படுத்திருந்தாள்—நிலக்
கன்னி யெழில்தரு வண்ணத்திலே.

வெள்ளை யுடைகள் விசிறிவர—ஒளிர்
வெள்ளி நிலாவில் பளபளக்க
அள்ளிக் கடல்உண்ண வேண்டுமென—மேக
ஆணழ கன்வான வீதிவந்தான்.

மோனம் முகிழ்க்கும் நிசியினிலே—நில
மோகினி வண்ணம் தனிமையிலே
வான முகில்மகன் கண்டுவிட்டான்—உயர்
வான நிலைவிட்டுக் கீழிழிந்தான்.

மோகப் புகையெழச் சூழ்ந்திருந்தான்—நில
மோகினிப் பெண்ணும் கிளுகிளுத்தாள்;
மேகப் புகையிடை மண்ணிருக்க—அந்த
மூடு பனியிடை வான்கதிரோன்;

நித்தம் வருவது போலவந்தான்—இந்த
நிலையினைக் கண்டு கதிர்விசிற
முத்துப் பனித்துளி வைரமணி—பச்சை
மேலுடை மீது வியர்த்திருக்கும்.

கொத்தும் மலர்களும் புல்லரிக்கும்—நிலம்
கூர்துயில் கொள்ள முகில்எழுந்தான்
சித்தக் கடலுளே மீனுலவ—முகில்
சென்ற திசையினைக் கண்டுயிர்த்தாள்.



அன்னைக்கு

ஆயிரம் வீடுகள்ஏன்?—நெஞ்சமே,
அன்புக் கொருகுடிசை
தாய்மை கொலுவிருக்க—என்றே
தருகநீ அதுபோதும்.

ஆயிரம் தீபங்கள்ஏன்?—நெஞ்சமே,
அருளினுக் கோர்அகலைத்
தாயின் முகம்மிளிர—என்றே
தருகநீ அதுபோதும்.

ஆயிரம் செண்டுகள்ஏன்?—நெஞ்சமே,
ஆசைக் கொருமலரைத்
தாயின் திருவடிக்கே—என்று
தருகநீ அதுபோதும்.

ஆயிரம் கீதங்கள்ஏன்?—நெஞ்சமே,
ஆர்வமாய் ஒருகவிதை
தாயின் மனங்குளிர—என்றே
தருகநீ அதுபோதும்.

ஆயிரம் ஆண்டுகள்ஏன்?—நெஞ்சமே
ஆசையாய் ஓர்நாளைத்
தாயின் புகழ்விளங்க—என்றே
தருகநீ அதுபோதும்!

லெமன்



மனித சக்தி

பெ. தூரன்

மகத்தான சக்தியடா மனித சக்தி
மறைந்துனக்குள் கிடக்குதடா உள்ளின் உள்ளே
எகத்தாளம் பேசாதே மூழ்கிப் பாராய்
எண்ணற்ற அதிசயங்கள் காண்பாய் நேராய்;

சங்கரரோ டொருமூலர் மீண்டும் சொன்னர்
தானேதான் எங்குமெனில் சமரும் உண்டோ?
எங்கிருந்தோ புதுக்கொள்கை வேண்டா மிங்கே
இருப்பதையே களையகற்றிக் கொள்வாய் இன்பம்.

அப்பண்ணக் குருநாதர் அதையே விண்டார்
அவருருவத் தொளிக்கண்ணில் கண்டேன் கண்டேன்
தப்பென்ன, மாயமெனத் தயங்காதே நீ
தயாநிதியும் காட்டிவிட்டார் மயங்கா தேநீ.

உளமுற்றும் சிக்கலடா சேற்றுக் குட்டை
உணராமல் அதன்வழியே சென்று கெட்டோம்
அளவற்ற சக்தியடா ஆன்ம சக்தி
அதையறிந்தால் மனிதகுலம் ஒன்றுய் வாழும்.

பூரணத்தில் அடடாநீ தனிவே றுண்டோ
பூரணமும் அந்நிலையில் பொய்யாய்ப் போகும்
ஆரணத்தைக் கண்மூடிப் படித்தல் ஆமோ?
அகலக்கண் விழித்துப்பார் எல்லாம் நீயே!

பொதுமைஇந்த நாட்டிற்குப் புதுமையில்லை;
பொய்யறிவால் நிலைகெட்டோம் உலகிற் கெல்லாம்
இதமாகப் பொதுமைநெறி இந்த நாடே
இயம்பிடுநாள் வந்ததடா திண்ணம் திண்ணம்!

கங்குலினி மறைந்தோடிப் போகும் போகும்;
கடுகியிங்கே எல்லோரும் சேர்ந்தே வாரும்;
எங்குமொரு புதுவாழ்வில் எல்லாம் அன்பே
இயற்றிடுவோம் சமயநெறிப் பீடந் தன்னில்.

மாயாத சக்தியடா மனித சக்தி
வானின்பம் கூட்டுவிக்கும் அமுதாய் நன்றே
தேயாத பரமபதம் வேறெங் கில்லை
தெளிவுற்ருல் இங்குனக்குள் அறிவாய் இன்றே.

உயிர்ப் பொருள்

நீளக் கடக்கும் நெடுவிசும்பை—எங்கோ
நெஞ்சம் ஒடுங்கும் தொடுவிசும்பை
'நாளுங் கவிக்கென்ன நல்குவைநீ?'—என்றேன்.
'நளினவான் வில்லுரு!' என்றதுவே!

கண்கள் அரும்பிடும் காலையிலே—மெல்லக்
கனவாய் மிதந்திடும் வேளையினைப்
'பண்கொள் கவிக்குன் பரிசிலென்ன?'—என்றேன்.
'பனியிடை மின்னெளி' என்றதுவே!

சிலுசிலுக் குந்தென்றற் சிற்ருடையை—வெயிற்
சித்திரப் பாங்கொளிர் முத்தோடையைக்
'கலைசெய் கவிதைக்குன் காணிக்கை என்?'-என்றேன்;
'கானவின் மெல்லிசை' என்றதுவே!

பொன்னிற வண்ணத்துப் பூச்சியினைப்—பல
பூவின் நிறங்கொளும் ஆய்ச்சியினை
'முன்னங் கவிக்குன் முறைமை என்ன?'—என்றேன்;
'மோகச் சிறைத் துடிப்பு என்றதுவே!

ஊழிக்கும் வற்ரு உயிர்க்கடலை—என்றும்
உள்ளதாம் என்னும் பெயர்க்கடலை
'வாழி கவிக்குன் வரிசை என்ன?'—என்றேன்.
'வாழ்வெனைப் போல்நித்யம்!' என்றதுவே!

இத்தனைக் கும்பின்னேர் ஏழையினை—நாட்டின்
இளங்குருத் தென்னுமோர் காளையினை
'மெத்தநீ யுந்தான் கொடுப்பதென்ன?'—என்றேன்;
மின்வியர் முத்தொன் றுதிர்த்தனனே!

'பண்ணும் பனுவலும் பாத்தியிட்டே—அதில்
பாகெனச் சொற்களும் நேர்த்தியிட்டே
எண்ணிக் கவிதை எதுசெயினும்—அதில்
ஏத்துக மெய்யுழைப்பு! என்றனனே!



தமிழழகன்

கலம்பகக் காட்சிகள்

தமிழில் உள்ள சிறு நூல்களாகிய பிரபந்தங்களை இடைக்காலப் புலவர்கள் ஏராளமாகப் பாடியிருக்கிறார்கள். தங்களைப் பாதுகாத்த உபகாரிகளைப் பற்றியும், தலங்களிலுள்ள மூர்த்திகளைப் பற்றியும் இயற்றியிருக்கிறார்கள். அத்தகைய பிரபந்தங்களில் கலம்பகம் என்பது ஒன்று. அதில் பதினெட்டு உறுப்புக்கள் இருக்கும். கலம் என்பது பன்னிரண்டையும், பகம் என்பது ஆறையும் குறிக்கும் குறிப்புச் சொற்கள். பன்னிரண்டும் ஆறும் சேர்ந்து பதினெட்டு ஆதலின், கலம்பகம் என்பது பதினெட்டு உறுப்புக்களைக் கொண்ட பிரபந்தத்தைக் குறிக்கிறது என்பர் சிலர். பலவகை மலர்களைக் கொண்டு அமைந்த மாலையைக் கலம்பக மாலை என்று சொல்வது ஒரு வழக்கு. பல வகைத் துறைகளும் பல வகைப் பாக்களும் பாவினங்களும் அமைந்த பிரபந்தமாதலின் கலம்பகம் என்ற பெயர் அமைந்தது என்பர் சிலர். இதுவே சிறப்பாகத் தோன்றுகிறது. கிட்டத்தட்ட நூறு பாடல்களால் அமையும் இப் பிரபந்தத்திலுள்ள ஒவ்வொரு பாட்டும் எவ்வாறாவது பாட்டுடைத் தலைவனுடைய புகழை இணைத்துக் கூறும். அதுவன்றி ஒரு பாட்டுக்கும் மற்றொரு பாட்டுக்கும் பொருள் தொடர்பே இராது. ஆனாலும் ஒரு பாட்டின் அந்தம் அடுத்த பாட்டின் ஆதியாக இருக்கும். இதைச் செய்யுளந்தாதி என்பர். மாலை கோத்தாற்போலச் சொல்லால் அமைந்த இந்த அந்தாதிதான் நூல் முழுவதையும் இணைத்து நிற்கும்.

குமரகுருபர முனிவர் இயற்றிய **மதுரைக் கலம்பகம்** மிகச் சிறப்புடையது. அதில் உள்ள சில காட்சிகள் இங்கே ஓவிய உருவம் பெறுகின்றன.

1. **அம்மானை:** பெண்கள் சேர்ந்து அம்மானைக் காய்களை வீசி எறிந்து உட்கார்ந்தபடியே பாடி ஆடுவது அம்மானை விளையாட்டு. பெரும்பாலும் மூன்று பேர் ஆடுவது வழக்கம். இரண்டு பேரும் ஆடுவது உண்டு. ஒருத்தி ஒரு கருத்தைச் சொல்லிப் பாட, மற்றொருத்தி அது பற்றி ஒரு கேள்வி கேட்க, மூன்றாமவள் அதற்கு ஏற்ற விடையைப் பாடுவாள்.

2. **மதங்கியார்:** கைகளில் வாளை ஏந்திச் சுழன்று ஆடும் பெண் மதங்கி. அவள் அழகிலும் ஆடலிலும் மயங்கிய ஆடவன் சொல்வதாக இந்தப் பாட்டு இருக்கும். ''கண்களாகிய இரண்டு வேல்கள் சுழலக் கையினால் இரண்டு வாள்களை விசிறி ஆடும் பெண்ணே, இந்த ஆட்டத்தில் உன் மெல்லிய இடை இற்றுவிடும், இற்றுவிடும் என்று சிலம்புகள் அலறுவதைக் கேட்கவில்லையா? அது கேட்டு என் நெஞ்சு பதறுகிறதே!'' என்கிறான்.

3. **தழை:** தினைப்புனத்தில் காவல் காக்கும் அழகியை நாடி வருகிறான் ஓர் ஆணழகன். தழை என்னும் ஒருவகை ஆடையைக் கையுறையாகக் கொண்டு வருகிறான். தழைகளும் மலர்களும் கொண்டு புனைந்து அமைத்த ஆடை அது. அதை என் செய்வதென்று தெரியாமல் அழகி மயங்கி நிற்கும்போது அவள் தோழி, ''இந்த வில்லார் புயத்து அண்ணல் தந்த மென்தழை நின்மேனியில் அணியத்தக்கதே'' என்று சொல்கிறாள்.

4. **ஊசல்:** அழகிய பெண்கள் ஊசலாடுகிறார்கள். மார்பசைய, கண்ணசைய, அணிகலனும் சிலம்பும் ஆர்ப்ப, மும்மைத் தமிழ் மதுரை முக்கணப்பன் சீர்பாடிப் பொன்னூசல் ஆடுகிறார்கள்.

5. **களி:** கள்ளைக் குடித்து ஆடுகிறவனுக்குக் களியன் என்று பெயர். கள்வெறியைக் களி என்பர். அந்த வெறியினால் கள்ளின் மகிமையைப் பாடுகிறான் ஒருவன்.

6. **கிள்ளைவிடு தூது:** மதுரேசரிடம் காதல் கொண்ட நங்கை அவரிடம் தான் வளர்க்கும் கிளியைத் தூது போய் வரச் சொல்கிறாள். ''புழுகுநெய்ச் சொக்கர், அபிஷேகச் சொக்கர், கர்ப்பூரச் சொக்கர், அழகிய சொக்கர், கடம்பவனச் சொக்கர், சங்கத்தமிழ்ச் சொக்கர் என்று அடிக்கடி நீ சொல்லிப் பழகினாயே; அந்தப் பெயர்களுக்கெல்லாம் பொருளாகிய ஒருவரைப் போய்ப் பார்த்துவிட்டு வா'' என்று தூது அனுப்புகிறாள்.

7. **சித்து:** சித்தர் ஒருவர் பேசுகிறார். அவர் பேசுகிறதை மேலாகப் பார்த்தால் அற்புத சித்தியைப் போல இருக்கிறது. ஆழ்ந்து பார்த்தால் இயல்பாக உள்ளதையே அப்படிச் சமற்காரமாகச் சொல்கிறாரென்று தோன்றும். ''மதுரைப் பெருமான் கையில் செங்கல் பசும் பொன்னதாக்கினேம்'' என்கிறார். செங்கல்லைப் பொன்னாக்கி விட்டாரென்று தோன்றும். ஆனால் இறைவன் கையிலுள்ள செவ்விய மலையாகிய மேரு பொன்மலைதானே? கல்-மலை.

8. **மறம்:** மறக் குடியிலே பிறந்த பெண்ணை விரும்பித் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு மன்னன் ஓலையெழுதித் தூதுவன் மூலம் அனுப்புகிறான். வேடன் அந்த ஓலையை வாங்கிக் கொள்கிறான். தூதன் வாயிலாக விஷயத்தை அறிந்த அவனுக்குச் சினம் மூள்கிறது. ''என்ன வார்த்தை சொன்னாய்? திருமுகத்தில் எழுத்து இதுவானால், அவன் தலையைக் கொண்டுவா; அவன் தலையெழுத்தையும் பார்த்துவிடுகிறேன்'' என்று சீறி விழுகிறான்.

9. **குறம்:** சொக்கநாதரிடம் காதல்கொண்ட ஒருத்தியை அணுகிக் குறமகள் குறிசொல்லுகிறாள். முறத்தில் நெல்லைப் பரப்பிப் பார்த்து, ''நீ நினைந்த பொருள் உமாதேவியின் மார்புக்குறியும் வளைக்குறியும் கொண்ட வடிவாகும்'' என்கிறாள்.

10. **தோழி முறையிடுதல்:** சுந்தரேசப் பெருமானிடம் காதல் பூண்ட மங்கை அவருடைய அருள் பெறாமல் வாடுகின்றாள். அவள் நிலைக்கு இரங்கி அருள் வழங்க வேண்டுமென்று தோழி இறைவனிடம் முறையிடுகிறாள். ''அனங்கன் அம்பை எய்வதையும், அதனால் அந்தப் பெண் படும் இளைப்பையும் மதியுள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டாமோ?'' என்று கேட்கிறாள். ஆம், சிவபிரான் அறிவும் உள்ளவர்; தலைமேல் மதியும் உள்ளவர் அல்லவா?

கலம்பகக்
காட்சிகள்
அம்மானை
ஆடும்
அணங்குகள்
வாள் வீசி ஆடும்
மதங்கி

1. தினைப்புனத்தில் உள்ள அழகிக்குக் கையுறையாகத் தழையைக் கொடுக்கும் அழகன்
2. சோலையில் ஊசலாடும் மகளிர்
3. மதுவெறியில் மயங்கி மனம் வந்தது பேசும் மனிதன்

1. மதுரேசரிடம் கிளியைத் தூது விடும் மங்கை
2. சித்திகளில் வல்ல சித்தர்
வேடன் மகளை
வேட்டு வந்த

1. மதுரை நாயகனிடம் காதல் கொண்ட மங்கையும் முறத்தில் நெல்லிட்டுக் குறி பார்த்துச் சொல்லும் குறமகளும்.

2. மதுரேசரிடம் காதல் கொண்ட தலைவியின்

பயிரெலாம் செழித்தோங்கி
பாரெலாம் நலம் பெறுக!

எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

FACT ... foremost name in fertilisers!

பெர்டிலைசர்ஸ் அண்ட் கெமிகல்ஸ்
திருவிதாங்கூர் லிமிடெட்.
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: ஏலூர், உத்யோகமண்டல் P.O. கேரள ராஜ்யம்.

Criterion-FT-993

அமாவாசைக்கு முந்தின நாள். நட்ட நிசி. தொட்டால் ஒட்டிக் கொள்ளுமோ என எண்ணத் தகும் மையிருட்டு. அந்தக் கருங்கும் மிருட்டை மேலும் மிகையாக்கிக் கொண்டு நில்வியது மயான அமைதி. அத்தகைய இருட்டிலும் அமைதியிலுமாக ஆழ்ந்து தோய்ந்து நின்றிருந்தது ஒரு பாழடைந்த மண்டபம்.

அது ஒரு 'ட்ரங்க்' சாலையில் அமைந்த பழங்காலத்துக் கல் மண்டபம். அந்த மண்டபத்துக்கு முன்னும் பின்னும் முட்செடி கொடிகளும், கள்ளி, கருவேல மரங்களும் காடாக மண்டி வளர்ந்திருந்தன. கிடந்தது பெரிய பாறை ஒன்று. அந்தப் பாறையை ஒட்டினாற்போல் ஒரு கொடிப் பாதை. ட்ரங்க் சாலையிலிருந்து இந்த மண்டபத்துக்கு வர அது தான் ஒரே வழி.

வடக்குத் தெற்காக நீண்டு சென்ற அந்தக் கப்பிச் சாலையின் இரு புறமும் ஓங்கிப் பரந்து வளர்ந்து நின்ற ஆல மரங்களும் புளிய மரங்களும் வேப்ப மரங்களும் நெருக்கமாகக் கிளைகளை வீசிச் சாலை நெடுகப் பந்தல் போட்டாற்போல் பின்னலிட்டுக் கவிந்திருந்தன. சாலைக்கு அப்பால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஒரே பொட்டல் வெளி. தாழ்வான அந்தப் பிரதேசம் மழைக்காலத்தில் நீர் தேங்கிப் பெரிய ஏரியாகக் காட்சியளிக்கலாம். இதற்கு நேர்மாறாகச் சாலையின் இப்பால் - மண்டபத்துப் பக்கம் - அடர்ந்த காடு. அதன் பகைப் புலமாக வானுக்கும் பூமிக்குமாய் உயர்ந்தும் தாழ்ந்தும் சென்ற மலைத் தொடர்; அந்த மலைத்தொடரின் அடிவாரத்தை யொட்டி ரெயில் பாதை.

அந்தப் பாழடைந்த மண்டபத்திலிருந்து சுமார் ஏழெட்டு மைல் சுற்று வட்டாரத்துக்குச் சிற்றூரோ பேரூரோ எதுவும் இல்லை. அதனால் பகல் வேளையிலேயே அப் பிரதேசம் ஜன நடமாட்டமின்றிப் பயங்கர அமைதியில் ஆழ்ந்து கிடக்கும். அப்படிப்பட்ட இடம் இந்தக் கிருஷ்ண பட்சத்து இரவில் எப்படி இருக்கும்?

காரிருளில் புதைந்து வெறிச்சோடிக் கிடந்த கப்பிச் சாலை திடீரென்று ஒளிமயமாகியது. எங்கோ தொலை தூரத்திலுள்ள ஒரு திருப்பு முனையைக் கடந்து லாரியோ காரோ வருவதாயிருக்கலாம்.

என்ன ஆச்சரியம்! பேய்களும் நடமாட அஞ்சக்கூடிய அந்தப் பயங்கர நடுச் சாமத்தில், காடாந்தகாரமான இருளும் சுடுகாட்டு அமைதியும் சூழ்ந்து கிடக்கும் இந்தச் சாலையில், தன்னந்தனியாக ஒரு மனித உருவம் அதோ வந்துகொண்டிருக்கிறதே!

பகலில் ஐந்தாறு பேராகச் சேர்ந்து நடந்து போகவே அச்சம் தரும் இடம் அது. மாட்டு வண்டிகூட அவ்வழியே தனியாகச் செல்வதில்லை. இரண்டுக்கு மேற்பட்ட வண்டிகள் சேர்ந்தே வரும், போகும். காரோ லாரியோ அந்தப் பகுதியைக் கடக்கும்போது ஐம்பது, அறுபது மைல் வேகத்தில் பறந்து செல்லும். அதனால் அங்கு அடிக்கடி பல கோரமான விபத்துக்கள் நிகழ்வது உண்டு. பகலிலேயே இப்படி என்றால்?

பச்சைப் பசுந்தழைகளைக் கொண்டு பந்தலிட்டாற்போல் விளங்கிய அந்தச் சாலையைப் பிரம்மாண்டமான மெர்க்குரிக் குழாய் விளக்குப் போல் பிரகாசிக்கச் செய்தவாறு வந்தது ஒரு லாரிதான். கண்ணைப் பறிக்கும் அதன் விளக்கொளியில் எதிரே வந்துகொண்டிருந்த உருவம் இப்போது நன்கு துலக்கமாகியது.

அது பேய் அல்ல; மனிதன்தான். வாலிப வயசு. நல்ல உயரம். அதற்கேற்ற பருமன். பேன்டும் ஸ்லாக்கும் அணிந்திருந்தான். இடக் கையை மடித்து அதில் ஏதோ ஒன்றைத் தொங்க விட்டிருந்தான்.

லாரி நெருங்கி வந்துகொண்டிருந்தது. உல்லாசமாக நடந்து வந்த வாலிபன் சாவதானமாக நிமிர்ந்து பார்த்தான்.

''ஓ! லாரிதானா? போய்த் தொலையட்டும்.''

கரகரத்த குரலில் இவ்வாறு முணுமுணுத்த அவன் சடாரெனப் பக்கவாட்டில் இறங்கி ஒரு புளிய மரத்தின் பின்னால் மறைந்து நின்றுகொண்டான்.

அசுர வேகத்தில் வந்த லாரி அவ்விடத்தைக் கடந்து, கண் மூடிக் கண் திறப்பதற்குள் காத தூரம் ஓடி மறைந்தது. சிறிது நேரமே ஒளிப்புனலில் தோய்ந்த அந்தச் சாலை பழையபடி இருட்டுக் குகையாகியது.

புளியமரத்தின் பின்னால் ஒளிந்து நின்ற வாலிபன் மெல்ல வெளியே வந்தான். வலக் கையில் கட்டியிருந்த கடிகாரத்தில் மணி பார்த்தான். ரேடியம் டயல் பொருத்திய அந்தக் கடிகாரத்தில் மணி பன்னிரண்டரையாகிப் பத்து நிமிஷம் என்பது தெளிவாகத் தெரிந்தது.

'அந்தக் கார் வர இன்னும் முக்கால் மணி நேரம் இருக்கிறதே! அது வரையில் எங்கே இருப்பது?'

நெற்றியை வருடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவாறு மெல்ல நடந்தான்.

''கொஞ்சம் அவசரப்பட்டுப் புறப்பட்டிருக்கிறேன்; வேகமாகவும் நடந்து வந்திருக்கிறேன். அதனால்தான் முக்கால் மணி நேரம் வித்தியாசமாகி யிருக்கிறது. சரி; பரவாயில்லை'' என்று கூறியபடி அவன் சாலையை விட்டிறங்கிச் சிறிதும் தட்டுத்தடுமாற்றமின்றிக் கொடிப் பாதையைப் பிடித்து மண்டபத்தை நோக்கி நடந்தான்.

பாறையின் ஓரமாக வந்து மண்டபப் படிமீது ஏறி நின்ற வாலிபன் மெல்லக் கனைத்துவிட்டுத் தூண் ஒன்றைப் பிடித்தவாறு உள்ளே சென்றான். அப்படிச் சென்றபோது தூணுக்கு அடியில் ஏதோ மூட்டை போல் கிடந்து அவனுடைய காலில் தட்டுப்பட்டது. ஆயினும் அவன் அச்சமோ அதிர்ச்சியோ அடையவில்லை. அம் மூட்டையைத் தாண்டிக்கொண்டு போய், பின்னால் திரும்பிப் பார்த்தான். பிறகு அலட்சியமாகத் தலையசைத்தபடி மற்றொரு தூணைப் பிடித்துக் கீழே உட்கார்ந்தான். இடக் கையில் தொங்கிக்கொண்டிருந்த பொதியைத் தன் அருகில் அணைத்தாற்போல் வைத்துக்கொண்டான். சற்று நேரம் கண்களை இறுக மூடிக்கொண்டிருந்துவிட்டுப் பின் திறந்து சுற்றிலும் பார்வையை ஓட்டினான். இப்போது அவனுக்கு அங்கிருந்த அனைத்துமே நன்கு புலனாயின போலும்.

கால் சராய் ஜேபியிலிருந்து சிகரெட் பெட்டியை எடுத்து ஒன்றை உருவி உதடுகளில் பொருத்திக்கொண்டு தீக்குச்சியைக் கிழிக்கப் போனவன் எதையோ நினைத்து எச்சரிக்கையானவன்போல் தூண் பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு குனிந்து சிகரெட்டைப் பற்ற வைத்தான். அந்தச் சிறு ஒளியில் அவனுடைய தலையின் பின்புறம் மட்டுமே தெரிந்தது. நெருப்புக் கனியும் சிகரெட் முனையை உள்ளங்கையால் மூடி மறைத்தவாறு புகைக்கலானான். அவன் பார்வை மீண்டும் கைக்கடிகாரத்தில் சென்றது. மணி பன்னிரண்டே முக்கால்.

இவ்வளவு நேரம் அந்தத் தூண் அடியில் கிடந்த துணிமூட்டை இப்போது மெல்ல நெளிந்தது. வாலிபன் எவ்விதப் பரபரப்புமின்றி அதைக் கூர்ந்து கவனித்தான். நெளிந்து நீண்ட துணிமூட்டை நிமிர்ந்து எழுந்தது.

''தீப்பெட்டியை இப்படிக் கொஞ்சம் போட முடியுமா?'' தூணில் சாய்ந்த 'துணி மூட்டை' தான் இவ்வாறு கேட்டது.

வாலிபன் சிரித்துக்கொண்டான். தன் மடியில் கிடந்த தீப்பெட்டியை எடுத்துத் தூக்கிப் போட்டான். அந்த இருட்டிலும் அதைக் குறி தவறாமல் 'கப்'பென்று பிடித்துக் கொண்டது 'துணிமூட்டை'. ஒரு தீக்குச்சி கிழிக்கப்பட்டுச் சில கணம் ஒளி காட்டி அணைந்தது. சற்றைக்கெல்லாம் பீடிப் புகை நாற்றமும், உயர்ரகச் சிகரெட்டின் நறுமணமும் கலந்து, மண்டபம் முழுக்கச் சூழ்ந்தன.

வாலிபன் மிக மெல்லிய ஓசையில் ஓர் இந்திப் பாட்டை விசிலிலேயே இசைத்தான்.

வயசு நாற்பதுக்கு மேல் இருக்கும். க்ஷவரம் செய்து பல நாளான கரடு முரடான முகம். பரட்டைத் தலை. குரூரமான கண்கள். கட்டம் போட்ட அரைக்கைச்சட்டை. வரிந்து கட்டிய வேட்டி. குள்ளமும் திண்மையுமான உடற்கட்டு.

''அட, நீயா! நீ எப்படியப்பா இங்கே வந்தாய்?'' - வியப்பேறிய குரலில் கேட்டான் வாலிபன்.

அந்த முரட்டு மனிதன் இதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் அங்கும் இங்குமாகப் பரபரப்புடன் எட்டிப் பார்த்தான்.

மெல்ல நகைத்த வாலிபன் தன் பக்கத்தில் கறுப்பாக இருந்ததைத் தூக்கிக் காட்டினான். அது ட்ரான்ஸிஸ்டர் ரேடியோதான். சந்தேகமே இல்லை. ஆனால் அதை எடுத்துக் காட்டிய போது அதனுடன் இன்னும் சில பொருள்கள் வெளிப்பட்டன. அவை புத்தகங்களா? அல்லது ரூபாய் நோட்டுக் கட்டுக்களா? சரியாகத் தெரியவில்லை.

''இன்னமும் உனக்கு இந்த ட்ரான்ஸிஸ்டர் பைத்தியம் விடவில்லையா, தம்பீ?'' என்று கேட்டுக்கொண்டே நிம்மதியாகப் பெருமூச்சு விட்டுத்

''ஓ! நீதானா தம்பீ?'' — தலை முதல் கால்வரை போர்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த உருவம் இவ்வாறு கேட்டது.

'பட்' என்ற சத்தம். அதைத் தொடர்ந்து யாரோ புரியாத பாஷையில் இரகசியமாகக் கசமசவெனப் பேசும் ஒலி.

இப்போது அந்த மண்டபத்தில் மிக மிகச் சன்னமான ஒளி பரவியது. அந்த ஒளி எங்கிருந்து வருகிறது?

துணிமூட்டை போல் படுத்துக் கிடந்து நிமிர்ந்து உட்கார்ந்திருந்த உருவம் திடுமென எழுந்து நின்றது. என்ன பயங்கரமான தோற்றம்!

'பட்.' மண்டபத்தில் பரவியிருந்த மங்கலான ஒளி மறைந்து பழையபடி இருள் மண்டியது. புரியாத பாஷையில் கிசுகிசுத்த பேச்சு ஒலியும் நின்றது.

''பயந்துவிட்டாயா? உட்கார்.''

''எங்கேயிருந்து அந்த வெளிச்சம் வந்தது? ...... பேச்சுக் குரலும் கேட்டதே!''

''அது ட்ரான்ஸிஸ்டர் ரேடியோ! உன்னை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக ஸ்விட்சைத் தட்டி வெளிச்சம் போட்டேன். இந்த அர்த்த ராத்திரியில்கூடச் சீனாக்காரன் எதையோ உளறிக் கொண் டிருக்கிறான்.'' - தூணில் சாய்ந்தான் பரட்டைத் தலையன்.

''அது எப்படி விடும்? என் தொழிலுக்கு முதலில் வழி காட்டிய தெய்வம் ஆயிற்றே!''

ஆடு தும்முவது போன்ற சத்தம்; அந்த முரட்டுப் பேர்வழிதான் அப்படிச் சிரித்தான். ''அது சரி; நீ எப்போது விடுதலையாகி வந்தாய்? இப்போது என்ன தொழில் நடத்துகிறாய்?''

''வெளியே வந்து ஒரு மாதந்தான் ஆகிறது. புதிய தொழில் ஒன்றை ஆரம்பித்திருக்கிறேன்.''

''வருமானம் எப்படி?''

''ஆயிரக் கணக்கில்!''

''ஆயிரக் கணக்கிலா?'' என்று வியப்பு மிகுதியால் சற்று உரக்கவே கேட்டான் முரட்டுக் குள்ளன்.

''ஆமாம்; இன்னும் கொஞ்ச நேரத்தில் நீயே அதைப் பார்க்கப் போகிருய்!''

''பழைய தொழிலை விட்டுவிட்டாயா?''

''அடியோடு தலை முழுகிவிட்டேன். அதிலே வரும்படி குறைவு. ஒரு நாளைக்கு ஐந்தோ பத்தோ கிடைக்கும். பஸ் செலவுக்கே பாதி கரைந்து விடும். அதிர்ஷ்டம் இருந்தால் நூரே ஐந்நூரே பெயர்க்கலாம். அப்படிப் பெயர்த்தும் இருக்கிறேன். ஆனுல் அப்போதெல்லாம் அகப்படாதவன், ஒரு ரூபாய் ஏழு பைசா கிடைத்த அன்று மாட்டிக்கொண்டேன். அதுதான் ஆறு மாசம் வாங்கிக்கொடுத்து விட்டது.''

''ஐயோ, பாவம்!'' என்று அநுதாபப்பட்டான் குள்ளன்; ''இந்த ட்ரான்சிஸ்டர் தொழிலைப்பற்றி நீ ஏற்கனவே எனக்குச் சொல்லியிருக்கிருய், 'உள்ளே' இருந்தபோது. ரொம்பச் சுவாரசியமான தொழில்தான். இப்போது மறுபடியும் கொஞ்சம் சொல்லேன், கேட்போம்.''

''உனக்குப் பொழுது போகவில்லையா? சரி; சொல்கிறேன், கேள். மாலை வேளைகளில் டீக்காக டிரஸ் செய்து கொள்வேன். கையில் ஒரு ட்ரான்சிஸ்டர் ரேடியோவுடன் கூட்டாளி ஒருவனைக் கூட அழைத்துக்கொண்டு ஒவ்வொரு ரூட் பஸ்ஸாக ஏறி இறங்குவேன். ஜனங்கள்தாம் இப்போது சினிமாப் பாட்டு என்ருல் இடுப்பிலே இருக்கிற ஆடை அவிழ்வதும் தெரியாமல் கேட்க ஆரம்பித்து விடுகிருர்களே! பஸ் பிரயாணிகளுடைய கவனமெல்லாம் என் ட்ரான்சிஸ்டர் பக்கம் திரும்பும். அப்படித் திரும்பும்படியாக ரேடியோவில் பாடும் பாட்டை நானும் மெல்ல முணுமுணுப்பேன். இந்தச் சமயம் பார்த்து என் கூட்டாளி தன் காரியத்தை முடித்துக் கொள்வான். பழைய முறைப்படி ஆட்களை இடிக்கவோ, ஜேபிகளைப் பிளேடால் அறுக்கவோ தேவை இல்லை. ஒரு வேடிக்கைச் சம்பவத்தைக் கேள்; ஒரு நாள் நான் பஸ்ஸில் ஏறித் தொழிலை ஆரம்பித்தபோது, என் ட்ரான்சிஸ்டர் ரேடியோ 'ஜிஞ்சினுக்கடி ஜிஞ்சினு' பாட்டைப் பாடத் தொடங்கியது. பஸ் பிரயாணிகளுக்கு ஒரே உற்சாகம், சிரிப்பு. எனக்குங்கூடத்தான். ஏனென்ருல் ஓர் ஆசாமியின் பர்ஸை வெகு சுலபமாகக் கிளப்பிக்கொண்டு கீழே இறங்கினேன். ஆவலாகப் பர்ஸைத் திறந்து பார்த்தேன். அதில் என்ன இருந்தது தெரியுமா? மாமியார் செத்துப் போனதைத் தெரிவித்து வந்த தந்திக் கடுதாசி.''

இருவருக்கும் சிரிப்பு அடக்க முடியாமல் வெடித்துக்கொண்டு வந்தது.

''உன் பேர் என்ன தம்பி?'' என்று இள நகையுடன் கேட்டான் குள்ளன்; ''உள்ளே இருந்தபோது உன் நம்பரைத்தான் தெரிந்துகொண்டேன். அதுதானே நமக்கெல்லாம் அங்கே பெயர்?''

''ஆமாம்; முதலில் உன் பெயரைச் சொல்.''

''இருளாண்டி.''

''இப்போதைக்குப் பொருத்தமான பெயர்'' என்று சொல்லி நகைத்துக் கொண்டான் வாலிபன். ''எனக்கு எத்தனையோ பெயர்கள். எதைச் சொல்வது?என் அம்மா வைத்த பெயர் அமாவாசை. இப்போது ட்ரான்சிஸ்டர் சந்திரகுமார் என்பதுதான் ரொம்பப் பிரபலம்.''

இதைக் கேட்டுக் குபுக்கென்று சிரித்தான் இருளாண்டி.

''அது சரி; இங்கே நான் வந்ததும் இத்தனை இருட்டிலும் எப்படி அவ்வளவு சரியாக என்னை அடையாளம் தெரிந்து கொண்டாய்?'' என்று வினவினுன் அமாவாசை என்ற சந்திரகுமார்.

''இதுவா பிரமாதம்? நீ ஜெயிலில் இருந்தபோது அடிக்கடி 'ஆஜாரே' என்று இந்தி சினிமாப் பாட்டு ஒன்றை விசிலடித்துப் பாடிக்கொண்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன். அதே பாட்டை அதே மாதிரி இங்கே விசிலடித்ததும் தெரிந்துகொண்டேன், ஆசாமி நீதான் என்று.''

''ஓ! பெரிய ஆள்தான்!'' என்று பாராட்டினுன் வாலிபன்.

இருவரும் நெருங்கி வந்து ஒருவரை ஒருவர் தட்டிக் கொடுத்துக் கொண்டனர்.

''அது சரி; ஜன்ம தண்டனை வாங்கியவனுயிற்றே நீ? எப்படி ஜெயிலிலிருந்து தப்பி வந்தாய்?'' என்று இரகசியக் குரலில் சற்றே வியப்புடன் கேட்டான் சந்திரகுமார்.

ஒரு நிமிஷம் மௌனம் சாதித்த இருளாண்டி பிறகு அலட்சியமாகச் சொன்னுன்: ''நான் எப்படித் தப்பி வந்தேன் என்பதைச் சொல்லப் போனுல் பெரிய கதையாகி விடும். ருசி இல்லாத விஷயம் அது. ஏன் வந்தேன் என்று கேள், சொல்கிறேன்.''

''அதைத்தான் சொல்லேன்!''

''சொல்ல வேண்டுமா? அல்லது காட்ட வேண்டுமா?'' என்று அடித்தொண்டையில் முரட்டுத்தனமாகக் கேட்டுக்கொண்டே தன் இடுப்பில் செருகி வைத்திருந்த ஏதோ ஒன்றை வெடுக்கென்று பிடுங்கிப் போட்டான் இருளாண்டி. அந்த மையிருட்டிலும் பளபளவென மின்னியது ஒரு கூரிய கத்தி!

வாலிபன் உள்ளூற விதிர்விதிர்த்திருக்க வேண்டும். ஏனென்ருல் அவன் சற்று நேரம் ஏதும் பேசாமல் மௌனமாயிருந்தான். பிறகு நட்பும் பரிவுமான குரலில், ''இந்தக் கத்திக்கு இன்னும் என்ன வேலை? இதைக் கொண்டுதான் முதலிலேயே உன் காரியத்தைத் தீர்த்துவிட்டு 'ஜன்மம்' பெற்று உள்ளே போனுயே!'' என்று மெல்ல விசாரித்தான்.

''அவனைத் தீர்த்தேன்; அவள் இன்னும் இருக்கிருளே! அவளைச் சும்மா விடலாமா?'' என்று பயங்கரமாகப் பற்களை நறநறவென அரைத்தான் இருளாண்டி.

''நியாயமான கேள்விதான். சரி; நீ உள்ளேயிருந்து எப்போது வெளியே வந்தாய்?''

''மூன்று நாட்கள் ஆகின்றன. இன்னும் மூன்று தினங்களுக்குள் மறுபடி 'உள்ளே' போய்விடுவேன்.''

''போவதற்கு முன் எனக்கு ஓர் உதவி செய்வாயா?''

''விஷயத்தைச் சொல், தம்பீ!''

''செய்வதாக முதலில் வாக்குக் கொடு.''

''என்னைத் திருடச் சொல்லாதே; பொய் சொல்லச் சொல்லாதே; ஏமாற்றச் சொல்லாதே; கொலை செய்யச் சொல்; செய்து முடிக்கிறேன்!''

''அதுதான் எனக்கு இப்போது தேவை'' என்று மகிழ்ச்சியுடன் நெம்பி நிமிர்ந்த வாலிபன், சிகரெட்டொன்றை எடுத்து இருளாண்டியின் வாயில் திணித்துவிட்டு நெருப்புக் குச்சியைத் தானே கொளுத்திப் பற்ற வைக்கப் பெட்டியைத் தேடினுன்.

இந்தச் சமயம், அந்த மண்டபத்துக்குச் சற்று அப்பால் ஏதோ பாட்டில்கள் ஒன்ருேடொன்று இடிபட்டுக் கலகலக்கும் ஒலி கேட்டது. இருளாண்டியும் சந்திரகுமாரும் சடாரெனத் துள்ளி எழுந்து தூணின் பின்னுல் ஒட்டி ஒடுங்கி இருளோடு இருளாக மறைந்து நின்றுகொண்டனர்.

சீசாக்களின் 'கலகல' ஒலி நெருங்கி வந்தது. மறைந்து நின்ற இருவரும் மூச்சுக்கூட விடாமல் அடக்கிக் கொண்டு மெல்ல எட்டிப் பார்த்தனர்.

இரண்டு பேர் சேர்ந்து ஒரு பெரிய கள்ளிப்பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து மண்டபத்தின் படி மேல் வைத்தனர். பிறகு சற்றே ஆசுவாசப் படுத்திக்கொண்ட அவ்விருவரில் ஒருவர் அந்தப் பெட்டியை நகர்த்தித் தள்ளிக்கொண்டு போய் மண்டபத்தின் கடைக்கோடி மூலையில் சார்த்தி வைத்துவிட்டுத் திரும்பி வந்தார். மற்ருெரு நபர் முகப்புப் படிமீது நின்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண் டிருந்தார். அந்த நபர் ஆணு, பெண்ணு? இருட்டில் ஏதும் தெரியவில்லை. இடுப்பில் குழந்தை போல் ஒன்றைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்ததிலிருந்து பெண் என்றே நினைக்கத் தோன்றியது.

''ஏன் அங்கேயே நிற்கிருய்? இப்படி வந்து உட்கார்!''-இது ஆண்குரல்.

''எனக்குப் பயமாயிருக்கிறது. இந்தப் படிமீதே உட்காரலாம், வாருங்கள்.''-இது பெண்ணின் குரல்.

இருவரும் படிமேல் நெருங்கி உட்கார்ந்தனர்.

''குழந்தையை எங்கே படுக்க வைக்கலாம்?''

''இப்படித் தரையில் கிடத்திப் போடு!''

மடியில் இருந்த குழந்தையை இரண்டாவது படியில் கிடத்தினுள் அவள். பாவம்! அந்தக் குழந்தை நன்ருகத் தூங்குகிறது போலும்! அழவில்லை; அசையவில்லை.

''இப்போது மணி என்ன?''-அவள் கேட்டாள்.

''ஒன்றேகால்.''

''அவர்கள் எப்போது வருவார்கள்?''

"சரியாக இரண்டு மணிக்கு வரச் சொல்லியிருக்கிறேன்."

"இன்னும் முக்கால் மணி நேரம் காத்துக்கொண்டிருக்க வேண்டுமா?"

"முக்கால் மணிநேரத்தை மூன்று நிமிஷமாகப் பறக்கச் செய்ய உனக்கா வழி தெரியாது?"

"ஓ! போதை இன்னும் தெளியவில்லைபோல் இருக்கிறது!"

கிண்கிணிச் சிரிப்புடன் கடகடச் சிரிப்புச் சங்கமம்.

'பட்.' மண்டபத்தில் இலேசான ஒளி பரவியது. அதைத் தொடர்ந்து யாரோ புரியாத பாஷையில் 'கசமச' வெனப் பேசும் குரல்.

அரண்டு மிரண்டுபோன பெண் திடுமென்று எழுந்து நின்றுகொண்டாள். ஆனால் அவளருகில் அமர்ந்திருந்த ஆடவனோ கொஞ்சமும் பீதியுறாமல் சாவதானமாகச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

அவனுக்கு வயசு முப்பத்தைந்து இருக்கும். ஒல்லியான உடல். சிவந்த மேனி. மூக்குக் கண்ணாடியணிந்த நீண்ட முகம். சில்க் ஜிப்பா. பட்டுக் கரை வேட்டி. பெரிய இடத்து மனிதன் போன்ற தோற்றம்.

அந்தப் பெண்ணும் அப்படித்தான் விளங்கினாள். இளமையழகு கொழிக்கும் பருவமங்கை. நவநாகரிகத்தின் தளிர்க்கொழுந்து. கண்டோர் கண்களில் மதுவை ஊற்றி நிரப்பும் மோகன முக வடிவம்.

மண்டபத்தில் பரவிய ஒளி மறைந்து முன்போல் காரிருள் சூழ்ந்தது. பேச்சுக் குரலும் நின்றது. தூணின் பின்னால் மறைந்து நின்ற சந்திரகுமார் தன் ட்ரான்சிஸ்டர் ரேடியோ மூலம் அந்தப் புதியவர்களை ஆராய்ந்து இனம் கண்டுகொண்டுவிட்டான் போலும்! அவனது வாயை விட்டு எந்நேரமும் அகலாத அந்தப் பிரபலமான 'ஆஜாரே' பாடலை மிக மெல்ல விசிலடித்து இசைக்கலானான்.

"அதானே பார்த்தேன்! நீதானா?....வா துரை! வா!" என்றான் புதிய ஆள்.

ஒரு குலுக்குச் சிரிப்புடன் தூண் மறைவை விட்டு வெளியே வந்த சந்திரகுமார், "என்ன பிரதர் மோகன்! உனக்கும் இதுதான் பிசினஸ் ஆபீஸா?" என்று கேட்டுக்கொண்டே படியோரம் சென்று அமர்ந்தான்.

"ஆமாம்; இப்போது என் குட்ஸ் கோடவுனாக இதைத்தான் உபயோகப்படுத்தி வருகிறேன்."

"ஓகோ!" என்று நகைத்த சந்திரகுமார், அங்கு நின்ற பெண்ணை ஏறிட்டுப் பார்த்தான். "யார் இது? புதிதாக இருக்கிறதே!"

"என் புதிய பார்ட்னர். பெயர் ரூபவர்த்தினி."

"எப்போது பிடித்தாய்?"

"நீ, 'உள்ளே' போயிருந்தபோது."

"பிடித்ததுதான் பிடித்தாய்; பசுவும் கன்றுமாகப் பிடித்துவிட்டாயே!" என்றவாறு மோகனின் விலாவில் விளையாட்டாகக் குத்தினான் சந்திரகுமார்.

"என்ன பிரதர் சொல்கிறாய்?" என்று கேட்டான் மோகன்.

"இதோ, இந்தக் குழந்தை அவளுடையதுதானே?"

"இல்லை; என்னுடையது."

"அட! ஆறு மாதத்துக்குள் எப்படியப்பா ஒரு குழந்தைக்குத் தந்தையானாய்? ஆச்சரியந்தான்."

"அந்த ஆச்சரியத்தை இப்போது பார்!" என்று சொல்லிக்கொண்டே, படிமீது கிடத்தப்பட்டு உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை நோக்கி விட்டான் ஓர் உதை.

கடகடவென உருண்டு போய்க் கடைசிப் படியில் விழுந்தது குழந்தை. ஆனால் அது அப்போதும் விழிப்படையவில்லை. சத்தம் போடவில்லை. அசையக்கூடவில்லை. ஒருகால் அது இறந்துவிட்டதோ?

சடாரெனக் குனிந்து தாவி அந்தக் குழந்தையைத் தூக்கினான் சந்திரகுமார். அது குழந்தையா? அல்ல; அழகான, அற்புதமான, அசல் குழந்தை போன்ற செல்லுலாய்ட் பொம்மை.

"என்ன மோகன் இது?" என்று சற்றே வியப்புடன் விளித்தான் சந்திரகுமார்.

தலைகுனிந்து நின்ற ரூபவர்த்தினி ஒரு 'கிளிங்' சிரிப்புச் சிரித்தாள். மோகன் அலட்சியமாகச் சொன்னான்: "இந்தக் குழந்தைப் பொம்மைதான் இப்போது என் தொழிலுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது. வெற்றிகரமான பாதுகாப்பு."

"அப்படியா? எப்படி?"

ஒரு கணம் தயங்கிய மோகன், 'சொன்னால் பாதகம் இல்லை' எனத் தனக்குள் தீர்மானித்தவன் போல் தலையாட்டிவிட்டுக் கூறினான்: "சரக்குகளைக் கொள்முதல் செய்து காரில் கடத்திக் கொண்டு வரும்போது இவள் என் பக்கத்தில் உட்கார்ந்து இந்தக் குழந்தைப் பொம்மையை மடியிலும் மார்பிலும் தோளிலுமாகப் போட்டு அதனுடன் கொஞ்சிக் குலாவிப் பேசுவதும், சிரிப்பதும், விளையாட்டுக் காட்டுவதும், சமாதானப்படுத்துவதும், பால் ஊட்டுவதுமாக நடிப்பாள். ஊர் போய்ச் சேருகிற வரையில் அந்த நடிப்பு இடைவிடாமல் தொடர்ந்து நடைபெறும். இதனால் போலீஸாரின் பார்வை என் காரின் மேல் விழுவதில்லை. யாரோ பெரிய இடத்து இளந் தம்பதிகள் குழந்தை குட்டிகளோடு உல்லாசப் பயணம் போகிறார்களாக்கும் என்று அவர்கள் எண்ணி ஏமாந்து விடுகிறார்கள்."

"சபாஷ், மோகன்!" என்று அவன் முதுகில் தட்டினான் சந்திரகுமார்; "காரை எங்கே விட்டு வந்திருக்கிறாய்? நீ வருவதற்கு முன்னால் உன் காரின் வெளிச்சத்தை நான் பார்க்கவில்லையே!"

"தொலைதூரத்திலேயே விளக்கையும் எஞ்சினையும் நிறுத்திவிட்டேன். ஒரு பாதுகாப்பான மறைவிடத்தில் இருக்கிறது."

"இன்று கொள்முதல் செய்து கொண்டு வந்திருக்கும் சரக்கின் மதிப்பு எவ்வளவு?"

"அசல் மதிப்பு ஆயிரம் ரூபாய்தான்; ஆனால் இப்போது அது பத்தாயிரத்துக்கு விற்று முதலாகும்."

"இங்கிருந்தே சரக்குகள் விற்பனைக்கு விநியோகமாகிவிடுமா?"

"அப்படித்தான் ஏற்பாடு. இன்னும் கொஞ்ச நேரத்தில் என் ஆட்கள் வருவார்கள்."

"அவர்களும் காரில் வருவார்களா?"

"இல்லை; சைக்கிளில்."

"அகப்பட்டுக்கொள்ள நேருமே!"

"அதுதான் நடக்காது. ஒவ்வொருவர் சைக்கிளுக்குப் பின்னாலும் மூன்று நான்கு பித்தளைக் குடங்கள் இருக்கும். மேலே உள்ள குடத்தில் வைக்கோல் பிரிமனை மூடியிட்டுப் பால் நுரைத்துக்கொண்டிருக்கும். கீழேயுள்ள குடங்களில் சரக்குகள் போகும். எல்லாரும் கிராமத்துப் பால் வியாபாரிகள் போல் இருப்பார்கள்" என்று அமர்த்தலாகச் சொன்ன மோகன், "என் விஷயம் இருக்கட்டும் பிரதர், உன் சமாசாரத்தைச் சொல்! நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய்?" என்றான் வெகு அக்கறையாக.

"இதோ, இதற்காக!" என்று தன் பக்கத்தில் இருந்த கறுப்புத் துணிப் பொதியைத் தூக்கிக் காட்டினான் சந்திரகுமார்.

"என்ன அது?"

"நாற்பதாயிரத்துக்கு நோட்டுக் கட்டுகள். ஆனால் அவற்றிலே இருப்பது நானூறு ரூபாய்தான்."

இதைக் கேட்டுக் கொஞ்சமும் வியப்புறாத மோகன், "அப்படியானால் இன்று உனக்கு இருபதாயிர ரூபாய் வரவா? எந்த முட்டாள் ஏமாறப் போகிறான்?" என்று சர்வசாதாரணமாக விசாரித்தான்.

"ஒரு வட நாட்டுச் சேட். பெரிய இரும்பு வியாபாரி."

"பைத்தியக்காரர்கள்! இந்தக் காலத்திலும் ஒரு நோட்டு இரண்டு நோட்டுக்களாகும் - ஆக்கலாம்-என்று நம்புகிறார்களே! ஆச்சரியந்தான்!"

"ஆச்சரியம் இல்லை. இதைத்தான் பண ஆசை என்பது. உடம்பு நோவாமல் பணம் பண்ணிவிட வேண்டும் என்ற வெறி. இத்துடன் என்னைப் போன்றவர்களின் வாக்குச் சாதுரியமும் சேர்ந்து அவர்களை முட்டாள்களாக்கிவிடுகின்றன. நம்மைவிடப்

பெரிய ஆசாமிக ளெல்லாம் தேர்த லில் நின்று லட்சக் கணக்கில் வோட்டுகள் வாங்கி ஜயித்துவிடுகிறார்களே, எப்படி? எல்லாம் இதுமாதிரி பேச்சு வன்மையால்தான்!''

இவ்வளவு நேரம் சற்று ஒதுங்கியே நின்றுகொண் டிருந்த ரூபவர்த்தினி இப்போது ஒயிலாக நடந்து வந்து சந்திரகுமாரின் அருகில் அமர்ந்தாள்.

இதைக் கடைக்கண்ணால் பார்த்து மெல்லச் சிரித்துக்கொண்டே, மோகன், ''அது சரி; அந்தச் சேட் இங்கு வருவானா?'' என்று கேட்டான்.

''பின்னே, நான் ஏன் இங்கே வந்து காத்திருக்கிறேன்? சரியாக ஒன்றரை மணிக்குப் பணத்துடன் வருவதாகச் சொல்லியிருக்கிறான். வருகிற நேரந் தான்.''

''அரை மணி நேரத்தில் உன் காரியம் முடிந்து போகும் அல்லவா?''

''அவ்வளவு நேரமா? ஐந்தே நிமிஷம்.''

''என்ன பிரதர் சொல்கிறாய்?''

''ஆமாம், மோகன்! இன்று ரூபாய் நோட்டை இரட்டிப்பாக்கப் போவதில்லை; ஆளையே இரண்டாக்கி விடத் தீர்மானித்துவிட்டேன்.''

''அட, பாவி!'' என்று பதறி நடுங்கினான் மோகன். அவனைவிட அதிகமாகப் பயந்தவள் போன்ற பாவனையில் சந்திரகுமாரை அணைத்துக் கொண்டாள் ரூபவர்த்தினி.

''பயந்துவிட்டீர்களா?'' என்று அலட்சியமாகச் சிரித்த சந்திரகுமார், ''அந்தக் காரியத்தை நான் செய்யப் போவதில்லை. அதற்கென்று ஒரு சரியான ஆளைப் பிடித்து வைத்திருக்கிறேன். அவனை உனக்கும் தெரியும்'' என்று மோகனின் காதில் இரகசியமாகக் கிசுகிசுத்துவிட்டுச் சற்றே குரலை உயர்த்தி, ''இருளாண்டி அண்ணே! இன்னுமா அங்கே கால் கடுக்க நின்றுகொண் டிருக்கிறாய்? இப்படி வா!'' என்றான்.

தூணின் மறைவை விட்டு வெளியே வந்த இருளாண்டி அங்கிருந்தவர்களை வெறித்துப் பார்த்து மெல்லக் கனைத்தவாறு கீழே உட்கார்ந்தான்.

சிகரெட் பற்றவைக்கும் சாக்கில் தீக்குச்சியைக் கிழித்த மோகன் அந்த வெளிச்சத்தில் இருளாண்டியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். உடனே தீக்குச்சி அணைந்தது. ''ஓ! நீதானா?'' என்று உள்ளடங்கிய குரலில் முணுமுணுத்த அவன், ரூபவர்த்தினியின் முதுகை மெல்லச் சீண்டினான். அவள் உடல் ஏனோ நடுங்கியது. முன்றானையால் முக்காடிட்டு முகத்தை நன்றாக மறைத்துக்கொண்டாள்.

''என்ன தம்பீ, எனக்குத் தாகமாயிருக்கிறதே! கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?'' என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டான் இருளாண்டி.

''கொஞ்சம் என்ன? ஒரு பாட்டில் தண்ணீரே தருகிறேன்'' என்று எழுந்தான் மோகன்.

''நாலு பேர்களுமே தாக சாந்தி பண்ணலாம்!'' என்றான் சந்திரகுமார்.

கள்ளிப் பெட்டி திறக்கப்படும் சத்தம். பாட்டில்கள் ஒன்றோடொன்று இடிபடும் ஓசை. அடுத்த சில விநாடிகளில் அந்தப் பாழடைந்த மண்டபம் எங்கும் மதுவின் நெடிமணம் கமழ்ந்தது.

''என்னடா, அமாவாசை! பொழுது விடிய இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?'' என்று போதையேறிய வெறிக்குரலில் விளித்தான் இருளாண்டி.

''எதற்கு அண்ணே, கேட்கிறாய்?'' என்று சந்திரகுமாரும் வாய் குழறிக் கேட்டான்.

''நான் வந்த காரியத்தைச் சீக்கிரம் முடித்துவிட்டுப் போக வேண்டாமா?'' என்றவாறு தன் கையில் இருந்த கத்தியைத் தரையில் முரட்டுத்தனமாகத் தட்டித் தீட்டினான் இருளாண்டி. அதிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. ரூபவர்த்தினியின் உடல் முன்னிலும் அதிகமாக நடுங்கியது.

''அவசரப்படாதே, அண்ணே! ஒரு கதை சொல்கிறேன், கேட்கிறாயா?''

''உனக்கு என்னடா கதை சொல்லத் தெரியும்?''

''என்ன, அப்படிக் கேட்டுவிட்டாய்? நான் கொஞ்ச காலம் ஒரு சினிமாக் கம்பெனியில் ஆபீஸ் பையனாக வேலை பார்த்திருக்கிறேன்.''

''ஆபீஸ் பையனாகத்தானே?''

''ஆமாம்; அத்துடன் கதையும் பண்ணிக் கொடுத்திருக்கிறேன். படமுதலாளி, டைரக்டர், புரொடக்ஷன் மானேஜர், நான் - ஆக நாலு பேர்களுந்தான் கதை பண்ணுவோம்.''

''கதாசிரியர் என்ன செய்வார்?''

''நாங்கள் 'டிஸ்கஷன்' செய்து உருவாக்கிச் சொல்லும் கதையை அவர் எழுதிக்கொள்வார்.''

''அதுதான் அவருடைய வேலையா? சரி; எப்படியாவது பொழுது போக வேண்டும். எதையாவது சொல்லித் தொலை.''-கையில் இருந்த கத்தியைப் போட்டுவிட்டுப் பாட்டிலை எடுத்துக் கொண்டு கதை கேட்க நிமிர்ந்து உட்கார்ந்தான் இருளாண்டி.

போதையில் இருந்த சந்திரகுமாரும் உற்சாகமாக - ஆனால் தணிந்த குரலில் - கதை சொல்லத் தொடங்கினான்: ''ஓர் ஊரிலே ஒரு பெரிய மனிதர் இருந்தார். அவர் வெறும் பெரிய மனிதர் மட்டுமல்ல; ரொம்ப நல்ல மனிதருங்கூட........''

''ஒரு நல்ல மனிதரைப் பற்றிய கதையா இது? அதை நீயா சொல்கிறாய்? சரி; சொல்லு!'' என்று சிரித்தான் இருளாண்டி.

இந்தச் சமயம், மோகன் மெல்லக் குனிந்து ரூபவர்த்தினியைச் சீண்டி ஏதோ சமிக்ஞை செய்தான். அவள் தலையாட்டிவிட்டுச் சற்றுத் தொலைவில் கிடந்த இருளாண்டியின் கத்தியை நைஸாக எடுத்துக் கையில் இறுகப் பற்றிக்கொண்டாள். குடிவெறியில் இருந்த அவன் இதைக் கவனித்தானோ இல்லையோ, தெரியவில்லை.

''கெட்ட மனிதரின் கதை நமக்கு ஏன் அண்ணே? நாம் என்ன கெட்டவர்களா?'' என்று கேட்டு நகைத்த சந்திரகுமார், ''கதை சொல்லும் போது குறுக்கே பேசாதே. என் கற்பனை தடைப்படும்'' என்று எச்சரித்துவிட்டுத் தொடர்ந்து கூற ஆரம்பித்தான்: ''இருந்தாரா?..... அந்த நல்ல மனிதரை அவ்வூர் ஜனங்கள் ஒரு மகான் என்றே நினைத்தார்கள், மதித்தார்கள், போற்றினார்கள், புகழ்ந்தார்கள், வாயார வாழ்த்தி வணங்கினார்கள். அவர் அந்த ஊருக்குப் பள்ளிக்கூடம், காலேஜ், தர்ம ஆஸ்பத்திரி, தண்ணீர்த் தொட்டி, குதிரை லாயம், சுமைதாங்கி, பஸ் பிரயாணிகளுக்குக் கூரை நிலையம் எல்லாம் கட்டினார். சிறிய பெரிய கோயில்களும் எடுப்பித்தார்; புதுப்பித்தார். ஏழைப் பையன்களைத் தம் சொந்தச் செலவில் படிக்க வைத்தார். இவ்வளவு நல்ல மனிதருக்குப் புத்திர பாக்கியம் இல்லை. அவருடையமனைவியும் ரொம்ப ரொம்ப நல்லவள். இவர்களின் அரண்மனை போன்ற பெரிய பங்களாவில் பல வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவர்களில் ராமக்கா என்ற தோட்டிப் பெண் ஒருத்தி; கல்யாணமாகாத கன்னிப் பெண்; பார்க்கக் கொஞ்சம் லட்சணமாகவும் இருப்பாள். பங்களாவிலுள்ள பாத் ரூம் முதலியவற்றைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டியது அவள் வேலை. மாதம் இருபது ரூபாய் சம்பளம். அந்தப் பாவிப் பெண் ஒரு நாள் ஏனோ, எதற்காகவோ தூக்குப் போட்டுக்கொண்டு செத்துப் போனாள்! கேவலம், தோட்டிப் பெண்தானே? அவள் செத்துப் போனதைப்பற்றி யாரும் கவலைப் படவில்லை. நல்ல மனிதரான அந்தப் பெரிய மனிதரும் அதிகமாகக் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை. பாவம்! அவர் என்ன செய்வார்? .... வருஷங்கள் பல சென்றன. அவருடைய தர்மப் பணத்தில் இங்கிலாந்துவரை போய்ப் படித்துவிட்டு வந்த ஒரு பையன் திடீரென்று அவர்மேல் கோர்ட்டில் வழக்குப் போட்டுவிட்டான். அவரது சொத்து முழுவதுக்கும் தானே வாரிசு என்பது அவன் போட்ட வழக்கு. கோர்ட்டில் பாதி வழக்கு நடந்துகொண் டிருந்தபோதே அந்த நல்ல மனிதருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அதனால் வழக்கும் தள்ளிப் போடப்பட்டது. பையன் அவ்வூரை விட்டே ஓடிப் போனான். அந்தப் பையன் யார்? ஜனங்களுக்கு அவனைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஒரு பெரிய, நல்ல மனிதருக்கு இப்படி அநியாயமாகப் பைத்தியம் பிடித்துவிட்டதே என்று துக்கப்படுவதற்கே அவர்களுக்கு நேரம் சரியாக இருந்தது. ரொம்பக் காலம் அவர்கள் அவருக்காகத் துக்கப்பட்டுக்கொண்டே இருந்தார்கள் ......''

''கதை முடிந்துவிட்டதா? இன்னும் பாக்கி இருக்கிறதா?'' என்று ஒரு புதிய குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து அந்தப் பாழடைந்த மண்டபம் எங்கும் ஒளி வெள்ளம் வந்து பாய்ந்தது. ★

தீபாவளி வாழ்த்துக்கள்!

போங்கும்
மங்களம் எங்கும்
தங்கிப்
போலிக! போலிக!!



ஏகபோக விநியோகஸ்தர்கள் :

தி பெஸ்ட் ஃபவுண்டன் பென் டெப்போ,

தபால் பெட்டி என் 2421, பம்பாய்-2.

Shilpi MP 27/66 Tam



உங்கள் மதிப்பிற்குரிய ஓட்டு

பெல்ஹேலர்

டிரான்ஸிஸ்டர் மெகபோனுக்கே

உங்களது உயரிய கொள்கைகள், லட்சியங்கள் மற்றும் உங்களது தேர்தல் சின்னம் இவைகளைப்பற்றியெல்லாம் மிகத் தெளிவாக வாக்காளர்களுக்குத் தெரிவிக்க "பெல்ஹேலர்" உதவும்.

இதை இயக்குவதோ, தூக்கிச் செல்வதோ மிக எளிது. இதனுடைய கனம் மூன்றே கிலோ கிராம்தான். வாகனங்களில் இணைத்தும் செல்லலாம். உங்கள் தொகுதியிலே பிரசாரம் செய்ய இது மிகவும் ஏற்றது. செலவும் குறைவு. அதனுள்ளேயே பொருத்தப்பட்டிருக்கும் பாட்டரி செல்களின் உதவியால் இயங்குகிறது. உள்ளே அமைந்திருக்கும் மைக்ரோஃபோனைத் தவிர, வெளியேயும் ஒரு மைக்ரோஃபோன் அமைக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் குரலை 200 மீட்டர் தூரத்தில் உள்ளவர்கள்கூட மிகத் தெளிவாகக் கேட்கமுடியும், நீங்கள் இந்த பெல்ஹேலரை உபயோகித்தால்!

விமானக் கூடங்களிலும், கப்பல் தளங்களிலும், கப்பல்களிலும், புகைவண்டி நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும், விளையாட்டு மைதானங்களிலும், ஏன்? சுருங்கக் கூறின் எவ்வகைக் கூட்டங்களிலும், ஊர்வலங்களிலுங்கூட உபயோகிக்க மிக மிக ஏற்றது.

பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்: ஜலஹள்ளி, பெங்களூர் - 13.

THERE IS A PERKINS ENGINE FOR EVERY PURPOSE



and NOW from Perkins' family, an addition, P6-354

Perkins means high speed diesel power that's compact and light weight. It could just as well be a bus, a truck, a tractor, a crane, a light van, a road roller, a fork lift. The link? Well, Perkins diesels of course. Why? Reliability, low running costs, long working life, a traditional Simpsons' service when and where you want it, these all count. So many manufacturers already fit Perkins as Original Equipment.



MAKE SURE IT'S A PERKINS

Simpson & Co Ltd

Manufacturers of Perkins Diesel Engines
202/203, Mount Road, Madras-2

Branches: BANGALORE-OOTACAMUND-TIRUCHIRAPALLI SECUNDERABAD (A.P.)

S-356

ஷோடச கணபதிகள்



இடம்	வலம்
1. தருண கணபதி	3. பால கணபதி
2. பக்தி கணபதி	4. வீர கணபதி

இடம் வலம்

5. சதுர்த்தி கணபதி 7. துவிஜ கணபதி

6. பிங்கள கணபதி 8. உச்சிஷ்ட கணபதி

இடம் வலம்

9. சம்பிரதாய கணபதி 11. லக்ஷ்மி கணபதி

10. ஹேரம்ப கணபதி 12. புவன கணபதி



இடம்

13. ஊர்த்துவ கணபதி

14. நர்த்தன கணபதி

வலம்

15. மகா கணபதி

16. வல்லபை கணபதி

அம்மாசி!

'சோமு'

"தியாகங்கள் செய்வதும் அறத்தோடு இணைந்து வாழ்வதும் படித்த மக்களாகிய நம்முடைய தனிச் சிறப்பு என்று நினைத்துக்கொண்டிருக்கிறோமே, அது எவ்வளவு பெரிய தவறு!" என்று தம் பழைய நினைவுகளைக் கிளறியவாறு ஏதோ சொல்லத் தொடங்கினார் அனவரதம். மலைக்காடுகளில் அரசாங்கப் பராமரிப்பு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர் அவர்.

"படிக்காத மக்களிடம் காண்கிற தரும உணர்ச்சியும், ஆழமான அன்பும் நம்மிடங்கூட இல்லை. அதிலும் காட்டுமக்கள் என்று நாம் இழிவாகக் கருதுகிறோமே, அப்படிப்பட்ட மலைக்குடி மக்களிடத்தில் எத்தனையோ அரிய பண்புகள் இருப்பதைப் பல தடவை என் வாழ்வில் நான் கண்டு வியந்திருக்கிறேன்" என்று தொடர்ந்தார் அனவரதம்.

ஏதோ ஒரு பழைய நிகழ்ச்சியைச் சொல்லப் போகிறார் அனவரதம் என்று, எல்லாரும் கதை கேட்க ஆயத்தமானார்கள்.

2

இப்போது பாபநாசம் மலையில் அணைகட்டியுள்ள மலைப்பகுதி அந்தக் காலத்தில் ஒரே பெருங்காடாக இருந்தது. மலைக்கு மேலே சில காதங்கள் சென்றால், மலைப் பளிஞருடைய குடியிருப்பு இருந்தது. அந்தக் குடியிருப்புக்குப் போவதற்கு முன்னால் ஒரு மாதா கோவிலைத் தாண்டிச் செல்ல வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பே சில கிறிஸ்தவக் குருமார்கள் இங்கு வந்து தங்கி, ஒரு மாதா கோவிலும், அதற்கு அருகில் ஒரு கிறிஸ்தவ நூல் நிலையமும், சிறியதோர் ஆஸ்பத்திரியும் கட்டினார்கள். மலைநாட்டு மக்களிடையே இவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. நான் அந்த வட்டத்தில் பராமரிப்பு அதிகாரியாக இருந்தபோது அடிக்கடி இங்கே 'தங்கல்' போடுவதுண்டு. இப்படித் தங்கல் போட்ட நாட்களில்தான் ஒரு சமயம், சுடலையும் அவன் மனைவி அம்மாசியும் எனக்கு அறிமுகம் ஆனார்கள். சுடலைக்கு அப்போது இருபத்தைந்து வயசு இருக்கும்; அம்மாசிக்கு இருபது இருக்கும். கல்யாணமான புதிது.

மலைக்காட்டிலே அந்தப் பகுதியில் சந்தன மரங்கள் அடிக்கடி காணாமற் போய்க்கொண்டிருந்தன. இந்தக் களவைத் தடுப்பதற்காக மலைப்பளிஞர்களிலேயே ஒரு குடும்பத்தை அங்கே காவலுக்கு அமர்த்தியிருந்தோம். அப்படி அமர்த்தியிருந்த காவற் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான் அம்மாசி. அவளுடைய தகப்பன்தான் எங்கள் தலைமைக் காவலாளி.

புதிதாகக் கல்யாணமான மகளையும் மருமகனையும் எனக்கு அறிமுகப் படுத்தினான், அன்னாசி, அம்மாசியின் தகப்பன். அறிமுகம் என்றால் என்ன? மாப்பிள்ளையையும் பெண்ணையும் காலிலே வந்து விழச்செய்தான்,

"ஐயா கிட்டே ஒண்ணு கேக்கணும்னு ரொம்ப ரோசனையா யிருக்கு. தயவு பண்ணணும்!" என்று இழுத்தான் அன்னாசி.

ஒரு சேவகனை என்னுடன் நீண்ட காலமாக வைத்திருந்தேன். அவனுக்கு வயசாகிவிட்டதனால் ஓய்வு கொடுப்பதாக இருந்தேன். அந்த இடத்தில் தன் மருமகனை நியமிக்கவேண்டும் என்பது அன்னாசியின் கோரிக்கை. மறுபேச்சின்றிச் 'சரி' என்று ஒரே வார்த்தையில் ஒப்புக்கொண்டேன்.

3

அம்மாசியும் அவள் கணவன் சுடலையும் பளிஞர் குலத்தில் பிறந்தவர்களே யானாலும், காட்டு இலாகா அதிகாரிகளுடனும் எங்கள் சேவகர்கள் எழுத்தர்கள் ஆகிய எல்லாருடனும் அடிக்கடி பழகிப் பழகி மற்றவர்களைப் போலவே பேசவும் பழகவும் நன்கு கற்றுக்கொண்டுவிட்டார்கள். நான் மலையடிவாரத்தில் ஒரு சிறு வீடு கட்டிக்கொண்டு அங்கே குடியேறியதும், அம்மாசி வீட்டு வேலை செய்யவும் சுடலை என்னோடு பல இடங்களுக்கு வரவும் மிகவும் தோதாகப் போய் விட்டது. எங்கள் வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் ஒரு குடிசை போட்டுக்கொண்டு அம்மாசியும் சுடலையும் களிப்போடு வாழ்ந்தார்கள்.

ஓராண்டு தவழ்ந்தது. அம்மாசிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

"ஐயா! என் மவளுக்கு ஒரு நல்ல பேரா வைக்கணும் — நீங்கதான்" என்றான் சுடலை.

"சீதை என்று கூப்பிடலாமே!" என்றாள் என் மனைவி.

"அருமையான பெயர்!" என்றேன் நான். சுடலைக்கும் அம்மாசிக்கும் ஒரே ஆனந்தம்.

ஐந்தாறு மாதங்கள் உருண்டன. ஆடி அமாவாசை வந்தது. அந்தப் புண்ணிய நாளில் மலைக்கு மேலே நெடுந்தொலைவிலுள்ள ஒரு பெரிய அருவிக்கு அருகேயுள்ள தீர்த்தக்கட்டத்தில் சென்று, ஏராளமான கிராம மக்கள் குளிப்பது வழக்கம். இதற்காகப் பத்து நாட்கள் முன்பிருந்தே காட்டு இலாகா அதிகாரிகள் மலைக்குச் சென்று தங்கிக் காடுகளைத் திருத்திப் பாதைகளைச் சீராக்குவோம். இது பற்றி நான் என்னுடைய உதவி அதிகாரிகளிடம் பேசிக்கொண்டிருந்தேன். மறுநாள் சுடலை என்னிடம் வந்தான்.

"சாமி, மலைக் குடியிருப்பெல்லாம் அடுத்த வருசம் தண்ணியிலே முங்கிடுமாமே! அணை கட்டப் போறாகளாமே?" என்று இழுத்தான்.

"ஆமாண்டா; அதுக்கு நீ ஏன் இத்தனை கவலைப்படுகிறாய்?" என்று கேட்டேன்.

"குடியிருந்த இடம் இல்லியா? அது தண்ணியிலே முளுவுறத்துக்கு முந்தி ஒரு தரம் போயிப் பாத்துட்டு வரணும்னு சொல்லுது அம்மாசி" என்றான் சுடலை.

"சரி, நீ என்னோடு வருகிற மாதிரி அவள் உன்னோடு வரட்டுமே!" என்றேன்.

மறுநாள் எல்லாரும் மலைக்குப் புறப்பட்டோம். பிறந்த வீட்டுக்குச் செல்லுகிற பெண்ணைப் போல அம்மாசி ஒரே உற்சாகத்தோடு வந்தாள்.

மலைக்கு மேலே நாங்கள் 'பாடி' அமைத்துத் தங்கல் போட்ட இடம், பளிஞர் குடியிருப்புக்கு அருகிலே. சுடலையையும் அம்மாசியையும் பளிஞர் குடியிருப்பைப் பார்த்து வரும்படி அனுப்பிவிட்டு, நானும் என்னுடைய உதவியாளர்களும் கூடாரத்துக்கு வெளியே துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு கிளம்பினோம்.

புறப்படும்போது வானம் சற்று மப்பாக இருந்தது. மேலே போகப் போக மலையுச்சியில் கனத்த மழை பெய்துகொண்டிருந்தது என்பதற்கு அறிகுறி தெரிந்தது. திடீர் திடீரென்று ஓடைகளில் தண்ணீர் பொங்கியதோடு, அருவிகளும் பயங்கரமாக விழுந்தன. இதனால் எங்கள் போக்கு வரவு காலதாமதமாயிற்று. நாங்கள் கூடாரத்துக்குத் திரும்பிய போது இருட்டி வருகிற வேளை ஆகிவிட்டது. ஆனால் இதென்ன? கூடாரத்திலிருந்து கூப்பாடு கேட்கிறதே!

பதற்றத்தோடு என்னுடைய விடுதிக்குள் நான் நுழைந்தபோது சுடலை 'ஓ' என்று அழுதுகொண்டிருந்தான். பக்கத்தில் நாலைந்து பளிஞர்கள் இருந்து அவனைக் கையமர்த்திக்கொண்டிருந்தார்கள். குழந்தை சீதையை ஒரு கிழவன் மார்போடு அணைத்தவாறு அழுகையை அமர்த்த முயன்றுகொண்டிருந்தான். என்னைக் கண்டதும் அப்படியே கூச்சல் போட்டுக்கொண்டு ஓடிவந்தான் சுடலை,

''சாமி! போயிட்டா சாமி! என்னையும் இந்தச் சிறுசையும் விட்டுட்டுப் போயிட்டா சாமி!'' என்று கதறிக்கொண்டே என் கால்களில் வந்து விழுந்தான்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. பக்கத்தில் இருந்தவர்கள் நடந்ததைச் சொன்னார்கள்.

போன இடத்தில், குழந்தையை ஒரு பளிஞச் சிறுமியிடம் கொடுத்துக் கரையிலே உட்காரச் சொல்லிவிட்டு, 'வாடிக்கை' இடமான ஓர் அருவிச் சிற்றோடையில் குளிப்பதற்கு இறங்கியிருக்கிறாள் அம்மாசி. மழை பெய்ததனால் எங்கோ உடைப்பு எடுத்திருக்கிறது. திடீரென்று வெள்ளம் புரண்டு வந்திருக்கிறது. கசத்திலே போய்ச் சுரித்துவிட்டாள் அம்மாசி. கரையிலே நின்ற பளிஞப் பெண் கதறியிருக்கிறாள். அம்மாசியும் எவ்வளவோ முயன்று நீந்தப் பார்த்திருக்கிறாள். முடியவில்லை. சுழலும் விசையும் சுழியுமாகப் பொங்கி வந்த தண்ணீர் அவளை அடித்துக்கொண்டு போய்விட்டது!

4

இரண்டு மூன்று மாதங்கள் ஆயின, சுடலை இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு. மலையடிவாரத்தில் இருந்த எங்கள் வீட்டிலேயே ஒரு சிறு வெளி அறையில் அவனுக்கும் சீதைக்கும் குடியிருக்க இடம் கொடுத்தோம். இரவும் பகலும் 'அம்மாசி!' 'அம்மாசி!' என்று புலம்பிக்கொண்டே இருந்தான் சுடலை. அந்தக் குழந்தையோ, பாவம்! 'அம்மா, அம்மா' என்று வீலிடும்போதெல்லாம் எங்களுக்குக் கண் கலங்கும். நாங்கள் பார்த்துப் பெயரிட்ட குழந்தை அல்லவா? அதற்குப் பாற்பொடியும் சத்துமாவும் வாங்கிக் கொடுத்தோம். ஆனாலும் தாயின் அரவணைப்புக்கு எங்கே போவது? நாளாக நாளாகக் குழந்தை எலும்பும் தோலுமாகத் தேய ஆரம்பித்தது.

''சுடலை, இந்தக் குழந்தைக்காகவாவது நீ இன்னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளக் கூடாதா?'' என்று நானே சுடலையைக் கேட்டேன்.

''எசமான், நீங்ககூட இப்பிடிச் சொன்னா எப்படி? மாத்துத் தாயி வந்தா அந்தக் கொடுமையும் பாவமும் சேந்து என் தலையிலே வந்து விழுமே எசமான்!'' என்றான் சுடலை.

குழந்தை மேலும் மெலிந்து கொண்டே போயிற்று. அதைப்பற்றிச் சுடலையிடம் பேசுகிற சாக்கில், ஒரு மாதம் கழித்து மீண்டும் மறு கல்யாணத்தைப் பற்றிய பேச்சை மெதுவாக எடுத்தேன். இந்தத்தடவை சுடலை என்னோடு அதிகமாக வாதாடவில்லை.

மேலும் இரண்டு மூன்று மாதங்கள் கழிந்தன. குழந்தை இனி மெலிவதற்கும் இடம் இல்லாதபடி ஒட்டி உலர ஆரம்பித்தது. இப்போது சுடலை என் யோசனையை ஒப்புக்கொண்டான்.

ஒப்புக்கொண்டது மிகவும் நல்லதாய்ப் போயிற்று. அவனுடைய இரண்டாம் மனைவி முனியம்மை முற்றும் வேறு விதம். எங்கள் இலாகாவில் வேலைபார்க்கும் ஒரு கிழச் சேவகனுடைய மகள் அவள். அரசாங்க அதிகாரிகளுக்குப் பணிவிடை செய்து செய்து முதுகெலும்பே வளைந்து போன ஒரு குடும்பம் அது. இப்படிப்பட்ட பெண்தான் சுடலைக்குச் சரி என்று நானே அந்தத் திருமணத்தை ஏற்பாடு செய்து நடத்தினேன்.

சுடலையும் முனியம்மையும் எங்கள் வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் உள்ள சுடலையின் பழைய வீட்டில் தனிக் குடித்தனம் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் சூழ்நிலை எப்படியோதான் இருந்தது. புதிய முகம், புதிய சூழல், புதிய பழக்கம், கணவன், மனைவி, குழந்தை - மூவருக்குமே. ஆனால் இரண்டொரு மாதங்களில் எல்லாம் பழகிப் போய்விட்டது. சுடலைக்கும் முனியம்மைக்கும் இடையே ஒரு நெருங்கிய மன உறவே உண்டாகத் தொடங்கியது. இது எல்லாருக்கும் திருப்தியைத் தந்தது. ஆனால் எல்லாவற்றையும் விட எனக்கு மகிழ்ச்சி தந்த விஷயம் என்னவென்றால், அந்தக் குழந்தை, அன்போடு தன்னை அணைக்கக் கூடிய இரண்டு கரங்களுக்காகக் காத்திருந்த அந்தக் குழந்தை, முனியம்மையோடு நன்கு ஒட்டிக் கொண்டது. முனியம்மையும் குழந்தையோடு நன்றாக ஒட்டிக்கொண்டாள். இது கடவுளுடைய செயலன்றி வேறென்ன? கண்ணாடித் துண்டுகளையும், உடைந்து போன பீங்கான் சில்லுகளையும், மரம், கட்டை, இரும்பு, துத்தநாகம், மற்றும் ஏதேதோ பொருள்களையும் இணைத்துப் பிடித்து ஒட்டுவதற்காகப் பசைகளைக் கண்டுபிடித்திருக்கிறது விஞ்ஞானம். ஆனால் மனித மனங்களை ஒட்டவைக்கக் கூடிய பசையை யாரே கண்டுபிடித்திருக்கிறார்கள்? இந்த விஷயத்தில் சுடலைக்கு இறைவன் கருணை காட்டினான் என்று அகமகிழ்ந்தேன்.

இந்த மகிழ்ச்சிக்கு இடையே இன்னொரு புதிரும் என்னைக் குழப்பி வந்தது. சீதைக்கும் அவளுடைய சிறிய தாய்க்கும் இடையே அன்பு இறுகி வந்ததே தவிர, அந்தக் குடும்பத்தில் இன்னொரு குழந்தை பிறப்பதற்குரிய அறிகுறியைக் காணவில்லை. கணவன் மனைவிக்குள் அப்படி என்ன நேசக் குறைவு என்று புரியாமல் நானே ஒரு நாள் இதுபற்றிச் சுடலையைக் கேட்டேன்.

''என்னடா, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் என்று மேல்நாடுகளில் எல்லாம் சொல்லி வருகிறார்கள். நீயும் உன் மனைவியும் எங்கே போய்க் கற்றீர்கள் இதை?''

''சாமி, அதை ஏன் கேக்கறீங்க? அந்தப் பொண்ணு முனியம்மைக்கு இந்தச் சிறுசு சீதைகிட்டே அத்தனை கொள்ளை ஆசை. தனக்கு ஒரு பிள்ளை வந்து இத்தனை ஆசையும் கெடுத்துடக் கூடாதுன்னு சொல்லுதுங்க அடிக்கடி. இப்படியெல்லாம் அச்சானியமாச் சொல்லாதேன்னு சண்டைக்குப் போனா, 'அட நீ போ தூர'ன்னு என்னைத் தூக்கி எறிஞ்சு பேசுது சாமி!''

இதைக் கேட்டு ஒரு பக்கம் தாபமும் ஒரு பக்கம் திருப்தியும் கொண்டேன். இந்த விநோத உணர்ச்சிச் சுழலில் மேலும் மூன்று ஆண்டுகள் ஓடின. இப்போது சீதைக்கு நான்கு வயசு ஆயிற்று. நிலைமை புரிகிற வயசுதான். என்றாலும் சுடலையோ அல்லது முனியம்மையோ இரகசியத்தை அவளிடம் வெளியிடவில்லை. உண்மையிலேயே முனியம்மைதான் தன்னைப் பெற்ற தாய் என்று எண்ணிவந்தாள் சீதை.

இப்படி இருந்தபோது ஒரு நாள் மேல்நாட்டு யாத்திரிகர் ஒருவர், எங்கள் மலைக்காடுகளைச் சுற்றிப்பார்த்துப் படங்கள் எடுக்க வேண்டும் என்று எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ஒரு வாரம் சுடலையை அவருக்கு ஒத்தாசையாகச் செல்லும்படி மலைக்கு மேலே அனுப்பிவைத்தேன். அவன் சென்று இரண்டு மூன்று நாள் இருக்கும். ஒரு நாள் இரவு எங்கள் வீட்டுக் கதவை யாரோ முரட்டுத்தனமாக இடிப்பது கேட்டு ஆத்திரத்தோடு வந்து கதவைத் திறந்தேன். அப்படியே என் உடம்பு ஆடியது. தலை 'கிர்' என்று சுற்றியது. வாசலில் அம்மாசி நின்றுகொண்டிருந்தாள்!

அந்த விநாடிவரை நான் என் வாழ்வில் பேய் பிசாசுகளைப்பற்றிச் சிந்தித்ததில்லை. காடு மலைகளில் திரிந்து காட்டு மக்களோடு பழகிப் பழகி நானும் காட்டு மனிதனாக மாறியிருந்தேன். ஆனால் இப்போதோ?

''சாமி, என்னைத் தெரியலையா? நான்தான் அம்மாசி!'' என்றாள் அவள்.

''அம்மாசியா! நீ நான்கு ஆண்டுகளுக்கு முன் தண்ணீரில் முழுகிவிட்டாய் அல்லவா?''

''ஆமா சாமி, முழுகினேன். ஆனால் பிழைச்சுக்கிட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தாள் அம்மாசி.

பதற்றம் அடைந்த என் உடம்பை மிகுந்த நிதானத்துடன் நாற்காலியில் உட்கார்த்தி அமர்ந்தேன். அம்மாசி தரையில் உட்கார்ந்தாள். இதற்குள் வீட்டுப் பெண்கள் எல்லாரும் பதறிக்கொண்டு அங்கு வந்து கூடினார்கள். அம்மாசி தன் கழுத்துச் சரட்டில் தொங்கிய ஏசுநாதரின் சிலுவைச் சின்னத்தைக் கண்ணிலே ஒற்றிக்கொண்டு பேசத் தொடங்கினாள்.

ஓடையிலே விழுந்து சென்ற அம்மாசியைக் காட்டுக் குடியிருப்புக்கு அருகிலே இருந்த மாதா கோவில் பாதிரியார் கண்டெடுத்து முதல் உதவிகள் கொடுத்து உயிரூட்டினாராம். அந்தச் சிறு ஆஸ்பத்திரியில் இருந்த அவசரத் தேவைக்கான மருந்துகள் அவளைப் பிழைக்க வைத்தன. ஆனால் மூளையில்



ஏற்பட்ட அதிர்ச்சி வாசியாகவில்லை. பழைய நினைவுகள் அவளுக்குத் திரும்ப வில்லை. அவளைப் பாளையங்கோட்டை யில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார் பாதிரியார். அரை யும் குறையுமான நினைவுகளோடு ஏதோ குழப்பமாகப் பேச ஆரம்பித் தாள் அம்மாசி. பாதிரியார் தமது முயற்சியைக் கைவிடவில்லை. நெய் யூருக்கு அனுப்பிவைத்தார். அங்கே சில ஆண்டுகள் சிகிச்சை செய்தார்கள். பாதிரியார் மேற்கொண்ட முயற்சி யும் அவர் செய்த பிரார்த்தனையும் சேர்ந்து அம்மாசியை நினைவு உல குக்கு மீட்டுக்கொண்டு வந்தன. அவள் மலைக்குடியிருப்பிலே இருந்த மாதாகோவிலுக்குத் திரும்பியபோது அவளுடைய பழைய நினைவுகளும் திரும்பி விட்டன.

''சாமி, அந்தப் பாவிப்பய, வேறே ஒருத்தியைக் கூட்டிக்கிட்டானுமே? அதைப் பாத்திடலாம்னுதான் வந் தேன். நெசந்தானு எசமான்? '' என்று கேட்டாள் அம்மாசி. அவ ளுடைய் கண்கள் சிவந்தன.

''ஆமாம்'' என்று சொல்லும் போதே என் மனச்சாட்சி என்னைக் குத்தியது. சொன்னேன்:

''அம்மாசி, அந்தத் தவறு சுடலை யாகச் செய்ததில்லை. நான்தான் பொறுப்பு அதற்கு.''

''சாமி, படிச்சவங்க நீங்க. நீங்க ளும் சேந்து என் குழந்தையைக் காவு கொடுக்க நினைச்சீங்களா? அந்தச் சண்டாளியைப் பாத்தா நான் இப்போ . . . . .''

''அம்மாசி, நீ முனியம்மையைத் தெரியாமல் இப்படிப் பேசுகிறாய். நீ கூடச் சீதையை அப்படிக் கவனித் துக்கொள்ள மாட்டாய்; அத்தனை அன்போடு வளர்க்கிறாள் அவள்'' என்றேன்.

முனியம்மையைப்பற்றி நான் சொன்னதில் அம்மாசிக்கு நம்பிக்கை இல்லை. நானாகப் பார்த்து முடித்த கல்யாணம்; நான் வேறு எப்படிச் சொல்லுவேன் என்று அவள் நினைத் தாள். ஒன்றுமே பதில் பேசாமல் எங்கள் வீட்டு வெளித்திண்ணையி லேயே மீதி இரவைக் கழித்தாள். மறுநாள் காலை எழுந்து போய்விட் டாள்.

எங்கள் வீட்டிலிருந்து நேரே சுடலை யின் வீட்டுக்குப் போனாள் அம்மாசி. முனியம்மையிடம் சண்டை பிடிக்க வேண்டும் என்ற வேகத்தோடு போனாள். ஆனால் அப்போது முனியம்மை கிணற்றங்கரைக்குப் போயிருந்தாள், தண்ணீர் எடுத்துவர. அம்மாசி குடிசைக்குள்ளே நுழைந்த ூட் சீதையைத் தூக்கி எடுத்து வாரி அணைத்து முத்தமிட்டாள். அப்படியே திமிறிக்கொண்டு வெல வெலத்து ஓடினாள் சீதை, கதறிக் கொண்டே. கிணற்றங்கரையிலிருந்து பதறியடித்து ஓடிவந்தாள் முனியம்மை, ''யாரது?'' என்று கேட்டுக்கொண்டே.

''ஒன் புருசனுக்கு உறவுக்காரி'' என்று சொல்லிக்கொண்டே சீதையை யும் முனியம்மையையும் மாறி மாறிப் பார்த்தாள் அம்மாசி.

''அதெல்லாம் சரி. அவரு ஊரிலே இல்லை. எந்த உறவுக்காரின்னாலும்

எட்டி நின்னு பேசு. குழந்தையைத் தொடாதே. வேத்துக் கை படாத புள்ளே எம் புள்ளே. தெரியுதா?'' என்று அதட்டினுள் முனியம்மை.

அப்படியே வெறித்துப் பார்த்தாள் அம்மாசி, கதி கலங்கியவளாக.

''அந்த மாதிரிப் பாத்தே, எங்க அப்பன் கிட்டேச் சொல்லிக் கசத்துலே பிடிச்சுத் தள்ளிப்புடுவேன்!'' என்றது குழந்தை.

கண்களில் நீர் மல்கியது அம்மாசிக்கு. தான் யார் என்ற செய்தியைச் சொல்லாமலேயே, மறு வார்த்தை ஏதும் பேசாமல், அங்கிருந்து புறப்பட்டாள் அம்மாசி. நேரே எங்கள் வீட்டுக்கு வந்தாள் மறுபடியும். நடந்ததைச் சொன்னுள், மனம் முழுவதும் கரைந்து கரைந்து.

''சாமி, நீங்க நேத்து ராத்திரி சொன்ன பேச்சு நெசமான பேச்சு, சாமி. நான் இன்னம் ஒரு நாளைக்கு அந்த வீட்டிலே தங்கினுலும் அந்த வீட்டு அமைதி கெட்டுப் போயிடும். என் பிள்ளை கலங்கிப் போயிடும் சாமி'' என்றுள் அம்மாசி.

''ஏன் அப்படியெல்லாம் பேசுகிருய் அம்மாசி?'' என்று கவலையோடு கேட்டேன்.

''பெத்த தாயிண்ணே நெனைச்சுக்கிட்டிருக்கு முனியம்மையை. அந்த நெனைப்புக் கெட்டுப் போகாதவரைக்கும் அதுக்கும் நல்லது; முனியம்மைக்கும் நல்லது, சாமி. பெத்தவளுக்கு வேறே என்ன வேணும் சாமி? அது மண்டையிலே பத்துப் பூசாம இருந்தாப் போதும்.''

இப்படிச் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள் அம்மாசி.

''அம்மாசி, நீ எங்கே போறே?'' என்று கேட்டேன்.

''சாமி, இனிமே நான் எங்கே போகணும்? புருசன்கிட்டே போறது தப்பு. செத்துப் போயிட்டேன்னு நெனைச்சுக்கிட்டிருக்கான் அவன். அந்தக் குடும்பத்திலே சச்சரவு உண்டாக்கலாமா சாமி, நான் போயி? அப்பன்காரன்கிட்டே போயி ஒட்டுறதும் தப்பு; புள்ளேகிட்டே போயி ஒட்டுறதும் தப்பு. புள்ளே என்னத்தைக் கண்டுது சாமி? ஒரு மனசிலே ஒரு தாயிக்குத்தான் இடமுண்டு. நான் போயி ஒண்டுக் குடித்தனம் இருக்க முடியுமா சாமி, அந்தப் பிஞ்சு மனசிலே?''

ஏதோ ஞானியின் பேச்சைக் கேட்பது போலக் கேட்டுக்கொண்டிருந்தேன், அவள் வார்த்தைகளை.

''சாமி, நான் வந்ததும் போனதும் யாருக்கும் தெரிய வேண்டாம். உங்களுக்கு ஆயிரம் புண்ணியம் சாமி!''

''அம்மாசி, நில், நில்!'' என்றேன், அந்த ஞான உலகிலிருந்து மோனம் கலைந்தவனுக. ஆனுல் அவள் திரும்பியே பார்க்கவில்லை. ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து மறைந்தாள்.

இரண்டு நாள் கழித்து மேல் நாட்டு யாத்திரிகரோடு திரும்பி வந்த சுடலையிடம் நான் எதுவுமே சொல்லவில்லை. அவனுகவே பேசினுன்.

''யாரோ உறவுக்காரின்னு என் வீட்டுக்கு ஒருத்தி வந்து பிள்ளையைத் தூக்கியிருக்கா சாமி. ரெண்டு நாளாக் காச்சலாம் அதுக்கு. இண்ணிக்குத்தான் கண்ணை முளிச்சுப் பாத்துது. அதிந்து போயிருக்குது அது'' என்றுன் சுடலை.

''இப்போ ஒன்றும் இல்லையே சுடலை?'' என்று கேட்டேன்.

''இப்பச் சரியாப் போச்சு சாமி! எங்க அப்பாருக்கு ரெண்டாந்தாரக்காரி ஒருத்தி உண்டு எசமான். அந்தக் கிளையிலே ஏதாவது ஒரு பொம்பிளையா இருக்கும் சாமி. இல்லாட்டி, புள்ளே பிடிக்கிறவ யாராவது நோட்டம் பார்த்தாளோ என்னவோ? சீதை காதிலே ரெண்டு ஓலை மினுக்குதுல்லே?'' என்றுன் சுடலை.

நெஞ்சு அழுத்தத்தோடு நான் ஏதும் பேசாமல் இருந்துவிட்டேன். ஆனுல் இது நடந்த ஒரு வாரத்துக்கெல்லாம் மலைக்குடியிருப்புப் பாதிரியாரிடமிருந்து எனக்கு ஒரு சிறு பொட்டணம் வந்தது. அதில் ஒரு கடிதமும் அட்டைக் கூடு ஒன்றும் இருந்தன. கடிதத்தில் பாதிரியாரே தம் கைப்பட எழுதியிருந்தார்.

''அம்மாசி வேலை பார்க்கும் மாதா கோவிலின் பாதிரி எழுதுகிறேன். தன்னுடைய உறவினர்களைச் சென்று பார்த்துவிட்டுப் போன வாரம் இங்கே திரும்பியதிலிருந்து அம்மாசி ஏதோ பித்துப் பிடித்தவள் போல இருக்கிருள். சீதை என்ற சிறுமிக்கு ஒன்றுமே கொடுக்காமல் அவசரத்தில் வந்துவிட்டாளாம். இப்போது தன் காதில் அணிந்துள்ள இரண்டு தங்க ஓலைகளையும் - இவையே அவளுடைய ஆஸ்தி - உங்களுக்கு அனுப்பும்படி சொன்னுள். இத்துடன் அவை வருகின்றன. தங்கையின் குழந்தை சீதைக்கு அம்மாசியின் அன்பளிப்பாக இவற்றை நீங்கள் உரிய இடத்தில் சேர்த்துவிட வேண்டும் என்பது அவள் ஆசை.

''அன்பையும் தியாகத்தையும் இந்த மலை நாட்டு மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்பதற்காக இங்கு வந்து குடியேறிய பாதிரி நான். அந்த அரிய பண்புகளை அம்மாசியிடமிருந்து கற்றுக்கொள்ள முடிந்தால் அதுவே எனக்குப் பெரிய கல்வியாகும் என்று இப்போது கருதுகிறேன்!''

5

அனவரதம் சொன்னுர்:

குழந்தையின் காதில் மின்னுகிற தங்கத்துக்கு ஆசைப்பட்டு யாரோ பிள்ளை பிடிக்கிறவள் வந்தாள் என்றல்லவா சொன்னுன் சுடலை? பாவம்! அவனுக்கு எப்படித் தெரியும், பிள்ளையை எடுத்துப்போக வந்தவள் அல்ல, கொடுத்துப் போக வந்தவள் என்று. காதோலையைத் திருட வரவில்லை; தன் பிள்ளைக்கு அவற்றை வழங்குவதற்காகவே உயிர்வாழ்ந்தவள் அவள், அம்மா, அம்மாசி. ★

LINOLEUM
THE VERSATILE FLOOR COVERING
Manufactured by
INDIA LINOLEUMS LTD., CALCUTTA.

டிஸ்ட்ரிபுயூட்டர் விற்பனை ஆபீஸ்:
சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸீஸ்)
பிரைவேட் லிட்.
99, அரண்மனைக்காரன் தெரு, மதருஸ்-1.

லினோலியம் ஷோ ரூம்: 1/155, மவுண்ட் ரோடு, மதருஸ்-2.

ஸ்டாக்கிஸ்டுகள்:

சென்னை:
M. A. ஜாகப் & கோ,
24/27, ஈவினிங் பஜார்.

கோயமுத்தூர்:
அப்துல்லா & சன்ஸ்,
நவாப் ஹகிம் ரோடு.
K. J. அகஸ்டின் & சன்ஸ்,
12/372, V. H. ரோடு.

உதகமண்டலம்:
வெரைடி ஹால்,
ஜவுளி வியாபாரம்,
அம்பிகா டெக்ஸ்டைல்ஸ்,
மெயின் பஜார்.

கூனூர்:
ஜோக்ராஜ் & கம்பெனி

சேலம்:
கருப்புசாமி செட்டி & கோ,
செவ்வாபேட்டை, சேலம்.
திருநீலகண்டர் & கோ,
செவ்வாபேட்டை.

திருச்சி:
ரஞ்ஜனு ஸ்டோர்ஸ்,
40-B, நேதாஜி சுபாஷ்போஸ் ரோடு.
ஹபீப் பிரதர்ஸ்,
சிங்கார தோப்பு தெரு.

மதுரை:
ஹாஜி மூஸா ஸேட் & பிரதர்ஸ்,
18/19, கிழக்கு சித்திரை தெரு.
தயூப் ஹாஜி மூஸா ஸேட் & பிரதர்ஸ்
தெற்கு மாசி தெரு.

திருநெல்வேலி:
S. பரமசிவம் பிள்ளை,
86, மேல ரத வீதி.
R. M. K. விஸ்வநாத பிள்ளை & சன்,
வடக்கு ரத வீதி.

கும்பகோணம்:
பாம்பே ஸில்க் ஸ்டோர்ஸ்,
பெரிய தெரு.

மற்றும்
வேலூர், துறையூர், காரைக்குடி, சிவகங்கை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், நாகர்கோவில், ஈரோடு மற்றும் கேரளாவிலுள்ள முக்கிய டவுன்கள்.

சென்னை மற்றும் கேரளா ராஜ்யங்களுக்கு
டிஸ்ட்ரிபுயூட்டர்கள்:

M/s சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (ஏஜன்ஸீஸ்)
பிரைவேட் லிட்.,
99, அரண்மனைக்காரன் தெரு, த.பெ எண் 113, மதருஸ்-1.

தந்தி: ''GOODWILL'' போன்: 22641 (4 லைன்கள்)

enhance
the gaiety of
DIWALI
with

SATHE
BISCUITS
COCOA
CHOCOLATES

SATHE BISCUIT & CHOCOLATE COMPANY LIMITED, POONA 2.
heros' SBC-275

போன்: 771 டெக்ஸ் மார்க் நெ. 3642

தந்தி: "சக்தி"

ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட்.

தபால் பெட்டி நெ. 36

பொள்ளாச்சி

அனுமதிக்கப்பட்ட மொத்தக் கதிர்கள்	30,032
நிறுவப்பட்டவை	25,032
டபிளிங் கதிர்கள்	1,612

தயாரிக்கப்படும் நூல் ரகங்கள்

20, 40, 60, 80 ஒற்றை நூல் ரகங்கள் 2 20, 2/40,
முறுக்கு நூல் - மற்றும் 40, 60, கோன் நூல்

நெசவாளர்களும் வியாபாரிகளும் ஸ்ரீ சக்தியின்
நூல் ரகங்களைப் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர்.

திரை மறைவில் இறைவன்

என். ராமகிருஷ்ணு

சுமார் பத்து ஆண்டுக் காலமாகக் கதிர்காமம் செல்ல வேண்டும் என்ற அவா என் உள்ளத்தில் திளைத்திருந்தது. ஆனால் அங்கே செல்லும் வாய்ப்புச் சமீபத்தில்தான் கிடைத்தது.

கதிர்காமம் என்னும் புகழ்பெற்ற முருகன் தலம் ஈழநாட்டின் தென் கிழக்குப் பகுதியில் உள்ளது. மாணிக்க கங்கை என்னும் புனித நதியின் கரையில் அமைந்துள்ள இந்த க்ஷேத்திரத்தை இந்துக்கள் மட்டுமன்றி வேறு பல மதத்தினரும் போற்றுகிறார்கள். இலங்கையின் அடர்ந்த காடுகளின் மத்தியில் இந்தத் தலம் உள்ளது. மக்கள் இதைக் கைலாயம் என்றும் அழைக்கின்றனர். கதிர்காமம் கண்டியிலிருந்து சுமார் 190 மைல் தூரத்தில் இருக்கிறது. அம்பாந்தோட்டையிலிருந்து இருபத்தெட்டு மைலில் திஸ்ஸ மகாராம என்ற நகரம், கதிர்காமத்துக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ளது. காரில் செல்ல நல்ல பாதை இருக்கிறது. பஸ்கள் அடிக்கடி செல்கின்றன. நாங்கள் மலைநாட்டுப் பகுதிகளான ஹட்டன், நுவார் எலியா, அப்புத்தளை, வெளிமடை வழியாக இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டே கதிர்காமம் அடைந்தோம். வழியில் எங்கள் கார் மக்கர் செய்தபோதிலும் முருகன் அருளால் சுகமாக அதை அடைந்தோம்.

கதிர்காமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் தங்கினோம். மிகவும் அழகான கட்டிடம். யார் வந்தாலும் அன்புடன் வரவேற்கிறார்கள். அறை வசதிகள் உள்ளன. இடம் இல்லாவிட்டால் பெரிய ஹாலில் படுக்க வசதி செய்து தருகிறார்கள். எல்லாருக்கும் காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, மாலை ஆகாரம், இரவுச் சாப்பாடு எல்லாம் இலவசமாகக் கொடுக்கிறார்கள். காபி, டீகூட இலவசமாகக் கிடைக்கின்றன. பணம் கேட்பதில்லை. நன்கொடை நாமாகக் கொடுத்தால் ஏற்றுக்கொள்கிறார்கள். தினமும் சுமார் ஆயிரம் பேர் வருகிறார்கள். உற்சவ காலங்களில் இருபதினாயிரம் பேர் ஒரு வேளைக்குச் சாப்பிடுவார்களாம். ''நாங்கள் சாமான் வாங்கவும் சேகரிக்கவும் முயற்சி செய்வதில்லை. தாமாகவே அவை வந்து குவிகின்றன'' என்று அங்குள்ள சுவாமிகள் சொன்னார்கள்.

சமையல் செய்யும் இடம் மிகவும் துப்புரவாக உள்ளது. உற்சவ காலங்களில் அறுபது பேர் சமையல் செய்வார்களாம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள், மந்திரிகள் ஆகியவர் கூடத் தொண்டு புரிவார்களாம்.

கோயிலில் காலையில் முதல் வழிபாடு ஐந்து மணிக்கு. மூன்று மணிக்கே மக்கள் கூட்டங் கூட்டமாக மாணிக்க கங்கை சென்று நீராடி, வெண்மையான ஆடை உடுத்துக் கோயிலுக்கு முன் நிவேதனப் பொருள்களுடன் 'கியூ' வரிசையில் நின்றுவிடுகிறார்கள். கோயில் திறந்ததும் முதல் வழிபாடு விநாயகருக்கு நடைபெறுகிறது. அங்கே அந்தணர் பூஜை செய்கிறார். பின்பு முருகன் கோயில் வழிபாடு. அங்கே சிங்களவர் பூஜை செய்கின்றனர். முருகன் திரைமறைவில் உள்ளான்.

மூலஸ்தானத்தின் முன்பாக ஒரு திரைச்சீலை தொங்கவிட்டிருக்கிறது. அதில் மயில்மேல் முருகன் வள்ளி தேவயானையுடன் இருக்கும் கோலம் வர்ணத்தில் தீட்டியிருக்கிறது. சங்குகள் முழங்குகின்றன. பூஜை செய்பவர் வாய்கட்டி, இரண்டு பேர் ஒரு மேல்கட்டியைப் பிடித்து வர நடுவில் வேகமாக வருகிறார். முதலில் நேராக விஷ்ணு கோவிலுக்குச் செல்கிறார். விநாயகர் கோவிலுக்குப் பக்கத்தில் விஷ்ணு கோவில் இருக்கிறது. அதில் உள்ளே மிகப் பெரிய புத்தர் சிலை காணகிறது. திரும்பி வந்தபிறகு அவர் மீண்டும் முன்போல் முருகன் கோயிலுக்கு வருகிறார். வழிநெடுக நடை பாவாடை போடுகிறார்கள். தட்டுடன் வரும் அவர், நேராகத் திரையை விலக்கிக்கொண்டு மூலஸ்தானத்துக்குள் செல்கிறார். சங்குகள் முழங்குகின்றன. மறுபடியும் அவர் வெளியில் வந்து வேகமாகத் தம் இருப்பிடம் சென்று, மறுபடியும் சில நிமிஷம் கழித்துக் காவடியுடன் வருகிறார். இதில்தான் நைவேத்தியம் இருக்கிறது. உள்ளே போய் மீண்டும் வந்து திரைக்குத் தீபாராதனை செய்கிறார்.

பூசாரி வெளியில் வந்து திரையின் பக்கத்தில் நின்று, கையை முன்னும் பின்னும் அசைத்து வந்தனம் செய்கிறார். பின்பு பிரசாதமும் தீர்த்தமும் வழங்குகிறார்கள். அதற்குள்ளாகக் கூட்டம் கட்டுக்கு அடங்காமல் கூடுகிறது. சிலருக்கு ஆவேசம் வந்துவிடுகிறது. வேல் எடுத்து ஆடுகின்றனர்.

கடைகளில் பிரசாதத் தட்டுகள் விற்கப்படுகின்றன. தட்டில் தேங்காய் பழம் பூ முதலிய பூஜைச் சாமான்களை

விஷ்ணு, விநாயகர், முருகன் கோவில்கள்

கப்புராளைமார் பூஜைக்கு வருகிறார்கள்

அழகாக அலங்கரித்துக் கடைகளில் விற்கிறார்கள். அவற்றில் ஒரு ரூபாய் வைத்துக் கொடுக்கின்றனர். மக்கள் அமைதியாக ஒருவர்பின் ஒருவராக வந்து செல்கின்றனர். இந்துக்களைவிடச் சிங்களவர்களே அதிகமாக வருகிறார்கள். பின்னால் உள்ள போதி மரத்தின் அடியில் மண்டியிட்டு வழிபாடு செய்கின்றனர். எண்ணெய் அகல்விளக்கு ஏற்றுகின்றனர். சந்நிதியிலுள்ள தூண்டாவிளக்கில் எண்ணெய் இட்டு, மறுபடியும் பிரசாதமாக அதிலுள்ள எண்ணெயை எடுத்துச் செல்கின்றனர். குழந்தை இல்லாதவர்கள் சிறு தென்னம்பிள்ளையைக் கொண்டுவந்து கொடுக்கின்றனர். பல குழந்தைகள் பிறந்து இறந்துவிட்டால் ஒரு குழந்தையை விற்றுப் பின்பு வாங்குகின்றனர், அப்படியாவது அது உயிருடன் இருக்கட்டும் என்ற ஆசையில்.

வள்ளி கோயில் முருகன் சந்நிதிக்கு நேர்எதிரில் வீதியின் கடைசியில் உள்ளது. இதற்கும் சிங்களவர்களே பூஜை செய்கின்றனர். முருகன் கோயிலில் மூல ஸ்தானத்துக்குமேல் மூன்று கும்பங்கள் உள்ளன. உற்சவத்தின் போது உள்ளிருந்து ஒரு பெட்டகத்தைக் கொண்டுவந்து யானைமேல் ஏற்றி ஊர்வலமாக எடுத்துச் செல்வார்களாம். அதில் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. மாணிக்கத்தால் செய்த முருகன் உருவம் உள்ளது என்கிறார்கள். மாணிக்க வேல் உள்ளது என்றும் சொல்கிறார்கள். இந்த இரகசியத்தைப் பூசகர்கள் வெளியிடுவதில்லை.

கதிர்காமக் கோயிலில் பூஜை செய்பவர்களைக் 'கப்புராளைமார்' என்கின்றனர். பூஜை நடப்பதற்கு முன், வயசான இரண்டு சிங்கள மாதர்கள் தீப ஆரத்தி எடுக்கின்றனர். பல விதமான முத்திரைகளைக் கைகளால் காட்டி வணங்குகின்றனர். பின்புதான் தீபாராதனை நடைபெறுகிறது. ஒரு நாளைக்கு மூன்று முறை வழிபாடு நடக்கிறது: காலை 5 மணிக்கும், பகல் 10-30 மணிக்கும், மாலை 6-30 மணிக்கும். இரவு 9 மணிக்குக் கதவுகள் அடைக்கப்படுகின்றன. கப்புராளைமார் முன்பு பன்னிரண்டு பேர் இருந்தனராம். இப்பொழுது குறைவு. சனிக்கிழமை காலை பூஜை இல்லை. அன்று பன்னிரண்டு பெண்கள் வந்து ஆலத்தி எடுப்பார்கள். முன்காலத்தில் மான் இறைச்சிகூட நிவேதனம் செய்வது உண்டாம்.

கதிர்காமம் கோயிலுக்கு ஏராளமான நிலம் இருக்கிறது. பத்து வருஷத்துக்கு ஒரு முறை நிர்வாகஸ்தரைப் பதுளை மாவட்டப் போர்டாரும், ரெவினியூ அதிகாரியும், தர்மகர்த்தாவும் நியமிப்பார்கள்.

முருகன் வள்ளி கோயில் அல்லாமல், இங்கே தேவயானை கோயில், பைரவர் கோயில், தண்டபாணி கோயில் முதலியனவும் உள்ளன. வள்ளி கோயில் பக்கத்தில் முஸ்லிம் பெரியார் சமாதி ஒன்று இருக்கிறது. முருகன், வள்ளி, விஷ்ணு கோயில்களையன்றி மற்றவற்றில் பூஜை செய்பவர் அந்தணர். இந்தக் கோயில்களைக் கல்யாணகிரி மடம் நிர்வகித்து வருகிறது. கல்யாணகிரி மடத்தின் ஆதி ஸ்தாபகர் ஆதி கல்யாணகிரி சுவாமிகள். இப்போதுள்ள சுவாமிகளின் பெயர் சுவாமி ராமகிரி. ஆதி சுவாமிகள் காசியிலிருந்து 1715-இல் வந்தவராம். அப்பொழுது இந்த இடம் அரணியமாக இருந்ததாம். ஆதி சுவாமிகளே கதிர்காமத்தில் ஆடி விழாவில் பெட்டியில் யானைமீது கொண்டுபோகும் ஷட்கோண யந்திரத்தை எழுதிப் பிரதிஷ்டை செய்தாராம். இது செவிவழிச் செய்தியாக வழங்குகிறது.

இப்போதுள்ள கோயில் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ கட்டியதாக வரலாற்றாசிரியர் எழுதியிருக்கின்றனர்.

கல்யாண மடத்துக்குக் கண்டியரசர்கள் நிலம் கொடுத்திருக்கிறார்கள். மீனாதண்ணி என்ற கிராமம் 326 ஏகர் உள்ளது. அது இந்த மடத்துக்கு உரியது. ராமேசுவரம் தத்தாத்திரேய கோஸ்வாமி மடத்திலிருந்து இப்போது உள்ள மடாதிபதி வந்திருக்கிறார். சுவாமிகள் இந்தியப் பிரஜை. இங்கே தங்குவதற்குரிய 'விஸா' உரிமைபெற்றவர். விநாயகர், தேவசேனை, முத்துலிங்கசாமி, செல்லக் கதிர்காமக் கோயில், பைரவர் கோயில் எல்லாம் இந்த மடத்தைச் சேர்ந்தவையே. கதிர்காமத்துக்கு அருகே கதிரைமலை இருக்கிறது. அங்கே வழிபடப்பெறும் வேல் இவர்களைச் சேர்ந்தது. பழைய சாசனங்களில் ஆறு கோயில்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பத்தினி கோயிலும் இந்த ஆதீனத்தில் இருந்தது. முத்துலிங்க சுவாமிகள் என்பவரே கல்யாணகிரி சுவாமிகள். இப்போதுள்ள சுவாமிகள் பட்னாவைச் சேர்ந்தவர். தஞ்சை ஜில்லாவில் பட்டுக்கோட்டைத் தாலுக்காவில் நாடியம் கிராமத்தில் இவர்களோடு தொடர்புடைய தத்தாத்திரேய மடம் இருக்கிறது. அதில் ஒரு சமாதி உள்ளது. இந்த மடத்தில் ஆட்சி செலுத்தியவர்கள் சுவாமி கல்யாணகிரி, சுவாமி ஜயசிங்ககிரி முதலிய பதினொருவர். இப்பொழுதுள்ள சுவாமி ராமகிரி பன்னிரண்டாவது பீடாதிபதி.

இங்கே முக்கியமான திருவிழா ஆடி உற்சவம். அமாவாசையில் ஆரம்பித்துப் பௌர்ணமியில் தீர்த்தம். தீமிதி விசேஷம். கார்த்திகைத் தீபம், சித்திரை விஷு முக்கியம். கதிரை மலையில் பண்டாரம் பூஜை செய்கிறார். அங்கே வேல் பிரதிஷ்டை.

ஒவ்வொரு தலத்தைப் பற்றியும் கதைகளும் புராணங்களும் உள்ளது போல் கதிர்காமத்தைப் பற்றியும் பல வரலாறுகள் வழங்குகின்றன. சூரனைச் சங்காரம் செய்தவன் முருகன். நாம் சூரபதுமன் என்று கூறுவதை இங்குள்ளவர்கள் பத்மாசுரன் என்று கூறுகின்றனர். அவன் இலங்கையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தானாம். அவனால் துன்பம் அடைந்த தேவர்கள், பிரம்மாவிடமும் திருமாலிடமும் உதவிபெற முடியாமல் பரமசிவத்தை வேண்டி நிற்க, சிவபெருமான் ஒரு வீரனை அனுப்புவதாகக் கூறிக் கார்த்திகேயனை அனுப்பினார் என்பது கதை. கார்த்திகேயனுக்குப் பார்வதி மிகவும் வலிமையுடைய வேலாயுதத்தை வழங்கினாள். திருச்செந்தூரிலிருந்து சூரபதுமனைப் போருக்கு அழைத்து, அவனை அழித்துத் தன் வாகனமான மயிலாக இருக்கும்படி அருளினான்.

சூரபதுமனை வென்று வெற்றிவாகை சூடிய கார்த்திகேயன் வேட்டுவ குலப் பெண்ணரசியாகிய வள்ளியின் பின்னே

சென்றான். இலங்கையின் பூர்வீக மக்கள் வேடராவர். இலங்கையில்தான் கார்த்திகேயன் வள்ளியை மணந்ததாகக் கூறுகின்றனர். `அன்றுதொட்டுக் கார்த்திகேயன் அங்கு வசிப்பதால் அது **கார்த்திகேய கிராமம்** என்று பெயர் பெற்றுப் பின்பு **கதிர்காமம்** ஆயிற்று என்று சிலர் கூறுவர்.

சிங்களத்தில் **'கத்தர - கம'** என்றால் கருங்காலி மரம் உள்ள கிராமம் என்று பொருள். ஒரு காலத்தில் இந்த இடம் கருங்காலி மரக் காடாக இருந்ததாம். அதனால் கதிர்காமம் என்று பெயர் ஏற்பட்டது. **'கௌட உபதா'** என்ற சிங்களக் கவிதை, துட்டகெமுனு ' என்னும் சிங்கள அரசன் கதிர்காம முருகனின் உதவியால் வெற்றி பெற்றுத் தான் செய்த பிரதிக்கினையின்படி கதிர்காம ஆலயத்தைக் கட்டிப் பொருளுதவி செய்த வரலாற்றைக் கூறுகிறது.

சீதையைத் தேடிவந்த அநுமன் கதிர்காமப் பெருமானையும் தரிசித்தான் என்பர் சிலர். சிங்களவர் நூலான மகாவம்சத்தில், தேவானும்பிய திஸ்ஸன் காலத்தில் அசோக மன்னனுடைய மகள் சங்கமித்திரை இலங்கை வந்த வரலாறு வருகிறது. அவள் கொண்டுவந்த போதி மரக்கிளை ஒன்றைக் கதிர்காமக் கோயிலில் நட்டதாக ஒரு செய்தி வழங்குகிறது. மிகப் பழங்காலத்தில் மகாநாகன் என்னும் அரசன் இங்கே கிரிவிகாரை என்ற பௌத்த சமய நிலையத்தைக் கட்டினானாம்.

வள்ளி கோவில்

கதிர்காமத்துக்குப் பக்கத்தில் **செல்லக் கதிர்காமம், கதிரைமலை** என்ற இரண்டு தலங்கள் உள்ளன. செல்லக் கதிர்காமம் வடக்கே 4 மைல் தூரத்தில் உள்ளது. இதைச் சின்னக் கதிர்காமம் என்றும் கூறுகின்றனர். இங்கே மாணிக்க கங்கை ஓடுகிறது. மாணிக்க விநாயகர் கோயிலும் உள்ளது.

கதிரைமலை, தெற்கே 4 மைல் தூரத்தில் உள்ளது. முருகப்பெருமானின் வெற்றிவேலை நட்டு அங்கே வழிபடுகின்றனர். முருகன் தன் வெற்றியின் ஞாபகச் சின்னமாக மலை மீதேறித் தன் வேலை நாட்டினான் என்பது ஐதிஹ்யம்.

கதிர்காமத்தில் வள்ளியின் கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு பள்ளிவாசல் உள்ளது. கதிர்காம ஆலயத்தின் வடக்கே புத்தவிகாரம் ஒன்று இருக்கிறது. எல்லா மதத்தினரும் கதிர்காமம் வருகின்றனர்.

முத்துலிங்க சுவாமிகள் இங்கே இருந்து வழிபட்டு வந்ததனால் இந்தத் தலம் விளக்கமடைந்தது என்பர். கார்த்திகேயன் இலங்கையில் பல காலம் இருந்த காரணத்தால், அவனது பிரிவைச் சகிக்க முடியாமல் அப்பெருமானை எப்படியும் இந்தியாவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று எண்ணிச் சுவாமிகள் கதிர்காமம் வந்து சேர்ந்தார். ஆனால் அவருக்குக் கார்த்திகேயனின் அருளோ தரிசனமோ கிடைக்கவில்லையாம். பன்னிரண்டு ஆண்டுகள் "அங்கே தங்கி அருந்தவம் செய்தார். அவர் நிட்டையில் இருந்த காலத்தில் ஒரு வேடச் சிறுவனும் சிறுமியும் அவருக்குப் பணிவிடை செய்து வந்தனர். தமக்கு அருட்காட்சி கிடைக்கவில்லை என்று வருந்தி, ஒரு நாள் அவர் அயர்ந்து நித்திரை போய்விட்டார். அப்பொழுது அவ் வேடுவப் பையன் அவரை எழுப்பினான். சுவாமிகள் பையனைக் கோபிக்க, அவன் ஓட்டம் பிடித்தான். சுவாமிகள் அவனைத் தொடர்ந்து ஓட, ஆற்றில் சிறு தீவை அடைந்ததும் பையன் மறைந்துவிட்டான். உடனே முருகன் காட்சி கிடைத்தது. கார்த்திகேயனும் வள்ளியுமே தமக்குப் பணி செய்தனர் என்பதை உணர்ந்ததும், பெருமானின் அடிகளை வணங்கி இந்தியாவுக்குத் திரும்பும்படி வேண்டினார். வள்ளி தன்னை விட்டுப் போகக்கூடாது என்று முருகனைப் பற்றி இழுத்தாள். இவர் ஒரு புறமும், அவள் ஒரு புறமும் இழுக்க, முடிவில் வள்ளி வென்றாள். சுவாமிகள் கதிர்காமத்திலேயே தங்கிவிட்டார். அவர் மகா சமாதி ஆவதற்கு முன் முருகன் திருவருளைப் பெற்று ஒரு தங்கத் தட்டில் இயந்திரத்தைப் பொறித்து அரசனால் கட்டப்பெற்ற கோயிலில் பிரதிஷ்டை செய்தாராம். வள்ளி கோயிலுக்கு அருகில் அவருடைய சமாதி இருக்கிறது. அங்கும் வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கல்யாணகிரி மடம் சிறந்த தொண்டினைக் கதிர்காமத்தில் ஆற்றி வருகிறது. ராமகிருஷ்ண மடம் போலவே இங்கும் வரும் யாத்திரிகர் தங்குவதற்கு வசதிகள் உள்ளன. பிராம்மணர்களுக்குச் சுவையான உணவு அருத்துகின்றனர். கதிர்காமத்தில் மின்விளக்கு வசதி கிடையாது. டைனமோ மூலம் கோயிலிலும் மடங்களிலும் வெளிச்சம் போடுகின்றனர். இரவு பத்து மணிக்கு விளக்குகளை அணைத்து விடுகிறார்கள்.

கதிர்காமத்துக்கு வான ஊர்தி வசதி சமீபத்தில் ஏற்படப் போவதாக அறிகிறோம். அரசாங்கத்தார் புதுக் கட்டிடங்களைப் பிரயாணிகளின் வசதிக்காகக் கட்டியுள்ளார்கள். எல்லா வாகனங்களும் மாணிக்க கங்கைக் கரையில் நின்றுவிட வேண்டும். கோயிலுக்கு நடந்தே செல்ல வேண்டும். மாணிக்க கங்கையின் மேலுள்ள பாலத்தின்மீது வண்டிகள் செல்லா. பாலத்தின்மீது நின்றுகொண்டு யாத்திரிகர்கள் மீன்களுக்கு உணவளிப்பது அற்புதக் காட்சி.

கோவிலில் எல்லாச் சந்நிதியின் முன்பும் திரைச்சீலை தொங்குகிறது. விநாயகர், தேவயானை, பைரவர் முதலிய சந்நிதிகளில் விக்கிரகங்கள் உள்ளே இருக்கின்றனவாம். தண்டபாணி சந்நிதியில் திரை இல்லை. மூன்று காலமும் கல்யாண மடம் ஸ்தாபகருக்கு வழிபாடு நடைபெறுகிறது. குருக்கள் ஆசாரசீலராய் நம் நாட்டைப் போல் கச்சம் கட்டி, சிகையுடன் ஆராதனை செய்கிறார். வாயை மட்டும் ஈரத்துணியால் கட்டிக்கொள்கிறார்.

முருகன் கோயில் வள்ளி கோயில்களில் பூஜை செய்யும் சிங்களவரோ பட்டுவேஷ்டி உடுத்து, தலையில் துணி கட்டிக்கொண்டு, ஜிப்பாவுடன் வருகிறார். இந்துக்களைவிடச் சிங்களவர் அதிகமாகத் தீவிர பக்தியுடன் முருகனை வழிபடுகிறார்கள். "வள்ளி எங்கள் நாட்டுப் பெண்; முருகன் எங்கள் மருமகன்" என்று கூறுகின்றனர். கோயிலுக்கு முன்கோபுரம் இல்லை. உள்ளே விமானமும் இல்லை. கிறிஸ்தவ பக்தர்கள்கூட ஆண்டுக்கு ஒரு முறை கதிர்காமம் சென்று முருகனை வழிபடுகின்றனராம். ★

போட்டோ: என் ராமகிருஷ்ணா

Insist

Quality Knitwears

RAJ
PRINCE
RAYON (White & Colour)
SELECT
ALMA
POPULAR
DELUX

Shreekala Hosiery & General Enterprises

5/32, PANKAJA MILL ROAD :: COIMBATORE-1

NALIN—S.H.

MACHINE MADE PAPER BAGS OF ALL KINDS AND SIZES WITH OR WITHOUT PRINTING

MANUFACTURERS:

BAGS & PRINTS

16 STRINGERS STREET

MADRAS-1

Phone : Care : 23526

FACTORY:

MAIN ROAD, VELLACHERY

டினோபால் வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது.

துணிகளைக் கடைசியாக அலசுவதற்கு முன், தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்த்துப் பாருங்கள், உங்கள் வெள்ளைத் துணிகளெல்லாம் எப்படி மேலும் வெண்மை பளிச்சிடுகின்றன! சட்டைகள், புடவைகள், டவல்கள், விரிப்புகள் எல்லாம் எப்படி அதிகரித்த வெண்மை துலங்க விளங்குகின்றன!

இந்த அதிகரித்த வெண்மைக்கு ஆகும் செலவுதான் என்ன? துணி ஒன்றுக்கு ஒரு பைசாவுக்கும் குறைவுதான்! கால் தேக்கரண்டி அளவு டினோபால் ஒரு வாளித் துணிகளை வெண்மை பளிச்சிடச் செய்கிறது.

விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட டினோபாலை எப்பொழுதும் உபயோகியுங்கள். அதனால் துணிகளுக்கு ஒருவிதமான கெடுதலும் ஏற்படுவதில்லை.

டினோபால் இப்பொழுது ஸீல் செய்யப்பட்ட அலுமினிய ரேக்குப் பேக்கெட்டுகளிலும் கிடைக்கிறது. ஒரு பேக்கெட் டினோபால் ஒரு வாளித் துணிகளை வெண்மை பளிச்சிடச் செய்கிறது– சிறிதும் வீணாவதில்லை, உபயோகிக்கச் சுலபமானது, தொந்தரவற்றது.

டினோபால், ஜே.ஆர்.கெய்கி, எஸ் ஏ.பாஸல், ஸ்விட்சர்லாந்து அவர்களின் பதிவுபெற்ற வியாபாரச் சின்னமாகும்
[illegible] லிட், த.பெ [illegible], பம்பாய் 1 [illegible].

Shilpi SG 223 A Tam

காமதேனுவில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர் யாவருக்கும் தேவையான எல்லாப் பொருட்களையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் சகாயமான விலையில் வாங்கலாம். மளிகைப் பொருட்கள், துணிவகைகள், காய்கறி பழம், முட்டை, பால், நெய் போன்றவை, மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள், மற்றும் பிளாஸ்ட்டிக் அலுமினியப் பொருட்கள், முதலியவைகள் கிடைக்கின்றன.

காமதேனு உங்கள் பணத்திற்கு உண்மையான மதிப்பைத் தருகிறது:

காமதேனுவில் தரத்திற்கேற்ப விலைகள் மிகமிகச் சீராக உள்ளன. நடுவில் உள்ள தரகர்களுக்கு நீங்கள் லாபம் அளிக்க வாய்ப்பில்லை. எல்லாப் பொருட்களும் உடனுக்குடன் விநியோகிக்க ஏற்றவாறு முன்னதாகவே தரம்பிரித்து, பரிசோதித்து, அளந்து கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. காமதேனு அளிக்கும் பொருள்கள் தரத்திலும் அளவிலும் நேர்மையானவை.

வசதியாக வாங்குவீர்!

ஞாயிற்றுக்கிழமைகள் உள்பட வாரத்தில் ஆறு நாட்கள் காமதேனு இயங்குகிறது. வெள்ளிக் கிழமை விடுமுறை. நீங்கள் ஓய்வு பெற ஒவ்வொரு மாடியிலும் ஓய்விடங்கள் உள்ளன. பால் விடுதி ஒன்றும் சிற்றுண்டிச்சாலை ஒன்றும் உள்ளது.

வாருங்கள்:

காமதேனு கூட்டுறவு சூப்பர் மார்க்கெட் சிக்கனத்திற்குச் சிறந்த இடம்—தரம் மிக்க பொருட்கள்—சகாயமான விலை—பணிவான சேவை.

காமதேனு

சென்று வாங்குவதையே வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்!

அதன் பலன்—தரம் மிக்க பொருட்களைச் சீரான விலையில் பெறுவீர்கள்!

சென்னை கடை உலகிலோர் புதுமை.

காமதேனு சூப்பர் மார்க்கெட் 109 D & E மவுண்ட் ரோடு, சென்னை 18

PURNIMA



FORT GLOSTER INDUSTRIES LTD.
23A, Netaji Subhas Road, Calcutta-1.
Branches : M 71, Connaught Circus, New Delhi-3, Lajpat Kunj, Napier Town, Jabalpur

திரு A. முருகேச முதலியார்,
ஸ்தாபகர், நியூடன் அண்டு கம்பெனி,
பிளாக் மேகர்ஸ் & நியூடன் டைப் பவுண்டரி

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

●

ஆப்டோன், லைன், மூவர்ணப்
பிளாக்குகளுக்கு, சென்னையில்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

●

குறித்த நேரத்தில் திருப்திகரமான முறையில்
பிளாக்குகள் தயாரித்துத் தரப்படுகின்றன.

●

விவரங்களுக்கு:
நியூடன் அண்டு கம்பெனி
8, வாலாஜா ரோடு, மதராஸ்-2.
டெலிபோன்: 86729

தைக்கக் கற்றுக் கோள்வதற்கு முன்னமேயே...

சேமிக்கக் கற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டாள்.

என்ன சேமிக்கிருள் என்பது பெரிதல்ல; சேமிக்கும் பழக்கத்தைத் தொடங்கிவிட்டாளே அதுவே பெரிது. உங்கள் குழந்தைகளுக்கு இன்னமும் சேமிக்கக் கற்றுக்கொடுக்க வில்லையா என்ன? ஸ்டேட் பாங்கிலே அவர்களுக்கென ஒரு சேமிபபுக் கணக்கைத் துவக்குங்கள். சேமிக்கும் பழக்கத்தை எந்தச் சிறு வயதிலும் தடையின்றித் துவக்கலாம்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

LPE Aiyars. S. 101 TM

பேடேகரின் ஊறுகாய்கள், அப்பளங்கள், மஸாலாக்கள்

உங்கள் குடும்பத்துக்குப் பிடித்தமானவை.
சுத்தமான பொருள்களைக் கொண்டு செய்தவை.
விஞ்ஞான முறையில் செய்தவை.
பிரத்தியேகமான சுவை.
உங்களுக்குப் பூர்ண திருப்தி அளிப்பவை.
இவற்றையே தேர்ந்தெடுங்கள்.

HERE THEY ARE

பேடேகர் மஸாலாவாலே,
முக்பாட், பம்பாய்-4.

HAND PUMPS OR POWER PUMPS

whatever you may require

Various types and sizes of pumps are available from the MYERS and WASP pump lines.

It may be a Hand pump or a Power pump. It may be for a small capacity or a large capacity. It may be only a lift pump or a pump for pumping water from a river, tank, shallow well, deepwell or tubewell. **We HAVE IT.**

Write to us giving full particulars of your requirements and we shall send you a catalogue and prices.

Myers or Wasp

Water Supply Specialists Private Limited
330, Thambu Chetty St., Madras-1



WS-76



மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிட்.

330, தம்பு செட்டி தெரு, சென்னை - 1.

RISING SUN BRAND

சூரியன் மார்க்

மைதா, சூஜி, ஆட்டா

தயாரிப்பாளர்கள்

☼

அருணா ஷுகர்ஸ் லிமிடெட்,

(சர்க்கரை ஆலை)

பெண்ணாடம், தென்னாற்காடு ஜில்லா

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:

"தன் பில்டிங்", 175/1, மவுண்ட் ரோடு, சென்னை - 2.

லிட்கோவின் மகத்தான வெளியீடு

கீர்த்தனுசார்ய

ஸ்ரீ ஸி. ஆர்.

ஸ்ரீநிவாஸய்யங்காரன்

ஸ்ரீமத்

வால்மீகி ராமாயணம்

(தமிழ் வசனம்)

மலிவுப் பதிப்பு

1.	பால காண்டம்	ரூ. 8.00
2.	அயோத்யா காண்டம்	8.00
3.	ஆரண்ய காண்டம்	5.00
4.	கிஷ்கிந்தா காண்டம்	5.00
5.	ஸுந்தர காண்டம் (ஸம்ஸ்க்ருத மூலத்துடன்)	12.50
6.	யுத்த காண்டம்	9.00
7.	உத்தர காண்டம்	6.00
8.	ஸ்ரீமந் வால்மீகி ராமாயண தத்வார்த்த தீபிகை. (ராமாயண நோட்டுகள்)	8-00

லிப்கோவின் புதிய வெளியீடு!

லிப்கோ

தமிழ்-தமிழ்-ஆங்கில

அகராதி

நடைமுறையில் வழங்கும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள்களும், நேரான ஆங்கிலச் சொற்களும் கொண்டது; பிற்சேர்க்கைப் பகுதி ஒரு தமிழ்க் கலைக் களஞ்சியம்; நல்ல தமிழைப் பிழையின்றித் தெளிவாகப் பேசவும் எழுதவும் உதவும்.

704 பக்கங்கள்

விலை ரூ. 6-40 தபாலில் ரூ. 7-70

லிட்கோவின் பிற வெளியீடுகள்

1. *குடித்தனப் பாங்கு*
   (திருமதி ப்ருந்தா வரதராஜன்)
   152 பக்கங்கள் ரூ 2-00
   ,, நூல்நிலையப் பதிப்பு ரூ. 3-00
2. *இயற்கை தரும் இன்மருந்துகள்*
   (வைத்திய விசாரதை T. S. ஜனககுமாரி)
   608 பக்கங்கள் ரூ. 4-00
3. *கடிதம் எழுதுவது எப்படி?*
   3-ஆம் பதிப்பு - 288 பக்கங்கள் ரூ. 3.00
   மலிவுப் பதிப்பு ரூ. 2-00
4. *ஆங்கில ஆசிரியன்*
   4-ஆம் பதிப்பு - 408 பக்கங்கள் ரூ. 3-00

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி (லிப்கோ)
சென்னை-17.

எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ்,
சென்னை-1.,
ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ரயில்வே ஸ்டால்கள்

பாலு, அவன் பசுக்கள், பண்ணை....

பாரதநாட்டின் உயிரோவியக் காட்சி!

உழவர், நாட்டுக்கு உண்டி கொடுப்பவர். உங்களாலான எல்லா உதவியும் அவருக்குத் தேவை...மேலான விதைகள், நீர்ப்பாசன வசதிகள், அதிகப்படி உரங்கள்.

ராலி க்ருப் இப் பணியிலே பங்கு கொள்கிறது... 60,000 டன் உரங்களை உற்பத்தி செய்கிறது, மேலும் 200,000 டன்களைக் கலவை செய்கிறது, வருடாந்திர ஆக்க அளவாகிய இவற்றின் மொத்தம், தன்னிலும் பத்து மடங்கு உணவு தானியங்களை விளைவிக்க வல்லது. அதுமட்டுமல்ல! ராலீஸின் வேளாண்மை வல்லுநர்கள், உரங்களைத் திறம்பட உபயோகிக்கும் முறைகளை விவசாயிகளுக்கு உணர்த்தி வருகின்றனர்! அதே சமயம் வினியோகப் பணியைச் செவ்வனே செய்து வருகின்றன நாடுநெடுகப் பரவியுள்ள ராலீஸ் கிளைகள்.

THE RALLI GROUP

Beusons/1-RF-115 TMC

தவருது உபயோகித்தால்

போர்ஹான்ஸ் பற்பசை ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கிறது

சிறியோர், பெரியோர் யாவரிடமிருந்தும் தாமாகவே தேடிவந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் தடுப்பதிலே போர்ஹான்ஸ் பற்பசையின் வியக்கத்தக்க வெற்றியைப் போற்றுகின்றன.

* "நான் தவருமல் போர்ஹான்ஸ் உபயோகிக்கிறேன். என் பற்கள் அழகாகவும் உறுதியாகவும் மாறி வருகின்றன. பற்கள் சம்பந்தமான கெடுதல்களிலிருந்து நான் இப்போது விடுபட்டிருக்கிறேன்".

ஆர். பி. ஜி. பம்பாய்.

* "என் நண்பர்... "போர்ஹான்ஸ் பற்பசை" உபயோகிக்கும்படி ஆலோசனை கூறினர். அவர் அறிவுரையின்படி, இரண்டு மாதங்களாக நான் உங்கள் தயாரிப்பை உபயோகித்து வருகிறேன். அப்போது முதல் ஈறு உபாதைகள், பல்வலி ஆகியவற்றிலிருந்து எனக்கு விடுதலை கிட்டியிருக்கிறது".

கே. எஸ். எஸ். ஜி., பெங்களூர்.

* இந்த நற்சாட்சிக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிட். கம்பெனியாரின் எந்த ஆபீசிலும் காணலாம்.

போர்ஹான்ஸ் - பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை.

பற்களைத் தக்கமுறையில் பராமரிக்க இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் பற்பசையையும், போர்ஹான்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் பிரஷையும் உபயோகியுங்கள்... உங்கள் பல் வைத்தியரையும் தவருது பார்த்து வாருங்கள்!

இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற வண்ணப் புத்தகம்.
தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும். இப் புத்தகத்தைப் பெற, (தபால் செலவுக்காக) 10 பைசா தபால் தலைகளை இக் கூப்பனுடன் அனுப்புங்கள்: மானேர்ஸ் டென்டல் ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1

பெயர் :..............................

விலாசம் :..............................

....

மொழி :..............................

K 8 P

CMGM-SF TM



அவன் படிப்பில் சிறந்தவன்
விளையாட்டில் வல்லவன்
முன்னேறி வரும் இளைஞன்

அவன் சைக்கிள்
பிலிப்ஸ்

பிலிப்ஸ் உறுதியானது. அது ட்ரு டெம்பர் எஃகாலானது. எவ்வகையான கரடுமுரடான உபயோகத்திற்கும் ஈடுகொடுக்கக் கூடியது. அதோடு, பிலிப்ஸ் பார்வைக்கு எழில் மிக்கது, உறுதியானது. உங்கள் உயர்ந்த ரசிகத் தன்மையை பிரதிபலிக்கிறது. எப்படி நோக்கினும் பிலிப்ஸ் உயர்தரமான சைக்கிள்! உங்களைப் போன்ற இளைஞர்களுக்கென்று தயாரிக்கப்பட்ட மிகச் சிறந்த சைக்கிள் அது.

உங்களுக்கு ஏற்ற சைக்கிள் பிலிப்ஸ்



®
ஜே.ஏ. பிலிப்ஸ் கம்பெனி லிமிடெட். யு. கே. அவர்களின் பதிவுபெற்ற டிரேட் மார்க்குகள். இந்தியாவில் தயாரிப்போர்: டிஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர். சென்னை-53. உரிமையாளர்கள்: ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை-1, பதிவு பெற்று உபயோகிப்போர்.

JWT-TIC-P-3819

பிலிப்ஸ்®





Protect your Crops from animals and birds. Install a 'PURIVOX'—the latest and best in mechanical bird and animal scarers. It's economical, easy to operate, and costs less in the long run.

It works *12 hours* with just *one pound* of Calcium Carbide. Its loud *gun shot-like* sound is a real scare, indeed!

PURIVOX

THE BEST MECHANICAL GUARD ON ANY FIELD

CROP PROTECTION CPC

manufactured by:
CROP PROTECTIONS CORPORATION
"Niranjan", Room No. 602
99, Marine Drive
(Opp. Marine Lines Station)
Bombay-2 BR.
Tel: 243472 Grams: 'FOODSAVER'

FDS. CPC-I.

E.I.D.-PARRY IN THE HOME

The pottery section of the E. I. D.-Parry Group's Ranipet factory first began with the manufacture of earthenware jars for sulphuric acid—produced by the Fertiliser section. From plain jars for sulphuric acid, pottery progressed to plain jars for every thing else, to not-so-plain jars and finally cups, saucers, vases, ceramic ornaments and attractive and long-lasting vitreous "Parryware" which is now so popular. Parryware is made with the technical advice of Doulton & Co. Ltd., the premier sanitaryware manufacturers in the United Kingdom.

The E.I.D.-Parry Group leads in the manufacture and sale of sugar, confectionery, fertilisers & sanitaryware and in the formulation of plant protection products.

Today, the E.I.D.—Parry Group, fondly known as "Parrys", is one of the larger companies in India consisting of 9 subsidiary and associated concerns providing employment for more than 10,000 people.

E. I. D.—PARRY LTD. *178 years young and still growing*

E.I.D.—PARRY LIMITED, Dare House, Madras 1.
SUGAR ● CONFECTIONERY ● FERTILISERS ● PESTICIDES
POTTERY ● SANITARYWARE ● AGENCIES



FDS EID 19.B.1

தேவை எதுவாயினும் சரி அதற்கேற்ற டாட்ஜ் மற்றும் ஃபார்கோ சாஸிஸ்கள் தயார்



உங்கள் அன்றாட வாழ்க்கையில், ஏதாவதொருவிதத்தில் போக்கு-வரத்துக்கு மோட்டாரை நம்பியிராத க்ஷணமே கிடையாதென்று கூறலாம்; தினப்படி தேவையானாலும் சரி அல்லது வேறு எந்த பிரத்தியேகமான தேவையானாலும் சரி, அங்கு டாட்ஜ் அல்லது ஃபார்கோ டிரக் இயங்கிக்கொண்டிருக்கும். எல்லையற்ற விசித்திரங்களடங்கிய மானிட வாழ்க்கையில், விதவிதமான பல தேவைகள் நாளுக்குநாள் பன்மடங்கு பெருகிவருகின்றன. இதனால், பலதிறப்பட்ட வேலைகளுக்கு, வெவ்வேறு விதமான வண்டிகள் தேவைப்படுகின்றன. எந்த விதமான மோட்டார் வண்டி தேவையானாலும் சரி, அதற்கேற்ற டாட்ஜ் மற்றும் ஃபார்கோ சாஸிஸ்கள் கிடைக்கின்றன. இதனால் தான் விதவிதமான தேவைகளுக்கு ஈடு கொடுக்கக் கூடியவை என்னும் பெருமை, இவற்றிற்குக் கிடைத்துள்ளது.

PAL

தி ப்ரீமியர் ஆடோமோபைல்ஸ் லிட். பம்பாய்-70.

SISTA'S-PAL-515 TM

உங்களுக்கு அருகிலுள்ள டீலரை விசாரியுங்கள்

புத்தகங்களே சிறந்த பொக்கிஷம்!

பொழுது போக்கும் அறிவு மலர்ச்சியும் தருவது புத்தகமே!

புதிய கலைமகள் வெளியீடுகள்

துள்ளும் உள்ளம் ரூ. 7 50
'மாயாவி'

மாந்தருக்கு ஏற்படும் வேட்கை இரு விதம். ஒன்று பண வேட்கை, மற்றொன்று பழி வேட்கை. இவ்விரண்டையும் மோதவிட்டு உருவாக்கிய சுவையான நாவல்.

லட்சியப் பெண் ரூ. 2 00
சௌரீந்திரமோகன்
தமிழ்: த. நா. ஸேனுபதி

லட்சியப் பெண்ணாக வாழ்ந்த சினிமா நடிகையின் கதை. நடிகையாயினும் அவளுக்கும் இதயம் உண்டு என்பதைக் காட்டும் சிறந்த வங்க நாவல்.

அருள் பெற்ற கவிஞர்கள் ரூ. 1 50
'ஆர்வி'

பக்திக்குச் சாதனமாக இசையைக் கொண்டு இசையமுதம் மொழிந்து அருள் பெற்ற பத்து மகான்களைப் பற்றிய சுவை பொருந்திய வரலாறு.

காடு கொடுத்த ஏடு ரூ. 1 50
பிலோ இருதயநாத்

இந்தியப் பழங் குடிகளின் பழக்க வழக்கங்களையும், அவர்களைப் பற்றிய வியப்பான செய்திகளையும் கொண்ட கட்டுரைத் தொகுதி.

வள்ளுவர் வகுத்த அறம் ரூ. 2 00
புலவர் செந்துறை முத்து

பல இலக்கிய மேற்கோள்களுடன், வள்ளுவரின் அறத்துப்பாலை விளக்கும் அரிய நூல்.

கிறிஸ்டல் முதல் சூபர்ஹெட் வரை
'மூர்த்தி' ரூ. 2 50

கையில் தூக்கிச் செல்லும் சிறிய ரேடியோ முதல் மிகப் பெரிய ரேடியோ வரையில் எல்லா ரேடியோக்களின் விவரங்களையும் படங்களுடன் சிறப்பாக விளக்கும் நூல். ரேடியோ செய்யும் விதங்களையும், அதில் ஏற்படும் கோளாறுகளையும், சரிசெய்யும் வகைகளையும் எளிய நடையில் கூறும் புத்தகம்.

விரிவான விலைப் பட்டியலுக்கு எழுதுக

உங்கள் வீட்டில் ஒரு நூல் நிலையம் தொடங்குங்கள். எங்கள் குடும்ப நூல்நிலைய சங்கத்தில் அங்கத்தினராகிச் சலுகையும் லாபமும் பெறுங்கள்.

விவரங்களுக்கு:

கலைமகள் காரியாலயம் த. பெ. 604, சென்னை-4

Edited, Published and Owned by N. Ramaratnam, M.A. B.L., and Printed at the M.L.J. Press Private Ltd., 55/56, Mundakakkanni Amman Koil Street, Mylapore, Madras-4.
Editor: N. Ramaratnam, M.A., B.L., Managing Editor : K. V. Jagannathan.

இனிய
தீபாவளி வாழ்த்துகள்

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் சிமெண்ட் மற்றும் போர்ட்லண்ட்
போஸ்ஸோலானா சிமெண்ட் தயாரிப்பாளர்கள்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 'தன் பில்டிங்' 175/1, மவுண்ட் ரோட், சென்னை-2
தொழிற்சாலைகள். சங்கர்நகர் & சங்கரி.

FDS-IC-737

Regd. as a Newspaper in Ceylon
Supplement to Kalaimagal dated 1-11-66
Regd. No. M. 2748



Khatau Voiles

தி கட்டாவ் மகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கோ., லிட். தலைமை ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்டு எஸ்டேட், பம்பாய்-1 மில்கள்: ஹெயின்ஸ் ரோடு, பைகுல்லா, பம்பாய்-27 மொத்த விற்பனைக் கடை: கோவிந்த் சவுக், முல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய்-2
சில்லறை விற்பனைக் கடை: 216, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு சென்னை-1 கட்டாவ் வாயில்ஸ்; 2/133, மவுண்ட் ரோடு, சென்னை-6

SISTA'S: KMS 379